53. இனிமேலாய்த் தந்தை காலம் இயம்புவோம் முப்பா ஞறில்
கனிவுடன் மாய்வா ஞகும் நாட்டிதன் மேலா யேழுள்
இனிபுள அன்னே மாயவள் இயம்பிது தவறி டாது
தனிவுள பாலன் கண்டம் சாற்றுவோம் சிறுகண் டங்கள் ;

53. இதற்குமேல் தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்ருேம். இவனுக்கு முப்பத்தாறுவது வயது நடக்கும்போது இவன் தந்தை மரண மடைவான். அதற்குப் பிறகு ஏழு வருஷங்களுக்குள் தாய் மரணமாவாள். இனி இவனுக்கு நேரும் கண்டத்தைப்பற்றியும் சொல்லுவோம். இவனுக்குச் சிறிய கண்டங்கள் ;

54. வந்திடும் பரியா யத்தால் வளமிலா நிவிர்த்தி யாகும்
எந்தையே இவனின் ஆயுள் எடுத்தினி இயம்பக் கேளும்
பந்தமா மெழுமாண் டுள்ளே பகர்கொச்சை திங்கள் தன்னில்
சிந்தையாம் பூர்வ பக்கம் செல்திதி சஷ்டி யன்னுள் ;

54. மாறி மாறி வந்திடும். ஆனுல் அவைகள் அதிகமாகாமல் நிவிர்த்தி யாகும். இவனுடைய ஆயுளைக் கூறுகின்ருேம். எழுபதாவது வயதில் சித்திரை மாதத்தில் வளர்பிறை ஷஷ்டி திதியில் ;

55. பற்றுல கடைவா னின்னேன் பாவைகேள் பிறஜன் மத்தை
உவமிவன் காசி பக்கல் உயர்குலம் மறை யோஞகி
விரிபெரு ஞான நூலை விளம்பியே பயிற்சி யாகிச்
சரமுடன் சிவத்தைச் சேர்வன் சாற்றினேம் ரிஷிக ளம்மா.

55. தேவலோகத்தை அடைவான் தேவியே ! இவனுடைய பின் ஜன்மத் தைக் கேளுங்கள். காசிக்கருகில் உயர்ந்த பிராமண குலத்தில் பிறந்து, பெரிய ஞான சாஸ்திர (வேதாந்தம்)த்தை நன்குக் கற்றுணர்ந்து, காலக் கிரமத்தில் சிவபிரான் திருவடிகளை அடைவான். தேவியே ! தெய்வ ஞானம் படைத்த ரிஷிகளாகிய நாங்கள் இவ் விஷயத்தைச் சொன்னேம். [மற்றவர் கள் இதில் அவநம்பிக்கை கொள்ளவேண்டாமென்பது கருத்து]

ஜாதகம் 13

1. பிறைபுதன் மேரு வாகப் பொன்மானில் சேயும் சாடிக்
கரியவன் சீய மாகக் கதிர்புகா கேது தேளில்
அரவுமே நந்தி யாக அலவனும் ஜன்ம மாக
உரைகுவீர் பலனே யென்று உத்தமி கேட்கும்போது.

		ராகு	
செவ்வாய்	இராசி சக்கரம்		லக்கினம்
குரு			சனி
புதன் சந்திரன்	சூரியன் சுக்கிரன் கேது		

1. விக்ருதி வருஷம் கார்த்திகை மாதம் 29-ஆந் தேதி சனிக்கிழமை இரவு ஐந்து நாழிகைக்குமேல் ஜனனம். [ஆங்கிலத் தேதி 13–12–1890] நவக்கிரஹங்களின் பாத சாரம் :—கேட்டை 4-இல் சூரியன் பூராடம், 2-இல் சந்திரன், அவிட்டம் 4-இல் செவ்வாய். பூராடம் 1-இல் புதன், சிரவணம் 3-இல் குரு. அனுஷம் 4-இல் சுக்கிரன். பூரம் 4-இல் சனி. ரோகிணி 4-இல் ராகு. கேட்டை 2-இல் கேது. நக்ஷத்திரம் பூராடம். சுக்கிர தசை இருப்பு வருஷங்கள் பதினென்று ; மாதங்கள் ஏழு. புதன். சந்திரன் தனுவிலும், குரு மகரத்திலும், செவ்வாய் கும்பத்திலும், சனி சிங்கத்திலும், சூரியன் சுக்கிரன் கேது விருச்சிகத்திலும், ராகு விருஷபத் திலுமாக, லக்கினம் கடகமாக, இவ்வாறமைந்திருக்கிற கிரக நிலையில் ஏற்படும் பலன்களைச் சொல்வீர்களாக, எனப் பார்வதி கேட்கலுற்றுள்.

2. பிருகுமே புகலு கின்ருர் பிறந்திடும் ஆண்பால் ஜன்மம்
வருமில்லம் வடபால் நோக்கம் மால்கோஷ்டம் தென்பால் நேரும்
பெருவயிறப்பன் உத்திரம் பூதவா கனத்தாள் மீனம்
அரன்கோஷ்டம் பால தாகும் அருகிய சிற்று ராகும்.

2. இவ்வாறு தேவி கேட்டவுடன் பிருகு முனிவர் பதில் உரைக்கின்ருர். இந்தக் கிரஹநிலையில் பிறந்த குழந்தை ஆண். பிறந்த வீடு வடதிசையை நோக்கி இருக்கும். [வீதி கிழக்கு மேற்கில் அமைந்தது எனக்கொள்க.]

வீட்டிற்குத் தென் திசையில் திருமாலின் கோயிலும். வடதிசையில் கணேசரது ஆலயமும் உண்டு. வட திசையில் காளி கோயில் இருக்கும். பரமசிவனது ஆலயமும் பக்கத்தில் இருக்கும். பிறந்த ஊர் மிகச் சிறியது.

3. இத்தகை யடையா ளத்து ளிப்பால ளிரண்டாம் ஜன்மம்
வித்தக னுதிப்பா னாகும் விளம்புவோம வடுகர் வர்க்கம்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இத்தகைய அடையாளமுள்ள ஊரில், இவன், குடும்பத்தில் இரண்டாவது குழந்தையாக ஜனித்திருப்பான். இந்நூலில் அவனுடைய தாய் தகப்பன் மனைவி புத்திரர் சகோதரர் ஆகியவர்களைப் பற்றியும், முன் ஜன்மம் பின் ஜன்மம் இவைகளைப்பற்றியும் கூறுவோமாக.

4. தந்தைக்குத் தாரம் ரண்டில் தரித்திடு மினையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் புகலுவோ மிவனின் தந்தை
ஓதுவம் துணைஆண் ஒன்று உத்தமி அவ்வாறு தீர்க்கம்
தீதிலா வாழ்வா ராமே செப்புவோம் பிதாகு ணத்தை.

4. ஜாதகனின் தந்தைக்கு இரண்டு மனைவிமார்கள். அவர்களில் சீவித்திருக்கும் இளைய மனைவிக்குப் பிறந்தவன் இவன். இவனுடைய தந்தையின் சகோதரபாவத்தை ஆராய்ந்தால், ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமுளரென அறியப்படுகின்றது. அவ்விருவரும் தீர்க்ககாலம் வாழ்வார்கள். பிதாவின் குணங்களைச் சொல்லுகின்றோம்! கேளுங்கள்.

5. அஞ்சின வார்த்தை கூறுவன் அடாவடி தன்னில் செல்லான்
தஞ்சமென் றோரைக் காப்பான் சாந்தவான் தரணி சேர்ப்பன்
பஞ்சுபோல் ரோம முள்ளான் பதர்குண மில்லா னாகும்
நஞ்சான குணமும் கொஞ்சம் நடையது துரிசு மாகும்.

5. பிறர் மனம் புண்ணாகாதபடி பயந்தே பேசுவான். பிறர் விஷயங்களில் அக்கிரமமாகப் பிரவேசிக்கமாட்டான். தஞ்சம் என்று வந்தவர்களைக் காப்பான். மிக்க சாந்த குணம் உள்ளவன். பூமிகளைச் சேர்ப்பான். பஞ்சு போல் மிருதுவான கேசம் (ரோமம்) உள்ளவன். பதட்டமில்லாதவன். தீய குணங்களும் சிறிது உண்டு. வேகமாக நடக்கும் இயல்புள்ளவன்.

6. குணமது நல்ல தாகும் குறிப்பினில் கொடுமை தோன்றும்
தணிவுளான் கிருஷி செய்வன் சாராள்க ளுடைய னாகும்
நினைவதை முடிப்பா னாகும் நேர்ந்திடும் பித்தச் சூடு
பணியோர்க ளுடைய னாகும் பஞ்சைபோல் உணவு கொள்வன்.

6. நற்குணம் படைத்தவன். தோற்றத்தில் கொடியவன் போலக் காணப்படுவான். அடக்கமுள்ளவன். விவசாயம் செய்வான். நல்ல சேவர்களை உடையவன். தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றுவான். இவனது

சரீரத்தில் பித்தச் சூடு தங்கி இருக்கும். உயர்ந்த யோகம் உள்ளவன். பஞ்சத்தில் அடிபட்டவன் போல உணவுகளை உட்கொள்ளும் இயல்புள்ளவன்.

[பணை=வயல், வயல்களைச் சேர்த்துப் பெரிய நிலச்சுவாந்தாராக இருக்கும் யோகம் என்று சொல்லலாம்.]

7. சல்லிய பாதை யேற்பன் தரணிகள் விரயம் செய்வன்
இல்லறம் விட்டு நீங்கி ஏகுவான் வெளியூர் கீழ்ப்பால்
அல்லல்கள் மட்டில் நேரும் அடாவடி வழக்கு முண்டு
வெல்லுவான் எதிரி தன்னை வித்தையும் சமம தாகும்.

7. கடன் உபத்திரவமும் இவனுக்கிருக்கும். அதன் காரணமாகப் பூமிகளையும் செலவழிப்பான். இல்லற வாழ்க்கையை விட்டுக் கீழ்த்திசையிலுள்ள ஓர் ஊரில் தனித்து வாழ்வான். சில அல்லல்கள் சிறிதாகவே ஏற்படும். இவன்மேல் பிறர் அக்கிரமமாக வழக்குத் தொடருவார்கள். ஆயினும் அவர்கள் தோல்வி யடைவார்கள். இவன் வெற்றி யடைவான். உலக விவகாரங்களுக்கு வேண்டிய கல்வியறிவும் படைத்தவன்.

8. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வே னிவனிரு நிறத்த னாகும்
பொன்பணி முன்னால் காணான் பெறுவனும் பின்னால் யோகம்
கன்னியர் மோக னுவன் கல்வியும் சமம தாகும்.

8. இப்படிப்பட்ட குணமுள்ளவனுக்கு இந்தக் கடகலக்கின பாலன் மகனாகப் பிறந்திருக்கிறான். இந்த ஜாதகனின் குணங்களைச் சொல்லுகின்றோம். கருத்த நிறத்தவன். பொன்னாலாகிய பூஷணங்களை இவன் இளமையில் அடையமாட்டான். பிற்காலத்தில் அவைகளைப் பெறும் யோகம் இவனுக்கு உண்டு. பெண்களிடம் மோகம் கொண்டவன். இவனுடைய தந்தைக்கு இருப்பதுபோல இவனுக்கும் அதே அளவில் கல்வியறிவு இருக்கும்.

9. தரணியால் ஜீவிப் பானும் சத்துரு ஜயமே செய்வன்
இருபது ஆண்டு மேலாய் எய்திடும் யோகம் தானும்
உறன்முறை மதிக்க வாழ்வான் உறுதியில் லாத நெஞ்சன்
அரிவையும் வந்த பின்பு அம்புலி போலே யோகம்.

9. பூமியைக்கொண்டு [பயிர்த் தொழிலால்] ஜீவனத்தை நடத்துவான். எதிரிகளை வெல்வான். இருபது ஆண்டுகளுக்கு மேல் இவனுக்கு விசேஷ யோகங்கள் வாய்க்கும். பந்துக்கள் மெச்சும்படி வாழ்க்கையை நடத்துவான். உறுதி இல்லாத மனம் உள்ளவன். [தீர்மானத்தை மாற்றிக்கொண்டே இருப்பான் என்பது கருத்து.] இவனுக்கு மனைவி ஏற்பட்ட பிறகு வளர்பிறைச் சந்திரன் போல இச் சாதகனுடைய யோகங்கள்;

10. பெருகிடும் பால னுக்குப் புண்ணிய மனத்த னாகும்
கரமதில் கத்திரி ரேகை கமலரே கையுமே யுண்டு
மருவரை விசித்தே வெல்வன் மாடுகள் விருத்தி யுண்டு
குறையென்றோர்க் குதவி செய்வன் கொம்பனே யாளே கேளாய்.

10. விருத்தியடையும் பிறர்க்கு நன்மைகளையே எண்ணும் மனத்தை உடையவன். கரத்தில் கத்திரி ரேகையும், கமல ரேகையும் அமைந்திருக்கும். எதிரிகளைப் பிரித்து, அதன் பிறகு அவர்களை வெல்லும் இயல்புள்ளவன். கால் நடைகளை விருத்தி செய்வான். தேவை உள்ளவர்களுக்கு உதவி புரிவான். தேவியே ! கேளுங்கள்.

குறிப்பு.—கமலரேகை, - வாழ்க்கையில் ஏற்படும் நன்மைகளை அறிவிக்கும் தாமரைப் புஷ்பம் போன்ற கோடுகள் எனவும், கத்திரி ரேகை வாழ்க்கையில் இடையூறுகளைத் தெரிவிக்கும் கோடுகள் எனவும், எதிரிகளைப் பிரித்து வெல்லுவது, பேதோபாயம் எனவும் சொல்லுவார்கள்.

11. சிலதுநாள் வனவா சங்கள் செய்குவா னிந்தப் பாலன
நலமது பெறுவான் பின்னுல் நவிலுவீர் அந்தக காலம்
அலரியின் தசையி லேதான் அதிகமாய்ப் பகையு மெய்தும்
நிலவுதன் தசையில் பூர்வம் நேர்ந்திடு மதிகத் துன்பம்.

11. இவன் சில நாட்கள் வனவாசம் செய்ய நேரிடும். அதற்குப் பிறகு இவனுக்கு நன்மைகள் உண்டாகும். சூரிய தசையில் பகைவர்கள் அதிகமாக ஏற்படுவார்கள். அதே போல, அதற்கடுத்து வரும் சந்திரதசை பத்து வருஷங்களில் முதல் ஐந்து வருஷங்களிலும் துன்பங்கள் பல நேரிடும்.

12. வரும்வினை எவரால் சொல்வாய் அவன்துணை யவனுல் நேரும்
பெரும்பொருள் தானிய சேதம் பெருத்ததோர் கலக மாகும்
இருபது ஆண்டு மட்டும் எய்திடு மந்தச் சங்கை
திருகுளோர் உறவாம் பின்பு செலவதி கேட்டி டாயே.

12. எவர்களால் இவன் குடும்பத்திற்குத் துன்பங்கள் நேரிடும் ? சொல்லுவீர்களாக, எனப் பார்வதி கேட்க, பிருகு முனிவர் பதில் கூறுகின்றார். இந்த ஜாதகனின் தந்தை சகோதரனுல் பெரிய கலகம் ஏற்படும். பொருள்களுக்கும் தானியங்களுக்கும் அதிக சேத மேற்படும். இவனுடைய இருபதாவது ஆண்டுமட்டும் அந்தத் தொந்தரவுகள் நீடித்திருக்கும். பிறகு நல்லுறவோடு வாழ்வார்கள். தேவியே ! கேளுங்கள்.

13. தன்துணை முன்பெண் ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாகப்
பின்துணை ஆண்பால் ஒன்று பேதையர் இருவ ராகும்
சொன்னஆண் தனசு ராசி தொல்புனர் பூச நாளில்
மன்னவ னுதிப்பா னுகும் வரைகிரு மவன குணத்தை.

13. இவனுடைய சகோதரபாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். இவனுக்கு மூத்த சகோதரி ஒருத்தியும், இளைய சகோதரன் ஒருவனும், அவனுக்குப் பிறகு இரு சகோதரிகளும் உண்டு. இங்குச் சொல்லப்பட்ட ஆண் [சகோதரன்] புனர்வஸு நக்ஷத்திரத்தில் தனுர்லக்னத்தில் ஜனிப்பான். அவனுடைய குணங்களைச் சொல்லுகின்றோம்.

14. தரித்திர மில்லா னுகும் சந்தேக மனத்த னுகும்
பொருத்தமாய்ப் பேசு வானும் பூமியை விருத்தி செய்வான்
வெறுத்தோர்க ளுறவு கொள்வன் வேண்டினேர்க் குதவி
[செய்வன்
கரத்தினில் மாலின் ரேகை கண்டிடு மென்று சொல்லே.

14. ஏழ்மை இல்லாதவன். அவன் மனம் யாரையும், எதையும் சந்தேகிக்கும். இடம், பொருள், ஏவல் இவைகளுக்குப் பொருத்தமாகப் பேச வல்லவன். பூமிகளை விருத்தி செய்வான். உலகை வெறுத்த துறவிகளிடம் நட்பை உடையவன். தன்னை நாடி வந்தவர்களுக்கு உதவி செய்வான். அவனது கரத்தில் விஷ்ணுரேகை விளங்கும்.

குறிப்பு.—விஷ்ணுரேகை வரப்பெரும் நன்மைகளை அறிவிக்கும்.

15. பத்தாண்டு மேலா யாகப் பதின்மூன்று ஆண்டு மட்டும்
சுற்றத்தார் பகையினுலே சிறையுடன் வாழ்வா னுகும்
வெற்றியாம் பின்னு லென்றும் விசனங்கள் அதன்மேல் காணுன்
பத்தினி ஒன்றே யாகும் பாலர்கள் ஆண்பால் ஒன்று.

15. பத்து ஆண்டுகளுக்குப் பிறகு மூன்று வருஷங்கள் உறவினர்களின் பகை காரணமாக இவன் சிறையிலிடப்பட்டு இருப்பான். அதற்குப்பிறகு வெற்றி பெற்றுச் சௌக்கியமடைவான். அதன் மேல் விசனங்களும் இவனுக்கேற்படா. இவனுக்கு மனைவி ஒருத்தியே. புதல்வனும் ஒருவனே.

16. கன்னிகை மூவ ராகும் காளையும் வயது தீர்க்கம்
தன்னுடன் கூடி வாழ்வன் சத்திமார் சேதி யாவும்
பின்பாகம் விபரம் சொல்வோம் புதவல்னின் மணத்தைக்
[கேளாய்]
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

16. பெண்கள் மூவராவர். பிள்ளை நீண்ட ஆயுளுடன் வாழ்வான். [பெண்கள் அவ்வாறு இருக்கமாட்டார்கள் எனக்கருதலாம்] பிள்ளையும் இவனுடன் இருந்து வாழ்வான். அந்தப் பெண்களின் செய்திகளைப் பின் பாகத்தில் சொல்லப்போகின்றோம். இந்த ஜாதகனுடைய மணத்தைப்பற்றிக் கூறுகின்றோம். தேவியே ! கேளுங்கள்.

17. இருபது இரண்டு ஆண்டில் இவனுக்குப் பாரி வாய்க்கும்
அரிவையும் கீழ்ப்பா லாகும் அரைகிறே மவள்கு ணத்தை
திருஇலா குணத்தா ளாகும் சிவந்தமெய் அடக்க வர்த்தை
நறுமல ரிஷ்டம் கொள்வள் நாயகன் மனதுக் கேத்தோள்.

17. இந்த ஜாதகனின் இருபத்திரண்டாவது வயதில் இவனுக்குப் பாரியை வாய்ப்பாள் [மணமாகும் என்பது கருத்து]. அவள் கீழ்த் திசையில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்றோம். கெட்ட குணமில்லாதவள். சிவந்த மேனியாள் அடக்கமான வார்த்தையைச் சொல்பவள். வாசனைபொருந்திய மலர்களில் அதிக வாஞ்சை உள்ளவள். கணவனுக்கு இனியவள்.

18. மாதுவும் வந்த பின்பு வளர்பிறை போலே யோகம்
ஓதுவோம் தீர்க்க ஜீவி உரைக்கிறோம் புத்திர பாவம்
மேதினில் தவத்தால் தோன்றும் விளம்புவோ மாண்பா லொன்று
காதலி இருவ ராகும் கழறின மொழிகுன்றுது.

18. அந்தப் பெண் குடும்பத்திற்கு வந்த பிறகு யோகங்கள் வளர்பிறைச் சந்திரன் போல வளரும். புத்திர பாவத்தைப்பற்றிக் கூறுவோம். தவத்தின் பயனைக் கிடைக்கப்பெறும் புத்திரபாக்கியத்தில் ஒரு ஆணும், இரு பெண்களுமுண்டு. அவர் மூவரும் தீர்க்க ஜீவிகளாவர். எங்கள் மொழிபொய்யாகாது.

19. அத்திரி மறுத்துச் சொல்வார் அஞ்சினில் புகர்பானு கேது
குற்றமா யிருப்ப தாலே குழவிகள் எவ்வாறு விருத்தி
பத்தினுக் குடையோன் சேயாய்ப் பத்திற்குப் பன்னொன்றில் தங்கச்
சுத்தமா யிருப்ப தாலே செப்பினேன் முனியே யானும்.

19. பிருகு முனிவர் இவ்வாறு கூறியதைக் கேட்டு, அத்திரி முனிவர் மறுக்கின்றார். அஃதாவது :—இந்த ஜாதகத்தில் புத்திரபாவமாகிய ஐந்தாமிடத்தில் சூரியன் சுக்கிரன் கேது இருப்பதால் இவனுக்கு எவ்வாறு புத்திர விருத்தியுண்டு ?

குறிப்பு.—புத்திர ஸ்தானத்தில் பரஸ்பரம் சத்ரு கிரஹங்களோ பாப கிரஹங்களோ தங்கினால் சந்ததி உண்டாகாது என்பது சாஸ்திரம். சூரியனும் சுக்கிரனும் சத்ருக்களாவர். சூரியனும் கேதுவும் அப்படியே. மேலும் கேது இயற்கையிலேயே பாபக்கிரஹம். ஆகவே சந்ததி இருக்கக்காரணமில்லை என்பது கருத்து. இந்த மறுப்பிற்குப் பிருகு முனிவர் பதில் கூறுகின்றார். பத்தாம் ஸ்தானத்திற்கு அதிபனாகிய செவ்வாய் பத்திற்குப் பதினொன்றாமிடத்தில் சுத்தமாகப் பலத்துடன் இருப்பதால் புத்திரபாக்கியத்திற்குத் தடையில்லை.

20. பாலகன் முன்ஜன் மத்தைப் பகருவோம் பசுமரத் தூரில்
சீலமில் லாத கங்கைக் குலமதினு தித்து மேலும்
வேல்விழி மனைவி மைந்தர் விளங்கியே சுகமாய் வாழ்ந்து
காலன்தன் னூடு சென்று கஞ்சனுக் வரையப் பட்டு;

20. இப் பாலகனின் முன்ஜன்மத்தைக் கூறுகின்றோம். இவன் முன் பிறவியில், பசுமாத்தூர் என்ற ஊரில், நற்சீலம் அதிகமில்லாத வேளாள குடும்பத்தில் பிறந்து, அழகிய மனைவி மக்கள் இவர்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். கடைசியில் யமலோகம் சென்று இவன் பிரம்ம தேவனால் இங்கு படைக்கப்பட்டு;

21. பிறப்பனு மிந்தப் பாலன் பேசுவோ மிவனின் யோகம்
தரையது மூவூர் சேர்ப்பன சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
பெருந்தந்தை யில்லம் வாழான் பகையோரை நசிக்க வைப்பான்
இருபது ஆண்டு மேலாய் இயம்புவோம் யோகம் தானும்.

21. இக்குலத்தில் பிறந்திருக்கிறான். இவனது யோகங்களைப்பற்றிச் சொல்லப்போகின்றோம். மூன்று ஊர்களில் நிலங்களை அடைவான். கால் நடைகளை அபிவிருத்தி செய்வான். பெரிய தகப்பனாரின் வீட்டிற்குச் சென்று வசிக்கமாட்டான். [அவர்களிடம் அன்பு இல்லாதவன் என்பது கருத்து] எதிரிகளை அழிப்பான். இருபது வருஷங்களுக்கு மேல்தான் இவனுக்கு நல்ல அதிருஷ்டமுண்டு.

22. அதுமுதல் மரணம் மட்டும் அணுகாது தரித்தி ரம்தான்
இதுநிற்க அன்னை சேதியியம்புவோ மினிமே லாகத்
ததிபாக்கிய முடைய ளாகும் சாதமும் குறைவி லாதான்
அதிகமாய் வார்த்தை கூறாள் அழகுளாள் என்று சொல்வோம்.

22. இருபத்தோராவது வயதுமுதல் ஆயுள் முடியும் மட்டும் ஏழ்மையினால் கஷ்டப்படமாட்டான். இனிமேல் இவனுடைய தாயின் குணங்களைக் கூறுகின்றோம். பால் தயிர் பாக்கியமுள்ளவள். குறைவற்ற ஆகாரப்பொருள் உடையவள். அதிகமாகப்பேசும் சுபாவமில்லாதவள். அழகு உள்ளவள்.

23. தன்துணை ஆண்பால் நான்கு சாற்றுவோம் பாவைக் கேதான்
சொன்னஆண் இருவர் தாமும் தூருவான் சமமான் பேரில்
பின்சில காலம் சென்று புகுவாரம் உள்ளூர் தன்னில்
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்.

23. அவளுக்கு நான்கு சகோதரர்களுண்டு. அவர்களில் இருவர் கப்பல் மூலம் வேறுதேசம் சென்று, வேறு ஓர் ஊரில் சிறிது காலம் வசித்து, பிறகு தங்கள் சொந்த ஊரில் வந்து வசிப்பார். அவர்களைப்பற்றிய விவரங்களைப் பின்பாகத்தில் கூறுவோம்.

24. மதுரு பூர்வம் தன்னை அறிவிப்போம் கொச்சி நாட்டில்
நீதியாய்க் கோகு லத்தி ல நேர்ந்துமே வறுமை யின்றிக்
காதலி சுகமாய் வாழ்ந்து காலன்தன் நாடு சேர்ந்து
வேதனால் வயைரப் பட்டு விளங்கினாள் என்று சொல்வோம்.

24. இந்த ஜாதகனின் தாயின் முன்ஜன் மத்தைப்பற்றிக் கூறுகின்றோம் இவள் முன் பிறவியில் கொச்சி நாட்டில் யாதவமிசத்தில் பிறந்து, வறுமையினால் கஷ்டப்படாமல், சுகமாக வாழ்ந்து வந்தாள். அந்திய காலத்தில் யமனுலகம் சென்றாள். பிறகு பிரம்மதேவனால் இங்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறாள்.

25. மறுஜன்மம் பட்சி தன்னில் வருவனும் வைசியச் சேயாய்த்
திருமகன் தந்தை பூர்வம் செப்புவோம் பெண்ணே யோரம்
சிறுஊரில் வன்னிய சேயாய் ஜனித்துமே செட்டுச் செய்து
வருநாளில் வினையைச் சொல்வேன் மங்கையே கேட்டிடாயே.

25. இவனுடைய மறு ஜென்மத்தையும் சொல்லுகின்றோம். பட்சி தீர்த்தம் என்று சொல்லப்படும் திருக்கழுக்குன்றத்தில் வைசிய வமிசத்தில் பிறப்பான். இப்பாலகனது தந்தையின் பூர்வஜன்மத்தைச் சொல

லுகின்றோம். பெண்ணை நதிக்கு அருகில் சிறிய ஓர் ஊரில் வன்னிய குலத்தில் ஜனித்திருந்தான். அப்பொழுது அவன் வியாபாரம் செய்து சுகமாக வாழுங்காலத்தில் அவனுக்கேற்பட்ட ஒரு வினையைச் சொல்லுகின்றோம். கேட்பாயாக.

26. தன்துணை பாகம் தன்னைத் தராமலே மோசம் செய்தான்
பின்னவன் வருத்த முற்றுப் புகன்றசாபத்தைக் கேளாய்ப்
பொன்கடன்தந்த பாவி பிறக்குபின் ஜன்மதன்னில்
உன்னில்லம் யானு தித்து உனக்குற வாகியே தான்.

26. தன் சகோதரனுக்குச் சேரவேண்டிய சொத்தின் பாகத்தைத் தராமல் இவனே அபஹரித்துக் கொண்டான். ஆகையால் வருத்தமுற்ற அந்தச் சகோதரன் சொன்ன சாபத்தைக் கேளுங்கள். எனது சொத்தை அபகரித்த வ பாவி ! உன்னுடைய பின்ஜன்மத்தில் நானும் உன்னுடைய வீட்டில் பிறந்து உறவு கொண்டாடி.

27. தீராத பகையும் செய்துஉன் செல்வத்தை யழிப்பே னென்று
கூடறியே தெருத்தூள் விட்டான் குலவிற்று அந்தச் சாபம்
மாரனும் அந்தி யத்தில் மலர்வனம் வைததுமே தான்
ஆறுமா முகத் தோனுக்கு அம்மலர் சாத்தி வந்தான்.

27 தீராத பகையை உடையவனக உன் சொத்துக்களை அழிப்பேன் என்று சாபமிட்டான். தெருத்தூள்களையும் இருகைகளாலும் எடுத்து ஆகாயத்தில் தூற்றி விட்டுச்சென்றான். இவனுக்கு அச்சாபம் நேர்ந்தது. இவனும் (ஜாதகனின் தந்தை) அந்திய காலத்தில் பூந்தோட்டம் வைத்து, ஆறுமுகக் கடவுளுக்கு அத்தோட்டத்தில் பூத்த பூக்களைச் சமர்ப்பித்து வந்தான். (முதலில் சகோதரனின் சொத்தை அபஹரித்தாலும் பிறகு நல்ல புத்தியினால் இப்புண்ணியத்தைச் செய்தான்.)

28. மறலியின் நாடடைந்து மலரயன் வரையப் பட்டு
தரணியி லுதித்தா னென்றோம் தங்கிடும் முன்னூழ்ச் சாபம்
மருகனுய்த் தோன்றி யேதான் வழக்குகள் பலவாய்ச் செய்து
பொருளது நஷ்டம் செய்வன் புண்ணிய சாலி கேளாய்.

28. கடைசியில் யமனுலகம் அடைந்தான். பிறகு பிரம்மதேவனால் இக்குலத்தில் பிறப்பிக்கப்பட்டான். ஆகவே முன்ஜன்ம சாபப்படி சகோதரியின் மகன் இவன் மேல் வழக்குகள் பல தொடர்ந்து இவனது பொருள்களை இப்பொழுது நாசப்படுத்தினன் (என அறியவேண்டும்).

29. தரணியும் விரய மாகிச் சார்ந்திடும் தனக்கு மேதான்
உறன்முறை உதவி யாலே பிற்காலம்பூமீ சேரல்
பிறைபோலப் பின்பால் யோகம் பெறுவனும் என்று சொல்வோம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

29. ஆகையால் இவனுடைய பூமிகள் வழக்குகளால் நாசமாயின. உறவினர்களால் பூமிகள் பிற்காலத்தில் சேரும். பிறைச் சந்திரன் போல் பிரதிதினம் வளர்ந்திடும் யோகங்களும் இவனுக்குண்டு என்று சொன்னோம். பார்வதி தேவியே ! மேலும் கேளுங்கள்.

30. முப்பது நன்ப தாண்டில் விளம்புவோம் தந்தை கண்டம்
செப்புவோ மிவன்பின் ஜன்மம் சோதி மாமலை யிலேதான்
ஒப்புவான் சைவச் சேயாய் உரைத்த இம் மொழிகுன் றுது
தப்பிதம் அன்னைக் கேதான் சாற்றுவோம் நாற்ப தாண்டில்.

30. இந்த ஜாதகனுக்கு முப்பத்தொன்பதாவது வயதில் தந்தை மரணமாவான். தந்தையின் பின்ஜன்மத்தைக் கூறுகின்றோம். சோதிமலை என்று சொல்லப்படும் திருவண்ணுமலையில் சைவ வம்சத்தில் பிறப்பான். இம்மொழி தவறுது. ஜாதகனின் அன்னையின் மரணக காலத்தைக் கூறுகின்றோம். ஜாதகனுக்கு நாற்பதாவது வயதில் தாய் மரணமாவாள்.

31. அறுபது ஐந்து ஆண்டில் ஆடிமா தத்தி லேதான்
திருயக னுடலம் ஏகும் செப்புவோ மிவன்பின்ஜன்மம்
பெருமையாய்ப் புலியூர் தன்னில் பிறப்பன் மிக்கு லத்தில்
கரிமதவானை பெற்ற காதலி கேட்டிடாயே.

31. இவனுடைய மரண காலத்தைக் கூறுகின்றோம். அறுபத்தைந்தாவது வயதில் ஆடி மாதத்தில் இவன் வேறு உலகம் ஏகுவான். இவனது பின்ஜன்மத்தைக் கூறுகின்றோம். பார்வதி தேவியே ! பெருமைவாய்ந்த (திருப்பாதிரிப்புலியூரில்) இதே குலத்தில் பிறப்பான். ஸ்ரீ விநாயகரைப் பெற்ற தாயே ! மேலும் கேளுங்கள்.

குறிப்பு.—புலியூர் சிதம்பரம் என்றும் கொள்ளலாம்.

32. பிறந்திடு காலம் தன்னில் பூராட மிரண்டாம பாதம்
சிறந்தசுக்ச் கிரனி ருப்பு செப்புவோம் பதினே ராண்டும்
உறைந்திடும் திங்க ளேழும் உரைத்தமை பூர்வபாகம்
அறந்துணை வளர்க்கு மெங்கள் ஆத்துமத்தாயே கேளாய்.

32. பூராடம் இரண்டாம் பாதத்தில் இந்த ஜாதகன் பிறந்திருக்கிறான், ஜனன காலத்தில் சிறந்த சுக்கிர தசையிலிருப்பு வருஷங்கள் பதினொன்று. மாதங்கள் எழு. இது பூர்வபாகமாகையால் சிறிதே சொல்லியிருக்கின்றோம். தருமம் செழிக்க அருள் செய்பவளே ! எங்கள் ஆன்மாவிற்குத் தாயே ! கேளுங்கள்.

ஜாதகம் 14

1. கடக லக்கின மதாகக் கதிர் புதன் சென்மம் தங்க
விடம்குரு அஞ்சில் தங்க வெண் மதிநவத்திலாக
முடவனு மாறிலாக மெஞ்ஞானி சேயும் லாபம்
அடவுடன் புகர் ஈராறில் அனுகினல் பலன் எவ்வாறு.

சந்திரன்		கேது செவ்வாய்	சுக்கிரன்
	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் புதன்
சனி	ராகு குரு		

குறிப்பு.—1. சார்வரி வருஷம் ஆடிமாதம் 3-ந் தேதி செவ்வாய்க் கிழமை விடியற் காலையில் ஜனனம். [ஆங்கிலத் தேதி 17–7–1900] புனர்வசு 4-இல் சூரியன். பூரட்டாதி 4-இல் சந்திரன். ரோஹிணி 4-இல் செவ்வாய், ஆயில்யம் 2-இல் புதன். அனுஷம் 2-இல் குரு (வக்ரீ). திருவாதிரை 4 இல் சுக்கிரன் (வக்ரீ). மூலம் 3-இல் சனி (வக்ரீ). அனுஷம் 4-இல் ராஹு. ரோஹிணி 2-இல் கேது. நக்ஷத்திரம் பூரட்டாதி. குரு தசையில் இருப்பு வருஷங்கள் மூன்று, மாதஙகள் ஒன்பது. இலக்கினம் கடகம்.

1. சூரியன் புதன் கடகத்திலும், ராஹு குரு விருச்சிகத்திலும், சந்திரன் மீனம் சனி தனுஸிலும், கேது செவ்வாய் விருஷபத்திலும், சுக்கிரன் மிதுனத்திலுமாக. இவ்வாறன கிரஹ நிலையின் பலன் என்ன ? என்று உமா தேவியார் வினவினள்.

2. மங்கையும் கேட்கும் போது வசிஷ்டரும் கூறுகின்றார்
இங்கிவன் ஆண் ால் ஜன்மம் இல்லமும் வடதென் வீதி
செங்கதிர் வாடை யாகும் சிங்கவா கனத்தாள் மேற்கில்
ஐங்கரன் அருகில் தங்கும் அணுகிய மார்க்கமுண்டு.

2. இவ்வாறு பார்வதி தேவியார் கேட்டதற்கு வசிஷ்ட முனிவர் பதில் கூறுகின்றார். கிரஹங்கள் இந்நிலையில் இருக்கப் பிறந்த குழந்தை ஆண். வீதி வடக்கு மேற்கில் அமைந்திருக்கும். வீடு கிழ்வரிசையிலிருக்கும் [மேற்கு நோக்கி இருக்கும்]. காளிகாதேவி மேற்கில் தங்கி இருப்பாள். ஸ்ரீவிநாயகர் கோயிலும் அருகிலுண்டு. சமீபத்தில் ஒரு பாதையும் போகும்.

3. இத்தகை யடையா ளத்துள் இலகிய சிறு வூராகும்
வித்தகன் சேஷ்டனுக விளம்புவோம் தாயே யாங்கள்
பெற்றதாய் தந்தை யோகம் பேதையர் புத்திர யோகம்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. இப்படி அமைந்துள்ள சிறிய ஓர் ஊரில் இவன், குடும்பத்திற்கு மூத்த பிள்ளையாகப் பிறந்திருப்பான். தாயே ! இவனுடைய தாய் தந்தை மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும், முன்பின் ஜன்மங்களைப்பற்றியும் இந் நூலில் சொல்லப் போகின்றோம்.

4. தந்தையின் துணைவர் காணுன் தனியனுய் வாழ்வா னுகும்
எந்தக் காரணத்தினலே இயம்பினீர் அந்த சங்கை
விந்தையாய்ச் சிகிசேய் லாபம் மேவினர தனல் சொன்னேம்
அந்தவன் குணத்தைச் சொல்வேன் அல்பமாம் கல்வியென்றேம்.

4. தகப்பனுக்குச் சகோதரர்கள் இருக்கமாட்டார்கள். தனியனுகவே வாழ்வான் என்று சொல்லுகிறோம். எக்காரணத்தினல் சகோதரர் இல்லை என்று சொன்னீர் ? அதைத் தெளிவு படுத்துங்கள், எனப் பார்வதி தேவி கேட்கலுற்றாள். வசிஷ்டர் பதில் கூறுகின்றார். செவ்வாயும் கேதுவும் பதினென்றும் இடத்தில் இருப்பதால்தான் தந்தைக்குச் சகோதரர் இல்லை என்று தெரிவித்தோம். இந்த ஜாதகனின் தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். கல்வியறிவு சிறிதாகவே இருக்கும்.

குறிப்பு.—பிறந்த குழந்தையின் ஜாதகத்திலிருந்து தந்தைக்குச் சகோதரர் இல்லை என்று எவ்வாறு கூறமுடியும், எனச் சந்தேகிக்கலாம். அதற்குச் சாஸ்திரங்களில் தக்க வழிகளைத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். எவ்வாறெனில், தந்தையின் குணம் நிறம் முதலியவைகளை ஆராய்ந்து சொல்ல வேண்டுமானல் பித்ரு ஸ்தானம் என்று சொல்லப்படும் ஒன்பதாவது இடத்தையும், அதன் அதிபனின் பலத்தையும் கொண்டு சொல்லவேண்டும். தந்தையின் சகோதரபாவத்தை ஆராய வேண்டுமானல் ஒன்பதாமிடத்திலிருந்து மூன்றுவது இடமாகிய பிறந்த குழந்தையின் ஜாதகத்தின் பதினேராமிடத்தையும், அதன் அதிபனையும் பார்த்துச் சொல்ல வேண்டும் என்று கூறியுள்ளார்கள். ஆகவே, பதினேருமிடத்தில் செவ்வாய் கேது இருப்பதாலும், சுக்கிரன் பன்னிரணடில் இருப்பதாலும் தந்தைக்குச் சகோதர விருத்தியில்லை என்பது மிகவும் பொருத்தமானது.

[இவ்வாறே மற்றைய இடங்களிலும் அறிய வேண்டும்.]

5. சிலதுநாள் வனவா சங்கள் செய்குவா னிருநி றத்தன்
கலகத்தைக் கூறு னுகும் காரிய சமர்த்த னுகும்
நலமதை எவர்க்கும் செய்வன் நாட்டினில் வறுமை காணுன்
சொலுமொழி காப்பா னுகும் தொடுசெவி மந்தமாகும்.

5. சிலகாலம் வனவாசம் செய்வான் [ஒருவராலும் அறியப்படாமல் தனித்து வாழ்வான் என்பது கருத்து.] கருநிறமுடையவன். சண்டையில் ஈடுபடமாட்டான். காரியங்களை நிறைவேற்றுவதில் வெகு சமர்த்தன்.

எல்லோருக்கும் நன்மைகளையே செய்வான். வறுமை இல்லாதவன் சொன்ன வார்த்தைப்படியே நடப்பான். இவனுக்குக் காதும் சிறிது மந்தமாக இருக்கும்.

6. தந்தையால் சுகமில் லாதான் தாய்தனை தன்பால் சின்னுள்
அந்தவன் வாழ்வா னுகும் ஆதியில் தரித்திரம் கொஞ்சம்
பிந்தியும் ஞாதி யாரால் பூமியும் இல்லம் சேர்ப்பன்
சந்தன் மேல் பத்தி பூண்பன் காதலி கேட்டி டாயே.

6. தன்னுடையதந்தையால் சுகங்கள் இல்லாதவன். தாயின் சகோதரரால் (மாமனுல்) சிறிது காலம் ஆதரிக்கப்பட்டிருப்பான். பால்யத்தில் மாத்திரம் சிறிது வறுமையால் கஷ்டப்பட்டிருப்பான். பிற்காலத்தில் பங்காளிகள் மூலம் நிலமும் வீடும் இவனுக்கு [ஜாதகனின் தந்தைக்கு]ச் சேரும். பக்தர்களிடம் அன்பு கொண்டவளே! உனது திருமகனுகிய கந்தனிடம் பக்தி பூண்டவன்.

7. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறேம் தாயே கேளும்
கன்னியா குமரி தென்பால் கலந்தனன் ரெட்டி வம்சம்
அன்னையும் தந்தைமிக்க அவன்வாழ்நாள் வினையைச் [சொல்வேன்
தன்னுடை வேலைக் காரி தையல்மேல் நிந்தை சொல்லி ;

7. இவனது முன்ஜன்மத்தைக் கூறுகின்றேம். தேவியே! கேளுங்கள். இவன் முன் பிறவியில் கன்னியா குமரிக்குத் தெற்கில் ரெட்டி வம்சத்தில் தாய் தந்தைகளுடன் சுகமாக வாழும் காலத்தில், இவனுக்கு நேர்ந்த பாவத்தைச் சொல்லுகின்றேம். தன்னுடைய வேலைக்காரியின் மேல் நிந்தைகளைச் சொல்லி ;

8. குலத்தைவிட் டோட்டும் போது கூறுவா ளந்த மாது
கலகத்தைச் சொன்ன பாவி கலக்கும்பின் ஜன்மம் தன்னில்
நிலையது விட்டு நீங்கி நேராது துணைவர் தாமும்
அலைமீது துரும்பு போல அம்மாம னில்லம் வாசம்.

8. தனது வீட்டை விட்டுத் துரத்தி விட்டான். அவளுக்குப் பிழைப்பு இல்லாமல் செய்தபடியால் மிகவும் வருத்தமடைந்த அவள் சாபமிட்டாள். கலகத்தை உண்டு பண்ணிய பாவியே! நீ மறுஜன்மத்தில் நிலை தவறி, சகோதரர்களுமின்றி, கடல் அலையில் விழுந்த துரும்பு போலத் தத்தளித்து, மேலும் அம்மான் வீட்டில் திக்கற்று வசிப்பாய்.

9. காதுகள் மந்த மாயும் காசினி தன்னில் வாழ்வாய்
ஒதியே சென்று ளென்றேம் உரைந்தது அந்தச் சாபம்
தீதுகள் வேறு காணன் சேயனும் அந்தி யத்தில்
மாதவர் தொண்டு பூண்டு அறுமுகன் பத்தி யாயும் ;

9. உனது காதுகளும் செவிடாகி வாழ்வாய் என்று சாபமிட்டுச் சென்றுள். அந்தச் சாபம் இப்பொழுது வந்து பற்றிக்கொண்டது. [முன் ஜன்மத்தில் கோள் சொல்லி பிறர் காதைக் கெடுத்தபடியால் மறு ஜன்மத்தில் இவனுடைய காதுகள் செவிடாம் என காரியகாரணபாவங்களை அறியவேண்டும்.] வேறு தீதுகளை இவன் அடையமாட்டான். இவன் அந்திய காலத்தில் தவசிகளுக்குத் தொண்டு செய்தும், ஆறுமுகக் கடவுளிடத்தில் பக்தியுடன் இருந்தும் ;

10. காலன்தன் னுடடைந்து கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமே னுதிப்பா னுகும் நல்கிடும் மாது சாபம்
ஏலவே துணையும் காணன் இரு காது மந்த மாகும்
கோலமாம் குடும்பம் பூர்வம் குறித்தவிக் குணத்தா னுக்கு

10. காலன் உலகை அடைந்தான். பிறகு பிரம்மதேவனுல் இங்குப் படைக்கப்பட்டிருக்கிறுன். அந்த ஏழை வேலைக்காரியின் சாபத்தால் சகோதரர் இவனுக்கு இல்லை. காதுகளும் செவிடாயின. பால்யத்தில் குடும்பமும் கஷ்டமடைந்திருந்தது. இப்படிப்பட்ட குணமுள்ளவனுக்கு ;

11. இந்தவோர் மகவு தோன்றும் இயம்புவோ மவன்குணத்தைச்
சிந்தையில் கபடு மில்லான் செய்நிலம் விருத்தி செய்வன்
பந்தணி மார்கள் மோகன் பாரபட் சங்கள் பேசான்
வந்தவர்க் கன்ன மீவன் மாடுகள் விருத்தி யுண்டு ;

11. இந்த ஜாதகன் பிள்ளையாகத் தோன்றுவான். இவனுடைய குணங்களைச் சொல்லுகிறேம். மனத்தில் கள்ளமில்லாதவன். நிலங்களை அபிவிருத்தி செய்வான். பெண்களிடம் மோகம் கொண்டவன். பக்ஷபாதம் இல்லாதவன். தன் வீட்டை அடைந்தவர்களுக்கு அன்னமளிப்பான். கால்நடைகளையும் விருத்தி செய்வான்.

12. வித்தையும் சமம தாகும் வேலவன் பத்தி பூண்பன்
சுற்றத்தார் மதிக்க வாழ்வன் சோம்பிடான் காரி யத்தில்
குற்றத்தை வெளிக்காட் டாதான் குலமதை ஆதரிப்பன்
சித்திர இல்லம் செய்வன் செய்ந்நன்றி மறவா னுகும்.

12. கல்வியும் போதிய அளவு இருக்கும். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டவன். உற்றுர் உறவினர் மதிக்க வாழ்க்கையை நடத்துவான். சோம்பல் இல்லாதவன். பிறர் குற்றத்தை ஒருவரிடமும் வெளியிட மாட்டான். தன் குலத்தை ஆதரிப்பான். அழகிய வீட்டை நிர்மாணிப்பான். பிறர் செய்த உதவியை மறக்கமாட்டான்.

13. இருநிறம் முன்கோ பத்தன் எதிரியை யிளக்க வைப்பன்
பொருளது சேர்ப்பா னுகும் போசன வறுமை காணன்
தரை சேர்ப்பன் தந்தை மேலாய்த்தைரிய மனத்த னுகும்
தரிபடக் கூறு னுகும் சாதகன் தீர்க்க ஜீவி.

13. கருத்த நிறமுள்ளவன். சிறிது முன் கோபி. சத்துருக்களை ஒடுங்கச் செய்வான். நற் பொருள்களைச் சேர்ப்பான். போஜன சௌக்கிய முள்ளவன். தகப்பனைவிட அதிக நிலங்களைச் சேர்ப்பான். அஞ்சா நெஞ்சம் படைத்தவன். வெட்டெனப் பேச மாட்டான். (முன்பின் முரணைப் பேசமாட்டான் என்றும் கொள்ளலாம்.) ஜாதகன் தீர்க்க ஜீவியாகவும் இருப்பான்.

14. தன்துணை ஆண்பால் ரண்டு சத்தியார் அவ்வாறு தீர்க்கம்
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்
மன்னவன் மணத்தின் காலம் வரைஇரு மிருப தாண்டில்
தென்திசை பாரி வாய்க்கும் செப்புவோ மன்னை வர்க்கம்

14. இவனுக்குச் சகோதரர் இருவர். சகோதரிகளும் இருவர். உமா தேவியாரே ! அவர்கள் வரலாற்றைப் பின்பு தெரிவிப்போம். இவனுடைய மணத்தின் காலத்தை அறிவிக்கின்ரேம். ஜாதகனுக்கு இருபதாவது வயதில் மணம் நடைபெறும். அந்தப் பெண் தென்திசையில் மாதுரு வருக்கத்தில் பிறந்திருப்பாள்.

15. பாரியை யின் குணத்தைக் கேண்மோ பச்சைமால் நிறத்தா ளாகும்
கூறுவாள் சுகமாய் வார்த்தை குணமது இரண்டு முண்டு
காரியச் சமர்த்த ளாகும் கட்டுரை பகரா ளாகும்
தீரமா மனத்தா ளாகும் சீலம்போல் வெளி மயக்கம்,

15. இவனுக்குப் பாரியையாக வரும் பெண்ணின் குணத்தைக் கேளுங்கள். கருத்த மேனியாள். இனிமையான வார்த்தைகளைப் பேசுவாள். நற்குணங்களும், தீய குணங்களும் உண்டு. காரியம் செய்வதில் சாமர்த்தியம் வாய்ந்தவள். அடுக்கு வார்த்தைகளைப் பேசி ஆடம்பரப்படுத்தமாட்டாள். தைரியமுள்ளவள். வெளிப்பார்வைக்கு நல்லொழுக்கமுள்ளவள் போலக் காணப்படுவாள். (உண்மையில் நல்லொழுக்க மில்லாதவள் என்பது கருத்து.)

16. அடிசிலுக் கினிய ளாகும் அடைந்தோரை ஆத ரிப்பள்
மடமயில் யோக சாலி வந்தவர்க்கன்ன மீவள்
தடபுடல் செய்கை யுண்டு சந்தேக மனத்த ளாகும்
விடம் போலக் கோபம் கொஞ்சம் வித்தகி வயது தீர்க்கம்.

16. இனிய உணவைச் சமைத்து உண்பிக்கும் இயல்புள்ளவள். தன்னை வந்தண்டியவர்களை ஆதரிப்பாள். அதிருஷ்டமுள்ளவள். அதிதிகளுக்கு அன்னமளிப்பாள். ஆடம்பரச் செய்கையில் சிறிது வாஞ்சை உள்ளவள். எதையும் சந்தேகிக்கும் மனப்பான்மை உடையவள். விஷம் போல் கடுமையான கோபமுள்ளவள். நீண்ட ஆயுள் படைத்தவள்.

17. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் தசமே தோன்றும்
சித்தமா யாண்பால் மூன்று செல்விமார் இருவர் தீர்க்கம்
செத்திடும் முதலில் ரண்டு செப்புவீ ரந்தச் சங்கை
குத்தமாய் ராகு அஞ்சில் கூடின பலத்தால் சென்னேம்.

17. புத்திர பாவத்தைச் பற்றிச் சொல்லுகின்ரேம். இந்தத் தம்பதிகளுக்குப் பத்துக் குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் ஆண் மூவர். பெண் இருவர். இவர்களில் ஐவர் தீர்க்கமாக வாழ்வார்கள். மற்ற ஐவரும் நீடித்து வாழமாட்டார்கள். முதலில் பிறக்கும் இரு குழந்தைகளும் தங்கா. முதலில் பிறந்த குழந்தைகள் தங்கா என எக் காரணத்தினுல் சொன்னீர்கள் ? எனப்பார்வதி கேட்க, வசிஷ்டர் பதில் கூறுகின்ருர். புத்திரபாவத்தில் பாபக்கிரஹமாகிய ராஹு இருப்பதால் அவ்வாறு சொன்னேம்.

18. பாலகன் முன்ஜன்மத்தைப் பகருவோம் விரிஞ்சி தன்னில்
சீல மில் லாத கங்கைக் குலமதி லுதித்துப் பின்னுள்
ஞாலங்கள் விருத்தி செய்து நாயகி மதலை யுண்டாய்
வேலன்மேல் பத்தி பூண்டு வினையது இல்லா ஞானன்

18. ஜாதகனது முனஜன்மத்தைக் கூறுகின்ரேம். விரிஞ்சிபுரத்தில் அதிக சீலமில்லாத வேளாளர் வீட்டில் பிறந்து, பிறகு பூமிகளை அடைந்து, மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டிருந்தான். ஒரு தீய வினையையும் செய்யவில்லை.

19. மறலியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப்பட்டுத்
திருமகனு திப்பா ஞகும் செப்புவோ மவன் குணத்தை
முருகன் தன்பக்தி கொள்வன் உயர்வான குடும்ப மேற்பன்
அறிவோர்கள் நேசம் கொள்வன் ஆக்களின் விருத்தி யுள்ளான்.

19. காலக்கிரமத்தில் யமனுலகம் சென்ருன். பிறகு பிரம்மதேவனுல் இங்குப் பிறப்பிக்கப்படுவான். ஜாதகனுடைய குணங்களைச் சொல்லுகின்ரேம். முருகக்கடவுளிடம் பக்தி கொண்டவன். பெருமைவாய்ந்த குடும்பமுள்ளவனுவான். அறிவாளிகளின் நட்பு இவனுக்கிருக்கும். பசுக்களை அபிவிருத்தி செய்வான்.

20. இல்லமும் ஈரெட் டாண்டில் எய்து வான் சித்திர மாகச்
சொல்லதைக் காப்பா ஞகும் துரவுகள் செய்வா ஞகும்
அல்லல்கள் காண ஞகும் அவனிகள் விருத்தி செய்வன்
நல்லவ ஞகி வாழ்வன் நாட்டினில் சல்லியம் காணன்.

20. பதினறுவது வயதில் அழகிய வீடு நிர்மாணிப்பான். சொன்ன சொல்லைக் காப்பாறுவான் [அதன்படி நடப்பான் என்பது கருத்து].மக்களின் நன்மைக்காகப் பல கிணறுகளைத்தோண்டி நிறுவுவான். வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாதவன். நிலங்களைச் சேர்ப்பான். எல்லோருக்கும் நல்லவனுகவே வாழ்வான். இவனுக்குக் கடன் தொந்தரவு இராது.

21. சாதகன் தனக்கு யோகம் செப்பின காரணம் சொல்
ஆதவன் புதனும் சென்மம் அந்தணன் அஞ்சில் தங்கப்
பூதல மகனும் லாபம் பொருந்தின பலத்தினலே
சாதிப்போம் வேசியோகம் தாமரை யோகமென்றும்,

21. முன் சொன்ன பலன்கள் (வெகு சீக்கிரத்திலேயே) நடப்பதற்கான யோககாரணங்கள் என்னவென்று உமாதேவி கேட்க, வசிஷ்டர் சொல்லுகின்றார். சூரியனும் புதனும் இலக்கினத்தில் விளங்குவதாலும், பாக்கியாதிபதியான குரு ஐந்தாமிடத்தில் தங்கியதாலும், புத்திர, ஜீவனாதிபதியான செவ்வாய் லாபஸ்தானத்தில் இருப்பதாலும், நல்ல யோகங்களைச் சொன்னோம் [தருமகருமாதி பதிகளுக்குப் பரஸ்பரம் பார்வை இருப்பதால் என்பது கருத்து.] இந்த ஜாதகனுக்கு வேசி யோகமும் தாமரை யோகமும் உண்டு.

22. இருவித யோகத் தாலே இடரில்லா வாழ்வா னாகும்
தரையது நாட்டு நாளாய்த் தங்கிடும் என்று சொல்வோம்
பொருளது கொடுக்கல் வாங்கல் புகன்றயோ கங்க ளெல்லாம்
இருவாறு ஆண்டு மேலாய் எய்திடு மென்று சொல்வோம்.

22. ஆகவே இவ்விரு யோகங்களால் ஜாதகன் வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாதவனாவான். நிலம் சேரும். பணம்கொடுக்கல் வாங்கலும் [வட்டி வியாபாரம்] இவனுக்கு ஒரு ஜீவனோபாயமாக அமையும். பன்னிரண்டு வருஷங்களுக்குமேல் மேலே சொன்ன யோகங்கள் வாய்க்கும்.

குறிப்பு :—பன்னிரண்டு வயதுச் சிறுவனுக்குப் பூமி வீடு முதலியவை சேரும் என்று சொல்லப்படும். பலன்கள் நேரடியாக அவனுக்கு ஒவ்வாதாதலால், ஜாதகன் தந்தைக்கு அவைகள் ஏற்பட்டு அதன் மூலம் ஜாதகன் அவைகளை அனுபவிப்பான் என்று கருதவேண்டும்.

23. மன்னவன் தசையாம் பூர்வம் வருடமும் மூன்று மாகும்
தன்னுடன் திங்க ளென்பான் சமரச போக மெய்தும்
துன்சனி தசையின் பாகம் சுகம்பெறும் நினைத்த வெல்லாம்
உன்னத இல்லம் செய்தல் உற்றவர் மதிப்புக் கொள்ளல்.

23. ஜாதகன் ஜனித்த காலத்தில் குரு தசையிலிருப்பு வருஷங்கள் மூன்று, மாதங்கள் ஒன்பது. இவ்வருஷங்களில், பலன்கள் சாதாரணமாகவே நடைபெறும். அதற்மேல் சனிதசையில் சுகங்கள் ஏற்படும். நினைத்த காரியங்கள் கைகூடும். அழகிய வீடு நிர்மாணிப்பான். உறவினர்களின் மதிப்பும் ஏற்படும்.

24. பிறைபோலச் செல்வ மோங்கல் பூமிகள் சேர்த்த லுண்டு
வறுமையில் லாமல் வாழ்வன் மதிமகன் தசை விசேஷம்
திருமகன் மரண மட்டும் தீங்கள் காண ளுகும்
அறிவிப்போம் பின்பா கத்தில் மங்கையே கேட்டி டாயே.

24. பிறைச்சந்திரன் போலச் செல்வம் வளரும். நிலங்களும் சேரும். எவ்விதத்திலும் வறுமை இல்லாதவனாவான். சந்திரன் மகனாகிய புதன் தசையிலும் விசேஷ பலன்கள் உண்டாகும். ஜாதகனுடைய ஆயுள்காலம் முடியத் தீங்குகள் ஏற்படாமல் சுகமாக வாழ்வான். தேவியே! பின் பாகத்தில் விவரமாகச் சொல்லுகின்றோம். மேலும் கேளுங்கள்.

25. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் சமதே காத்தாள்
காதக மனமும் கொஞ்சம் கட்செவி போலே கோபம்
சீதள குணத்தா ளாகும் சீலமில்லாதா ளாகும்
வேதனை யொருவர்க் கொண்ணாள் விகடங்கள கூறு ளாகும்.

25. ஜாதகனுடைய தாயின் குணங்களைச் சொல்கின்றோம். மாநிறம் வாய்ந்தவள். சமமான உடல்வளர்ச்சி உடையவள். பிறர்துன்புறுவதால் வருந்தாதவள். பாம்பிற்குச் சினம் வருவதுபோல் இவளுக்குச் சினம் வரும். சீதல குணமும் வாய்ந்தவள். அதிக சீல மில்லாதவள். பிறருக்குத் தீமைகளை எண்ணாதவள். பரிகாச வார்த்தைகளைப் பேசமாட்டாள்.

26. மங்கைபாட் டாளி யாகும் மருவிடும் பித்தச் சூடு
சங்கயா மனத்த ளாகும் தாயில்லம் தென் பா லாகும்
நங்கைக்குத் துணை உடன் ஒன்று நல்கிடு தீர்க்க மாக
அங்கவள் குணத்தைச் சொல்வேனவனியை விருத்தி செய்வன்.

26. அவள் சோம்பலின்றி உழைப்பாள். பித்தச் சூடு உடலில் தங்கி இருக்கும். எதையும் சந்தேகிக்கும் மனப்பான்மை கொண்டவள். ஜாதகன் ஊருக்குத் தென்திசையில் இவளது பிறந்த ஊர் இருக்கும். அவளுக்கு ஒரு சகோதரனுண்டு. அவன் தீர்க்கமாக வாழ்வான். அவனுடைய குணத்தைச் சொல்லுகின்றோம். பூமிகளைச் சீர்திருத்தி அதிகம் செய்வான்.

27. சுகதுக்கம் கலந்து வாழ்உள் தோகையும் ஒன்றே தீர்க்கம்
தகமையாய் வடபால் நேரும் தன்சுதர் ஆண்பால்ரண்டு
பகையிலாப்பெண்பால் ரண்டு பெருகிடும் தீர்க்க மாக
அகமது பின்னுல் செய்வன் அறிவுளான் என்று சொல்வோம்.

27. அவனது வாழ்க்கையில் சுகதுக்கங்கள் நிரம்பக் கலந்திருக்கும். இவளுக்கு [ஜாதகனின் தாய்க்கு] ஒரு சகோதரியும் உண்டு. அவளும் நீண்ட ஆயுளுடன் வாழ்வாள். அவள், தான் பிறந்த ஊருக்கு வடதிசையில் வாழ்க்கைப்படுவாள். இது நிற்க. அவனுக்கு (ஜாதகனின் மாமனுக்கு) இரண்டு பிள்ளைகளும், இரண்டு பெண்களுமுண்டு. அந்நால்வரும் தீர்க்கமாக வாழ்வார்கள். வாழ்க்கையின் பிற்காலத்தில் அவன் வீடுகட்டுவான். அறிவாளியாகவும் இருப்பான்.

28. வயதுமே தீர்க்க மெய்தும் வருவோரை ஆத ரிப்பன்
நயமுள வார்த்தை சொல்வன் நாற்காலி விருத்தி யுண்டு
தயைவுளமனத்த னாகும் தசஆண்டின் மேலே யோகம்
வியமில்லா வாழ்வா னாகும் வித்தகி கேட்டி டாயே.

28. நீண்ட ஆயுள் உள்ளவன். தன் வீட்டிற்கு வருபவர்களுக்கு ஆதரவளிப்பான். நயமான வார்த்தைகளைப் பேச வல்லவன். கால்நடைகளை அபிவிருத்தி செய்வான். கருணை உள்ளவன். பத்துவருடங்களுக்கு மேல் அவனுக்கு யோகமுண்டாகும். ஆடம்பரச் செலவுகளைச் செய்யாமல் வாழ்வான். உமாதேவியே! மேலும் கேளுங்கள்.

29. அன்னையின் முன்ஜன் மத்தை அறிவிப்போம் பெண்ணையோரம்
தன்மதி செக்கான் வம்சம் தோன்றியே சுகமுள் ளோளாய்
கன்னிகை வாழு நாளில் கலந்ததோர் வினையைச் சொல்வேன்
பின்னொரு மாது பேரில் புகன்றனள் நிந்தை வார்த்தை.

29. தாயின் முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். முன்பிறவியில், இவள், பெண்ணையாற்றிற்கு அருகில் செட்டி குலத்தில் உதித்து, சுகமாக வாழ்ந்து வந்தாள். அப்பொழுது அவளுக்கேற்பட்ட ஒரு வினையைச் சொல்லுகின்றேன். வேறொரு பெண்ணின்மேல் தகாத நிந்தைகளைச் சொன்னாள்.

30. மாதுவும் திகில டைந்து வரைந்த சாபத்தைக் கேண்மோ
ஓதினுய் நிந்தை வார்த்தை உதிக்கும்பின் ஜன்மம் தன்னில்
தீதாகத் துணைப் பெண் ஹுந்தான் செல்வதி நாத்தியின்றி
மேதினில் வாழ்வா யென்ன மேவிற்று அந்தச் சாபம்.

30. ஆகையால் நிந்தனைகளுக்குள்ளான பெண், மிகவும் பயந்தும் வருந்தியும் சொன்ன சாபத்தைக் கேளுங்கள். நீ என்மேல் தகாத நிந்தைகளைச் சொன்னதால், மறுபிறவியில் உன்னிடத்தில் பகைமைகொண்ட சகோதரியை அடைவாய். [அவளால் இவளுக்குக் கவலைகள் ஏற்படும் என்பது கருத்து.] மேலும், வாழ்க்கைப்படும் வீட்டிலும் நாத்தியின்றி [பெண் உதவியின்றி] கஷ்டப்படுவாய், என்று சாபமிட்டாள். அந்தச் சபாம் இவளைப் பிடித்துக்கொண்டது.

31. அந்திய காலந் தன்னில் அவளுக்கு வாய்ப்புண் கண்டு
அந்தக னகரம் சென்று அயனுமே வரையப் பட்டு
வந்தவ ளென்று சொன்னேம் மாதுமுன் சாபம் போலத்
தன்துணை கன்னி காணுள் சாராது நாத்தி தானும்.

31. பின் பிறவியில் அந்தியகாலத்தில் [தகாதபடி நிந்தனைசெய்ததால்] வாயில் புண்கள் ஏற்பட்டு அவஸ்தைப்பட்டு இறந்தாள். பிறகு இக்குலத்தில் பிரம்மதேவனால் பிறப்பிக்கப்பட்டாள் என்று சொன்னேம். முற்பிறவி சாபத்தினால் இப்பிறவியில் சகோதரி பிறந்திருந்தும் அவளை அடிக்கடி கண்டு பேசி மகிழ்ச்சியடையாதவளாகவே வருந்துவாள். இவளுக்கு நாத்தனாரும் இல்லை.

32. மறு ஜன்மம் தணிகை நாட்டில் வருவளாம் ரெட்டி வம்சம்
கருமகா லங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர் தாம்
திருகிலா முப்பா றுறில் செப்புவோம் தந்தை கண்டம்
உரைக்கிறே மிவன்பின் ஜன்மம் உடுக்கையி லிக்குலத்தில்.

32. இவள் மறு ஜன்மத்தில் திருத்தணிகைக்கு அருகில் ரெட்டி வமிசத்தில் பிறப்பாள். ஜாதகன், தன் தந்தைக்குக் கருமம் செய்யநேரும் காலத்தைச் சொல்லுவீராக, எனப் பார்வதி கேட்க, வசிஷ்டர் கூறுகின்றார். ஜாதகனுக்கு முப்பத்தாறுவது வயதில் அவன் தந்தை மரணமடைவான். மரணமடைந்த பிறகு அவன் இதே ஜாதியில் பிறப்பான்.

33. ஜனிப்பனு மரசு செய்வன் சேயனைப் பெற்ற அன்னை
கனமுள நாற்பத்தாறில் காலன்தன் பதிக்குச் செல்வள்
சினமிலா எழுப தாண்டில் சிராவண மாதம் தன்னில்
வணிபன்தன் னுடலம் ஏகும் உரைகிறே மிவன்பின் ஜன்மம்.

33. பிறந்து அரசு செய்வான் [மேலான அரசாங்க உத்யோகத்தில் அமர்வான் என்பது கருத்து]. இந்த ஜாதகனைப்பெற்ற தாய் ஜாதகனுக்கு நாற்பத்தாறுவது வயதில் மரணமடைவாள். ஜாதகன், தனது எழுபதாவது வயதில் ஆவணி மாதத்தில் இவ்வுலகம் விட்டு, விண்ணுலகம் ஏகுவான். இக் கடகலக்கின மகனது பின் ஜன்மத்தையும் கூறுகின்றோம்.

34. தென்திசை குற்ற லத்தில் ஜனிப்பனும் வைசிய சேயாய்ப்
பொன்பல முடைய னுகிப் புதல்வனும் வாழ்வா னுகும்
அன்னவன் ஜனன காலம் அந்தணன் தசைமூன் றுண்டு
தன்னுடன் திங்க ளொன்பான் சாற்றினேம் பூர்வ பாகம்.

34. தென் திசையில் உள்ள குற்றாலத்தில் வைசிய மகனுகப் பிறப்பான். ஏராளமான பொற்காசுகளை உடையவனுகி, மனைவி மக்களுடன் சுகமாக வாழ்வான். இக்கடகலக்கின மகன் பிறந்தபொழுது குருதசையில் இருப்பு வருஷங்கள் மூன்று, மாதங்கள் ஒனபது என்று முன்னமேயே (இருபத்து மூன்றும் பாட்டிலேயே) சொன்னேம்.

ஜாதகம் 15

1. மதிபுதன் வீணை யாக மந்தனும் கயிறும் வண்டி
நிதியனும் தெருக்கா லேற நீள்குஜன் பெண்ணில் தங்க
அதிரவி மழைக்கோள் புல்லம் அற்றதோர் சிசு ருவில்
துதிஜன்மம் வளைய லாகத் தோன்றிடு நவக்கோ ளிவ்வாறு.

		சூரியன் சுக்கிரன்	சந்திரன் புதன்
	இராசி		லக்கினம் சனி ராகு
கேது	சக்கரம்		குரு
	குரு		செவ் வாய்

சர்வதாரி வருஷம் வைகாசி மாதம் 31-ஆந் தேதி திங்கட்கிழமை காலை நாழிகை 5-30—10-30-க்குள் ஜனனம்.

ஆங்கில தேதி 11—6—1888

நவக்கிரஹங்களின் பாதசாரம்.

மிருகசீரிஷம் 2-இல் சூரியன். திருவாதிரை 3-இல் சந்திரன் ஹஸ்தம். 4-இல் செவ்வாய். புனர்வசு 1-இல் புதன். அனுஷம் 2-இல் குரு (வக்ரீ). ரோஹிணி 3-இல் சுக்கிரன். புஷ்யம் 3-இல் சனி. புஷயம் 3-இல் ராகு. சிரவணம் 1-இல் கேது.

1. சந்திரன் புதன் மிதுனத்திலும், சனி ராகு கடகத்திலும், குரு விருச்சிகத்திலும், செவ்வாய் கன்னியிலும், சூரியன் சுக்கிரன் விருஷபத்திலும், கேது மகரத்திலுமாகவும் இலக்கினம் கடகமாகவும். இவ்வாறு கிரஹ நிலைகள் அமைந்தால் பலன்களைச் சொல்லுவீர்களாக, எனப் பார்வதி வினவினுள்.

2. பிறந்தசே யாணும் ஜன்மம் பேசுவோம் வடதென் வீதி
நிரந்தர மேற்குப் பார்வை நிகழ்த்துவோ மருகில் மூத்தோன்
திரமிலாச் கோஷ்ட முண்டு செப்புவோ மதன்மேல் மாயோன்
பெருவயி றப்பன் காளி பாஞ்சாலி வாச மாமே.

2. இந்தக் கிரஹநிலையில் பிறந்தவன் ஆண். வீதி தெற்கு வடக்காக இருக்கும். பிறந்த வீடு மேற்கு நோக்கி இருக்கும் [கீழ் வரிசையில் இருக்குமென்பது கருத்து.] வீட்டிற்கு அருகில் சீர்கேடான ஒரு விநாயகர் கோயிலுமுண்டு. அதற்கும் மேல்திசையில் விஷ்ணு கோயிலும், பிள்ளையார் காளி திரௌபதியம்மன் இவர்களது ஆலயமும் இருக்கும்.

3. அருகினில் ஆழி யுண்டு அங்கனே சாலை மார்க்கம்
தெருகினில் ஓடை சூழி சாமுண்டி வாச மாகும்
குறுகினில் மூத்தோ னுண்டு குணக்கினில் மாயோன் மாரி
பருகிடு வடக்கி லேதான் பாலகன் கணேசன் வாசம்.

3. வீட்டிற்கு வெகு சமீபத்தில் ஒரு நீர் நிலையும் ஒரு பாதையும் இருக்கும். தெற்கில் ஓர் ஓடையும், சாமுண்டி [பார்வதி] தேவியின் ஆலயமும் இருக்கும். இவற்றின் எதிரில் விநாயகரது ஆலயமும், கிழக்கில் விஷ்ணு மாரியம்மன் இவர்களது கோயில்களும், வடதிசையில் உங்கள் குழந்தையான கணேசரது கோயிலும் இருக்கும்.

4. மீனத்தில் ஈசன் கோஷ்டம் விளங்கிடும் பேரூர் தன்னில்
தானமாய்த் தனித்த இல்லம் சைவனும் குலத்தில் வந்தோன்
ஜாதகன்மா துர் யோகம் சேயர்கள் தந்தை யோகம்
மான்விழி களத்திர புத்திரர் வரன்முன்பின் ஜன்மம் யோகம் ;

4. வடக்கில் சிவபிரானது ஆலயமும் உண்டு. இவ்வளவு ஆலயங்கள் நிறைந்த ஒரு பெரிய ஊரில் சைவகுலத்தில் பிறந்திருப்பான். இவனுடைய வீடு தனித்திருக்கும். இந்த ஜாதகனுடைய, தாய் தந்தை மனைவி புத்திரர் இவர்களைப்பற்றியும், இவனது பின்முன் ஜன்மங்களைப்பற்றியும்,

5. பலன்களை விபர மாகப் பகருவேன் பராசர் தாமும்
குலமது கங்கை வம்சம் குருபீட மிவனெ ன்றேது
நன்மையாய்ப் பிதாகு ணத்தை நாட்டுவோம் சிவந்த மேனி
கலைபல நூல்கள் கற்பன் காமனை யொத்த தேகன்.

5. பலன்களை விவரமாக இந்நூலில் கூறுகின்றேன் என்று பராசரர் தெரிவித்துக்கொண்டார். ஜாதகன் கங்கைவமிசம் என்று சொல்லப்படும் வேளாள வமிசத்தில் பிறந்திருக்கிறன். இவனே மூத்தவன். ஜாதகனின் தந்தையின் குணங்களைச் சொல்லுகின்றேம். சிவந்த மேனியான். பல கலைகளையும் நூல்களையும் கற்றிருப்பான். மன்மதனைப்போன்ற அழகிய தேகம் வாய்ந்தவன்.

6. சுயமாகப் பாட வல்லான் சொகுசுளான் குள்ள னுவன்
நயமாக வார்த்தை கூறுவன் நாட்டினில் கீர்த்தி யேற்பன்
தயையுளான் ஏழை பேரில் தனமுளான் ஊகை வாணும்
கயநடை யொத்த ருகும் காளைமுன் கோபி யாமே.

6. சுயமாகக் கவிகள் பாடக்கூடிய வல்லமை வாய்ந்தவன். சிரமங்களைச் சகிக்காதவன். அதிக வளர்ச்சி இல்லாதவன். அழகிய வார்த்தை பேச வல்லான். இவனுடைய கீர்த்தி நாட்டில் பரவும். ஏழைகளிடத்தில் கருணை கொண்டவன். அதிகச்செல்வம் படைத்தவன். மதிநுட்பம் உள்ளவன். யானைபோலக் கம்பீரமாக நடப்பவன். சிறிது முன்கோபியாகவும் இருப்பான்.

7. கரங்களில் சங்கு சக்கரம் கனதன ரேகை யுள்ளான்
இனங்களை அதிகம் வேண்டான் யாரையும் வசியம் செய்வன்
திருமகள் விலாச முள்ளான் சேர்ந்தவர் தம்மைக் காப்பன்
அரனுடைத் தொண்டு செய்வா னவன் சுகி புசிப்பா னுமே.

7. கரங்களில் சங்க ரேகை, சக்கர ரேகை, தன ரேகை இவைகள் அமைந் திருக்கும். தன்சாதி மனிதர்களை அதிகம் விரும்பாதவன். எல்லோரையும் தன்வசப்படுத்தும் இனிய சுபாவமுள்ளவன். லக்ஷ்மீவாசம் பொருந்தியவன். தன்னை அடைந்தவர்களுக்கு உதவுவான். சிவபிரானுக்கு அதிகத் தொண்டுகளைச் செய்வான். சௌகரியங்களை நன்றாக அனுபவிப்பான்.

8. பலருக்கும் உபதே சிப்பன் பத்தினி தனக்கு நேயன்
கவலையுங் கொஞ்ச முள்ளான் கனத்தவர் நேசஞ் செய்வன்
பெருவிழி தரள தந்தம் பூமியும் விருத்தி செய்வன்
மருமவான் செட்டு முள்ளான் மைந்தர்மேல் பத்தி யுள்ளான்.

8. எல்லோருக்கும் தருமங்களை உபதேசிப்பான். மனைவியிடத்தில் மிக்க அன்புள்ளவன். அவ்வப்பொழுது சிறிது கவலைப்படும் இயல்புள்ளவன். மதிப்பு வாய்ந்தவர்களின் நட்பும் இருக்கும். அகன்ற கண்களும், முத்து போன்ற பற்களுமுள்ளன. இவன் நிலங்களை அபிவிருத்தி செய்வான். சிறிது கபடமுள்ளவன். சிக்கனமாக வாழ்வான். தேவியே ! உங்கள் குழந்தைகளிடம் பக்தி பூண்டவன்.

9. வீண்செல வில்லா னுகும் மெல்லிய ரொருத்தி யுள்ளான்
ஆண்மையு முடைய னுகும் அவன்குலம் விருத்தி யாகாது
பான்மையான சுசிய னுகும் பலருக்கும் குறைவா னுகும்
வீண்சொலும் பேசா னுகும் விநோதகா ரியமே செய்வன்.

9. ஆடம்பரச் செலவுகளைத் தவிர்ப்பான். மனைவி ஒருத்திதான். அடக்கி ஆளும் சக்தி வாய்ந்தவன். அவனுடைய குலம் (வீடு) விஸ்தாரமாக இராது. நல்ல மனப்பான்மை உடையவன். பரிசுத்தன். பலரும் இவனைச் சாதாரண மனிதன் என்றே எண்ணுவார்கள். வீண் பேச்சுப் பேச மாட்டான். பல விநோத வேலைகளைச் செய்வான்.

10. இப்படி யிருக்குந் தந்தை இவனுடைய முன்ஜன் மத்தைச்
செப்புவேன் பரங்குன் றத்தில் செங்குந்த மரபில் வந்து
ஒப்பில மனைவி மைந்தர் உயர்தனம் பூமி பெற்று
அப்பணி முருக னுக்கு அநேகதர் மங்கள் செய்தான்.

10. இப்படிப்பட்ட தந்தையின் முன்ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். முன் பிறவியில் திருப்பரங்குன்றத்தில் கைக்கோலர் வமிசத்தில் பிறந்து, மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். செல்வம் பூமிகளைப் பெற்றிருந்தான். முருகனுக்குப் பலவித பணிகளைச் செய்தான். மற்றும் அனேக தருமங்களையும் செய்தான்.

11. ஆலயம் தன்னில் தீபம் அநேகபூச் செடியும் வைத்துச்
சீலமாய் வருவோ ருக்குச் சினமிலா தன்ன மீந்து
கோலமாய் ரதமுஞ் செய்து குணமுடன் வாழு நாளில்
ஞாலமேல் வந்த ஊழை நாட்டுவோம் கேளு மம்மா.

11. ஆலயத்தில் தீபம் ஏற்றி வைத்தான். பலவித புஷ்பச் செடிகளை வைத்து, அம்மலர்களை ஈசனுக்குச் சமர்ப்பித்தான். தன் வீட்டை நாடி வருபவர்களுக்கு மனமுவந்து அன்னமிட்டான். அழகியதேர் செய்து ஆலயத் திற்கு அர்ப்பணம் செய்தான். இவ்வாறு பல தருமங்களைச் செய்து, மனத்தூய்மையுடன் வாழும் நாளில் அவனுக்கேற்பட்ட வினையைச் சொல்லு கின்றோம். கேளுங்கள்.

12. தன்குலத் தலைவ னுகிச் சகலர்க்கும் தீர்ப்புச் செய்து
வந்தநாள் தன்னி லேதான் மனைவிக்கும் வரனுக் கும்தான்
எந்தவோர் கார ணத்தால் இவர்முக திப்பு மாகிச்
சொந்தமா யிவர்பால் சென்று தொடுவழக் கிட்டா ரம்மா.

12. அவன், தன் குலத்தினருக்குத் தலைவனாகி, தன் சாதியருக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகளில் பக்ஷபாதமின்றி நியாயம் வழங்கி வந்தான். இவ்வாறு இருக்கையில், ஒரு நாள் ஒரு மனைவிக்கும் அவள் கணவனுக்கும் ஏதோ ஒரு காரணத்தால் சண்டை ஏற்பட, அவர்கள் இவனிடம் வந்து, விசாரணை செய்து, நியாயம் வழங்கும்படி, கேட்டுக்கொண்டார்கள்.

13. நியாயங் கள் விசாரி யாமல் நற்பொருள் வாங்கிக் கொண்டு
ஓரவஞ் சனையாய்த் தீர்ப்பு உத்தமன் செய்தா னம்மா
தீரமா யந்தப் பெண் பால் செப்பினுள் சாபம் தானும்
பாரினில் வம்ச மற்றுப் பாக்கிய மற்றுப் போவாய்.

13. காரணங்களை விசாரிக்காமல் வந்த மனிதனிடம் நல்ல பொருள்களை வாங்கிக்கொண்டு, பக்ஷபாதத்துடன் அந்தப் பெண்ணிற்குப் பிரதிகூலமாகத் தீர்ப்பளித்தான். ஆகையால் மனம் வருந்திய அந்த மங்கை மிக்க உறுதியுடன் சாபமிட்டாள். நீ, இப்பிறவியிலேயே வமிசமற்றும், செல்வம் அற்றும் இருப்பாய்.

14. இப்படிச் சாபம் சொல்லி ஏந்திழை மரண மானுள்
தப்பித மாக வாங்கும் தனங்களைக் கந்த னுக்கு
ஒப்புடன் மனங் களிப்பாய் உயர்திரு விழாவுஞ் செய்தான்
செப்புவே னந்தி யத்தில் தனஞ்செல்வம் பூமி நீங்கி ;

14. என்று இவ்வாறு இவனைச் சபித்து அவள் சிறிது காலத்திற்குப் பிறகு மரணமடைந்தாள். அநியாயமாக வாங்கிய பணத்தை, இவன் ஸ்ரீ சுப்பிரமணியசுவாமிக்கு மனமகிழ்ச்சியுடன் சமர்ப்பித்து, உத்ஸவங்களையும் நடப்பித்து வந்தான். இப்படி நற்காரியங்களைச் செய்தானாயினும், இவன் அந்திய காலத்தில் சாபத்தினால் செல்வம் பூமி முதலியவைகள நீங்கப்பெற்று ;

15. அந்தஆ லயத்தி லேயே அவனுமே மரண மாகி
ஜாதகன் இச்சென மத்தில் சைவர்தம் குலமு தித்தான்
சொந்தமாந் துணைவ ரெட்டாம் சொல்லுவேன் ஆண்பால் ஒன்று
பந்தமாய்ப் பெண்பால் நான்கு பலித்திடும் தீர்க்க மாகும்.

15. அந்த ஆலயத்திலேயே மரணத்தையும் அடைந்தான். பிறகு இங்கு சைவ வமிசத்தில் உதித்திருக்கிறான். அவனுக்கு உடன் பிறந்தவர்கள் எட்டுப் பேர். அவர்களில் ஒரு சகோதரனும், நான்கு சகோதரிகளும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள்.

16. மற்றவை நஷ்டமாகும் மங்கையர் சுகமி ராது
உற்றடு மிக்கு ணத்தான் உரைக்கிறே மிவனின் தந்தை
சுத்தமாம் ஜாத கத்தின் சுகமதைச் சொல்லக் கேளாய்
நற்றவ னுகி வாழ்வன் நற்கல்வி யதிக முள்ளான்.

16. மற்றை குழந்தைகள் நீடித்திரா. இவனுக்கு மனைவியால் சுகம் அதிகமிராது. இப்படிப்பட்ட தந்தைக்கு இக் கடக லக்கின மகன் குழந்தையாகப் பிறந்திருக்கின்றான். ஜாதகனின் குணங்களைச் சொல்லுகின்றேம். கேளுங்கள். எல்லோருக்கும் நல்லவனுக வாழ்வான். அதிகக் கல்வியறிவு படைத்தவன்.

17. வித்தையும் புத்தி யுண்டு விளங்கிடும் சிவந்த மேனி
சுத்தநன் மனத்த னுகும் சுகமுளான் ஊகை வானும்
பத்தினி யொருத்தி யாகும் பந்துவு மெச்ச வாழ்வன்
நித்தியம் சுக புசிப்பன் நிதானமாய் வாழ்வானம்மா.

17. இவனுடைய கல்வியும், புத்தி சாதுர்யமும் உலகில் பிரசித்தி யடையும். சிவந்த நிறமுள்ளவன். தூய மனம் படைத்தவன். சௌக்யமுள்ளவன். சிறந்த மதியூகி. இவனுக்கு மனைவி ஒருத்திதான். உறவினர்கள் கொண்டாடும்படி வாழ்க்கை இருக்கும். ஒரு பொழுதும் கஷ்டப்படமாட்டான். எப்பொழுதும் குழப்பமின்றி, புத்தி நிதானத்துடன் இருப்பான்.

18. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேச முள்ளான்
காமமு மதிக முள்ளான் கண்களும் பெரிதாய்க் காட்டும்
பூமியும் விருத்தி செய்வன் புண்ணிய மனத்த னுகும்
தீமையு மொருவர்க் கெண்ணுன் சிறுதீனி யிச்சை யுள்ளான்.

18. ரோமங்கள் நீண்டிருக்கும். நல்ல உபதேசங்களைப் பெற்றிருப்பான். அதிக காம முள்ளவன். விசாலமான கண்களுள்ளவன். நிலங்களைப் பல

விதங்களிலும் மேன் மேலும் விருத்தி செய்வான். பிறர்க்குத் தீமைகளை எண்ணுமல் நன்மைகளையே நினைப்பான். சிற்றுண்டிகளில் அதிகவிருப்பமுள்ளவன்.

19. ஆலயக் கணக்குப் பார்ப்பன் அநேகமாய்ப் பொருளைச் சேர்ப்பன்
சோலையும் செய்வன் கேணி சுவாமிமேல் பக்தி யுள்ளான்
கால்குதி பெரிதாய் நிற்கும் கரத்தினில் சங்கு சக்கரம்
சீலமாஞ் சுழியு முள்ளான் சிறப்புளான் செட்டுச் செய்வன்.

19. தேவாலயக் கணக்குகளைச் சரிபார்க்கும் அதிகாரம் வாய்ந்தவனுக இருப்பான். பலவிதப் பொருள்களைச் சேர்ப்பான். பூந்தோட்டங்களையும் கிணறுகளையும் நிறுவுவான். சுவாமியினிடம் பக்தி கொண்டவன். குதிகால் பெரியதாக இருக்கும். கையில் சங்க ரேகை, சக்கர ரேகை, நற்சுழி இவைகள் அமைந்திருக்கும். கௌரவம் வாய்ந்தவனுவான். வியாபாரமும் செய்வான்.

20. கண்களு முறுதி யாகும் கணக்கினில் ஊகை வானும்
உண்ணிய உணவின் மீதில் உறைப்புடன் புளிப்பி லிச்சை
விண்ணவர் போற்று கின்ற மெல்லியே மேலுங் கேளே
புண்ணிய மனத்த னுகும் பிதுர்வர்க்கம் அல்ப மாகும்.

20. கண்கள் நல்ல பார்க்கும் சக்தி பெற்றிருக்கும். கணிதத்தில் மதிநுட்பம் உள்ளவன். ஆகாரப் பொருள்களில் உறைப்பும் புளிப்பும் அதிகம் கலந்த பொருள்களே இவனுக்கு விருப்பமாகும். தந்தை வருக்க உறவினர் வெகு சிலரே இருப்பார்கள். தேவதைகளும் போற்றும் தேவியே ! கேளுங்கள்.

21. முன்கோபம் கொஞ்ச முண்டு மொழி வனும் சிலேடைச் சொல்லை
மன்னவன் நெய்பா லிச்சை வண்டிவா கனமு முண்டு
உன்னத தேக முள்ளோன் உயரமு யில்லா னுகும்
கன்னலின் மொழிய னுகும் கவிதைக ளனேகம் செய்வன்.

21. சிறிது முன் கோபி. இரண்டு பொருள்தரும் வார்த்தைகளைப் பேசுவான் இவனுக்கு நெய்யிலும் பாலிலும் அதிக ஆசை இருக்கும். வண்டியும் இதர வாஹனவசதிகளும் உடையவன். உடல் வலிமை வாய்ந்தவன். உயர்ந்து வளராதவன். கரும்புரசம் போல் இனிமையான வார்த்தைகளைப் பேசுவான். சுயமாக அநேக பாடல்களை இயற்றும் சக்தி உள்ளவன்.

22. ஆவுகள் விருத்தி யுள்ளான் ஆள்களு முடை யனுவன்
பாவையர் மோக வானும் பாரிக்கு நல்ல னுவன்
மாவுமே யிவனுக் குண்டு வரிசையாய்த் தரள தந்தம்
நாவுமே தவற மாட்டேன் நாதனுர் பக்தி யுள்ளான்.

22. பசுக்களை விருத்தி செய்வான். நம்பிக்கை வாய்ந்த சேவகர்களும் இவனுக்கிருப்பார்கள். பெண்களிடம் மையல் உள்ளவன். மனைவிக்கு மிகவும்

இனியவன். லக்ஷ்மீ கடாட்சம் பொருந்தியவன். முத்துப்போன்ற பற்கள் வரிசையாக அமைந்திருக்கும். சொன்னவார்த்தை தவருதவன். ஈசனிடம் பக்தி உள்ளவன்.

23. சோதர மில்லா னுகும் சொல்லுவோ மிவன்முன் ஜன்மம்
தீதிலாக் காஞ்சி தன்னில் திகழ்கங்கை குல முதித்துத்
மேதினில் தனங்கள் பெற்று விசேஷமாய்ச் செட்டுச் செய்து
காதியு முடையோ னுகிக் கனபூமி யதிகம் சேர்ப்பன்.

23. உடன்பிறந்தார் இல்லாதவன். இவனுடைய முன் ஜன்மத்தைப் பற்றிக் கூறுகின்ருேம். பெருமைவாய்ந்த காஞ்சீபுரத்தில், வேளாள குலத்தில் பிறந்து, அதிகச் செல்வத்தை அடைந்து, வியாபாரம் செய்து வந்தான். மனைவியுடன் வாழ்க்கையை நடத்திவந்தான். புகழுடையவனுக விளங்கினுன். பூமிகளேயும் சேர்த்தான்.

24. கடவுளர் தொண்டு செய்து காவலன் வந்த நாளில்
உடலினில் சுரமும் கண்டு உம்பர்தம் நாடடைந்து
திடமுடன் கஞ்சன் தன்னுல் சேரவே வரையப் பட்டு
அடவுட னிக்கு லத்தில் அவனுமே உதித்தா னம்மா.

24. பக்தியுடன் கடவுளுக்குத் தொண்டுசெய்துவரும் நாளில், சரீரத்தில் ஜுரம் கண்டு தேவலோகம் சென்ருன். பிறகு பிரம்மனுல் இக்குலத்தில் படைக்கப்பட்டிருக்கின்ருன்.

25. இப்படி உதிக்கும் பாலன் இவனுடை மாதுர் வர்க்கம்
செப்புவோம் அன்னைக் கேதான் சிறந்திடும் தாயும் ரெண்டாம்
ஒப்புடன முதல்மா துக்கே உயர்புத்திரர் ஆணே யில்லே
மைப்படி கண்ணுன் ஒன்று மந்தமும் வருந்தி ராது.

25. இவ்வாறு கடகலக்கினத்தில் உதித்திருக்கும் பாலனது தாயின் குணங்களேச் சொல்லுகின்ருேம். இவன் தாய்க்கு இரு அன்னேகள். அவர்களில் மூத்தவளுக்கு ஆண் இல்லே. பெண் ஒருத்திதான் உண்டு. ஆண் குழந்தைப் பிறந்து அழியுமென்றும் சொல்வதற்கில்லே. [பிறக்கவே பிறக்காது என்பது கருத்து.]

26. மறுதாய்க்கு உதித்த இந்த மாதரு இவனின் தாயார்
பரிவுடன் குணமு ரைப்போம் பாரினில் கற்பு முள்ளாள்
திருமகள் விலாச முள்ளாள் சிவந்திடு மேனி யாவள்
வருமவர்க் கினிய ள வன் பந்துவு மெச்ச வாழ்வள்.

26. வேறு ஒருத்திக்குப் பிறந்தவள்தான் இவள். இவளது குணங்களேக் கூறுவோம். இவனுடைய தாய் மிகவும் கற்புள்ளவள். லக்ஷ்மி வாசம் பொருந்தியவள். சிவந்த மேனியாள். தன் வீட்டை நாடிவரும் அதிதிகளே புன்முறுவலுடன் உபசரிப்பவள். உற்ருர் உறவினர் மெச்ச வாழ்வாள்.

27. அவசர மனத்த ளாவள் அவளுமுன் கோபி யாவள்
தவமுடை யோர்க்கு அட பன சந்ததி அதிக மில்லாள்
இவளுடைத் தந்தை யில்லம் இடருகள் அனேக முண்டு
குவலய மீதி லேதான் கூறுவோ மின்னும் கேளே.

27. மனத்தில் நிதானமில்லாதவள். சிறிது முன் கோபம் உண்டு. தவசிகளிடம் விசேஷ பக்தி உள்ளவள். அதிக சந்ததி இராது. இவள் பிறந்த வீட்டிற்கு அனேகவித இடையூறுகள் ஏற்பட்டிருக்கும். இன்னமும் கூறுகின்ருேம், கேளுங்கள்.

28. மாதுரு சகோத ரங்கள் ஙரைகிருே மாண்பால் ரண்டு
நீதியாய்க் கன்னி ஒன்று நிகழ்த்துவோம் தீர்க்க மாக
ஆதியாய்க் குடும்பம் தானும் அலேச்சலாம் தேச வாசம்
கோதில்பின் வயசில் யோகம் கூறுவோம் மாமனுக்கு.

28. அவளுடைய சகோதர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்ருேம். இரு சகோதரர்கள். ஒரு சகோதரி. அவர்கள் மூவரும் தீர்க்க ஆயுளுடன் வாழ்வார்கள். ஆதியில் அவள் பிறந்த குடும்பம் பலவித அல்லல்களுக்கு உள்ளாகி வெளி ஊரில் தங்கி இருக்கும். இந்த ஜாதகனின் மாமனுக்குப் பின் வயதில் நல்ல அதிருஷ்டங்கள் வாய்க்கும்.

29. இங்ஙனம் பராசர் சொல்ல இயல்செய முனிவர் சொல்வார்
பொங்கமாய்ச் சகோதர வர்க்கம் புகலுவீ ரென்று கேட்கச்
சங்கையாய் முன்னுல் ஊழி தந்தைக்கு வந்த தாலே
துங்கமாய்ச் சகோத ரங்கள் தோன்ருவே இவனுக் கம்மா.

29 பராசரர் இவ்வாறு தாயைப்பற்றி சொன்னவுடன், ஜாதகனின் சகோதரபாவத்தைப் பற்றிச் சொல்லுவீராக, என ஜயமுனிவர் வினவினர். பராசரர் பதில் உரைக்கின்ருர் இவனது தந்தைக்கு முன்ஜன்மத்தில் ஒரு வினே ஏற்பட்டிருப்பதாலே அவனுக்குப் புத்திர பாக்கியம் அதிகம் இல்லே. [ஆகவே இவனுக்கு (ஜாதகனுக்கு) அதிக சகோதரர்கள் இல்லே என்பது கருத்து.]

பின்வரும் பாட்டில் அதிக சகோதரம் இல்லாமைக்குக் கிரஹ நிலேயைக் கொண்டு காரணத்தை விளக்கிக் காட்டுகிருர் :—

30. மூன்றினுக் குடையோ னேடே முப்பத்தானு விரயத் தானும்
தோன்றியே கேந்தி கோணம் சுகமில் லாதிருப்ப தாலே
ஆன்றதோ ராணே யில்லே அனுகிடும் பெண்பா லொன்று
சான்றிடும் தீர்க்கமாகச் சத்தியே மேலுங் கேளே.

30. சகோதர ஸ்தானம் என்று சொல்லப்படும் மூன்ருமிடத்ததிபனை புதன், கேந்திரத்திலோ திரிகோணத்திலோ பலம்பெற்று விளங்கினுல் தானே சகோதர விருத்தி யுண்டு என்று சொல்லலாம். புதன், முன் சொன்ன வகையில் பலம் பெற்றிராதலால் இந்த ஜாதகனுக்குச் சகோதரனே இல்லே. ஆனுல் ஒரு சகோதரி உண்டு. அவள் நீண்ட ஆயுளுடன் வாழ்வாள். தேவியே ! மேலும் சொல்லுகிருேம். கேளுங்கள்.

31. தந்தையின் மரண காலம் சாற்றுவேன் முப்பா னெட்டில்
தன்தனுர் மாதந் தன்னில் சதுர்த்தியாம் பூர்வ பக்ஷம்
நந்திட மரிட்ட மாகும் நாட்டுவோ மிவன் பின்ஜன்மம்
பந்தமா யவ்வூர் தன்னில் பிராமண குலமு தித்து ;

31. இந்த ஜாதகனின் தகப்பனின் மரணகாலத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஜாதகனுக்கு முப்பத்தெட்டாவது வயது நடை பெறும்போது, மார்கழி மாதத்தில் வளர்பிறை சதுர்த்தி திதியில் ஜாதகனின் தந்தை மரணமடைவான். இவனது பின் ஜன்மத்தைக் கூறுகின்றோம். இதே ஊரிலேயே பிராம்மண குலத்தில் பிறந்து ;

32. அரனடி பூசை செய்து அவனுமே வாழ்வா னம்மா
திறமையா யன்னை காலம் செப்புவோம் நாற்பா லைில்
உறுகன்னி மாதந் தன்னில் பிரம்மனுடனைச் சேர்வாள்
அறுமுகன் தனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

32. பரமசிவனது பாதார விந்தங்களைப் பூசை செய்து சுகமாக வாழ்வான். ஜாதகனுடைய தாயின் மரணகாலத்தைச் சொல்லுவோம். ஜாதகனுக்கு நாற்பத்து நாலாவது வயது நடக்கும்போது, புரட்டாசி மாதத்தில் இவன் தாய் பிரம்மனதுநாட்டை அடைவாள். முருகக் கடவுளைப்பெற்ற தாயே ! கேளுங்கள்.

33. ஜாதகன் மரண காலம் சாற்றுவோம் அறுபத் தைந்தில்
தீதான விஷத்தின் மாதம் திதியமாவசை தன்னில்
கோதுறு குன்ம ரோகம் கொண்டவன் மரண மாகி
மாதவர் பாதம்போற்றி மறுஜன்மம் தில்லை தன்னில் ;

33. ஜாதகனுடைய மரண காலத்தையும் நாங்கள் சொல்லுவோம். அறுபத்தைந்தாவது வயதில் கார்த்திகை மாதத்தில் அமாவாசை திதியில் குன்மரோகத்தினல் மரணமடைவான். மறுஜன்மத்தில் சிதம்பர க்ஷேத்திரத்தில் ;

34. அருமறைக் குலமுதித்து அரசர்பால் தொழிலுண்டாகிப்
பெரும்பொரு ளதிகம் சேர்த்துப் பிரபல கீர்த்தி பெற்று
வருமவர்க் கன்ன மீந்து வள்ளலும் வாழ்வா னம்மா
அறுமுகன் தனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

34. வேதமோதும் பிராமண குலத்தில் பிறந்து, ராஜாங்க உத்தியோகம் செய்து, ஏராளமான பொருள்களைச் சேமித்து வாழ்வான். பெரும் புகழ் படைத்தவனகவும் இருப்பான். தன் வீட்டை நாடிவருபவர்களுக்கு அன்னமளிப்பான். "வள்ளல்" என்று எல்லோராலும் போற்றப்பட்டுச் சுகமாக வாழ்வான். தேவியே ! மேலும் சொல்லுகிறோம்.

35. இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் ஒருபா னேழில்
கன்னியும் வடக்கில் தோன்றிக் கனமுடன் வருவாளம்மா
மன்னவன் தனக்குப் புத்திரர் வருகிறோம் ஆண்பால் ரண்டு
கன்னியு மவ்வா றாகும் கனத்திடும் தீர்க்க மென்றோம்.

35 இந்த ஜாதகனுடைய விவாஹகாலத்தை உரைக்கின்றோம். இவனுக்குப் பதினேழாவது வயதில் மணம் நடைபெறும். பெண் வடதிசையில் உதித்திருப்பாள். ஜாதகனின் புத்திரபாவத்தைக் கூறுகின்றோம். புத்திரர் இருவர். பெண்கள் இருவர். இந்நால்வரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள்.

36. இப்படிப் பராசர் சொல்ல இயம்புவார் புசண்டர் தாமும்
செப்புநீர் தந்தைக் கேதான் சகோதரம் ஒருவ னென்றீர்
ஒப்புட னவன்கு ணத்தை உரைப்பீர்கள் என்று கேட்க
மைப்படி கண்ணாள் பக்கம் வரைகிறோம் கேளும் மா.

36. இவ்வாறு பராச முனிவர் சொன்னவுடன், புசண்டர் கூறினார். பராச முனிவரே ! ஜாதகனின் தந்தைக்கு ஒரு சகோதரன் உண்டு எனச் சொன்னீர். அவனுடைய குணங்களைச் சொல்லுவீராக, என்று. பராசர முனிவர், தாயே ! சொல்லுகின்றோம். கேட்டருளவேண்டும்.

37. செலவுக ளதிக முள்ளான் சிவந்திடும் மேனி யாகும்
உறமுளர் தமக்கு நேயன் உண்மையா மனத்த னாகும்
திருமனை யாளி ரண்டு சேர்ந்தவள் விதவை ஒன்று
பெருமவர்க் கினிய வனவன் பிதாநிதி விரயம் செய்வான்.

37. அதிகச் செலவுகள் செய்பவன். சிவந்த மேனியான். பெரிய செல்வாக்கு உடையவர்களுக்கு நண்பனுவான். மனத்தில் வஞ்சனை எண்ணமில்லாதவன். அவனுக்கு மனைவிமார்கள் இருவர். ஒரு கைம்பெண்ணையும் இவன் மனைவியாகக் கொண்டிருப்பான். பெரியோர்களுடைய அன்பிற்குப் பாத்திரமானவன். தந்தையின் பணச்சேமிப்பைச் செலவழிப்பான்.

38. காரியச் சமர்த்த னாகும் கணக்கினில் ஊகை வானும்
தேரிய வழியில் நிற்கான் சித்தினிச் சாதி யாவன்
நாரியர் பலரைச் சேர்வன் நாட்டினில் கீர்த்தி யேற்பன்
கோரிய காரி யத்தை குணமுடன் முடிப்பா னாமே.

38. காரியங்களை நிறைவேற்றுவதில் திறமை வாய்ந்தவன். கணிதத்தில் மதிநுட்பம் பெற்றவன். எல்லோரும் செல்லும் வழியில் (ஆசாரத்தில்) செல்லமாட்டான். சித்தினி சாதியைச் சேர்ந்தவன். பல பெண்களுடன் அந்தரங்கமாகப் பழகுவான். கீர்த்தியும் உடையவன். தான் விரும்பிய காரியத்தைச் சாமர்த்தியமாகச் செய்து முடிப்பான்.

39. அற்பரை நேசஞ் செய்யான் யாவர்க்கும் நல்லனவன்
பற்பல விதத்தி லேதான் பணமது அழிப்பா னாகும்
தற்பனம் செய்ய வேண்டி சந்ததி யில்லா னாகும்
விற்புரு வத்தி னாளே மெல்லியர் விரு யாகும்.

39. தன்னைவிடத் தாழ்ந்தவரிடம் நட்புக் கொள்ளமாட்டான். எல்லோரிடமும் நல்லவனுகவே நடந்து கொள்வான். பலவழிகளிலும் பணத்தை வீணுகச் செலவு செய்வான். இவனுக்குப் பிற்காலத்தில் தர்ப்பணம் செய்வதற்குப் புத்திரன் இல்லாதவனுகவே இருப்பான். வில் போன்ற புருவத்தை உடைய உமாதேவியாரே ! இவனுடைய பெண்ணின் சந்ததி விருத்தியாகும்.

40. சேர்க்கையா தருக்குப் புத்திரர் செழித்திடு வனுக் கம்மா
மார்க்கமா யிவனி ஞஸ்தி மைந்தனு மடைவா னம்மா
தீர்க்கமா மனைவி யாலே சிலசில நிந்தை யுண்டு
பார்க்குளே பூமி விருத்தி பாலிப்பா னென்று சொன்னேம்.

40. சேர்ந்த மாதுவிற்கு (வைப்பெண்ணிற்கு) புத்திரர் உண்டு. அவர்களும் செழிப்பாக வாழ்வார்கள். இவனுடைய சொத்துக்களை அந்தச் சந்ததியாரே அடைவார்கள். இவனுடைய சொந்த மனைவியினுல் கலகங்களும் நிந்தனைகளும் ஏற்படும். இவன் பூமிகளை விருத்தி செய்து நன்ருகப் பரிபாலிப்பான்.

41. ஜாதகன் ஜன்னந் தெட்டுச் சாற்றிய வைந்தாண் டுக்கும்
வேதனை குடும்பந் தன்னில் விரோதமும் வேற தாகும்
பாதக ருணமு முண்டு பருகாது பூமி நஷ்டம்
தோதக மதிக முண்டு சுகமிலா வனவா சந்தான்.

41 ஜாதகன் பிறந்தபிறகு ஐந்து வருஷங்கள் வரையில் குடும்பத்தினருக்குப் பல வழிகளிலும் கவலைகள் ஏற்படும். அந்நிய ஜனங்களுடன் விரோதமும் ஏற்படும். கடனுல் தொந்தரவுகளும் ஏற்படும். ஆயினும் நிலங்கள் இவனை விட்டு விலகா. பல அல்லல்களும் வரும். வனவாசமும் நேரும். அதிக ஆசை உள்ளவனுக இருப்பான்.

42. அதற்குமே லொருபா னுண்டும் அணுகிடும் தொழிலு முண்டு
நிதலாபம் குறைவில் லாமல் நிகரிலாச் செட்டுச் செய்வன்
பதியதுசித்திர மாகும் பாரினில் கூட்டு மோங்கும்
கதிபெறத் தர்ம தானம் கனமுட னேக்கு மம்மா.

42. அதற்குப் பிறகு பத்து வருஷங்களுக்குத் தொழில் விருத்தி உண்டாகும். எப்பொழுதும் மேல்மேலும் குறைவில்லாமல் பணவருவாய் இருக்கும். பெரிய வியாபாரம் செய்வான். வீட்டைப் புதுப்பித்து அழகு செய்வான். இவன் வசிக்கும் ஊரில் நண்பர்களின் சேர்க்கையும் அதிகமாகும். நற்கதியை அளிக்கும் தானதருமங்களையும் இவன் நடத்துவான்.

43. சோலைக ளுண்டு செய்வன் துணைவியும் வருவா ளம்மா
சீலமாம் பணிதி பாத்திரம் சிறந்திடும் பந்து மேலாய்
ஏலவே ஸ்திரீக ளாலே இன்பொருள் வந்து சேரும்
ஆலிலே துயின்ருேன் தங்காய் அம்மையே கேட்டி டாயே.

43. அநேக தோட்டங்களை நிறுவுவான். இவனுக்குச் சகோதரியும் பிறப்பாள். நல்ல ஆபரணங்களும் பாத்திர வகைகளும் கிடைக்கும். பந்துக்கள் குடும்பங்களைக்காட்டிலும் இவனது குடும்பம் பெருமையோடு விளங்கும். ஸ்திரீகளால் நற்பொருள்களும் இவனை நாடிவரும். ஆலிலையில் யோக நித்திரை செய்யும் ஸ்ரீமந் ! நாராயணனின் தங்கையே ; கேளுங்கள்.

44. வித்தையும் புத்தி யுண்டு விளங்கிடும் சகடு தானும்
எத்திசைக் கீர்த்தி யுண்டு யாவரும் உறவோராவர்
தத்திய பூமி சேரும் தனமது அதிக மாகும்
அத்திமா முகனைப் பெற்ற அம்மையே மேலுங் கேளே.

44. நல்ல கல்வியும், புத்தியும் பிரகாசத்தை அடையும். வண்டி முதலிய வாஹனங்கள் ஏற்படும். எல்லாத் திசைகளிலும் இவனது கீர்த்தி பரவும். எல்லோரும் இவனிடம் நட்போடு இருப்பார்கள். விநாயகரைப் பெற்ற தேவியே ! வளமான பூமிகள் சேரும். தனமும் அதிகமாக உண்டாகும்.

45. அதற்குமே லிருபா னுண்டுள் அநேகமாய் பொருளும் சேரும்
பதியினில் பணிதி சேரும் பார்த்தபேர் மெச்ச வாழ்வன்
நிதி யினுல் பூமி சேரும் நிச்சயம் சுபமே யுண்டு
விதியினுல் தந்தை வர்க்கும் விளங்காது அரிஷ்ட மாகும்.

45. முன்சொன்ன பத்து ஆண்டுகளுக்குமேல் இருபது ஆண்டுகள் மட்டும் பலவித பொருளகள் இவனுக்குக் கிடைக்கும். பலவித நகைகளும் வந்துசேரும். கண்டவர்கள் எல்லோரும் கொண்டாடும்படி இவன் வாழ்க்கையை நடத்துவான். வியாஜ்ஜியங்கள் மூலமும் நிலங்களைப் பெறுவான். இந்த இருபது ஆண்டுகளிலும் நன்மைகளே நடைபெறும். ஆனுல் தந்தையின் வருக்கம் (பங்காளிகள்) விளங்கமாட்டார்கள்.

46. கர்மங்கள் செய்வன் மேலும் கனதன தானிய மோங்கும்
தர்மதா னங்கள் செய்வன் சந்ததி விருத்தி யுண்டாம்
மர்மமு மணுகா தாகும் மாடுகள் விருத்தி யாகும்
பெருமையு முடைய தாகும் பேசுவோம் பலன னேகம்.

46. மேலும் கருமங்களை [ஈமச்சடங்குகளை அல்லது கடமையை அல்லது தொழிலை] செய்வான். தனதானியங்கள் மேன்மேலே சேர்ந்திடும். ஏராளமான தரும தானங்களைச் செய்வான். புத்திர விருத்தியுமுண்டு. வஞ்சனைகள் ஏற்படா. கால்நடைகளை அபிவிருத்தி செய்வான். பெருமையோடு சிறப்பாக வாழ்வான். பலன்களை விரிவாகப் பின்பகுதியில் தெரிவிப்போம்.

ஜாதகம் 16.

1. சந்திரன் மீன மாக சனிவண்டி புகரும் நந்தி
புந்திபானு அரசன் சேயும் புதமகளீரில் தங்கப்
பந்தமாய் ராகு சாடி பற்றிய சிசியும் சீயம்
முந்திய ஜன்னம் நண்டு மொழி தவீர் பலனேத் தானே.

சந்திரன்		சுக்கிரன்	புதன் சூரியன் குரு செவ்வாய்
ராகு	இராசி சக்கரம்		லக்கினம் சனி
			கேது

குறிப்பு.—1. ரேவதி நக்ஷத்திரம் புததசை இருப்பு வருஷங்கள் பதினைந்து, மாதங்கள் இரண்டு.

2. இந்த கிரஹநிலை நூறு வருஷங்களில் ஏற்பட்டிருப்பதாக அறியப்படவில்லை.

1. சந்திரன் மீனத்திலும், சனி கடகத்திலும், சுக்கிரன் விருஷபத்திலும், புதன் சூரியன் குரு செவ்வாய் மிதுனத்திலும், ராஹு கும்பத்திலும், கேது சிம்மத்திலும் இருந்து, இலக்கினம் கடகமாகவுமிருந்து, இவ்வாறு கிரஹ நிலைகள் இருக்க, பலனைச் சொல்லுவீர்களாக, என உமாதேவி கேட்கலுற்றாள்.

2. உதித்தசே யாணும் ஜன்மம் உதித்தஇல் கீழ்மேல் வீதி
மதித்திட உத்திர வாடை வருமில்லம் கூரை யாகும்
சதியிலாக் கீழ்மேல் தந்தி சக்கரத்தோனும் தென்மேல்
நதிசடை அணிந்தோன் காளிநல்கிடும் வடமேல் திக்கில்.

2. இவ்விதமானக் கிரஹ நிலையில் ஆண் குழந்தை ஜனித்திருக்கும். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு வடக்கு வரிசையில் இருக்கும் (தெற்கு நோக்கி இருக்கும்) கூரை வீடு. கீழ்த் திசையில் விநாயகர் கோயிலும். தெற்கில் மஹாவிஷ்ணுவின் ஆலயமும் இருக்கும். பரமசிவன் காளி வடமேற்கு திசையில் எழுந்தருளி இருப்பார்கள்.

3. மாரியும் கன்னி திக்கில் மருவிடும் மேற்கில் சூழி
கூறினேம் சோலை யுண்டு குறித்தனம் சமவூர் தன்னில்
வீரிய மாது ரில்லம் வித்தக னுதிப்பா னுரும்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

3. தென் திசையில் மாரியம்மன் கோயில் இருக்கும். மேற்குத் திசையில் ஏரி குளம் போன்ற நீர்நிலை இருக்கும். அந்தத் திசையிலேயே ஒரு சோலையுமுண்டு. இப்படிப்பட்ட மத்தியமமான (சிறிதும், பெரிதுமல்லாத) ஊரில், தாயின் வீட்டில், இந்த ஜாதகன் ஜனித்திருப்பான். ஆறுமுகங்களை உடைய சுப்பிரமணியசுவாமியைப் பெற்ற தாயே! மேலும் சொல்லுகிறேம்.

(வேறு.)

4. இன்னவன் ஜனன மிருப்பிட மதற்கு
ஈரேழு கடிகைதூ ரத்தில்
மன்னிய உத்திரம் தந்தையின் ஊராம்
வகுத்துவோம் தென்வட வீதி
உன்னத மேற்கு வாசலாம் கீழ்ப்பால்
உறைந்திடும் மாலவன் கோஷ்டம்
இன்னமு மீச னருகினில் தங்கும்
எழில்காளி மாரியும் தென்கீழ்.

4. இந்த ஜாதகன் ஜனித்திருக்கும் தாயின் ஊருக்குப் பதினைந்து நாழிகை நடந்து செல்லக்கூடிய தூரத்தில் வடதிசையில் தந்தையின் ஊர் அமைந்திருக்கும். தந்தையின் வீடு, தெற்கு வடக்கில் அமைந்துள்ள வீதியில், மேற்குத் திசை நோக்கி இருக்கும். அந்த வீட்டிற்குக் கீழ்த்திசையில் விஷ்ணு கோயில் விளங்கும். வெகு சமீபத்திலேயே சிவபிரானின் ஆலயமும் இருக்கும். தென் கீழ்த்திசையில் காளி, மாரியம்மன் இவர்களது கோயிலும் இருக்கும்.

5. தென்திசை முனியும் அம்மனும் கோஷ்டம்
சூழியும் மேடையும் நிற்கும்
அனபுட னல்ப இல்லமா மென்றேம்
அதுவடை யாளங்கள் காணும்
துன்னிய தந்தை தாய்துணை யோகம்
சுதர்களும் களத்திர யோகம்
தன்னிலே முன்பின் ஜன்மங்கள் யாவும்
சாற்றுவோம் அம்பிகை கேளாய்.

5. தென் திசையில், முனீசுவரன் கோயிலும் பார்வதி அம்மன் ஆலயமும், ஒரு நீர்நிலையும் ஒரு மேடையும் (உயர்ந்த பூமிப்பரப்பு அல்லது மண் மேடு) விளங்கும். தந்தையின் வீடு சிறியதாகவே இருக்கும். இவ்வாறு ஜாதகனுடைய தந்தையின் ஊருக்கு அடையாளம் சொன்னேம். தேவியே! இந்நூலில், ஜாதகனின் தந்தை தாய் சகோதரர் மனைவி புத்திரர் இவர்களைப்பற்றியும், இவனுடைய முன்பின் ஜன்மங்கள், யோகங்கள் இவற்றைப் பற்றியும் சொல்லப் போகின்றேம். கேட்டருளுங்கள்.

(வேறு.)

6. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றவே ஆண்பால் காணேம்
வந்திடும் பெண்பா லொன்று வரைந்தனம் தீர்க்க மாகச்
சந்ததி அவளுக் கல்பம் தன்வரன் சுகமில் லாதாள்
எந்தையே வாத ரோகி இடருக ளனந்த முள்ளான்.

6. தந்தையின் சகோதரபாவத்தை ஆராய்ந்தால் சகோதரனில்லை என்று தீர்மானமாகக் கூறுகின்றேம். ஒரு சகோதரிதான் உண்டு. அவள் தீர்க்ககாலம் வாழ்வாள். அவளுக்குப் புத்திரபாக்கியம் மிகவும் கொஞ்சம்தான் உண்டு. அவளுக்குக் கணவனுடைய சுகம்மட்டுதானுண்டு. அவள் வாதரோகத்தால் கஷ்டப்படுவாள். வாழ்க்கையில் இடையூறுகளும் அதிகம் உள்ளவள்.

7. பிதாகுணமிருநி றத்தான் பேச்சது இரண்டு முள்ளான்
சதாவுமே ரோகி யாவான் தன்தேக மொடிச்ச லுள்ளான்
நிதமுமே சில வன் நேமியில் கிருஷி செய்வன்
கதைகளும் கேட்பா ஞகும் காரிய வாதி யென்றேம்.

7. தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம். கருத்த நிறத்தவன். சிலேடை வார்த்தைகளைப் பேசுவான். எப்பொழுதும் நோயினல் வாடுவான். மெலிந்த உடல் வாய்ந்தவன். ஒருபொழுதும் நன்னடக்கையினின்று வழுவாதவன். விவசாயம் செய்வான். புராணங்கள் கேட்பதில் விருப்ப முள்ளவன். தனது காரியத்திலேயே நோக்க முடையவன்.

8. பூமியும் பரிபா லிப்பன் புதிதான வீடு செய்வன்
நேமியோர் மெச்ச வாழ்வன் நிதானமாய் வார்த்தை சொல்வன்
சேமமாம் குடும்பி யாவன் செய்நில மதிகம் சேர்ப்பன்
தாமத குணத்த ஞகும் தைரிய முடைய ஞமே.

8. அடைந்த பூமிகளைத் தன்னைவிட்டு விலகாதபடியும் செழிப்பாக இருக்கும் வகையிலும் பரிபாலிப்பான். புதிதாக வீடு கட்டுவான். உலக ஜனங்கள் போற்றும்படி வாழ்க்கையை நடத்துவான். மிக்க கவனத்துடன் வார்த்தைகளைப் பேசுவான். செழுமை வாய்ந்த குடும்பியாகவும் இருப்பான். நிலங்களையும் அதிகமாகச் சேர்ப்பான். சிறிது தாமத குணமுள்ளவன். தைரியசாலியாகவும் இருப்பான்.

9. ரோமங்கள் நீட்சி யில்லான் நுவலுப தேச மில்லான்
தீமையாங் குணங்க ளில்லான் திருமகள் வாச முள்ளான்
மாமிமார் மூவ ராகும் மாடுகள் விருத்தியுள்ளான்
காமியாம் அல்ப உண்டி கரங்காலு வலிவு முள்ளான்.

9. உடலில் நீண்ட ரோமங்கள் இல்லாதவன். நல்லுபதேசங்களைக் கேட்டிருக்க மாட்டான். தீயகுணங்கள் இல்லாதவன். லக்ஷ்மீவாசம் பொருந்தியவன். இவனுக்கு மாமிமார் [அம்மான் மனைவிகள்] மூவராவர்.

ால் நடைகள் இவனிடம் வந்ததும் பலவிதங்களிலும் விருத்தியடையும். சிற்றுண்டிகளில் விருப்பமுள்ளவன். இவனுடைய கை கால்கள் திடமாக இருக்கும்.

10. இக்குண முடையோ னுக்கு இவனுமே உதிப்பா ஞகும்
தொக்கவே இவன்கு ணத்தைச் சொல்லுவோ மிருநி றத்தன்
மிக்கவே ஒடிச்சல் தேகி வித்தையு முடைய ஞகும்
பக்குவ மான வார்த்தை பகருவோம் தந்திர வாதி.

10. இப்படிப்பட்ட குணமுள்ள மனிதனுக்கு இந்த ஜாதகன் மகனுகப் பிறந் திருக்கிறன். இவனுடைய குணங்களைச் சொல்லுகின்றேம். கருத்த நிறத்தவன். மெலிந்த சரீரம் வாய்ந்தவன். கல்வியறிவு உடையவன். நயமாகப் பேசுவான். மேலும் தந்திரமாக (சூழ்ச்சியாக) காரியங்களை முடிப்பதில் விருப்பமுள்ளவன்.

11. வண்டிவா கனமு முள்ளான் அடிமைகள் உடைய ஞகும்
குண்டைகோ விருத்தி யுள்ளான் குலத்துளோர் மெச்ச வாழ்வன்
எண்டிசைக் கீர்த்தி கொள்வன் இடருக ளில்லா ஞகும்
அண்டினேர் தம்மைக் காப்பன் அலைச்சலு முடைய னென்றேம்.

11. வண்டி முதலிய வாஹனவசதிகள் உள்ளவன். பல சேவகர்களையும் உடையவன். எருதுகளையும் பசுக்களையும் விருத்தி செய்வான். தன் சாதியர் மெச்ச வாழ்வான். எல்லா இடங்களிலும் இவனுடைய கீர்த்தி பரவி இருக்கும். வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாதவன். தன்னை அண்டியவர்களைக் காப்பான். வீண் பிரயாசைகளும் உள்ளவன்.

12. இன்னவன் செங்கை தன்னில் இலகிடும் ருத்திர ரேகை
தன்னிலே சுழியு முண்டு தந்தங்கள் தேய் தலுண்டு
சொன்னசொல் தவரு ஞகும் திருமாலின் பத்தி பூண்பன்
அன்னங்கள் போட வல்லான் அவன்செட்டுச் செய்வானென்றேம்.

12. இவன் கையில் ருத்திர ரேகையும் சுழியும் விளங்கிடும். பற்கள் தேய்ந்திருக்கும். சொன்ன சொற்படி நடப்பான். மஹாவிஷ்ணுவிடம் பக்தி பூண்டவன். பசித்தவர்களுக்கு அன்னமளிப்பதற்கும் சக்தி வாய்ந்தவன். வியாபாரமும் செய்வான்.

13. வஞ்சக வஞ்சனுவன் மனமதில் கபடு கொஞ்சம்
மிஞ்சிய பேசானுகும் விளைபுலம் விசேஷம் சேர்ப்பான்
அஞ்சிடான் எதிர்க்கேதான் யாரையும் வசியம் செய்வன்
இஞ்சுசு ரோகியாவன் கௌரவமுடையனென்றேம்.

13. [நிர்ப்பந்தம் ஏற்பட்டால்தான்] ஏமாற்றுகின்றவர்களை ஏமாற்றுவான். நெஞ்சில் கொஞ்சம் கபடமுள்ளவன். அதிகம் பேசமாட்டான். நன்றாக விளையும் நிலங்களைச் சேர்ப்பான். எதிரிகளைக் கண்டு அஞ்சாதவன். எல்லோரையும் தன் வசப்படுத்தும் சுபாவமுள்ளவன். சிற்றின்ப நோயுள்ளவன். பெருமை வாய்ந்தவனுகவும் விளங்குவான்.

14. இவனுடைத் துணைவர் தம்மை இசைக்கிறே மிருநான் காகும்
அவனியில் பெண்பால் ரண்டு அறைந்தன மிவனுக் கேதான்
நவமதில் சிலகா லத்தில் நசிந்திடு கர்ப்ப நோயால்
பவமுள தனிய னுகப் பாலகன் வாழ்வா னமே.

14. இவனுடைய சகோதரபாவத்தைச் சொல்லுகின்றோம். எட்டு உடன்பிறந்தார்களுண்டு. அவர்களில் இருவர் சகோதரிகள். சகோதரர்கள் அறுவர். அவர்கள் எல்லோரும் கர்ப்ப நோயால் நீடித்து வாழமாட்டார்கள். ஆகவே இவன் தனியனுகவே வாழ்வான்.

15. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மிருப தாண்டில்
மேதினில் தட்சி ணத்தில் வித்தகி மாதுர் வர்க்கம்
கோதிலா வருவா ளாகும் கூறுவோ மவள்குணத்தைப்
பாதக மெண்ணு ளாகும் பாவைநன் னடக்கை யுள்ளாள்.

15. ஜாதகனுடைய விவாஹ காலத்தைச் சொல்லுகின்றோம். இவனுக்கு விவாஹம் இருபதாவது வயதில் நடைபெறும். பெண் தென் திசையில் மாத்ரு வருக்கத்தில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணங்களையும் கூறுகின்றோம். பிறருக்குத் தீமையை எண்ணுதவள். அதுவுமன்றி நன்னடக்கையும் உடையவள்.

16. இருநிற முடைய ளாகும் இன்பமாய் வார்த்தை கூறுவள்
பெருமவர்க் கினிய ளாகும் மதியுள்ளாள் பொறுமை யுள்ளாள்
வறுமைக ளில்லா ளாகும் வரனுக்கு நேய முள்ளாள்
திருமகள் வாச முள்ளாள் தேவியே கேட்டி டாயே.

16. கருத்த நிறமுடையவள். இனிமையான வார்த்தைகளைப் பேசுபவள். பெரியோர்களிடத்தில் பக்தியோடிருப்பாள். நல்ல புத்தி யுள்ளவள். பொறுமைக் குணமும் வாய்ந்தவள். ஏழ்மை இல்லாதவள். கணவனிடம் மிக்க அன்பு கொண்டவள். திருமகள் வாசமுள்ளவள். தேவியே! மேலும் சொல்லுகிறோம்.

17. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மிருநான் காகும்
சித்தமா யாண்பால் ரண்டு செல்வதி அவ்வாறு தீர்க்கம்
பற்றிய நான்கு நஷ்டம் பகருவோ மிவர்களுக் கேதான்
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தன மொழிகுன் றுது.

17. இவர்களுடைய சந்ததியைப்பற்றிக் கூறுகின்றோம். எட்டுக் குழந்தைகள் இவர்களுக்குப் பிறப்பார்கள். அவர்களில் இரு பிள்ளைகளும் இரு பெண்களும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். மற்றையக் குழந்தைகள் நீடித்திரா. விநாயகரைப் பெற்ற தாயே! எங்கள் மொழி பொய்யாகாது.

18. அத்திரி சொல்லும் போது அம்பிகை கேட்க லுற்றாள்
வித்தகன் தனக்குப் புத்திரர் விளம்பினீர் நஷ்ட மென்று
சுத்தமாய்ச் சொல்லு மென்ன ஜனித்திடு முதலில் மூன்று
குற்றமாம் ஆறும் ஜன்மம் குறித்தனம் நஷ்ட மென்று.

18. அத்திரி முனிவர் இவ்வாறு சொன்னவுடன், உமாதேவி கேட்கலுற்றாள். முனிவரே! நான்கு குழந்தைகள் நஷ்டமாகுமெனச் சொன்னீர்கள். எத்தனையாவது குழந்தைகள் நஷ்டமாகு மெனத் தெளிவாகக் கூறும், என. அத்திரி முனிவர் பதில் கூறினார். முதலில் ஜனிக்கும் மூன்று குழந்தைகளும் ஆறுவதாக ஜனிக்கும் குழந்தையும் நீடித்திரா.

19. அப்படி நடக்கும் சேதி யாதுகா ரணங்க ளென்னச்
செப்புவீர் முனியே யென்றாள் சேயவன் விரயம் புக்க
மெய்ப்புட னென்பா னதி வக்கிர னுடனே கூட
தப்பித நேரு மென்றோம் தயாபரி கேட்டி டாயே.

19. அவ்வாறு கூறுவதற்குக் காரணமென்ன? என்று தேவி கேட்க, முனிவர் பதில் உரைத்தார். புத்திரபாவத்திற்குடைய செவ்வாய் பன்னிரண்டாமிடத்தில் இருப்பதாலும், பாக்கியாதிபதியான குருவும் செவ்வாயுடன் சேர்ந்திருப்பதாலும் இவ்வாறு நடைபெறும் என்று சொன்னோம். கருணைக்கடலே! மேலும் கேளுங்கள்.

20. மாதுரு குணத்தை யாங்கள் வரைகிறோ மிருநி றத்தாள்
மேதினில் ஒடிச்சல் தேகி வித்தகி அதிர்ஷ்ட சாலி
திதிலா குணத்தா ளாகும் திருமகள் வாச முள்ளாள்
மாதவர் தமைத் துதிப்பாள் வரனுக்கு நேய முள்ளாள்.

20. தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். கருத்த மேனியாள். மெல்லிய சரீரம் வாய்ந்தவள். மிக்க அதிர்ஷ்டமுள்ளவள். தீய குணங்கள் இல்லாதவள். லக்ஷ்மீவாசம் பொருந்தியவள். தவசிகளை வணங்கிப் போற்றுவாள். கணவனுக்கு மிக இனியவள்.

21. அவளுடை அன்னை யாலே அநேகமாய் நிந்தை யுண்டு
இவளுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பா லொன்று
நவனியில் தீர்க்க மென்றோம் நாட்டுவோ மவளின் பூர்வம்
பவமுள பேரைக் காக்கும் பார்வதி கேட்டி டாயே.

21. அவளுடைய தாயால் பல விதங்களிலும் அவதூறுகள் ஏற்படும். ஜாதகனின் தாயினுடைய சகோதரர்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். அவளுக்கு ஒரு சகோதரன்தான் உண்டு. அவளுடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். உலகத்தாரைக் காக்கும் தாயே! கேளுங்கள்.

22. மாதுரு முன்ஜன் மங்கள் மாபலி நகர்க்கு மேல்பால்
மேதினில் சிற்றூர் தன்னில் விளங்கினள் தீயின் வம்சம்
போதவே புத்திர ருண்டாய்ப் புகழ்ச்சியாய்க் குடும்பி யாகி
நீதியாய் நடக்கை யாகி நிமலியும் வாழ்ந்தா ளென்றோம்.

22. இவனுடைய தாய் முன்பிறவியில் மஹாபலிபுரத்திற்கு மேற்குத் திசையில் ஓர் சிறிய ஊரில் வன்னியகுலக்ஷத்திரிய வமிசத்தில் உதித்திருந்தாள். அப்பொழுது அவள் அதிகப் புத்திரப்பேற்றை அடைந்து நற்கீர்த்தியுடன் நன்னடக்கை உடையவளாக வாழ்ந்து வந்தாள்.

23. அந்நகர் கணேச ருக்கு அவளொர்ரு தீபம் வைத்து
நன்னய பக்தி கொண்டு நாயகன் முன்னே மாண்டு
தன்னிலே பிரம்ம ஞலே தானவள் வரையப் பட்டு
உன்னத கங்கை வம்சம் உறைந்தன ளிவளே யென்ருேம்.

23. அந்த ஊரில் எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ விநாயகருக்குச் சிறந்த பக்தியுடன் ஒரு தீபம் சமர்ப்பித்து வந்தாள். காலக்கிரமத்தில் கணவனுக்கு முன்னமேயே மாண்டு, பிரம்மதேவனுல் இப்பொழுது இங்கு வேளாள வமிசத்தில் படைக்கப்பட்டிருக்கிருள். அவள் தான் இக்கடகலக்கின மகனுக்குத் தாயாகவும் வாய்த்திருக்கிருள்.

24. தீபத்தின் புண்ணி யத்தால் செப்பினேம் சுதனை ருத்தன்
மேவிய வறுமை யில்லாள் வீணப வாத மில்லாள்
தாவிய இவள்பின் ஜன்மம் சாற்றுவோம் காஞ்சி தன்னில்
நேமியில் பிரம்ம வம்சம் நேருவா ளிவளே யென்ருேம்.

24. இவள் முன்பிறவியில் ஸ்ரீ கணேசருக்கு ஒரே தீபம் சமர்ப்பித்து வந்தமையால் இந்த ஜன்மத்திலும் ஒரே பிள்ளைதான் உண்டு. வறுமை இல்லாதவள். வீண் அவதூறுகள் ஏற்படாமல் நற் புகழே இவளுக்கு ஏற்படும். இவளுடைய பின்ஜன்மத்தையும் சொல்லுகின்ருேம். காஞ்சி க்ஷேத்திரத்தில் பிராமணகுலத்தில் பிறப்பாள்.

25. தந்தையின் முன்ஜன் மத்தை சாற்றுவோம் சிறுபாக் கத்தில்
முந்திய வைசிய வம்சம் முயன்றுமே பெருமை பூண்டு
சந்ததம் செட்டுச் செய்து தான்வாழும் காலம் தன்னில்
வந்த ஊழதனை யாங்கள் வரைகிருேம் கேளும் தாயே.

25. ஜாதகனின் முன்பிறவியைப்பற்றிக் கூறுகின்ருேம். சிறுபாக்கம் என்ற ஊரில், வைசிய குலத்தில் பிறந்து, பெருமையோடு வாழ்ந்து வந்தான். வியாபாரம் செய்து தன் ஜீவனத்தை நடத்திவரும் காலத்தில் அவனுக்கு ஏற்பட்ட ஒரு பாவத்தைச் சொல்லுகின்ருேம். கேளுங்கள்.

26. கொல்லையில் கிருஷி செய்து கோவது அதனை மேயப்
புல்லிய புத்தி யாலே பிடித்துக்கால் இறுக்கி வைத்துப்
பொல்லாத கழியால் வாட்டி விரட்டிஞ னிவனே யம்மா
தொல்லையும் பாதை நேர்ந்து துன்பமாய் நடந்த தம்மா.

26. இவன் தனது புன்செய் நிலத்தில் பயிரிட்டிருப்பதை ஒரு பசு வந்து மேய, அதைக் கண்டு தன் அல்ப புத்தியால் ஆத்திரமடைந்து, அப் பசுவின் கால்களைக் கயிற்றினுல் அழுத்தமாகக் கட்டி, ஒரு பெரிய தடியினுல் நையப் புடைத்து, பின் கால் கட்டுக்களை அவிழ்த்து விடாமலேயே துரத்தி விட்டான். ஆகையால் மிகவும் தாக்கப்பட்ட அந்தப் பசு கஷ்டப்பட்டுக் கொண்டே நடந்து சென்றது.

27. கால்கயிறு விலக்கா மல்தான் கஷ்டமாய்ச் செல்லும் போது
சீலமாய் உரியோன் பார்த்துச் செப்புவான் மனவெ றுப்பால்
ஞாலமேல் மறுஜன் மத்தில் நடுவது வயதி லேதான்
காலினில் குற்ற மாயும் கண்டவர் நகைக்க ஜன்மம்.

27. அந்தப் பசுவின் சொந்தக்காரன், கால் கயிறுகளை விலக்காமல் சிரமத்துடன் நடந்து வரும் பசுவைப் பார்த்து, மிகவும் இவனிடம்வெறுப்பு கொண்டு, ஒரு சாபமிட்டான். இவ்வாறு ஜீவஹிம்சை செய்த பாவியே ! நீ, மறுபிறவியில், வாழ்க்கையின் மத்தியகாலத்தில் காலில் ஊனம் ஏற்பட்டு, பிறர் பார்த்து ஏளனம் செய்யும்படி வாழ்வாய்.

28. அடுத்திடும் துணைவர் துன்பம் என்றுமே கோமான் சொல்லி
விடுத்தனன் கயிறு தானும் மேவிற்று அந்தத் தோஷம்
திடத்துடன் அச்சென் மத்தில் செல்வங்கள் குறைவு நேர்ந்து
ஆடவன் மறலி பக்கல் உத்தமன் சேர்ந்தா னென்ருேம்.

28. மேலும் சகோதரரால் துன்பமும் உண்டாகும். இவ்வாறு பசுவிற்கு சபித்து உடையவன் பசுவின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு, தனது வீட்டிற்கு ஓட்டிச் சென்றுன். பசுவை இம்சித்தப் பாவம் இவனை வந்தடைந்தது. ஆகவே அதே பிறவியிலேயே இவனுடைய செல்வம் குறைந்தது. கடைசியில் யம உலகத்தை இவன் அடைந்தான்.

29. நரகத்தில் பன்னுள் மூழ்கி நாற்றலைக் கஞ்சன் தன்னுல்
உரமுடன் வரையப் பட்டு உதித்தவ னிவனே யென்ருேம்
அறைகிருே மிச்சென் மத்தில் அவனுக்கு யோக மில்லை
விரைவினில் மத்தி யத்தில் மேவிடும் காலில் தோஷம்.

29. யம உலகில் பல நாட்கள் நரகத்தில் மூழ்கிக் கிடந்தான். பிறகு நான்முக பிரம்மதேவனுல் இந்தக் குலத்தில் பிறப்பிக்கப்பட்ட இவன், கடக லக்கின மகனுக்குத் தந்தையாக ஏற்பட்டிருக்கிருன். இந்த ஜன்மத்திலும் அவனுக்கு அதிக யோகமில்லை. மேலும் நடு வயதில் காலில் எதிர்பாராமல் ஊனமும் உண்டாகும்.

30. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிவளா மம்மன் தாமும்
அனையவே முதலி லேதான் அறைந்தினீர் யோகம் தானும்
கனமுடன் பின்னு லேதான் காளையும் தரித்திர னென்றீர்
இனமதைச் சொல்லு மென்ன இவன்மனை யாளால் யோகம்.

30. இவ்வாறு முனிவர் கூறியவுடன் அம்பிகை கேட்கலுற்றுள். முனிவரே ! முற் பகுதியில் தந்தை யோகமுள்ளவன் என்று சொன்னீர். இப்பொழுது தந்தை யோகமில்லாதவன், தரித்திரன் எனக் கூறுகின்றீர். ஒன்றுக்கு ஒன்று முறண்பட்டிருப்பதால் இவ் விஷயத்தை விளக்கிச் செப்புவீரா ? என. முனிவர் பதிலுரைத்தார். தாயே ! இவன் (தந்தை) பால்யத்தில் கஷ்டப்படுவான். இவனுக்கு மணமான பிறகு மனைவியால் அதிருஷ்டங்கள் வாய்க்கும். ஆகவே இவன் தரித்திரன்–பணக்காரன் என்ற இரு வார்த்தைகளும் பொருந்தும்.

31. எப்படிச் சொல்லு மென்ன இரணியன் விரயன் புக்கச்
செப்பினேம் தந்தை தானும் தரித்திர முடைய ஞகும்
ஒப்புடன் நவத்தி லேதான் உதயனும் சேர்ந்த தாலே
ஒப்பவும் மனைவியாலே இவனுக்கு யோக மென்றேம்.

31. இதையும் விவரித்துக் கூறுமெனப் பார்வதி கேட்க, முனிவர், பாக்கியாதிபதியான குரு விரய ஸ்தானம் என்று சொல்லப்படும் பன்னிரண்டாமிடத்தில் தங்கியதால், இவன் பிறவியில் யோகமில்லாதவன் (தரித்திரன்). ஆயினும் உதயலக்கினதிபதியான சந்திரன் ஒன்பதாமிடத்தில் [பாக்கியத்தில்] விளங்குவதால் மனைவியால் இவனுக்கு யோகமுண்டு. ஆகவே, விவாகத்திற்குப் பிறகு பணம் படைத்தவன் என்றார்.

32. மத்திய வயதி லேதான் வரன்காலி லூன மென்றீர்
சித்தமா யதற்குச் சாந்தி செப்புவீர் முனியே யென்றாள்
எச்சாந்தி செய்தா லுந்தான் விலகாது கோவின் தோஷம்
அத்தியைப் பெற்ற மாதே அறைந்தன மொழிகுன் றாது.

32. நடுவயதில் இவனுக்குக் காலில் ஊனமேற்படு மென்றீர். அஃது ஏற்படாமல் இருப்பதற்குத் தக்க சாந்திகளைக் கூறுவீராக, என உமாதேவி வினவினள். ஸ்ரீவிநாயகரைப் பெற்ற தாயே! பசு இம்சை மிகக் கொடிய பாவமாகையால் இதற்குச் சாந்தியோ பரிகாரமோ கிடையாது. அந்தப்பாவத்தை இவன் அனுபவித்தே தீர்க்கவேண்டும். வேறு வழியில்லை என்றார் முனிவர்.

33. இவனுடைப் பின் ஜன்மத்தை இயம்புவோம் விரிஞ்சி நாட்டில்
அவனியில் இக்கு லத்தில் அவனுமே உதிப்பா னென்றேம்
நவனியில் பூமி யுண்டாய் நன்மனை புத்திர ருண்டாய்
அவமதிப் பில்லா வாழ்வன் அம்பிகை யாளே கேளாய்.

33. இவனுடைய அடுத்த பிறவியைக் கூறுகின்றேம். மறு ஜன்மத்தில், இவன் விரிஞ்சிநாட்டில் இதே குலத்தில் உதித்து, அதிக நிலங்களைப் படைத்தவனுகி, மனைவி மக்களுடன் அவமதிப்பு இல்லாமல் (பெருமையுடன்) சுகமாக வாழ்வான். அம்பிகையே! மேலும் சொல்லுகிறேம்.

34. ஜாதகன் முன்ஜன் மத்தில் சாற்றுவோம் தவளை கீழ்ப்பால்
மேதினி லருகிலேதான் விளங்கிய சிற்றூர் தன்னில்
கோதிலா அருகர் வம்சம் குலாவியே இந்தப் பாலன்
வேதனை யில்லா தாகி விளைபுல மதிக முண்டாய்.

34. ஜாதகனின் முன்பிறவிச் செய்தியைக் கூறுவோம். தவளகிரிக்கு அருகில் கீழ்த்திசையில் உள்ள ஒரு சிறிய ஊரில் சமண குலத்தில் பிறந்து, விளையும் நிலங்களை அதிகம் படைத்தவனுக, கஷ்டமின்றி வாழ்க்கை நடத்தி வந்தான்.

35. கல்வியால் பெருமை பூண்டு கனத்தவர் நேசம் கொண்டு
நல்லவ னுகி யேதான் நாட்டினில் கீர்த்தி பெற்று
அல்லலு மில்லா தாகி அரசர்கள் பேட்டி கொண்டு
வல்லவன் வாழும் நாளில் வரைகிறே மூழி தானே.

35. மேலும், கல்வி யறிவு உடையவனுக இருந்தான். பெருமை உடையவனுகிப் பல பெரியோர்களுக்கு நண்பனுகவும் இருந்தான். எல்லோருக்கும் நல்லவனுக நடந்தான். புகழுடன் விளங்கினன். வாழ்க்கையில் இடையூறு அற்றவனுக வாழ்ந்தான். அரசர்களின் ஆதரவு பெற்று சிறப்புடன் வாழும் காலத்தில் இவனுக்கேற்பட்ட வினையைச் சொல்லுகின்றேம்.

36. அவ்வூர்க்கு மேற்குத் திக்கில் அரசர்கள் வாசம் கொள்வர்
ஒவ்விய இந்தப் பாலன் உரைந்தனன் அவ்வூர் தன்னில்
பவ்வமாய் மறையோன் புத்திரி பற்றியே நாணி மூந்து
நவ்வியே இருக்கும் காலை நாயகன் அவ்வீதி செல்ல ;

36. அவன் வசிக்கும் ஊருக்கு மேற்கு திசையில் அரசர்வாழ்கின்ற ஊர் ஒன்று இருந்தது. அவ்வூரில் இவன் போய்த் தங்கினன். அப்பொழுது ஒரு பிராமணப் பெண் கணவனை இழந்து வசிக்கையில் அவள் இருக்கும் வீதி வழியே இவன் செல்ல ;

37. இவன்தனை மாது பார்த்து இல்லத்தில் வைத்தா ளென்றேம்
அவனுமே அங்குச் செல்ல அவள்காம முற்று மேதான்
நயமான வார்த்தை பேச நாயகன் கருத்துக் கொள்ளான்
இவனுமே வெளியில் செல்ல இயம்புவாள் மாதுதானும்.

37. அந்தப் பெண் இவனை [சமண வமிசத்தில் பிறந்திருப்பவனை]ப் பார்த்து, காதல் கொண்டு, வீட்டிற்குள் அழைத்து, தன் விருப்பத்தைத் தெரிவிக்க, இவன் அவள் சொன்ன வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாமல் வெளியே சென்று விட்டான். ஏமாற்ற மடைந்த அவள் சொன்னுள்.

38. சொல்லதைத் தடுக்கா தையா சுகமில்லை உந்த னுக்கு
நல்லவ னென்று நானும் நாடினேன் கிருபை செய்யும்
வல்லியும் சொல்லும் போது மருமமாய்ச் சொல்லலுற்றான்
வில்நுதல் மாது தானும் வெறுப்பினல் புகலுகின்றாள்.

38. ஐயா ! நான் சொன்ன வார்த்தைகளை அங்கீகரிக்க வேண்டும். அவ்வாறு செய்யாவிடில், உனக்குச் சுகமிராது. நீர் நற்குண முள்ளவர் என்ற காரணத்தினல்தான் உம்மை நாடினேன். தயை செய்யும் எனக் கேட்டதற்குக் கபடமாகப் பதில் கூறி வெளியில் சென்றுவிட்டான். ஆகையால் வெறுப்படைந்த அவள் கூறினள்.

39. இச்சென்மம் போக்கி நீயும் இனிவரும் ஜன்மம் தன்னில்
உச்சித உதித்த இல்லம் உறைகுவேன் நானு மங்கு
மிச்சமா யுதித்து மேதான் விரைவினில் பாரி பாகி
அச்சமில் லாமல் வாழ்வேன் அறைந்துபின் அந்த மாது ;

39. இந்த ஜன்மத்தை நீர் போக்கிய பிறகு, மறு பிறவியில் எக்குலத்தில் பிறக்கின்றீரோ அதே குலத்தில் நானும் பிறந்து, உம்மையே விரைவினில் மணந்து, பயமின்றிச் சுகமாக வாழ்வேனுக, என்றாள். அம்மாது இவ்வாறு சொல்லி விட்டு ;

40. தன்னுடைக் குலதெய் வத்தைச் சதாவுமே தியானம் செய்தாள்
மன்னிய காலம் போக்கி மறலிதன் பதிக்குச் சென்று
வின்னமாய் சின்னுள் சென்று பிரமனுல் வரையப் பட்டு
அன்னவ ளிக்கு லத்தில் வந்தவ ளிவள்தன் பாரி.

40. தன் குலதெய்வத்தை எப்பொழுதும் வணங்கி, தியானித்து வந்தாள். கடைசியாக யமன் உலகம் ஏகினுள். பிரம்மதேவனுல் சிலநாட்களுக்குப்பிறகு இங்கு இக்குலத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறுள். முன் ஜன்மத்தில் எண்ணியபடியே இவனுக்கு மனைவியாகவும் நேர்ந்திருக்கிறுள்.

41. முனிவரிவ் விதமாய்க் கூற மொழிவளா மம்மன் தாமும்
அனையவே இவன்முன் ஜன்மம் அருமறைக் குலமு தித்து
வினையிலாத் தாழ்கு லத்தில் வித்தகி உதித்த தென்னச்
சினமிலாச் சொல்லு மென்னச் செப்புவார் முனிவர் தாமும்.

41. முனிவர் இவ்விதம் கூறியவுடன், இவன் முன் பிறவியில் வேத மோதும் குலத்தில் பிறந்து, இப்பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறப்பதற்குக் காரணமென்ன ? சாந்த குணம் பொருந்திய முனிவரே ! இவ்விஷயத்தைச் சொல்லுங்கள், எனப் பார்வதி கேட்கலுற்றுள்.

42. முன்ஜன்மம் சமணன் பேரில் மோகங்கள் துய்த்த தாலும்
அன்னவன் பின்ஜன் மத்தில் அவனேயே அணேவே னென்று
சொன்னசொல் குறைவு ருமல் தொடுத்தனன் பிரம்மன் தாமும்
கன்னென மொழியை யொக்கும் காரிழை புகன்றிட் டோமே.

42. முனிவர் கூறினர். முன்பிறவியில் இவள், சமண குலத்தில் பிறந்த ஒரு வாலிபன்மேல் தனக்குத்தகாதபடி மோகம் கொண்டதாலும், அப்பிறவியில் அது நிறைவேருமல் போகவே மறு பிறவியிலாகிலும் அவனேயே கணவனுக அடைய வேண்டு மென்று ஆசைப்பட்டு, தன் குலதெய்வத்தைப் பிரார்த்தித்துக் கொண்டபடியாலும், பிரம்மதேவன் அவளிஷ்டப்படியே அவனே இக்குலத்தில் பிறப்பித்தான். கரும்பு போல் இனிக்கும் மொழியினைக் கூறும் தேவியே ! இவைகளேயே அதற்குக் காரணமாகத் தெரிவித்துக் கொண்டோம்.

43. புத்தனும் சிலது வேளே புகலாமல் மறைகள் தம்மை
வெற்றியா யரசர் பக்கல் விளம்பியே பொய்கள் சொல்லிச்
சித்தமாய் வாழ்ந்து பின்பு சென்றனன் காலன் பக்கல்
சத்தியே கஞ்சன் தன்னல் தானவன் வரைப் பட்டான்.

43. அச்சமண வாலிபனும், அவர்களுடைய வேதத்தைச் சிலநாட்களாக ஓதாமல் புறக்கணித்து, அரசனிடமே தங்கி, அவன் மனம் மகிழ்வதற்காகப் பல பொய்களேயும் சொல்லி, அதனுல் கிடைக்கும் பொருளேக்கொண்டு இவ்வுலகில் வாழ்ந்து வந்தான். பிறகு கடைசியில் மரணமடைந்தான் ; பிரம்மதேவனுல் இங்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றுன்.

44. வந்தவ னிவனே யென்றேம் அம்பிகை கேட்க லுற்றுள்
முந்திய ஜன்மம் தன்னில் முதுமறை சொல்லாத தானும்
சந்ததம் பொய்கள் பேசித் தானவன் வாழ்ந்தா னென்றீர்
இந்தவா றிரண்டு செய்கை இச்சென்மம் பலன் சொல்வீரே.

44. முந்திய ஜன்மத்தில் அவன் சமணர்களது வேதத்தை ஓதாமலிருந்தான். அனேக பொய்களேச் சொல்லி சீவனத்தை நடத்திவந்தான் என்று சொன்னீர்கள். இவ்விரு குற்றங்களுக்கும் இந்த ஜன்மத்தில் அவன் (ஜாதகன்) அடையும் பலன்கள் என்ன ? கூறுவீர்களாக, எனப் பார்வதி கேட்கலுற்றுள்.

45. துணைவர்கள் தோஷ மாகும் சுதர்களும் முதலில் பீடை
அனையவே யலேச்ச லுண்டு அவன்பந்து விரோத மாகும்
கனமுட னிதுவே யன்றிக் கழறுெ வேறு சங்கை
பனிவரை மகளாய் வந்த பார்வதி கேட்டி டாயே.

45. முனிவர் கூறுகின்றுர். ஹிமாலயத்திற்கு மகளாக அவதரித்த தேவியே ! அக்குற்றங்களுக்கு இவன் இந்தஜன்மத்தில் அனுபவிக்க வேண்டிய பலன்களேச் சொல்லுகின்றேம், கேளுங்கள். இவனுக்குச் சகோதரம் உண்டு. மேலும் முதலில் பிறக்கும் குழந்தைகளும் நஷ்டமாவார்கள். இவனது பல முயற்சிகள் பலனற்றுப்போகும். பந்துக்களும் விரோதிகளாவார்கள். இவைகளன்றி வேறு கெட்ட பலன்களே அனுபவிக்க மாட்டான்.

46. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் நாற்பா னுலில்
முந்திய ஆனி மாதம் மொழிகிறேம் கருமம் தானும்
அந்தவோர் காலம் தன்னில் அலரியின் தசையி லேதான்
முந்திய முடவன் சித்திரம் மேன்மையாய் நடக்கு மென்றேம்.

46. ஜாதகனின் தந்தையின் மரண காலத்தைக் கூறுகின்றேம். ஜாதகனுக்கு நாற்பத்துநாலாவது வயது நடக்கும்போது ஆனி மாதத்தில் தந்தை மரணமடைவான். ஆகையால் ஜாதகன் தந்தைக்கு ஈமச் சடங்குகளேச் செய்வான். அப்பொழுது ஜாதகனுக்குச் சூரிய தசையில் முடவனுகிய சனியின் புத்தி நடைபெறும்.

47. எண்ணஞ்சு ஏழு ஆண்டில் இயல்கன்னி மாதம் தன்னில்
திண்ணமாய் மாதுவுக்குச் செப்புவோம் கண்டம் தானும்
வண்ணமா யிரவி தன்னில் வெள்ளியின் காலம் தன்னில்
மண்ணில் கருமம் நேரும் மங்கையே கேட்டி டாயே.

47. ஜாதகனுக்கு நாற்பத்தேழாவது வயது நடைபெறும் போது புரட்டாசி மாதத்தில் தாய்க்கு மரணம் நிச்சயமாக ஏற்படும். அப்பொழுது ஜாதகனுக்கு சூரியதசையில் சுக்கிர புக்தி நடைபெறும். ஆகவே முற் கூறியபடி சூரிய தசையில், சனி புக்தியில் தந்தைக்கும், சுக்கிர புக்தியில் தாய்க்கும் ஜாதகன் திண்ணமாகக் கருமம் செய்யநேரிடும். தேவியே ! மேலும் கேளுங்கள்.

48. உதித்தவன் மரண காலம் உரைக்கிறே மறுபா ணுறில்
விதித்திடக் கருங்கோள் காலம் அவன்சய புத்தி தன்னில்
சதியிலாத் துலாமா தத்தில் சதுர்த்தசி வளர்பக் கத்தில்
துரிதமா யுடலம் வாடுட் சொல்லுவோ மிவன்பின் ஜன்மம்.

48. கடக லக்கினத்தில் பிறந்திருக்கும் இவனுடைய மரண காலத்தையும் சொல்லுகின்றோம். ஜாதகனுக்கு அறுபத்தாறுவது வயதில் ஐப்பசி மாதத்தில் வளர்பிறையில் சதுர்த்தசி திதியில் மரண மேற்படும். அப்போது இவனுக்கு ராஹுதசையில் சுயபுக்தி நடைபெறும். இவனுடைய மறு பிறவியைப்பற்றியும் கூறுகின்றோம்.

49. கச்சிமா நகரி லேதான் கனமுள பிரம்ம சேயாய்ப்
பச்சைமால் மதத்த ணுகப் பாரினி லுதிப்பா னென்றோம்
மிச்சமாய்த் தனங்கள் பெற்று மேதினில் வாழ்வா ணுகும்
அச்சுதன் தங்கை யாளே அறைந்தன மொழிகுன் றுது.

49. இவன் மறு ஜன்மத்தில் காஞ்சீபுரத்தில் பெருமை பொருந்திய பிராம்மண குலத்தில் வைஷ்ணவ மதத்தில் பிறப்பான். ஏராளமான செல்வங்களைப் பெற்று, புவியில் சிறப்பாக வாழ்வான். ஸ்ரீமந் நாராயணன் தங்கையே ! தேவியே ! எங்கள் மொழி வீணுகாது.

50. பாரியின் மரண காலம் பகருவோ மிவன்பின் ணுலே
கூறுவோம் தாயே கேளும் குறிக்கிறோம் யோகச் செய்கை
வீரியன் சுகமு முள்ளான் விசித்திர வீடு செய்வன்
திரமாய் விசேஷ பூமி சேர்ப்பனு மென்று சொன்னேம்.

50. ஜாதகனின் பாரியையின் மரண காலத்தையும் சொல்லுகின்றோம். இவன் மரணமான பிறகு உடனேயே அவளும் மரிப்பாள். இவனுடைய யோகங்களைக் கூறுகின்றோம். நல்ல திறமை வாய்ந்தவன். சௌக்ய முள்ளவன். அழகிய வீட்டை நிர்மாணிப்பான். பெருமுயற்சி செய்து அதிக பூமிகளைச் சேர்ப்பான்.

51. எந்தக்கா லத்திலேதான் இவன்சித்திர வீடு செய்வன்
அந்தவோர் சேதி சொல்வாய் அறைகிறே மொருபா ஞென்பான்
சந்ததம கிரகம் செய்வன் சதுஷ்பாதம் ஏர்பெ ருக்கம்
முந்தியே செட்டுச் செய்வன் எய்திடும் தனங்கள் தாமே.

51. எந்தச் சமயத்தில் இவன் விசித்திர வீட்டை நிர்மாணிப்பான். அந்த வரலாற்றைச் சொல்லுங்கள், எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுகின்றார். இவன் தனது பத்தொன்பதாவது வயதில் அழகிய ஒரு வீடு கட்டுவான். கால்நடைகளை அபிவிருத்தி செய்வான். அநேக ஏர்களைக்கொண்டு விவசாயம் செய்வான். வியாபாரமும் செய்வான். அதிகச் செல்வமும் இவனை வந்தடையும்.

52. சுகமுளான் சல்லிய மில்லான் சுவாமிமேல் பக்தி பூண்பன்
வகையான குடும்பி யாவன் வண்டிவா கனமு முள்ளோன்
பகையிலான் எவர்க்கு நண்பன் பஞ்சைகட் குதவி செய்வன்
ஜகமதில் நல்லோ னுகச் செப்புவா ரிவனே யேதான்.

52. நல்ல சுகங்களை அனுபவிப்பான். கடன்கள் இல்லாதவன். கடவுளிடம் பக்தி பூண்டவன். செல்வம் படைத்து நிலையான குடும்பம் உள்ளவனுக ஆவான். வண்டி, இதர வாகனங்கள் இவை உள்ளவனுகவும் இருப்பான். இவனுக்கு எதிரிகள் தோன்றுர்கள். எல்லோருக்கும் நண்பனுகவே நடந்து கொள்வான். ஏழைகளுக்கு உதவி புரிவான். உலகில் எல்லோராலும் நல்லவன் என்று போற்றப்படுவான்.

53. பிறையது போலே பூமி பொருந்திடு மிவனுக் கேதான்
குறையிலான் ஞாதி யில்லான் குலத்துளோர் மெச்ச வாழ்வன்
விரைவினில் நடக்க வல்லன் வீணப வாத முள்ளான்
அரிபக்தி கொஞ்ச முள்ளான் அம்பிகை யாளே கேளாய்.

53. வளர்பிறைச் சந்திரன் போல இவனுக்குப் பூமிகள் விருத்தியாகி இவனிடம் நிலைத்திருக்கும். வாழ்க்கையில் எவ்விதத்திலும் குறைவில்லாதவன். பங்காளிகள் இல்லாதவன். தன் ஜாதியினர் போற்றும்படி வாழ்வான். வேகமாக நடக்கும் இயல்புடையவன். வீணுக (காரணமின்றி)ச் சில அவதூறுகளும் இவனுக்கேற்படும். மஹா விஷ்ணுவிடம் கொஞ்சம் பக்தி இருக்கும். அம்பிகையே ! மேலுங் கேளுங்கள்.

54. இன்னமும் சிலது சேதி சொல்லுவோ மிரண்டி லேதான்
அன்னவன் ஜனன காலம் அருணன்றன் தசையி லேதான்
தன்னிலே யீரே ழாண்டும் சதிருள திங்கள் ரண்டும்
உன்னத பலனே யாங்கள் உரைக்கிறோம் கேளும் தாயே.

54. இவனைப்பற்றிய இன்னும் சில வரலாறுகளை இரண்டாம் பாகத்தில் சொல்லப்போகின்றோம். இந்த ஜாதகன் ஜெனனகாலத்தில் புதனுடைய தசையில் இருப்பு வருஷங்கள் பதினன்கு, மாதங்கள் இரண்டு. இந்தத் தசையின் பலன்களைச் சொல்லுகிறோம். கேட்டருள வேண்டும். தாயே !

55. துணைவர்கள் விருத்தி யென்றோம் செப்புவோம் பூமி சேரும்
கனமுள ரோகம் தானும் கழறினேம் ஜாத கர்க்கு
தனமது பெருகு மென்றோம் தாரணியோர் நேசம்த் நேரும்
இனபந்து சுபமும் சூதம் எய்திடு மென்று சொன்னேம்.

55. துணைவர்கள் பிறப்பார்கள். பூமிகளும் சேர்ந்திடும். ஜாதகனுக்குச் சில நோயும் வரும். செல்வம் ஓங்கி வளரும். ஊரில் வசிப்பவர்களின் நட்பு உண்டாகும். உறவினர்களின் குடும்பங்களில் கலியாணம் முதலிய சுபங்களும் நடைபெறும். சூதக [துன்ப]மும் நேரிடும்.

56. காலிகள் சேத மாகும் களவுகள் கொஞ்சம் போகும்
ஞாலமேல் மாது வுக்கு நவிலுவோம் ரோகம் தானும்
ஏலவே பிணிகள் தாமும் இலகினும் நிவிர்த்தி யென்றோம்
ஆலத்தை யுண்டோன் தேவி அறைகிறோம் விபரம் ரண்டில்.

56. கன்று காலிகள் நஷ்டமாகும். பொருள்கள் களவாடப்படும். அதனால் அதிக நஷ்டமேற்படாது. இந்தத் தசையில் மாதாவிற்கு நோயினால் கஷ்ட மேற்படும். இவர்களுக்குப் பிணிகள் வந்தாலும் சீக்கிரத்திலேயே நிவிருத்தியாகும். ஹாலாஹலம் என்ற கடும் விஷத்தை உண்ட சிவ பிரானின் தேவியே ! இந்த ஜாதகனைப்பற்றிய மேல் விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுகின்றோம்.

—

ஜாதகம் 17.

1. கடகமே ஜன்ம மாகக் கதிர்புதன் புகரும் வீணை
திடமதி சேயும் வண்டி சனிகன்னி சிகியும் கோலில்
அடலரு ராகு மேடம் ஆகியே நவக்கோள் நிற்க
உடன்வந்தோ னுணும் ஜன்மம் உரைக்கிறோம் பலன்கள் கேளே

	குரு ராகு		சூரியன் புதன் சுக்கிரன்
	இராசி சக்கரம்		லக்கினம் சந்திரன் செவ்வாய்
		கேது	சனி

1. விஜய வருஷம் ஆனி மாதம் 6-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் ஜனனம்.

[ஆங்கிலத் தேதி 18–6–1893]

நவக் கிரஹங்களின் பாதசாரம்

மிருக சீர்ஷம் 4-இல் சூரியன். ஆயில்யம் 3-இல் சந்திரன். புனர் வஸு 4-இல் செவ்வாய். திருவாதிரை 4-இல் புதன். கிருத்திகை 1-இல் குரு. திருவாதிரை 4-இல் சுக்கிரன். ஹஸ்தம் 2-இல் சனி. அசுவினி இல் ராஹு. சித்திரை 4-இல் கேது. ஆயில்யம் நக்ஷத்திரம். புத தசை யில் இருப்பு வருஷங்கள் பதினொன்கு.

1. இலக்கினம் கடகமாகவும், சூரியன் புதன் சுக்கிரன் மிதுனத்திலும், சந்திரன் செவ்வாய் கடகத்திலும், சனி கன்னியிலும் கேது துலாத்திலும், ராஹு மேஷத்திலுமாக இவ்வாறுள்ள கிரஹநிலையில் ஆண் குழந்தை ஜனித்திருக்கும். இதன் பலன்களைச் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

குறிப்பு.—இந் நூலாசிரியர் குரு தங்கி இருக்கும் ராசியைக் குறிப் பிடவில்லை. ஆயினும் நாம் ஆராய்ந்து பார்த்து எழுதி இருக்கிறோம்.

2. இன்னவன் ஜனித்த இல்லம் இசைவோமே கீழ்மேல் வீதி
துன்னிய எமனின் வாசல் சொந்தமே யில்ல மல்ல
மன்னிய வடமேல் திக்கில் மாலவன் கோஷ்ட மாகும்
பன்னிய அருகில் சூழி பகையதா மதற்கு உத்திரம் ;

2. ஜாதகன் ஜனித்த வீடு கிழக்கு மேற்காக அமைந்துள்ள வீதியில் தென் திசையைப் பார்த்து இருக்கும். அது சொந்த வீடல்ல. வீட்டிற்கு வடமேற்குத் திசையில் விஷ்ணுவின் கோயில் உண்டு. அதற்கு அருகில் ஒரு நீர்நிலை இருக்கும். அதற்கு வடதிசையில் ;

3. அரனவன் கோவி லுண்டு அருகினில் சோலைகுண்டம்
பரையினிலுதித்த காளிபருகிடும் குணத்திலே தான்
குறைதலை மாரி மூத்தோன் கோவிலு முத்திரமாகும்
திறமிலா கூரை வீட்டில் செனித்தவனிவனேயம்மா

3. சிவ பிரான் ஆலயம் உண்டு. அந்த ஆலயத்திற்குச் சமீபத்தில் ஒரு சோலையும் இருக்கும். கீழ்த் திசையில் காளிதேவியின் கோயிலும் வடதிசையில் மாரியம்மன் கோயிலும், கணேசரது ஆலயமும் விளங்கிடும். சாதாரணமான கூரை வீட்டில் இவன் ஜனித்திருப்பான்.

4. இன்னவன் ஜனன யோகம் எழில்பெறு தந்தை யோகம்
மன்னிய மாதுர் யோகம் மாதுலன் குடும்ப யோகம்
தன்னிலே முன்பின் ஜன்மம் சாற்றுவோம் நவக்கோ ளாய்ந்து
அன்னையே யாங்கள் சொல்லு மடைமொழி தப்பா தம்மா.

4. இந்நூலில் இவனுடைய யோகங்களையும் தந்தை தாய் மாமன் களத்திரம் புத்திரர் இவர்களைப்பற்றியும், முன்பிறவி பின்பிறவி இவைகளைப்பற்றியும் நாங்கள் சொல்லப் போகின்றோம். தாயே ! நவக்கிரஹங்களை ஆராய்ந்துப்பார்த்து நாங்கள் சொல்லும் வார்த்தை பொய்யாகாது.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் சிவந்த மேனி
பந்தமா யொடிச்சல் தேகி பாரினில் குள்ள னுவன்
வந்தவர்க் கன்ன மீவன் மர்மவான் வெகுபேர்க் கன்பன்
தன்தன முடைய னுவன் தாட்சிணியன் கனவா னுமே.

5. முதலில் தகப்பனரின் குணங்களைச் சொல்லுகிறோம். அவன் சிவந்த மேனியான். மெல்லிய சரீரம் வாய்ந்தவன். அதிக வளர்ச்சி இல்லாதவன். தன் வீடு நாடி வந்தவர்களுக்கு அன்னம் அளிப்பான். சிலவிஷயங்களை மனத்தில் ஒளித்து வைக்கும் இயல்புள்ளவன். வெகு மனிதர்களுக்கு நண்பனுக இருப்பான். சொந்தமாகச் சம்பாதித்த செல்வமுடையவன். தாட்சிண்ய குணமுள்ளவன். கௌரவம் வாய்ந்தவனுகவும் இருப்பான்.

6. ஏறுகள் பூமி யுள்ளான் இனபந்து மெச்ச வாழ்வன்
பாரினில் தானிய விருத்தி பசுக்களும் ஆடு விருத்தி
கோரின காரி யத்தைக் குணமுடன் முடிக்க வல்லன்
தேரிய வழியில் நிற்பன் சிவப்புளான் ஊகை வானும்.

6. பல எருதுகளை வளர்ப்பான். பூமிகளும் உடையவன். தன் உறவினர் மெச்சும்படி நடத்துவான். தானிய விருத்தி உடையவன். பசுக்களையும் ஆடுகளையும் விருத்தி செய்வான். தான் மனத்தால் விரும்பிய காரியத்தை,

பலன் ஏற்படும் வகையில் சாமர்த்தியமாகச் செய்து முடிப்பான். எல்லோரும் கடைப்பிடித் தொழுகும் சம்பிரதாயத்திலேயே (வழக்கங்களிலேயே) நிலைத்து நிற்பான். அதினின்றும் பிறழமாட்டான். சௌக்கியங்களை அனுபவிப்பான். சிறந்த மதியூகியாகவும் விளங்குவான்.

7. கல்வியு மதிக முள்ளான் கனத்தவர் நேசம் கொள்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இவன்சுகி புசிப்ப னுரும்
தொல்லையு முடைய னுவன் சோம்பலும் கொஞ்ச முள்ளான்
நல்லவர் நேசனு செய்வன் நவினுவோம் மேலுங் கேளே.

7. கல்வியறிவு அதிகம் படைத்தவன். பெருமையும் செல்வாக்கும் உள்ளவர்களிடம் நட்புக் கொண்டவன். தன்னை அடைந்து யாசிப்பவர்களுக்கு இல்லை என்ற சொல்லைச் சொல்லவேமாட்டான். சில தொந்தரவுகளும் இவனுக்கு ஏற்படும். கொஞ்சம் சோம்பலும் உள்ளவன். ஏழையாயினும் நல்லவனுக இருப்பின், அவனுடனும் நட்புக் கொள்ளுவான். மேலும் சொல்கிறோம், கேளுங்கள்.

8. ரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேச மில்லான்
காமனை யொத்த தேகன் கணக்கினில் ஊக வானும்
தீமையு மெண்ணுச் சித்தன் தேகத்தில் பித்த முள்ளான்
சோமனை யணிந்தோன் தேவி சுந்தரி மேலுங் கேளே.

8. நீண்ட ரோமங்கள் உள்ளவன். நல்ல உபதேசங்களைப் பெரியோர்களிடம் கேட்காதவன். மன்மதனைப் போன்ற அழகிய சரீரம் வாய்ந்தவன். கணிதத்தில் மதிநுட்பம் பெற்றவன். ஒருவருக்கும் தீமையை எண்ணுதவன். இவனது தேகத்தில் பித்தம் தலைதூக்கி நிற்கும். பிறையைத் தலையில் அணிந்த சிவபிரானின் தேவியே ! மேலும் சொல்லுகிறோம், கேளுங்கள்.

9. பெருதன முடைய னுவன் பலமில்லான் நாபி நோயன்
கரமதில் சங்கு சக்கரம் கனதன ரேகை யுள்ளான்
திருவுமே வாச முள்ளான் ஜனங்களை ஆத ரிப்பான்
மருமமும் கொஞ்ச முள்ளான் ஆசார முடைய னுமே.

9. அதிக தனம் உடையவனுவான். உடலில் வலிமை இல்லாதவன். நாபியில் உஷ்ணத்தால் பிணியுள்ளவன். கரத்தில் சங்கம் சக்கரம் தனம் முதலிய ரேகைகள் வாய்ந்தவன். லக்ஷ்மீவாசம் பொருந்தியவன். ஏழை ஜனங்களை ஆதரிப்பான். கபடமுள்ளவன். நல்ல ஆசாரமுள்ளவனுகவும் இருப்பான்.

10. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோம் ஆண்பாலொன்று
கன்னியு மவ்வாருரும் கழறுவோ மிருவர் தீர்க்கம்
அன்னையே அதன்மேல் தோன்றியரிட்டமாம் துணைவர் தாமும்
மன்னவன் துன்ஜன் மத்தை வரைகிறோம் கேளு மம்மா.

10. இவனுடைய சகோதரபாவத்தை கூறுகின்றோம். ஒரு சகோதரனும் ஒரு சகோதரியுமுள்ளவர். இவ்விருவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். தேவியே ! அதற்குமேல் பிறந்தால் நீடித்து வாழமாட்டார்கள். இவனுடைய முன்ஜன்மத்தைப்பற்றி சொல்லுகின்றோம், கேளுங்கள்.

11. இன்னவன் புதுவை தன்னில் இசையும்கோ வைசியனுகிப்
பன்னியே செட்டுச் செய்து பாலரும் மனைவி யோடு
நனைய குடும்பி யாகி நாடெல்லாங் கீர்த்தி பெற்றுத்
தன்னிலே வாழு நாளில் சாற்றுவேன் மேலுங் கேளே.

11. இவன் முன்ஜன்மத்தில் புதுவையில் யாதவனுக அல்லது கோமுட்டியாகப் பிறந்து, வியாபாரம் செய்து வந்தான். நற்புகழைப்பெற்று, மனைவி மக்களை அடைந்து பெரிய குடும்பியாகி, சிறப்புடன் வாழ்ந்தான். இவன் வரலாற்றை மேலும் தொடர்ந்து கூறுகின்ருேம்.

12. வருவோர்க்கு அன்ன மீந்து மாலின்மேல் பக்தி பூண்டு
பெரியவர் நேசம் செய்து பெரும்பொரு ளுள்ளா ளுகித்
திறமையாய் வாழ்ந்த பின்பு செல்வியுப் பால ரோடு
குறைவிலாச் சேதுக்கேகிக் குணமுடன் தீர்த்தம் தோய்ந்து ;

12. தன் வீட்டை நாடி வருபவர்களுக்கு அன்ன மளித்தான். மஹாவிஷ்ணுவிடம் பக்தி பூண்டிருந்தான். பெரியவர்களின் நட்பிற்குப் பாத்திரமானுன். அதிகப் பொருள்களைச் சம்பாதித்து வாழ்ந்து வருங்காலத்தில், தன் மனைவியுடனும் குழந்தைகளுடனும் பாவத்தைப் போக்கி, புண்ணியத்தைத் தரும் சேதுவிற்குச் சென்று, அங்கு நீராடி ;

13. ராமலிங் கத்தைப் போற்றி நலமுட னர்ச்சித் தேத்தித்
தீமையை விலக்கும் வைகைத் தீர்த்தமும் தோய்ந்து பின்பு
சோமனே யணிந்த சொக்கர் பாதத்தைத் தொழுது மீண்டு
பூமியில் சிறந்த ரங்க நாதனைப் பூசித் தேத்தி ;

13. அப்புனிதக் கரையில் எழுந்தருளி இருக்கும் ராமநாதரைப் போற்றி, அங்குள்ள பெரியோர்களைப் பூசித்து, பாவத்தைப் போக்கும் வைகைக்கு வந்து, அந்தப் புனித நீரிலும் ஸ்நானம் செய்த, மதுரையில் எழுந்தருளி இருக்கும் பிறைச் சந்திரனைச் சிரசில் அணிந்த ஸ்ரீ சுந்திரேசுவரருடைய பாதாரவிந்தங்களைத் தொழுது, அதன் பின், பூமியில் சிறந்த க்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கத்திற்கு வந்து, ரங்கநாதப் பெருமாளைப் பூசித்து விட்டு ;

14. அங்குள அகதி கட்கு அநேகமாய்த் தான மீந்து
பொங்மா யுள்ளூர் மீண்டு புனிதனும் வாழு நாளில்
துங்கமா முனிவ னைப்போல் துறவியு மோர்நா ளங்குத்
தங்கியே அன்னம் கேட்கத் தனிகனும் தாரே னென்று ;

14. அங்குள்ள அகதிகளுக்குப் பலவித தானங்களைச் செய்துவிட்டு, தன் ஊருக்குத் திரும்பி வந்து, சுகமாக வாழ்வானுனன். இவ்வாறு இருக்கும் காலத்தில், ரிஷிசிரேஷ்டர் போன்ற ஒரு பெரிய துறவி இவன் வீட்டை அடைந்து அன்னம் யாசிக்க, இவன் தருகின்றேன் என்று சொல்லி ;

15. கறிவகை ரசம்கு ழம்பு கலந்துமே கையில் தந்தான்
பரதேசி மனது வெக்கிப் பகருவான் வார்த்தை தானும்
அரனடி யார்க்குச் சாதம் அளிக்கிறே னென்று சொல்லி
உரிமையா யொக்கச் சேர்த்து உருட்டியே யளித்த தாலே ;

15. வீட்டிற்குள் சென்று, அன்னத்தை, கறிவகை ரசம் குழம்பு இவைகளுடன் கலந்து, ஓர் உருண்டையாகச் செய்து, துறவியின் கையில் வைத்தான். தன்னை உள்ளே அழைத்து, ஆசனத்தில் அமரச் செய்து, இலையில் சாதம் முதலியவைகளை முறைப்படி பரிமாறுவான் என்று எண்ணி இருந்த அந்தத் தவசி, இவன் செய்த உபசாரத்தைக் கண்டு, மனம் வருந்திச் சொன்னுன். சிவனடியார்களுக்கு அன்ன மளிக்கிறேன் என்று சொல்லிவிட்டு, முறைதவறி அன்னத்தை உருண்டையாக உருட்டிக் கொடுத்தபடியால் ;

16. சூத்திர சாதி யாகத் துலங்குவாய் மறுஜன்மத்தில்
பாத்திர மின்றி யேதான் பகருவா மின்ன முந்தான்
கோத்திரந் தனிலு திப்பா யென்றுமே கூற லுற்றுர்
பூர்த்தியா யாயுள் போக்கிப் பிறந்தவ னிவனே யம்மா.

16. அடுத்தப் பிறவியில், சூத்திர சாதியில் பிறப்பாய். போசன கலன் இன்றி வாழ்வாய் என்று சொல்லிவிட்டு அத்துறவி ஏகினுர். இவனும் அப்பிறவியில், மீதமுள்ள ஆயுளைக் கழித்து, மரணமடைந்து இங்குப் பிறந்து, இக்கடக லக்கின பாலனுக்குத் தந்தையாக நேர்ந்திருக்கின்ருன்.

17. இப்படி யிருக்குந் தந்தை இவனுக்கே யுதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவும் சிவந்திடு மேனி யாவன்
ஒப்பவே கல்வி யுள்ளன் உறுதிவான் மனமு முள்ளான்
தப்பிதம் ஒருவர்க் கெண்ணுன் தயையுளான் பயத்த னுகும்.

17. இவ்வாறு உள்ள தந்தைக்கு இந்தப் பாலகன் மகனுக உதித்திருக்கிருன். இவனுடைய குணங்களைச் சொல்லுகின்ருேம். சிவந்த மேனியான். தக்க கல்வியறிவு உடையவன். உறுதியான மனம் படைத்தவன் [மனத்தில் செய்த தீர்மானத்தை மாற்ருதவன் என்பது கருத்து]. பிறர்க்குத் தீமையை எண்ணுதவன். தயைக் குணமுள்ளவன். சிறிது அச்சமும் உடையவன்.

18. முன்கோபம் கொஞ்ச முண்டு முகமது வசிய முள்ளான்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் சுசீல னுகும்
இன்பமாய்ச் சுகபுசிப்பன் ரசவர்க்கப் பிரிய முள்ளான்
அம்புவி யதிகம் சேர்ப்பன் ஆள்கார ருடைய னுமே.

18. சிறிது முன்கோப முள்ளவன். முகத்தில் பிறரை வசப்படுத்தும் ஒருவிதப் பொலிவு பெற்றவன். வாக்குவாதம் ஏற்படும் பொழுது தான் சொன்ன விஷயமே சரி, என்று சாதிப்பான். நற்சீலமும் உள்ளவன். சுகங்களைச் சுவைத்து [அவைகளில் மிகவும் ஈடுபட்டு] அனுபவிப்பான். பழரசம், பால், தேன் முதலிய திரவமான ஆகாரப் பொருள்களில் ஆசை உள்ளவன். வளமான நிலங்களை அதிகம் சேர்ப்பான். நல்ல சேவகர்களும் இவனுக்கு இருப்பார்கள்.

19. தந்தையினு ர்ஜித்தத்தை ஜாதகன் விருத்தி செய்வன்
பந்தமாய் பொருளைச் சேர்ப்பன் பாரினில் கீர்த்தி யேற்பன்
சிந்தையில் கபடு முள்ளான் சித்தினி சாதி யாவன்
நொந்திடு பேரைக் காப்பன் நுவலுவோம் மேலுங் கேளே.

19. பிதுரார்ஜித சொத்துக்களை மேன்மேலும் அபிவிருத்தி செய்வான். தன் முயற்சியாலும் அதிகப்பொருள்களைச் சேர்ப்பான். பெரிய புகழ்பெற்ற வனாக விளங்குவான். மனத்தில் சிறிது கபடமும் உடையவன். சித்தினி சாதியைச் சேர்ந்தவன். கஷ்டப்படுபவர்களைக் காப்பாற்றுவான். மேலும் சொல்லுகின்றோம்.

20. வார்த்தையில் சமர்த்த னாகும் மானமு முடைய னவன்
தீர்த்தங் களதிகம் தோய்வன் திருமகள் வாச முள்ளான்
ஏர்த்ததோர் சூடு முள்ளான் இவனுக்கா விருத்தி யுண்டு
பார்த்திபர் நேசம் கொள்வன் பந்துவும் புகழ வாழ்வன்.

20. பேசுவதில் திறமை யுள்ளவன். கௌரவம் வாய்ந்தவன். புண்ணிய தீர்த்தங்களில் அதிகம் நீராடுவான். லக்ஷ்மீவாசம் பொருந்தியவன். இவனது சரீரத்தில் உஷ்ணம் தங்கி இருக்கும். இவனுக்குப் பசுக்களை அபிவிருத்தி செய்யும் தொழில் சுலபமாகக் கைகூடும். அரசர்களின் நட்பிற்குப் பாத்திரமானவன். உறவினர் புகழும்படி வாழ்வான்.

21. குடும்பத்தை விருத்தி செய்வன் கூவலும் தோப்பு முள்ளான்
இடும்புக ளெண்ணு சித்தன் எதிரியை நாசஞ் செய்வன்
அடைமொழி யதிகம் கூறுவன் அநேகமா தரையும் சேர்வன்
படபட நடையு முள்ளான் பார்த்திபர் மெச்ச வாழ்வன்.

21. குடும்பத்தைப் பல துறைகளிலும் வளரச் செய்வான். தோப்பு துறவுகள் உடையவனுவான். பிறருக்குத் தீங்கை எண்ணமாட்டான். எதிரிகளை நாசம் செய்வான். ஒவ்வொன்றுக்கும் அடைமொழிகளை (விசேஷணங்களை Adjectives)-ச்கூறி, பேச்சை விஸ்தரிக்கச் செய்வான். பல பெண்களிடம் நேசம் கொண்டவன். இவனது நடை படபடப்பாக (மிக்க துரிதமாக) இருக்கும். அரசர்களும் இவனைக் கொண்டாடுவார்கள்.

22. இன்னவன் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பால் காணேம்
கன்னியு மிருவ ராகும் கனத்திடு மிருவர் தீர்க்கம்
பின்னமா மிதன்மேல் தோன்றில் பலக்காது சகோத ரங்கள்
அன்னமே யாங்கள் சொல்லு மடைமொழி குன்றி டாது.

22. இவனுடைய சகோதரபாவத்தைக் கூறுகின்றோம். இவனுக்குச் சகோதரர் இல்லை. சகோதரிகள் இருவராவார். அவ் விருவரும் தீர்க்கமாக வாழ்வார்கள். இந்த எண்ணிக்கைக்கு மேல் தோன்றினும் நீடிக்காது. தேவியே ! நாங்கள் சொன்ன வார்த்தை பொய்யாகுமா ?

23. ஜாதகன் தனக்குப் புத்திரர் சாற்றுவோ மறுவ ராகும்
நீதியா யிரண்டே யாண்பால் நிகர்கன்னி யவ்வா றாகும்
சோதிபோல் நான்கும் தீர்க்கம் சொல்லுவோ மிரண்டு நஷ்டம்
மாதவர் யாங்கள் சொல்லும் மருமொழி குன்று தம்மா.

23. ஜாதகனுக்கு ஆறு குழந்தைகள் பிறப்பார்கள். இரு புத்திரர்களும் இரு பெண்களுமாக அந்நால்வரும் சந்திர சூரியர்களைப்போல வெகுகாலம் வாழ்வார்கள். இரு குழந்தைகள் நஷ்டமாகும். பெருந்தவம் பொருந்திய நாங்கள் கூறிய வார்த்தை சத்தியம். தாயே !

24. மாதுரு குணத்தை யாங்கள் வகுக்கிறோம் மால்நி றத்தாள்
நீதியாய்ச் சமதே கத்தாள் நிகர்பித்த தேகி யாவள்
வேதனை யொருவர்க் கெண்ணுள் விரும்புமுன் கோபம் கொஞ்சம்
நீதியா யன்ன மீவள் நிமலியே மேலுங் கேளே.

24. இந்த ஜாதகனின் தாயுடைய குணங்களைக் கூறுகின்றோம். கருத்த மேனியாள். சமமான வளர்ச்சி உடையவள். பித்த தேகம் வாய்ந்தவள். பிறர்க்குத் தீமையை எண்ணுதவள். சிறிது முன் கோபமுண்டு. வந்தவர்களுக்குப் பக்தி சிரத்தையுடன் அன்னமளிப்பாள். தேவியே ! மேலும் கேளுங்கள்.

25. அன்னம்போல் நடையு முள்ளாள் ஆளனுக் கினிய ளாவள்
துன்னிய மர்ம முள்ளாள் சோம்பிடாள் காரி யத்தில்
இன்னவள் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பால் ரண்டு
கன்னியு மொருத்தி யாகும் கழறுவோம் தீர்க்க மென்று.

25. அன்னப்பறவைபோல் அழகிய நடை உள்ளவள். தன் பர்த்தாவின் மனத்தைக் குளிரச்செய்யும் இனிமையான சுபாவம் படைத்தவள். இவளுடைய (தாயின்) சகோதரபாவத்தைச் சொல்லுகின்றோம். இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியும் உண்டு. இம் மூவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள்.

26. இவளுடைத் தந்தைக் கேதான் இருதார மென்று சொன்னேம்
அவனியில் முதல்மா துந்தான் அழிந்திடும் புத்திரர் காணேம்
பவமுள மறுமா துக்குப் பிறந்தவ ளிவளே யம்மா
தவமுள முனிகள் யாங்கள் சாற்றிய மொழிகுன் றாது.

26. இவளுடைய தகப்பனுக்கு இரு மனைவிமார்கள். அவர்களில் முத்தவள் சந்ததியில்லாமலே அழிந்திடுவாள். இளைய மனைவிக்குத்தான் இவளும் மற்றைய சகோதரர்களும் ஒரு சகோதரியும் பிறந்திருக்கிறார்கள். தவமுள்ள ரிஷிகளாகிய நாங்கள் சொன்ன வார்த்தைக் குன்றிடாது.

27. ஜாதகன் முன்ஜன் மத்தைச் சாற்றுவோம் தலங்கை தன்னில்
நீதியாய்ப் பிரம்ம சேயாய் நியமித்தா னிவனே யம்மா
வேதியர் மரபில் வந்து விளைபுல மதிக முண்டாய்
ஆதியாய்ப் பொருள னேகம் அவனுமே பெற்று வாழ்வன்.

27. ஜாதகனுடைய முன் பிறவியைப்பற்றிக் கூறுகின்றோம். இவன் முன்ஜன்மத்தில் ....ல் பிராம்மண வமிசத்தில் பிறந்தான். இவ்வாறு பிராம்மணுகப் பிறந்து, நன்ருக விளையும் நிலங்கள் அனேக

முடையவனுக இருந்தான். பலவிதப் பொருள்களைப் பெற்றுச் சுகமாக வாழ்ந்து வந்தான்.

28. வாழ்கிற நாளி லேதான் மங்கையர் மோகங் கொண்டு
தாழ்விலா அநேகம் பேரைத் தானவன் போகம் தூய்த்தான்
ஊழிகள் வந்த சேதி உரைக்கிறேம் சைவன் பெண்டிர்
வேல்விழி மாதர் தன்மேல் விருப்பமும் கொண்டானம்மா;

28. ஒருவிதக் குறைவுமின்றிச் சுகமாக வாழும் காலத்தில், பல பெண்களிடம் காதல்கொண்டு, அவர்களிடம் இன்பத்தை நுகர்ந்தான். ஆயினும் ஒரு சைவப் பெண்ணல் இவனுக்கேற்பட்ட சாபத்தைச் சொல்லுகின்றேம். வேல்போன்ற விழிகளை உடைய ஒரு சைவப் பெண்ணிடம் இவன் காதல் கொண்ட சமயத்தில்;

29. கற்புள மாது தானும் கழறுவாள் மறையோ னேகேள்
அற்பபுத் திகளை யெண்ண யாகாது உனக்குத் தானும்
சிற்பசா ஸ்திரங்க ளனைத்தும் தெரிந்துமே வேத மோதும்
நற்புத்தி யெண்ண மல்நீ மங்கைமேல் மோகங் கொண்டாய்.

29. கற்புக்கரசியான அவள் வருத்தப்பட்டுச் சொன்னள். வேதம் ஓதும் பிராம்மண குலத்தில் உதித்தவனே! கேள். நீ இவ்வாறு அல்ப எண்ணங்களைக்கொள்ளாதே! நீ அனேக சாஸ்திரங்களைக் கற்றறிந்தவன். ஆயினும் உன் மனத்தை மறைகளை ஓதுவதில் செலுத்தாமல், பிறர் பெண்டிர்மேல் மோகம் கொள்ளுவதில் செலுத்துகின்றய்.

30. மாயத்தால் மயக்கங் கொண்டு மங்கையர் மோகங் கொண்டாய்
தாய்தங்கை யென்றெண் ணமல் தடுமாறும் பாவியே நீ
ஆயர்பா டியில்பி றந்து அநேகமா தர்மே லாசை
நேயமாய்ச் செய்வா யென்று நியமித்தாள் கற்பு மாது.

30. பிறர் பெண்களைத் தாயாகவும் சகோதரியாகவும் நினைக்காமல், மதி இழந்து அவர்களிடம் அதருமமாகக் காதல் கொண்ட பாவியாகையால், நீ, மறுபிறவியில் இடைச்சேரியில் பிறந்து, அப்பொழுதும், மேன்மேலும் உனது அழிவைத் தேடிக்கொள்ளுவதற்காக, பல மாதர்களிடம் மையல் கொள்வாய், என்று இவ்வாறு கற்புள்ள அந்த மாது சபித்தாள்.

31. சைவன்தன் பெண்டிர் சாபம் சார்ந்துமே உடலம் வாடி
உய்யவே யிச்சென மத்தில் உதித்தனன் கோ குலத்தில்
தையலர் மோக வானும் ததிநெய்பால் பிரிய முள்ளான்
மைவிழி நேத்திர முள்ள மங்கையே மேலுங் கேளே.

31. அந்தச் சைவப் பெண்ணின் சாபம் இவனைச் சார்ந்தது. பிறகு, காலக்கிரமத்தில் மரணமடைந்து, இந்த ஜன்மத்தில் யாதவ குலத்தில் பிறந்திருக்கிறன். பல மாதர்களிடம் மயக்கம் கொண்டவன். தயிர் நெய் பால் இவைகளில் இஷ்டமுள்ளவன். மைத்தடங் கண்ணினய்! மேலும் சொல்லுகிறேம்.

32. இன்னவன் மணத்தின் கால மியம்புவோம் பதினே மூண்டில்
கன்னியும் தெற்குத் திக்கில் கனத்ததோர் மாதுர் வர்க்கம்
தன்னிலே வருவா ளம்மா தாரமு மொன்றே யாகும்
அன்னிய மங்கை தானும் அனந்தம்பேர் தம்மைச் சேர்வன்.

32. இவனுக்கு மணமாகும் காலத்தைச் சொல்லுகின்றேம். பதினேமூவது ஆண்டில் விவாஹம் நடைபெறும். கன்னிகை தெற்குத்திசையில் மாதுரு வமிசத்தில் உதித்தவளாக இருப்பாள். இவனுக்கு மனைவியும் ஒருத்திதான். அந்நிய மங்கையர் பலருடன் இவன் நட்புக்கொள்ளுவான்.

33. தந்தையின் மரண காலம் சாற்றுவேன் முப்பா னொன்பான்
பின்னையு மன்னை காலம் பேசுவோம் நாற்பா ழுறில்
எந்தையே யிவனின் காலம் இயம்புவோ மெழுபானரண்டில்
பந்தமாய் மாசி மாதம் பௌர்ணமி தன்னி லுய்வன்.

33. ஜாதகனது தந்தையின் மரண காலத்தைச் சொல்லுவேன். இவனுக்கு முப்பத்தொன்பதாவது வயது நடக்கும்போது தந்தை மரணமடைவான். அதற்குப் பிறகு இவனுடைய நாற்பத்தேழாவது வயதில் தாய் மரணத்தை அடைவாள். இந்த ஜாதகனின் மரண காலத்தையும் குறிப்பிடுகின்றேம். எழுபத்திரண்டாவது வயதில் மாசி மாதத்தில் பௌர்ணமி திதியில் மரணமடைவான்.

34. மறுஜன்மம் வேங்க டத்தில் வைசிய குலமு தித்துப்
பெருநிதி யதிகம் சேர்த்துப் பிரபலச் செட்டுச் செய்து
தருமதான முமே செய்து சந்ததி மனைவி யோடு
இருவினை யில்லா தாகி யிருப்பனே யிவனே யம்மா.

34. இந்த ஜாதகன், அடுத்தபிறவியில், திருவேங்கடம் என்று சொல்லப்படும் திருப்பதியில், வைசிய குலத்தில் உதித்து, அதிகச் செல்வமுடையவனுகி, வியாபாரத்தைப் பிரபலமாகச் செய்து, அதனல் கிடைத்த பணத்தைக் கொண்டு, தான தருமங்கள் செய்து மனைவிமக்களுடன் சிறப்பாகவும் சுகமாகவும் வாழ்வான். அந்த ஜன்மத்தில் தீயவினை இவனுக்கு ஏற்படாது.

35. இப்படி யெழுவர் கூற ஈசுவரி கேட்கலுற்றுள்
ஒப்புடன் தந்தை ஜன்மம் உரைப்பீர்கள் என்று கேட்க
மைப்படி கண்ணள் யாங்கள் வரைகிறேம் தந்தை ஜன்மம்
செப்பமாய்க் காஞ்சி மேல்பால் சிறந்திடுமாலின் கோஷ்டம்;

35. இவ்வாறு மஹரிஷிகள் கூறினவுடன், இவனது தந்தையின் மறுஜன்மத்தைக் கூறுங்கள், எனப் பார்வதி கேட்க, முனிவர்கள் சொல்லுகிருர்கள். தாயே! சொல்லுகிறேம். காஞ்சி க்ஷேத்திரத்திற்கு மேற்குத் திசையில், திருமாலின் ஆலயமுள்ள;

36. ஊரிலே பிரம்ம சேயாய் உதிப்பனும் தந்தை தானும்
வீரிய பாட்ட ஜன்மம் விளம்புவீ ரென்று கேட்கக்
கூறுவோம் பின்னு லேதான் கோதைய ரிஷி ளம்மா
காரண கம்பன் பக்கல் கதைத்திடும் மாதே யம்மா.

36. ஊரிலே பிராம்மண குழந்தையாக ஜனிப்பான். இந்த ஜாதகனின் பாட்டனின் ஜன்மத்தைக் கூறுங்கள், எனப் பார்வதி கேட்க, முனிவர்கள் கூறினார்கள். பாட்டனின் ஜன்மத்தைப் பின்பாகத்தில் தெரிவிக்கின்றோம் என.

37. இன்னவன் ஜனனந்தொட்டு இருநான்கு ஆண்டுக் குள்ளே
நன்னிய கிருகம் வாய்க்கும் நற்பூமி தனிலே பொன்னும்
பின்னமில் லாமல் காணும் பலத்திடும் யோகம் வாய்க்கும்
அன்னமே யாங்கள் சொல்லு மடைமொழி குன்றி டாவே.

37. இந்த ஜாதகன் ஜனித்து எட்டு ஆண்டுகளுக்குள்ளே, அழகிய கிருஹம் வாய்க்கும். இவனுடைய நல்ல பூமியில் பொன்னும் நிச்சயமாக அடையப்படும். [புதையல் கிடைக்கும் அல்லது பயிர்த்தொழில் நன்றுகப் பலனளிக்கும் என்றும் கூறலாம்.] பிரபல ராஜயோகாதிகளும் நடைபெறும், நாங்கள் சொன்ன மொழிகள் தவறு.

38. அதுமுதல் மரண மட்டும் அநேகமாய்ச் சுகமு முண்டு
பதியினில் திருவு முண்டு பாரெலா மெச்ச வாழ்வன்
ததிநெய்பா லதிக முண்டு சந்திரன் பிறைபோல் யோகம்
அதிபனும் வாழ்வானென்று வரைகிறோம் ரிஷிகளம்மா.

38. அவ்வாறு பிரபல யோகங்கள் ஆரம்பித்தபிறகு நடுவில் பங்கம் நேராமல் ஆயுள்முழுவதும் சௌக்யமாக வாழ்ந்திடுவான். மஹாலக்ஷ்மீ வாசம் பொருந்தியவனுகவும், உலகத்தோரால் கொண்டாடப்பட்டவனுகவும், விளங்குவான். தயிர் பால் நெய் இவைகள் இவன் வீட்டில் அதிகமாகும். இவனுக்கு வளர் பிறைச் சந்திரன் போல யோகங்களும் வளரும். இவனும் சுகமாக வாழ்வான். தாயே ! ரிஷிகளாகிய நாங்கள் சொன்னபடியே நடைபெறும்.

ஜாதகம் 18.

1. ரவிபுகர் வளைய லாக நற்குரு ராகு கோலில்
புவிமகன் கேது மேடம் புதனரி சனியும் சன்னி
மதிநந்தி கடகம் ஜன்மம் வந்தசே யாணே யாகும்
நவினுவோம் பலன்க ளெல்லாம் நாயகி கேட்டி டாயே.

	செவ்வாய் கேது	சந்திரன்	
	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன் சுக்கிரன்
			புதன்
		குரு ராகு	சனி

1. சூரியன் சுக்கிரன் கடகத்திலும் குரு ராஹு துலாத்திலும், செவ்வாய் கேது மேஷத்திலும், புதன் சிங்கத்திலும், சனி கன்னி சந்திரன் விருஷபத்திலுமாக இருந்து, இலக்கினம் கடகமாகவமைந்து, இவ்வாறு கிரஹ நிலையில் ஜனித்தவன் ஆண். இந்த ஜாதகனின் பலன்களைச் சொல்லுகின்றோம். ஈசுவரியே ! கேட்டருளல்வேண்டும்.

2. வந்தவூர் சிற்றூராகும் வாசலும் வடக்குப் பார்வை
தந்தியும் சந்தி கீழ்ப்பால் சாமுண்டி அதன்கீழ்த் தங்கும்
உந்தியில் பூத்தோன் மேல்பால் உரைத்திடும் வடமே லீசன்
நந்திடும் கோஷ்ட முண்டு நற்கங்கை அதன்மேல் தங்கும்.

2. இவன் பிறந்த ஊர் சிறியதாகும். வீடு வடக்குத் திசை நோக்கி இருக்கும். [வீதி கிழக்கு மேற்கில் இருக்கும் என்பது கருத்து]. வீட்டிற்குக் கிழக்கே ஸ்ரீவிநாயகர் கோயிலும் நான்கு வீதிகள் கூடும் சந்திப்பும் இருக்கும். அதற்குக் கீழ்த் திசையில் காளி கோயிலுண்டு. மேற்கில் திருமால் எழுந்தருளி இருப்பார். வடமேற்கில் சிதைந்த பரமசிவனது கோயிலும், அதற்கும் மேற்கில் ஒரு நதியும் உண்டு.

3. பலவித சோலே சூழும் பருகிடும் அவ்வூர் தன்னில்
இலகிய கெட்டி வீட்டில் இவனுமே வாசம் செய்வன்
நலமுடன் தந்தைக்கே தான் நாட்டுவோம் பலன்க ளெல்லாம்
கலகல வார்த்தை சொல்வன் காரிய சமர்த்த னுகும்.

3. பலவிதச் சோலைகளும் தோப்புகளும் அவ்வூரைச் சூழ்ந்திருக்கும். இவ்வாறுன அடையாளத்துடன் விளங்கும் ஊரில், கெட்டியான [கற்களால் நிர்மாணிக்கப்பட்ட] வீட்டில், இவன் பிறந்து வாசம் செய்வான். ஜாதகனின் தந்தையைப்பற்றிய பலன்களைச் சொல்லுகின்றோம். கலகலப்பாக [எல்லோரிடமும் சுலபமாக] வார்த்தை சொல்ல ஆரம்பிப்பான். காரியங்களை நிறைவேற்றுவதில் வெகு சமர்த்தன்.

4. வந்தவர்க் கமுதளிப்பன் அரசர்பூ சிதனும் மேலும்
நொந்திடும் பேரைக் காப்பன் நுவலுப தேசமுள்ளான்
சிந்தையில் கபடு கொஞ்சம் தீரநன் மனத்த னாகும்
சந்ததம் தனவா னாகும் தானிய விருத்தி யுள்ளான்.

4. தன் வீட்டை நாடி வந்தவர்களுக்கு அன்னம் அளிப்பான். அரசர்களாலும் கௌரவிக்கப்பட்டவனாக வாழ்வான். கஷ்டப்படுபவர்களைக் கஷ்டத்தினின்று காப்பாற்றுவான். பெரியோர்களிடம் நல்ல உபதேசங்களைக் கேட்பான். சிந்தையில் சிறிது கள்ளமுள்ளவன். தைரியம் வாய்ந்தவன். செல்வம் படைத்தவனாகவும், தானிய விருத்தி உடையவனாகவும் இருப்பான்.

5. சிவந்திரு மேனி யாவன் தேகமு மொடிச்ச னுள்ளான்
அவமதிப் பில்லா வாழ்வன் அநேகரை ஆதரிப்பன்
நவமதில் பொய்கள் சொல்லான் நடையது துருசு முள்ளான்
சிவனையே துதிப்பா னாகும் சேயிழைப் பிரியனவன்.

5. சிவந்த நிறமுள்ளவன். தேகம் மெலிந்திருக்கும். பிறரால் அவமதிக்க முடியாதபடி பழகுவான். உதவியை நாடும் பலரையும் ஆதரிப்பான். பொய் பேசாமல் உண்மையே உரைப்பான். அவனது நடை மிகவும் வேகமாக இருக்கும். சிவபிரானைத் தவிர மற்றைய தெய்வங்களை வழிபடமாட்டான். மனைவியிடம் மிகவும் அன்பு கொண்டவன்.

6. இப்படி யிருக்குந் தந்தை இவனுக்கு உதித்த பாலன்
செப்புவோம் பலன்கள் யாவும் தீரநன் மனத்த னாகும்
ஒப்புடன் சிலநாள் செட்டு உத்யோக மிவனும் செய்வன்
தப்பிதம் ஒருவர்க் கெண்ணன் சத்யவான் தியாகி யாவன்.

6. இவ்வாறு குணம் பொருந்திய தந்தைக்கு இவன் மகனாகப் பிறந்திருக்கிறான். இந்த ஜாதகனுடைய யோகபலன்களைச் செப்புகின்றோம். இவன் மிகவும் தைரியசாலி. சில நாட்கள் வியாபாரம் செய்வான். பிறகு உத்தியோகத்திலும் அமர்வான். பிறர்க்குக் கெடுதலை எண்ணாதவன். உண்மையையே பேசுவான். தியாக குணமும் இவனிடம் நிரம்ப விளங்கும்.

7. தேகமே வலிவு மில்லான் சித்தினி சாதி யாவன்
ஊகமது ரைப்ப னவன் உலகெலா மெச்ச வாழ்வன்
போகவான் முத்தோர் தம்மைப் புணருவான் வாயு ரோசன்
தோகையர் மணமுமில்லான் சதனில்லானென்று சொன்னோம்.

7. துடுப்பலமான சரீரம் வாய்ந்தவன். சித்தினி சாதியைச் சேர்ந்தவன். தக்க யோசனைகளைப் பிறர்க்குச் சொல்லுவான். உலகத்திலுள்ளோர் மெச்சும்படி நடந்து கொள்வான். நன்றாகச் சுகங்களை அனுபவிப்பான். வாயுரோகம் உடையவன். இவனுக்கு விவாஹமும் நடைபெறாது. சந்ததியும் இராது.

8. இப்படி புயண்டர் சொல்ல ஈசுவரி கேட்க லுற்றாள்
மைப்படி மணமு மில்லை மைந்தரு மில்லை யென்றீர்
ஒப்புட னந்தச்சேதி யுரைப்பீர்க ளென்று கேட்க
அப்பணி சடையோன் தேவி அறிவிப்போம் கேளு மம்மா.

8. இவ்வாறு புயண்டர் சொன்னவுடன், பார்வதிதேவி கேட்கலுற்றாள். இவனுக்கு மணமும் இல்லை. புத்திரபாக்கியமும் இல்லை என்று சொன்னீர். அதற்கான காரணத்தை விளக்கிக் கூறுவீராக என. தாயே ! சொல்லுகின்றோம். கேளுங்கள்.

9. இன்னவன் முன்ஜன்மத்தை இசைக்கிறோம் அருணை கீழ்ப்பான்
நன்னிய சிற்றூர் தன்னில் நலமிலா வேடர் வம்சம்
தன்னிலே யுதித்து மேலும் சதாகாலம் சிகாரி கன்னி
பின்னிய வலை வதைத்துப் பிழைத்தன னிவனே யம்மா.

9. இவன் முன்ஜன்மத்தில் திருவண்ணாமலைக்குக் கீழ்த்திசையிலுள்ள சிறிய ஊரில், வேடர் வமிசத்தில் உதித்து, சிகாரி கண்ணி, வலை முதலியவைகளால் எப்பொழுதும் பறவைகளையும், மற்றைய மிருகங்களையும் வதைத்து, தன் வயிற்றை நிரப்பிப் பிழைத்து வந்தான்.

10. வலை கன்னி யாலேஜீவன் புட்களை பிடித்துத் தின்றும்
விலைகளுக் கீந்து மேதான் வித்தகன் வாழு நாளில்
நிலைமையாய் வந்த ஊழி நிகழத்துவோ மிவனுக் கம்மா
[......ம......

(ஈற்றடி காணப்படவில்லை)

10. இவன் வலைகளாலும், கண்ணிகளால் பக்ஷிகளைப் பிடித்து தான் தின்றதுமன்றி, விலைக்கும் அவைகளை விற்று ஜீவித்து வந்தான். அப்பொழுது அவனுக் கேற்பட்ட வினையைச் சொல்கின்றோம்.

11. மற்றொரு நாளி லேதான் மரத்திலே கூடு கட்டி
உற்றிடு புழுவைத் தானும் ஒளித்துமே கண்ணி வைத்து
வெற்றியாய்ப் புருவும் அந்த வலையினில் சிக்கிக் கொள்ளக்
குற்றமென் றெண்ணா மல்தான் கொண்டன னிவனேயம்மா.

11. ஒரு நாள், மரத்தில் கூடு கட்டி, அதில் புழுவை வைத்து, அதற்குப் பிறகு அவைகளைச் சுற்றிலும் கண்ணியைக் கட்டி இவன் ஒளிந்துக் கொண்டிருக்கும் போது, அந்தப் புழுவைத் தின்பதற்காக வந்த புரு, இவன் வைத்

திருந்த கண்ணியில் விழுந்து சிக்கிக்கொண்டது. தான் இவ்வாறு செய்வது மஹாபாவம் என்று சிறிதும் எண்ணமல் அப் புருவைப் பிடித்துக் கொண்டான்.

12. அப்பட்சி தனைப் பிடித்து அதன்கைகால் தனை முறித்துச்
சிக்கடத்தில் போட்டுக் கொண்டு சிகாரியும் வந்து விட்டான்
குப்புற உயிர்போ காமல் கொண்டதால் பட்சி தானும்
மெய்புடன் மனம்கலங்கி விளம்பிற்று சாபந் தானே.

12. பிடித்த பிறகு அதன் கால்களையும் இறகுகளையும் முறித்து, கூடையில் போட்டுக் கொண்டு, இவன் இருப்பிடத்திற்கு வந்து விட்டான். அப் பக்ஷியோ வெனில், உயிருக்கு மன்ருடிக்கொண்டு, மிகவும் மனம் வருந்தி ஒரு சாபத்தைக் கூறிற்று.

13. மற்ருெரு ஜன்மந் தன்னில் மணமுமைந் தருமில் லாகி
எப்பவும் என்னை யேபோல இறகுகால் முறிந்தாப் போலக்
குற்றமாய்ப் பலரும் பேசக் கூறியே மரண மாகி
இற்றது பக்ஷி தானும் விமலியே மேலுங் கேளே.

13. பாவி ! நீ மறுஜன்மத்தில் மணமில்லாமலும், மைந்தரில்லாமலும், என்னைப் போல் அங்கங்கள் குன்றி, பலராலும் நிந்திக்கப்பட்டு வாழ்வாய். இவ்வாறு சொல்லிச் சிறிது காலத்திற்குப் பிறகு அப்பக்ஷி மரண மடைந்தது. பார்வதி தேவியே ! மேலும் கேளுங்கள்.

14. அந்தவோர் சாபந் தானும் அணுகிற்று இச்சென் மத்தில்
மைந்தனும் பறையைப் போல் வாழ்குவா னென்று சொன்னேம்
பந்தமா யதற்குச் சாந்தி பகருவீ ரென்று கேட்க
எந்தச்சாந் திகள்செய் தாலும் விலகாது தோஷம் தானே.

14. அந்தப் பக்ஷி இட்ட சாபம் இப் பிறவியில் இவனைப் பிடித்துக் கொண்டது. இந்த ஜாதகனும் பக்ஷியைப் போல தன்னம் தனியனுகவும், அவயவங்கள் குன்றியும் வாழ்வான், என்று முனிவர் சொன்னவுடன், பார்வதிதேவி, எந்த பரிகாரம் செய்தால் இவனது பூர்வ ஜன்ம வினை தொலைந்து க்ஷேமமடைவான் ? அதைச் சொல்வீராக எனக் கேட்டாள். எவ்வளவு பெரிய சாந்திகளைச் செய்தாலும் அந்தப் பாவம் விலகாது என முனிவர் பதில் கூறினர்.

15. பொன்னவன் நாலில் நிற்கப் பூ மகனவரைப் பாக்கப்
பிந்திய காலந்தன்னில் பெரியவர் யோகி தன்னல்
வந்திடு நோய்கள் மாறும் மைந்தனும் சுகமே யாவன்
கந்தனைப் பெற்ற மாதே சுழறின மொழிகுன் ருது.

15. மேலும் முனிவர் கூறுகின்ருர். குரு நாலாமிடத்தில் விளங்க, பத்தில் இருக்கும் செவ்வாய் அவரைப் பார்ப்பதால் பிற்காலத்தில் இந்த ஜாதகன் ஒரு பெரிய யோகியைச் தரிசிக்க, அவருடைய கருணையால் நோய்கள் தாமாகவே தீர்ந்து சௌக்கியமடைவான். சுப்பிரமணியனைப் பெற்ற தாயே நாங்கள் சொன்ன வார்த்தை பொய்யாகாது.

16. இன்னவன் தந்தை காலம் இயம்புவோ மொருபான் மூன்றில்
மன்னிய அன்னை காலம் வரைகிறேம் நாற்பான் ரண்டில்
இன்னவன் காலந் தன்னை யியம்புவோம் நாற்பா ஞென்பான்
தன்னிலே தனுசு மாதம் சத்தமி பூர்வ பக்கம்.

16. இவனுடைய தந்தையின் மரண காலத்தைச் சொல்லுகின்றேம். இவனுக்குப் பதின்மூன்றும் வயது நடைபெறும் போது தகப்பன் மரண மடைவான். இந்த ஜாதகனின் தாயும் இவனுடைய நாற்பத்திரண்டாவது வயதில் இறப்பாள். இவனுடைய ஆயுளையும் சொல்லுகின்றேம். நாற்பத் தொன்பதாவது வயதில் மார்கழி மாதத்தில் வளர் பிறைச் சப்தமி திதியில் மரண மடைவான்.

17. மரணமே யாகிப் பின்னும் மறுஜன்மம் தில்லை தன்னில்
உரமுள வைசிய சேயாய் உத்தமன் பிறப்பா னம்மா
திருமகள் விலாசம் பூண்டு செட்டுகள் அதிகம் செய்து
வருவோர் கன்ன மீவன் மங்கையே மேலுங் கேளே.

17. மரணமாகி இவன் மறு ஜன்மத்தில் சிதம்பரக்ஷேத்திரத்தில் வளமான வைசியகுலத்தில் பிறப்பான். லக்ஷ்மிவாசம் பொருந்தியவனுக அந்த ஜன்மத்தில் பெரிய வியாபாரங்களைச் செய்து, செல்வத்தை அடைந்து, அதனுல் வருபவர்களுக்கு அமுது அளிப்பான். தாயே ! மேலும் சொல்லு கிறேம்.

18. இவனுடையத் துணைவர் தம்மையியம்பு வோமாண்பால் மூன்று
நவமதில் பெண்பா லவ்வாறு நாட்டுவோம் சிலது சேதம்
தவமுடன் துணைவர் தன்னல் ஜாதகன் அரசு செய்வன்
அவனியோர் மெச்ச வாழ்வன் அம்மையே மேலுங் கேளே.

18. இவனுடைய சகோதரர்களைப் பற்றிக் கூறுகின்றேம். சகோதரர்கள் மூவரும் சகோதரிகள் மூவரும்ஆவார். இவர்களில் சிலர் நஷ்டமாவார்கள். சகோதரர்களின் ஆதரவால் இவன் அதிகாரம் செலுத்தி, பெரியவனுக விளங்குவான். உலகத்தோர் மெச்சும்படி வாழ்வான். அன்னையே ! மேலும் கேளுங்கள்.

19. பத்தினிற் குசனுங் கேது பதிந்திடப் பொன்னேன் பார்க்க
வித்தகன் பலனை நீங்கள் விபரமாய்ச் சொல்லு மென்ருள்
அத்தியை ஆத ரித்த ஐய்யர்தன் னுலயத்தை
சித்தசன் புதிதாய்ச் செய்வன் தேவியே மேலுங்கேளே.

19. காரிய ஸ்தானம் என்று சொல்லப்படும் பத்தாமிடத்தில் செவ்வாயும் கேதுவும் இருக்க, இவர்களைத் தருமாதிபனுகிய குரு பார்ப்பதால் என்ன பலன்கள் நடைபெறும் ? இவ் விஷயத்தை விவரமாகச் சொல்

லுங்கள் எனப் பார்வதி கேட்க, முனிவர் பதிலுரைக்கின்றார். முன்னொரு காலத்தில் முதலையினால் பிடிக்கப்பட்டு உயிருக்குத் தவித்த கஜேந்திராழ் வானைக் காப்பாற்றிய ஆதிமூலத்திற்கு ஒரு புதிய ஆலயத்தை நிர்மாணம் செய்வான். நாங்கள் சொன்ன கிரஹ நிலையின் பலனுள் இதுவும் ஒன்று.

20. இதுவலால் அருகில் தங்கும் யானையின் ஆலயத்தை
அதிபனும் புதியதாய்ச் செய்வன் மானிலம் அதிகம் சேர்ப்பான்
எதிரியை லகுவில் வெல்வன் எப்போதும் பகையும் உண்டாம்
நதிமதி யணிந் தோன் தேவி நாயகி மேலுங் கேளே.

20. இதைத் தவிர, வேறு பலனும் உண்டு. இவன் வீட்டிற்கு அருகில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ விநாயகரின் ஆலயத்தையும் புதிதாக நிர்மாணிப்பான். அதிக நிலங்களைச் சேர்ப்பான். சத்துருக்களை எளிதில் வென்று விடுவான். ஆயினும் இவனுக்குப் பகைவர்கள் எப்பொழுதும் தோன்றிக் கொண்டே இருப்பார்கள். பிறைச் சந்திரனை அணிந்த பரமசிவ பிரானின் தேவியே ! மேலும் கேளுங்கள்.

ஜாதகம் 19

1. பிறைராகு சாடியாகப் புதன்புக ரிரவி பொன்னும்
விரைகட கத்தில் தங்க வேங்கையில் கேது புக்கத்
தரைமகன் மேட மாகச் சனி கோலில் அலவன் சென்மம்
உரைகுவீர் பலனையென்று உத்தமி கேட்க லுற்றாள்.

	செவ்வாய்		
சந்திரன் ராகு	இராசி	சக்கரம்	லக்கினம் புதன், சுக்கிரன் சூரியன் குரு
			கேது
		சனி	

1. துர்முக வருஷம் ஆடி மாதம் 14-ஆந் தேதி திங்கட்கிழமை காலையில் ஜனனம் [ஆங்கில தேதி 27–7–1896] புஷ்யம் 3-இல் சூரியன். சதயம் 1-இல் சந்திரன். பரணி 4-இல் செவ்வாய். புஷ்யம் 2-இல் புதன் (அஸ்தம்). ஆயில்யம் 3-இல் குரு. ஆயில்யம் 1-இல் சுக்கிரன் விசாகம். 1-இல் சனி. அவிட்டம் 3-இல் ராகு. மகம் 1-இல் கேது. நக்ஷத்திரம் சதயம். ராகு தசையில் இருப்பு வருஷங்கள் பதினாறு.

சந்திரன் ராகு கும்பத்திலும், புதன் சுக்கிரன் சூரியன் குரு கடகத்திலும் கேது சிம்மத்திலும், செவ்வாய் மேஷம், சனி துலாத்திலும் இருக்க, இலக்கினம் கடகமாகவுமுள்ள இந்த ஜாதகத்திற்குப் பலன்களைச் சொல்லுவீர்களாக, எனப் பார்வதிதேவி கேட்கலுற்றாள்.

2. அத்திரி புகலு கின்றார் ஆணது ஜன்ன மாகும்
வித்தகன் தந்தை யில்லம் விளம்புவோம் கீழ்மேல்வீதி
உத்தரம் வாடையாகும் உயரெதி ரில்லம் காணன்
பத்திர காளி கீழ்ப்பால் பரமனும் உத்தர மாமே.

2. அத்திரி முனிவர் பலன்களைச் சொல்லுகின்றார். இக்கிரக நிலையில் பிறந்தவன் ஆண். வீதி கிழக்கு மேற்கில் அமைந்திருக்கும். வடக்கு வரிசையில் வீடு (தெற்கு நோக்கி) இருக்கும். இவன் ஜனித்த வீட்டிற்கு எதிரில் வேறு இல்லம் இராது. கீழ்த் திசையில் பத்திரகாளி கோயிலும் வட திசையில் சிவன் கோயிலும் விளங்கிடும்.

3. அருகினில் மாரி கோட்டம் அதன்தெற்கில் அருகர் கோஷ்டம்
திருமாலி னதற்குத் தெற்கில் தீயஞ்சான் தங்கு மென்றேம்
குறைவுள கெடியும் தெற்கில் கூறுமிவ் வடையா ளத்துள்
பெருவூராம் செட்டு ஒங்கும் பூவைசிய குலத்தி லேதான்.

3. அருகில் மாரியம்மன் கோயிலும் அதற்கும் தென் திசையில் சமணர் ஆலயமும் உண்டு. அந்த அலயத்திற்குத் தென் திசையில் திருமாலின் ஆலயமும், அக் கோயிலுக்கும் தக்ஷிணத்தில் அனுமான் கோயிலும் தங்கிடும். இன்னும் தெற்கில் ஓர் இடிந்த கோட்டையும் இருக்கும். இவ்வாறு அடையாளமுள்ள பெரிய ஊரில் பெரிய வியாபாரத்தைச் செய்யும் வைசிய குலத்தில் உதித்திருப்பான்.

4. தோன்றுவா னிந்தப் பாலன் துணைவர்கள் களத்திர புத்திரர்
ஈன்றதாய் தந்தை யோகம் இவனுடை முன்பின் ஜன்மம்
தோன்றிய மட்டும் சொல்வோம் சுருதிஞய யாய்ந்து யாங்கள்
சான்றோர்கள் மனத்தில் வாழும் சங்கரி கேட்டி டாயே.

4. சாதுக்களுடைய மனத்தில் திகழும் பார்வதி தேவியே ! இவ்வாறு தோன்றி இருக்கும் பாலனுடைய சகோதரர்கள் மனைவி புத்திரர் தாய் தகப்பனர் இவர்களுடைய யோகங்களையும், முன் பின் ஜன்மங்களையும், நவக் கிரஹங்களை ஆராய்ந்துப் பார்த்து, சாஸ்திரங்களை ஆதாரமாகக்கொண்டு இந் நூலில் சொல்லப்போகின்றேம். கேட்டருளவேண்டும்.

5. தந்தைக்குத் தாரம் ரண்டில் தரித்திடு மிளையா ளீன்ற
நீதியாய் மைந்தன் தானும் நிகழ்த்துவோ மிவனின் தந்தை
போதவே துணைவர் தம்மைப் போற்றுவா மாண்பால் காணேம்
மேதினில் பெண்பா லொன்று விளம்புவோம் தீர்க்க மாக.

5. இவனுடைய தந்தைக்கு மனைவிமார்கள் இருவர். அவர்களில் ஒருத்தி இவ்வுலகில் இல்லை. மற்றவளுடைய பிள்ளை தான் இவன். ஜாதகனுடைய தந்தையின் சகோதரபாவத்தைக் கூறுகின்றேம். அவனுக்குச் சகோதரன் இல்லை. ஒரு சகோதரி உண்டு. அவள் நீண்ட காலம் வாழ்வாள்.

6. சுதர்களும் வறுமை காணன் சுந்தரி சுகமாய் வாழ்வள்
அதிபன்தன் தந்தை சேதி வரைகிறே மாஞ் சிவப்பன்
சதியிலா மனத்த ணுகும் சந்தேகம் ஈகை கொஞ்சம்
விதவிதச் செட்டுச் செய்வன் விளைபுலம் சேர்ப்பா னுமே.

6. தனிகர்களான புத்திரர்களை அடைவான். சுகமாக வாழ்வான். மாநிறமுள்ளவன். பிறர்க்குக் கெடுதல் எண்ணுதவன். எவ் விஷயத்திலும் சந்தேகமுள்ளவன். தானம் செய்யும் மனப்பான்மையும் அவனுக்கு உண்டு. பலவித வியாபாரங்களைச் செய்வான். நன்ருக விளையும் நிலங்களைச் சேர்ப்பான்.

7. தந்திர வார்த்தை சொல்வன் தானியச் செட்டுச் செய்வன்
சிந்தையில் மர்மம் கொஞ்சம் தனத்தின் மேல் ஆசை யுள்ளான்
கந்தன்மேல் பக்தி கொள்வன் கரமதில் கோதுமை ரேகை
தந்தையால் தனமும் இல்லம் தானதை விருத்தி செய்வான்.

7. தந்திரமான வார்த்தைகளைப் பேசுவான். தானிய வியாபாரமும் செய்வான். [தானியத்தை அதிகம் செலவு செய்யமாட்டான் என்றும் பொருள் கொள்ளலாம்.] நெஞ்சில் சிறிது கபடமுள்ளவன். பணத்தில் அதிக ஆசைகொண்டவன். சுப்பிரமணிய சுவாமியினிடத்தில் பக்தி பூண்டவன். கையில் கோதுமை ரேகை தானிய ரேகை இவற்றை உடையவன். தந்தையின் பணமும் வீடும் இவனுக்குக் கிடைக்கும். இவன் அவைகளை விருத்தியும் செய்வான்.

8. வித்தையும் கொஞ்ச முள்ளான் விவேகியாம் எவர்க்கும் நண்பன்
பத்தினி இருவ ராகும் பகவானின் பக்தி கொஞ்சம்
சுத்தவான வறுமை காணன் துறவோர்கள் பக்தி பூணன்
நத்தினேர்க் குதவி செய்வன் நற்சித்திர இல்லம் செய்வன்.

8. சிறிது கல்வி கற்றவன். கல்வி சிறிதாக இருப்பினும் பகுத்தறிவு அதிகம் படைத்தவன். எல்லோருக்கும் நண்பனுகவே நடந்து கொள்வான். இவனுக்கு இரண்டு மனைவிமார்கள். கடவுள் பக்தியிலும் சிற்சில சமயங்களில் ஈடுபடுவான். சுத்தமானவன். வறுமையே இல்லாதவன். துறவிகளிடம் அதிக பக்தி இல்லாதவன். தன்னை நாடியவர்களுக்கு உதவி புரிவான். அழகியவொரு நல்ல வீடு நிர்மாணிப்பான்.

9. மூலச்சூ டுடைய னுகும் முன்கோபம் வெளிக் காட்டா தான்
பால்தயிர் பிரிய னுகும் பந்துவும் புகழ வாழ்வன்
காலத்தை அறிந்து சொல்வன் கண்முக வசியம் கொள்வன்
சாலவே சுகபுசிப்பன் சதுஷ்பாதம் விருத்தி யல்பம்.

9. மூலச்சூடு உள்ளவனுக இருப்பான். கோபத்தை வெளிக்குக் காட்டாதவன். பால் தயிர் இவைகளில் விருப்பமுள்ளவன். உறவினர் கொண்டாடும்படி வாழ்வான். எந்தச் சமயத்தில் எதைப் பேச வேண்டுமோ அதையே பேசுவான். மதிப்பு வாய்ந்த பெரியோர்களை தன் வசப்படுத்துவான். சுகங்களை நன்ருக அனுபவிப்பான். கால்நடைகள் இவனிடம் விருத்தியாகா.

10. இந்நெறி உடையா னுக்கு இவனுமே உதிப்பா னுகும்
அன்னவன் சேஷ்ட னுக அறைகிறேம் துணைவ ருறில்
கன்னிகை யிரண்டு என்றேம் காளையும் ஒருவ னுகும்
பின்துணை பெண்பா லாகப் பேசுவோம் தீர்க்க மாக.

10. இப்படிப்பட்ட குணமுள்ள தந்தைக்கு இக்கடக லக்கின மகவு குழந்தையாகப் பிறந்திருக்கிறன். இவன் குடும்பத்திற்கு ஜ்யேஷ்டன். இவனுக்கு உடன்பிறந்தவர் அறுவர். அவர்களில் இரு பெண்கள் இவனுக்கு

அடுத்தபடியாக பிறப்பார்கள். அவர்களுக்குப் பிறகு ஒரு சகோதரன். அவனுக்குப் பிறகு ஒரு சகோதரி. ஆக இந் நால்வரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள்.

11. அதற்குப் பின் சேத மெய்தும் அதன்பின்ஆண் தீர்க்க மெய்தும்
சதமாகும் பெண்பா லொன்று சாற்றுவோம் துணைவர் சேதி
பதமான வார்த்தை சொல்வன் பகையோரை வசியம் கொள்வன்.
விதவிதச் செட்டுச் செய்வன் விசேஷகல் விகளு முள்ளான்.

11. அவர்களுக்குப் பிறகு பிறக்கும் குழந்தை நீடிக்காது. அடுத்து பிறக்கும் ஓர் ஆண் குழந்தையும் அதன் பிறகு ஒரு பெண் குழந்தையும் பிறந்து தீர்க்கமாக வாழும். ஆக இந்த ஜாதகனுக்கு ஆறு உடன் பிறந்தவர்கள். நயமாக வார்த்தைகளைப் பேசுவான். எதிரிகளைத் தன் வசப்படுத்துவான். பலவித வியாபாரங்களைச் செய்வான். அதிக கல்வியை கற்பான்.

12. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தனமது கொடுக்கல் வாங்கல்
வந்தவர்க் கன்ன மீவன் மருமத்தை வெளிக்காட் டாதான்
முந்திய புகழு மேற்பன் முனிவதைக் காட்டா னுகும்
இந்தவ னுடனே வாழ்வன் இவன் மான் ஒன்றேயாக.

12. தந்தையின் வாழ்க்கையைவிட இவனுடைய வாழ்க்கை மிகச் சிறப்புடன் விளங்கும். வட்டி வியாபாரத்தாலும் பணம் இவனுக்குக் கிடைக்கும். வந்தவர்களுக்கு அன்னமளிப்பான். ரகசியத்தை வெளியிடாதவன். நற்புகழைப் பெறுவான். கோபத்தை வெளியிடமாட்டான்.

13. பாலர்க லாண்பா லொன்று பருகிடும் தீர்க்க மாகச
சீலம்போல் பெண்பால் ரண்டு தீர்க்கமாம் என்று சொல்வோம்
வேலுடை யானின் பக்தி விளைபுலம் விருத்தி செய்வன்
சோலைகள் துறவு செய்வன் சுந்தரன் பலனைக் கேளாய்.

13. இவனுடைய சந்ததியைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஓர் ஆண் குழந்தையும், இரு பெண் குழந்தைகளும் ஜனிக்கும். இம் மூவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி உடையவன். விளையும் நிலங்களை அபிவிருத்தி செய்வான். தோட்டங்களையும் கிணறுகளையும் நிறுவுவான். இந்த ஜாதகனின் பலன்களை மேலும் சொல்லுகிறோம். கேளுங்கள்.

14. மாநிறம் சமதே கத்தன் மருமமில் லாதா னுகும்
தேன்மொழி கூறு வானும் தீரமில் லாத நெஞ்சம்
மனைவியின் மேலே நேயன் மருமசா வறிவா னுகும்
ஈனமாம் குணங்க ளில்லான் இடரென்றோர்க் குதவி செய்வன்.

14. மாநிறமானவன். சரீரம் ஏற்றத்தாழ்வு இன்றி வளர்ந்திருக்கும் ஒரு விஷயத்தையும் மனத்தில் மறைக்காதவன். தேன்போல இனிய மொழிகளைப் பேசுவான். பயந்த சுபாவமுள்ளவன். மனைவியிடம் மிகவும் அன்புள்ளவன். ரஹஸ்யமான வேதாந்த நூல்களை அறிந்தவன். தீய குணங்கள் இல்லாதவன். வாழ்க்கையில் இடையூறுகளை அடைந்து கஷ்டப்படுபவர்களுக்கு உதவிசெய்வான்.

15. இனமேலாய் வாழ்வா னுகும் எதிரியை நாசம் சொல்வன்
தனமதை விருத்தி செய்வான் சான்றோர்கள் பக்தி பூண்பன்
வீணையெண் ணு னெருவ ருக்கும் வீணவம்பில் செல்லா னுகும்
கனமான செட்டு செய்வன் கரமதில் கமல ரேகை.

15. தன் சாதியினரைக் காட்டிலும் மிக்க சிறப்பாக வாழ்வான். சத்துருக்களை அழிப்பான். செல்வத்தை விருத்தி செய்வான். நல்லவர்களிடம் மிகவும் பக்தியுடன் இருப்பான். ஒருவருக்கும் தீங்கை எண்ணமாட்டான். பயனற்ற சண்டைகளில் ஈடுபடமாட்டான். பெரிய வியாபாரத்தைத் துவக்கி நடத்துவான். இவனது கையில் கமலரேகை விளங்கிடும்.

16. தேவதா பக்தி கொள்வன் தீர்த்தயாத் திரையும் செய்வன்
தாவினோர்க் குதவிசெய்வன் தனமது கொடுக்கல் வாங்கல்
பாவத்தில் மனம்வை யாதான் பரிந்துப சாரம் செய்வன்
கொள்ளை விருத்தி யுமுள்ளான் குவலயம் கீர்த்தி யேற்பன்.

16. தெய்வங்களிடம் பக்திகொண்டவன். பல புண்ணிய தீர்த்தங்களுக்குச் சென்று நீராடுவான். உதவியை நாடுபவர்களுக்கு மனமுவந்து உதவி செய்வான். வட்டி வியாபாரமும் செய்வான். [அதுவும் இவனுக்கு ஒரு ஜீவனோபாயமாகும் என்பது கருத்து] பாவச்செயலில் சிறிதும் மனத்தைச் செலுத்தமாட்டான். உபசாரங்களைப் பரிவுடன் செய்யும் இயல்புள்ளவன். இவன் தான தருமங்களில் பொருள்களை ஏராளமாகச் செலவழித்தாலும் மீதமுள்ள பொருள் மிக்க விருத்தியை அடையும். நல்ல புகழ் உள்ளவனுகவும் இருப்பான்.

17. மணமது பதினே ழாண்டில் வடகீழ்ப்பால் மாதரு வர்க்கம்
அனையவே மாது சேரும் அவன்குணம் மாநிறத் தள்
பிணையான குணமில்லாதாள் பிஞ்ஞகன் பக்திகொள்வள்
குணமதை வெளிகாட் டாதாள் சிறுத்தவர்க் குதவி செய்வள்.

17. இவனுக்குப் பதினேழாவது வயது நடைபெறும்போது விவாஹம் நடக்கும். பெண் வடகிழக்குத் திசையில் தாய்வருக்கத்தில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணங்களைப்பற்றிச் சொல்லுகின்றோம். மாநிறமுள்ளவள். கெட்டகுணம் இல்லாதவள். சிவபிரானிடம் பக்திகொண்டவள். தன்னிடம் உள்ள நற்குணங்களைப் பிறர் அறியாவண்ணம் நடந்துகொள்வாள். [தனது பெருமையை வெளிக்காட்டமாட்டாள் என்பது கருத்து] எளியவர்களுக்கு உதவிபுரிவாள்.

18. பால்பாக்கிய முடைய னாகும் பகையதை மனத்தில் வையாள்
சீலவாள் வயது தீர்க்கம் ஜயமுனி கூறுகின்றார்
நீலிக ளிரண்டு என்றோம் நேருங்கா ரணங்கள் சொல்வோம்
காஹூன னேழோனுகிக் கனமுள சரத்தில் நிற்க ;

18. இவன் மனைவி பால்பாக்கியமுடையவள். துவேஷபுத்தி இல்லாதவள். நற்சிலமுள்ளவள். நீண்ட ஆயுளுடன் சுகமாக வாழ்வாள். ஜய முனிவர் கூறுகின்றார். இவனுக்கு இரு மனைவிமார்கள். அதற்கான காரணங்களைச் சொல்லுகின்றோம் களத்திர ஸ்தானம் என்று சொல்லப்படும் ஏழாவது வீட்டிற்கு உடையவன் சனியாகி, அவனும் சர ராசியான துலாத்தில் இருப்பதாலும்.

குறிப்பு.—ஜோதிஷ சாஸ்திரத்தில் பன்னிரண்டு ராசிகளையும், முறையே 1 சரம் 2 ஸ்திரம் 3 உபயம் எனப் பிரித்திருக்கிறார்கள். அதன்படி மேஷம் சரம், விருஷபம் ஸ்திரம், மிதுனம் உபயம். இவ்வாறே மேலும் காண வேண்டும். ஆகவே துலாம் சரராசியாகும்.

19. தரைமக னவரைப் பார்க்கச் சாற்றினேம் தாரம் ரண்டு
இருமனை நேரா தாகும் எப்படிச் சொல்லு மென்னக
குருவுடன் மிரவான் ஞலோன் கூடியே ஏழைப் பார்க்க
ஒருமனை தீர்க்க மென்றோம் உரைக்கிறோ மதற்கு சாக்ஷி.

19. பூமிபுத்திரன் என்று சொல்லப்படும் அங்காரகன் அந்தச் சனியைப் பார்ப்பதாலும், இந்த ஜாதகனுக்கு மனைவிமார் இருவர். தோஷமிருப்பதால் இரு மனைவிமார்களும் நீடித்து வாழமாட்டார்கள் என்று ஏன் கூறக்கூடாது என்று பார்வதி கேட்க, முனிவர் பதில் உரைக்கின்றார். முன் சொன்ன காரணங்களால் களத்திரபாவத்திற்குத் தோஷமிருப்பினும், இலக்கினத்திலிருந்து குரு சூரியன் நான்காமிடத்திற்கு அதிபனுகிய சுக்கிரன் இவர்கள் ஏழாமிடத்தைப் பார்ப்பதால் களத்திரதோஷம் சிறிது விலகுவதால் ஒருமனைவி தீர்க்கமாக விளங்குவாள். தோஷமிருப்பதால் ஒரு மனைவி (மூத்தவள்) விளங்கமாட்டாள். குரு சூரியன் சுக்கிரன் இவர்கள் பார்க்கின்ற விசேஷத்தினுல், மறுபடியும் விவாஹமாகி இரண்டாவது மனைவி நிலைத்துக் குடும்பம் ஸ்திரமாக விளங்கும் என்பது கருத்து.

(வேறு.)

20. இதற்குநே ரிடையாய் ஜாதகசுருதிலெழாம் பாவத்தை பாரு
அதில்சொலும் பலன்கள் இரண்டேழோன் நாலோன் அவர்கள்
[கேந்திரங்களி லிருக்க
மதிமுக மனைவி ஒன்றென்றே காணும் வாக்கினில் யாதுமே ஒன்று
[சதமுட னிருக்கத்
தாரமே ஒன்று சாற்றினேம் முனிவரே யாங்கள்.

20. முனிவர் இந்த ஜாதகனுக்கு இரு மனைவிகள் என்று சொன்னவுடன், மற்றவர்கள் இவனுக்கு ஒரு மனைவிதான் என்று சொல்லிவிட்டு, அதற்கான காரணத்தை சாஸ்திர ஆதாரத்துடன் காட்டுகிறார்கள். அஃதாவது, இரண்டாமிடத்ததிபன், ஏழாமிடத்திற்கு உடையவன் நான்காம் இடத்திற்கு உடையவன் ஆகிய இவர்கள் கேந்திரத்தில் இருந்தால், மனைவி ஒருத்திதான் என்று சோதிடவிதி சாஸ்திரத்தில் ஏழாம்பாவத்தைக் கூறும் அதிகாரத்தைப் பாரும். ஆகவே இவனுக்கு ஒரு மனைவிதான் என்பது. இஃது ஆக்ஷேபணைதான். அவர்களுடைய உண்மையான அபிப்பிராயம் எனக்கருதலாகாது.

21. ஆகிலும் சங்கை மனைவிக்கு இரண்டு அணுகிடும் கண்டமே யாகும்
ஏகாது என்றோம் விபரங்கள் கேளாய் இருபத்தொன் பாண்டினில்
[கர்ப்பம்
பாரமாய் முப்பா னேழினில் அவ்வாறு பகருவோம் மாரகம் காணுந்
தோகையும் கடையில் இவன்முன்னே கண்டம் தோன்றிடும்
[விடைஉரைத் தனமே.

21. முனிவர் கூறுகின்றார். நீங்கள் சொன்ன விஷயம் ஒருவாறு உண்மையாயினும் இவனுடைய இருபத்தொன்பதாவது வயதில் கர்ப்பம் ஏற்பட்டு, அஃது அப்போது மாரகமாகாமல் இவனுடைய முப்பத்தேழாவது வயதில் மாரகம் ஆகும். எவ்விதத்திலும் இவனுக்கு முன்னே மனைவி மரணமடைவதால் களத்திரதோஷம் என்று சொன்னேம்.

(வேறு.)

22. சதர்களும் எழுவர் தோன்றும் சோர்ந்திடும் இலவே என்றோம்
சதமுடன் ஆண்பால் ரண்டு தையலர் அவ்வா றுரும்
இதுநான்கும் தீர்க்க மெய்தும் இச்சுதர் இவன் மேலாக
அதிகமாய் யோக மெய்தும் அம்பிகை யாளே கேளாய்.

22. இவனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். இவனுக்கு ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் சில குழந்தைகள் நஷ்டமாகும். இரண்டு ஆண் குழந்தைகளும் இரண்டு பெண்களும் தீர்க்கமாக வாழ்வார்கள். ஜாதகனைக்காட்டிலும் குழந்தைகள் மிக்க அதிருஷ்டமுள்ளவர்களாக இருப்பார்கள். அவனைக்காட்டிலும் சிறப்புடன் வாழ்வர்கள்.

23. மாதுரு மால் நிறத்தாள் வாததே கத்தா ளாகும்
தீதுகள் வெளிக்காட் டாதாள் சிறப்புள குடும்பி யாவள்
வேதனை யொருவர்க கெண்ணுள் மெல்லிநன் னடக்கை யுள்ளாள்
பாதக மில்லா ளாகும் பரிந்துப சாரம் செய்வள்.

23. ஜாதகனின் தாயினுடைய குணத்தைக் கூறுகின்றோம். அவள் கருத்த மேனியாள். வாததேகம் வாய்ந்தவள். தீதுகளை (கோபம் முதலிய வைகளை) வெளியிடாதவள். இவளது குடும்பம் பெருமையோடு விளங்கும். பிறர்க்குக் கெடுதலை மனத்தினுலும் எண்ணுதவள். நன்னடக்கை உடையவள். பாவம் செய்யாதவள். பிறரை மிக்கப்பரிவோடு உபசரிப்பாள்.

24. தன்துணை ஆண்பால் ரண்டு தையலு மொன்றே தீர்க்கம்
தன்னில்லம் வடகீ ழாகும் சிலதூர மென்று சொல்வோம்
அன்னவர் சேதி யாவு மறைகிறோம் விபரம் ரண்டில்
உன்னத வானைப் பெற்ற உத்தமி கேட்டி டாயே.

24. அவனுக்கு இரண்டு சகோதரர்களும் ஒரு சகோதரியுமுண்டு. அம் மூவரும் தீர்க்கமாக வாழ்வார்கள். அவன் பிறந்த வீடு ; வடகிழக்குத் திசையில் சிறிது தூரத்தில் உள்ளது. அந்தச் சகோதர வருக்கத்தின் வரலாறுகளை இரண்டாம் பாகத்தில் சொல்லப்போகின்றோம். தேவியே ! மேலும் சொல்லுகிறோம். கேளுங்கள்.

25. அவளுடைப் பூர்வம் சொல்வேன் ஆலங்காட் டதற்கு மேற்கில
நவனியில் பேரூர் தன்னில் நாயகி ரெட்டி வம்சம்
இவளுமே பிறந்து மேலும் இடறின்றி குடும்பி யாகித்
தவசிகட் கன்ன மீந்து தன்வரன் மதலை யுண்டாய்.

25. அவளுடைய (தாயின்) முன் ஜன்மத்தைச் சொல்வேன். ஆலங்காடு என்ற கிராமத்திற்கு மேற்கில் உள்ள பெரிய ஓர் ஊரில் இவள் ரெட்டி வமிசத்தில் பிறந்திருந்தாள். அப்பொழுது வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாமல், கணவன் மக்கள் இவர்களை உடையவளாகி, பெரிய குடும்பியாகி, தவசிகளுக்கு அன்னமிட்டும், மற்றைய தருமங்களைச் செய்தும் வாழ்ந்து வந்தாள்.

26. மனமது கபடமின்றி மாரன்தன் முன்னே மாண்டு
கனமுள பிரம்மன் வர்க்கம் காதலீ யிக்கு லத்தில்
சினமிலா வந்தா ளென்றேம் தேவியும் வறுமை காணுள்
அனையவே புருடன் வீணை அம்மக ளுலில் தோன்றும்.

26. மனத்தில் கபடமில்லாமல் தூய மனப்பான்மையோடிருந்த இவள், கணவனுக்கு முன்பு மாண்டு, இக்குலத்தில் பிறந்து, சினம் முதலிய கெட்ட குணங்கள் இல்லாதவளாகவும் வறுமையற்றும் இருக்கின்றுள்.

27. இருபது எட்டு ஆண்டில் ஏறுமாதத்தி லேதான்
வருமன்னை கண்ட மென்றேம் மறலியைக் காணு ளாகும்
குருதசை மதியும்புத்தி கூடிடு மந்தக் காலம்
திருமகன் தீர்க்க மாகும் செப்புவோ முப்பா னலில் ;

27. இந்த ஜாதகனுக்கு இருபத்தெட்டாவது வயது நடக்கும்போது விருஷப மாதத்தில் இவனது அன்னைக்கு ஒரு பெரியகண்டம் வரும். ஆனல் மரணமடையாள். அப்பொழுது இந்த ஜாதகனுக்கு குருதசையில் சந்திர புக்தி நடக்கும். அப்பொழுது அவள் சாகாமல், முப்பத்து நான்காவது வயதில் ;

28. காரியில் காரி புத்தி கார்த்திகை மாதம் தன்னில்
மாருது என்று சொல்வோம் வயிறுவே தனையே காணும்
கூறுவோம் பின்ஜன் மத்தைக் கோகர்ண மதனி லேதான்
நாரியு மிக் குலத்தில் நல்குவாள் சுகமுள்ளோளாய்.

28. சனிதசையில் சனி புக்தி நடக்கும்போது, கார்த்திகை மாதத்தில் வயிற்றுவலியாலும், வயிற்றுப் போக்காலும் நிச்சயமாக மரணமடைவாள். இவளுடைய மறுபிறவியைக் கூறுவோம். கோகர்ணமென்ற க்ஷேத்திரத்தில் இதே குலத்தில் பிறந்து சுகமுடன் வாழ்வாள்.

29. தந்தையின் பூர்வம் சொல்வேன் சம்புகேச் வரத்தி லேதான்
வந்தனன் வைசியச் சேயாய் மாநிலம் செட்டுச் செய்து
வந்தவர்க் கன்ன மீந்து வளமுள குடும்பி யாகி
அந்தியில் சல்லிய முண்டாய் அதிகமாய் வறுமை பூண்டு ;

29. தந்தையினுடைய பூர்வஜன்மத்தைப் பற்றிக் கூறுவோம். சம்புகேசுவரத்தில் வைசியகுலத்தில் பிறந்திருந்தான். வியாபாரம் செய்து ஜீவித்தான். வந்தவர்களுக்கு அன்னதானம் செய்து, செழிப்பான குடும்பியாக இருந்தான். கடைசியில் கடனேற்பட்டு, மிகவும் வறுமைக்குள்ளாகி ;

குறிப்பு.—சம்புகேசுவரம் திருச்சிக்குச் சமீபத்திலுள்ள ஒரு சிவஸ்தலம். திருவானைக்காவென்றும் கூறுவர்.

30. கடவுளைத் தியானம் செய்து கனத்ததோர் தலங்கள் சென்று
திடமுள சேது புக்கிச் சென்றனன் உள்ளூர் தானும்
உடனொரு சைவன் சேயான் உதவினுன் வணிபம் செய்யக்
கடனது ஈயா தாகிக் காலன்தன் பதிக்குச் சென்று ;

30. கடவுள் தியானம் செய்தும் பல புண்ணியஸ்தலங்களுக்குச் சென்று கடவுளைத்தரிசித்தும், சேதுவில் நீராடியும், தன் ஊருக்குத் திரும்பி வந்து சேர்ந்தான். உடனே ஒரு சைவன் இவனுக்கு, வியாபாரத்தை மறுபடியும் தொடங்கிச் செய்வதற்காகப் பணம் உதவினன். ஆனல் அந்தக் கடன் திருப்பிக்கொடுக்கப்படாமலிருக்கும்போதே இவன் (தந்தை) மரணமடைந்து ;

31. கஞ்சனுல் வரையப் பட்டுகாவல னிச்சென் மத்தில்
மிஞ்சின குலமு தித்தான் மேதினில் வறுமை காணுன்
தஞ்சமா யிருப்பானேழில் சதானரி மாதம் தன்னில்
நஞ்சுபோல் பிணியு மெய்தும் நாடாது காலன்தானே.

31. பிரம்மதேவனுல், சிறந்த இக்குலத்தில் இப்பொழுது பிறப்பிக்கப் பட்டிருக்கிறன். ஜாதகனுக்கு இருபத்தேழாவது வயதில்..............
இவனுக்கு (ஜாதகன் தந்தைக்கு) விஷம்போல் உயிரைப் போக்கும் கொடிய வியாதி ஒன்று தோன்றும். ஆனல் அப்பொழுது அவன் இறக்க மாட்டான்.

32. முப்பது ஒன்று ஆண்டில் மீனமா தத்தி லேதான்
செப்புவோம் தந்தை கண்டம் செம்பொன்னின்தசைகாலத்தில்
அப்பணி புத்தி காலம் அறைகிறோம் கண்டம் தானும்
தப்பித மில்லை வார்த்தை சங்கரி கேட்டி டாயே.

32. ஜாதகனுக்கு முப்பத்தொன்றாவது வயதில் மீன மாதத்தில் ஜாதகனின் தந்தை மரணமடைவான். அந்தச் சமயம் ஜாதகனுக்குக் குருதசையில் ராகு புக்தி நடைபெறும். நாங்கள் சொன்ன வார்த்தைப்படியே நடக்கும். தேவியே ! மேலுங் கேளுங்கள்.

33. மறுஜன்மம் பாண்டி நாட்டில் வளமுள கங்கை சேயாய்த்
திருமகள் விலாசம் பெற்றுச் செய்நிலம் கிருஷி செய்து
பெருமையாய் வாழ்வா ளுகும் புகன்றது தப்பா தாகும்
அருமறை முடிவி லாடும்பிகையாளே கேளாய்.

33. மறுஜன்மத்தில் இவன் பாண்டிய நாட்டில் க்ஷேமம் பொருந்திய ஒரு வேளாளகுலத்தில் பிறந்து, லக்ஷ்மி வாசம் வாய்ந்தவனாக வாழ்வான். நன்றாக விவசாயம் செய்து புகழுடனும் மதிப்புடனும் விளங்குவான். அருமையான வேதங்களின் சிகரமாகிய உபநிஷதங்களில் சொல்லப்படும் பெருமையுள்ள தாயே ! மேலும் கேளுங்கள்.

34. ஜாதகன் பூர்வம் சொல்வன் சம்புகேச் வரத்தி லேதான்
போதன முடைய சைவ புதல்வனு யுதித்து இன்னேன்
மாதவர்....................வள்ளல் மேல் பக்தி பூண்டு
போதனம் சிலர்க்குத் தந்து புகலுள்ள குடும்பியாகி ;

34. ஜாதகனுடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவன் சம்புகேசுவரத்தில் சைவ வமிசத்தில பிறந்து, ஈசனிடம் பக்தி கொண்டு இருந்தான். சிலர்க்குக் கடனாகப் பணம் கொடுத்து உதவிபுரிந்தான். நற்புகழ் பெற்ற குடும்பியாகவும் திகழ்ந்தான்.

35. அறமன முடைய னுகி அச்சென்மம் பலமில் லாமல்
மறலியின் பதிக்குச் சென்று மறைவயன் வரையப் பட்டு
உறைந்தனனிக்கு லத்தில் உத்தமி புகலு கின்றாள்
திருமகன் முன்ஜன் மத்தில் சம்புகேச் ரவத்தி லேதான் ;

35. அச் ஜன்மத்தில் தருமத்திலேயே பற்றுள்ளவனாக வாழ்க்கை நடத்தினன். பிறகு பலனை அடையாமலேயே யமனுலகம் ஏகினன். இப்பொழுது பிரமதேவனால் இங்கு இக்குலத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறான். இவ்வாறு முனிவர் சொன்னவுடன், பார்வதிதேவி கேட்கலுற்றாள். இந்த ஜாதகன் முன்ஜன்மத்தில் சம்புகேசு வரத்தில் ,

36. உதித்தனன் பவமில் லாமல் உறைந்தவ னிச்ஜன் மத்தில்
சதிசெயும் பூவைசி யனுக்கு ஜனித்தகா ரணங்க ளென்ன
நிதியது முன்ஜன் மத்தில் நேர்ந்தனன் வைசிய னுக்கு
அதுகடன் வாங்க வேண்டி அனுகின னிவனே யென்றோம்.

36. பலனை அடையாமலேயே இறந்து, பிறகு இக் குலத்தில் பிறந்திருக்கிறான், என்று சொன்னீர்கள். இவனுக்கு (வைசியனுக்கு) மகனாகப்பிறப்பதற்குக் காரணம் என்ன ? இவ்வாறு கேட்டதற்கு முனிவர் பதில் கூறுகின்றார், முன்ஜனமத்தில் ஒரு வைசியன் ஜம்புகேசுவரத்தில் வியாபாரம் செய்து, நஷ்டத்தை அடையவே பணம் இல்லாதவனாக இருக்கும்போது, ஒரு சைவ மகன், அவனுக்குப் பணம் கொடுத்து உதவி, வியாபாரத்தை நடத்தச் சொன்னான் என்று (முப்பதாவது பாட்டில்) சொன்னோம். கடன் வாங்கிய வைசியனோ கடனை அடைக்காமலேயே இறந்தான் என்றும் சொன்னோம். முன்ஜன்மத்தில் கடன்கொடுத்த சைவன், கடன்பட்டிருந்த வைசியனுடைய சொத்தை (கடனுக்குப் பதிலாக) அடைந்து, அனுபவிப்பதற்காகவே இந்த ஜன்மத்தில் வைசியனுக்கு (தந்தைக்கு) மகனாகப் பிறந்திருக்கிறான்.

37. வந்தவன் யோகச் சேதி வரைகிறோம் விபர மாகச்
செந்திரு லக்ஷ்மி யோகம் சேர்தள பதியோ கந்தான்
விந்தைசா மரையோ கந்தான் விளங்கிடு மூன்று யோகம்
அந்த வோர்பலனை சொல்வேன் அநேக வாணிபங்கள் செய்வன்.

37. மேலே சொன்ன காரணத்தினால் பிறந்திருக்கும் இக் கடகலக்கின மகனுடைய யோகத்தின் வரலாறுகளைச் சொல்லுகின்றோம். லக்ஷ்மி யோகம், தளபதி யோகம், சாமர யோகம் என்று மூன்று யோகங்கள் இவனுக்கு விளங்குகின்றன. அம் மூன்று யோகங்களின் பலன்களைச் சொல்லுகின்றோம். பலவித வியாபாரங்களைச் செய்வான்.

38. பலசகா யங்கள் செய்வன் பாருக ளதிகம் சேர்ப்பன்
நலமுளோர் நேசம் கொள்வன் நற்சக டுகளு முள்ளான்
விலைமா தர் விருப்பம் கொள்ளான் வீண்பழி யேற்கா னுகும்
குலவிடு மாது தானும் கூற்றனை யுதைத்தோ னுககு ;

38. பலபேருக்குதவி செய்வான். அதிக நிலங்களைச் சேர்ப்பான். நல்லவர்களுடைய நட்பு இவனுக்கு இருக்கும். சிறந்த வண்டி வாகனங்கள் உடையவனாகவும் இருப்பான். பிற பெண்டிரிடம் மனம் வைக்காதவன். இவனுக்கு வீண் அவதூறுகள் ஏற்படா. மார்க்கண்டேயனைக் காப்பதற்கு யமனை உதைத்துத் தள்ளிய சிவ பெருமானுக்கு ;

39. பணிவிடை செய்வானுகும் பலசோலை கூவல் உண்டு
தணிவான குணத்தா னுகும் சஞ்சல மடையா னுகும்
கனமுள இரண்டு இல்லம் கட்டுவன் மூவைந் தாண்டில்
வினையிலா நாற்ப தாண்டில் மேவிடும் இல்லம் தானே.

39. அநேகப் பணிகளை ஆற்றுவன். பலசோலைகளையும் கிணறுகளையும் நிறுவுவான். சாந்தகுணம் வாய்க்கப் பெற்றவன். எக் காரியத்திலும் சீக்கிரம் முடிவிற்கு வராமல் சஞ்சலப்படுவான். இவன் சிறந்த இரு வீடுகளைக் கட்டுவான். ஒன்று பதினைந்தாம் வயதில் ஏற்படும். மற்றொன்று நாற்பதாம் வயதில் வரும்.

40. அரசர்கள் பேட்டி கொள்வன ஆறிரண் டாயிரம் பொன்
நறுமலர்க் கந்த மிஷ்டன் நற்றுசு செட்டுச் செய்வன்
திருமகள் நாற்ப தாண்டில் சாடிமா தத்திலே தான்
குறைபக்கம் துவா தசி கூற்றன் தன் பதிக்குச் செல்வன்.

40. மேன்மை தங்கிய அரசர்களின் தரிசனம் கிடைக்கும். பன்னிரண்டாயிரம் பொற் காசுகளைச் [உத்தேச மதிப்பு ரூபாய் லக்ஷத்திருபதாயிரம்] சேர்ப்பான். வாசனை பொருந்திய புஷ்பம் சந்தனம் முதலியவைகளில் விருப்பமுள்ளவன். பெரிய வஸ்திர வியாபாரம் செய்வான். இந்த ஜாதகன் மாசி மாதத்தில் தேய் பிறைத் துவாதசியில் எமனுலகம் ஏகுவான்.

41. இதுமட்டில் ஜாத கர்க்கு இலகா தோ மார கங்கள்
விதவித பணிகள் காணும் வேந்தனும் புகரும் ஜன்மப
சதமுட னிருப்ப தாலே சாற்றிய வயது தீர்க்கம்
புதன் தசை ராகு புத்தி பொருந்திடு மந்தக் காலம்.

41. இவ்வளவு வயது வரையில் ஜாதகனுக்கு ஒரு கண்டமும் ஏற்படா தோ என பார்வதி கேட்க, முனிவர் பதில் உரைக்கின்ருர். பலவித பிணிகள் தோன்றும். ஆயினும் சுபகிரஹங்களாகிய குருவும் சுக்கிரனும லக்கினத்தில் இருப்பதால் வந்திடும் கண்டங்கள் சூரியனைக் கண்ட பனி போல நீங்கி, நாங்கள் சொன்ன வயது வரையில் சுகமாக வாழ்வான். ஜாதகனுக்கு மரண மேற்படும் காலத்தில் புதன் தசையில் ராஹு புக்தி நடைபெறும்.

42. பின்ஜன்மம் காசி தன்னில் பிறப்பதும் பிரம்ம சேயாய்ச்
சந்திரன் கலே யணிந்த சங்கரன் தனைப்பூ சித்து
அன்னவன் தேவ ராக அருளுவா னிந்தப் பாலன்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

42. இவனுடைய பின் ஜன்மத்தைக் கூறுகின்ருேம். இவன் மறு பிறப்பில் காசியில் பிராமணக் குலத்தில் பிறந்து, சந்திரனைத் தலையில் அணிந்த பரமசிவ பெருமானை இடைவிடாது பூசித்து, கடைசியில் மரண மடைந்து, கைலாயத்தில் பூதகணங்களில் ஒருவனுக விளங்குவான். விநாய கரைப் பெற்ற தாயே ! சொல்லுகிருேம் கேளுங்கள்.

43. பாலகன் ஜனிக்கும் காலே பணிதசை பதினு ருண்டும்
சாலவே பலனைச் சொல்வோம் தன்னுனை விருத்தி யாகும்
வேல்விழி அன்னை தர்தை விளங்கிய செட்டு ஓங்கும்
கோலமாய்ப் பந்து சூதம் கூறுவோம் விபரம் ரவை டில்.

43. இந்த ஜாதகன் ஜனிக்கும்போது ராஹுதசையில் பாக்கி வருஷங்கள் பதினுறு. மீதமுள்ள ராஹு தசையின் பொதுப் பலன்களைச் சொல்லுகின்ருேம். சகோதர விருத்தியுண்டு. தாயும் தந்தையும் விளங்குவார்கள். நல்ல ஆரோக்கியமும் செல்வாக்கும் இருக்கும். வியாபாரம் ஓங்கி வளரும். பந்துக்கள் மரணத்தால் தீட்டும் துன்பமும் நேரிடும். இவைகளைத் தவிர மற்ற விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லப் போகின்ருேம்.

வேறு.

44. இருசனி யுச்ச பலனது எவ்வாறு
கூறுவீர் விபரமாய் முனியே
குருதசை தன்னில் மூனைந்தாண்ட தனில்
கூடிடும் பழைய நாள் பொன்னும்
பெருமையும் புகழும் அணிகிடும் என்ருேம்
பேசுவோம் விபரமாய்ப் பின்பால்
அருமறை முடிவி லாடும் தாயே
அறுமுகன் கிருபையு முண்டாகும்.

44. முனிவரே ! இந்த ஜாதகத்தில் சனி நான்காமிடத்தில் உச்சமாக விளங்குகிருனே ! அதன் பலனை விவரமாகச் சொல்லுகள், எனப் பார்வதி கேட்டாள். முனிவர் சொல்லுகின்ருர். சனி நான்காமிடத்தில் உச்சனுக இருப்பதால் குருதசையில் பழைய காலத்துப் பொற் காசுகள் [புதையல்] இவனுக்குக் கிடைக்கும். பெருமையும் புகழும் ஏற்படும். ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின் கிருபையும் வாய்க்கும். மேலான வேதங்களின் சிகரங்களாகிய உபநிஷதங்களில் நர்த்தனம் செய்யும் உமா தேவியே ! இவ் விஷயங்களை இரண்டாம் பாகத்தில் விவரமாகப் பேசப் போகின்ருேம்.

ஜாதகம் 20

1. மதியும் குருவும் சாடியுற
   மாலும் பரிதி சீயமதில்
   வீதியுள் கொச்சை புகர்கன்னி
   விடமு மானில் சேய்மேடம்
   பதியும் கொண்டால் பலனெவ்வாறு
   பகர்வீர் முனியே விபரமதாய்த்
   துதிசெய் வசிஷ்டர் தான்சொல்லுவார்
   தோன்று மாண்பால் ஜனனமுறும்.

	செவ்வாய் சனி		
சந்திரன் குரு	இராசி சக்கரம்		லக்கினம் கேது
ராகு			புதன் சூரியன்
			சுக்கிரன்

1. சந்திரன் குரு கும்பத்திலும், புதன் சூரியன் சிம்மத்திலும், சனி மேஷத்திலும் சுக்கிரன் கன்னி ராஹு மகரத்திலும், கேது கடகத்திலும், செவ்வாய் மேஷத்திலுமாக இருந்த, இலக்கினம் கடகமுமாக உள்ள இந்த ஜாதகத்தின் பலனை விவரமாகக் கூறுங்கள் என பார்வதி கேட்க, வசிஷ்ட முனிவர் சொல்லுவார். இக் கிரஹ நிலையில் ஆண் குழந்தைத் தோன்றும்.

2. அதுவே வடபால் வீதியது
   அருகன் வாடை மேல்பாலில்
   துதிக்கை மாரி தான்தோன்றும்
   சிவன்கோ ஷ்டம் கீழ் ப்பால்கெடுதி
   சதிராய் வடகீழ் காளியுமே
   சிற்று ராகும் பிரம்மகுலம்
   இதுவே மூன்றும் ஜனனமுமாய்
   இயம்ப லாகும் ஏந்திழையே.

2. வீதி தெற்கு வடக்காக அமைந்திருக்கும். ஜனித்திருக்கும் வீட்டிற்கு மேற்குத் திசையில் சமணர் வீதி இருக்கும். கீழ்த் திசையில் விநாயகர் மாரியம்மன் பரமசிவன் இவர்களது கோயில்கள் இருக்கும். வட

கிழக்குத் திசையில் காளி கோயிலுண்டு. இவ்வாறு அடையாளமுள்ள சிறிய ஊரில் பிராம்மண ஜாதியில் இந்த சாதகன் குடும்பத்தில் மூன்றுவது குழந்தையாக ஜனித்திருப்பான்.

3. ஏந்தும் அன்னை தந்தைதுணை
   எய்தும் பாரி சுதர்யோகம்
   சூழ்ந்த குடும்பம் யோகமெலாம்
   குறிப்போ மிந்நூல் கோதையரே
   வேந்தள் தந்தை குணமதனை
   விளம்பும் சாந்தம் விவேகியுமாம்
   சேர்ந்தோர் தம்மைக் காத்திடுவன்
   தீர மனமு மில்லாதான்.

3. தேவியே! இந்த ஜாதகனின் தந்தை, அன்னை, சகோதரர், மனைவி, புத்திரர் இவர்களைப் பற்றியும், இவனது குடும்ப யோகங்களையும் இந்நூலில் சொல்லப் போகின்றோம். முதலில் ஜாதகனின் தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். சாந்தமானவன். விவேகமுள்ளவன். தன்னை வந்தடைந்தவர்களை ஆதரிப்பான். பயந்த சுபாவமுள்ளவன்.

4. தானே யிரண்டு கல்விமிகும்
   சரச வார்த்தை தயவாளி
   ஈனமில்லாதான் இருசிகப்பன்
   இதிகாசங்கள் தனையறிவன்
   ஊன மில்லாத தேகியுமாம்
   உபதேசங்கள் தான் செய்வன்
   மானே கிரகம் தானறிவன்
   வாக்குத் தவறான் மாடுவிருத்தி.

4. இரண்டு விதமான கல்விகளை (இரு பாஷைகளை)க் கற்றிருப்பான். நயமான வார்த்தைகளைக் கூறுவான். தயை உள்ளவன். கெட்ட குணங்கள் இல்லாதவன். மாநிறமுள்ளவன். ராமாயண மஹாபாரதங்களை அறிந்தவன். ஏற்றத் தாழ்வு இல்லாத உடல் அமைந்தவன். தருமங்களைப் பிறர்க்கு உபதேசம் செய்வான். இவனுக்குச் சோதிட சாஸ்திரமும் வரும். தான் சொன்னபடியே நடப்பான். இவனிடம் கால் நடைகள் விருத்தியடையும்.

5. விருத்தி நிலமும் சகலர்க்கு
   மேன்மை சொல்லன் ஈகையுள்ளன
   திருத்த மான வார்த்தையுளன்
   சிலர்க்குக் கருமங்கள்செய்வன்
   பெருத்த புத்தி வறுமையிலான்
   பிழையென்ற வர்க்கு மெண்ணுதான
   கருத்த மனத்தோர் தான்சேரான்
   கடந்தோர்க் கன்னம்தானீவன்.

5. நிலங்களையும் விருத்தி செய்வான். எல்லோரைக் காட்டிலும் சிறந்தப் பேச்சாளனுக இருப்பான். தானம் செய்யும் இயல்புள்ளவன். அழுத்தம் திருத்தமாகப் பேசுவான். சிலருக்கு இவன் ஈமச் சடங்குகளைச் செய்ய நேரும். உதாரணமான மனப்பான்மை படைத்தவன். வறுமை இல்லாதவன். பிறர்க்குக் கெடுதலை எண்ணுதவன். கபடமுள்ளவர்களிடம் நட்பு வைத்துக் கொள்ளமாட்டான். வந்த விருந்தாளிகளுக்குப் பரிவுடன் அன்னமிடுவான்.

வேறு.

6. சொன்னவிக் குணத்தா னுக்குத் துணைவர் தோன்றிடும் பஞ்ச
[மென்றேம்
கன்னிமார் காணுன் காளைகள் கனக்கா திருதிய மென்றேம்
மன்னிய இரண்டு விருத்தியே யாகும் வரைந்ததி லொருவனுக்
[கோங்கே
பின்னமா மென்றேம் மத்தியில் அவனும் புகுவனும் காலன்தன்
[பதிக்கு.

6. இப்படிப்பட்ட குணமுள்ளவனுக்கு ஐந்து சகோதரர்கள் பிறப்பார்கள். சகோதரி இல்லை. அந்த ஐவரில் மூன்று சகோதரர்கள் விருத்தியாக மாட்டார்கள். [குழந்தையாக இருக்கும்போதே இறப்பார்கள் என்பது கருத்து.] மற்றைய இருவரும் விருத்தியாகும் காலத்தில் ஒரு சகோதரன் மத்திய வயதில் இறந்துவிடுவான்.

7. மற்றொரு துணையும் சுகமுடன் சுதரும் வாழ்குவார் எனஉரைத்
[தனமே
வித்தகன் பாலன் சேதியைப் புகல்வோம் மேவிடும் கல்வியு மிரண்டு
புத்திமான் பூமி விருத்தியு முடையன புவிராசர் பேட்டியும்
[கொள்வன்
பற்றிடும் கிராமச் செட்டுமே யென்றேம் பண்ணுவான் புரோகிதத்
[தொழிலும்.

7. ஆகவே ஒரு சகோதரன் மாத்திரம் மனைவி மக்களுடன் சுகமாக நீண்ட காலம் வாழ்வான். இப்பொழுது ஜாதகனின் யோகங்களைச் சொல்லுகின்றேம். இரு கல்விகளைக் கற்பான். மிக்க புத்திசாலியாக இருப்பான். பூமிகளை அபிவிருத்தி செய்வான். அரசர் தரிசனமும் இவனுக்கு ஏற்படும். கிராமத்தில் வியாபாரம் செய்வான். புரோகிதத் தொழிலையும் நடத்துவான்.

8. தந்தைநாள் பூமிதனை விருத்தி செய்வன் தாட்சிணியன் மனவர்மம்
[கொஞ்சமுண்டு
நிந்தைகள் ஏற்கான் சல்லியமே காணுன் நினைத்தகாயரிய மதை
[முடிப்பன்
சந்தேக முடையன் பணையோர்கள் விருத்தி சாந்தவான் சகடுகள்
[ஏற்பன்
நொந்தபேர்க் குதவி செய்திடு வானும் நிகர்முக வடிவுமே காணும்.

8. பிதுரார்ச்சிதமான நிலங்களைச் சீர்திருத்துவான். தாக்ஷிண்ய குணமுள்ளவன். சிறிது கபடமுடையவன். எவரும் இவனை நிந்திக்க மாட்டார்கள். கடன் தொந்தரவும் இராது. தான் எண்ணிய காரியங்களை

நிறைவேற்றுவான். சந்தேக மனத்தனுவன். உழவுகாளைகளை விருத்தி செய்வான். சாந்தகுணமுள்ளவன். வண்டி முதலிய வாகன வசதிகள் உடையவன். கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்வான். முகத்தில் விசேஷப் பொலிவு உடையவனுகவும் இருப்பான்.

9. வாட்டடங் கண்ணியார் களின்மோகன் மனமது அலைச்சலுமுண்டு
போட்டி பொல்லாப்பு ஞாதியால் நேரும் பின்ஜயம் செய்வனும்
[தாயே
தாட்டிக மனத்தன் சற்சன ரிஷ்டன் தன்துணை ஆணது ஒன்று
தீட்டுவோம் முன்னேன் அவன் குணம் புகல்வோம் தீரனும் வர்மமு
[முடையன்.

9. அழகிய பல பெண்களிடம் மையல் கொள்வான். மனத்தில் சஞ்சலமும் உண்டு. பங்காளிகள் இவனுடைய முயற்சிகளில் போட்டி இடுவார்கள். அவதூறும் சொல்லுவார்கள். ஆனுல் கடைசியில் இவன் வெற்றியைக் காண்பான். தாராளமான மனப்பான்மை படைத்தவன். நல்லவர்களின அன்பிற்குப் பாத்திரமானவன். இவனுடைய சகோதரபாவத்தைச் சொல்லுகின்றேம். சகோதரன் ஒருவன்தான் உண்டு. அவன் இந்த ஜாதகனுக்கு மூத்தவனுவன். அந்தச் சகோதரனுடைய குணத்தைச் சொல்லுகின்றேம். மிக்க தைரியம் உள்ளவன். நெஞ்சில் சிறிது கள்ளமுடையவன்.

10. குலதொழில் புரிவான் குணமது இரண்டு
குறிப்பினில் கொடுமையே காணும்
பணையோர்களை விருத்தி பலருக்கு நல்லன்
பத்தினி குடதிசை நேரும்
புலவன்போல் வார்த்தை புத்திர ரிரண்டு
புகலுவோம் ஆணது வரகத்
தலைவிமார் அவ்வாறு தீர்க்கமா மென்றேம்
சந்தேக மனத்தனும் தாயே.

10. குலத் தொழிலைச் செய்வான். அவனிடம் நற்குணங்களும் கெட்ட குணங்களும் உண்டு. தோற்றத்தில் கொடியவன்போல் காணப்படுவான். உழவுக் காளைகளை நன்ருக வளர்ப்பான். பலருக்கு நல்லவனுகவே நடந்துக் கொள்வான். மேற்குத் திசையிலிருந்து அவனுக்குப் பாரியை வருவாள். புலவர்கள்போல பேசுவதில் ஆசை உடையவன். அவனுக்குப் புத்திரர்கள் இருவர். அவ்வாறே பெண்களும் இருவர். இந்நால்வரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். எப்பொழுதும் அவன் சந்தேகப்படுவான்.

11. தாய்ப்பகை யுண்டு தரித்திரம் காணுன
தலவாசம் செல்லுவ னென்றேம்
ஆயவே வயது தீர்க்கமா மென்றேம்
அதற்குமுன் துணைவி பெண் ஒன்று
மாயமாய் நசிக்கும் விருத்தியும் காணுன்
மாதுரு சேதியைப் புகல்வோம்
தூயநன் மனத்தாள் சிவந்திடு மேனி
துறவிகட் கன்னமு மீவள்.

11. தாயிடம் பகைமையோடு இருப்பான். வறுமை இல்லாதவன். பல புண்ணிய தலங்களுக்கு யாத்திரை செய்வான். தீர்க்காயுளுடன் வாழ்வான். அவனுக்கு முன் ஒரு சகோதரி பிறந்திருப்பாள். ஆனுல், அந்தப்பெண் திடீரென்று மரணமடைவாள். மேலும் சகோதரி விருத்தி இல்லாதவன். இது வரையில் ஜாதகனின் அண்ணன் செய்தியைச் சொன்னோம். இனி, தாயின் வரலாறுகளைச் சொல்லுகின்ருேம். அவள் மிகவும் தூய மனம் படைத்தவள். சிவந்த மேனியாள். துறவிகளுக்குச் சிரத்தையுடன் அமுதளிப்பாள்.

12. பித்தநோய் கொஞ்சம் புகலுவோம் தாயே
புண்ணிய மனத்தளா மென்றும்
சுத்தமு முடையாள் தேவதா பக்தி
சிறுத்தோர்க்கு அன்னமு மீவள்
சக்திக்குத் துணையாண் இரண்டென மொழிவோம்
தையல்மார் மூவரே யாகும்
குற்றமா மற்ருேர் கூறுவா மென்ருேம்
குறிக்கிருே மன்னேயின் பூர்வம்.

12. தாயே! இவளுக்குப் பித்த நோய் சிறிது இருக்கும். புண்ணிய காரியங்களில் இவள் மனம் ஈடுபடும். உடல் சுத்தி, உள்ள சுத்தி இரண்டும் உடையவள். தெய்வங்களிடம் பக்தி பூண்டவள். ஏழைகளுக்கு அன்ன தானம் செய்வாள். இவளுக்கு இரண்டு சகோதரர்கள் உண்டு. சகோதரிகள் மூவர். இந்த ஐவரும் நீண்ட காலம் வாழ்வார்கள். இந்த எண்ணிக்கைக்கு மேல் பிறக்கும் குழந்தைகள் நீடித்திரா. இவளுடைய பூர்வஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்ருேம்.

13. சொக்கர்வாழ் நாட்டில் கங்கையின் குலத்தில்
தோன்றியே சுகமுடன் வாழ்ந்து
மிக்கவே சுதர்வர னுண்டாய் மாது
விளங்கிவினுள் ஊதனேக் கேண்மோ
தொக்கவே நாத்தி மாதுஇல் லத்தில்
சூழ்ந்திட நிந்தையால் வார்த்தை
மைக்கண்ணி மேலே மங்கையும் புகல
மனமது வாடியே சொல்வாள்.

13. இவள் முன்ஜன்மத்தில் சொக்கநாதர் எழுந்தருளி இருக்கும் பாண்டிய நாட்டில் வேளாள வமிசத்தில் பிறந்து, கணவனுடனும் குழந்தை களுடன் சுகமாக வாழ்ந்துவரும் காலத்தில் அவளுக் கேற்பட்ட வினையைச் சொல்லுகின்ருேம். இவனுடைய நாத்தி (கணவனின் சகோதரி) பிறந்த கத்தில் வந்து தங்கியிருக்கும்போது, இவள் (ஜாதகனின் தாய்) அவள் காதில் விழும்படி அவளேப்பற்றி நிந்தையாகப் பேசினுள். இந்த நிந்தை வார்த்தைகளேக்கேட்ட நாத்தி மிகவும் மனம் வருந்திச் சொல்லலானுள்.

வேறு

14. பெண்பழி சொன்னபாவி பிறக்கும்பின் ஜன்மம் தன்னில்
தன்சுதர் பெண்பா லின்றித் தன்வரன் மத்தில் மாண்டு
குன்றிய மனத்த ளாகிக் குவலயம் தன்னில் வாழ்வாய்
திண்ணமாய்ச் சொல்லி யேதான் தெருத்தூளைத் தூற்றிச்
[சென்ருள்.

14. குற்ற மில்லாத என்னைப்பற்றி நிந்தைசொன்ன பாவி! நீ, மறு ஜன்மத்தில் பெண் குழந்தை இல்லாதவளாக இருப்பாய். உன் கணவ னும் வாழ்க்கையின் மத்தியில் இறப்பான். அதற்குப்பிறகு நீ வெகுகாலம் சிதைந்த மனத்துடன் உயிரை வைத்துக் கொண்டிருப்பாய். என்றிவ்வாறு சொல்லி, தெருப்புழுதிகளைத் தூற்றிவிட்டுத் தன் கணவன் வீட்டிற்குச் சென் ருள்.

15. மங்கைக்கு அந்தச் சாபம் மருவிற்று வேறு காணுள்
துங்கமாம் சேது சென்று தேறினேர்க் கன்ன மீந்து
சங்கைகாய்க் கால ளுடு சார்ந்துமே பிரமன் லக்கம்
இங்கிவள் வந்தா ளென்ருேம் இவள்வரன் தென்மேல் நேரும்.

15. இவளுக்கு அந்தச் சாபம் ஒட்டிக்கொண்டது. பிறகு அந்தப் பிற வியிலேயே, புண்ணியத்தைத்தரும் சேதுவிற்குச் சென்று நீராடி, அங்கு துறவிகளுக்கும் மற்றவர்களுக்கும் அன்னமளித்து, தனது ஊருக்குத் திரும்பி வந்தாள். காலக்கிரமத்தில் யமனுல் அவனுலகுக்குக் கொண்டு போகப்பட்டாள். பிறகு பிரம்மதேவனுல் இங்குப் பிறப்பிக்கப்பட்டு கடக லக்கின மகனுக்குத் தாயாக வாய்த்திருக்கிருள். இவள், தான் பிறந்த ஊருக்குத் தென் மேற்கில் உள்ள ஊரில், வாழ்க்கைப்பட்டிருக்கிருள்.

16. தன்சுதர் பெண்பால் தோஷம் தன்வரன் மத்தில் மாள்வன்
தன்மனச் சஞ்சலத்தால் தாயுமே வாழ்வா ளாகும்
பின்சன்மம் வேங்க டத்தில் பிறப்பாளாம் பிரம்ம சேயாய்
உன்னத வானேபெற்ற உத்தமி கேட்டி டாயே.

16. நாத்தியின் சாபத்தால் இந்த ஜன்மத்தில் இவளுக்குப் பெண் பிறக்கவில்லை. கணவனும் வாழ்க்கையின் மத்தியில் மாண்டுப் போவான். இவள் மீதமுள்ள வாழ்க்கையைத் துக்கப்பட்டே கழிப்பாள். இவளுடைய பின்ஜன்மத்தைச் சொல்லுகிருேம். திருப்பதி க்ஷேத்திரத்தில் பிராம்ம ணக் குழந்தையாகப் பிறப்பாள். விநாயகரைப் பெற்ற தேவியே! மேலும் சொல்லுகிருேம். கேளுங்கள்.

17. தந்தையின் பூர்வம் சொல்வேன் தாமிர பரணி தன்னில்
வந்தனன் வைசிய குல வளமுள குடும்பி யாகி
முந்திய ஒருஷி செய்து மேலவர் பூசை பூண்டு
வந்தவர்க் கன்ன மீந்து மார்க்கத்தில் தாகம் வைத்தான்.

17. தந்தையின் பூர்வஜன்மத்தைச் சொல்லுகின்ருேம். இவன் முற் பிறவியில், தாம்பரபரணி நதிக்கரையிலுள்ள ஊரில், வைசிய மகனுகப் பிறந்து, மனைவி மக்களுடன் பெரிய குடும்பியாகி, நல்ல விவசாயம் செய்து வந்தான். ஈசுவரனுக்குப் பூசை செய்துவந்தான். தன் வீடு நாடி வந்த வர்களுக்கு அமுது அளித்தான். வழி நடப்பவர்களின் தாகத்தைத் தணிப் பதற்கு மார்க்கத்தில் தண்ணீர்ப் பந்தலும் நிறுவினன்.

18. காலன்தன் ணுடை டைந்து கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலனு மறைக் குலத்தில் ஜனித்தவ னென்று சொல்வோம்
சாலவே முன்ஜன் மத்தில் ஜனித்தனன் கங்கை சேயாய்
ஞாலமே லிச்சென் மத்தில் நான்மறைக் குலமுதித்தான்.

18. பிறகு அந்திய காலத்தில் யமனுலக மடைந்தான். இப்பொழுது பிரம்மதேவனுல் வேதமோதும் பிராம்மண குலத்தில் பிறப்பிக்கப் பட்டிருக் கிருன். இவ்வாறு முனிவர் சொன்னவுடன், முற் பிறவியில் பயிர்த் தொழில் செய்யும் குலத்தில் பிறந்த இவன் இப்பிறவியில் எவ்வாறு பிராம்மண சாதியில் பிறந்தான் ?

19. காரணம் யாது என்னக் கடந்தோர்க்கு அன்ன மீந்தும்
தீரனும் தாகப் பந்தல் செய்ததோர் பலத்தி னுலும்
நீரணிக் கடவுள் பூசை நிமலனும் செய்த தாலே
பாரினில் பிரம்ம சேயாய்ப் பிறந்தனன் என்று சொல்வோம்.

19. இதன் காரணத்தைச் சொல்லுங்கள், எனப் பார்வதி தேவி கேட்க, வசிஷ்ட முனிவர் பதில் உரைக்கின்ருர். இவன் முற் பிறவியில் மூன்று சிறந்த தருமங்களைச் செய்தான். எல்லோருக்கும் அன்ன மளித்தான். தண்ணீர்ப் பந்தல் வைத்தான். பரமசிவனை இடைவிடாது பூசித்து வந்தான். ஆகவே மேலான இம்மூன்று தருமங்களைச் செய்து வந்தமையால் இப் பிற வியில் பிராம்மண ஜாதியில் பிறந்திருக்கிருன்.

20. மறுஜன்மம் விரிஞ்சி தன்னில் மாரனு மிக்கு லத்தில்
உரைகுவா னென்று சொல்வோம் உயர்வான குடும்பி யாவன்
திருமகன் மணத்தின் காலம் செப்புவோ மினி மேலாக
இருபதா மாண்டுக் குள்ளே எய்திடும் பாரி தானும்.

20. இவன் (தந்தை) மறு பிறவியில் விரிஞ்சியில் இதே ஜாதியில் பிறப் பான், பிறந்து, மனைவி மக்களுடன் பெரிய குடும்பியாகவும் வாழ்வான். இப்பொழுது ஜாதகனின் விவாஹ காலத்தைச் சொல்லுகின்ருேம். ஜாத கனுக்கு இருபதாவது வயது முடிவதற்குள் விவாஹம் நடைபெறும்.

21. மாதுவும் மேல்பால் நேரும் மங்கையின் குணத்தைச் சொல்வேன்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உலகுக்கு நல்லோ ளாவள்
காதலி விரத மேற்பள் கடந்தபேர்க் கன்ன மீவள்
பாதக மனமில் லாதாள் பால்பாக்கிய முடைய ளாமே.

21. அந்தப் பெண் மேற்குத் திசையில் ஜனித்திருப்பாள். அவ ளுடைய (ஜாதகனது மனைவியின்) குணங்களைச் சொல்லுகின்ருேம். காதுக்கு இனிமையான வார்த்தைகளைப் பேசுவாள். எல்லோருக்கும் நல்லவளாக நடந்துகொள்வாள். பல விரதங்களை அனுஷ்டிப்பாள். அன்னதானம் செய்வாள். பிறருக்குக் கெடுதல் எண்ணுதவள். இவளுக்குப் பால் பாக்கிய முண்டு.

22. அன்னம்போல் சாய லொக்கும் ஆளன்தன் மனம்போல் வாழ்வன்
பின்னமில் லாத தேகி பூவையும் வந்த பின்பு
தன்வரன் ராஜயோகம் சார்ந்திடும் பிறை போல்யோகம்
கன்னிக்கு வயது தீர்க்கம் கவுசிகர் மறித்துச் சொல்வார்.

22. அன்னப் பக்ஷிபோல் அழகு உள்ளவள். தன் கணவனின் மனத்தை அறிந்து அதன்படி நடப்பாள். சரீரத்தில் ஊனம் இல்லாதவள். இவள் கணவனது வீட்டிற்கு வந்தபிறகு, கணவனுக்குப் பிறைச் சந்திரன் போல ராஜயோகங்கள் மேன்மேலும் விருத்தியாகும், இந்தப் பெண்ணும் தீர்க்காயுளுடன் வாழ்வாள் என்று வசிஷ்டர் சொன்னவுடன் கௌசிகர் மறித்துப் பேசினுர்.

23. எப்படி வயது தீர்க்கமிரண்டேழான் நீச மாயும்
தப்பித மாறில் தங்கச் சாற்றுவோம் இரண்டு தாரம்
அப்படிச் சொல்லொ ணுது அந்தணன் ஏழைப்பார்க்க
ஒப்புடன் நவத்தைக் காரி உவந்துமே பார்த்த தாலே.

23. அவளுக்கு வயது எவ்வாறு தீர்க்கமாகும் ? இரண்டுக்கு உடையவ னும் ஏழுக்கு உடையவனும் நீசமாக இருப்பதால், இவனுக்கு இரண்டு தாரம் என்பது எங்கள் அபிப்பிராயம், என்று கௌசிகர் சொல்ல, வசிஷ்டர் பதில் சொல்லுகின்ருர். ஆயினும் குரு ஏழாமிடத்தைப் பார்ப்பதால் ஒரே தாரம்தான்.

குறிப்பு.—இப்பாட்டு இப்பொழுது பேசப்படும் ஜாதகத்திற்குப் பொருந் தாது என்பது எமது அபிப்பிராயம். வாசகர்கள் நோக்குக.

24. இருமனை யனுகா தையா எய்திடும் மனைவி ஒன்றே
வருமனை யிவன்முன் னுலே மறலியின் பதிக்குச் செல்வள்
திருகாகும் காலம் சொல்வாய் செப்புவோ மறுப தாண்டில்
உறைகுவளாம் கால னுடு உத்தமி கேட்டி டாயே.

24. ஆகையால் ஜாதகனுக்கு இருமனைவிகள் ஏற்படமாட்டார்கள். ஒரே மனைவிதான். ஆனுல் அந்திய காலத்தில் இந்த ஜாதகனுக்கு மரணமேற் படுவதற்கு முன்பே இவள் மரணமடைவாள். அவளுடைய மரணகாலத் தைக் குறிப்பிடுவீராக என்று கௌசிகர் கேட்க, வசிஷ்டர் பதில் உரைத்தார். ஜாதகனுக்கு அறுபதாவது வயது நடக்கும்போது இவள் மரணமடை வாள், தாயே ! கேளுங்கள்.

25. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மிரண்டு தீர்க்கம்
பதராகும் மூன்று என்றேம் பஞ்சமம் ரவியி னுலே
முதல்நாலு ஆறும் சேதம் மொழிந்தது தப்பா தாகும்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

25. இந்தத் தம்பதிகளுக்குப் புத்திரன் ஒருவன். புத்திரிகள் இருவர். இம் மூவரும் நீண்ட ஆயுளுடன் ஜீவிப்பார்கள். இவர்களைத் தவிர மூன்று குழந்தைகள் பிறந்து இறப்பார்கள். இரண்டாவது மூன்றாவது ஐந்தாவது குழந்தைகள் நீடிக்கும். முதலாவது நான்காவது ஆருவது குழந்தைகள் நீடித்து வாழா. பக்தர்களை ஆதரிக்கும் தாயே! நாங்கள் சொன்ன மொழி தப்பாது.

26. இன்னவன் பூர்வம் தன்னை யியம்புவோ மினிமே லாகத்
தென்திசை பழனி நாட்டில் ஜனித்தனன் வைசியச் சேயாய்ப்
பொன்னெடு பணிதி பெற்று புகழாக வணிபம் செய்து
முன்னோர்க்கு அன்ன மீந்து உயர்வான தலங்கள் சென்றான்.

26. இனிமேல் இந்த ஜாதகனின் முன் ஜன்மத்தைப்பற்றிக் கூறுகின்றேம். இவன் முற்பிறவியில் தென் திசையிலுள்ள பழனியில் வைசியனுக பிறந்து, புகழுடன் வாணிபத்தைச் செய்து வந்தான். செல்வத்தையும் ஆபரணங்களையும் அடைந்து, சுகமாக வாழ்ந்தான். பிராம்மணர்களுக்கு அன்னதானம் செய்தான். பெருமை வாய்ந்த புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றான்.

27. அறமதி விச்சை யுண்டாய் அந்தகன் நகர டைந்து
பிரமனல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
உரைகிறே மிவனின் யோகம் உணவுக்குக் குறைவு றுதான்
அரசர்கள் பேட்டி கொள்வன் அதிகாரம் சிலநாள் செய்வன்.

27. மற்றைய தருமங்களையும் விரும்பிச் செய்தான். அந்திய காலத்தில் மரணமடைந்த இவன், பிரம்ம தேவனுல் இங்குப்பிறப்பிக்கப்பட்டிருக்கிறன். இவனது யோகங்களைக் கூறுகின்றேம். ஆகாரத்திற்குக் கஷ்டப்படமாட்டான். [வறுமை இல்லாதவன் என்பது கருத்து.] அரசர்களைப்பேட்டி காண்பான். சிலகாலம் ராஜாங்க உத்தியோகத்தில் இருப்பான்.

28. எந்தக்கா லத்தில் நேரும் இயம்புவீர் முனியே நீர் தாம்
வந்தவ னிருபனெறு ஆண்டின் மேல் கிராமச் செட்டு
விந்தையாய் நேரு மென்றேம் விசித்திர இல்லம் தானும்
சந்ததம் முப்ப தாண்டில் செய்வனு மிந்தப் பாலன்.

28. எந்தக் காலம் வரையில் உத்தியோகம் செய்வான்? இவ் விஷயத்தைக் கூறுமெனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுகின்றார். ஜாதகன் இருபத்தாருவது வயது மட்டும் உத்தியோகம் செய்வான், அதற்கு மேல் கிராமத்திலேயே வியாபாரம் செய்வான். முப்பதாவது வயதில் அழகிய வீடு நிர்மாணிப்பான்.

29. தந்தைக்கு மேலாய் வாழ்வன் சாராள்க ளுடைய னுகும்
தன்தனம்பூமி மூலம் சார்ந்திடும் முப்பதாண்டில்
பந்துவும் மதிக்க வாழ்வன் பகவானின் பக்தி பூண்பன்
நிந்தைகள் எற்கா னுகும் நிமலியே கேட்டி டாயே.

29. தந்தைக்கு மேலாக (சிறப்பாக) வாழ்வான். நல்ல சேவகர்களை உடையவனுவான். முப்பதாவது ஆண்டில் பூமிகள் மூலம் இவனுக்குத் தனம் கிடைக்கும். உறவினர்கள் போற்றும்படி வாழ்வான். கடவுளிடம் பக்தி கொண்டவன். ஒருவனும் இவனைப் பழிக்க மாட்டான். நிமலியே! கேளுங்கள்.

30. தனமது எவ்வாறு நேரும் சாற்றுவீ ரந்தச் சங்கை
கனமுள குருவும் திங்கள் கனத்தலா பத்தில் தங்கச்
சினமிலா நேரு மென்றேம் தரணிகள் விருத்தி யுண்டு
வினையிலாக் கூவல் சோலை வித்தகன் செய்வா னுகும்.

30. இவனுக்குப் பூமிகள் மூலம் தனம் கிடைக்கு மென்று சொன்னீர்களே! எந்தக் கிரகங்களைக் கொண்டு அவ்வாறு உரைத்தீர்கள்? எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறினர். பாக்கியாதிபதியாகிய குருவும் லக்னாதிபனுகிய சந்திரனும் லாபஸ்தானத்தில் [விருஷப]த்தில் இருப்பதால் பூமிகளால் பாக்கிய விருத்தியுண்டு. பூமிகளும் சேரும். கிணறுகளையும் தோட்டங்களையும் இவன் நிறுவுவான்.

31. ஈரெட்டு ஆண்டுக் குள்ளே இவன்தந்தை கண்ட மெய்தும்
கூறுவோம் முப்பான் மூன்றில் குறிக்கிறே மன்னே கண்டம்
மாஎனுக் கறுபான மூன்றில் மார்கழி மாதம் தன்னில்
சேருவான் கால னுடு செல்வதி கேட்டிடாயே.

31. இவனுடைய பதினாருவது வயதிற்குள் இவன் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். [மரணமடைவான் என்பது கருத்து.] ஜாதகனுடைய முப்பத்து மூன்றாவது வயதில் அவன் தாய் மரணமடைவாள். சாதகனும், தனது அறுபத்து மூன்றும் வயதில் மார்கழி மாதத்தில் யமனுலகம் செல்லுவான். தாயே! கேளுங்கள்,

32. பின்சென்மம் கலிங்கு நாட்டில் பிறப்பனு மிக்கு லத்தில்
மன்னர்பா லரசு செய்து மானும் வாழ்வா னுகும்
அன்னவன் சென்ற காலம் அரவுதன் தசையி லேதான்
சொன்னேனே ஆண்டு ஏழும் திங்களும் ஆற தாகும்.

32. ஜாதகனுடைய பின் பிறவியைப்பற்றிக் கூறுகின்றேம். இவன் கலிங்கநாட்டில் பிராம்மண சாதியிலேயே பிறப்பான். அரசர்களிடம் உத்தியோகம் செய்து சீவிப்பான். இவன் ஜனித்த காலத்தில் ராஹு தசையில் இருப்பு வருஷங்கள் ஏழு; மாதங்கள் ஆறு.

33. வந்தவன் தனக்கு ரோகம் மாதுரு பிணிஅ நேகம்
தன்தனம் செலவு முண்டு சதுஷ்பாதம் சேத மெய்தும்
பந்துவால் சூத முண்டு பகர்ந்தனம் பூர்வ பாகம்
இந்திர னிறைஞ்சு மாதே இயம்பின மொழிகுன் றுது.

33. இந்த தசையின் பலன்களைச் சொல்லுகின்ருேம். ஜாதகனுக்கு ரோகம் கண்டிடும். தாய்க்கும் பலவிதப் பிணிகள் வரும். வீண் செலவு களும் அதிகமாகும். கால்நடைகளுக்கும் சேதம் ஏற்படும். பந்துக்கள் மரணமடைவார்கள். இது பூர்வபாக மாகையால், சுருக்கமாகவே சொல்லி இருக்கிருேம். இந்திரனல் போற்றப்படும் தாயே ! எங்களது சொல் பொய் யாகாது.

ஜாதகம் 21.

1. பொன்சனி மேரு வாகப் புதன்புகர் மான தாகச்
செந்தீயும் குடம தாகச் சந்திரன் மீனம் புக்க
மன்னிய சேயும் சீயம் மதிப்புகை தேளதாக
இன்னவாறு கிரகம் நின்று லக்கினம கடக மாக.

சந்திரன்		கேது	
சூரியன்	இராசி சக்கரம்		லக்கினம்
புதன் சுக்கிரன்			செவ்வாய்
குரு சனி	ராகு		

1 சார்வாரி வருஷம் மாசி மாதம் 11-ந் தேதி வெள்ளிக்கிழமை பிற்பகல் ஜனனம். [ஆங்கிலத் தேதி 22—2—1901] நவக்கிரஹ பாத சாரம் :—சதயம் 2-இல் சூரியன். ரேவதி 3-இல் சந்திரன். மகம் 3-இல் அங்காரகன். பூரட்டாதி 3-இல் புதன். பூராடம் 1-இல் குரு. அவிட்டம் 1-இல் சுக்கிரன். பூராடம் 3-இல் சனி. அனுஷம் 1-இல் ராகு. கிருத்திகை 3-இல் கேது. நக்ஷத்திரம் ரேவதி. புததசை இருப்பு வருஷங்கள் ஏழு ; மாதங்கள் பத்து.

1. குரு சனி தனுவிலும், புதன் சுக்கிரன் மகரத்திலும், சூரியன் கும்பத்திலும், சந்திரன் மீனத்திலும், செவ்வாய் சிம்மத்திலும், ராகு விருச்சிகத்திலும், கேது விருஷபத்திலுமிருந்து இலக்கினம் கடகமாகவு மிருந்தால், இந்த ஜாதகத்தின் பலனைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி வினவினுள்.

குறிப்பு.—பாட்டில் கண்டிருக்கிற ராசியில் புதனை எழுதியிருக்கிருேம். திருக்கணித பஞ்சாங்கப்படி புதனின் பாதசாரம் மிகவும் வேறு பட்டிருக்கிறது.

2. பலன்தனைச் சொல்லு மென்று பார்வதி கேட்கும் போது
புலத்தியர் சொல்லு கின்ருர் பிறந்தது ஆண்பால் ஜனமம்
தலமது கீழ்மேல் வீதி சண்டன்தன் வாடை யாகும்
நலமுள பேருராகும் நரிவா னுத்தாள் தந்தி.

2. இவ்வாறு உமாதேவி கேட்டவுடன், புலஸ்த்தியர் கூறுகின்ருர் பிறந்த குழந்தை ஆண். வீதி கிழக்கு மேற்கில் அமைந்திருக்கும். வீடு தென் வரிசையில் இருக்கும். ஊரும் பெரியதாக இருக்கும். காளியும் விநாயகரும் ;

3. உத்தரம் தங்கு மென்ருேம் உயர்ந்தவன் இரு பாலாகும்
வித்தகன் சேஷ்ட ஞக விளம்புவோம் வலேயர் வர்க்கம்
பெற்ற தாய் தந்தையோக பின்துணே களத்திர புத்திரர்
சுத்தமாய் முன்பின் ஜன்மம் செப்புவோ மிந்நூல் தன்னில்.

3. வடதிசையில் இருப்பார்கள். இந்த ஜாதகனே அவர்கள் குடும்பத்திற்கு ஜ்யேஷ்ட புத்திரன் ஆவான். பிறந்தவன் வலேயர் (செம்படவர்) சாதியைச் சேர்ந்தவன். இவனுடைய தாய் தந்தை சகோதரர் களத்திரம் புத்திரர் இவர்களேப் பற்றியும் மூன்பின் ஜன்மங் களேப்பற்றியும் இந்நூலில் சொல்லப் போகின்ருேம்.

4. தந்தையின துணேவ ரேழில் ஆணது ரண்டே தீர்க்கம்
முன்பின்ஞய்த் தோன்று மென்ருேம் மேவுவார் வேரு கத்தான்
இந்தவன் தந்தை சேதி யிருநிறம் ஊனச்ச லுண்டு
சொன்னசொல் காப்பா ஞகும் சோம்பிடான் காரி யத்தில்.

4. ஜாதகனின் சகோதரர்களேக் கூறுகின்ருேம். ஏழு உடன் பிறந்தார் கள். அவர்களில் சிலர் இவனுக்கு முன்பும், சிலர் பின்பும் ஜனித்திருப் பார்கள். ஆனல் ஏழு உடன் பிறந்தார்களில் இரண்டு ஆண் சகோதரர் களே நீண்டு வாழ்வார்கள். அவர்களும் தனியாக வசிப்பார்கள். ஜாதக னின் தந்தை கருத்த மேனியான். மெல்லிய சரீர முள்ளவன். தான் சொன்ன சொற்படியே நடப்பான். காரியத்தைச் செய்வதில் சோம்பல் இல்லாதவன்.

5. வித்தையு மதிக மில்லான் வீண்வம்பில் செல்லா ஞகும்
சுத்தமு மில்லாஞகும் சொல்லதைக் கேட்பா ஞகும்
பத்தினிக் கடக்க மாவன் பார்வையும் சாயல் கொஞ்சம்
நத்திஞேர்க் குதவி செய்வன் நாயகன் வெகுளி யாவன்.

5. கல்வி அதிகம் கல்லாதவன். வீண் வம்பில் சேராதவன். பரி சுத்த மில்லாதவன். பிறர் சொன்ன வார்த்தைகளேக் கேட்பான். தன் மனேவியிட்ட ஆணேயை மீருதவன். சாய்ந்த பார்வையை உடையவன். தன்னே அடைந்தவர்களுக்கு உதவிசெய்வான். கபடமில்லாதவன். [பிறர் அறியாதபடி மனத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய ரஹஸ்யத்தையும் வெளியிடுவான் என்பது கருத்து.]

6. சல்லியம் கொள்ளா ஞகும் சாந்தவான் வறுமை காணன்
நல்லவன் நல்ல வர்க்கு நற்ருெழில் புரியா ஞகும்
கொல்தொழில் புரிவா ஞகும் கூறுவீர் சங்கை தன்னேப்
புலகுவோம் மச்சம் தன்னே பிடிப்பஞ மென்று சொல்வோம்.

6. இவன் கடன் வாங்கமாட்டான். சாந்தகுணம் வாய்ந்தவன். வறுமை இல்லாதவன். நல்லவர்களிடம் நல்லவஞகவே நடந்துகொள் வான். நல்ல தொழிலேச் செய்யமாட்டான். கொல்லும் தொழிலேயே தனது சீவனேபாயமாக வைத்துக் கொள்வான் என, முனிவர் சொன்ன வுடன் தேவி கேட்கலுற்ருள். கொலேத் தொழிலேயே ஜீவனேபாயமாக வைத்துக் கொள்வான் என்ருல் அதன்பொருளே விளக்கமாகச் சொல்ல வில்லேயே ! தெளிவாகச் சொல்லுங்கள் என, முனிவர் கூறுகின்ருர். மீன்களேப் பிடித்து, அவைகளே விற்று அதனல் கிடைக்கும் பணத்தைக் கொண்டு ஜீவிப்பான்.

7. இல்லமும் செய்வா ஞகும் இவன்துணே மேலாய் வாழ்வன்
தல்விதா யிஷ்ட முண்டு சம்பத்துப் பின்னல் நேரும்
வல்லியும் வர்க்கம் விருத்தி மறுத்துரை ஃ;திகம் கூருன்
எல்லேயின் ஞலே சேர்ப்பன் இடர்செய்யான் யாவ ருக்கும்.

7. புதிய வீடு கட்டுவான். இவனுடைய சகோதரர்களேவிட சிறப்பாக வாழ்வான். தாய் தந்தையர்களிடம் பக்தியோடிருப்பான். இவனுக்குச் செல்வம் பிற்காலத்தில்தான் சேரும். பெண்சாதியின் வருக்கம் செழிப் படையும். பிறர்சொல்வதை ஆக்ஷேபித்துக் கூறமாட்டான். பிற்காலத்தில் தான் நிலங்களேச் சேர்ப்பான். யாருக்கும் இடையூறுகளேச் செய்யமாட்டான்.

8. சொன்னயிக் குணத்தா னுக்குச் சுதனுமே உதிப்பா ஞகும்
இன்னவன் குணத்தைக் கேளாய் இன்பச் சொல் மாஞ்சிவப்பன்
அன்னியர் மதிக்க வாழ்வன் அஞ்சிய வார்த்தை சொல்வன்
பன்னியே பேசுவாஞம் பல்கலே அறிவா ஞகும்.

8. இப்படிப்பட்ட குணமுள்ள தந்தைக்கு இந்த ஜாதகன் மகஞகப் பிறந்திருக்கிருன். ஜாதகனின் குணங்களேச் சொல்லுகிருேம். இன்பமாகப் பேசுவான். மாந்தளிர் போன்ற நிற முள்ளவன். பிறர்மதிக்கும் வகை யில் நடந்துகொள்வான். பிறர்மனம் நோகாதவாறு பயந்தே பேசுவான். பேசப்படும் விஷயங்களே மறுபடியும் மறுபடியும் பேசிக்கொண்டே இருப் பான். பல கலேகளேயும் அறிந்திருப்பான்.

9. சுயதொழில் செய்வஞகும் தோகையர் மோக வானும்
பயமிலான் எதிரிக் கஞ்சான் பாரது சேர்ப்பா ஞகும்
தயையுள மனத்த ஞகும் சற்பாத்திரன் பெரியோர் நேயன்
அயலார்பொன் னிச்சை யுள்ளான் அவனியில் செட்டும் செய்வன்.

9. தன் ஜாதித்தொழிலேயும் செய்வான். பெண்களிடம் மையல் கொண்டவன். பயமில்லாதவன். எதிரிகளேக்கண்டும் சிறிதுகூட அஞ்ச மாட்டான். பூமிகளேச் சேர்ப்பான். பிறருடைய ஆதரவிற்குப் பாத்திரமான வன். பெரியோர்களுக்கு நண்பஞவான். பிறர்சொத்தில் சிறிது ஆசை உள்ளவன். இவன் வியாபாரமும் செய்வான்.

10. தந்தைக்குத் தாழ்வு ருதரன் தனமிகப் பெருக்கம் செய்வன்
பிந்திவே றில்லம் செய்வன் பிதாவர்க்கம் நசிக்க வைப்பள்
வந்தவர்க் கன்ன மீவன் மருமமு மில்லா ளுகும்
தன்துணே யெழுவர் தோன்றும் தங்காவே சிலவே என்றேம்.

10. தந்தையை விடக் கீழாக வாழமாட்டான். [தந்தை வாழ்ந்தது போலவே இவனும் வாழ்வான் என்பதுக் கருத்து.] தனத்தை அதிகமாகச் சேர்ப்பான். பிற்காலத்தில் வேறு ஒரு வீடு கட்டுவான். பங்காளிகளை ஓங்கச் செய்யமாட்டான். தன் வீடு நாடிவந்தவர்களுக்கு அன்னமளிப் பான். கபடமில்லாதவன். இவனுக்கு ஏழு உடன் பிறந்தவர்கள் ஜனிப் பர். சிலரே நீடித்து வாழ்வர். சிலர் நசிப்பர்.

11. கன்னிகை மூவ ராகும் காளேயு யொன்று தீர்க்கம்
பின்துணே பெண்பால் நேரும் பேசுவோ மதன்பின் ஆண்பால்
அன்னவன் சேதி சொல்வேன் அடாவடி வார்த்தை சொல்வன்
முன்கோப மூர்க்க னுவன் மொழியது இரண்டு முண்டு.

11. மூன்று சகோதரிகளும் ஒரு சகோதரனும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். அந்த மூன்று சகோதரிகளும் இந்த ஜாதகனுக்குப் பிறகு செனிப்பார்கள். அவர்களுக்குப் பிறகு ஒரு சகோதரன் பிறப்பான். [ஆக நான்கு உடன் பிறந்தவர்கள்.] அந்தச் சகோதரனின் குணங்களைச் சொல்லுவோம். விதண்டா வாதம் செய்வான். முன் கோபி. பிடிவாத முள்ளவன். சொன்ன வார்த்தைப்படி செய்யமாட்டான். பேச்சை மாற்றி மாற்றிப் பேசுவான்.

12. சுகமுள குடும்பி யாவன் சுயதொழில் புரிவா னுகும்
ஊகமாய்க் கதைகள் சொல்வன் ஒண்டொடி ஒன்று தீர்க்கம்
பகைசெய்வன் சிலருக்கு என்றேம் பாலர்கள் ஆண்பால் நான்கு
தகமையாய்ப் பெண்பால் ரண்டு சாற்றினேம் தீர்க்க மாக.

12. நிம்மதி நிறைந்த குடும்ப முள்ளவனுவான். தன் ஜாதித் தொழிலைச் செய்வான். கதைகளைக் கற்பனையோடு சொல்லும் திறமை உடையவன். ஒரு மனைவி தீர்க்கமாக வாழ்வாள். சிலரைப் பகைத்துக் கொள்வான். அவனுக்கு [ஜாதகனின் சகோதரனுக்கு]ப் பிள்ளைகள் நான்கு. பெண்கள் இருவர். இவர்கள் எல்லோரும் தீர்க்கமாக வாழ் வார்கள்.

13. சிலது நாள் ஒன்றய் வாழ்ந்து செல்லுவான் வேறதாகத்
தலைவிமார் சேதி யாவும் சாற்றுவோம் பின் பாகத்தில்
நலமுள மணத்தின் காலம் நாட்டுவோம் பதினு ருண்டில்
குலவுவாள் அன்னே வர்க்கம் குடதிசை யென்று சொல்லும்.

13. சிலகாலம் அண்ணனேடு ஒன்ருகக் குடித்தனம் செய்து, பிறகு தனியே வாழ்வான். சாதகனின் சகோதரிகளைப் பற்றிய வரலாறுகளைப் பின் பாகத்தில் சொல்லப் போகின்றேம். ஜாதகன் விவாஹ காலத்தைக் கூறுகின்றேம். இவனுக்குப் பதினுன்காவது வயதில் விவாஹம் நடை பெறும். மணப்பெண் மேற்குத் திசையில் தாய் வருக்கத்தில் ஜனித்திருப் பாள்.

14. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாரன்தன் மனம்போல் [வாழ்வள்
தீதிலாள் முன்கோ பத்தாள் செல்வியு மிரு நிறத்தாள்
மேதினில் பாட்டாளி யாகும் விரைவினில் நடக்க வல்லாள்
காதலி யோக சாலி கழறுவாள் சிலேடை வார்த்தை.

14. சாதகனின் மனைவியின் குணத்தைச் சொல்லுகின்றேம். கணவனது மனப்படி நடப்பாள். தீயகுணங்கள் இல்லாதவள். சிறிது முன்கோபம் மாத்திரம் உண்டு. கருத்த மேனியாள். ஊக்கமாக உழைப்பாள். அவளது நடை வேகமாக இருக்கும். நல்ல அதிருஷ்ட முள்ளவள். சிலேடை வார்த்தைகளைப் பேசுவாள்.

15. மாதுலன் மகவே யாகும் வருவோரை யாத ரிப்பள்
போதனம் பணிகள் சேர்ப்பள் புத்திர தோஷ மாகும்
ஓதுவீ ரந்தச் சங்கை உரகனு மஞ்சில் தங்க
ஆதவன் எட்டில் தங்க அறைந்தனம் புத்திர தோஷம்.

15. ஜாதகனுக்கு அவள் மாமனுடைய மகள் தான் மனைவி. விருந்தாளி களை ஆதரிப்பாள். அதிக நகைகளைச் சேர்ப்பாள். புத்திர தோஷமும் உண்டு. எவ்வாறு புத்திர தோஷம்? அதைத் தெளிவாகக் கூறுமெனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுகின்ருர். ராஹு ஐந்தில் இருப்பதாலும், குடும்பாதிபனுகிய சூரியன் எட்டில் இருப்பதாலும் புத்திர தோஷமுண்டு என்று சொன்னேம்.

16. இதுவன்றிப் பூர்வம் தன்னில் எய்திற்று வினைஅ நேகம்
அதுவினை சொல்லு மென்ன அச்சிறு பாக்கம் கீழ்ப்பால்
நதிஓரம் செக்கான் வம்சம் நல்கியே வணிபம் செய்து
அதிபதி மனைவி யுண்டாய் வாழ்நாளில் வினையைக் கேண்மோ.

16. மேலும் முற்பிறவியில் இவன் அதிக பாவங்களைச் செய்தான். எந்தெந்தப் பாவங்களைச் செய்தான் இவன்? சொல்லுங்கள் எனப் பார்வதி தேவி உத்தரவிட, முனிவர் கூறுகின்ருர். இவன் முன் பிறவியில் அச்சிறு பாக்கம் என்ற ஊருக்குக் கிழக்குத் திசையில் ஆற்றங்கரையில் உள்ள ஓர் ஊரில் வாணியச் செட்டி குலத்தில் பிறந்து, வாணிபம் செய்து வந்தான். மனைவி மக்களுடன் சுகமாக வாழும் நாளில் இவன் செய்த பாவங்களைக் கேளுங்கள்.

17. நந்திமே லதிகபாரம் நாட்டினுனி நந்தபாலன்
தன்னில்லம் நாகம் தன்னைத் தரிபடச் செய்தா னென்றேம்
மன்மதனுடல் செய்தான் மாதுமே நீச மென்றேம்
இந்தவாறு தோஷத் தாலே இயம்பினேமந்தச் சங்கை.

17. தனது காளைகளின் மேல் அதிகச் சுமையை ஏற்றி வைத்து சுமந்து செல்லும்படி அவைகளை வாட்டினன். தன் வீட்டில் வெகு நாளாக வசித்து வந்த சர்ப்பத்தைத் துண்டித்துக் கொன்ருன். பல பெண்களிடம் தன் மனம் போனபடி நடந்தான். ஆக இவ்வாருன பெரிய பாவங்களால் இவனுக்கு இந்த ஜன்மத்தில் புத்திர தோஷம் ஏற்பட்டிருக்கின்றது.

18. முறையிலா மாது மோகம் மேவினனிவனே யென்ருேம்
திருமக ணந்தி யத்தில் சிறுத்தது குடும்பம் தானும்
மறவிமின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப்பட்டு
மீலயிறை வர்க்கம் தன்னில் மருவுவா னிந்த பாலன்.

18. முறை இல்லாத பெண்ணிடமும் இவன் மோகம் கொண்டான். ஆகையால் அந்த ஜன்மத்திலேயே அந்திய காலத்தில் இவனது குடும்பம் செல்வமிழந்து கஷ்டமடைந்தது. பிறகு யமனுலகம் சென்ற இவன், விஷ்ணு புத்திரனுகிய பிரம்மதேவனுல் இக் குலத்தில் பிறப்பிக்கப்பட்டிருக் கிருன்.

19. முன்ஜன்மம் நாக சாபம் மேவிடும் இச் சென்மத்தில்
தன் சுதர் தோஷமெய்தும் தனையன் முன் சென்மம் தன்னில்
உன்னத செக்கான் வம்சம் உதித்த வனிச் ஜன்மத்தில்
தன்குலம் தாழ்வ தாக ஜனிக்கும்கா ரணங்க ளெவ்வாறு.

19. முன் ஜன்மத்தில் சர்ப்பத்தைக் கொன்ற பாவத்தினுல் இந்த சென்மத்தில் புத்திரதோஷம் உண்டு. பார்வதி கேட்கின்ருள். முன் சென்மத்தில் உயர்ந்த வாணியச் செட்டி வமிசத்தில் பிறந்த இவன் இப்பொழுது தாழ்ந்த சாதியில் ஏன் பிறந்தான்? அதன் காரணத்தை விளக்கிச் சொல்லுங்கள் எனக்கேட்டாள்.

20. நீசபோ கத்தினுலும் நந்திமேல் பாரம் வைத்தும்
வேசிபோல் முறைக ளன்றி வித்தகன் போகம் செய்தும்
தோசியாயிக்குலம் தான் ஜயமுனி கேட்க லுற்ருர்
பேசினீர் பூர்வ தோஷம் புகல்விருத்தி யாகச் சாந்தி.

20. விலை மாதர்களைப்போல, கொஞ்சமும் முறையின்றிப் பெண்களிடம் ஆசை வைத்தமையாலும், காளைகள் மேல் அதிக பாரத்தை ஏற்றி, அவைகளை வருத்தியதாலும், இவன் தாழ்ந்தக் குலத்தில் பிறந்திருக்கின்ருன் என்று முனிவர் பதிலுரைத்தார். ஜய முனிவர் வினவினர். புத்திர தோஷம் உண்டு என்று சொன்னீர். அந்தத் தோஷம் விலகிப் புத்திர விருத்தி ஏற்படுவதற்குத் தகுந்த சாந்திகளைச் சொல்லும் எனக் கேட்டார்.

21. புகலுவீர் முனியே நீர்தான் புத்திரன் மனைவி யோடு
ஜகமதினுயர்வ தான தென்திசை மலையூர்க் கேகி
மிகு சதையெலும்பு கொள்ளும் வித்தகிக் கபிஷேகித்து
தகைமையாய் வில்வம் தன்னுல் சகஸ்ர அர்ச்சினையும் செய்து ;

21. இவன் புத்திரப்பேற்றை அடைந்து, சுகமாக இவ்வுலகில் வாழ வேண்டுமானுல், தென் திசையிலுள்ள மலை ஊருக்குச் சென்று, அங்கு மாமிசங்களையும் எலும்புகளையும் உட்கொள்ளும் காளிதேவிக்கு அபிஷேகம் செய்து, வில்வதளத்தினுல் சகஸ்ரநாம அர்ச்சனை பண்ணி ;

22. நாகமும் சிலையில் செய்து நாயகி கோஷ்டம் தன்னில்
பாகமாய் வைத்துப் பின்பு பணிவெள்ளி அதனுல் செய்து
ஆகமமு முணர்ந்தோ ருக்கு ஆதிபம் தன்னைச் சேர்த்து
பாகமாய் யில்லம் செய்து எப்போதும் கார்த்தி நோன்பு ;

22. கல்லில் ஒரு சர்ப்பத்தைச் செய்து, அதை அக் காளி கோயிலிலேயே பிரதிஷ்டை பண்ணி, அதற்குப் பிறகு வெள்ளியினுல் ஒரு சர்ப்பம் செய்து, வேதமோதும் அந்தணர்க்கு தக்ஷிணையுடன் அந்த நாகத்தைக்கொடுக்க வேண்டும். எப்போதும் இடை விடாமல் கிருத்திகை விரதம் ;

23. விரதமே கொள்வா னுகில் விடுகிடும் முன்னூழ்த் தோஷம்
வருஞ்சுதர் ஆண்பா லொன்று மங்கைமார் இருவர் தீர்க்கம்
திருகென்று செய்யா னுகில் ஜனிக்காது ஜனிக்கில் தீதாம்
பெருவயி ருேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

23. அனுஷ்டிப்பானுயின் முன்ஜன்மத்தில் செய்த பாவம் நீங்கி, புத்திரன் ஒருவனும் பெண்கள் இருவரும் ஜனித்து நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். பரிகாரங்களைச் செய்யாவிட்டால் குழந்தைகள் பிறக்க மாட்டார்கள். பிறந்தாலும் இறப்பார்கள். விநாயகரைப் பெற்ற புண்ணிய சாலியே! (ஜாதகனின் அன்னையின் குணங்களைச் சொல்லுகிருேம்.) கேளுங்கள்.

24. அன்னமா நிறத்தா ளாகும் ஆளனுக் கினிய ளாகும்
தன் துணை ஆண்பால் நான்கு தையலர் ஒன்று தீர்க்கம்
பின்னமா மற்ற வெல்லாம் பேதையில் இடறு வென்ருேம்
பன்னியே பேசு வாளாம் பாட்டாளி யென்று சொல்வோம்.

24. தாய் மாநிறமுள்ளவள். தன் கணவனுக்குப் பிரியமாக நடந்து கொள்வாள். அவளுக்குச் சகோதரர்கள் நால்வர். ஒரு சகோதரி. மற்றைய உடன் பிறந்தார்கள் குழந்தைப்பருவத்திலேயே இறப்பார்கள். அவள் பேசியதையே மறுபடி மறுபடி பேசுவாள். நல்ல உழைப்புள்ளவள்.

25. மனமது நல்ல தாகும் வருவோரை ஆத ரிப்பள்
இனமது மெச்ச வாழ்வள் இடுக்கமாம் குணமும் கொஞ்சம்
வனிதையின் பூர்வம் சொல்வேன் ஆலங்காட் டதற்குக் கீழ்ப்பால்
சினமிலா வன்னிய வம்சம் ஜனித்ததுமே மதலை யுண்டாய் ;

25. நல்ல மனம் படைத்தவள். தன் வீட்டிற்கு வந்தவர்களை நன்ருக ஆதரிப்பாள். தன் ஜாதியார்கள் கொண்டாடும்படி வாழ்பவள். சில கெட்ட

குணங்களும் உண்டு. இவளுடைய பூர்வ ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். ஆலங்காடு என்ற கிராமத்திற்குக் கீழ்த் திசையில் உள்ள ஊரில் வன்னிய குலத்தில் பிறந்து, மணமாகி, மக்களைப் பெற்று வாழும் காலத்தில்

26. விரதாதி முட்டு செய்து வீண்பழி பெற்றுளென்றோம்
வரன் சொல்லைத் தடுத்து வாழ்ந்தாள் மாதுவு மந்தி யத்தில்
இருவிழி குற்ற மாயும் இருசெவி மந்த மாயும்
மறலியின் பதிக்குச் சென்று மலரயன் வரையப்பட்டு ;

26. கிருத்திகை விரதம் போன்ற நற்காரியங்களுக்கு இடையூறுகளை உண்டு பண்ணியதால் அவதூறை அடைந்து வாழ்ந்தாள். அந்தப் பாவத்தினால் இவளுக்கு அந்தியகாலத்தில் இரு கண்களும் குருடாயின. இரு காதுகளும் செவிடாயின. பிறகு யமனுலகம் சென்ற இவள் பிரம்ம தேவனால் படைக்கப்பட்டு ;

27. வந்தனள் வலையர் வம்சம் மாதுவும் வறுமை காணாள்
தன்தனம் பெருக்கம் செய்வள் சாற்றுவோமிவள் பின் ஜன்மம்
கந்தன்வாழ் பழனி தன்னில் கலப்பளாம் வைசியச் சேயாய்த்
தந்திமா முகனைப் பெற்ற தயாபரி கேட்டி டாயே.

27. இந்த வலையர் ஜாதியில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றாள். வறுமை இல்லாதவள். தனது செல்வத்தை விருத்தி செய்வாள். இவளுடைய மறு பிறவியையும் சொல்லுகின்றோம். சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளி இருக்கும் பழனியில், வைசிய குலத்தில் பிறப்பாள். விநாயகரைப் பெற்ற தாயே ! கேளுங்கள்.

28. இவன்பிதா பூர்வம் தன்னை யியம்புவோ மினி மே லாகத்
தவசிவாழ் மலைநா டதனில் ஜனித்தனன் குலால வம்சம்
அவனியில் பாண்டம் செய்து யாவர்க்கும் உதவி செய்து
சிவனடி ஓர் நாள் தன்னில் சென்றுமே பாண்டம் கேட்க ;

28. ஜாதகனின் தந்தையினுடைய பூர்வஜன்மத்தைக் கூறுகின்றோம். அகஸ்திய முனிவர் வாசம் செய்யும் பொதிய மலையில், குயவர் ஜாதியில் பிறந்து, மண் பாத்திரங்களைச் செய்து, அவைகளைப் பிறர்க்குக் கொடுத்து உதவினான். இவ்வாறு இருக்கையில் ஒரு நாள் சிவனடியார் ஒருவர் அவனிடம் சென்று ஒரு மண்பாத்திரம் யாசிக்க ;

29. குற்றமாம் பாண்டம் தன்னைக் கொடுத்தனன் அவர்கள் வாங்கிச்
சற்றினில் சமையல் செய்யத் தானது விரியக் கண்டு
அற்றவர் மனவெ றுப்பால் அறைகிறார் சாபம் தானும்
மற்றொரு ஜன்மந் தன்னில் வலையர்தம் குலமே தோன்றி ;

29. இவன் சிறிது சேதமடைந்த ஒரு பாத்திரத்தை அவர் கையில் கொடுத்து, அவரை அனுப்பிவிட்டான். நல்ல பாத்திரம் என்றே எண்ணி வாங்கிச் சென்ற அந்தச் சிவனடியார் அதை அடுப்பில் வைத்துச் சமையலுக்குத் தொடங்குகையில், அஃது உடைந்து விட்டது. உடனே இவனிடம் வெறுப் படைந்து, மறு பிறவியில், நீ, வலையர் ஜாதியில் பிறந்து ;

30. வாழ்குவா யென்று சொல்ல மருவிற்று அந்தத் தோஷம்
ஆதியில் வேறு காணுன் அந்தகன் பக்கல் சென்று
தாழ்வான விக்கு லத்தில் ஜனித்தனனென்று சொல்வோம்
சூழலே வேறு ஜன்மம் செப்புவோ மினிமே லாக.

30. வாழ்வாயெனச் சாபமிட்டார். அந்த சாபம் இவனை அடைந்தது. முன்ஜன்மத்தில் வேறு பாவம் இவன் செய்தவனல்லன். ஆகவே, அந்த ஒரு பாவமே இவனை இத்தாழ்வான குலத்தில் பிறப்பித்துவிட்டது. இவனுக்கு அடுத்து வரும் ஜென்மத்தையும் இங்குக் கூறுகின்றோம்.

31. [1] சிங்க நாடதனிலேதான் ஜனிப்பனும் சைவச் சேயாய்
இங்கிவன் செய்த புண்ணியம் இயம்புவீர் முனியே நீர் தாம்
அங்கம்மை பக்தி யாயும் அறிவோர்க்கு உதவி யாயும்
துங்கமா மனத்த னுயும் செப்புவோம் சைவச் சேயாய்.

31. இவன் மறுஜன்மத்தில் சிங்கநாட்டில் சைவ குலத்தில் பிறப்பான். மறு பிறவியில் சைவ குலத்தில் பிறப்பதற்கு இந்த ஜன்மத்தில் இவன் என்ன புண்ணியம் செய்தான் என்று தேவி கேட்க, முனிவர் பதில் கூறுகின்றார். இவன் (ஜாதகனின் தந்தை) உலக மாதாவாகிய உங்களிடம் பக்தி பூண்டிருப்பதாலும், அறிவிற் சிறந்தவர்களுக்கு உதவியமையாலும், விசால மனப்பான்மையோடு விளங்கியதாலும் மறுபடி உயர்ந்த சைவ குலத்தில்தான் பிறப்பான்.

32. முப்பது ஆறு ஆண்டில் மேவுவான் கால னுடு
அப்போது ரவியின் காலம் அறைந்தனம் பால னுக்கு
செப்புவோம் தன்மே லாக ஜீவிப்பா ளன்னை தாமும்
ஒப்புடன் நாற்ப தாண்டில் உறங்குவாளென்று சொல்வோம்.

32. ஜாதகனுக்கு முப்பத்தாறுவது வயது நடக்கும்போது ஜாதகனின் தந்தை மரணமடைவான். அப்போது ஜாதகனுக்குச் சூரியதசை நடைபெறும். அதற்குப் பிறகு சில காலம் ஜாதகனின் தாய் ஜீவித்திருந்து ஜாதகனுக்கு நாற்பதாவது வயது நடக்கும்போது இறப்பாள்.

33. அறுபது ஒன்று ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
திருமகனுடலம் ஏகும் ஐயமுனி தடுத்துச் சொல்வார்
குறை வயதென்று சொல்வோம் குருமதி கேந்திரம் நிற்க
நிறைவய தென்று சொல்வோம் நிமலியே கேட்டி டாயே.

33. அறுபத்தொன்றுவது வயதில் ஐப்பசி மாதத்தில் ஜாதகன் வேறு உலகம் ஏகுவான். இவனுக்கு இவ்வளவு நீண்ட ஆயுளுண்டு என்பதற்குக் காரணத்தைச் சொல்லுமென ஐயமுனி கேட்க புலஸ்த்திய முனி பதில் கூறுகின்றார். குருவும் சந்திரனும் ஒருவருக்கொருவர் கேந்திரத்தில் இருப்பதால் ஜாதகனுக்கு நீண்ட ஆயுளும் இருக்கும்.

[1] குறிப்பு.—சிங்கபுரம் என்று ஒரு நகரம் கலிங்க நாட்டில் உள்ளது. ஈண்டு, சிங்க நாடு என்பதால், சிங்கபுரம் உள்ள நாடாகிய கலிங்க நாட்டையே குறிக்கவேண்டும்.

ஜோதிட சாஸ்திரத்தில் கேந்திரம் என ஒன்றாவது, நான்காவது, ஏழாவது, பத்தாவது ஸ்தானங்களை, வழங்குவர்.

34. மறுஜன்மம் சோழ நாட்டில் வைசிய குலமு தித்துப்
பெருமையாய்ச் செட்டுச் செய்வன் பேசுவோ மிவனின் யோகம்
அறுஆண்டும் அல்ப யோகம் அதற்குப் பின் பிறைபோல் யோகம்
குறைவிலாக் குடும்ப மென்றேம் குவலயம் சேர்ப்பா னுகும்.

34. இந்த ஜாதகன் மறுஜன்மத்தில் சோழ நாட்டில் வைசிய குலத்தில் பிறந்து, மிகவும் சிறப்பாக வியாபாரம் செய்வான். இவனுடைய இந்த ஜன்மத்தில் நிகழும் யோகங்களைச் சொல்லுகின்றேம். இவன் பிறந்து ஆறு ஆண்டுகள் வரையில் பலன்கள் மிகவும் அல்பம். அதற்குப் பிறகு பிறைச் சந்திரன்போல யோகங்கள் வளரும். எவ்விதத்திலும் குறைவில்லாத குடும்பமாகும். பூமிகளையும் சேர்ப்பான்.

35. திருஇல்லம் செய்வா னும் இரண்டாயி ரம்பொன் சேர்ப்பன்
மருமமாய் முப்பான் மேலாயவன் துணைவேருய்ச் செல்வன்
குறைவுற குடும்பமென்றேம் கூறுவோம் பின்பால் சேதி
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலிகேளாய்.

35. அழகிய வீடு கட்டுவான். இரண்டாயிரம் பொற் காசுகளைச் சேர்ப்பான். [உத்தேச மதிப்பு ரூபாய் இருபதாயிரம்] ஜாதகனது முப்பத்தேழாவது வயதிற்குமேல் ஜாதகனின் சகோதரன் தனிக் குடும்பமாக வாழ்வான். இவனது குடும்பம் குறைவற்று செழிப்பாக இருக்குமென்று முன்னமேயே சொன்னேம். இவனைப்பற்றி விவரமாக இரண்டாம் பாகத்தில் சொல்லப் போகிறேம். பெரிய வயிற்றை உடைய விநாயகரைப்பெற்ற தாயே! கேளுங்கள்.

36. காவலன் ஜனிக்கும் காலே கடைநாளில் மூன்றும் பாதம்
தாவிய புதனிருப் புச் சாற்றுவோ மேழு ஆண்டும்
மேவிடும் திங்கள் பத்தும் விளம்புவோம் பலனை யாங்கள்
ஆவலாய் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

36. ஜாதகன் ஜனிக்கும்போது ரேவதி நக்ஷத்திரம் மூன்றும் பாதத்தில் சந்திரன் சஞ்சரிக்கின்றுன். ஆகவே புததசை இருப்பு வருஷங்கள் ஏழு, மாதங்கள் பத்து. இதன் பலனைச் சுருக்கமாக முன்பு சொன்னேம். பக்தர்களால் அன்போடு பூஜிக்கப்படும் தாயே! மேலும் திருவாய் மலர்ந்து எங்களைக் கேள்வி கேட்டருளவேண்டும்.

ஜாதகம் 22

1: பிறைமானில் ராகு சாடி புதன்கேது பானு சீயம்
குருநண்டில் புகர்சேய் கன்னி குலவிடச் சனியும் கோலில்
வரும்ஜன்மம் கடகமாகி வரைகுவீர் பலனே யென்று
அரன்தேவி கேட்கும் போது அத்திரி புகலு கின்றுர்.

ராகு	இராசி		லக்கினம் குரு
சந்திரன்	சக்கரம்		புதன் கேது சூரியன்
		சனி	சுக்கிரன் செவ்வாய்

மன்மத வருஷம் ஆவணி மாதம் 18-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவின் கடைசி ஜாமத்தில் ஜனனம். [ஆங்கில தேதி 1—9—1895.] நவக்கிரஹங்களின். பாதசாரங்கள் :—பூரம் 2-ல் சூரியன். சிரவணம் 4-ல் சந்திரன். உத்திரம் 2-ல் செவ்வாய். உத்திரம் 1-ல் புதன். புஷ்யம் 2-ல் குரு. ஹஸ்தம் 1-ல் சுக்கிரன் (வக்ரீ). சுவாதி 2-ல் சனி. பூரட்டாதி 1-ல் ராகு. பூரம் 3-ல் கேது. நக்ஷத்திரம் சிரவணம். சந்திர தசையில் இருப்பு வருஷம் ஒன்று, மாதங்கள் மூன்று.

1. சந்திரன் மகரத்திலும், ராகு கும்பத்திலும், புதன் கேது சூரியன் சிங்கத்திலும், குரு கடகத்திலும், சுக்கிரன் செவ்வாய் கன்னியிலும் சனி துலாத்திலுமிருக்க. இலக்கினம் கடகமாகவுமிருந்தால், இக்கிரஹ நிலையிலமைந்த ஜாதகனின் பலன்களைச் சொல்லுவீராக, என உமாதேவியார் கேட்கும்போது அத்திரி முனிவர் பதிலுரைக்கின்றுர்.

2. இந்தசே யானும் ஜன்மம் இல்லமும் கீழ்மேல் வீதி
தென்வாசல் வடக்கிலீசன் திருமாலும் தந்தி மேற்கில்
வல்லிமா காளி வாயு வரைகிறேம் சிற்றூர் தன்னில்
அந்தவன் சேஷ்டகை அருளுவா னென்று சொல்வோம்.

2. இப்படிப்பட்ட கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு வடக்கு வரிசையிலிருப்பதால் தென் திசை நோக்கி இருக்கும். வட திசையில் பரமசிவன் கோயிலும் விஷ்ணு கோயிலும் இருக்கும். மேற்கில் விநாயகர் ஆலயம் இருக்கும். வடமேற்கில் இடைச்சேரியும், காளி கோயிலும் உண்டு. இப்படிப்பட்ட சிறிய ஊரில் இந்த ஜாதகன் குடும்பத்தில் மூத்தவனுகப் பிறந்திருப்பான்.

3. அன்னையின் தந்தை யோகம் அவன்துணை களத்திர புத்திரர்
இன்னவன் யோகச்சேதி இயம்புவோ முன்பின் ஜன்மம்
தந்தையின் துணைநவத்தில் ஆண்மூன்று கன்னிநான்கு
சந்ததம் தீர்க்க மென்றேம் சடிதியில் வேருய்ச் செல்வர்.

3. இந்த ஜாதகனின் தாய் தகப்பனுர் சகோதரர், மனைவி புத்திரர் இவர்களைப்பற்றியும், ஜாதகனுடைய யோகம், முன்பின் ஜன்மங்கள் இவை களைப்பற்றியும் இந்த நூலில் கூறப்போகின்றேம். இந்த ஜாதகனுடைய தந்தைக்கு உடன் பிறந்தவர்கள் ஒன்பது பேராவர். அவர்களில் மூன்று சகோதரர்களும் நான்கு சகோதரிகளும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். (மற்றவர்கள் நசிப்பார்கள என்பது கருத்து) ஆனல் எல்லாச் சகோதரர்களும் சீக்கிரத்திலேயே பிரிந்து தனிக் குடும்பமாக வாழ்வார்கள்.

4. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சமகல்வி சிவந்த மேனி
தன்தன மதிக மில்லான் சல்லியப் பாதை யுள்ளான்
முந்தின போகம் காணுன் மேதினில் சிலநாள் செட்டு
இந்தவன் செய்வா னென்றேம் இடருகள் அதற்கு உண்டாம்.

4. தந்தையின் குணத்தைச் சொல்லப்போகிறேன். போதிய அளவு கல்வி கற்றவன். சிவந்த மேனியான். பணமில்லாதவன். கடன் தொந்தரவு உள்ளவன். பால்யத்தில் சுகங்களை அனுபவிக்காதவன். இவன் சில நாட்கள் வியாபாரம் செய்வான். அதற்கு இடையூறுகள் உண்டாகும். [ஆகவே வியாபாரத்தை நிறுத்தி விடுவான் என்பது கருத்து].

5. கிருஷியும் செய்வா னுகும் கௌரவ குடும்பியாகித்
தரையினில் குறைவு நேரும் தந்தைபால் சுகமு முள்ளான்
பராசரும் சொல்லு கின்றுர் பகருவீர் தந்தை சேதி
குறையென்றேர்க் குதவி செய்வன் குவலயம் செட்டுச் செய்வன்.

5. விவசாயம் செய்வான். கௌரவம் வாய்ந்த குடும்பியாவான். ஆனுல் சிறிது தாழ்வும் நேரிடும். தாயின் தந்தையி (பாட்ட) னுல் சுகத்தை அடைவான். [அம்மான் ஆதரவும் உண்டு என்பது கருத்து]. தந்தையின் செய்தியைச் சொல்லுமென பராசர முனிவர் கேட்க, அத்திரி மஹரிஷி கூறுகின்றுர். உதவியை நாடுபவர்களுக்கு உதவிபுரிவான். வியாபாரம் செய்வான்.

6. அன்னையு மிரண்டு மாகும் அனுஜிய பின்தாய்க் கின்னேன்
தன்துணை நான்கு தோன்றும் தங்கிடுமாண்பால் ரண்டு
கன்னிகை ஒன்று மாகும் காளையும் சுகமாய் வாழ்வன்
பொன்பணி பூமி சேர்ப்பன் பெருத்ததோர் குடும்பி யாவன்.

6. இவனுக்கு (சாதகனின் தந்தைக்கு) இரு தாய்மார்கள். இரண்டாவது தாய்க்குப் பிறந்தவன் இவன். இவனுக்கு நான்கு உடன் பிறந்தார்கள் தோன்றுவார்கள். அவர்களில் இரு சகோதரர்களும் ஒரு சகோதரியும் நீடித்து வாழ்வார்கள். இவனும் சுகமாக வாழ்வான். தங்கம், ஆபரணம், பூமி இவைகளைச் சம்பாதித்துச் சேமித்து வைப்பான். பெரிய குடும்பியாகவும் விளங்குவான்.

7. அவனுடைப் பூர்வம் சொல்வேன் ஆலங்காட் டதற்கு உத்ரம்
இவனுமே தீயின் வம்சம் எய்தியே சுகமாய் வாழ்ந்து
தவசிகட் கன்னமீந்து தாரணியில் நல்லோ னுகிப்
பவமிலா காலன் பக்கல் பிறந்தனனென்று சொல்வோம்.

7. அவனுடைய பூர்வஜன்மத்தைக் கூறுகின்றேம். ஆலங்காடு என்ற கிராமத்திற்கு வடதிசையில் ஒரு கிராமத்தில் வன்னிய குலத்தில் பிறந்து, சுகமாக வாழ்ந்து வந்தான். துறவிகளுக்கு அன்னமளித்தான். எல்லோருக்கும் நல்லவனுக நடந்து கொண்டான். இவ்வாறு தாருமிகனுக வாழ்க்கை நடத்தி அந்தியகாலத்தில் யமனுலகம் சென்றுன்.

8. வேதனுல் வரையப்பட்டு விளங்கினு னிவனே யென்றேம்
மேதினில் செட்டுச் செய்வன் வெறிகொள்ளும் தொழிலும்
[செய்வன்
பாதக மென்று லச்சம் பாரது சேர்ப்பா னுகும்
சூதமா மந்தி யத்தில் அற்பமாம் சல்லிய பாதை.

8. பிறகு பிரம்மதேவனுல் இங்குப் படைக்கப்பட்டிருக்கிறுன். வியாபாரம் செய்து வாழ்வான். வெறி கொள்ளும் தொழிலையும் [கள் வியாபாரத்தையும்] செய்வான். பிறர்க்குத் தீங்கு செய்வதற்கு அச்சம் கொள்வான். நிலங்களைச் சேர்ப்பான். அந்திய காலத்தில் சூதாட்டத்தில் சிறிது ஈடுபாடு ஏற்படும். கடன் உபத்திரவமும் சிறிது நேரிடும்.

9. பின்ஜன்மம் வேங்க டத்தில் பிறப்பனும் பிரம்ம சேயாய்
அன்னவன் மனைவி சேதி அறைகிறேம் சிவந்த மேனி
பொன்பணி அதிக முள்ளாள் புருடன்தன் மனம்போல் வாழ்வள்
கன்னிக்குத் துணைஆண் ஒன்று காதலி மார்கள் ரண்டு

9. இவன் மறுசென்மத்தில் திருப்பதியில் பிராம்மண சாதியில் பிறப்பான். அவனுடைய மனைவியின் (சாதகனின் தாய்) செய்திகளைக் கூறுகின்றேம். சிவந்த மேனியாள். பொன் ஆபரணங்கள் அதிகம் படைத்தவள். கணவனுடைய மனம் அறிந்து நடப்பவள். இவளுக்குச் சகோதரன் ஒருவன். சகோதரிகள் இருவர்.

10. சொன்னவர் தீர்க்க மெய்தும் தோகையும் யோக சாலீ
வந்தவர்க் கன்ன மீவள் மனமது கட்டமில்லாள்
அன்னம்போல் சாய லுள்ளாள் அவளுடைப் பூர்வம் சொல்வேன்
கன்னிய குமாரி பக்கல் காதலி கோகுலத்தில் ;

10. இங்குச் சொல்லப்பட்ட மூவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இவள் மிகவும் அதிருஷ்ட முள்ளவள். இவள், தனது வீட்டை நாடி வரு பவர்களுக்கு அன்ன மளிப்பாள். நெஞ்சில் கபடமில்லாதவள். அன்னப் பக்ஷிபோல அழகு வாய்ந்தவள். அப்படிப்பட்டத் தாயின் பூர்வஜன் மத்தைச் சொல்லுகின்றோம். இவள் கன்னியா குமரிக்கு அருகில் யாதவ வமிசத்தில் ;

11. உதித்துமே வறுமை யின்றி உத்தமி சுகமாய் வாழ்ந்து
சதியான காண ஞடு தன்வரன் முன்னே சென்று
விதியவன் வரையப் பட்டு விளங்கின ளிவளே யென்றோம்
அதிதியே இவள்பின் ஜன்மம் அறைகிறோம் விரிஞ்சி தன்னில்.

11. பிறந்து வறுமை இல்லாதவளாகி கணவன், குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்து, கடைசியில் யமனுலகம் சென்றாள். இப்பொழுது பிரம்ம தேவனால் இங்குப் படைக்கப்பட்டு இக்கடகலக்கின மகனுக்குத் தாயாக வாய்த்திருக்கிறாள். தேவியே! இவளுடைய பின் ஜன்மத்தைச் சொல்லு கின்றோம். இவள் மறு ஜன்மத்தில் விரிஞ்சி நாட்டில் ;

12. வருவளாம் க்ஷத்திரிய சேயாய் வரைந்த இக்குணத் தானுக்கு
திருமகள் தந்தை தானும் ஜனிப்பனு மென்று சொல்வோம்
அவன்சம யோக முள்ளான் அவனுடைப் பாரி யாலே
பெருமையும் குறைவு நேரும் பேசுவீர் அவன்தன் சேதி.

12. க்ஷத்திரிய வமிசத்தில் , பிறப்பாள். அப்பொழுது ஜாதகனின் தந்தையே அவளுக்கு மகனாக ஜனிப்பான். அவன் (ஜாதகன்) சமமான யோகம் உள்ளவன். அவனுடைய மனைவியால் அவனுக்குப் பெருமை யும் தாழ்மையும் ஏற்படும்.

13. புத்திமான் முன்கோ பத்தாள் பின்சாந்தம் அடக்க முண்டு
குத்திர வசனம் கூறுவன் குணமது நல்ல தாகும்
சுத்தமும் அடக்க முண்டு துணைவர்கள் ஆண்பால் நான்கும்
பத்தினி மார்கள் ரண்டு பகருவோம் தீர்க்க மாக.

13. மிக்க மேதாவியாக இருப்பான். முன்கோபி. ஆனல் பிறகு சாந்த னுவான். அடக்க முள்ளவன். கெட்டவார்த்தைகளையும் பேசுவான். ஆனல் மனத்தில் கெட்ட எண்ணங்கள் இரா. சுத்தனுனவன். அவனுக்குச் சகோதரர்கள் நால்வர். சகோதரிகள் இருவர். இவர்கள் அறுவரும் தீர்க்கமாக வாழ்வார்கள்.

14. இல்லமும் உத்ர மாகும் இடருகள் தாய்க்குடும்பம்
சொல்லுவோ மிருவர் தாமும் சோங்கின்மேல் செல்வா ராகும்
வல்லியின் பக்கல் தானும் வாழ்வனு மொருவன் தானும்
புல்குவான் சொந்த இல்லம் புக்கிப் பின் கிருஷி செய்வன்.

14. வடதிசையில் ஒரு வீடு ஏற்படும். தாய்க் குடும்பத்திற்குச் சில இடர் கள் வரும். நான்கு சகோதரர்களில் இருவர் ஜீவனத்திற்காகக் கப்பல் மூலம் வேறு தீவிற்குச் சென்று அங்கு வசிப்பார்கள். ஒருவன் இடைச் சேரிக்கருகில் வசிப்பான். மற்றொருவன சொந்த வீட்டில் வசித்துக் கொண்டு விவசாயம் செய்வான்.

15. சிலநாட்கள் வறுமை யுண்டாய்ச் சேமமாம் குடும்பி யாவன்
நலமையாய்ப் பின்பா கத்தில் நாட்டுவோ மவர்கள் சேதி
தலைவியின் பூர்வம் சொல்வேன் தண்டகா வனத்தி லேதான்
குலவிஞள் செக்கான் வம்சம் குறையின்றி வாழ்ந்தா
[ளென்றோம்.

15. சில நாட்கள் வறுமையினல் கஷ்டப்பட்டுப் பிறகு க்ஷேமமான குடும்பியாவான். சகோதரர்களைப் பற்றிய வரலாறுகளை பின் பாகத்தில் கூறப்போகின்றோம். ஜாதகனின் மனைவியைப்பற்றிய பூர்வஜன்ம வர லாறுகளைக் கூறுகின்றோம். இவள் முன் பிறவியில் தண்டகவனத்தில் வாணியச் செட்டி வமிசத்தில் பிறந்து, எவ்விதத்திலும் குறைவில்லாத வளாகி, சுகமாக வாழ்ந்து வந்தாள்.

16. மறவியின் பதிக்குச் சென்று மால்மகன் வரையப் பட்டு
அரிமதம் வடுகர் வர்க்கம் அணுகின ளிந்த மாது
திருமகள் சுகம்கு றைச்சல் திருப்பணி அதிக மில்லாள்
குறையான மனத்தா ளாகும் கூறுவோமிவள்பின் ஜென்மம்.

16. காலக் கிரமத்தில் இறந்தாள். பிறகு திருமால் மகனுகிய பிரம்ம தேவனல், விஷ்ணு மதத்தைச் சேர்ந்த இந்த நாயக்கர் குலத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றாள். இவளுக்குச் சாமானியம் சுகம் மட்டுதானுண்டு. அதிக ஆபரணமில்லாதவள். எப்பொழுதும் மனத்தில் ஏக்கமுடையவள். அவளுடைய பின் பிறவியைக் கூறுகின்றோம்.

17. பிருதிவி தலத்திலே தான் பிறப்பாளாம் செங்குந்த வம்சம்
குறையிலா வாழ்வா ளாகும் கூறுவோம் தந்தை பூர்வம்
அருணைக்கு உத்ரத்தில் அணுகிய பேரூர் தன்னில்
உறைந்தனன் ரெட்டி வம்சம் உத்தமி மதலை யுண்டாய்.

17. இவள் மறுஜென்மத்தில் காஞ்சியில் கைக்கோளர் வமிசத்தில் பிறந்து, குறைவில்லாமல் சுகமாக வாழ்வாள். ஜாதகனின் தந்தையின் பூர்வஜென்மத்தைப்பற்றிக் கூறுகின்றோம். திருவண்ணுமலைக்கு வடக்குத் திசையிலுள்ள பெரிய ஓர் ஊரில், ரெட்டி ஜாதியில் பிறந்து, மனைவி மக்க ளுடன் சுகமாக வாழ்ந்திருந்தான்.

18. பவமிலா விவசா யங்கள் பாலனும் செய்து மேதான்
அவனியில் நல்லோ ளுகி அனுகினுன் கால ஞடு
தவசியே பிரமன் லக்கம் சலகுலம் வடுகர் வம்சம்
இவனுமே யுதித்தா னென்றேம் இயம்புவோ மிவனின் யோகம்.

18. கெடுதல் இல்லாத விவசாயத்தைச் செய்தான். எல்லோருக்கும் நல்லவஞக இருந்தான். கடைசியில் மரணமடைந்த இவன், பிரம்மனுல் இங்கு நாயக்கர் ஜாதியில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறுன். இவனுடைய (தந்தையினுடைய) யோகங்களை மறுபடியும் சொல்லுகின்றேம்.

19. சல்லியப் பாதை யாலே சோங்கின் மேல் சிலநாள் செல்வன்
அல்லலாய்ப் பின்னுேன் செல்வன் அங்ஙனே சுகமு ண்டாகி
இல்லறம் சேர்வா ஞகும் இரணியம் கொஞ்சம் கொண்டு
நல்லதோர் மூன்ரு ண்டின்மேல் நல்முள குடும்பி யாவன்.

19. இவன் கடன் உபத்திரவத்திஞல் கப்பல்மூலம் வேறு தேசத்திற்குச் செல்லுவான். மிகவும் கஷ்டப்பட்டு, அங்குள்ள தனது தம்பியை அடைந்து, சுகமாக வசிப்பான். சென்ற இடத்தில் செல்வத்தைச் சம்பாதித்துக் கொண்டு தன் வீட்டிற்குத் திரும்பி வருவான். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு சிறப்பான குடும்பியாவான்.

20. மற்றவர் துணைவர் சேதி வரைகிறே மிரண்டி லேதான்
உற்றதோர் ஜாதகர்க்கு உரைக்கிறேம் பலனை யாங்கள்
சுத்தவான் கல்வி யுள்ளான் சொல்லது சுகமே யாகும்
வித்துவான் விஷவாக் குள்ளான் மேதினில் செட்டுச் செய்வன்.

20. இவனுடைய சகோதரர்களைப்பற்றிய வரலாறுகளை இரண்டாம் பாகத்தில் சொல்லப்போகின்றேம். இப்பொழுது ஜாதகனுடைய பலன்களைக் கூறுகின்றேம். சுத்தமானவன். கல்வியறிவு உடையவன். இவன் சொல்லும் வார்த்தைகள் செவிக்கு இனிமையாக இருக்கும். பண்டிதன். இவனுடைய அசுபவாக்குகள் பலிக்கும். வியாபாரம் செய்தும் வாழ்வான்.

21. ஈரஞ்சு ஆண்டு மேலாய் இவனுடைக் குடும்ப மேன்மை
பாருகள் விருத்தி செய்வன் பகைவரை நாசம் கொள்வன்
போரினில் செல்லா ஞகும் பிரபல புகழு மேற்பன்
தீரமில் லாத நெஞ்சம் ஜனஉப காரியாவன்.

21. பத்து ஆண்டுகளுக்கு மேல் இவனுடைய குடும்பம் மேன்மையை அடையும். நிலங்களை அபிவிருத்தி செய்வான். எதிரிகளை அழிப்பான். தானுக வலுவில் சண்டையில் ஈடுபடமாட்டான். இவனுக்கு மிகப்பெரிய புகழும் ஏற்படும். எவ்விஷயத்திலும் உறுதியான எண்ணம் இல்லாதவன். மக்களுக்கு உபகாரம் செய்வான்.

22. சொல்லதைக் காப்பா ஞகும் துணைவரை ஆதரிப்பன்
இல்லறம் புதிதாய்ச் செய்வன் இருபது ஆண்டு தன்னில்
அல்லல்க ளடையா ஞகும் யாவர்க்கும் நல்லோ ஞவன்
நல்லநாற் காலி யுண்டு நாதனுர் பக்தி பூண்டான்.

22. சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவான். சகோதரர்களை ஆதரிப்பான். இருபதாவது ஆண்டில் புதிய வீடு நிர்மாணிப்பான். சிக்கல்களை அடையமாட்டான். எல்லோருக்கும் நல்லவஞக வாழ்வான். சிறந்த காளை பசு முதலிய கால் நடைகளை உடையவஞகவும், பரமசிவனிடம் பக்தி பூண்டவஞகவும் இருப்பான்.

23. தன்துணை ஆண்பால் ரண்டு தையலர் அவ்வாறு தீர்க்கம்
பின்பாகம் விபர மாகப் பேசுவோம் துணைவர் சேதி
அன்னவன் மணத்தின் காலம் அறைகிறே மிருப தாண்டில்
கன்னிகை அன்னை வர்க்கம் கழறுவோம் குணத்தை யாங்கள்.

23. இந்த ஜாதகனுக்கு இரு சகோதரர்கள். இரு சகோதரிகள். இந் நால்வரும் தீர்க்க ஆயுளுடன் வாழ்பவர்கள். அவர்களைப் பற்றிய வரலாற்றை இரண்டாம் பகுதியில் பேசுவோம். இந்த ஜாதகனின் விவாஹ காலத்தைக் கூறுகின்றேம். இவனுக்கு இருபதாவது வயதில் மணம் நடக்கும். மணமகள் தாய் வருக்கத்தில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணங்களை நாங்கள் சொல்லுகின்றேம்.

24. மாநிறம் சமதே கத்தாள் மருமமில் லாதா ளாகும்
தேன்மொழி கூறு வாளாம் சிறுகான குணமில் லாதாள்
தானமும் தரும மிச்சை தன்பந்து மெச்ச வாழ்வள்
ஈனமாங் குணங்க ளில்லாள் இவளுமே யோக சாலி.

24. மாநிறமுள்ளவள். சமமான தேகக்கட்டு வாய்ந்தவள். கபடமில்லாதவள். தேன்போல இனிமையான மொழிகளைப் பேசுவாள். சண்டையிடும் குணமில்லாதவள். தான தருமங்களில் பற்றுள்ளவள். தன்னுடைய உறவினர் மெச்சும்படி வாழ்வாள். கெட்ட குணங்கள் இல்லாதவள், நல்ல அதிருஷ்டமுள்ளவளாகவும் இருப்பாள்.

25. தந்தையின் தாய்போ லொப்பள் தரணியில் வறுமை காணுள்
எந்தையே புத்திர பாவம் இயம்புவோ மாண்பால் ரண்டு
விந்தையாய்க் கன்னி மூன்று மேவிடும் தீர்க்க மாக
சந்தத மிவன் முன்ஜன்மம் சாற்றுவோம் கேளும்தாயே.

25. இவனுடைய தந்தையின் தாயின் (பாட்டி) சாயல் உள்ளவள். வறுமை இல்லாதவள். ஜாதகனுடைய புத்திரபாவத்தைக் கூறுகின்றேம். இரண்டு புத்திரர்கள். மூன்று புத்திரிகள். இந்த ஐவரும் நீண்டகாலம் வாழ்வார்கள். இந்த ஜாதகனின் முன்ஜன்மத்தைக் கூறுவோம். கேளுங்கள், தாயே!

26. தவனியின் மலைக்குத் தெற்கில் சார்ந்திடும் பேரூர் தன்னில்
பவமுள வைசியச் சேயாய்ப் பாரினில் செட்டுச் செய்து
நவனியில் மனைவி மைந்தர் நாயகன் சுகமாய் வாழ்ந்து
அவனியோர்க் குதவி செய்து அந்தகன் பக்கல் புக்கி ;

26. தவள மலைக்கு அருகில் தெற்குத் திசையிலுள்ள ஒரு பெரிய ஊரில் வைசிய குலத்தில் பிறந்து, வியாபாரம் செய்து, மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். உலகத்தோருக்கு அதிக உதவிகளைச் செய்தான். அந்தியகாலத்தில் யமனுலகம் சென்று ;

27. தனை நான்கோன் வரியப்பட்டு ஜனிப்பனு மிந்தப் பாலன்
நிலைமையா யிவனின் யோகம் நிகழ்த்துவோம் ஜனனந் தொட்டு
பலவித சல்லியங்கள் பாரினில் சமம் குறைச்சல்
விலகிடும் மாதுதானும் விளம்புவோம் பத்தாண்டும்மே ;

27. நான்கு முகம் படைத்த பிரம்மதேவனால் இங்குக் கடக லக்கினத்தில் பிறப்பிக்கப்பட்டான். இவன் பிறந்தது முதல் ஏற்படும் யோகங்களைச் சொல்லுகின்றோம். பல வழிகளில் கடன்கள் ஏற்படும். நிம்மதி இல்லாமல் திண்டாடுவான். இவன் மனைவி இவனைவிட்டு விலகி விடுவாள். பத்து ஆண்டுகள் ;

28. அல்லல்கள் அதிகமுண்டு அதன் மேலாய் பிறைபோல் யோகம்
சல்லியம் நிவிர்த்தியாகும் சதுஷ்பாதம் விருத்தியாகும்
நல்லதோர் குடும்ப மெய்தும் நற்சுக போஜனங்கள்
சொல்லது மேம்பாடெய்தும் தொகுத்தது முடிப்பானுகும்.

28. இவ்வாறு அல்லல்கள் அதிகமாகும். அதற்குப் பிறகு பிறைச் சந்திரன்போல யோகங்கள் விருத்தியாகி கடன் நீங்கி சுகமடைவான். கால்நடைகள் விருத்தியாகும். குடும்பம் கொந்தளிப்பின்றி நிம்மதியுடன் விளங்கும். சுகமான போஜனங்களைப் புசிப்பான். இவனுடைய வார்த்தைக்கு விசேஷ மதிப்புண்டாகும். மனத்தில் எண்ணிய காரியத்தை நிறைவேற்றுவான்.

29. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீர் அந்தச் சங்கை
செப்புவேன் கேளும் தாயே சனி குரு உச்சமாயும்
ஒப்புடன் கேசரி யோகம் உரைக்கும் பூமால யோகங்கள்
அப்பணி யோகமென்று அறைந்திட்டோம் மூன்று யோகம்.

29. நல்ல யோகங்கள் இவனுக்கு உண்டு என்று எக்காரணத்தினால் சொன்னீர் எனப் பார்வதிதேவி கேட்க அத்திரி ரிஷி சொல்லுவார், குரு-சனி ஆகிய இரு கிரகங்கள் உச்சமாக இருப்பதாலும், கேசரி யோகம் மாலிகா யோகம், பணியோகம் என மூன்று யோகங்கள் ஜாதகத்தில் இருப்பதாலும் இவனுக்கு மேற்சொன்ன பலன்கள் ஏற்படுமென்று திண்ணமாகச் சொல்லுகின்றோம்.

30. பலனதைப் புகலக் கேண்மோ பாரது சேர்ப்பா னுகும்
தலமது தீர்த்தம் தோய்வன் சகடு வாகனமு முள்ளான்
நலமுளோர் நேசம் கொள்வன் நற்பணி அதிகம் சேர்ப்பன்
குலத்துளோர் மதிக்க வாழ்வன் குவலயம் செட்டுச் செய்வன்

30. இவனுக்கு ஏற்படும் பலன்களைச் சொல்லுகிறோம் கேளுங்கள் நிலங்களைச் சேர்ப்பான். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். வண்டி முதலிய வாகன சௌக்கியங்கள் உடையவனுவான். பெரியோர்களுக்கு நண்பனுக இருப்பான். விலை யுயர்ந்த ஆபரணங்களைச் சேர்ப்பான். தன் குலத்தார் மதிக்கும்படி வாழ்வான். வியாபாரம் செய்வான்,

31. ஈராறு ஆண்டுதன்னில் இவன் தந்தை தந்தை கண்டம்
திரமாயத் தன்மேல் மூன்றும் செப்புவோம் தந்தை யன்னை
பாரினில் முப்பானுறில் பகருவோம் தந்தை கண்டம்
வேறொரு ஜன்மம் சொல்வேன் வித்தகி கேட்டிடாயே.

31, இவன் ஜனித்த பன்னிரண்டாவது ஆண்டில் இவனுடைய பாட்டன் மரணமடைவான். அதற்குப் பிறகு மூன்றும் ஆண்டில் பாட்டி மரணமடைவாள் ஜாதகனுடைய முப்பத்தாருவது வயதில் ஜாதகனின் தகப்பனர் மரணத்தை அடைவான். இறந்த பிறகு தந்தைக்கு ஏற்படும் வேறு ஒரு ஜன்மத்தைக் கூறுகின்ருேம் கேளுங்கள்.

குறிப்பு.—ஒன்பதாவது பாட்டில் ஒரு மறுபிறவியைச் சொன்னர். இங்கு மற்ருெரு பிறவியைக் கூறினர். ஆகவே இவனுக்கு வரும் இரு பிறவிகளைக் குறிப்பிட்டதாக அறியவேண்டும்.

32. ஆலங்காட்டதற்கு உத்தரம் அணுகிய சிற்றூர் தன்னில்
சாலவே வைசிய சேயாய் ஜனிப்பனுமென்று சொல்வோம்
வேல்விழி அன்னைக்கேதான் விளம்புவோம் நாற்பான் ஒன்றில்
ஏலவே கண்டம் நேரும் இயம்பின மொழி குன்றுவே.

32. ஆலங்காட்டிற்கு வடதிசையில் உள்ள சிறிய ஊரில் வைசிய குலத்தில் செனிப்பான். ஜாதகனுடைய தாயின் மரணகாலத்தைச் சொல்லுகின்ருேம். ஜாதகனுக்கு நாற்பத் தொன்ருவது வயது நடக்கும்போது அவனுடைய தாய், இறப்பாள். இவ் வார்த்தைகள் பொய்யாகா.

33. சாதகன் மரணகாலம் சாற்றுவோம் அறுபான் ரண்டில்
போதவே மகரமாதம் பின்பக்கம் துதியை தன்னில்
தீதான சூலையாலே புகலுவோம் கண்டம் தானே
ஓதுவோ மிவன் பின் ஜன்மம் உயர்காஞ்சி தன்னிலேதான்.

33. ஜாதகன் மரணமடையும் காலத்தையும் கூறுவோம். அறுபத்து இரண்டாவது வயதில் தை மாதத்தில் கிருஷ்ணபக்ஷம் துவிதியை திதியில் மரணமடைவான். அந்திய காலத்தில் இவனுக்குக் கொடிய சூலைநோய் ஏற்படும். அதனுல்தான் இவன் இறப்பான். இவனுக்கு ஏற்படும் மறு பிறவியைச் சொல்லுகின்ருேம். இவன் மறு பிறவியில் காஞ்சியில்.

34. கங்கையின் குலமுதிப்பான் கனமுள செட்டு செய்வன்
இங்கிவை அத்திரி சொல்ல இயம்புவார் பராசர்தானும்
கங்கையாய் பத்தாண்டுக்குள் ஜாதகனுடல மேகும்
அங்கதை சொல்லு மென்ன அரவுமே எட்டில் நிற்க.

34. வேளாள குலத்தில் உதிப்பான், பெரிய வியாபாரங்களைச் செய்வான் என்று இவ்வாறு அத்திரி சொன்னவுடன், பராசரர் ஒரு ஆக்ஷேபத்தைச் சொல்லுகிறார். இச் சாதகன், அவன் பிறந்து பத்து ஆண்டுகளுக்குள் மரிப்பான். ஏனெனில் ராஹு ஆயுள் ஸ்தானம் என்று சொல்லப்படும் எட்டில் இருப்பதாலும் ;

35. இதுவன்றி எட்டான் நாலில் இருப்பதால் தோஷம் சொன்னோம்
எதுவித நோய்கள் வந்தும் இரணியன் சென்மம் தங்க
சதமுடன் வயது தீர்க்கம் சாற்றின மொழி குன்றாது
அதிதிகன் சொல்லும் போது அம்பிகை கேட்க லுற்றாள்.

35. எட்டுக்கு உடையவனாகிய சனி நான்காமிடத்தில் இருப்பதாலும் அவன் பத்து வருஷங்களுக்குள் இறப்பான் என அத்திரி முனிவர் இந்த ஆக்ஷேபத்திற்கு பதில் உரைத்தார். இந்த ஜாதகனுக்கு, இலக்கினத்தில் குரு இருப்பதால் எவ்வித நோய்கள் வந்தாலும், அவைகள் நீங்கி, நாம் சொன்னபடி நீண்டகாலம் சுகமாக வாழ்வான்.

36. தந்தையின் அம்மான் பேரில் சாருவன் என்று சொன்னீர்
எந்தகாலத்திலேதான் ஏகுவான் விபரம் சொல்வாய்
இந்தவன் ஆருமாண்டில் ஏகிப்பின் பத்தாமாண்டில்
தந்தன ன்முடையனுகி சாருவன் என்று சொல்வோம்.

36. ஜாதகனின் தந்தை, அவனது அம்மான் ஆதரவில் வாழ்வான் என்று (ஐந்தாவது பாட்டில்) சூசனையாகச் சொன்னீர். அது எப்போது நிகழுமெனத் தெளிவாகக் கூறுமென்று பார்வதிகூற முனிவர் பதில் உரைக்கின்றார். இந்தச் ஜாதகன் பிறந்து ஆறும் ஆண்டில் அம்மான் ஆதரவில் வசிப்பது நிகழும். பத்தாவது ஆண்டில் தனக்குச் சொந்தமாக பணம் ஏற்பட்டு தனது வீட்டில் வசிப்பான் என்று சொல்லுகிறோம்.

37. தந்தை நாள் பூமிபின்னல் தானவன் சேர்ப்பானாகும்
முந்திய சல்லிய முண்டுவிலகிடும் பின்னாலே தான்
இந்தவன் பூமி பொன்னும் இயம்பு மீராயிரம் பொன்
கந்தனே யீன்றமாதே கழறின மொழி குன்றாது.

37. தந்தை காலத்து பூமிகளை (கடனால் விலகிய) ஜாதகன் மறுபடியும் அடைவான். வெகு நாட்களுக்கு முன் ஏற்பட்ட கடன்கள் தீரும். இவன் சம்பாதிக்கும் தங்கம் பூமி இவைகளின் மதிப்பு இரண்டாயிரம் பொற்காசுகள் (ரூபாய் இருபதாயிரம்)ஆகும். கந்தனை உலகத்திற்குத்தந்து உதவிய தாயே ! எங்கள் மொழி வீணாகாது.

38. ஜனித்திடு காலம் தன்னில் சந்திரன் தசையிருப்பு
குனித்திடு ஆண்டு ஒன்றும் கூறுவோம் திங்கள் மூன்றும்
வினையுண்டு சாதகர்க்கு விளங்கும் பின் துணைகள் தாமும்
தனமது செலவு முண்டு சஞ்சலமனங்க ளெய்தும்.

38. இந்த ஜாதகனின் ஜனன காலத்தில் சந்திர தசையில் இருப்பு வருஷம் ஒன்று, மாதங்கள் மூன்று. இந்தத் தசையின் பலன்களைச் சுருக்கமாகக் கூறுகின்றோம். ஜாதகனுக்குப் பல கஷ்டங்கள் நேரிடும். சகோதர விருத்தியுண்டு. வீண் செலவுகளும் செய்யநேரும். மனத்தில் கவலைகளும் அதிகமாகும்.

ஜாதகம் 23

1. கடகலக் கினமதாகக் கதிர்புதன் ஜன்மம் தங்
உடுபதி மூன்றி லாக உரகனும் நாலி லாக
முடவனு மாறி லாக வெள்ளியும் சேயீ ருறில்
அடல்குரு ஏழி லாக அறைகுவிர் பலனை யென்றாள்.

	கேது		சுக்கிரன் செவ்வாய்
	இராசி சக்கரம்		லக்கினம் சூரியன புதன்
குரு			
சனி		ராகு	சந்திரன்

1. சுபகிருத் வருஷம் ஆடி மாதம் 28-ஆந்தேதி வியாழக்கிழமை இரவு கடைசி முஹூர்த்தத்தில் ஜனனம். [ஆங்கில தேதி 7–8–1902] நவக்கிரஹங் களின் பாதசாரம்: ஆயில்யம் 2-இல் சூரியன். ஹஸ்தம் 1-இல் சந்திரன். திருவாதிரை 4-இல் செவ்வாய். ஆயில்யம் 1-இல் புதன் (அஸ்தம்). சிர வணம் 3-இல் குரு (வக்ரீ). புனர்வஸு 2-இல் சுக்கிரன். உத்ராடம் 1-இல் சனி. சித்திரை 4-இல் ராஹு. அசுவினி 2-இல் கேது. நக்ஷத்திரம் **ஹஸ்தம்.** சந்திர தசையில் இருப்பு வருஷங்கள் ஏழு, மாதங்கள் பத்து.

இலக்கினம் கடகமாகவும், சூரியன் புதன் கடகம் சந்திரன், கன்னி ராஹு துலாத்திலும், கேது மேஷத்திம், சனி தனுவிலும், சுக்கிரன் செவ்வாய் மிதுனத்திலும், குரு மகரத்திலுமாக அமைந்த இந்த ஜாதகத்தின் பலன் களைச் சொல்லுவீர்களாக என உமை வினவினுள்.

2. சங்கரி கேட்கும் போது சடைமுனி புகலுகின்ருர்
இங்கிவன் ஆண்பால் ஜன்மம் இவன்தந்தை யில்லம் சொல்வேன்
தங்கிடு மேற்கு வாசல் தென்வட வீதியாகும்
சங்கையாம் வாரி கீழ்ப்பால் காணுமே கெடியும் தென்கீழ்.

2. இவ்வாறு பார்வதிதேவி கேட்டவுடன், சடைமுனி பலன்களைச் சொல்லு கின்ருர். இக்கிரஹ நிலையில் பிறந்தக் குழந்தை ஆண். வீதி தெற்கு வடக்காக அமைந்திருக்கும். வீடு மேற்குத் திசையை நோக்கி இருக்கும். வீட்டிற்குக் கீழ்த் திசையில் ஒரு நீர் நிலையும் பாதையும் உண்டு. தென் கிழக்குத் திசையில் ஒரு கோட்டையும் இருக்கும்.

3. இந்திர நகர மொப்பாம் இரங்குமில் வடபால் நோக்கம்
அந்தஇல் . . . . . வாடையாகும் அளகேச நகர மொப்பாம்
சந்திரன் கோகுலத்தில் தோன்றுவானிரண்டாம் ஜன்மம்
தந்தைதாய் துணைவர் யோகம் தன்மனை புத்திர யோகம் ;

3. அந்த ஊர் அழகில் இந்திர நகரத்திற்குச் சமமாக விளங்கும். குபேரன் நகரம் [அளகாபட்டணம்] போல் ஐசுவரியம் நிறைந்தது. இந்த ஜாதகன் கோகுல [யாதவவமி]சத்தில் குடும்பத்திற்கு இரண்டாவது குழந்தையாக ஜனித்திருப்பான். இவனுடைய தாய் தந்தை சகோதரர் மனைவி புத்திரர் இவர்களின் யோகங்களைப்பற்றியும் ;

4. பாலகன் யோகச்சேதி பகருவோ மிந்நூல் தன்னில்
சாலவே . . . . . .தைக் கேதான் சகோதரர் ஆண்பாலொன்று
ஏலவே தீர்க்க மெய்தும் இயம்புவோம் பின்பால் சேதி
ஞாலமேல் பிதா குணத்தை நவிலுவோம் தாயே கேளும்.

4. ஜாதகனின் யோகங்களைப்பற்றியும் இந்த நூலில் சொல்லப்போகின் ருேம். . . . .இந்த ஜாதகனுக்குச்சகோதரன் ஒருவன்தான் உண்டு. அவன் தீர்க்காயுளுடன் வாழ்வான். அவனைப்பற்றிய செய்திகளைப் பின் பகுதியில் சொல்வோம். தாயே ! ஜாதகனுடைய தந்தையின் குணங்களைச் சொல்லு கின்ருேம். கேளுங்கள்.

5. உத்தரம் மேட ராசி உதிப்பனுமால்நி றத்தன்
வித்தையு மிரண்டு கற்பன் விவேகியாம் வாத தேகி
செத்தவர்த . . . . .ம் செய்கையு முடையனுகும்
வெற்றிசே ராசர் மூல வியாதியை நிவிர்த்தி செய்வன்
எத்திசை வாசம் செய்வன் ஏவலா ளுடைய னுகும்.

5. அவன், உத்தர நக்ஷத்திரத்தில் மேஷ லக்கினத்தில் ஜனித்திருப்பான். கருத்த மேனியான். இரு விதமான கல்விகளை [பாஷைகளை]க் கற்றிருப் பான். நிரம்ப விவேகமுள்ளவன். வாத தேகம் வாய்ந்தவன். பெருமை வாய்ந்த ஒரு அரசனுடைய மூல வியாதியை நிவிருத்தி செய்வான். பல ஊர்களில் வாசம் செய்வான். இவனுக்குக் கீழ்ப்படிந்து நடக்கும் பல சேவகர்களை உடையவனுவன்.

6. அரசரால் தொழிலு மேற்பன் யாவர்க்கு மிவன்சொல் மேன்மை
வருவோர்கள் வினையைத் தீர்ப்பன் . . . . . . வார்த்தை சொல்வன்
தறிபடக் கூரு னுகும் சர்ப்பம் போல் கோப மேற்பன்.
மருமத்தை வெளி விடாதான் மஹாதலம் செல்வா னுகும்.

6. அரசரது ஆதரவினுல் தொழிலை அடைவான். மற்றவர்களுடைய வார்த்தைகளைக் காட்டிலும் இவன் வார்த்தையை உலகில் அதிகம் மதிப் பார்கள். அழுத்துமாகக் கண்டித்துப் பேசாதவன். பாம்பிற்குக் கோபம் வருவதுபோல இவனுக்கும் கோபம் வரும். ரஹஸ்யத்தை யாருக்கும் சொல்லமாட்டான். பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லு வான்.

7. பந்துவும் மதிக்க வாழ்வன் பாக்கியம் சேர்ப்பா னுகும்
விந்தையாய்ப் பேசுவானும் விமலிமார் போக வானும்
எந்திடம் பெருமை யேற்பன் ஈகையும் கொஞ்ச முண்டு
சிந்தையு மிரண்டு மாகும் செப்புவோ மிவன்பின் ஜன்மம்.

7. பந்துக்கள் மெச்சும்படி வாழ்க்கையை நடத்துவான். ஐசுவரியத்தை அதிகம் சேமிப்பான். பிறர் ஆச்சர்யப்படும் வகையில் பேசுவான். பெண்களிடம் காதல் கொண்டவன். எங்குச் சென்றாலும் பெருமையை அடைவான். சிறிது கொடுக்கும் குணமும் அவனிடம் உண்டு. மனத்தில் ஒன்றை எண்ணி, அதை வெளியிடாமல், வேறு எண்ணத்தை வாக்கினுல் தெரிவிப்பான். இவனுடைய பின் ஜன்மத்தைப்பற்றியதைக் கூறுவோம்.

8. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறேம் தணிகை கீழ்ப்பால்
பிந்திய ஊரிலே தான் பிறந்தனன் ரெட்டி வம்சம்
பொன்பொரு ளுடையா னுகிப் பூமியும் பெருக்க முண்டாய்த்
தன்மனை மதலை யுண்டாய்த் சண்முகன் பக்தி பூண்டான்.

8. இவன் முன் ஜன்மத்தில் திருத்தணி க்ஷேத்திரத்திற்குக் கீழ்த் திசையிலுள்ள ஓர் ஊரில் ரெட்டி சாதியில் பிறந்தான். பணத்தையும் பொருள்களையும் அடைந்து, பூமிகளையும் விருத்தி செய்து வந்தான். மனைவி மக்களுடன் சுகமாக வசித்தான். சுப்பிரமணிய சுவாமியிடம் விசேஷ பக்தி பூண்டிருந்தான்.

9. அதிதிசன் நேச முண்டாய் அந்தகன் நகரம் சென்று
விதியவன் வரையப்பட்டு விளங்கி னுனிவனே யென்றேம்
அதிபதி யாக வாழ்வன் அறைந்தஇக் குணத்தா னுக்கு
இதுசுத னுதிப்பா னுகும் இயம்புவோ மிவன்கு ணத்தை.

9. விருந்தாளிகளை மிகவும் அன்புடன் உபசரித்தான். அந்திய வயதில் அந்தகன் உலகம் சென்ற இவன் பிரம்மதேவனுல் இங்குப் படைக்கப்பட்டிருக்கிறன். எப்போதும் யஜமானனுகவே வாழ்வான். இவ்வாறு குணம் படைத்தவனுக்கு இந்த ஜாதகன் மகனுகப் பிறந்திருக்கிறன். சாதகனுடைய குணங்களைக் கூறுகின்றேம்.

10. மாநிறம் சமதேகத்தான் வார்த்தையும் சுகமே யெய்தும்
ஈனமாம் குணமில் லாதான் இரு நிறம் கல்வி கற்பன்
ஆனவர் நேசம் கொள்வன் அரசர்கள் உறவு கொள்வன்
வானவர் பக்தி பூண்பன் வர்க்கத்தைக் காப்பா னுகும்.

10. மாநிறமுள்ளவன். சமமான உடல் வளர்ச்சி பொருந்தியவன். இவனது வார்த்தைகள் இனிமையாக இருக்கும். கீழான குணங்கள் இல்லாதவன். இரு கல்விகளில் [பாஷை]களில் நிறைந்த அறிவு உடையவனுவான். செல்வாக்குள்ள பெரியோர்களின் நட்பு இவனுக்கு உண்டு. அரசர்களுடனும் தொடர்பு உள்ளவனுக இருப்பான். தெய்வபக்தி பூண்டவன். தன்னுடைய உறவினர்களை விசேஷமாகப் பாதுகாப்பான்.

11. அன்னிய பாஷை மேன்மை பலவித தொழிலு முள்ளான்
பொன்பணி அதிகம் சேர்ப்பன் பிதுர்ஊரில் வாசம் செய்வன்
துன்பங்கள் ஒருவர்க் கெண்ணுன் தொடுத்ததை முடிப்பா னுகும்
தன்சொல்லு மடக்க முண்டு சலித்தோர்க்கு உதவி செய்வன்.

11. ஆங்கிலம் போன்ற அந்நிய பாஷைகளிலும் மேன்மையை அடைவான். பல விதத் தொழில்களைச் செய்வான். தங்கத்தையும், ஆபரணங்களையும் அதிகமாகச் சேமிப்பான். தன் பிதா வசித்த ஊரிலேயே இவனும் வாசம் செய்வான். ஒருவருக்கும் தீங்கை எண்ணமாட்டான். ஆரம்பித்த வேலைகளை வெற்றியுடன் முடிப்பான். அடக்கமான வார்த்தைகளைப் பேசுவான். கஷ்டப்படுபவர்களுக்கு உதவிபுரிவான்.

12. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
நாலுகேந் திரத்தில் கோள்கள் நயப்புட னிருப்ப தாலும்
மால்பானு ஜன்மம் தங்க மருவிடு பருவதயோ கங்கள்
சாலவே மச்ச யோகம தாசி யோகங்க ளென்றும்.

12. இந்தப் பாலகனுக்கு நல்லயோகப்பலன்களைச் சொன்னீர்கள். அதற்கான காரணங்களையும் சொல்லுங்கள் எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் உரைக்கின்றர். நான்கு கேந்திரங்களிலும் [இலக்கினத்திற்கு ஒன்று நான்கு, ஏழு பத்தாம் இடங்களிலும்] கிரஹங்கள் இருப்பதாலும், சூரியனும் புதனும் இலக்கினத்தில் இருப்பதாலும் பருவதயோகம், மச்சயோகம் வேசியோகம். ஆக .

13. திருதிய யோகத் தாலே ஜகராசன் தன்னுல் உய்வன்
அதிகாரம் பெற்று வாழ்வன் அங்கவாகனமு மேற்பன்
பதியது மூன்று சேர்ப்பன் பாகமாம் குடும்பி யாவன்
நதிசேது பதிக்குச் செல்வன் நாதனுர் பக்தி பூண்பன்.

13. மூன்று யோகங்கள் இருப்பதால் அரசாது ஆதரவை விசேஷமாகப் பெற்று அதிகாரம் செய்துக்கொண்டு வாழ்வான். குதிரை முதலிய சிறந்த வாகனங்களை அடைவான். மூன்று வீடுகளைக் கட்டுவான். கௌரவம் வாய்ந்த குடும்பியாகவும் வாழ்வான். புண்ணிய நதிகளிலும் சேதுவிலும் நீராடுவான். சிவபிரானிடம் மிக்க பக்திபூண்டவன்.

14. சாதகன் துணைஆண் ரண்டு சத்திமார் மூவ ரென்றேம்
ஓதின ஐந்தும் தீர்க்கம் உரைக்கிறேம் பின்பால் சேதி
மாதுரு குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாவன்
சூதிலான் அடக்க வார்த்தை சொல்லுமுன் கோபம் கொஞ்சம்.

14. ஜாதகனுடைய சகோதரபாவத்தைக் கூறுகின்றேம். இரண்டு சகோதரர்கள், மூன்று சகோதரிகள். இங்குச் சொல்லப்பட்ட ஐந்து உடன்பிறந்தார்களும் தீர்க்கமாக வாழ்வார்கள். இவர்களைப்பற்றிய செய்திகளை இரண்டாம் பகுதியில் சொல்லப்போகின்றேம். சாதகனின் தாயினு

டைய குணங்களைச் சொல்லுகின்றோம். மாந்தளிர்போல் சிவந்த மேனியாள். கபடமில்லாதவள். அடக்கமான வார்த்தைகளைக் கூறுவாள். அவளுக்குச் சிறிது முன்கோபமும் உண்டு.

15. அன்னம்போல் வடிவு மொக்கும் அற்புத வார்த்தை யுண்டு
அன்னமும் அன்பாயீவள் ஆளன்தன் மனதுக் கேத்தோள்
அன்னியர் குற்றம் சொல்லாள் அறிவுளாள் ஊகை சாலி
அன்னவள் வந்த பின்பு ஆளனுக் கதிக யோகம்.

15. அன்னம்போல் அழகு உடையவள். பிறர் வியக்கத்தக்க வார்த்தைகளைப் பேசுவாள். எல்லோருக்கும் அன்புடன் அன்னமளிப்பாள். தன் கணவனது விருப்பத்தின்படி நடப்பாள். பிறர் குற்றத்தைச் சொல்லமாட்டாள். நல்ல அறிவு படைத்தவள். மதியூகமும் வாய்ந்தவள். அவள் இக்குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட பிறகு, கணவனுக்கு நல்ல அதிருஷ்டம் வாய்க்கும்.

16. அன்னையும் தீர்க்க ஜீவி மாதுரு இரண்டே யாகும்
இங்கிவளி ளையா ளுக்கு இறங்கினளென்று சொல்வோம்
அங்கிவள் துணைஆண் மூன்று அறைகிறோம் தீர்க்க மாகும்
நங்கைமார் நாச மெய்தும் நாயகி கேட்டி டாயே.

16. ஜாதகனின் தாய் தீர்க்க ஜீவியாக இருப்பாள். இவளுக்கு இரண்டு தாய்மார்கள். அவர்களில் இளையவளுக்குப் பிறந்தவள் இவள். இவளுக்கு மூன்று சகோதரர்கள். சகோதரிகள் பிறப்பினும் நீடித்திரார். தேவியே! மேலும் கேளுங்கள்.

17. மாதுமுன் ஜன்மம் தன்னை வரைகிறோம் விரிஞ்சி நாட்டில்
காதலி வைசியச் சேயாய்க் கலந்துமே சுதர்க ளுண்டாய்ப்
போதன முடையாளாகிப் புக்கதோர்......குதவி செய்து
சீதள பிறை யணிந்த தேவன்தம் பக்தியாயுள்ளாள்.

17. ஜாதகனுடைய தாயின் பூர்வ ஜன்மத்தைக் கூறுகின்றோம். இவள் முற்பிறவியில், விரிஞ்சி நாட்டில், வைசிய குலத்தில் பிறந்து, மணமாகி, கணவனுடனும், குழந்தைகளுடனும் சுகமாக வாழ்ந்து வந்தாள். அறிவும் செல்வமுமுடையவளாக இருந்தாள். குளிர்ந்த சந்திரனைத் தலையில் அணிந்த சிவபிரானிடம் பக்திகொண்டும் இருந்தாள்.

18. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் நகரம் சென்று
பிரமனால் வரையப்பட்டு பிறந்தவளென்று சொல்வோம்
குறைவிலாக் குடும்ப மேற்பள் கூறுவோ மிவள் பின் சென்மம்
திருவள்ளூர் தன்னி லேதான் ஜனிப்பளாம் சைவசேயாய்.

18. தருமம் செய்வதில் ஊக்கமுடையவளாகவும் விளங்கினள். இவ்வாறு நற்குணம் வாய்ந்த இவள் அந்திய காலத்தில் இவ்வுலகம் விட்டு விண்ணுலகம் ஏகினள். இப்பொழுது பிரம்ம தேவனால் இப்புவியில் பிறப்

பட்டு, இக் கடகலக்கின மகனுக்கு தாயாகவாய்த் திருக்கின்றாள். எவ்விதத்திலும் குறைவில்லாத [சுபிட்சமான] குடும்பத்தை நடத்துவாள். இவனுடைய மறு ஜன்மத்தையும் சொல்லுகின்றோம்: இவன் மறு பிறவியில் திருவள்ளூரில் சைவ குடும்பத்தில் பிறப்பாள்.

19. கருமகால ங்கள் தம்மைக் கழறுவீர் முனியே நீர் தாம்
குருதசை சனியின் புத்தி கூடிய காலம் தன்னில்
திருமகன் முப்பா னேழில் செப்புவோம் தந்தை கண்டம்
மறுஜன்மம் காளத்தி தன்னில் வருவனும் சைவச் சேயாய்.

19. இந்த ஜாதகன் கருமம் செய்யவேண்டிய காலத்தைச் சொல்லுவீராக எனப் பார்வதி கேட்க, மஹரிஷி கூறுகின்றார். குருதிசையில் சனி புக்தி நடைபெறும் போது, சாதகனுக்கு முப்பத்தேழாவது வயது நடக்கும். அப்போது இவனுடைய தந்தை மரணமடைவான். தந்தையின் மறு ஜன்மத்தையும் சொல்லுகின்றோம். இவன் காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் சைவ வமிசத்தில் பிறப்பான்.

20. இந்தவோர் ஜன்மம் தன்னில் இவன்பொ ருளிச்சையாயும்
விந்தையாய்ச் சொல்லி ரண்டு விரதங்கள் முட்டுச் செய்தும்
அந்தவன் வாழ்வ தாலே அவன்சைவ குலமெ வ்வாறு
முந்தியே புகலு மென்ன மொழிகுவார் அத்திரி தாமும்.

20. இந்தச் ஜன்மத்தில் இவன் (தந்தை) பிறர் பொருளில் ஆசை கொண்டிருந்தான். மனத்தினால் ஒன்றை எண்ணி, வாக்கினால் ஒன்றைச் சொல்லிவந்தான். [திரிகரண சுத்தி இல்லாதவன் என்பது கருத்து] பல தருமமான விரதங்களுக்கு இடையூறுகள் செய்திருக்கிறான். ஆகவே இவ்வாறு பாவங்கள் செய்தவனுக்கு உயர்ந்த சைவகுலத்தில் ஏவ்வாறு பிறக்க முடியும்? அதற்குப் பதில் சொல்லுவீராக என்று பார்வதி கேட்க, அத்திரி பதில் உரைக்கின்றார்.

21. சிலர்க்குஆ பத்தைக் காத்தும் தேவதா தலங்கள் சென்றும்
தலைவனும் வாழ்வ தாலே ஜனிப்பனும் என்று சொல்வோம்
குலவிய அன்னைக்கே தான் கூறுவோம் நாற்பா னலில்
விலகுவாள் கால னுடு விமலியே மேலுங் கேளே.

21. அவன், நீங்கள் சொன்னபடி பாவங்களைச் செய்தவனாயினும் சிலரை ஆபத்துக்களிலிருந்து காப்பாற்றி இருக்கின்றான். மேலும் பல தேவாலயங்களுக்குச் சென்று, அங்கு எழுந்தருளி இருக்கும் கடவுள் மூர்த்திகளை வணங்கி வழிபட்டிருக்கின்றான். ஆகையால் இந்தப் புண்ணியங்களால் உயர்ந்தஜாதியில் பிறப்பான் என்று சொன்னோம். [முன் சொன்ன பாவங்களுக்கு அப்பிறவியில் வேறு கஷ்டங்களை அனுபவிப்பான் என்பது கருத்து] ஜாதகனின் தாய், ஜாதகனுக்கு நாற்பத்து நான்காவது வயது நடக்கும் போது இறப்பாள். மேலும் கேளுங்கள். சொல்லுகிறோம்.

22. உதித்த சேய் மணத்தின் காலமுரைக்கிறோமொருபா னென்பான்
அதிபதி மேல்பால் தோன்றும் மாதுரு வர்க்கம் தன்னில்
சதியிலா மனத்தா ளாகும் சற்பாத்திரி கல்வி மானும்
துதிசெய்வோர்க் கன்ன மீவள் தோழந்தன் மனதுக் கேத்தோள்.

22. பிறந்திருக்கும் இந்த ஜாதகனின் விவாஹ காலத்தைச் சொல்லுகின்ேறாம். இவனுக்குப் பத்தொன்பதாவது வயதில் விவாஹம் நடைபெறும். பெண், மேற்குத்திசையில் மாதுரு வருக்கத்தில் ஜனித்திருப்பாள், அந்தப் பெண் கபடமில்லாதவள். எல்லோருடைய அன்பிற்கும் பாத்திரமானவள். கல்வியறிவும் படைத்தவள். அவளைப்பற்றித் துதித்துப் பேசினுல் மகிழ்ச்சியடைந்து அன்னமிடும் சுபாவம் உள்ளவள். பிறர் குற்றங்களைக் கவனிக்காதவள். தன்னுடைய கணவன் மனத்திற்கு உகந்தவள்.

23. பால் பாக்கிய முடைய ளாகும் பகையென்று மன தில் வையாள்
சீலமு முடையா ளாகும் சிந்தையும் நல்ல தாகும்
மால்மனையேற்பதாகும் வருவோரை ஆத ரிப்பாள்
வேல்விழி தீர்க்க ஜீவி விளம்புவோம் புத்திர பாவம்.

23. பால்பாக்கியம் உடையவள். ஒருவர் பேரிலும் பகைமை கொள்ளாதவள். நற்சீலம் உடையவள். மனத்தில் நன்மைகளையே நினைப்பாள். வீடு நிலம் முதலிய பொருள்களை அடைவாள். வீட்டிற்கு வருபவர்களை அன்புடன் ஆதரிப்பாள். அவள் தீர்க்காயுளுடன் வாழ்வாள். குழந்தைகளிடம் மிக்க அன்புகொண்டவள்.

24. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் எழுவர் தோன்றும்
சுத்தமாய் ஆண்பால் ரண்டு தோகையர் அவ்வாறு தீர்க்கம்
குற்றமாம் முதலும் ரண்டும். கூறுவோ மிவ்வா றென்ரேறாம்
எத்தகை பலத்தி னுலே இயம்பினீர் அந்தச் சங்கை.

24. இந்த ஜாதகனின் புத்திர விருத்தியைப்பற்றிச் சொல்லுகின்ேறாம். இந்தத் தம்பதிகளுக்கு ஏழு குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் இரு பிள்ளைகளும் இரு பெண்களும் நீடித்து வாழ்வார்கள். முதலில் பிறக்கும் இரு குழந்தைகளும் நஷ்டமாகும். இவ்வாறு முனிவர் கூறியவுடன். அதற்குக் காரண மென்ன, என தேவி வினவினுள்.

25. அஞ்சினுக் குடையோன் சேயாய் அருரண்டில் புகரும் நிற்கத்
துஞ்சிடும் முதலில் என்ரேறம் செப்புவோ மிவன்முன் ஜன்மம்
கச்சி மாநகரம் தன்னில் கலந்தனன் வேளான் வம்சம்
மிஞ்சிய பொருள் படைத்து வேதியர் தொண்டு பூண்டான்.

25. முனிவர் பதில் உரைத்தார். புத்திரபாவத்திற்குடைய செவ்வாயும் சுக்கிரனும் பலமற்றுப் பன்னிரண்டில் தங்கியிருப்பதால் முதல் இரு குழந்தைகளும் நீடித்திரா என்று சொன்ேனும். இவனது (ஜாதகனது) முன் ஜன்மத்தைக் கூறுகின்ேறாம். இவன் முற்பிறவியில் காஞ்சியில் வேளாள வம்சத்தில் பிறந்து, ஏராளமான செல்வம் படைத்தவனுகி, சிறப்பாக வாழ்ந்தான். பிராம்மணர்களுக்குத் தொண்டு செய்தான்.

26 முன்வினை யில்லா தாகி மேவினன் கால னூடு
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப்பாலன்
அன்னவன் யோகம் சொல்வேன் அரசர்பூசிமுத மாவன்
மன்னரால் அதிகா ரங்கள் மருவிடும் பால னுக்கு.

26. ஒரு பாவமும் செய்யாதவனுகிய இவன் அந்திய காலத்தில் இறந்து, பின்னுல் இங்குப் பிறந்திருக்கிறுன். இவனுடைய யோகங்களைக் கூறுகின்ேறாம். அரசர்களால் கௌரவிக்கப்படுவான். அரசருடைய ஆதரவினுல் இவனுக்கு அதிகாரமுள்ள பதவிகள் வந்திடும்.

27. பிறந்தவன் முதலாய் யோகம் தலைவன்ன் மரண மட்டும்
பிறைபோல செல்வ மோங்கும் பேசுவோம் மத்தில் சங்கை
குருவீயன் தசைபூர் வத்தில் கோள்களும் மனது துன்பம்
வருகுமே அநேக மாக மன்னவன் ஏழில் தங்க ;

27. இந்த ஜாதகனுக்குப் பிறந்தது முதல் மரண மட்டும் நல்ல யோகங்கள் உண்டு. பிறைச் சந்திரன் போல செல்வம் ஓங்கும். ஆனுல் குருதசை ஆரம்பத்திலும் சனிதசை ஆரம்பத்திலும் கோள்கள் சொல்லப்படுவதால் துன்பங்கள் அநேகம் நேரிடும். ஆயினும் குரு ஏழில்தங்கி இருப்பதால், அத்துன்பங்கள் ;

28. பரிதி முன் பனிபோல் நீங்கும் பராசருமறித்துச் சொல்வார்
திருமகன் தனக்கு ராஜயோகமும் செப்பி னீர்கள்
வருகிற காலம் சொல்வாம் மாரனுக்கிருபான் ரண்டில்
அரசகுலத் தொழிலும் வாய்க்கும் ஐம்பது ஆண்டு மட்டும்.

28. சூரியன் முன் பனிபோல, நீங்கும். முன்சொன்ன யோகங்களுக்குப் பங்கம் விளையாது. இங்கு பராசரர் சொன்னுர். இந்த ஜாதகனுக்கு ராஜயோகம் ஏற்படும் என்று சொன்னீர்கள். அந்த யோகம் எந்த வயதில் ஏற்படும் ? அதைச் சொல்லுங்கள் என, அத்திரி கூறுகின்றுர் :— ஜாதகனுக்கு இருபத்திரண்டாவது வயதில் அரச குலத்தொழில் வாய்க்கும். அஃது, ஐம்பதாவது ஆண்டு மட்டும் நீடித்து நடைபெறும்.

29. சந்திரன் பிறைபோல் யோகம் தங்கிடும் என்று சொல்வோம்
மந்திரி தசைகாலத்தில் மருவிடும் சிலது கோள்கள்
எந்தக்கோள் வந்த........ஏழினில் குருவும் தங்க
வந்தகோள் விலகு மென்ரேறம் மன்னவன் தசைவி சேஷம்.

29. இவனுடைய யோகங்கள் வளர்பிறைச் சந்திரன் போல வளரும் என்று முன்பே சொன்ேனும். தேவமந்திரியான குருதசை ஆரம்பத்தில் சில இடையூறுகள் ஏற்படும். ஆனுல் ஏழில் குரு இருப்பதால் வந்த இடையூறுகள் சுலபமாக விலகும். குருதசை மிகவும் சிறந்தது என்றும் சொன்ேனும்.

30. காம ணம் யாது சொல்வாய்க் காரியுங் குருவு மரரி
ஆறேழி லிருப்ப தாலே அவர்தசை விசேஷயோகம்
பாரில்லம் சேர்த்த லுண்டு பாக்கியம் பெருக்க மாகும்
வேறுதீங் கில்லா............வடதிசை அரசன் ஒப்பாம்.

30. வந்த இடையூறுகள் விலகும் என்று சொல்லுவதற்குக் காரணம் என்ன ? எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் உரைக்கின்றார். குரு, சனி வீட்டிலும், சனி, குருவீட்டிலும் பரிவர்த்தனையாக இருப்பதால், குருதசை நல்ல பலன்களையே தரும். பூமிகளும் வீடும் சேரும். ஐசுவரியம் விருத்தி யடையும். வேறு தீங்குகள் ஏற்படா. வடதிசையிலுள்ள அரசனுக்கு [குபேர னுக்கு] நிகராக விளங்குவான்.

31. அறுபது ஆறு ஆண்டில் அணுகிய கன்னி மாதம்
திருமக னுடலம் ஏகும் செப்புவோ மிவன் பின்ஜன்மம்
பிருதிவி தலத்திலேதான் பிறப்பனும் பிரம்ம சேயாய்ப்
பொருளது பெருக்கமாகிப் புகழுடன் வாழ்வா னம்மா.

31. சாதகனுக்கு அறுபதாவது ஆண்டில் புரட்டாசி மாதத்தில் மரணம் நேரும். இவனுடைய பின் ஜன்மத்தையும் சொல்லுகின்றோம். இவன் மறு பிறவியில் பிருதிவி தலம் என்று சொல்லப்படும் காஞ்சியில் பிராம்மண குலத்தில் பிறந்து, அதிக பொருள்களை அடைந்து, புகழுடன் சிறப்பாக வாழ்வான்.

32. அன்னவன் ஜனனகாலம் அந்தநாள் முதல்பா தத்தில்
சந்திரன் தசையே மாண்டும் தங்கிடும் நவமாம் திங்கள்
முன்பாகம் விபரம் சொன்னேம் மொழிகிறோம் பின்பால் சேதி
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

32. இந்த ஜாதகன் ஜனித்த சமயத்தில் ஹஸ்த நக்ஷத்திரம் முதல் பாதத்தில் சந்திரன் சஞ்சரித்தபடியால், சந்திரதசை இருப்பு வருஷங்கள் ஏழு, மாதங்கள் ஒன்பது. விநாயகரைப் பெற்ற தாயே முன் பாகத்தில் பலன்களைச் சுருக்கமாகச் சொல்லி இருக்கின்றோம். இரண்டாம் பாகத்தில் விஸ்தாரமாகக் கூறப் போகின்றோம்.

ஜாதகம் 24

1. சந்திரன் வீணையாகச் சனிரவி மீன மாகப்
புந்தியும் புகரும் மேடம் தீமகன் ராகு மானில்
மந்திரி சாடி யாக வருஞ்சிகி வண்டி யாக
இந்தவாறு கிரகம் நின்று லக்கினம் கடகமாக.

சனி சூரியன்	புதன் சுக்கிரன்		சந்திரன்
குரு	இராசி சக்கரம்		லக்கினம் கேது
செவ்வாய் ராகு			

பகுதான்ய வருஷம் பங்குனி மாதம் 18-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் ஜனனம் [ஆங்கில தேதி 30-3-1879] நவக்கிரஹங்களின் பாத சாரம் :—ரேவதி 1-இல் சூரியன். திருவாதிரை 2-இல் சந்திரன். சிரவணம் 3-இல் செவ்வாய். அசுவினி 2-இல் புதன். சதயம் 1-இல் குரு. பரணி 1-இல் சுக்கிரன். உத்தரட்டாதி 4-இல் சனி (அஸ்தம்). உத்தராடம் 4-இல் ராஹு. புஷ்யம் 3-இல் கேது நக்ஷத்திரம். திருவாதிரை. ராஹு தசையில் இருப்பு வருஷங்கள் பதினொன்று ; மாதங்கள் பதினொன்று.

1. சந்திரன் மிதுனத்திலும், சனி சூரியன் மீனத்திலும். புதன் சுக்கிரன் மேஷத்திலும், செவ்வா ராகு மகரத்திலும், குரு கும்பத்திலும், கேது கடகத்திலுமாக இருந்து, லக்கனம் கடகமுமாக அமைந்து இவ்வாறு உள்ள கிரஹநிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக என அம்பிகை வினவினள்.

2. பார்வதி கேட்கும் போது பிருகுமே சொல்லு கின்றார்
தீரமா யாண்பால் ஜன்மம் செப்புவோ மில்லம் தானும்
சாரியாய் வடதென் வீதி தனித்ததோர் வீட தாகும்
மாரியும் சந்தி உத்திரம் அருகினில் ஈசன் காளி.

2. இவ்வாறு பார்வதி தேவி கேட்டவுடன், பிருகு முனிவர் ஜாதகப் பலன்களைக் கூறுவார். இக்கிரஹ நிலையில் ஜனித்த குழந்தை திண்ணமாக ஆண். வீதி தெற்கு வடக்கில் அமைந்திருக்கும். இவன் ஜனித்திருக்கும்

வீடு தனித்து இருக்கும். இரு புறங்களிலும் வீடுகள் இரா. வடதிசையில் ஒரு மாரியம்மன் கோயிலும், பல தெருக்கள் கூடும் சந்திப்பும் இருக்கும். அவைகளுக்கு அருகில் சிவனாலயமும் காளி கோயிலும் உண்டு.

3. தந்தியு மார்க்க மேற்கில் சஞ்சீவி ராயன் கோஷ்டம்
செந்தியிலுதித்தோன் வாசம் சோலேயும் குண்ட முண்டு
முந்திய மாலின் கோஷ்டம் மூயனுவோம் குணக்கி லேதான்
எந்தையே கீழ்ப்பால் வாசல் இலகிய சமவூர் தன்னில் ;

3. மேற்குத் திசையில் விநாயகர் ஆலயமும், ஹனுமான் கோயிலும், சுப்பிரமணிய சுவாமியின் கோஷ்டமும், ஒரு சோலேயும், ஒரு குளமும் இருக்கும். கிழக்குத்திசையில் மஹாவிஷ்ணுவின் கோயிலும் இருக்கும். இவன் செனித்த வீடு கிழக்கு நோக்கி இருக்கும். இவ்வாறு அடையாளமுள்ள நடுத்தரமான ஊரில் ;

4. இவ்வித அடையா ளத்துள் இவனுமே கங்கை சேயாய்ப்
பவ்வமா யுதிப்பா னுகும் பாலகன் செந்ந யோகம்
ஒவ்விய தந்தை மாதா் உறுந்துணே களத்திர புத்திரர்
திவ்விய முன்பின் ஜன்மம் செப்புவோம் கேளும் தாயே.

4. இந்தச் சாதகன் வேளாள வமிசத்தில் செனித்திருப்பான். இவனுடைய யோகங்களேயும், தாய் தந்தை சகோதரர் களத்திரம் புத்திரர் இவர்களேப் பற்றியும், முன்பின் ஜன்மங்களேப்பற்றியும் இந்த நூலில் சொல்லப்போகின்ருேம். தாயே ! செவிசாய்த்துக் கேளுங்கள்.

5. தந்தையின் துணேவர் தம்மைச் சாற்றுவோ மாண்பா லொன்று
தொந்திடும் சிலது நாளில் நேமியில் தனிய னுவன்
எந்தையே தந்தை சேதி இயம்புவோ மிருநிறத்தான்
கந்தனும் குலதெய்வங்கள் கல்வியு மல்ப முள்ளான்.

5. தந்தையின் சகோதரர்களேப் பற்றிக் கூறுவோம். ஒரு சகோதரன் தான் உண்டு. அவனும் சில நாட்களுக்குள் நசிப்பான். ஆகையால் இவன் தனியனுகவே வாழ்வான். தாயே ! ஜாதகனின் தந்தையின் குணங்களேக் கூறுகின்ருேம். கருத்த மேனியான். இவனுடைய குலதெய்வம் சுப்பிரமணிய சுவாமிதான். கல்வி யறிவும் கொஞ்சமாகவே இருக்கும்.

6. மனமது அழுத்த முள்ளான் மாநிலம் விருத்தி செய்வன்
சினமிலான் காலி விருத்தி தீரமில் லாத நெஞ்சன்
வினேயது ஒருவர்க் கெண்ணன் மேலவர் பக்தி கொள்ளவன்
பிணேயான வார்த்தை கூருன் பின்புத்தி உடைய னுமே.

6. இவன் மனத்தை யாரும் அறியமுடியாது. நிலங்களே விருத்தி செய்வான். கோபமில்லாதவன். கால் நடைகள் இவனிடம் விருத்தியடையும். மனத்தில் உறுதியில்லாதவன். ஒருவருக்கும் தீங்கை எண்ண

மாட்டான். மேலானவர்களிடம் (பெரியோர்—கடவுள்) பக்தி பூண்டிருப்பான். கலஹமேற்படும் வார்த்தைகளேக் கூறமாட்டான். காரியங்கள் ஒருவாறு நிறைவேறிய பிறகு நல்ல யோசனேகள் இவனுக்குத் தோன்றும்.

7. அறமதி லிச்சை யில்லான் அல்பபோஜனத்தா னுகும்
நிரந்தர குடும்ப மாவன் ரோமங்கள் நீட்சி யில்லான்
குறையான மனத்தா னுகும் கோதைக்கு அடக்க முள்ளான்
உறைந்திடும் பித்தச்சூடு உத்தமி கேட்டி டாயே.

7. தருமம் செய்வதில் ஆசையில்லாதவன். ஆகாரத்தைக் கொஞ்சமாகவே உட்கொள்ளுவான். சஞ்சலமில்லாத, ஸ்திரமான குடும்பத்தை உடையவனுவான். நீண்ட ரோமங்கள் இல்லாதவன். எப்போதும் குறைப்படும் (ஏங்கும்) மணப்பான்மை உள்ளவன். மனேவிக்கு அடங்கி நடப்பான. இவன் உடலில் பித்தசூடு தங்கி இருக்கும். உத்தமியே ! மேலும் கேளுங்கள்.

8. இக்குண முடையா னுக்கு இவனுமே சேஷ்டனுக
மிக்கவே உதிப்பா னுகும் விளம்புவோ மிவன் குணத்தைச்
சிக்கன முடையா னுகும் சமதேகன் மா நிறத்தன்
பக்கு வமாக வார்த்தை பகருவா னிவனே யென்ருேம்.

8 இப்படிப்பட்ட குணமுடைய தந்தைக்கு இச் சாதகன் ஜ்யேஷ்ட புத்திரனுகப் பிறந்திருக்கிருன். சாதகனின் குணத்தைச் சொல்லுகின்ருேம். அதிகச் செலவு செய்யாமல் சிக்கனமாக வாழ்வான். சமமான உடல் வளர்ச்சி உடையவன். மாநிறம் வாய்ந்தவன். பிறர் மனம் நோவாதபடி தனது வெறுப்பு கோபம் முதலியவைகளே நயமாகத் தெரிவிப்பான்.

9. தந்தையி னுஸ்தி தன்னேத் தானவன் விருத்தி செய்வன்
பிந்தியும் பூமி சேர்ப்பன் பின்புத்தி வறுமை யில்லான்
சிந்தையும் மர்மமாவன் ஜெனஉப காரியாவன்
தன்பந்து புகழ வாழ்வன் சங்கரி மேலுங் கேளே.

9. இந்தச் ஜாதகன் பிதுரார்ஜித சொத்தை அபிவிருத்தி செய்வான். அதற்கு மேலும் பூமிகளேச் சேர்ப்பான். தந்தைக்கு இருப்பதுபோல இவனுக்கும் பின் புத்திதான். வறுமை இல்லாதவன். மனத்தில் சிறிது கபடமுள்ளவன். ஜனங்களுக்கு உபகாரம் செய்வான். தனது உற்ருர் உறவினர் கொண்டாடும்படி வாழ்வான். தேவியே ! மேலும் கேளுங்கள்.

10. பால் பாக்கிய முடையனுவன் பனேயேர்கள் விருத்தி யுள்ளான்
சீலவான் கிருஷி செய்வன் செய்ந்நன்றி மறவா னுகும்
பாலிய வறுமை யுள்ளான் பெருகிடும் மூல சூடு
காலத்தை யறிந்து வாழ்வன் காதலி கேட்டி டாயே.

10. பால் பாக்கிய முடையவன், உழும் காளேகளே அபிவிருத்தி செய்வான். நன்னடக்கை உடையவன். விவசாயம் செய்வான். தான் அடைந்த

உதவியை மறவாதவன். பாலியத்தில் சிறிது வறுமை உள்ளவன். மூலச்சூடு அதிகமாகும். காலத்திற்குத் தக்கபடி தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்வான்.

11. இன்னவன் துணைவர் தம்மை யியம்பவே பலத்தைக் காணேம்
தன்னிலே யுதித்தா லுந்தான் சல்தியில் நஷ்டமாகும்
இன்னவாறு முனிவர் கூற ஈசுவரி கேட்க லுற்ருள்
அன்னவர் தமக்கு தோழர் அனுகாத காரணம் சொல்.

11. இவனுடைய சகோதர பாவத்தை ஆராய்ந்து பார்த்தால், சகோதர விருத்தியே இல்லை என்று அறியபடுகின்றது. சகோதரர்கள் ஜனித்தாலும் சீக்கிரத்திலேயே நஷ்டமாவார்கள். இவ்வாறு முனிவர் கூறியதைக் கேட்டுப் பார்வதி வினவினுள். சகோதரர்கள் விருத்தியாகாத தற்குக் காரணம் என்ன ? சொல்லுங்கள் என்ருள்.

12. மதியுமே விரயம் புக்க மழைகோளும் கரும மேறக்
சதியினல் மாதுர் தானும் சீக்கிரம் மரண மேயாம்
பதியினில் இரண்டாம் தாயார் பரவுவா ளென்று சொன்னேம்
அதிபதி தனக்குப் புத்திரர் வரைகுவீர் முனியே நீர் தாம்.

12. மாத்ருகாரகன் என்று சொல்லப்படும் லக்கினுதிபதியாகிய சந்திரன் பன்னிரண்டில் இருப்பதாலும், மாத்ரு பாவத்திற்குடைய சுக்கிரன் கருமஸ்தானத்தில் பத்தாமிடத்தில் இருப்பதாலும் இந்த ஜாதகனின் தாய இவன் பிறந்து சில வருஷங்களுக்குள் மரணமாவாள். ஆகையால் சகோதர விருத்தி இல்லை என்று சொன்னேம். இளைய தாயார் ஏற்படு வாள் என்றும் தெரிவித்துக் கொள்ளுகிறேம். அந்த விஷயம் இருக்கட்டும். இளையதாயினுடைய புத்திரபாவத்தைச் சொல்லும் என்று பார்வதி கேட்க, முனிவர் கூறுகின்ருர்.

13. சுதர்களும் காணு ளாகும் ஜனிக்கினும் தீதே யாகும்
விதங்களைச் சொல்லு மென்ன வித்தகன் துணைவர் தானம்
முதுமகன் பார்த்த தாலே எய்தாதும் துணைவ ரென்றேம்
நதிபிறை யணிந்தோன் தேவி நவிலுவோம் மேலுங் கேளே.

13. அவளும் பிள்ளைகளைக் காணமாட்டாள். பிறப்பினும் இறக்கும். ஏனெனில், சனி சகோதரஸ்தானம் என்று சொல்லப்படும் மூன்று மிடத்தைப் பார்ப்பதால் இந்த ஜாதகனுக்கு இளையதாயின் மூலமும் சகோதர விருத்தி இல்லை. கங்கையையும் சந்திரனையும் தலையில் அணிந்திருக்கும் சிவபிரானின் தேவியே ! மேலுங் கேளுங்கள்.

14, இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மிருப தாண்டில்
கன்னிகை உத்தரத்தில் காதலி வருவா ளாகும்
அன்னவள் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் சிவந்த மேனி
பன்னியே பேச வல்லாள் பாவையும் நிந்தை யுள்ளாள்.

14. ஜாதகனுடைய விவாஹ காலத்தைச் சொல்லுகின்றேம். இருபதா வது வயதில் விவாஹம் நடைபெறும். மணப்பெண் வடதிசையிலிருந்து வருவாள். அவளது குணத்தையும் சொல்லுகின்றேம். மிக்க அழகு வாய்ந்தவள். சிவந்த மேனியாள். பேசியதையே மறுபடியும் மறுபடியும் பேசுவாள். அவளுக்கு அவதூறும் உண்டாகும்.

15. வரனுக்கு நேய முள்ளாள் மாதுவும் சமயோ கத்தாள்
சரியிலா மனத்த ளாகும் சந்தேக குணத்தளாகும்
குறையிலா வாழ்வா ளாகும் கோதைக்கு வயது தீர்க்கம்
பிருகுமே இவ்வாறு கூற புயண்டரும் சொல்லு கின்ருர்.

15. கணவனிடம் மிக்க அன்பு உள்ளவள். அவள் சாதாரண அதிருஷ்டமுள்ளவள் தான். மனம் கெட்ட வழியில் செல்லும். சந்தேகப் படும் குணம் உடையவள். எவ்விதத்திலும் குறைவு இல்லாமல் வாழ் வாள். இவள் தீர்க்காயுளுடனும் இருப்பாள். இவ்வாறு பிருகு மஹரிஷி கூறியவுடன் புயண்டர் கூறுகின்ருர்.

16. எப்படி மனைவி தீர்க்கம் இயம்பினீர் முனியே சொல்வீர்
செப்புவே னேழோன் தானும் செழிப்புள நவத்தில் நிற்க
ஒப்புடன் குடும்பம் தன்னை உயர்குரு பார்த்த தாலே
மெய்ப்புடன் தாரம் ரெண்டு விளம்பினே மிவனுக் கேதான்.

16. எப்படி மனைவி தீர்க்கம் ? அதன் காரணத்தைச் சொல்லும். எனக் கேட்க, பிருகு முனிவர் பதில் கூறினுர். ஏழுக்குடைய சனி திரிகோணம் என்று சொல்லப்படும் ஒம்பதாமிடத்தில் இருப்பதாலும், எட்டில் இருக்கும் சுப கிரஹமாகிய குரு குடும்பஸ்தானத்தைப் பார்ப்பதாலும், மூத்த மனைவியும் தீர்க்கமாக வாழ்வாள். அவள் ஜீவித்திருக்கும் போதே இவனுக்கு இரண்டாம் மனைவியும் ஏற்படுவாள்.

17. வக்கிரன் ராகு ஏழில் வந்ததால் மனைவிக் கீனம்
ஒக்கவே இவன் முன் ஜன்ம ஊழினுல் பாரிதோஷம்
மிக்கவே முன்னூழ் தன்னை விளம்புவீர் விவர மாக
நக்கனைப் பூசை செய்யும் நாயகி கேட்டி டாயே.

17. செவ்வாயும் ராகுவும் களத்திர ஸ்தானமாகிய ஏழில் இருப்பதால் மனைவிக்கு அபகீர்த்தி ஏற்படும் : அவ்வாறு அவளுக்குப் பெயர் கெடு வதற்கும் இவனுடைய முன்வினைதான் காரணம். அந்த வினையைச் சொல்லு கின்றேம். சிவபிரானைப் பூசிக்கும் தாயே ! கேளுங்கள்.

18. முன்ஜன்மம் சொல்லுகிறேன் முக்கூடல் தன்னிலே தான்
அன்னவன் தீயின் வம்சம் அனுகியே பூமி தன்னுல்
இன்னவன் ஜீவித் தேதான் எழிலுள மனைவி புத்திரர்
தன்னிலே யுடைய ளுகித் தன்பந்து புகழ் வாழுவர்.

18. இவன் முன்செென்மத்தில் முக்கூடலில் வன்னிய குலக்ஷத்திரிய வமிசத்தில பிறந்தான். பூமியை உழுது பயிரிட்டு ஜீவித்து வந்தான். அழகிய மனைவியையும், மக்களையும் உடையவனாகி, பந்துக்கள் கொண்டாடும் வகையில் சிறப்பாக வாழ்ந்து வந்தான்.

19. அவ்வூரில் சைவன் தானும் அவனுமே நேச மாகி
பவ்வமாய் வெகுநாளாக பரிந்துமே வார்த்தை பேசி
நவ்வியே யிருக்குங் காலே நாயகன் மனைவி யான
திவ்விய மாது தன்னைச் சேரவே கருதி யேதான்.

19. அதே ஊரில் வசித்து வந்த ஒரு சைவனோடு இவனுக்கு நட்பு உண்டாகி, இருவரும் கூடி பிரதி தினம் வெகு நேரம் சம்பாஷித்து வருவார்கள். இவ்வாறு இருக்கையில் அந்தச் சைவனுடைய அழகிய மனைவியைக் கண்டு இவன், தகாத வழியில் அவளிடம் அன்புக் கொண்டான்.

20. பலவித வசனம் பேசி பாவையை வணங்கி யேதான்
சிலசில தனமும் சீலை செல்விக்கு ஈந்து பின்பு
குலவியே போகம் துய்க்கக் கோதையைக் கையைத் தொட்டான்
நலமுள சைவ மாது நாயகி ஏது சொன்னாள்.

20. இவன் அவளிடம் பலவித நயமான வார்த்தைகளைப் பேசியும், வணங்கியும் அவளுக்குப் பணத்தையும், வஸ்திரத்தையும் கொடுத்து அவளைத்தன் வசப்படுத்துவதற்காக அவளது கையைப் பற்றினான். அப்போதும் நற்குணம் பொருந்திய அந்தச் சைவமாது என்ன சொன்னாள்? அதை நீங்கள் அறிவீர்களா?

21. தோழன்தன் மனைவி போகம் துய்க்கவே கருத வேண்டாம்
ஆழியில் அநுப வித்தால் அதிகமாய் நரக மெய்தும்
ஏழையின் வார்த்தை கேளாய் என்றுமே சொல்லும்போது
பாழான காமத்தாலே பலாத் கார மாகச்சேர்ந்தான்.

21. உன்னை நம்பி இருக்கும் தோழனின் மனைவியை ஆசைப்பட வேண்டாம். தகாத வழியில் நீ ஆசைப்பட்டால் நீண்ட காலம் நரகத்தில் கஷ்டப்படுவாய். என்னுடைய வார்த்தையைக் கேட்டு அதன்படி நடப்பாயாக என்று சொன்னாள். ஆயினும் இவன் அவ்வார்த்தைகளைக் கேளாதவனாகவே தன் விருப்பத்தின்படி நடந்துகொண்டான்.

22. அருந்ததி யொத்த மாது அவன்வர னில்லா வேளை
பெருந்தன மூடைய பாவி போகங்கள் துய்த்த தாலே
வருந்தியும் மனவெ றுப்பால் மங்கையும் சாபம் சொல்வாள்
திருந்திய இச்சென் மத்தில் செல்விதி மனைவிமாள்வள்.

22. வசிஷ்டரின் மனைவியான அருந்ததியைப் போல் கற்பில் சிறந்தவளாகிய அந்தச் சைவமாது, தன் கணவன் வீட்டில் இல்லாத காலத்தில்

பெரியதனம் படைத்த இந்தப் பாவி தன்னிடம் அவமரியாதையாக நடந்துக் கொண்டதால், வெறுப்படைந்து சாபமிட்டாள். செல்வத்துடன் சிறப்பாக வாழும் இந்த ஜன்மத்திலும் நீ உன்னுடைய மனைவியை இழப்பாய் (மனைவி இறப்பாள் என்பது கருத்து).

23. மற்றொரு ஜன்மம் தோறும் மனைவியின்தோஷமாயும்
பெற்றதாய் வர்க்க ஞஸ்தி பலபல நிந்தை யாயும்
குற்றமாய் சிலர்கள் சொல்ல கூறியே சலத்தில் வீழ்ந்து
செத்தனள் அந்த மாது சேர்ந்தது அந்த தோஷம்.

23. மறுசெென்மத்திலும் உனது மனைவிகளுக்குத் தோஷம ஏற்படும். நீ செய்த பாவத்தால் தாய் வருக்கமும் அழிந்து, அவர்களால் கிடைக்கும் உபகாரங்களும் இல்லாமல் கஷ்டப்படுவாய் என்று சொன்னாள். பிறகு ஊரில் உள்ளவர்கள் அவளைப்பற்றி பலவாறு நிந்தையாகப் பேசியதைக் கேட்டு அவள், மனம் நொந்து, தண்ணீரில் விழுந்து உயிரை விட்டாள். ஆகவே அந்தப் பாவம் இவனைப் பிடித்துக்கொண்டது.

24. இதுவல்லால் பின்ன மொன்று இயம்புவோம் தன்கு லத்தில்
பதிவிரதை போல்பெண் ணொன்று பாவைமேல் குற்ற மாக
அதிகமாய் சிலர்கள் சொல்ல அம்மொழி அவனும் கேட்டு
சதியான தீர்ப்பு ஒன்று சாதிப்பான் கூறக் கேளாய்.

24. இதுவுமன்றி வேறொரு பாவமும் இவனுக்கு முன் பிறவியில் ஏற்பட்டது. அதையும் சொல்லுகிறோம் கேளுங்கள். இவனது குலத்திலேயே பதிவிரதையான ஒரு பெண்ணின் மேல், சிலர் வீணைப் பழி வார்த்தைகளைப் பேசினார்கள். அந்த நிந்தை வார்த்தைகளைக் கேட்டு இவன், நன்குக விசாரித்தறியாமல், பக்ஷபாதமாக ஒரு தீர்ப்பு சொன்னான்.

25. பந்துவை விட்டு நீக்கிப் பாவையை ஓட்ட லுற்றான்
சிந்தையு மனம்க லங்கிச் செப்புவாள் சாபம் தானும்
வந்திடு மறுஜன்மத்தில் வருதுணை யில்லா தாயும்
தன்மனை நிந்தை யாயும் தாய்வர்க்கம் குற்ற மாயும்;

25. அந்தப் பெண்ணைத் தனது உறவினனை விட்டு நீக்கித் தனியே இருக்கும்படி செய்தான். ஆகையால் மனங் கலங்கி, கவலைகள் அதிகமாகிச் சாபமிட்டாள். நீ, என்னை ஒருவித காரணமுமின்றி எனது பந்துவை விட்டுப் பிரித்தபடியால், மறுஜன்மத்தில், உடன் பிறந்தார் இன்றியும், உனது மனைவிக்கு கெட்டபெயர் ஏற்பட்டும், அவ்வாறே தாய் வருக்கத்திற்கும் குற்றம் உண்டாகியும் வருத்தத்துடன்;

26. பூமியில் வாழ்வா யென்று பேதையும் சொல்லி யேதான்
நேமியில் செல்ல லுற்றாள் நேர்ந்தது அந்தத் தோஷம்
தீனமகன் அந்தி யத்தில் சேர்ந்துபின் மனைவி மாண்டு
காமனும் பேரூர் சென்று கந்தனை யர்ச்சி தேத்தி;

26. உயிர் வாழ்வாய் என்று இவ்வாறு சொல்லிவிட்டு அவள் சென்றாள். அந்தச் சாபம் இவனைப் பற்றிக்கொண்டது. அந்த ஜன்மத்திலேயே அந்திய காலத்தில் பலவிதத் தீமைகள் ஏற்பட்டன. மனைவியும் மாண்டாள். பிறகு இவன் திருப்பேரூர் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் சுப்பிரமணிய சுவாமியை அர்ச்சித்து, வணங்கி.

குறிப்பு.—திருப்பேரூர் என்பது சிதம்பரத்திற்கு அருகிலுள்ளதொரு சுப்பிரமணிய ஸ்தலம்.

27. தாகப்பந் தலும மைத்துச் சண்டன்தன் பதிக்குச் சென்று
ஆகம நரகம் புக்கு அயனுமே வரையப் பட்டுப்
பாகமாய்க் கங்கை சேயாய்ப் பாலக னுதித்தா னென்றோம்
தோகைவா கனனைப் பெற்ற சுந்தரி யாளே கேளாய்.

27. தன் ஊருக்கு வந்து, தண்ணீர்ப் பந்தல் வைத்துச் சிறிதுகாலம் உயிருடன் இருந்தான். அதன் பிறகு யமனுலகம் சென்றான். இப்பொழுது இங்கு இக்குலத்தில் பிரம்மதேவனால் பிறப்பிக்கப்பட்டிருக்கிறான். மயில் வாஹனனைப் பெற்ற புண்ணியவதியே! மேலும் கேட்பாயாக.

28. முன்ஜன்மம் பெண்கள் சாபம் முயன்றதா லிச்சென் மத்தில்
தன் மனை தோஷ முண்டாம் சாற்றுவோம் சிரிகைக் கேதான்
அன்னவன் மனைவி யோடு அறுமுகர் தணிக்கைக் கேதான்
தன்னிலே எழு கார்த்தி தங்காமல் சென்று மேதான்.

28. முன் ஜன்மத்தில் இவனுக்குப் பெண்கள் சாபமேற்பட்டிருப்பதின் பயனாக இச் சென்மத்தில் இவன் மனைவிக்குத் தோஷம் ஏற்படும். [இந் நூலாசிரியர் "தோஷம்" என்பதால் சரீரத்தில் நோயையும், கற்பில் இழுக்கையும் கருதுகிறார்.] ஆகவே அஃது ஏற்படாமல் இருப்பதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்றோம். இவன், தன் மனைவியோடு, சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளியிருக்கும் திருத்தணிகைக்கு இடைவிடாமல் ஏழு கிருத்திகைகளுக்கும் செல்லவேண்டும்.

29. கந்தனை அர்ச்சித் தேத்திக் கடைநாளில் மூவேழ் பேர்க்கு
இந்தவாறு மன்னன் தானும் இன்பமா யன்ன மீந்து
பொன்னினால் மதலை செய்து பிராமணர் தமக்கு ஈந்து
பின்பவர் வாக்கால் ஆசி பெற்றுமே உள்ளூர் சென்று;

29. அங்குக் கந்தனை அர்ச்சித்து வணங்கிவிட்டு, பக்தி சிரத்தையுடன் இருபத்து ஒன்று அடியார்களுக்கு அன்னமளிக்கவேண்டும். பிறகு கத்தினால் குழந்தையைப்போல் பதுமை ஒன்றைச் செய்து, பிராம்மணருக்கு, அவர் மனம் மகிழும்வகையில் தக்ஷிணையோடு அதைச் சமர்ப்பிக்கவேண்டும். பின்பு அவ்வந்தணர் மகிழ்ச்சியுடன் அருளும் ஆசிகளைப் பெற்றுத் தன் ஊருக்கு வந்து;

30. ஐங்கரன் மாரி காளி அவர்களுக் கபிஷே கிக்கச்
சங்கைகள் தோஷம் நீங்கித் தன்மனை வயது தீர்க்கம்
இங்கிவன் செய்யா னாகில் இவன்மனை அரிட்ட மாகும்
பொங்கமாய் இரண்டா மாது, புக்கிடு மென்று சொன்னோம்.

30. ஐந்து கரங்கள் உடையவனாகிய விநாயகருக்கும், மாரியம்மனுக்கும், காளிகாதேவிக்கும் அபிஷேகம் முதலியவைகளைச் செய்யவேண்டும். நாம் சொன்ன பரிகாரங்களைச் செய்தால், முன் வினை நீங்கி, இவனுடைய மனைவிக்கு ஆயுளும் நீடிக்கும். பரிகாரங்களைச் செய்யாவிடில் மனைவிக்குக் கெடுதல் ஏற்பட்டு இரண்டாவது மனைவியை மணம் செய்துகொள்ள நேரிடும்.

31. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோ மாண்பால் ரண்டு
சித்தமாய்ப் பெண்பா லொன்று செப்புவோம் தீர்க்க மாகச்
சுத்தமாய் இரண்டு சேதம் செப்புவோ மிவனுக் கேதான்
அத்தியைப் பெற்ற மாதே அறைகிறோம் மேலுங் கேளே.

31. விநாயகரைப் பெற்ற தாயே! இவனுடைய புத்திர பாவத்தைச் சொல்லுகின்றோம். இச் சாதகனுக்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இவர்களைத் தவிர இரு குழந்தைகள் பிறந்து நசிக்கும். மேலும் கேளுங்கள்.

32. அன்னையு மிருநிற த்தாள் அழகுளாள் பொறுமை சாலி
உன்னதச் சூடாம் தேகி உள்மனம கபட மில்லாள்
அன்னமு மீய வல்லள் அவள்வரன் மனம்போல் வாழ்வாள்
பின்னமில் லாத தேகி பேசுவோம் மேலுங் கேளே.

32. இச் சாதகனின் அன்னை கருத்த மேனியாள். அழகு வாய்ந்தவள். பொறுமைக் குணமுடையவள். அவளது சரீரம் அதிக உஷ்ணம் பொருந்தியது. மனத்தில் கபடமில்லாதவள். அன்னதானம் செய்யச் சக்தி உள்ளவள். அவளுடைய கணவனது மனத்தின்படி நடப்பாள். சரீரத்தில் எவ்விதத்திலும் ஊனம் இல்லாதவள். மேலும் அவளைப்பற்றிப் பேசுகிறோம். கேட்பாயாக.

33. அவள்துணை ஆண்பால் ரண்டு அவைகளும் விருத்தியாகா
நவனியில் வித்தை யுள்ளாள் தன்குல குற்றம் உண்டு
இவளுடை பூர்வம் தன்னை இயம்புவோம் விரிஞ்சி கீழ்ப்பால்
பவமுள பேரூர் தன்னில் பாவையு மிக்குல த்தில்;

33. அவளுக்கு இரு சகோதரர்கள் உண்டு. ஆனால் அவர்கள் விருத்தியை அடையமாட்டார்கள். அவள் (ஜாதகனின் தாய்) சிறிது கல்வியறிவு உடையவள். தான் பிறந்தக் குலத்திற்குக் குற்றம் (சந்ததி இல்லாமை) ஏற்படும். இவளுடைய முன் ஜன்மத்தைப்பற்றிச் சொல்லுகின்றோம். இவள் முன் பிறவியில் விரிஞ்சிபுரத்திற்குக் கீழ்த்திசையிலுள்ள பெரிய ஓர் ஊரில் இப்பொழுது பிறந்திருக்கும் சாதியிலேயே பிறந்து;

34. உதித்துமே சுகமுண் டாகி உள்ளூரில் வரனு முண்டாய்
அதிபதி வாழு நாளில் வரைகிறே மூழி தானும்
நிதியிலா ஏழை தானும் நிமிலிபா லணுகி யேதான்
துதிசெய்து தூசு கேட்டாள் சுந்தரி கோப முற்று ;

34. அதே ஊரில் பிறந்து வளர்ந்த யுவனைக் கணவனாக அடைந்து சுகமாக வாழ்ந்து வருங்காலத்தில் அவளுக்கேற்பட்ட ஒரு பாவத்தைச் சொல்லுகின்றோம். அதே ஊரில் வசித்து வந்த ஓர் ஏழைப் பெண், செல்வம் படைத்த இவளிடம் வந்துத் தனக்கு ஒரு துணி கொடுத்து உதவும்படி வேண்டினாள். அதைக் கேட்டு வீணாகக் கோபம் அடைந்த இவள்,

35. பலபல விரோதம் பேசிப் பாவையைத் துரத்தி விட்டாள்
தலைவியும் மனவெ றுப்பால் சாற்றுவாள் சாபம் தானும்
குலவிய பின்ஜன் மத்தில் குறியிடம் ரோக மெய்தி
நலமிலாக் காலன் பக்கல நல்குவாய் குலத்தில் குற்றம்.

35. பலவாறு அவளை ஏசித் துரத்திவிட்டாள். ஆகையால் மன வருத்த மடைந்த அவள் சாபமிட்டாள். நீ மறு பிறவியில் உனது மருமஸ்தானத்தில் நோய் ஏற்பட்டு இறப்பாய். மேலும் நீ பிறந்த குடும்பமும் ஆண் சந்ததி இல்லாமல் அழியும்.

36. [1] சொல்லியே சென்று ளென்றோம் துறவிகள் ததாஸ்து என்றார்
அல்லல்கள் எய்தி யேதான் அந்தியம் மேக ரோகம்
வல்லிக்கு அணுகி யேதான் மறலியின் பதிக்குச் சென்று
புல்கினு ளிக்கு லத்தில் புண்ணிய வதியே கேளாய்.

36. இவ்வாறு சொல்லிவிட்டு அவள் சென்றாள். ஆகாயத்தில் சஞ்சரிக்கும் முனிவர்கள், "அவ்வார்த்தைகள் ஆட்சி செய்யட்டும்" [அவ்வாறே நடைபெறட்டும்] என்று அருள் புரிந்தனர். இவளும் அந்திய காலத்தில் பலவிதக் கஷ்டங்களை அனுபவித்து, மேகரோகம் கண்டு அதனால் யமனுலகம் சென்றாள். பிறகு பிரம்மன் இவளை இங்குப் படைத்திருக்கின்றான். அவளேதான் இக்கடகலக்கின மகனுக்கும் தாயாக ஏற்பட்டிருக்கின்றாள். உலகிற்கு அருள் சுரக்கும் தாயே ! மேலும் கேளுங்கள்.

37. அந்தவட் கேழு ஆண்டில் அல்குலில் ரோகத் தாலே
இந்தவன் மரண மெய்தும் இவன் தந்தை பூர்வம் சொல்வேன்
முந்திய அருணை கீழ்ப்பால் மொழிகிறோம் சிற்றூர் தன்னில்
இந்தவோர் குலத்தி லேதான் எய்தினன் என்று சொன்னோம்.

37. இந்த ஜாதகனுக்கு ஏழாவது ஆண்டு நடைபெறும்போது, முன்சொன்ன சாபத்தின்படி, மருமஸ்தானத்தில் நோய் ஏற்பட்டு இவன் (தாய்) மரணமடைவாள். சாதகனுடைய தந்தையின் பூர்வஜன்மத்தைச் சொல்லுகின்றோம். இவன் முன்பு திருவண்ணாமலைக்குக் கீழ்த்திசையிலுள்ள ஒரு சிறிய ஊரில் இதே ஜாதியில் பிறந்திருந்தான்.

1. இதன் விளக்கத்தை 34-ஆம் ஜாதகம் 21-ஆம் பாட்டில் காண்க.

38. உதித்தவன் கிருஷி செய்து உலகினில் வாழு நாளில்
விதிக்கிறோம் வந்த ஊழை விதைவையாம் மாதொ ருத்தி
பதியினில் வாச மாகப் பலவந்த போகம் செய்ய
இதுவிதம் சிலநாள் சென்று இவளுக்குக் கருவு தங்கி ;

38. பிறந்து வளர்ந்து அவன் விவசாயம் செய்து உலகில் சிறப்புடன் வாழ்ந்து வருகையில் அவனுக்கேற்பட்டதொரு வினையைத் தெரிவிக்கின்றோம். அந்த ஊரில் வசித்து வந்த ஒரு கைம்பெண்ணைத் தனது வீட்டிற்குக் கொண்டு வந்து தனது விருப்பத்தைப் பிடிவாதம் செய்து நிறைவேற்றிக்கொண்டான். சில நாட்களுக்குப் பிறகு அவளுக்குக் கர்ப்ப மேற்பட அதை அழிப்பதற்காக ;

39. பலவித பண்டி தங்கள் பாவைக்குச் செய்யும் போது
குலவிய கருவு நீங்கித் தோகையும் மரண மெய்தி
நிலைமையா யந்தத் தோஷம் நேர்ந்தது இவனுக் கேதான்
தலைவனும் மரண மாகிச் சதுர்முகன் வரையப் பட்டு ;

39. பலவித மருந்துகளை அந்தப் பெண்ணுக்குக் கொடுத்தான். ஆகையால் கருவும் நீங்கியது. பெண்ணும் இறந்தாள். அந்தப் பாவம் இவனைப் பற்றிக் கொண்டது. அந்திய காலத்தில் இவன் மரண மடைந்தான். நான்கு முகம் படைத்தப் பிரம்ம தேவனால் ;

40. வந்தவ னிவனே யென்றோம் வரைகிறே மிச்சென் மத்தில்
தன்மனை யிரண்டு மாகும் சந்ததி அல்ப மெய்தும்
பிந்திய சென்மம் தன்னைப் பேசுவோ மவ்வூர் கீழ்ப்பால்
இந்தவோர் ஜன்மம் தோன்றி இவனுமே வாழ்வா னாகும்.

40. இங்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறான். இவன் தான் இக்கடகலக்கின மகனுக்குத் தந்தையாக வாய்த்திருக்கிறான். அந்தப் பாவத்தின் பயனாக இச்சென்மத்தில் இவனுக்கு இருமனைவிமார்கள் (மூத்த மனைவி இறப்பாள் என்பது கருத்து) ஏற்படுவர். சந்ததியும் மிகவும் அல்பம். இவனுடைய பின் பிறவியையும் சொல்லுகின்றோம். அவ்வூரிலேயே அதே ஜாதியில் பிறந்து வாழ்வான்.

41. தந்தையின் மரண காலம் சாற்றுவோம் முப்ப தாண்டில்
எந்தையே தேளின் மாதம் எய்திடும் கண்டம் தானே
இந்தவாறு முனிவர் கூற ஈச்வரி கேட்க லுற்றாள்
தந்தைக்குக் கண்டம் சொன்னீர் சாராதோ மத்தி லேதான் ;

41. இப்பொழுது ஜாதகனுடைய தந்தையின் மரண காலத்தைக் கூறுகின்றோம். ஜாதகனுடைய முப்பதாவது ஆண்டில் கார்த்திகை மாதத்தில் அவன் தந்தைக்கு ஆபத்து ஏற்படும். [இறப்பான் என்பது கருத்து.] இவ்வாறு முனிவர் சொன்னவுடன் பார்வதி வினவினாள். இந்தக் கண்டம் ஏற்படுவதற்கு முன்பு அவனுக்கு வேறு கண்டங்கள் ஏற்பட்டிராவோ ? சொல்லுங்கள் என.

42. இதுமட்டில் கண்டம் நேரும் இன்பமாய்ச் சகமே யாகும்
பொதுயோகம் சாத கர்க்குப் புகலுவோம் விபர மாக
வதிபனும் ஜனனம் தொட்டு அறுநான்கு ஆண்டு மட்டும்
சதியிலா சமயோ கந்தான் சார்ந்திடு மென்று சொன்னோம்.

42. முனிவர் பதிலுரைத்தார். உண்மை ; இதற்கு முன்பும் கண்டங்கள் ஏற்பட்டிருக்கும். ஆனால் அவைகள் எளிதில் விலகி இருக்கும். இந்தக் கண்டம் விலகாது. இதுவே இவனது முடிவிற்குக் காரணம் ஆகும். ஜாதகனின் பொது யோகங்களைப் பற்றிக் கூறுகின்றோம். இவன் ஜனித்து இருபத்து நான்கு வருஷங்கள் மட்டில் சமயோகம்தான் இருக்கும். [விருத்தியும் இராது. குறைவும் இராது என்பது கருத்து.]

43. அதற்குமேல் மரண மட்டும் அம்புலி போலே யோகம்
நிதியது மிகவே சேரும் நினைத்தகா ரியங்கள் வெற்றி
அதிகமாய்ப் பூமி சேரும் அணுகிடும் பணிதி பாத்திரம்
சதுஷ்பாதம் விருத்தி யாகும் ஜனஉப காரம் செய்வன்.

43. முன்சொன்ன ஆண்டுகளுக்குமேல் மரணம்வரையில் பிறைச் சந்திரன் போல யோகம் விருத்தியாகும். நிதிகள் அதிகமாகச் சேரும். ஜாதகன் எண்ணிய காரியங்கள் இடையூறின்றி நிறைவேறும். ஏராளமாகப் பூமிகள் சேரும். வித விதமான ஆபரணங்களும் பாத்திரவகைகளும் இவனுக்குக் கிடைக்கும். கால்நடைகள் விருத்தியடையும். ஜனங்களுக்கு உபகாரம் செய்து பெருமையை அடைவான்.

44. புத்திரர் தம்மால் யோகம் பெருகிடும் பெருமை யாகக்
குற்றமில் லாமல் வாழ்வன் குலத்துளோர் உறவே யாவர்
வித்தகன் தனக்குக் காலம் விளம்புவோம் அறுபானரண்டில்
சுத்தமாய் மகர மாதம் துவாதசி குறைபக் கத்தில்,

44. மேலும் இந்த ஜாதகனுக்குப் புத்திரர்கள் உதித்த பிறகு அவர்கள் ஜாதகத்தின் பயனைப் பெருமைகள் மேன்மேலும் ஓங்கும். ஒருவித ஈனச் செயலும் இல்லாமல் வாழ்வான். தன் ஜாதியார்கள் எல்லோரும் அன்போடு இவனை ஆதரிப்பார்கள். ஜாதகனுடைய மரண காலத்தைக் குறிப்பிடுகின்றோம். இவன், தனது அறுபத்திரண்டாம் வயதில் தை மாதத்தில் கிருஷ்ணபக்ஷம் துவாதசி திதியில் விண்ணுலகம் ஏகுவான்.

45. முப்பது முப்பா னேழில் மொழிகிறோம் நாற்பா றுறில்
செப்புவோம் கண்டம் தானும் சண்முகர் கிருபை யாலும்
ஒப்புடன் பண்டி தத்தால் ஒதுங்கிடும் அந்தக் கண்டம்
மெய்ப்புடன் இவன்பின் ஜன்மம் வியம்புவோம் விபர மாக.

45. இவனுக்கு, முப்பத்தேழாவது வயதிலும், நாற்பத்தாறுவது வயதிலும், பெரிய கண்டங்கள் நேரிடும். ஆனால், சுப்பிரமணிய சுவாமியின் கிருபையாலும், தக்க ஔஷதங்களாலும் அவை விலகும். இவனுடைய பின் பிறவியைப்பற்றிக் கூறுகின்றோம்.

46. பிருதிவி வடமே லாகப் பேரூரில் இக்கு லத்தில்
உரைகுவான் சுகமுண் டாகி உத்தமன் வாழ்வா னுகும்
அறைகிறோம் முப்பா னெட்டில் அவன்சிறு மாத கண்டம்
பெருவயி றோனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

46. காஞ்சிக்கு வடமேற்குத் திசையிலுள்ள பெரிய ஓர் ஊரில் இதே ஜாதியில் பிறந்து சுகமாக வாழ்வான். விநாயகரைப் பெற்ற தாயே ! இச்சென்மத்திலேயே இவனுக்கு மற்றொரு சிறிய கண்டம் முப்பத்தெட்டாவது வயதில் ஏற்படும். மேலும் சொல்லுகிறோம். கேட்பாயாக.

47. காவலன் ஜனிக்கும் காலே கரும்பாம்பு தசையி லேதான்
சீலமாய்ப் பதினோ ராண்டும் திங்களு மவ்வா றுகும்
மேவிய குடும்ப லேச்சல் மாதுரு பீடை யாகும்
தாவிய சிறிய மாது தங்கிடு மிவனுக் கேதான்.

47. இச்சாதகன் ஜனிக்கும்போது ராஹுதசையில் இருப்பு வருஷங்கள் பதினொன்றும், மாதங்கள் பதினொன்று மாம். இந்தத் தசையின் பலன்களைச் சுருக்கமாகச் சொல்லுகின்றோம். குடும்பத்தில் எல்லோருக்கும் வீண் அலைச்சல்கள் ஏற்படும். தாய்க்கு ரோகங்கள் காணும். இளையதாயும் இவனுக்கு ஏற்படுவாள். [இவனுடைய சொந்தத்தாய் இவனது ஏழாவது வயதில் மரணமாவாள் என முப்பத்தேழாவது பாட்டில் சொல்லப் பட்டிருப்பதைக் காண்க.]

48 .மாதுரு வர்க்கம் குற்றம் மாடுகள் சேத மாகும்
மேதினில் செலவ னேகம் வீண்பகை பந்து தன்னில்
சூதுக ளதிக முண்டு சொல்லுவோம் பிறபா கத்தில்
மாதவர் தம்மைக் காக்கும் மங்கையே கேட்டி டாயே.

48. மாதுரு வருக்கமும் அழியும். மாடுகள் சேதமாகும். செல்வமும் வீணுகச் செலவாகும். காரணமின்றி உறவினர்களும் பகைவர்களாவார்கள். பலதுறைகளிலும் வஞ்சனைகளும் கலகங்களும் ஏற்படும். இவனைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் கூறுகின்றோம். தவசிகளை ரக்ஷிக்கும் தேவியே ! மேலும் திருவாய் மலர்ந்து எங்களை வினவ வேண்டும்.

ஜாதகம் 25.

1. பிறைசாடி ராகு மேடம் பொன்குசன் கேது கோலில்
பரிதியும் மேரு வாகப் பண்டிதன் புகரும் தேளில்
கரியவன் மான தாகக் கடகமும் ஜன்ம மாக
உரைகுவீர் பலனை யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

	ராகு		
சந்திரன்	இராசி சக்கரம்		இலக்கினம்
சனி			
சூரியன்	புதன் சுக்கிரன்	கேது செவ்வாய் குரு	

பவ வருஷம் மார்கழி மாதம் 1-ஆந் தேதி திங்கட்கிழமை இரவு 5-நாழிகைக்கு மேல் 10-நாழிகைக்குள் ஜனனம். ஆங்கிலத்தேதி 14–12–1874 நவக்கிரஹங்களின் பாதசாரம். மூலம் 1-இல் சூரியன். சதயம் 1-இல் சந்திரன். சித்திரை 4-இல் செவ்வாய். அனுஷம் 4-இல் புதன். சித்திரை 4-இல் குரு. கேட்டை 2-இல் சுக்கிரன் (வக்ரீ). சிரவணம் 3-இல் சனி. அசுவினி 1-இல் ராகு. சித்திரை 3-இல் கேது. நக்ஷத்திரம் சதயம். ராகுதசை இருப்பு வருஷங்கள் பதினைந்து, மாதங்கள் நான்கு, நாட்கள் பத்து.

1. சந்திரன் கும்பம், ராகு மேஷம், குரு செவ்வாய் கேது இவர்கள் துலாம், சூரியன் தனுஸ். புதனும், சுக்கிரனும் விருச்சிகம், சனி மகரம், இலக்கினம் கடகம், இவ்வாறான கிரஹநிலையின் பலனைச் சொல்லுவீர்களாக, எனப் பார்வதி கேட்கலுற்றாள்.

2. அத்திரி புகலுகின்றார் ஆணது ஜனனமாகும்
வித்தக னில்லம் சொல்வேன் மேல்வாடை வடதென் வீதி
சுத்தமாய் நதியு மேற்கில் தொந்தியப் பனுமே தங்கும்
அத்தியு மீசர் வர்மும் அரன்கோஷ்டம் மேல்பால் தங்கும்.

2. இவ்வாறு தேவி கேட்டவுடன் அத்திரி முனிவர் பலன்களைச் சொல்லுகின்றார். வீதி தெற்கு வடக்கில் அமைந்திருக்கும். வீடு மேற்கு வரிசையில் இருக்கும் [கிழக்கு நோக்காகும்]. மேல் திசையில் ஒரு நதியும் விநாயகர் கோயிலும் இருக்கும். அதற்கும் மேல் திசையில் வேறொரு விநாயகர் கோயிலும் பரமசிவன் ஆலயமும் தங்கும்.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய பேரூ ராகும்
அன்னிய ரில்ல மாகும் அப்பாலன் மூன்றும் ஜன்மம்
தன்குல விச்வ சேயாய்த் தோன்றுவா னிந்தப் பாலன்
தன்னிலே குடும்பச் சேதி சாற்றுவோம் தாயே கேளு.

3. இன்னும் பல தேவாலயங்கள் விளங்கிடும். இவ்வாறு அடையாளமுள்ளதொரு பெரிய ஊரில் அயலார் வீட்டில் பாலகன் ஜனித்திருப்பான். குடும்பத்திற்கு இவன் மூன்றும் குழந்தை. இவன் விசுவகுல பிராமண சாதியைச் சேர்ந்தவன். இவன் குடும்பச் செய்திகளைச் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

4. தந்தையின் துணைஆண் காணான் சத்தியும் ஒன்றே யாகும்
அந்தவள் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே கேளும்
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாகச்
சுந்தர முடைய னாகும் சோர்வுறான் வார்த்தைக் கேதான்.

4. இவனது தந்தைக்குச் சகோதரன் இல்லை. ஒரு சகோதரி உண்டு. அவனுடைய செய்திகளைப் பின்பாகத்தில் தெரிவிப்போமாக. தாயே! தந்தையின் வரலாறுகளைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். அழகுள்ளவன். பேசுவதில் சோர்வு இல்லாதவன். [எப்பொழுதும் எதையாகிலும் பேசிக் கொண்டே இருப்பான் என்பது கருத்து.]

5. கல்வியு மிரண்டு கற்பன கனத்தவர் நேசம் கொள்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இடரென்றோர்க் குதவி செய்வன்
நல்லவ னாகி வாழ்வன் நற்றந்தை ஆஸ்தி காணான்
தொல்லையும் சுகமு முள்ளான் துருசான நடையு மாவன்.

5. இரண்டு விதமான கல்விகளை (பாஷைகளை)க் கற்றறிவான். மதிப்பு வாய்ந்தவர்களின் நட்பை அடைவான். உதவியை நாடியவர்களுக்கு இல்லை என்று சொல்லாதவன். கஷ்டப்படுபவர்களுக்குத் தானே சென்று உதவி புரிவான். எல்லோருக்கும் நல்லவனாகவே வாழ்வான். பிதுரார்ஜித சொத்து இவனுக்கு இராது. வாழ்க்கையில் துன்பமும் இன்பமும் சமமாகவே இருக்கும். வேகமாக நடக்கும் இயல்புள்ளவன்.

6. இனத்திற்கு விருத்தி யாவன் எய்திடும் பித்த வாயு
தனமது அதிகம் காணான் சண்முகர் பக்தி பூண்டு
சினமுண்டு வெளிக்காட் டாதான் தீரமா மனத்த னாகும்
அனைவர்க்கு இல்லம் செய்வன் அவரில்லம் வாசம் செய்வன்.

6. தன் ஜாதியாரைவிட மேலாக வாழ்வான். இவனது சரீரத்தில் பித்த வாயு தங்கி இருக்கும். அதிக பணத்தைக் காணாதவன். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி கொண்டவன். கோபமடைவது இவனுடைய இயல்பு. ஆனால் அதை வெளியாருக்குத் தெரிவிக்க மாட்டான். அஞ்சா நெஞ்சம் படைத்தவன். எல்லோருக்கும் வீடு கட்டிக் கொடுப்பான். ஆனால் இவன் சொந்த வீடு இல்லாமல் பிறர் வீட்டில் வாசம் செய்வான்.

7. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறோம் தாயே கேளும்
தென்திசை பழனி தன்னில் சீர்மறை குலமு தித்து
அந்நகர் கிராமச் செட்டு அவனுமே செய்து வந்து
தன்மனை மதலை யுண்டாய் வாழு நாள் வினையைக் கேண்மோ.

7. இவனுடைய முன் ஜன்மத்தைக் கூறுகிறோம். தாயே ! கேளுங்கள். இவன் முன் பிறவியில் தென் திசையிலுள்ள பழனி க்ஷேத்திரத்தில் பிராம்மண குலத்தில் பிறந்து அங்கே வியாபாரம் செய்து கொண்டு ஜீவித்திருந்தான். தன் மனைவி மக்களுடன் சுகமாக அவன் வாழும் நாளில் அவனுக் கேற்பட்ட வினையைக் கேளுங்கள்.

8. கன்னிமேல் வேறொ ருத்தர் கனமான வார்த்தை சொல்லித்
தன்னுடை இடத்தை விட்டுத் தனியாக விலக்கும் போது
இன்னவன் தன்பால் மாது இயம்பினு ளந்தச் சங்கை
பொன்னதை அவரால் பெற்றுப் பேதைமேல் தோஷம்
[சொன்னான்.

8. ஒரு மனிதன் தனது மனைவியின் பேரில் அபாண்டமான நிந்தைகளைப் பேசி அவளைத் தன் வீட்டிலிருந்து வெளியேறித் தனியாகவாழும்படி துரத்தி விட்டான். காரணமின்றித் துரத்தப்பட்ட அந்தமாது மத்யஸ்தனாக இருந்து நியாயத்தை வழங்கும்படி இவனை வேண்டிக் கொண்டாள். ஆனால் இவன் என்ன செய்தான் தெரியுமா ? அந்தப் பெண்ணின் கணவனிடமிருந்து பணத்தைப் பெற்றுக்கொண்டு இவள் பேரிலேயே குற்றங்கள் இருப்பதாகத் தீர்ப்பளித்தான்.

9. மாதுவும் மனது வாடி வரைந்திட்ட சாபம் கேண்மோ
பாதகப் பொருளி னாலே பகர்ந்திட்டாய் பெண்பால் தோஷம்
மேதினில் மறு ஜன்மத்தில் விளங்கிடும் என்னைப் போல் புத்தி
தீதாகும் தந்தை ஆஸ்தி தனியனாய் வாழ்வா யென்றும் ;

9. ஆகையால் மனம் வாடிய அந்தப் பெண் சொன்ன சாபத்தைக் கேளுங்கள். புத்தியைக் கெடுக்கும் பொருளைப் பெற்றுக் கொண்டு, ஒரு பெண் மேல் காரணமின்றியே குற்றத்தைத் தீர்மானித்துச் சொன்ன நீ மறு பிறவியில், நான் இப்பொழுது இருப்பதுபோல, மனங் குழம்பி வாழ்வாய். தந்தையின் சொத்தும் உனக்கு இராது. சகோதரனின்றித் தனியனாக இருப்பாய்.

10. இல்லமு மில்லா தாகி இப்புவி தன்னில் வாழ்வாய்
வல்லியு மிவ்வாறு சொல்லி மடிந்தனள் சலத்தி லேதான்
புல்சிற்று அந்தத் தோஷம் புதல்வனு மந்தி யத்தில்
தொல்லைக ளதிக முண்டாய்ச் சேர்ந்தனன் கால னூடு.

10. மேலும் தங்குவதற்குச் சொந்த வீடு இல்லாமல் வாழ்வாய். இவ்வாறு சொல்லி வருத்தத்தைச் சகிக்க முடியாதவளாகித் தண்ணீரில் விழுந்து இறந்தாள். அந்தப் பாவம் இவனை வந்தடைந்தது. இவனும் அந்திய காலத்தில் அனேகத் தொல்லைகளை அடைந்து கஷ்டப்பட்டுக் கொண்டே யமனுலகம் சென்றான்.

11. பிரமனால் வரையப் பட்டுப் பிறப்பனு மிக்குலத்தில்
அரிவையின் சாபம் போல அவன்சுதர் கன்னி காணான்
குறைவான குடும்ப மெய்தும் குடியது அலைச்ச லெய்தும்
உறைந்தஇக் குணத்தா னுக்கு உதிப்பனு மிந்தப் பாலன்.

11. பின்பு நான்முகனால் இக் குலத்தில் படைக்கப்பட்டிருக்கின்றான். முன்ஜன்மத்தில் ஏற்பட்ட அம்மாதுவின் சாபப்படி இவனுக்குப் பெண் பிறக்காது. குடும்பம் தாழ்வாகவே இருக்கும். குடும்பம் அலைச்சலையும் அடையும். இப்படிப்பட்டவனுக்கு இந்தப் பாலன் மகனாகப் பிறந்திருக்கின்றான்.

12. பாலக னிறம் குணத்தைப் பகருவோம் தாயே கேளும்
சீலம்போல் வெளிம யக்கன் சிறப்பிலாக் குடும்ப முள்ளான்
கோலமாய்..........எய்திடும் குடை டைகோ விருத்தி யல்பம்
நீலிமார் மோக னவன் நிந்தைகள் சிலநாள் ஏற்பன்.

12. ஜாதகனது நிறம் குணம் முதலியவைகளைச் சொல்லுகிறோம். கேளுங்கள். நல்ல நடத்தை உள்ளவன் போல நடிப்பான். [உண்மையில் நன்னடக்கை இல்லாதவன் என்பது கருத்து.] மிகத் தாழ்ந்த குடும்பம். காளைகளும் பசுக்களும் இவனிடம் விருத்தியாகா. பெண்களிடம் மோகம் கொண்டவன். பல நிந்தைகளும் இவனுக்கு ஏற்படும்.

13. வித்தையு மல்பமாகும் வீண்வம்பில் செல்லா னாகும்
சுற்றத்தார்க் கிணக்கம் சொல்வன் சொர்ணமு மதிகம் காணான்
புத்தியில் பெரியோ னாகும் பொய்மெய்யாய்ப் புகல்வா னாகும்
சித்தினி சாதி யாவன் தீரமில் லாத நெஞ்சன்.

13. கல்வியறிவும் கொஞ்சமாகவே இருக்கும். வீண் சண்டைகளில் சேரமாட்டான். சுற்றத்தார்களுக்கும் அனுகூலமாகப் பேசுவான். அதிகம் பணம் இல்லாதவன். புத்திசாதுர்யம் உடையவன். பொய்யை மெய்யாக எண்ணும்படி பேசுவான். சித்தினிச் சாதியைச் சேர்ந்தவன். உறுதி இல்லாத மனம் படைத்தவன்.

14. தண்டிய உணவின்மீது உறைப்பொடுப் புளிப்பி லிச்சை
கண்டித முரையா னாகும் கடன்கொள்வன் செலவு செய்வன்
தண்டமிழ் நுணுக்கம் தேரான் சத்திரம் சிலர்க்குச் செய்வன்
பண்டுநாள் இல்ல மில்லான் பங்கய ரேகை யுண்டு.

14. உறைப்பும் புளிப்பும் கலந்த ஆகாரங்களில் மிகவும் ஆசை உடையவன். கண்டித்துப் பேசமாட்டான். கடன் வாங்கும் இயல்புள்ளவன். ஏராளமாகச் செலவு செய்வான். இனிமையான தமிழின் சுவையைச் சிறிதும் அறியாதவன். சிலருக்கே தனது தொழிலால் உதவி புரிவான். பிதுரார்ஜிதமான வீடு இல்லாதவன். கையில் தாமரைரேகை விளங்கிடும்.

15. மாந்தளிர் மேனி யாகும் மருவிடும் பித்தச் சூடு
சூர்ந்துமே வார்த்தை யுண்டு குணமது இரண்டு மாகும்
சாந்தமும் கோப முண்டு தன்துணே முன்னுல் காணுன்
வேந்தன்போல் ஒருவன் பின்னுல் விளங்கிடும் தீர்க்க மாக.

15. மாந்தளிர் போல் சிவந்த மேனியான். இவனுடைய சரீரத்தில் பித்த சூடு தங்கி இருக்கும். கவனத்துடன் வார்த்தைகளைப் பேசுவான். வாக்கினுல் ஒன்றைச் சொல்லி காரியத்தில் வேறு ஒன்றைச் செய்வான் [வாக்குச் சுத்தம் இல்லாதவன் என்பது கருத்து]. சாந்தகுணமும் கோபமும் இரண்டும் இவனிடம் உண்டு. இவனுக்கு முன்பிறந்த சகோதரன் இல்லை. இவனை அடுத்து ஒரு சகோதரன் உண்டு. அவன் அரசன் போல் விளங்குவான். நீண்ட ஆயுளுடனும் வாழ்வான்.

16. பின்துணே பெண்பால் தோஷம் பேசுவோ மிவனுக் கேதான்
மன்னவன் சேதி சொல்வேன் மாஞ்சிவப் புடைய ளுகும்
கன்னென மொழியு முண்டு கல்வியு மல்ப மாகும்
சொன்னசொல் சுகமே யாகும் தொடுவழக் கதனில் செல்லான்.

16. இவனுக்குப் பிறகு பிறக்கும் பெண்குழந்தை சேதமாகும். அந்தக் சகோதரனுடைய குணங்களைக் கூறுகின்ரேம். மாந்தளிர் போல் சிவந்த நிறமுள்ளவன். கரும்புபோல் இனிமையான வார்த்தைகளைப் பேசுவான். கொஞ்சமே கற்றறிந்தவன். அவன் கூறும் சொற்களப்படியே நடப்பான். வீண் வழக்குகளில் சேராதவன்.

17. தேகமே உணச்ச லுண்டு தேறின புத்தி யேற்பன்
பாகமாய்ப் பேசு வானும் பற்களும் தரள மொப்பான்
ஆகம நுணுக்கம் தேரான் அறமது சிலர்க்குச் செய்வன்
வேகமாய் நடக்க வல்லன் வெஞ்சினம் வெளிக்காட்டா தான்.

17. மெலிந்த தேகம் வாய்ந்தவன். அனுபவம் உடைய பெரியோர்களின் புத்தியைக் கேட்பான். அழகாகப் பேசுவான். பற்கள் முத்து போன்று அழகாக இருக்கும். சாஸ்திரங்களின் தத்துவங்களை அறியாதவன். சிலருக்கே தருமத்தை [உதவியை என்றும் கருதலாம்] செய்வான். நடை வேகமாக இருக்கும். கோபம் கடுமையாக வரும். ஆனல் அதை வெளியில் காட்ட மாட்டான்.

18. அறுமுகன் பக்தி கொள்வன் ஆபத்தைச் சிலர்க்குக் காப்பன்
உறன்முறை மதிக்க வாழ்வன் உண்டியும் சுகமாய்க் கொள்வன்
இருவித வார்த்தை யுண்டு யாரையும் உறவு கொள்வன்
மருமத்தை வெளிக்காட் டாதான் வாதநோ யுடைய ளுமே.

18. சுப்பிரமணியசுவாமியிடம் பக்திகொண்டவன். ஆபத்திலிருந்து சிலரை மாத்திரமே காப்பான். உற்ருர் உறவினர் மதிக்கவாழ்வான். பல விதப் பொருள்களைச் சமைத்துச் சுகமாக (இன்பத்துடன்) சாப்பிடுவான்.

[சாப்பாட்டிற்குக் கஷ்டமில்லாதவன் என்பது கருத்து.] முன்சொன்ன பேச்சை மாற்றியும் பேசுவான். எல்லோருடனும் உறவுகொண்டாடுவான். ரஹஸ்யத்தை வெளியிடாதவன். வாயுரோகம் உள்ளவனுகவும் இருப்பான்.

19. பாரியும் ஒன்றே யாகும் பாவையும் தென்பால் நேரும்
தீரமாய் சுதரான் ரண்டு செப்புவோம் கன்னி ஒன்று
மாரனும் ஒத்து வாழ்ந்து வேருவன் பின்னுல் சொல்வேன்
காரிய சமர்த்த ளுகும் கட்செவி கோப மேற்பான்.

19. அவனுக்கு மனைவியும் ஒருத்திதான். மணப்பெண் தென்திக்கில் ஜனித்திருப்பாள். அவனுக்கு இரண்டு பிள்ளைகளும் ஒரு பெண்ணும் பிறந்து சுகமாக வாழ்வார்கள். இவனும் (நாம் சொன்ன ஜாதகனும்) சிறிது காலம் ஒற்றுமையுடன் வாழ்ந்து பிறகு தனித்தனியே குடும்பம் செய்வார்கள். அவ்வாறு நிகழும் காலத்தைப் பிறகு கூறுகின்ரேம். ஆரம்பித்த காரியத்தை நிறைவேற்றுவதில் மிகவும் சமர்த்தன். பாம்பிற்குக் கோபம் வருவது போல இவனுக்குக் கோபம் எளிதிலும் உக்கிரமாகவும் வரும்.

20. செலவுகள் செய்வா ளுகும் தீரமா மனத்த ளுகும்
பலர்களால் புகழு மேற்பன் பஞ்சைமே லிரக்க முள்ளான்
நலமதை சுயவர்க்குச் செய்வன் நன்முக வடிவு முண்டு
தலவாசம் செல்வா ளுகும் சாதிப்பன் சிலது சங்கை.

20. பல வழிகளிலும் செலவுகளைச் செய்வான். தைரியம் வாய்ந்தவனுகவும் இருப்பான். பல மனிதர்கள் மூலம் இவனுக்குப் பெருமையும் புகழும் ஏற்படும். ஏழைகளிடம் கருணை உள்ளவன். துஷ்டர்களுக்கு நன்மையைச் செய்வான். முகத்தில் விசேஷப் பொலிவு இருக்கும். பல புண்ணிய ஸ்தலங்களில் வாசம் செய்வான். எடுத்த காரியங்களை அனேகமாகச் செய்து முடிப்பான்.

21. பிறந்தசேய் மணத்தின் காலம் பேசுவோம் முப்பான் மூன்றில்
அரிவையும் தென்கீழ் நேரும் அவள்குணம் புகலக் கேண்மோ
உறன் முறைக் கினிய ளாவள் உயர்வான புத்தி யேற்பள்
நெறியதைக் காப்பா ளாகும் நீத்தோர்க்கு அன்ன மீவள்.

21. கடகலக்கின மகனுடைய விவாஹகாலத்தைப் பேசுவோம். முப்பத்து மூன்ருவது வயதில் மணம் நடைபெறும். மணப்பெண் தென்கீழ்த்திசையில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்ரேம். உற்ருர் உறவினருக்கு இனியவளாக இருப்பாள். மேலான புத்திப் படைத்தவள். தருமநெறியிலிருந்து வழுவாதவள். தவசிகளுக்குப் பக்தி சிரத்தையுடன் அன்னமளிப்பாள்.

22. வந்தபின் வரன்யோ கந்தான் மறுத்துரை அதிகம் கூருள்
சுந்தர முடையா ளாகும் சொல்லுமுன் கோபம் கொஞ்சம்
நொந்தபேர்க் குதவி செய்வ்ள் நீக்குவாள் அல்பர் தம்மை
இந்திர னிறைஞ்சு மாதே இவளுமே தீர்க்க சீவி.

22. அவள் வாழ்க்கைப்பட்டபின் இவனுக்கு அதிக அதிருஷ்டங்கள் ஏற்படும். பிறர் சொல்லுவதை அதிகமாக ஆக்ஷேபித்துக் கூறமாட்டாள். அழகு வாய்ந்தவள். சிறிது முன்கோபமும் உண்டு. கஷ்டப்படுபவர்களுக்கு உதவிசெய்வாள். தன்னைவிட குணத்தினால் தாழ்ந்தவர்களிடம் நட்புக் கொள்ளமாட்டாள். தேவேந்திரனால் போற்றப்படும் தாயே! இவள் நீண்ட காலம் வாழ்வாள்.

23. ஜயமுனி புகலு கின்றார் சத்தமம் சனியே நிற்க
நயமான தாரம் ஒன்று நாட்டின கார ணம்சொல்
பயமிலா பொன்னேன் நாலில் பதிந்ததால் தாரம் ஒன்றே
அயல்மாது அபிமா னந்தான் அணுகிடும் வேற தாக.

23. இவ்வாறு அத்திரி முனிவர் கூறியவுடன் ஜயமுனி ஒரு சந்தேகத்தைத் தெளிவிக்கக் கோருகின்றார். இச் சாதகத்தில் களத்திர ஸ்தானம் என்று சொல்லப்படும் ஏழாமிடத்தில் சனி இருப்பதால் இவனுக்கு ஒரு மனைவிதான் என்று எவ்வாறு சொல்வது? இச் சாதகனுக்கு ஒரு மனைவியா? அல்லது இருவரா? இவ்விஷயத்தைத் தெளிவுப்படுத்துங்கள். இதற்குப் பதில் அத்திரி கூறுகின்றார். சனி ஏழாமிடத்தில் இருப்பினும் குரு நான்காமிடத்தில் இருப்பதால் மனைவி ஒருத்திதான. ஏழில் சனி இருப்பதின் பயனாக வேறு ஒரு ஸ்திரீயின் அபிமானம் இவனுக்கு உண்டாகி அவளையும் இவன் மனைவியாகப் பாவிப்பான்.

24. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் ஒருவர் தோன்றும்
சுத்தமா யாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
வித்தகன் தனக்குப் புத்திரர் விளங்காது முதலி லேதான்
குத்தத்தைச் சொல்லு மென்ன குருபானு புந்தி அஞ்சில்;

24. இப்பொழுது புத்திரபாவத்தைக் கூறுகின்றோம். இவனுக்கு மொத்தம் ஐந்து குழந்தைகள் ஜனிக்கும். அவர்களில் இரு பிள்ளைகளும் இரு பெண்களும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். முதலில் பிறந்த குழந்தை நீடிக்காது. அதற்கான கிரஹ தோஷம் என்னவென்று பார்வதி தேவி கேட்க, முனிவர் பதில் உரைக்கின்றார். குரு, சூரியன், புதன் ஐந்தாமிடத்தில்;

குறிப்பு.—ஜாதகத்தில் ஐந்தாமிடத்தில் குரு, சூரியன், புதன் இருப்பதால் இச் சாதகனுக்கு முதலில் பிறந்த குழந்தை நீடிக்காது என்று இந் நூலாசிரியர் கூறுகின்றார். ஜாதகத்தில் சுக்கிரனும் புதனும் ஐந்தாமிடத்தில் இருப்பதை வாசகர்கள் கண்டுகொள்க. ஆகையால் "குரு பானு புந்தி" என்றிருப்பது எப்பொழுதாகிலும் எழுதும் காலத்தில் ஏற்பட்ட பிழையாக இருக்கவேண்டுமென்பது எமது அபிப்ராயம்.

25. இருப்பதால் புகன்றோம் யாங்கள் இவனுடைப் பூர்வம் கேளாய்
திருப்பரங் குன்றந் தன்னில் ஜனித்தானும் வேளாள னாக
தரையினால் சீவித் தேதான் தன்மனை மதலை யுண்டாய்
பொருளது பெருக்க முண்டாய்ப் புகழுடன் வாழு நாளில்;

25. தங்கி இருப்பதால் முதலில் ஜனித்த குழந்தை நீடிக்காது என்று சொன்னோம். இவனுடைய பூர்வ ஜன்மத்தைப்பற்றிக் கூறுகின்றோம் கேளுங்கள். இவன் முன் பிறவியில் திருப்பரங்குன்றத்தில் வேளாளகுலத்தில் உதித்து இருந்தான். உழுதுபயிர் செய்து ஏராளமாகப் பொருள்களை அடைந்து, தன்மனைவி மக்களுடன், சுகமாகச் சீவித்து வந்தான். நல்ல புகழ் பெற்றவனாகவும் இருந்தான். அவ்வாறு அவன் வாழும்காலத்தில்;

26. வந்ததோர் வினையைச் சொல்வேன் வாத்தியின் மகள்மேல் [மோகம்
இந்தவன் காதல் கொண்டு இரணியம் அவளுக் கீந்து
அந்தவள் கையைத் தொட்டான் அம்மாது இசையா னாகி
உன்னுடை தங்கை யாச்சே உபதேசி மகளு னக்கு.

26. அவனுக்கு வந்த ஒரு வினையைச் சொல்லுகிறேன். அச்சென்மத்தில் இவனுக்கு ஆசிரியராக இருந்தவரின் மகளைக் கண்டு அவளிடம் இவன் மோகம்கொண்டு, அவளுக்குப் பொற்காசுகளைக் கொடுத்து அவளிடம் அணுகினன். சிறிதும் சம்மதிக்காத அவள், குருவின் மகளானபடியால் நான் உனக்குத் தங்கையாயிற்றே! இவ்வாறு என்னிடம் எண்ணம் கொள்வது தருமமல்ல என்று போதித்தாள்.

27. இன்னமும் பலவாறு சொன்னாள் இவன்செவி கேளா தாகிக்
கன்னியைப் பலவந் தத்தால் காமன்தன் னூடல் செய்தான்
அன்னவள் வெட்க முற்று அறைந்தசா பத்தைக் கேண்மோ
இனிவரும் ஜன்மம் தன்னில் பெண்துணை காணு தாகி;

27. மேலும் பல உபதேசங்களைச் செய்தாள். அவ்வளவு உபதேசமொழிகளும் இவன் காதில் பிரவேசிக்கவில்லை. ஆகையால் தன்னிஷ்டப்படியே நடந்துகொண்டான். வெட்கமடைந்து அவள் விடுத்த சாபத்தைக் கேட்பீராக. அடுத்து வரும் ஜன்மத்தில் நீ சகோதரி இல்லாதவனாகி அவளால் வரும் இன்பம் அற்றவனாக உயிர் வாழ்வாய்.

28. இல்லமு மில்லா தாகி இளைத்ததோர் குடும்பி யாகி
வல்லிவா லிபத்தி லின்றி மாநிலம் நிந்தை யுண்டாய்ச்
சொல்லியே சென்றா ளென்றோம் சேர்ந்தது அந்தத் தோஷம்
அல்லலைத் தவிர்க்க மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

28. சொந்த வீடும் இல்லாமல் மிகவும் க்ஷீணமான குடும்பத்தை உடையவனாக இருப்பாய். மேலும் வாலிபப்பருவத்தில் மனைவியை அடையாமல் பல நிந்தைகளையும் ஏற்பாய் என்ற அந்த சாபத்தின் பாவமும் இவனைப் பிடித்துக் கொண்டது. சங்கடங்களைப்போக்கும் எங்கள் உயிருக்குயிரான தாயே! கேளுங்கள்.

29. மாரனு மந்தி யத்தில் வாதநோ யுடைய ஞகி
தீரனும் கால ஞடு சென்றுமே பிரமன் லக்கம்
பாரினி லுதிப்பா ஞகும் பாவையின் சாபம் போலே
நேரிடு மென்று சொல்வோம் நிமலியே கேட்டி டாயே.

29. அச் சென்மத்தின் அந்தியத்தில் வாதநோய் கண்டு இவன் காலன் நாட்டிற்குச் சென்ருன். பிறகு படைக்கும் கடவுளான பிரம்மனுல் இங்குப் பிறப்பிக்கப்பட்டிருக்கின்ருன். முற்பிறவியில் அந்தப்பெண் சபித்தபடியே இவனுக்கு இச்சென்மத்தில் ஒவ்வொன்றும் நேரிடும். நாங்கள் சொல்வதை மேலும் கேளுங்கள்.

30. வந்தவன் யோகச் சேதி வரைகிருே மினிமே லாகச்
சந்ததம் முப்பான் மூன்று ஆண்டுமேல் யோகம் வாய்க்கும்
முந்தியே சுகமும் துக்கம் மேவிடும் நினைத்த தோங்கா
பந்துவின் மதிப்பில் லாமல் பாரினில் நிந்தை யேற்பான்.

30. பிறந்திருக்கும் கடகலக்கின மகனுடைய யோகங்களைக் கூறுகின் ருேம். முப்பத்து மூன்றுவது வயதிற்குமேல் இவனுக்கு நல்ல யோக முண்டு. மேலே குறிப்பிட்ட வயதிற்கு முன்பு இவனது வாழ்க்கையில் சுகம் துக்கம் நிறைந்திருக்கும். [துக்கம் அதிகமாக இருக்கும் என்பது கருத்து.] நினைத்த காரியங்கள் நிறைவேரு. பந்துக்கள் மதிக்கமாட்டார் கள். பல நிந்தனைகளும் இவனுக்கு ஏற்படும்.

31. சிலதுநாள் ஜனங்கள் தாழ்வு சல்லிய பாதை யுண்டு
கலவர புத்தி யாகும் கழறின ஆண்டு மேலாய்க்
குலவிடு மாது தானும் குலமதிப் புடைய வாழ்வன்
தலமது செய்வா ஞமே சந்திரன் பிறைபோல் யோகம்.

31. சிலகாலம் ஜனங்கள் மத்தியில் தாழ்வுபட்டிருக்க நேரிடும். கடன் தொந்தரவும் இருக்கும். எப்பொழுதும் மனத்தில சஞ்சலப்பட நேரும். முன் சொன்ன (முப்பத்து மூன்றும்) வயதிற்குமேல் மணக்கப்பட்ட மனைவியின் மூலம் இவனுக்கு அதிருஷ்ட மேற்பட்டுக் குலத்தினர் மதிக்க வாழ்வன். தனக்குச் சொந்தமாக ஒரு வீடு கட்டுவான். பிறைச்சந்திரன் போல யோகங்கள் ஓங்கிவளரும்.

32. ஆருறு ஆண்டு தன்னில் அணுகிடும் நிதிநிட் சேபம்
வேருெரு இல்லம் செய்தல் வெற்றியாம் நினைத்த தெல்லாம்
பாரது சேர்த லுண்டு பலபணி உடைய ஞகும்
ஆறுமா முகத்த ஞலே யாவத்தும் கூடு மென்ருேம்.

32. முப்பத்தாறுவது வயதில் புதையல் இவனுக்குக் கிடைக்கும். வேறு ஒரு வீடும் நிர்மாணிப்பான். எண்ணிய காரியங்களைச் சரிவர நிறைவேற்றி வெற்றியை அடைவான். பூமிகளைச் சேர்ப்பான். பலவிதமான ஆபரணங் களையும் அடைவான். சுப்பிரமணிய சுவாமியின் கிருபையால் மற்றைய க்ஷேமங்களும் இவனுக்குச் சுலபமாகக் கிட்டும்.

33. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுண்டு பொறுமை சாலி
அன்னமு மன்பா யீவள் ஆளன்தன் மனதுக் கேத்தோள்
அன்னியர் குற்றம் சொல்லாள் ஆபத்தைச் சிலர்க்கு ஏற்பள்
அன்னவள் சமயோ கத்தாள் அடாவடி கூறு ளாகும்.

33. இப்பொழுது ஜாதகனின் தாயினுடைய குணத்தைச் சொல்லப் போகின்ருேம். அவள் அழகுள்ளவள். பொறுமை வாய்ந்தவள். வந்தவர்களுக்கு அன்புடன் அன்னமிடும் இயல்பு உடையவள். தன் கணவனது மனத்தின்படி நடந்துகொள்வாள். பிறருடையக் குற்றங்களை எடுத்துச் சொல்லமாட்டாள். வேறு சிலர்க்கு நேர்ந்த ஆபத்தைத் தனக்கேற் பட்டதாக நினைப்பாள். சம அதிருஷ்டமுள்ளவள். விதண்டாவாதம் பேச மாட்டாள்.

34. பந்துவுக் கினிய ளாகும் பரிந்துப சாரம் செய்வள்
நிந்தைகள் ஏற்கா ளாகும் நேமியில் நல்லோ ளாவள்
வந்தவர் தம்மைக் காப்பள் வளவுமே தென்கீ ழாகும்
தன்துணை ஆண்பால் ரண்டு சத்திமார் ஐவ ராகும்.

34. உறவினர்களுக்கு இனியவள். பரிவுடன் எல்லோருக்கும் உபசாரம் செய்வாள். அவளுக்கு அவதூறுகள் ஏற்படா. எல்லோருக்கும் நல்லவளாக வாழ்வாள். தன்னை வந்தடைந்தவர்களைக் காப்பாள். தான் பிறந்த ஊருக்குத் தென் கீழ்த்திசையில் இவள் வாழ்க்கைப்பட்டிருப்பாள். இவளுக்குச் சகோதரர்கள் இருவர். சகோதரிகள் ஐவர்.

35. மத்தியில் சிலது சேதம் மருவிடும் பித்த வாயு
குத்தத்தை மனதில் வையாள் குறிப்பினில் கொடுமை தோன்றும்
வித்தகி பூர்வம் தன்னை விளம்புவோ மிதின்மே லாகச்
சித்தர்வா முருணை நாட்டில் ஜனித்தனள் வைசியச் சேயாய்.

35. ஆனல் மத்தியில் அச் சகோதர சகோதரிகளில் சிலர் சேதத்தை அடைவார்கள். இவளுக்கு உடலில் பித்தவாயு தங்கி இருக்கும். பிறர் குற்றங்களைக் கண்டாலும் மனத்தில் வைத்துக்கொள்ளமாட்டாள். முகத் தோற்றத்தில் கொடியவளாகக் காணப்படுவாள். [உண்மையில் கொடியவளல்லள் என்பது கருத்து]. இவளுடைய பூர்வஜன்மத்தைக் கூறுகின்ருேம். இவள் முன்பிறவியில் சித்தர்கள் வாழும் திருவண்ணுமலையில் வைசிய சாதியில் பிறந்திருந்தாள்.

36. சுகமுள குடும்பி யாகி .... அன்ன மீந்து
பகையான கால ஞடு பரந்தனள் வரன்முன் ஞகச்
சகபதி வரையப் பட்டு ஜனித்தனள் மயன்கு லத்தில்
தகமையாய் நாற்ப தாண்டில் தனுர்மாதம் கண்ட மென்ருேம்.

36. தக்கவயதில் மணமாகிக் கணவன் குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்துவந்தாள். அன்னதானம் செய்தாள். தன்கணவன் இறப்பதற்கு முன்னமேயே இவள் இறந்தாள். பிறகு பிரம்மதேவனுல் இக்குலத்தில்

(விசுவகர்ம ஜாதியில்) பிறப்பிக்கப்பட்டு ஜாதகனுக்குத் தாயாக வாய்த்திருக்கின்ருள். ஜாதகனுடைய நாற்பதாவது வயதில் மார்கழி மாதத்தில் இவளுக்குக் கண்டம் ஏற்படும். அதுவே இவளுடைய முடிவாகும்.

37. மறுஜன்மம் காஞ்சி தன்னில் வருகுவாள் சௌராஷ்டர வம்சம்
பெருமையாய்க் குடும்பி யாகிப் பூவையும் வாழ்வா ளாகும்
அறிவிப்போம் மூவே ழாண்டில் அணுகிய தேளின் மாதம்
உரைக்கிறேம் தந்தை கண்டம் உத்தமி கேட்டி டாயே.

37. மறுஜன்மத்தில் இவள் காஞ்சியில் சௌராஷ்டிர ஜாதியில் பிறந்து பெருமைவாய்ந்த குடும்பம் உள்ளவளாகிச் சிறப்புடன் வாழ்வாள். ஜாதகனுடைய தந்தையின் மரணகாலத்தைச் சொல்லுகின்றேம். ஜாதகனுக்கு முப்பத்தேழாவது வயது நடைபெறும்போது கார்த்திகை மாதத்தில் தகப்பனுக்கு மரணம் ஏற்படும். தேவியே ! மேலும் கேளுங்கள்.

38. பின்ஜன்மம் தணிகை தன்னில் பிறப்பனும் பிரம்ம சேயாய்
மன்னர்பால் அரசு செய்து மாரனும் வாழ்வா னுகும்
இன்னவன் மரண காலம் இயம்புவோ மறுபா னேழில்
கன்னியாம் மாதம் தன்னில் காயை னுடலம் ஏகும்.

38. அவன், மறு ஜன்மத்தில் திருத்தணி க்ஷேத்திரத்தில் பிராம்மண ஜாதியில் பிறப்பான். அரசாங்க உத்தியோகம் செய்து வாழ்வான். ஜாதகன் மரணமாகும் காலத்தையும் கூறுவோமாக. இவனுக்கு அறுபத்தேழாவது வயது நடக்கும்போது புரட்டாசி மாதத்தில் உடலைவிட்டு உயிர் நீங்கும்.

39. பாலன்பின் ஜன்மம் சொல்வேன் பட்சியில் வேளாள னுகச்
சீலனுய்ப் பூமி யுண்டாய்ச் சிறப்புடன் வாழ்வா னுகும்
சாலவே உதிக்கும் காலே சதயநாள் முதல்பா தத்தில்
ஆலமாம் பணியி ருப்பு ஐமூன்று ஆண்டு மாகும் ;

39. ஜாதகனுடைய மறுபிறவியையும் கூறுகின்றேன். இவன் அடுத்து வரும் பிறவியில் ''பக்ஷிதீர்த்தம்'' என்றுச் சொல்லப்படும் திருக்கழுக்குன்றத்தில் வேளாள ஜாதியில் பிறந்து மிக்க நற்சீல முடையவனுக இருப்பான். நிலங்களை அடைந்துச் சிறப்புடன் வாழ்வான். இப்பொழுது இவன் சதய நக்ஷத்திரம் முதல் பாதத்தில் பிறந்திருக்கின்றுன். ஆகவே ராஹு தசையில் இருப்பு வருஷங்கள் பதினைந்து ;

40. திங்களு நான்கு மாகும் தினமது பத்து என்றேம்
அங்கவன் பிணிஅ நேகம் அவன்தந்தை தாயும் நோயாம்
சங்கையாய் இல்லம் வேறு தனமூல அலைச்ச லாகும்
மங்கையே பூர்வம் சொன்னேம் வரைகிறேம் பின்பால் சேதி.

40. மாதங்கள் நான்கு, நாட்கள் பத்து என்று தெரிவித்துக்கொள்ளுகிறேம். இத்தத் தசையில் நடைபெறும் பொதுப் பலன்களைச் சுருக்கமாகக் கூறுகின்றேம். ஜாதகனுக்குப் பல நோய்கள் காணும். தாய் தந்தையர்

களுக்கும் பிணிகள் வரும். இவ்வளவு காலம் வசித்த இடத்தைவிட்டு வேறு இடத்தில் குடும்பம் செய்ய நேரும். பணத்திற்காக அலைய நேரிடும். தேவியே ! இது பூர்வ பாகமாகையால் பலன்களை அதிகம் சொல்லவில்லை. இரண்டாம் பாகத்தில் பலன்களை விரிவாகச் சொல்லப்போகின்றேம்.

41. சத்தம முனிவர்
சுத்தமாய்ச் சொன்னேம்
குற்றங்கள் யாவும்
வித்தகி பொறுப்பாய்.

41. முனிவர்கான நாங்கள் எழுவரும் ஜாதகத்தை நன்கு சுத்தமாக ஆராய்ந்துப் பார்த்துப் பலன்களைச் சொன்னேம். குற்றங்கள் இருப்பின் அவைகளைத் தாங்கள் பொறுத்து அருள்வீர்களாக.

குறிப்பு.—இங்கு அத்திரி முனிவர் ஒருவரே ஜாதகப் பலன்களைச் சொல்லியிருப்பினும், மற்றைய மஹரிஷிகள் இப்பலன்களைக் கேட்டு மறுத்துக் கூருமையால் அவர்களும் பலன்களைச் சொன்னதாகக் கருதவேண்டும். இங்கு, வடமொழியினுள்ள " अप्रतिषिद्धं अनुमतं भवति " என்றப் பழமொழியைக் காண்க. '' மறுக்கப்படாததொரு விஷயம் சம்மதிபெற்றதாகும் '' என்பது இதன் பொருள்.

ஜாதகம் 26.

1. கடகலக் கினம தாகக் கதிர்புதன் குருவு மூன்றில்
முடம னும் புகரு மஞ்சில் முழுமதி நவத்தி லேற
அடல்குசன் கேது ஈருறில் அரவுமே ஆறில் தங்க
உடன்பலன் புகலு மென்று உத்தமி கேட்க லுற்ருள்.

சந்திரன்			செவ்வாய் கேது
	இராசி சக்கரம்		லக்கினம்
ராகு	சனி சுக்கிரன்		சூரியன் புதன் குரு

விளம்பி வருஷம் புரட்டாசி மாதம் 16-ஆந் தேதி வெள்ளிக்கிழமை இரவு சுமார் 15 நாழிகைக்குச் ஜனனம். ஆங்கிலத் தேதி 30-9-1898. நவக்கிரஹங்களின் பாதசாரம். ஹஸ்தம் 2-இல் சூரியன். ரேவதி 3-இல் சந்திரன். புனர்வசு 2-இல் செவ்வாய். உத்திரம் 2-இல் புதன். சித்திரை 1-இல் குரு. விசாகம் 4-இல் சுக்கிரன். அனுஷம் 4-இல் சனி. பூராடம் 3-இல் ராஹு. புனர்வஸு 1-இல் கேது. நக்ஷத்திரம் ரேவதி. புததசை இருப்பு வருஷங்கள் ஐந்து, மாதங்கள் பதினொன்று.

1. இலக்கினம் கடகம், சூரியன் புதன் குரு இவர்கள்கன்னி, சனியும் சுக்கிரனும் விருச்சிகம், சந்திரன் மீனம், செவ்வாய் கேது மிதுனம், ராஹு தனுஸ், இக் கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக என, பார்வதி வினவினுள்.

2. அத்திரி புகலு கின்றூர் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லம் சொல்வேன் மேல்வாடை வடதென் வீதி
உத்தரம் மாயோன் மாரி செங்காளி ஈசன் தந்தி
பத்துமே மார்க்கம் உண்டு பகருவோம் சிறுஊ ராகும்.

2. அத்திரி முனிவர் பலன்களைக் கூறுகின்ருர். இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண். வீதி தெற்கு வடக்கில் அமைந்திருக்கும். வீடு மேல்வரிசையில் இருக்கும். கிழக்கு நோக்கும் வடதிசையில், விஷ்ணு, மாரியம்மன், காளி, பரமசிவன், விநாயகர் இவர்கள் எழுந்தருளி இருப்பார்கள். அருகில் ஒரு பாதையுமுண்டு. ஊரும் சிறியதாக இருக்கும்.

3. வருகுவான் சேஷ்ட ளுக வடுகர்தன் குலமே யாகும்
பெறுமன்னை தந்தை யோகம் பேதையா புத்திர யோகம்
திருமகன் யோகச் சேதி செப்புவோ மிந்நூல் தன்னில்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

3. அவ்வாறு அடையாளமுள்ள ஊரில் "நாயக்கர்" குலத்தில் குடும்பத்திற்கு ஜ்யேஷ்டனுகப் பிறந்திருப்பான். இவனுடைய தாய், தந்தை, மனைவி, புத்திரர் இவர்களைப் பற்றியும், அவனுடைய யோகங்களையும் முன்பின் ஜன்மங்களையும் இந்நூலில் சொல்லப்போகின்ருேம். வேதங்களின் மகுடமாகிய உபநிஷதங்களில் ஆனந்த நர்த்தனம் புரியும் தாயே! கேட்டருளல் வேண்டும்.

4. தந்தையின் துணைஆண் தோஷம் சத்தியு மொன்றே தீர்க்கம்
அந்தவள் சேதி சொல்வேன் அன்புள மனத்த ளாகும்
நிந்தைக ளேற்கா ளாகும் நிமிஷத்தில் கோபி யாவள்
முந்துமால் நிறத்தா ளாகும் உவமையாய்ப் பேச வல்லள்.

4. இச்சாதகனின் தந்தைக்குச் சகோதரன் இல்லை. ஒரு சகோதரி தான் உண்டு. அவள் தீர்க்காயுளுடன் வாழ்வாள். அவளுடைய வரலாறுகளைச் சொல்லுகின்ருேம். அன்பு நிறைந்த மனம் படைத்தவள். பிறர் நிந்தனை செய்யும்படி நடந்துகொள்ளமாட்டாள். மிகவும் முன்கோபி. திருமாலின் நிறமுடையவள் (கருத்த மேனியாள் என்பது கருத்து) ஒவ்வொரு விஷயத்தையும் உவமை சொல்லி விளக்குவாள்.

5. தரித்திர மில்லா ளாகும் தன்வரன் உள்ளூர் தென்பால்
சிறுத்தோர்க்கு உதவி செய்வள் சேயர்கள் தோன்றும் தீதாம்
பிருகுமே புகலு கின்றூர் பூவைக்குப் புத்திர தோஷம்
உரைத்தகா ரணங்க ளெவ்வாறு உரைப்பீர்கள் முனியே நீர்தாம்.

5. ஏழ்மை இல்லாதவள். தான் பிறந்த ஊருக்குத் தென்கிழக்குத் திசையில் கணவன் ஊர் இருக்கும். எளியவர்களுக்கு உதவி புரிவாள். குழந்தைகள் பிறக்கும். ஆனுல் நீடித்திரா. இவ்வாறு அத்திரி முனிவர் சொன்னதைக் கேட்டு, பிருகு முனிவர், புத்திரதோஷத்திற்கு என்ன காரணம்? அதைச் சொல்லுங்கள் என, அத்திரி முனிவர் பதில் கூறுகின்ருர்.

6. முன்ஜன்மம் வினையி ளுலே உதித்தசேய் தோஷ மெய்தும்
என்னஊழ் செய்தா ளத்தை இயம்புவீர் முனியே நீர்தாம்
கன்னிகை பூர்வம் சொல்வேன் கடையூருக் கிருகி லேதான்
சின்னஊர் தன்னி லேதான் ஜனித்தனள் வன்னிய சேயாய்.

6. முன் ஜன்மத்தில் ஏற்பட்ட பாவத்தினுல் புத்திரதோஷம் உண்டு. பிறகு முனிவர், அதென்ன தோஷம். சொல்லுங்கள். அத்திரி—இவள் முன்பிறவியில் கடையூருக்கு அருகில் உள்ள ஓர் சிறிய ஊரில் வன்னியகுல க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்திருந்தாள். (கடையூர்—திருக்கடையூர் என்று பிரசித்தமானது.)

7. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரி வாழு நாளில்
அகமதில் முனியும் வாசம் யாவரும் தோத்த ரிப்பர்
பகைபிணி விலக்கும் தெய்வம் பாவைமுன் னோர்கள் போற்றும்
உகமையில் லாபில மாது உலகினில் தொழாமல் நின்ருள்.

7. காலக் கிரமத்தில் இவள், மணமாகி, கணவனுடனும் குழந்தைகளுடனும் சுகமாக வாழும் நாளில் அவளுடைய வீட்டில் ஒரு முனீசுவரன் வாசம் செய்து வந்தது. யாவரும் அதைத் துதித்து வணங்குவது வழக்கம். அது பகைவரும் பிணிகளும் இல்லாமல் செய்யும். அவ்வளவு சக்தி வாய்ந்தது அது. இவர்களுடைய முன்னோர்களும் அதைப்போற்றி வந்தார்கள். அப்படிப்பட்ட தெய்வத்தைப் பிறர் தொழுதாலும் இவள் தொழாமல் இருந்தாள்.

குறிப்பு.—" முனீசுவரன் " கண்ணிற்குப் புலப்படாத சக்தி வாய்ந்த ஒரு தாமச ஆன்மா.

8. கன்னியும் தொழாமல் நிற்கக் கருமுனி வருத்த முற்று
என்னையே தொழாத பாவி இனிவரும் ஜன்மம் தன்னில்
தன்சுதர் தம்மைக் கொல்வேன் உன்பக்கம் வாச மாவேன்
இன்னவாறு சொல்லி யேதான் எகிற்று வெளியி லேதான்.

8. இவள் அதைத் தொழாமல் நிற்கவே, கருநிறம் வாய்ந்த அந்த முனீசுவரன் சொல்லிற்று " என்னை நீ தொழாமல் நின்றமையால் மறு ஜன்மத்தில் நீ வசிக்கும் வீட்டில் நான் வசித்துக்கொண்டு, உனக்குப் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் அழிப்பேன் " இவ்வாறு சொல்லி விட்டு வெளியே சென்றுவிட்டது.

9. ஆகையா லிச்சென் மத்தில் அம்முனி சாபத் தாலே
சாகுமே சுதர்கள் தாமும் தன்பக்கல் வாச மாகும்
போகிடக் கிரியை ஒன்று புகலுவீர் முனியே நீர் தாம்
பாகமாய்க் கிரக சாந்தி பண்ணியே சக்தி பீஜம் ;

9. ஆகையால் அந்தமுனீசுவரனின் சாபத்தின்படி ஒவ்வொரு குழந்தையும் நாசமாகின்றது. அந்த முனீசுவரன் இவள் வீட்டிலே வசித்துக் கொண்டிருக்கிறது. இக்குற்றத்திற்குப் பரிகாரங்கள் சொல்லுவீர்களாக ; எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுகின்றார். முதலில் முறைப்படி நவக்கிரக சாந்தியைச் செய்யவேண்டும். அதன் பிறகு " சக்தி " பீஜத்தை ;

10. அறுகோணம் தனில மைத்து ஆயிரம் தரம்ஜ பித்துத்
திருமக ளணிந்து கொண்டு சுக்கிர வார நோன்பு
ஓராண்டு கொள்வா ளாகில் ஒதுங்கிடும் முனியின் தோஷம்
பெறுஜன்மம் ஆண்பா லொன்று பேதையு மிரண்டு தீர்க்கம்.

10. ஆறு கோணத்தில் எழுதி, அதில் சக்தியை ஆவாஹனம் செய்து, தூப தீப நைவேத்யங்களைச் சமர்ப்பித்து ஆயிரம் தரம் சக்தி பீஜத்தைச் ஜபித்து, சக்திபீஜம் எழுதப்பட்டிருக்கும் தகட்டை (யந்திரம் என்று சொல்லுவார்கள்) கழுத்தில் அணிந்துக் கொள்ளவேண்டும். மேலும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் "சுக்கிரவார விரதம்" ஒரு வருஷம் அனுஷ்டிக்கவேண்டும். இப்பரிகாரங்களைச் செய்தால் ஒரு பிள்ளையும் இரு பெண்களும் பிறந்து நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள்.

குறிப்பு.—சமசதுரமான தாமிரத் தகட்டிலோ அல்லது சக்திக்கேற்றபடி வெள்ளி, தங்கத் தகடுகளிலோ நாம் கீழே எழுதியுள்ளபடி ஆறு கோணங்களை அமைக்கவேண்டும். அந்த ஆறு கோணங்களிலும் நாம் எழுதியிருக்கிறபடி சக்தி பீஜத்தை " ह्रीं " (ஹ்ரீம்) என்ற சொல்லை தேவநாகரி எழுத்திலோ அல்லது தமிழிலோ எழுதவேண்டும். பிறகு அத் தகட்டில் ஆவாஹனம் முதலிய பதினாறு உபசாரங்களைச் செய்து ஆயிரத் தெட்டுமுறை சக்தி பீஜத்தை ஜபித்து, பிறகு அத் தகட்டை வெள்ளி அல்லது தங்கக் கவசத்திற்குள் வைத்து கையிலோ அல்லது கழுத்திலோ தரிக்க வேண்டும். பொதுவாக இது யாருக்கும் க்ஷேமத்தைத் தரும். இவ்விஷயத்தை மேலும் அறிய விருப்பமுள்ளவர்கள் மந்திர சாஸ்திரமறிந்த பெரியோர்களிடம் வணங்கிக் கேட்டறியவும்.



11. சொல்லியபடி செய்யாரேல் தோன்றிய சுதர்கள் தோஷம்
வல்லியு மத்தில் ஏகும் வரைகிறோம் பின்பால் சேதி
நல்லதோர் தந்தை சேதி நவிலுவோ மினிமே லாக்
அல்லலைத் தவிர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

11. நாங்கள் சொன்னவாறு செய்யாவிடில் பிறக்கும் குழந்தைகள் எல்லாம் நசிக்கும். இவளும் வாழ்க்கையின் மத்தியில் இறப்பாள். இவளைப்பற்றிய வரலாறுகளைப் பின் பகுதியில் விவரமாகக் கூறுகின்றோம். இதுவரையில் ஜாதகனின் அத்தையின் செய்தியைக் கூறினோம். இனி தந்தையின் செய்திகளைக் கூறுகின்றோம் கஷ்டங்களைப் போக்கும் தாயே! நாங்கள் சொல்வதைக் கேட்பீராக.

12. ரோகிணி சிம்ம ராசி நுகலுவான் தந்தை யென்றேம்
பாகமாய்ப் பேசு வானும் பரஉப காரம் செய்வன்
நாகரி கம்போல் காட்டும் நல்லோர்க்கு நல்ல னுவன்
ஆகம நுணுக்கம் தேரான் அரிநிறம் உணச்சல் நீட்சி.

12. இவன் (ஜாதகனின் தந்தை) ரோஹிணி நக்ஷத்திரத்தில் சிம்மலக்கினத்தில் பிறந்திருப்பான். அழகாகப் பேசுவான். பிறர்க்கு உதவி புரிவான். மிக்க நாகரிக முள்ளவன் போல உலகத்தோர்க்குத் தன்னைக் காட்டிக் கொள்வான். நல்லவர்களுக்கு நல்லவனுக இருப்பான். சாஸ்திரங்களின் ரஹஸ்யத்தை அறியாதவன். கருத்த மேனியான். அவனது சரீரம் உயரமாகவும் மெல்லியதாகவும் இருக்கும்.

13. சல்லியம் கொள்ளா னுகும் தாய்தந்தைக் கிஷ்ட னுவன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இடர்செய்யான் யாவ ருக்கும்
நல்லதோர் கிருஷி செய்வன் நாற்காலி விருத்தி யுண்டு
எல்லைகள் சேர்ப்பா னுகும் எப்போதும் வறுமை காணுன்.

13. கடன் இல்லாதவன் தன் தாய் தந்தையர்களிடம் மிக்க பக்தியுடன் இருப்பான். இவனை வந்தடைந்து யாசிப்பவர்களுக்கு இல்லை என்று சொல்ல மாட்டான். பிறர்க்குத் தீங்கு செய்யமாட்டான். லாபகரமான விவசாயத்தைச் செய்வான். கால் நடைகளை அபிவிருத்தி செய்வான். பூமிகளையும் சேர்ப்பான். எந்தப் பருவத்திலும் வறுமையைக் காணுதவன்.

14. மாமிக ளிரண்டே யாகும் மால்பத்தி கொள்ளா னுகும்
தீமைக ளொருவர்க் கெண்ணுன் தீரமா மனத்த னுகும்
தாமத குணமும் கொஞ்சம் சந்தேக மனத்த னுகும்
ஆமதை வேறு செய்வன் அம்பிகை யாளே கேளாய்.

14. இவனுக்கு மாமிமார்கள் இருவர். திருமாலிடம் அதிக பக்தி இல்லாதவன். பிறர்க்குக் கெடுதலைச் சிறிதும் மனத்திலுைம் எண்ணுதவன். அஞ்சாத நெஞ்சம் படைத்தவன். தாமத குணம் உள்ளவன். பிறரைச் சந்தேகிப்பான். வேறு ஒரு வீட்டையும் கட்டுவான். ஆகும் காரியத்தையும் ஆகாதபடி தடுத்து விடுவான் என்றும் கொள்ளலாம். அம்பிகையே ! மேலும் கேளுங்கள்.

15. சொன்ன இக்குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளா னிருநி றத்தான்
முன்கோபி மூலச் சூடு உயர்வான புத்தி யேற்பன்
தன்சொல்லே மேன்மை யாகச் சாதிப்பான் ஈகை வானும்.

15. இப்படிப்பட்ட குணமுள்ளவனுக்கு இக்கடக லக்கின பாலகன் மகனுக உதித்திருக்கிறன். இப்பொழுது ஜாதகனுடைய குணங்களைச் சொல்லுகின்றேம். அழகுள்ளவன். கருத்த மேனியான். முன்கோபி. மூலச் சூடும் உடையவன். நல்ல புத்தியை (உபதேசத்தை) ஏற்றுக்கொள்வான். சில சமயங்களில் தான் சொன்னதே சரி என்று விதண்டாவாதம் செய்வான். தியாகம் செய்யும் குணமும் உண்டு.

16. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உறைப்பொடு புளிப்பி லிச்சை
வண்டிவா கனமு மேற்பன் மாற்றுனை லகுவில் வெல்வன்
துண்டமாய்க் கூரு னுகும் தொடுத்ததை வெல்வா னுகும்
பண்டுநாள் பூமி தன்னைப் பாலகன் விருத்தி செய்வன்.

16. சுகமான போஜனங்களையே உட்கொள்வான். சுவைகளுக்குள் உறைப்பும், புளிப்பும் இவனுக்கு மிகவும் விருப்பமாகும். வண்டி முதலிய வாகன சௌக்கியங்கள் இவனுக்கு இருக்கும். எதிரிகளைச் சீக்கிரத்தில் சுலபமாக ஜயிப்பான். ஒருவரையும் கண்டித்துப் பேசமாட்டான். ஆரம்பித்த காரியத்தை (வியாஜ்ஜியத்தை) எளிதில் வெல்வான். பிதுரார்ஜிதமான பூமிகளை அபிவிருத்தி செய்வான்.

17. பந்துவை ஆத ரிப்பன் பல கலை உணர்வா னுகும்
சிந்தையும் நல்ல தாகும் சிறப்பான குடும்ப மேற்பன்
வந்தவர்க் கன்ன மீவன அடிமையோர் குடி பெருக்கம்
நொந்தபேர்க் குதவி செய்வன் நினைத்தகா ரியமு டிப்பன்.

17. உறவினர்களை ஆதரிப்பான். அநேக கலைகளைக் கற்றறிந்தவன். நல்ல மனப்பான்மை படைத்தவன். மேன்மை வாய்ந்த குடும்பம் உடையவனுவான். தன் வீட்டை நாடி வந்தவர்களுக்கு அமுது அளிப்பான். சேவகர்களுடைய குடும்பத்தையும் அதிகமாகக் காப்பாற்றுவான். கஷ்டப்படுகின்றவர்களுக்கு உதவிசெய்வான். தான் எண்ணிய காரியத்தைச் செய்து முடிக்கும் வல்லமை வாய்ந்தவன்.

18. கரமதில் விஷ்ணு ரேகை கமலரே கையுமே யுண்டு
திருமாலின் பக்தி கொள்வன் செய்நிலம் சேர்ப்பா னுகும்
பெரும்பொருள் பால்பாக்கி யங்கள் பேச்சது கரப்பா னுகும்
அரிவையர் மோக னுவன் அஞ்சிய வார்த்தை கூறுவன்.

18. அவனது கையில் விஷ்ணு ரேகையும் கமலரேகையும் விளங்கிடும். திருமாலிடம் அதிகம் பக்தி கொண்டவன். செழிப்பான நிலங்களையும் சேர்ப்பான். விலை உயர்ந்த பொருள் உடையவன். பால் பாக்கியமும் இவனுக்கு இருக்கும். தான் சொன்ன வார்த்தைப்படியே நடப்பான். பெண்களிடம் மோகம் கொண்டவன். பிறர்மனம் நோவாத படி பயந்தே வார்த்தைகளைப் பேசுவான்.

19. தன்துணை ஆண்பா லொன்று சத்திமார் நால்வ ராகும்
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் முனியே கேளு
இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மினிமே லாக
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

19. இவனுக்கு ஒரு சகோதரன். நான்கு சகோதரிகள். அவர்களுடைய வரலாறுகளைப் பின் பாகத்தில் சொல்லுவோம். இனி மேல் இச்சாதகனின் விவாஹ காலத்தைக் கூறுகின்றேம். விநாயகரைப் பெற்ற தாயே ! கேட்பாயாக.

20. மங்களம் ஈரெட் டாண்டில் மருவிடும் வடகீழ் பாரி
அங்கவன் அம்மான் மாது அணுகிடும் குணத்தைச் சொல்வேன்
எங்கள்போல் அதிதிக் கன்ன மீவளாம் நற்கு ணத்தாள்
பொங்கிய குடும்ப மேற்பள் பொய்யது புகலா ளாகும்.

20. இவனுக்குப் பதினாறுவது வயதில் விவாஹம் நடைபெறும். வட கிழக்குத் திசையிலிருந்து பெண்வருவாள். அவள் மாமன் மகளே. அவளுடைய குணங்களைச் சொல்லுகின்றோம். எங்களைப் போன்று தவசிகளான அதிதிகட்கு அன்னமளிப்பாள். நற்குணம் வாய்ந்தவள். அவளுடைய குடும்பம் மேன்மேலும் விருத்தியாகும். பொய்ப் பேசாதவள்

21. தோகைபோல் சாய லொக்கும் சொல்லது சுருக்க மாகும்
பாகமாய்ப் பேசு வாளாம் பணிந்தோரை ஆத ரிப்பள்
நாகரி கங்கள் உண்டு நாயகன் மனதுக் கேத்தோள்
போகபாக் கியங்க ளேற்பள் புண்ணிய மனத்த ளாகும்.

21. மயில் போல் அழகானவள். சுருக்கமாகப் பேசுவாள். மேலும் போதிய அளவு பொருத்தமாகப் பேசுவாள். தன் கீழ்ப்படிந்தவர்களை (சேவகர்களை) ஆதரிப்பாள். நடை உடை பாவனை இவைகள் மிகவும் நாகரிகமாக இருக்கும். கணவன் மனத்திற்கு உகப்பாக நடப்பாள். இன்பத்தைத் தரும் வீடு, தோட்டம், பசு, ஆபரணம், வஸ்திரம் முதலிய பொருள்களைப் பெறுவாள். பிறர்க்கு நன்மைகளையே எண்ணும் மனமுள்ளவள்.

22. வயதுமே தீர்க்க மெய்தும் மைந்தர்தன் குணத்தை சொல்வேன்
வியமிலா எழுவர் தோன்றும் விளங்காது சிலது என்றேம்
பயமிலா ஆண்பால் ரண்டு பாவையு மவ்வாறு தீர்க்கம்
ஜயமுனி தடுத்துச் சொல்வார் சனிபுகர் அஞ்சில் தங்க ;

22. அவனுடைய வயது தீர்க்கமானது. புத்திரபாவத்தைப் பற்றிச் சொல்லுகின்றேம். இந்தத் தம்பதிகளுக்கு எழு குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் சிலர் நஷ்டமாவார்கள். இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இங்கு ஜயமுனி மறுத்துப் பேசுகின்றூர். சனியும் சுக்கிரனும் புத்திரபாவத்தில் (ஐந்தில்) இருப்பதாலும் ;

23. ஐந்தவன் விரயம் புக்க அவனுக்குச் சுதர்கள் எவ்வாறு
கொஞ்சிடும் விபரம் சொல்வாய் குளிர்மதி நவத்தி லேறத்
தஞ்சமாய்க் குருவும் பார்க்கச் சந்ததி விருத்தி யென்றேம்
நஞ்சாகும் முதலில் என்றேம் நாயகி கேட்டி டாயே.

23. அந்தப் புத்திர பாவத்திற்கு உடைய செவ்வாய் பன்னிரண்டாம் ராசியில் இருப்பதாலும், இச் சாதகனுக்கு எவ்வாறு சந்ததி உண்டு. இவ் விஷயத்தை விவரமாகச் சொல்லுங்கள். அத்திரி கூறுகின்றூர். இலக்கினாதிபதியாகிய சந்திரன் பாக்கியஸ்தானத்தில் இருப்பதாலும், அவனைக்

குரு பார்ப்பதாலும் நிச்சயமாக இவனுக்குப் புத்திர பாக்கியமுண்டு. நீங்கள் சொன்ன தோஷத்தின்படி சில குழந்தைகளே சேதமாகும். ஆகவே சந்ததியுண்டு.

24. இன்னவன் முன்ஜன் மத்தை இயம்புவோம் தாயே கேளு
தென்திசை பெண்ணை யோரம் ஜனித்தனன் வைசியச் சேயாய்
அன்னையும் தந்தை மிக்க அவனியில் செட்டுச் செய்து
பொன்னெடு பணதி யுண்டாய்ப் பூமியில் நல்லோ ஞகி.

24. இச் சாதகனின் முன் ஜன்மத்தைப்பற்றி கூறுகின்றேம். தாயே ! கேளுங்கள். இவன் முற் பிறவியில் தென் திசையிலுள்ள பெண்ணையாற்றுக்கருகில் வைசிய குலத்தில் உதித்திருந்தான். தாய் தந்தையர்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். வியாபாரம் செய்து, செல்வத்தையும் பூஷணங்களையும் அடைந்து, எல்லோருக்கும் நல்லவனுக இருந்தான்.

25. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் பக்கல் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
திருமகன் யோகச் சேதி செப்புவோ மினிமே லாகத்
தரையினுல் ஜீவிப் பானும் தானியச் செட்டு செய்வன்.

25. தருமத்தில் பற்று உள்ளவனுகவும் இருந்தான். அந்திய காலத்தில் யமனுலகம் சென்றுன். அவனை பிரம்ம தேவன் இங்குக் கடக லக்கினத்தில் பிறப்பித்திருக்கின்றூர். இனிமேல் இச்சாதகனுடைய யோகங்களைப் பற்றிக் கூறுகின்றேம். பூமியை உழுது பயிரிட்டு ஜீவிப்பான். தானிய விபாரமும் செய்வான்.

26. பலசகா யங்கள் செய்வன் பாரது விருத்தி செய்வன்
நிலமது மூன்று ஊரில் நேர்ந்திடும் பால னுக்குக்
கலகத்தைக் கூறு ளுகும் கனத்த தோர் குடும்ப மேற்பன
திலகம்போல் பந்துக் கட்கு சல்லியம கொள்ளா ளுகும்.

26. பலருக்குப் பல உதிவிகளைச் செய்வான். கிடைத்த நிலங்களை அபிவிருத்தி செய்வான். இவனுக்கு மூன்று ஊர்களில் நிலங்கள் சரும். கலகத்தை உண்டு பண்ணுதவன். பெருமை வாய்ந்த குடும்பம் உள்ளவனுவான். திலகம் நெற்றிக்கு அலங்காரமாக இருப்பதுபோல் இவன், குலத்தினருக்கே அலங்காரமாக விளங்குவான். கடன் இல்லாதவனுக வாழ்வான்.

27. இல்லமும் ஈரா ருண்டில் எய்திடு மிவனுக் கென்றேம்
இல்லமும் ஆருண் டுக்குள் இயம்புவோம் பாகங் நான்காய்
வல்லியே நவம தாண்டில் வேருகும் தரணி தானும்
தல்லியே சல்லியங் கொள்ளான் சம்பத்து உடைய ளுகும்.

27. பன்னிரண்டாவது ஆண்டில் இவனுக்கு வீடு கிடைக்கும். அதன் பிறகு ஆறு ஆண்டிற்குள் அந்த வீடு நான்காகப் பிரிக்கப்படும். கொடி

போன்றவளே ! ஒன்பதாவது ஆண்டில் பூமி பிரிவினை நடக்கும். தாயே ! மறுபடியும் சொல்லுகிறோம். இவனுக்குக் கடன் ஏற்படாது. செல்வம் ஏற்படும்.

28. இனத்துக்கு மேலாய் வாழ்வன் இடரென்றோர்க் குதவி செய்வன்
தனம்பூமி யில்லம் யாவுஞ் சாற்றுமை யாயிரம் பொன்
கனமான புகழு மேற்பன் கனத்ததோர் தலங்கள் செல்வன்
வினைகளை நீக்குகின்ற வித்தகி கேட்டி டாயே.

28. தன் இனத்தாரைவிடச் சிறப்பாக வாழ்வான். இடர்ப்பட்டவர்களுக்கு உதவி செய்வான். இவனுக்கேற்படும் தனம், பூமி, வீடு முதலியவைகளின் உத்தேச மதிப்பு ஐந்தாயிரம் (ரூபாய் ஐம்பதாயிரம்) பொற்காசுகளாகும். பரந்த புகழை அடைவான். பெரிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லுவான். பாவத்தைப் போக்கும் தாயே ! மேலும் கேட்பாயாக.

29. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புள மனத்த ளாகும்
தன்மனம் கபட மில்லாள் சாந்தவள் அடக்க முள்ளாள்
பின்னமி ல்லாத தேகி பித்தரோ கத்த ளாகும்
சொன்னசொல் சுகமே யாகும் சோம்பலும் கொஞ்ச முண்டு.

29 ஜாதகனது தாயின் குணத்தைக் கூறுகின்றோம். அன்புள்ளவள். கபடமில்லாதவள். சாந்தகுணம் படைத்தவள். அடக்கமுடையவள். சரீரத்தில் எவ்வித ஊனமும் இராது. பித்தரோகத்தினால் கஷ்டப்படுவாள். இவள் சொல்லும் வார்த்தைகள் ஜனங்களுக்கு நன்மையையே தரும். சிறிது சோம்பலுள்ளவள்.

30. மாதிரு இரண்டு மாகும் மருவிய முன்தாய்க் கின்னோன்
தீதிலா உதிப்பா ளாகும் செல்விக்குத் துணைஆண் ஒன்று
காதலி ஐவ ராகும் கருதின துணை ஆண் தானும்
மேதினில் சுகமுண் டாகி விரயமே யாவா னென்றோம்.

30. இவளுக்குத் தாய்மார்கள் இருவர். அவர்களில் மூத்தவளுக்குப் பிறந்தவள் இவள். இவளுக்குச் சகோதரன் ஒருவன். சகோதரிகள் ஐவர். நாம் இங்குச் சொன்ன சகோதரன் இவ்வுலகில் சிறிது சுகங்களை அனுபவித்து இறப்பான்.

31. துணைஆண்பால் சேதி சொல்வேன் சொல்லது சுகமே யாகும்
பிணையிலா வார்த்தை சொல்வன் பெற்றதாய்ச் சுகமில் லாதான்
கனமுள குடும்பம் பின்னால் கார்நிறம் உணச்சல் தேகி
தணிவான குணத்தா னாகும் தந்தையில் வாழா னாகும்.

31. அவனுடைய சகோதரனின் செய்திகளைக் கூறுவேன். அவனுடைய சொல் நல்லதாகவே இருக்கும். கலகமூட்டாத வார்த்தைகளைச் சொல்லுவான். பெற்ற தாயின் சௌக்கியத்தைக் காணாதவன். பிற்காலத்தில் பெரிய குடும்பியாவான். கருத்த மேனியான். மெலிந்த சரீரமுள்ளவன். சாந்தகுண முள்ளவன். தந்தையின் வீட்டில் வாசம் செய்யாதவன்.

32. சிலதுநாள் வனவா சங்கள் செய்துபின் உள்ளூர் செல்வன்
பல்மான குடும்பம் பின்னால் பெறுவனும் பெருமை யோனும்
திலதம்போல் பந்துக் கட்டு செய்நன்றி மறவா னாகும்
அலைகடல் துயன்றோன் பக்தி ஆபத்தைச் சிலர்க்குக் காப்பன்.

32. கொஞ்ச காலம் வனவாசமும் செய்வான். பிறகு தனது சொந்த ஊருக்குத் திரும்பி வருவான். பிற்காலத்தில் பெருமை வாய்ந்த குடும்பம் உள்ளவனுவான். கௌரவங்களையும் அடைவான். பந்துக்களுக்குள் திலகமாக விளங்குவான். பெற்ற உதவியை மறவாதவன். பாற்கடலில் பள்ளி கொண்டிருக்கும் நாராயணனிடம் பக்தி பூண்டவன். சிலரை ஆபத்திலிருந்து காப்பாற்றுவான்.

33. துணையால் மனைவி யாலும் சுகமிகப் பெருகு மென்றோம்
நினைப்பதை முடிப்பா னாகும் நிமலனும் வயது தீர்க்கம்
பிணையிலாப் பின்பா கத்தில் பேசுவோம் விபர மாக
அணையவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

33. சகோதரியாலும் மனைவியாலும் அவனுக்கு அதிக சௌக்கியங்கள் உண்டாகும். நினைத்த காரியத்தை முடிக்கும் வல்லமைவாய்ந்தவன். அவனது வயதும் தீர்க்கமானது தான். பின் பாகத்தில் இதைப்பற்றிப் பேசப் போகின்றோம். பலவிதத் தவங்களைச் செய்யும் தேவியே ! மேலும் கேளுங்கள்.

குறிப்பு.—பர்வதராஜனுக்குப் பெண்ணாக அவதரித்ததேவி சிவபிரானைக் கணவனாக அடைவதற்குக் கடும் தவமிருந்தாள் என்ற கதை, ஸ்காந்த புராணத்தில் மிகவும் பிரசித்தம்.

34. மாதுரு பூர்வம் சொல்வேன் மலை நாட்டில்கர்ண சேயாய்
மேதினி லுதித்துப் புத்திரர் விளங்கியே சுகமுள் ளோளாய்
பாதக மனமில் லாமல் பரந்தனள் காலன் நாடு
வேதனால் வரியப் பட்டு விளங்கினுள் இந்த மாது

34. ஜாதகனின் தாயினுடைய பூர்வ ஜன்மத்தைப் பற்றிச் சொல்லுகின்றோம். மலை நாட்டில் கர்ண வமிசத்தில் (கணக்குப் பிள்ளைசாதியில்) பிறந்து கணவனுடனும் குழந்தைகளுடனும் சுகமாக வசித்து வந்தாள். மனத்தினாலும் பாவம் செய்யாதவளாக இருந்து அந்தியத்தில் இறந்தாள். அவளைப் பிரம்மதேவன் இங்குப் பிறப்பித்திருக்கின்றான். அவளே இக் கடக லக்கின மகனுக்குத் தாய்.

35. பின்ஜன்மம் விரிஞ்சி தன்னில் பிறப்பளாம் வைசியச் சேயாய்
மன்னனுக் கேழஞ் சாண்டில் மார்கழி மாதம் தன்னில்
அன்னைக்குக் கண்ட மெய்தும் அறைந்தது தப்பா தாகும்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

35. இதற்கடுத்து வரும் ஜன்மத்தில் விரிஞ்சி நாட்டில் வைசிய குலத்தில் பிறப்பாள். ஜாதகனுடைய முப்பத்தைந்தாவது வயதில் மார்கழி

மாதத்தில் இவளுக்குக் கண்டம் ஏற்படும் (இறப்பாள்). நாங்கள் சொன்ன வார்த்தை தவருது. விநாயகக் கடவுளைப் பெற்ற தேவியே ! மேலும் கேட்பீராக.

36. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் விரிஞ்சி தன்னில்
வன்னிய குலமு தித்து மனைவியு மைந்த ருண்டாய்
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு மேதினில் நல்லோ னுகித்
தன்மையாய்க் காலன் நாடு சென்றுமே பிரமன் லக்கம்.

36. தந்தையின் பூர்வ சென்மத்தைக் கூறுகின்றேம். இவன் முன் பிறவியில் விரிஞ்சி நாட்டில் வன்னிய குலத்தில் உதித்திருந்தான். மண மாகிமனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். முன்னேர்களுக்குத் தொண்டு புரிந்தான். எல்லோருக்கும் நல்லவனுக வாழ்ந்தான். கடைசியாக இறந்த இவன் இங்குப்பிறந்து ஜாதகனுக்குத் தந்தையாக நேர்ந்திருக்கிறுன்.

37. வந்தவ னென்று சொல்வேன் வறுமைக ளில்லா வாழ்வன்
பிந்திய ஜன்மம் சொல்வேன் பெருமலை வேங்க டத்தில்
விந்தையாய் ரெட்டி வம்சம் விளங்குவா னிந்த பாலன்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழிகுன் றுது.

37. இவன் வறுமை இல்லாதவன். இவனுடைய பின்வரும் ஜன்மத்தையும் சொல்லுகின்றேம். சிறந்த மலையான திருப்பதியில் ரெட்டி வமிசத்தில் பிறந்து சுகமாக வாழ்வான். சுப்பிரமணியனை உலகத்தோர்க்கு உதவிய தாயே ! எங்கள் மொழி தவருது.

38. முப்பது ஆறு ஆண்டில் வைகாசி மாதம் தன்னில்
செப்புவோம் தந்தை கண்டம் தந்தையின் தந்தைக் கேதான்
ஒப்புடன் யீரா றுண்டில் உரைக்கிறேம் மார கங்கள்
அப்பணி சடையோன் தேவி யனுகின மொழிகுன் றுது.

38. ஜாதகனுடைய முப்பத்தாறுவது வயதில் வைகாசி மாதத்தில் இவன் தந்தைக்குக் கண்டம் ஏற்படும். தந்தையின் தந்தைக்கு (ஜாதகனின் பாட்டனுருக்கு) ஜாதனுடைய பன்னிரண்டாவது வயதில் மரணமேற்படும். கங்கையை அணிந்த சடையையுடைய சிவபிரானின் தேவியே ! எங்கள் மொழி பொய்யாகாது.

39. ஈரெட்டு ஆண்டு தன்னில் இயம்புவோம் பிதாவின் அன்னை
மாறிடா திந்த வார்த்தை மாரனுக் கறுபா னேழில்
தீரமாய்த் துலாமா தத்தில் தேய்பிறைத் தசமி தன்னில்
சேருவான் கால னுடு செப்பின மொழிகுன் றுது.

39. பிதாவின் அன்னைக்கு சாதகனடைய பதினறுவது வயது நடக்கும் போது மரணம் ஏற்படும். ஜாதகனுக்கு அறுபத்தேழாவது வயது நடக்கும் போது ஐப்பசி மாதத்தில் கிருஷ்ண பக்ஷதசமிதிதியில் மரணம் நேரும். நாங்கள் சொன்ன வார்த்தை தவருமல் நிச்சயமாக நடைபெறும்.

40. மறுஜன்மம் கோங்கு நாட்டில் வருவனும் க்ஷத்திரிய சேயாய்ப்
பெருமையாய்க் குடும்பி யாகிப் புதல்வனும் வாழ்வா னுகும்
குறுமுனி தடுத்துச் சொல்வார் குழவிக்கு எட்டாண் டுக்குள்
மருவிடும் கண்ட மென்றேம் மாமுனி தடுத்துச் சொல்வார்.

40. சாதகன் மறுபிறவியில் கோங்கு நாட்டில் க்ஷத்திரிய குமாரனுகப் பிறந்து பெரிய குடும்பியாகிச் சிறப்புடன் வாழ்வான். இதைக் கேட்ட அகஸ்திய முனிவர் தடுத்துச் சொன்னுர். ஜாதகன் பிறந்து எட்டு ஆண்டுக்குள் அவனுக்குக் கண்டம் ஏற்பட்டு இறப்பான் என நாம் சொல்வோம். அத்திரி முனிவர் அதற்குப் பதில் உரைத்தார்.

41. பொன்னவன் மூன்றி லேறப் பிறையுமே அதற்கு ஏழில்
நன்மையா யிருப்ப தாலே நாயகன் வயது தீர்க்கம்
என்னநோய் வந்த போதும் இரவிமுன் பனிபோல் நீங்கும்
அன்னையே யாங்கள் சொல்லு மருள்மொழி குன்று தென்றேம்.

41. குரு மூன்றும் இடத்தில் இருந்து கொண்டு, தான் இருக்குமிடத்திற்கு ஏழாவது ராசியில் இருக்கும் லக்கினுதிபதியான சந்திரனைப் பார்ப்பதால் ஜாதகனுக்குத் தீர்க்காயுர்யோக முண்டு. எவ்வளவு பெரிய கண்டங்கள் வந்தாலும், சூரியன் முன் பனிபோல விலகும். அன்னையே ! நாங்கள் சொன்ன மொழி சத்தியம்.

42. காவலன் செனிக்கும் காலே கடை நாளில் மூன்றும் பாதம்
மேவிய புதனி ருப்பு விளம்புவோம் ஆண்டு ஐந்தும்
தாவிய பதினேரு திங்கள் தங்கிடு மென்று சொல்வோம்
ஆவலாய்த் தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

42. ஜாதகன் ரேவதி நக்ஷத்திரம் மூன்றும் பாதத்தில் ஜனித்திருக்கின்றுன். புததசையில் இருப்பு வருஷங்கள் ஐந்து, மாதங்கள் பதினென்று. தேவியே ! மேலும் நீங்கள் எங்களைக் கேட்டருளவேண்டும்.

ஜாதகம் 27

1. பிறைகுசன் தெருக்கா லேறப் புதன்பணி பரிதிசேயும்
கரியவன் கேதுசாடி கனகனு நந்தி புக்க
வருவது ஜன்மம் நண்டு அசுரர்மந் திரியும் தங்க
உரைகுவீர் பலனே யென்று உத்தமி கேட்க லுற்றாள்.

		குரு	
சனி கேது	இராசி சக்கரம்		லக்கினம் சுக்கிரன்
			புதன் ராகு சூரியன்
	சந்திரன் செவ்வாய்		

விசுவாவசு வருஷம் ஆவணி மாதம் 20 ஆந் தேதி திங்கட் கிழமை இரவு 25 நாழிகைக்கு மேல் 27 நாழிகைக்குள் ஜனனம். ஆங்கிலத் தேதி 4—8—1905. நவக்கிரஹங்களின் பாதசாரம்—பூரம் 2-இல் சூரியன். அனுஷம் 1-இல் சந்திரன். அனுஷம் 4-இல் செவ்வாய். மகம் 3-இல் புதன். ரோஹிணி 2-இல் குரு. புஷ்யம் 3-இல் சுக்கிரன். அவிட்டம் 4-இல் சனி. மகம் 3-இல் ராகு. சதயம் 1-இல் கேது. நக்ஷத்திரம் அனுஷம். சனி தசை இருப்பு வருஷங்கள் பதினெட்டு, மாதங்கள் பத்து.

1. சந்திரனும் செவ்வாயும் விருச்சிகம், புதன் ராகு சூரியன் இவர்கள் சிங்கம், சனி கேது கும்பம், குரு விருஷபம், இலக்கினம் கடகம், சுக்கிரன் கடகம், இவ்வாறு அமைந்த கிரஹநிலையின் பலன்களைச் சொல்வீர்களாக, எனப் பார்வதி கேட்கலுற்றாள்.

2. அத்திரி புகலு கின்றார் அது ஜன்மம் ஆண்பா லாகும்
வித்தக னுதித்த இல்லம் மேல்வாடை வடதென் வீதி
உத்தரம் பள்ளி வாசம் ஓங்காளி கோஷ்ட முண்டு
சித்தசன் தந்தை கீழ்ப்பால் தென்திசை கணேசன் கோஷ்டம்.

2. அத்திரி முனிவர் பலன் கூறுகின்றார். இவ்வாறு கிரஹநிலையில் ஆண் குழந்தை பிறந்திருக்கின்றான். வீதி வடக்குத் தெற்காக அமைந்திருக்கும். மேல்வரிசையில் வீடு இருப்பதால் கிழக்கு நோக்கி இருக்கும். வட திசையில் இடைச்சேரியும் காளி கோயிலும் உண்டு. கீழ்த்திசையில் மன்மதன் தந்தையான விஷ்ணுவின் ஆலயம் இருக்கும். தென் திசையில் விநாயகரது கோயில் விளங்கிடும்.

3. பலதேவர் அவ்வூர் வாசம் பருத்ததோர் செட்டு ஓங்கும்
குலவுவான் வடுகர் வர்க்கம் குழவியும் சேஷ்ட னாகும்
தலைவன்தன் குடும்பச் சேதி சாற்றுவோ மினிமே லாக
அலைகடல் துயின்றோன் தங்காய் அம்பிகை யாளே கேளாய்.

3. இவைகளைத் தவிர இன்னும் பலதேவாலயங்களும் அவ்வூரில் விளங்கும். அஃது ஒரு பெரிய வியாபாரம் ஸ்தலமாகவும் இருக்கும். இவன் நாயக்கர் வமிசத்தில் பிறந்தவன். குடும்பத்திற்கு மூத்தப் பிள்ளை. க்ஷீராப்தியில் சயனித் திருக்கும் மஹாவிஷ்ணுவின் தங்கையே! இனிமேல் அவனது குடும்ப வரலாறுகளைக் கூறுகிறோம். கேட்டருள்வீராக.

4. தந்தையின் துணைஆண் ஒன்று சத்தியு மவ்வாறு தீர்க்கம்
நொந்திடும் மற்ற வெல்லாம் நுகர்ந்தஆண் முன்னோ னாகும்
அந்தவன் சேதி சொல்வேன் அழகுளான் மிருசி வப்பன்
தன் மனம் கபடு மில்லான் சரசமாய் வார்த்தை யுண்டு.

4. ஜாதகனின் தந்தைக்குச் சகோதரன் ஒருவன் சகோதரியும் ஒருத்தி. இவர்கள் இருவரும் நீடித்து வாழ்வார்கள். மற்ற உடன் பிறந்தவர்கள் நசிப்பார்கள். இங்குச் சொல்லப்பட்ட ஆண் குடும்பத்திற்கு மூத்தவன் தான் [ஜாதகனுக்குப் பெரியப்பன் என்பது கருத்து.] அவனது செய்திகளைச் சொல்லுகின்றோம். அழகுள்ளவன். மாநிறமுள்ளவன். மனத்தில் கள்ளமில்லாதவன். நயமாக வார்த்தைகளைப் பேசுவான்.

5. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உறுதியில் லாத நெஞ்சம்
துண்டமாய்க் கூறு வாகும் தொடுவழக் கதனில் செல்வன்
வண்டணி மார்கன் மோகன் மாமிக ளிரண்டே யாகும்
பண்டுநாள் பூமி கொஞ்சம் பாலகன் விருத்தி செய்வன்.

5. சுசி ருசியான ஆகாரங்களையே புசிப்பான். உறுதியில்லாத மனமுள்ளவன். கண்டித்துப் பேச இஷ்டமில்லாதவன். தொடர்ந்து நீண்ட காலம் நடக்கும் வழக்குகளில் ஈடுபடுவான். பெண்களிடம் மையல் கொண்டவன். மாமிமார்கள் இருவர். வமிச பரம்பரையாக வரும்—சிறிதே மிகுந்திருக்கும்—நிலத்தை அபிவிருத்தி செய்வான்.

6. பாரியு மிரண்டே யாகும் பாலர்க ளாண்பால் ஒன்று
கூறுவோம் பெண்பா லொன்று குறித்தனம் தீர்க்க மாக
வீரியன் வேருய்ச் செல்வன் வெஞ்சின மில்லா தாகிப்
பாரினில் சலவியா பாரம் பண்ணுவா னென்று சொல்வோம்.

6. இவனுக்கு (பெரிய தந்தைக்கு) மனைவிமார்களும் இருவர். ஒரு பிள்ளை. ஒரு பெண். இவர்கள் இருவரும் தீர்க்கமாக வாழ்வார்கள். இவன் வேறு குடும்பியாக ஆவான். ஆனால் குடும்பப் பிரிவினைக்குக் கோபமோ அல்லது சண்டையோ காரணமாகாது. ஊர் ஊராகச் சென்று வியாபாரங்களை இவன் செய்வான் என்றும் சொல்லுகின்றோம்.

7. முகமதில் வடிவு முள்ளான் முண்டக ரேகை யுண்டு
அகமது பின்னுல் செய்வன் அபிமானம் ஒன்று சேர்ப்பன்
ஜகமதில் நல்லோ ஞவன் திரிச்சலால் லாப மெய்தும்
பகையென்று மனத்தில் வையான் பகருவோம் வயது தீர்க்கம்.

7. முகத்தில் பிறரை வசப்படுத்தும் பொலிவு உள்ளவன். கையில் கமல ரேகை விளங்கும். பிற்காலத்தில் ஒரு புதிய வீடு கட்டுவான். அபிமான மனைவியாக ஒருத்தியைச் சேர்த்துக்கொள்வான். ஊரில் எல்லோருக்கும் நல்லவனுவான். [1] பிரயாணத்தால் லாபத்தை அடைவான். ஒருவரிடமும் பகைமை கொள்ளமாட்டான். அவனுக்குத் தீர்க்காயுர்யோகமுண்டு.

[1] குறிப்பு.—பல ஊர்களுக்குச் சென்று வியாபாரிகளிடம், பிரசாரம் செய்து வியாபரத்தை விஸ்தாரப்படுத்தும் முறை. [Touring Agents என்று கருதலாம்.]

8. தந்தையின் சேதி சொல்வேன் சிவந்தமெய் உணச்சல் தேகி
தன்மனம் கபடு முண்டு சந்தேக மனத்த ஞகும்
தந்தமும் தரள மொக்கும் சல........வணிபம் செய்வன்
தன்பந்துக் கிணங்கச் சொல்லான் தங்கிடும் நாபிச் சூடு.

8. இதுவரையில் ஜாதகனின் பெரிய தந்தையின் வரலாறுகளைச் சொன்னேம். இனி ஜாதகனின் தந்தையின் செய்திகளைக் கூறுகின்றேம். அவன் சிவந்த மேனியான். மெலிந்த சரீரம் வாய்ந்தவன். சிறிது கபடமுள்ளவன். யாரையும் சந்தேகிக்கும் இயல்புள்ளவன். அவனுடைய பற்கள் முத்துப்போல அழகாக இருக்கும். பிரயாணம் செய்து செய்ய வேண்டிய வியாபாரத்தைச் செய்வன். தன் பந்துக்களுக்குச் சம்மதமான விஷயத்தைப் பேசமாட்டான். இவனது நாபியில் எப்போதும் சூடு தங்கி இருக்கும்.

9. சொல்லினில் குளறு கொஞ்சம் சுருக்கமாய்ப் பேச வல்லன்
நல்லவன் சிலர்க ளுக்கு நயம்படக் கூறு வானும்
அல்லலும் சுகமு முண்டு அல்பபுத் திகளும் கொஞ்சம்
வல்லிசொல் கடவா ஞகும் மால்பத்தி யுடையா ஞமே.

9. சொற்களைச் சரியாக உச்சரிக்க இயலாதவஞக இருப்பான் (குளறிப் பேசுவான்.) அவனது பேச்சுக்கள் சுருக்கமாகவே இருக்கும். இவன் வெகு சிலருக்கே நல்லவஞக இருப்பான். நயமாகப் பேசுவான். இவனது வாழ்க்கையில் துன்பங்களும் இன்பங்களும் கலந்தே இருக்கும். [துன்பம் அதிகமாக இருக்கும் என்பதுகருத்து.] விசாலமான மனப்பான்மை இல்லாதவன். மனைவிக்கு அடங்கி நடப்பான். திருமாலிடம் மிக்க பக்தி கொண்டவன்.

10. கடன் கொள்வன் நிவிர்த்தி செய்வன் கடுநடை முன்கோ பத்தன்
உடன்படான் பிழைக ளுக்கு உறுதியா மனத்த ஞகும்
த............பின்னுல் செய்வன் தந்திர மொழியு முண்டு
இடபலக் கினமு மாகும் விசாகநாள் தோன்று வானும்.

10. இவன் கடன் வாங்க நேரிடும். ஆயினும் வாங்கப்பட்ட கடனை வெகு சீக்கிரத்தில் நிவிர்த்தியும் செய்வான். வேகமான நடை உள்ளவன். முன் கோபமும் உண்டு. தன் தவறுகளை ஒப்புக்கொள்ளமாட்டான். உறுதியான மனம் படைத்தவன். ....தந்திரமான வார்த்தைகளைச் சொல்லிக் காரியத்தை நிறைவேற்ற முயலுவான். அவன் பிறந்த லக்கினம் விருஷபம். நக்ஷத்திரம் விசாகம்.

11. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அழகுளான் சிவநத மேனி
பன்னியே பேசு வானும் பலகலை யுணர்வா ஞகும்
தன்னினத் தவரைக் காப்பன் சகலர்க்கு நல்லோ ஞவன்.

11. இப்படிப்பட்ட குணமுள்ளவனுக்கு இக் கடக லக்னே மகன் புத்திரஞகப் பிறந்திருக்கிறுன். இனி அவனுடைய குணங்களைச் சொல்லுகின்றேம். ஜாதகன் மிகவும் அழகுள்ளவன். சிவந்த மேனியான். பன்னிப் பன்னிப் பேசும் இயல்புள்ளவன். பல கலைகளையும் கற்றறிந்தவன். தன் சாதியாரைக் காப்பான். எல்லோருக்கும் நல்லவஞகவே இருப்பான்.

12. அரசர்பூ சிதமு மாவன் அன்னையு மிரண்டு மாகும்
மறுஅன்னை தனக்குப் புத்திரர் வருகுவான் அவச ரத்தன்
பொருளது பெருக்கம் செய்வன் போசன வறுமை காணுன்
தரையதை விருத்தி செய்வன் தாட்சிண்ணியன் கனத்த புத்தி.

12. அரசர்களாலும் நன்கு கௌரவிக்கப்படுவான். இவனுக்கும் தாய்மார்கள் இருவர். இளைய தாய்க்குப் பிறந்தவன் இச்சாதகன். வேகமாக நடப்பவன். [சுறு சுறுப்பாக வேலை செய்வான் என்றும் கருதலாம்.] பொருள்களை அதிகப்படுத்துவான். நிரம்ப ஆகாரப் பொருள்களைப் பெற்றிருப்பான். பூமிகளை அபிவிருத்தி செய்வான். தாக்ஷிண்ய குணம் உடையவன். உதாரமனப்பான்மை வாய்ந்தவன்.

13. பலசெட்டுச் செய்வா ஞகும் பாக்கிய முடைய ஞகும்
தலமது சித்திரம் செய்வன் தையலர் மோக ஞவன்
புலவன்போல் மொழிவா ஞகும் பொய்மெய்யாய் புகல்வா ஞகும்
அலைகடல் துயின்றேன் பத்தி ஆசார முடைய ஞமே.

13. பலவித வியாபாரங்களைச் செய்வான். விசேஷ பாக்கியம் உள்ளவஞவான். அழகியதொரு வீடு நிர்மாணம் செய்வான். பெண்களிடம் மோகம் கொண்டவன். பெரிய பண்டிதர்போலப் பேச விரும்புவான். பொய்யை மெய்போலும் பேச வல்லவன். பாற்கடலில் பள்ளிக்கொண்டவஞன மகாவிஷ்ணுவினிடம் பக்தி பூண்டவன். நல்ல ஆசாரம் உடையவன்.

14. அவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோ மாண்பா லொன்று
அவனியில் கன்னி ரண்டு அறைகிறேம் தீர்க்க மாகத்
தவசியே முதல்தா யார்க்குச் சந்ததி யுண்டோ சொல்வாய்
நவனியில் காணு தாகும் நாயகிகேட்டி டாயே.

14. இவனுடைய சகோதர பாவத்தைப் பேசுவோம். சகோதரன் ஒருவன். சகோதரிகள் இருவர். இம் மூவரும் நீண்ட ஆயுளுடன் வாழ் வார்கள். முனிவரே ! மூத்த அன்னேக்குச் சந்ததி பிறந்திருக்குமா ? சொல்லுங்கள், எனப் பார்வதி கேட்க, அத்திரி பதில் கூறுகின்ருர். அவளுக்குச் சந்ததி இல்லே. தேவியே ! மேலும் சொல்லுகிருேம். கேளுங் கள்.

15. மன்னவன் மணத்தின் காலம் வரைகிறே மினிமே லாகக்
கன்னிகை தென்பால் நேரும் காளேக்குப் பதினெட் டாண்டில்
அன்னேயின் வர்க்க மாகும் அவள்குணம் கூறக் கேண்மோ
உன்னத வார்த்தை சொல்வள் உறுதியில் லாத நெஞ்சம்.

15. இனி ஜாதகனின் விவாஹகாலத்தைக் கூறுகின்ருேம். இவ னுக்குப் பதினெட்டாவது ஆண்டில் மணம் நடைபெறும். மணப்பெண் தென் திசையில் தாய் வருக்கத்தில் தோன்றி இருப்பாள். அவளுடைய குணத்தைக் கேளுங்கள். கம்பீரமான வார்த்தைகளேப் பேசுவாள். மனத் தில் உறுதியில்லாதவள்.

16. அறமதி லிச்சை யுண்டு ஆவுகள் பலித மாகும்
வருவோரை ஆத ரிப்பள் மயில்சாய லொப்ப தாகும்
திருகிலா நற்கு ணத்தாள் சீலியாம் பணிகள் சேர்ப்பள்
நரைமல ரிஷ்டம் கொள்வள் நாயகி தீர்க்க ஜீவி.

16. தருமம் செய்வதில் மிகவும் பற்றுள்ளவள். இவளிடம் பசுக்கள் நன்ருக விருத்தியாகும். [பால் பாக்கியம் உள்ளவள் எனவும் கருதலாம்.] தன் வீடு நாடி வருபவர்களே ஆதரிப்பாள். நல்ல குணமும் சீலமும் உடையவள். அநேக ஆபரணங்களே அடைவாள். நறுமலர்களில் மிகவும் விருப்பம் உள்ளவள். அவள் தீர்க்காயுளுடன் வாழ்வாள்.

17. சுதர்களு மாண்பா லொன்று தோகையு மூவர் தீர்க்கம்
பதாகு மிரண்டு என்ருேம் பாலகன் பூர்வம் கேளாய்
சதிதரும் விரிஞ்சி தன்னில் கலந்தனன் ஙகை சேயாய்
அதிகமாய்ப் பூமி யுண்டாய் யாவர்க்கும் நல்லோ னுவன்.

17. இந்தப் பாலனுக்கு ஒரு பிள்ளேயும் மூன்று பெண்களும் மாத்திரமே பிறப்பார்கள். அம்மூவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இரண்டா மிடத்தில் ராஹு என்று முன்னமேயே சொன்னேம். [ஆகையால் அதிக பிள்ளே சந்ததி இல்லே என்பது கருத்து.] ஜாதகனின் பூர்வஜன்மத்தைக் கூறுகின்ருேம். விரிஞ்சி நாட்டில் முன் பிறவியில் இவன் வேளாள குலத் தில் உதித்திருந்தான். ஏராளமாகப் பூமிகளேச் சம்பாதித்தான். எல்லோ ருக்கும் நல்லவனுக வாழ்ந்தான்.

18. வினையது இல்லா தாகி மேவினன் கால னுடு
கனமுள பிரமன் லக்கம் கலந்தன னிந்தப் பாலன்
அனேவர்க்கு நல்லோ னுவன் ஆசாரன் அநேகர்க் கன்பன்
நினேப்பதை முடிக்க வல்லன் நிருபர்க ளிஷ்டம் கொள்வன்.

18. ஒரு வித பாவமும் செய்யாதவனுக இருந்தான். அந்திய காலத்தில் இறந்த இவனே, பிரம்மதேவன் கடகலக்கினத்தில் பிறப்பித்திருக்கின்ருன். இவன் எல்லோருக்கும் நல்லவனுக நடந்து கொள்வன். சிறந்தப் பழக்க வழக்க முள்ளவன். அநேகருக்கு இவன் அன்பனுக இருப்பான். தான் எண்ணிய காரியத்தை முடிக்கும் ஆற்றல் படைத்தவன். அரசர்களுக்கும் இஷ்டனுவான்.

19. பந்துவை யாத ரிப்பன் பாருகள் அதிகம் சேர்ப்பன்
செந்திரு விலாச முண்டு சிறப்பான குடும்ப மேற்பன்
வந்தவர்க் கன்ன மீவன் அடிமைக ளுடைய னுகும்
எந்திடம் பெருமை யேற்பன் ஈச்வரி கேட்டி டாயே.

19. உறவினர்களே ஆதரிப்பான். அதிக பூமிகளேச் சேர்ப்பான். லக்ஷ்மீ வாசம் பொருந்தியவன். இவனது குடும்பம் பெருமை பொருந்தியதாகும். தன் வீட்டிற்கு வந்தவர்களுக்கு அன்னமளிப்பான். பல சேவகர்களே அடைந்து அவர்களால் சௌக்கியத்தைப் பெறுவான். எங்குச் சென்ருலும் இவனுக்குச் சிறப்பு ஏற்படும். சங்கரியே ! மேலும் கேளுங்கள்.

20. பாலகன் தனக்கு யோகம் பகர்ந்தகா ரணங்கள் சொல்வாய்
மால்ரவி ரண்டி லேற மங்கலன் மதியு மைந்தில்
சீலமாம் குருவு லாபம் சுக்கிரன் ஜன்மம் தங்கச்
சாலவே நளயோ கங்கள் சாமரை யோக மொன்று.

20. இந்த ஜாதகனுக்கு இவ்வளவு யோகபலன் சொல்லுவதற்குக் கார ணத்தை விளக்குவீர்களாக, எனப் பார்வதி கேட்க, முனிவர் பதில் உரைக் கின்ருர். புதனும் சூரியனும் குடும்பத்தில் இருக்கிருர்கள். இலக்கினுதி பதியான சந்திரன், கடகலக்கினத்திற்கு ராஜயோககாரகனுகிய செவ்வாயு டன் பஞ்சமதிரிகோணத்தில் இருக்கின்ருன். பாக்கியாதிபதியான குரு லாபஸ்தானத்தில் இருக்கின்ருர். எல்லாவற்றிற்கும் மேலாக சுக்கிரன் இலக் கினத்தில் தங்கி மேன்மைப் படுத்துகின்ருர். ஆகவே இவனுக்கு நள யோகம் ஒன்றும், சாமரயோகம் ஒன்றும் ஆக இரு யோகங்கள் உண்டு.

21. சொல்லிய இரண்டு யோகம் சுதனுக்கு நடக்கு மென்ருேம்
வெல்லுவான் எதிரி தம்மை வீண்வழக்கோரம் சொல்வன்
இல்லறம் ஏழாண் டின்மேல் எய்திடும் தொழில்கள் மேன்மை
வல்லவன் தேடும் செம்பொன் ஆருயி ரமன்ன் ருேதே.

21. இவ் விரு யோகங்களும் இவனுக்கு மிகவும் பூர்ணமான பலன்க ளேத் தரும். ஆகையால் முன் சொன்னப் பலன்கள் நடப்பதுடன் இன்னும் சில பலன்களும் நடைபெறும். அவைகளேச் சொல்லுகிருேம். கேளுங்கள். எதிரிகளே எளிதில் வெல்லுவான். வீண் வழக்குகளில் சிறிது சம்பந்தப் படுவான். விவாஹமான ஏழு ஆண்டுகளுக்குப் பிறகு தொழில்கள் மேன் மையை அடையும். இவன் ஆருயிரம் பொற்காசுகளேச் சம்பாதிப்பான்.

22. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுள்ளாள் சிவந்த மேனி
அன்னமு மன்பா யீவள் ஆளன்தன் மனதுக்கேத்தோள்
அன்னியர் குற்றம் சொல்லாள் அல்பபுத் திகளு மில்லாள்
அன்னியர் மதிக்க வாழ்வள் அல்பமாம் கோப முண்டு.

22. இப்பொழுது இவனுடைய தாயின் குணத்தைச் சொல்லுகின்றோம். அவள் மிகவும் அழகுள்ளவள். சிவந்த மேனியாள். அன்புடன் அன்ன மளிக்கும் சுபாவமுள்ளவள். தன் கணவன் மனத்தின் படியே நடப்பாள். பிறர்மேல் குற்றம் சொல்லாதவள். அல்ப புத்தி இல்லாதவள். உலகத்தோர் மதிக்கும் வகையில் வாழ்க்கையை நடத்துவாள். அவளுக்குச் சிறிது கோபமும் அவ்வப்பொழுது வரும்.

23. தன்துணை ஆண்பா லொன்று சத்திமார் மூவ ராகும்
பின்னமாம் மற்ற வெல்லாம் பெற்றதா யில்லம் தெற்கு
சொன்னஆண் முன்னோ னாகும் செப்புவோ மவன்கு ணத்தைப்
பன்னியே பேசு வானும் பரஉப கார னவன்.

23. அவளுக்கு ஒரு சகோதரன் உண்டு. மூன்று சகோதரிகள் இருப்பார்கள். மற்றைய உடன் பிறந்த குழந்தைகள் நஷ்டமாகும். இவளுக்குப் பிறந்தகம் தெற்குத் திசையில் உள்ளது. நாம் இவளுக்குச் சொன்ன சகோதரன் மூத்தவன். அவனுடையக் குணங்களைச் சுருக்கமாக இங்குச் சொல்லுகின்றோம். அவன் பன்னிப்பன்னிப் பேசும் இயல்புள்ளவன். அந்நியர்களுக்கு உபகாரியாகவும் இருப்பான்.

ஜாதகம் 28

வேறு.

1. பொன்னோன் புந்தி பானுநந்தி
பிறையு மலவன் பணிசீயம்
மண்ணுக் குடையோன் கோலதனில்
மந்தன் கேது சாடியுறத்
துன்னும் புகரு மேட முற
ஜன்மம் கடகம் பலனதனைப்
பன்னு வீர்கள் விபர மதைப்
பராசர் சொல்வா ராண்ஜன் மம்.

	சுக்கிரன்	குரு புதன் சூரியன்	
சனி கேது	இராசி சக்கரம்		லக்கினம் சந்திரன்
			ராகு
		செவ்வாய்	

1. குரு புதன் சூரியன் விருஷபம், சந்திரன் கடகம், ராகு சிம்மம், செவ்வாய் துலாம், சனி கேது கும்பம், சுக்கிரன் மேஷம், கடகம் இலக்கினம்— இந்த ஜாதகத்தின் பலன்களை விவரமாகச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி வினவ, பராசர முனிவர் பதில் கூறுகின்றார். இக் கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண்.

விசுவாசு வருஷம் வைகாசி மாதம் 25-ஆந் தேதி புதன் கிழமை காலை ஆறு நாழிகைக்கு மேல் பதினோரு நாழிகைக்குள் ஜனனம். ஆங்கிலத் தேதி—7–6–1905. நவக்கிரஹங்களின் பாதசாரம்—மிருகசீர்ஷம் 1-இல் சூரியன். புஷ்யம் 3-இல் சந்திரன். சுவாதி 4-இல் செவ்வாய் (வக்ரீ). கிருத்திகை 3-இல் புதன். கிருத்திகை 1-இல் குரு. அசுவினி 4-இல் சுக்கிரன். சதயம் 2-இல் சனி. மகம் 4-இல் ராஹு. சதயம் 2-இல் கேது. நக்ஷத்திரம் புஷ்யம். சனி தசையில் இருப்பு வருஷங்கள் ஒன்பது. மாதங்கள் இரண்டு.

குறிப்பு.—இந்நூலாசிரியரது கணிதப்படி குரு கிருத்திகை 2-இல் இருக்க வேண்டும்.

2. ஜனனம் கீழ்மேல் வீதியது
தென்பால் வாசல் சிறு ஊராம்
கனமாம் காளி சலக்கரையும்
கணேசன் மேற்கில் தானமையும்
இனமே தீயின் வர்க்கமுறும்
எழிலாய்ச் சேஷ்ட பாலனுமாம்
தனயர் குடும்பச் சேதிதனைச்
சாற்றக் கேண்மோ சங்கரியே.

2. இக் குழந்தை பிறந்திருக்கும் வீதி கிழக்கு மேற்காக அமைந்திடும். வீடு தெற்கு நோக்கியிருக்கும். மேற்குத்திசையில் காளியும் விநாயகரும் இருப்பார்கள். அங்கு ஒரு நீர் நிலையும் உண்டு. இது ஒரு சிறிய ஊர். இவன் வன்னியகுல க்ஷத்திரிய ஜாதியில் பிறந்தவன். குடும்பத்திற்கு இவனே மூத்தவன். சங்கரியே! இவனுடைய குடும்பச் செய்திகளைக் கூறுகின்றோம். கேட்டருளல் வேண்டும்.

3. அரியே தந்தை மனைமூன்றில்
அணுகும் முதல்மா துக்கேதான்
வருவான் தந்தை துணைகாணான்
மறுத்துப் பிருகு தானுரைப்பார்
நெறியா யிரண்டாம் தாய்க்குச் சுதர்
புகல்வீர் முனியே ஆனென்று
உரையும் வேறு காணனும்
உற்ற மூன்றும் மனையாட்கு;

3. தேவியே! இவன் தந்தைக்கு மூன்று மனைவிமார்கள். அவர்களில் மூத்தமனைவிக்குப் பிறந்தவன் இவன். அவனுக்கு (ஜாதகனின் தந்தைக்கு) உடன் பிறந்தார் இல்லை. இங்குப் பிருகு முனிவர் மறுத்துக் கூறினர். அஃதிருக்கட்டும். இரண்டாவது மனைவியின் புத்திரபாவத்தைச் சொல்லும். அத்திரி கூறுகின்றார். இரண்டாவது மனைவிக்கு ஒரு பிள்ளை உண்டு. வேறு குழந்தைகள் பிறக்கமாட்டா. மூன்றும் மனைவிக்கு;

4. கன்னி ஒன்று தீர்க்கமுறும்
கழறுவோம் தாதை குணமதனைப்
பின்ன மிலாதான் பொய்புகலான்
பூமி விருத்தி செய்திடுவன்
பொன்னு பரணம் தானுடையன்
புகழுந்தோர்க் கன்பன் பேதையிஷ்டன்
சொன்ன சொல்லைக் காத்திடுவன்
துறவோ ரிஷ்டன் சுகவானே,

4. ஒரு பெண் நீடித்து வாழ்வாள். ஜாதகனின் தந்தை குணத்தைச் சொல்லுகின்றோம். சரீரத்தில் ஊனம் இல்லாதவன். பொய்பேசாதவன். உண்மையையே பேசுவான். நிலங்களை அபிவிருத்தி செய்வான். தங்க

ஆபரணங்களை நிரம்பப் பெறுவான், தன்னைக் கொண்டாடுபவர்களுக்கு அன்பனாக இருப்பான். [தான் புகழப்படுவதைக் கேட்பதில் ஆசையுள்ளவன் என்பது கருத்து.] மனைவிகளிடம் மிக்க அன்புள்ளவன். தான் சொன்ன சொற்படி நடப்பான். துறவிகளிடம் மிக்க பத்திகொண்டவன். வாழ்க்கையில் கஷ்டமின்றிச் சௌக்கியத்தை அனுபவிப்பான்.

5. வானோர் பக்தி கல்வியுளன்
மாலே நிறத்தன் மாடுவிருத்தி
ஈன ருறவு கொள்ளாதான்
ஈகை யாளன் யூகையுளன்
ஊனம் கரத்தில் மாரியினால்
உண்மை யாளன் உண்டிசுகம்
தேன்போல் மொழிவன் தீரமுளன்
சிறுத்தோர்க் குதவி செய்திடுவன்.

5. தெய்வங்களிடம் பக்தி பூண்டவன். கல்வியறிவு உடையவன். திருமாலின் நிறமுள்ளவன். [கருத்தமேனியான்.] மாடுகளை அபிவிருத்தி செய்வான். குணம் குறைந்தவர்களுடன் நட்புக்கொள்ளமாட்டான். தியாக குணம் படைத்தவன். சிறந்த மதியூகி. அம்மையினால் கையில் ஊனம் உடையவன். உண்மையான நடத்தை உள்ளவன். போஜன சௌக்கியம் பெற்றவன். தேன்போல் இனிக்கும் வார்த்தைகளைப் பேசுவான். தைரியம் வாய்ந்தவன். ஏழை எளியவர்களுக்கு உதவி செய்வான்.

6. இடுவன் ஏழை தமக்கன்னம்
இடரே செய்யான் யாவருக்கும்
கடனே கொள்ளான் இல்செய்வன்
கனத்த புத்தி கடுநடையன்
படையில் செல்லான் பலரநேயன்
பணையோர் விருத்தி படியாள்கள்
விடவாக் குடையன் பெருமையுளன்
விரதம் பூண்பான் வித்தகியே.

6. தேவியே! இவன் [ஜாதகனின் தந்தை] ஏழைகளுக்கு அன்னம் அளிப்பான். யாருக்கும் இடையூறுகளைச் செய்யமாட்டான். கடன் இல்லாதவன். புதியவீடு நிர்மாணிப்பான். உதாரபுத்தி படைத்தவன். வேகமாக நடக்கும் சுபாவமுள்ளவன். சண்டை சச்சரவுகளில் கலந்து கொள்ளாதவன். பலருக்கும் நண்பனாக இருப்பான். எருதுகளை விருத்திசெய்வான். அனேக சேவர்களுக்கு யஜமானனாக விளங்குவான். அவன் தன்வாக்கினால் தீங்குகளைச் சொன்னால் அவைகள் அப்படியே பலித்து விடும். "கிருத்திகை விரதம்" போன்ற பல விரதங்களை அனுஷ்டிப்பான்.

வேறு

7. சொன்ன யிந்தக் குணத்தானுக் கிந்தப்பாலன்
தோன்றுவா னிவன்கு ணத்தைச் செப்பக் கேண்மோ
கன்னெனமொழி மால்நி றத்தான் கல்வி ரண்டு
கணக்கில்வல்லன் கனத்தபுத்தி தானும் மெய்யன்
அன்னியர் மதிக்க உய்வன் அறத்திலிச்சை
ஆண்டிகள் பணேயோர்கள் அரச ரிஷ்டன்
மன்னர்க்கு இவன்மொழியும் மேன்மை யாகும்
மால்ரேகை பத்மவரி மருவு மென்றேம்.

7. நாம் சொன்னகுணம் அமைந்தவனுக்கு இக்கடகலக்கின பாலகன் மகனுகப் பிறந்திருக்கிருன். ஜாதகனின் குணங்களேச் சொல்லுகின்ருேம். கேளுங்கள். கரும்புபோல் இனிமையான மொழிகளேக் கூறுவான். கருத்த நிறம் உடையவன். இருவிதக் கல்விகளேக் கற்றறிவான். கணிதத்தில் சமர்த்தன். மேலான புத்தி படைத்தவன். உண்மையே பேசுவான். உலகத்தோர் மதிக்கும் வகையில் வாழ்வான். தருமம் செய்வதில் பேரவாக் கொண்டவன். துறவிகளிடமும் அரசர்களிடமும் மதிப்பு வாய்ந்தவன். எருதுகளே வளர்ப்பதில் ஆசை உள்ளவன். இவன் கூறும் வார்த்தைகளே மன்னர்கள் போற்றி ஏற்றுக்கொள்வார்கள். இவனது கரத்தில் விஷ்ணு ரேகையும் தாமரை ரேகையும் விளங்கிடும்.

8. வந்தவரை ஆதரிப்பன் நற்குணத்தான்
வளவுசெய்வன் மாடுவிருத்தி பந்துக்கிஷ்டன்
தன்தனமும் கையிருப்பு தரும மிச்சை
தவமுனியும் மறுத்துரைப்பார் மாரனுக்கு
எந்தக்கா ரணத்தினுல் யோகம் சொன்னீர்
ஈரஞ்சோன் நாலில் நிற்க பாக்கியோன் லாபம்
கந்தனெனும் சேய்பு கருமாறி நிற்க
கருதினேம் மால் யோகம் மச்ச யோகம்.

8. வந்திடும் அதிதிகளே ஆதரிப்பான். நற்குணம் படைத்தவன். புதியதொரு வீடு கட்டுவான். மாடுகளேயும் அபிவிருத்தி செய்வான். உற்ருர் உறவினருக்கு இஷ்டமானவன். தான் சம்பாதித்த பணத்தைச் சேமித்து வைத்திருப்பான். தருமம் செய்வதினும் ஊக்கமுடையவன். இவ்வாறு அத்திரி யோக பலன்களேச் சொன்னவுடன், ஒரு முனிவர் மறுத்துக் கூறினுர். எந்தக் காரணத்தினுல் இவனுக்கு யோகங்களேச் சொன்னீர்கள்? அதைத் தெளிவாகக் கூறுங்கள். அத்திரி கூறுகின்ருர். "கார்யஸ்தானம்" என்று சொல்லப்படும் பத்தாமிடத்திற்கு அதிபனுன செவ்வாய் நான்காம் கேந்திரத்தில் இருப்பதாலும், பாக்கியாதிபதியாகிய குரு லாபஸ்தானத்தில் விளங்குவதாலும், செவ்வாய் வீட்டில் சுக்கிரனும் சுக்கிரன் வீட்டில் செவ்வாயும் பரிவர்த்தனையாக இருப்பதாலும் இவனுக்கு "மால்" யோகமும் "மச்ச" யோகமும் உண்டு. [ஆகையால்தான் சிறப்பான பலன்களேக் கூறினேம் என்பது கருத்து.]

9. பலன் சொல்வேன் ஈரைந்து ஆண்டுமேலாய்ப்
பார்விருத்தி பணேயோர்க ளதிக மெய்தும்
நலம்செய்வான் யாவருக்கும் ராச ரிஷ்டன்
நாற்கலி யதிகமுறும் புகழு மேற்பன்
திலகம்போல் பந்து கட்கு வறுமை காணுன்
செய்ந்நன்றி மறவாதான் தியாகி யாவன்
கலகத்தைக் கூருனும் சயன மெத்தை
கடன்கொள்ளான் காதலியே கண்டு கொள்ளே.

9. இப்பொழுது மேலும் பலன்களேச் சொல்லுகின்றேன். இவன் பிறந்து பத்து ஆண்டுகளுக்குப் பின்பு நிலங்கள் அதிகமாகும். உழவுக்கான காளேகளும் விருத்தியாகும். பலருக்கும் நன்மைகளேச் செய்வான். அரசர்களுக்கும் நண்பனுவான். ஆடு, பசு, எருமை முதலியவைகள் விருத்தியடையும். இவனுக்கு நற்புகழும் ஏற்படும். தம் பந்துக்களுக்குள் திலகமாக விளங்குவான். வறுமையின்றிச் செல்வம் வளரும். இவனேயறியாமலும் கூடக் கலக வார்த்தைகள் இவன் வாக்கில் தோன்ரு. விதவிதமான ஆசனங்கள், கட்டில் மெத்தை முதலிய வசதிகளும் இவனுக்குக் கிடைக்கும். கடனும் இராது. தேவியே! இத்தகைய பலன்கள் நிச்சயம் ஏற்படுமென்று அறிவீர்களாக.

வேறு

10. தன்துணே ஆண்பால் ரண்டு சத்தியும் அவ்வாறு தீர்க்கம்
அன்னவர் சேதி பின்பால் அறிவிப்போம் தாயே யாங்கள்
இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோம் மிருப தாண்டில்
கன்னிகை வடமேல் நேரும் கழறுவோம் அவள்கு ணத்தை.

10. இவனுடைய சகோதர பாவத்தைப்பற்றிச் சொல்லுகின்ருேம். இவனுக்கு இரு சகோதரர்கள். சகோதரிகளும் இருவர். இந்நால்வரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். அவர்களுடைய செய்திகளேப் பின் பாகத்தில் தெரிவிப்போம். ஜாதகனுடைய மணத்தின் காலத்தைச் சொல்லுகிருேம். இருபதாவது வயதில் இவனுக்கு மணம் நடைபெறும். மணப்பெண் வடமேல் திசையில் பிறந்திருப்பாள். இனி அவளுடைய குணத்தைக் கூறுவோம்.

11. மாந்தளிர் மேனி யாகும் மனமது கபடு மில்லாள்
ஏந்திய தனத்தா ளாகும் இடர்செய்யாள் யாவ ருக்கும்
சாந்தவாள் அடக்க வார்த்தை சந்தேக மனத்தா ளாகும்
தெரிந்தோர்போல் வார்த்தை யுண்டு தீர்க்கமாம் வயது மேற்பள்.

11. மாந்தளிர் போல் சிவந்த மேனியாள். கள்ள மில்லாத உள்ளம் படைத்தவள். அதிக செல்வம் படைத்தவள். ஒருவருக்கும் கெடுதல் செய்யாதவள். சாந்தமான குணம் உடையவள். வணக்கம் தொனிக்கும் வார்த்தைகளேயே சொல்லுவாள். சந்தேகிக்கும் மனப்பான்மை உள்ளவள். தனக்குத் தெரியாத விஷயத்தையும் தெரிந்தவள்போல் பேசுவாள், தீர்க்காயுள் உடையவள்,

12. குணமது நல்ல தாகும் குறியினில் கொடுமை தோன்றும்
மணமது இஷ்டம் கொள்வள் வரன்மனம் ஏற்ற மாது
பிணேசொலாள் யாவ ருக்கும் பொருத்தமாய்ப் பேசு வாளாம்
அனேயவே தவங்கள் செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

12. நற்குணம் படைத்தவள். முகத்தோற்றத்தில் கொடியவள் போல் காணப்படுவாள். தான் இவனேயே (ஜாதகனேயே) மணக்கவேண்டு மென்று ஆசைப்பட்டவள். அவள் இஷ்டப்படியே மணமும் நடை பெற்றது. பர்த்தாவின் கருத்துப்படியே நடப்பவள். எவர்க்கும் கெடுதலேச் சொல்லாதவள். சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான வார்த்தைகளேயே பேசுவாள். தேவியே! மேலும் கேட்பீராக.

13. புத்திரர் நவமே தோன்றும் போகிடும் முதலில் புத்திரர்
சுத்தமா யாண்பால் ரண்டு தோகையும் மூவர் தீர்க்கம்
மற்றவை சேத மெய்தும் வருஞ்சுதர் முதலில் தோஷம்
குற்றத்தைப் புகலு மென்னக் குசனுமே நாலில் தங்க;

13. இவனுடைய புத்திர பாவத்தைப் பற்றிக் கூறுவேன். இவனுக்கு ஒன்பது குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் இரு ஆண்களும் மூன்று பெண்களும் தீர்க்கமாக வாழ்வார்கள். மற்றைக் குழந்தைகள் நீடிக்க மாட்டா. முதலில் பிறக்கும் குழந்தைகள்தான் நீடிக்கமாட்டார்கள். அதற்கென்ன காரணம் என்று பார்வதிதேவி கேட்க, புத்திரபாவாதிபதியாகிய செவ்வாய், [புத்திரஸ்தானமாகிய ஐந்தாமிடத்திற்குப் பன்னிரண்டில்] நான்காம் இடத்தில் தங்கி இருப்பதாலும்;

14. மந்தனு மைந்தைப் பார்க்க மருவாது புத்திரர் தாமும்
இந்தவன் பூர்வம் சொல்வேன் இருடிவாழ் அருணே தன்னில்
விந்தையாய் வணிபம் செய்யும் வைசிய குலமு தித்துத்
தன்தன முடைய னுகிச் சகலோர்க்கு நல்லோ னுன்.

14. சனியும் புத்திர பாவத்தைப் பார்ப்பதாலும் முதலில் பிறக்கும் சில குழந்தைகள் சேதமாகும். ஜாதகனுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுவேன், மஹரிஷிகள் வாசம் செய்யும் திருவண்ணுமலேயில் வியாபாரத்தையே சீவனமாகக் கொண்ட வைசிய குலத்தில் பிறந்து தனிகளுக வாழ்ந்து வந்தான். எல்லோருக்கும் நல்லவனுக இருந்தான்.

15. அறமதி லிச்சை யுண்டாய் அதிதிகட் கன்ன மீந்து
வருமார்க்கம் தாகம் வைத்தும் விணேயது இல்லா தாகி
மறலியின் நாடு சேர்ந்து மறையவன் வரையப் பட்டுத்
திருமக னுதிப்பா னுகும் செப்புவோ மிவனின் யோகம்.

15. தருமத்தில் ஆசை உள்ளவனுகவும் இருந்தான். விருந்தாளிக்கு அன்புடன் (பாவம் சம்பவிக்காதவாறு) அன்னமளித்தான். வெகு சனங்கள் நடக்கும் மார்க்கத்தில் தண்ணீர்ப்பந்தல் நிறுவினுன். ஒரு பாவத்தையும் செய்யாதவனுகவும், மேற் சொன்ன புண்ணியங்களேச் செய்தவனுகவும் விளங்கிய இவன் பிரம்மதேவனுல் இங்குப் படைக்கப்பட்டிருக்கிறுன்.

16. இந்திர யோக மொன்று எழில்வேசி யோக மொன்று
அந்தவோர் பலனேச் சொல்வேன் அடாவடி கூறு ணுகும்
பந்தினர் மதிக்க வாழ்வன் பகரமாம் குடும்ப மேற்பன்
சிந்தையும் நல்ல தாகும் சிலேடையாய்ப் பேசு வானும்.

16. இவனுக்கு இந்திரயோகமும், வேசியோகமும் உண்டு. இந்த இரு யோகங்களின் பலன்களேச் சொல்லுகின்றேன். வீண் பிடிவாதமாக வார்த்தைகளேக் கூறமாட்டான். உறவினர்கள் மெச்ச வாழ்வான். இவனுடைய குடும்பம் பெருமை வாய்ந்ததாகத் திகழும். மனத்தில் கெட்ட எண்ணங்களே இல்லாதவன். சிலேடையான வார்த்தைகளேப் பேசுவான்

17. இல்லமும் வேறு செய்வன் ஏவலா ளதிகம் சேர்ப்பன்
நல்லவ னுகி வாழ்வன் நாதனுர் பக்தி பூண்பன்
வெல்லுவான் எதிரி தம்மைவிளேபுல மதிகம் சேர்ப்பன்
சல்லியம் கொள்ளா னுகும் தனமது பெருக்க மாகும்.

17. வேறு ஒரு வீட்டையும் நிர்மாணிப்பான். அதிக சேவகர்களே நியமிப்பான். [இவனுடைய தொழில் அவ்வளவு விரிவாகும் என்பது கருத்து.] எல்லோருக்கும் நல்லவனுக வாழ்வான். சிவபிரானிடம் பக்தி கொண்டவன். எதிரிகளே எளிதில் வெல்லுவான். செழிப்பான நிலங்களே அதிகம் சேர்ப்பான். இவனுக்குச் சிறிதும் கடன் இராது. இவனுடைய செல்வம் மேன்மேலும் பெருகும்.

18. மாதுரு குணத்தைச் சொல்வேன் மனமது கபடு மில்லாள்
ஒதுவாள் சுகமாய் வார்த்தை உரகம்போல் கோப மேற்பள்
சூதிலாள் புத்தி சாலி சோர்வோர்க்குத் தாக மீவள்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவுக் கினிய ளாகும்.

18. இனி ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்வேன். உள்ளத்தில் கபடமில்லாதவள். காதுக்கு இனிமையாகப் பேசுவாள். பாம்புபோல் கோபமுள்ளவள். வஞ்சனேப் புத்தி இல்லாதவள். புத்தி சாதுர்யம் வாய்ந்தவள். சோர்வுற்றவர்களுக்குத் தண்ணீரும் அன்னமுமளிப்பாள். ஒருவருக்கும் கெடுதலே நினேக்காதவள். தன் புருஷனுக்கு மிக இனியவள்.

19. பித்ததே கத்தா ளாகும் பிறர்குற்றம் புகலா ளாகும்
சுத்தமும் கொஞ்ச முண்டு துணேவர்கள் ஆண்பா லொன்று
வித்தகி மார்கள் மூன்று விளங்கிடும் தீர்க்க மாகப்
பெத்ததா யில்லம் வாயு பேதையே கேட்டி டாயே.

19. பித்த தேகம் வாய்ந்தவள். பிறர் குற்றத்தை வெளியில் சொல்லாதவள். கொஞ்சம் சுத்தமாகவும் இருப்பாள். அவளுக்கு ஒரு சகோதரனும் மூன்று சகோதரிகளும் உண்டு. அவர்கள் எல்லோரும் தீர்க்கமாக வாழ்வார்கள். இவள் பிறந்த ஊர் வடமேற்குத் திசையில் உள்ளது. தேவியே! மேலும் கேளுங்கள்.

20. இவளுடைப் பூர்வம் சொல்வேன் ஏகம்பன் வாழு மூரில்
பவமிலாச் சாலிய வம்சம் பிறந்துமே நல்லோ ளாகி
அவமதிப் பில்லா வாழ்ந்து அரனடி தொண்டு பூண்டு
சிவனடி யார்க்கு அன்னம் தேவியு மீந்து வந்தாள்.

20. இவளுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுகின்றோம். இவள் முன் பிறவியில் காஞ்சியில் ''குயவர்'' சாதியில் பிறந்து எல்லோருக்கும் நல்ல வளாக வாழ்ந்தாள். உலகத்தார் இவளைக் கௌரவித்தார்கள். இவள் சிவபிரானுக்குத் தொண்டுகள் செய்து வந்தாள். அவனடியார்களுக்கு அமுதும் அளித்தாள்.

குறிப்பு.—''சாலியர்'' என்று ஒரு சாதியார் உண்டு. அவர்கள் பெரும்பாலும் பட்டுநூல் நெசவுத் தொழில் செய்வார். அவ்வகுப்பில் பிறந்ததாகவும் கொள்ளலாம்.

21. வினையது இல்லா தாகி மேவினள் கால ளுடு
கனமுள பிரமன் லக்கம் கலந்தன ளிக்கு லத்தில்
வனிதையும் வந்த பின்பு வளர்பிறை போலே யோகம்
சினமதை வெளிக்காட் டாதாள் தேவியே கேட்டி டாயே.

21. பாவமே செய்யாதவளாக இருந்த இவள் அந்திய காலத்தில் இறந்து பிரம்மதேவனால் இக்குலத்தில் பிறப்பிக்கப்பட்டிருக்கிருள். இவள், இக்குடும்பத்தில் வாழ்க்கைப்பட்ட பிறகு கணவனுக்கு யோகங்கள் பிறைச் சந்திரன் போல வளரும். கோபத்தை வெளியில் காட்டாதவள். தேவியே! மேலும் கேளுங்கள்.

22. மறுஜன்மம் கலிங்கு நாட்டில் வருகுவா ளிக்கு லத்தில்
பொருளது பெருக்க மாகிப் புண்ணிய மனத்த ளாகி
அரிவையும் வாழ்வா ளாகும் அறைந்தன மொழிகுன் றுது
கர்மத வாளை பெற்ற காதலி கேட்டி டாயே.

22. இவள் மறு ஜன்மத்தில் கலிங்க தேசத்தில் இதே சாதியில் பிறப் பாள். அதிகச் செல்வத்தை அடைவாள். புண்ணிய மனம் உள்ளவளாக கவும் வாழ்வாள். நாங்கள் சொன்ன மொழி தவருது. விநாயகரைப் பெற்ற தாயே! மேலும் கேட்பீராக.

23. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவேன் ஊற்றுக் காட்டில்
வந்தவ னிக்கு லத்தில் மானிலம் விருத்தி செய்து
அந்தவன் வாழு நாளில் அணுகிய வினையைக் கேண்மோ
பந்தியில் வஞ்சம் செய்தான் பற்றிற்று அதுவோர் தோஷம்.

23. இனி ஜாதகனுடைய தகப்பனின் முன்பிறவியைக் கூறுகின்றோம். இவன் பூர்வ ஜன்மத்தில் ஊற்றுக்காடு என்ற ஊரில் இதே சாதியில் பிறந் தான். அதிக நிலங்களைச் சம்பாதித்து அவைகளை அபிவிருத்தியும் செய் தான், அவ்வாறு சுகமாக அவன் வாழும் நாளில் அவனுக்கேற்பட்ட ஒரு

வினையைச் சொல்லுகின்றோம். கேளுங்கள். பலரும் பந்தியாக உட்கார்ந்து சாப்பிடும் காலத்தில் சிலருக்குப் பரிமாறிச் சிலருக்குப் பரிமாருமல் பந்தி வஞ்சனை செய்தான். அந்தப் பாவம் இவனைப்பற்றிக் கொண்டது.

24. ஏழையாம் மாதுக் கேதான் இன்பமாய் வார்த்தை சொல்லிப்
பாழான காமம் செய்து பணமது தராமல் சென்றான்
தோழியும் வருத்த முற்றுச் செப்புவாள் சாபம் தானும்
ஆழியில் மறுஜன் மத்தில் அன்னையின் சுகமு மின்றி;

24. வேறு ஒரு பாவமும் ஏற்பட்டது. ஓர் ஏழை மாதை, நயமான வார்த்தைகள் பேசிக் கெடுத்தான். பணமும் தராமல் ஏமாற்றி விட்டுச் சென்றான். மிகவும் வருந்திய அந்த ஏழைமாது சாபமிட்டாள். மறு ஜன் மத்தில் நீ தாய் சுகமின்றித் தவிப்பாய்.

25. துணைவரு மில்லா ளுகித் தன்கரம் ஊன மாயும்
பொன்னது இல்லா தாகிப் பூமியில் வாழ்வா யென்னத்
துன்மையாய் ஏழைச் சாபம் சேர்ந்தது பால னுக்கு
அந்திய காலம் தன்னில் அறுமுகன் பக்தி கொண்டான்.

25. சகோதரனில்லாதவனுகவும் பணமற்றவனுகவும் வாழ்வாய். மேலும் உனது கரத்தில் ஊனம் ஏற்படும். இந்தச் சாபம் இவனைப் பற்றிக்கொண் டிருந்தது. பிறகு இவன், அந்திய காலத்தில் சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி உடையவனுகி இறந்தான்.

26. மறவியின் நாடு சேர்ந்து மறையவன் வரையப் பட்டு
அரசர்தம் குலமு தித்தான் அணுகிடும் ஏழைச் சாபம்
பெறுமன்னை சுகமில் லாதான பிறப்புமே காண ளுகும்
இருகரம் ஊனம் கொஞ்சம் எய்திடும் என்று சொல்வேன்.

26. அவனைப் பிரம்மதேவன், இத்தகைய அரச குலத்தில் பிறப்பித் திருக்கிருன். முன்ஜன்ம சாபத்தின்படியே இவன் பெற்ற அன்னையின் சுகமில்லாதவன். உடன் பிறந்தாரும் இவனுக்கில்லை. அந்தச் சாபத்தின் காரணமாகவே இரு கரங்களிலும் ஊனம் ஏற்படும் என்று நிச்சயமாகச் சொல்வேன்.

27. அறுமுகன் கிருபை யாலே அன்னமும் குறைவு ருதான்
பொருளது பெருக்க மில்லான் புகலுவோ மிவன்பின் ஜன்மம்
திருத்தணி தன்னி லேதான் ஜனிப்பனும் ரெட்டி வம்சம்
தரைதனம் அதிக முண்டாய்த் தான்வாழ்வா னென்று சொல் [வோம்.

27. சுப்பிரமணிய சுவாமியின் கிருபையால் ஏராள ஆகாரப்பொருள்களைப் பெறுவான். ஆனல் பொருள்களை அபிவிருத்தி செய்யான். இவனது பின் ஜன்மத்தைக் கூறுவோம். இவன் வரும் பிறவியில் திருத்தணிகையில் ரெட்டி வமிசத்தில் பிறப்பான். அதிக பூமிகள் உள்ளவனுகி மிகவும் சிறப்பாக வாழ்வான்.

28. ஆருறு ஒன்று ஆண்டில் ஐப்பசி மாதம் தன்னில்
கூறுவோம் தந்தை கண்டம் கோரைக்கு நாற்பான் மூன்றில்
தீரமாய்த் தனுசு மாதம் செல்லுவாள் அன்னை தாமும்
பாரினில் தவங்கள் செய்யும் பார்வதி கேட்டி டாயே.

28. தந்தையின் மரண காலத்தைக் கூறுவோம். சாதகனுடைய முப்பத்தேழாவது வயதில் ஐப்பசி மாதத்தில் தந்தை மரணமடைவான். ஜாதகனுக்கு நாற்பத்து மூன்றும் வயது நடை பெறும்போது மார்கழி மாதத்தில் தாய் மரணத்தை அடைவாள். தேவியே! மேலும் கேளுங்கள்.

29. மைந்தனின் மரண காலம் வரைகிறோம் அறுபா னுலில்
தன்தனுர் மாதம் தன்னில் சஷ்டியின் திதியி லேதான்
அந்தவ னுடலம் ஏகும் அறைகிறே மிவன்பின் ஜன்மம்
செந்திரு மணியி லேதான் ஜனிப்பனும் சைவச் சேயாய்.

29. ஜாதகனின் மரண சமயத்தையும் தெரிவிப்போம். அவனுடைய அறுபத்து நான்காம் வயதில் மார்கழி மாதத்தில் ஷஷ்டி திதியில் அவன் வேறு உலகம் ஏகுவான். இவனது மறு பிறவியையும் சொல்லுகின்றோம். செல்வம் படைத்த சைவ குடும்பத்தில் பிறப்பான்.

30. இதுமட்டில் ஜாதகர்க்கு எய்தாதோ மார கங்கன்
விதவிதப் பிணியும் நேரும் வெண்மதி ஜனனம்தங்க
விதியவன் எட்டி லாக வெய்யவன் பனிபோல் நீங்கும்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

30. ஜாதகனுக்கு அறுபத்து நான்காம் வயதுவரையில் யாதொரு மாரகமும் ஏற்பட்டிராதோ என்று தேவிகேட்க, முனிவர் கூறுகின்றார், பலவித பிணிகள் வரும். ஆயினும் இலக்கினாதிபதி சந்திரன் ஸ்வக்ஷேத்திரத்தில் இலக்கினத்தில் இருப்பதாலும், ஆயுள் ஸ்தானாதிபதியான சனியும் ஸ்வக்ஷேத்திரமான எட்டில் இருப்பதாலும், சூரியன் முன் பனிபோல் வத்திடும் பிணிகள் விலகிடும். அன்னபூர்ணதேவியே! மேலும் கேளுங்கள்.

31. பிறந்திடு காலந் தன்னில் பூசத்தில் மூன்றும் பாதம்
கரியவன் தசைஒன் பாண்டும் கலந்திடும் திங்கள் ரண்டும்
திருமகன் பிணிஅ நேகம் சேத்திரம் செய்த லுண்டு
வருந்துணே சிறுதந் தைக்கு மனைவியும் வாய்க்கு மென்றேம்.

31. ஜாதகன் புஷ்ய நக்ஷத்திரம் மூன்றும் பாதத்தில் ஜனித்திருக்கிறான். ஆகவே ஜனன காலத்தில் சனி தசையில் இருப்பு வருஷங்கள் ஒன்பது, மாதங்கள் இரண்டு. இந்தத் தசையின் பலன்களைக் கூறுவோம், ஜாதகனுக்குப் பலவித நோய்கள் காணும். வீடும் கட்டுவான். சகோதர விருத்தியுண்டு. சிறிய தகப்பனருக்கு விவாஹமும் நடைபெறும்.

32. அவன்குணம் கூறக் கேண்மோ அற்புத வார்த்தை யுண்டு
தவனியில் உய்வா னுகும் நாதனுர் பக்தி கொஞ்சம்
தவசிக ளுறவு கொள்ளான் தந்திர மொழியு முண்டு
பவமுள மில்லான் நல்லான் பாரினில் வறுமை காணுன்.

32. அந்தச் சிறிய தந்தையின் குணத்தைச் சொல்லுகின்றோம். அற்புதமாகப் பேசுவான். சிறப்பாக வாழ்வான். பரமேசுவரனிடம் பக்தி பூண்டவன். தவசிகளிடம் தொடர்பு இல்லாதவன். தந்திர வார்த்தைகளையும் பேசுவான். நல்ல மனம் படைத்தவன் தான். எல்லோருக்கும் நல்லவனுக இருப்பான். வறுமையையே காணுதவன்.

33. சிலதுநாள் ஒன்றாய் வாழ்ந்து செல்லுவான் வேற தாகத்
தலைவியும் ஒன்றே யாகும் தன்சுதர் ஆண்பால் மூன்று
நலமுள கன்னி ரண்டு நவிலுவோம் தீர்க்க மாகக்
கலகத்தைக் கூறு நெஞ்சன் காதலன் வயது தீர்க்கம்.

33. சில காலம் ஒன்ருகக் குடும்பம் செய்து அதன் பிறகு தனிக் குடும்ப வாழ்க்கை நடத்துவான். அவனுக்கு மனைவியும் ஒருத்திதான். அவனுக்கு மூன்றுபிள்ளைகள், இரண்டு பெண்கள். இந்த ஐவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். கலக வார்த்தைகளையும் சிறிது பேசுவான். அவனும் தீர்க்காயுளுடன் வாழ்வான்.

34. ஈரெட்டு ஆண்டு தன்னில் இல்லமும் பிரிதல் செய்வன்
வேறதா யில்லம் செய்தல் வேண்டினேர்க் குதவி யாகும்
காரிய சமர்த்த னுகும் கட்செவி போலே கோபம்
தீரமா மனத்தா னுகும் செப்புவோம் பின்பால் சேதி.

34. ஜாதகன் ஜனித்துப் பதினுருவது ஆண்டில் குடும்பப் பிரிவினை செய்துகொண்டுத் தனியாக வாழ்வான். வேறு வீடும் கட்டுவான். உதவியை நாடுபவர்களுக்கு உதவி புரிவான். காரியங்களைச் செய்வதில் சமர்த்தன். பாம்பிற்குக் கோபம் வருவதுபோல் இவனுக்குக் கோபம் வரும். உறுதியான மனம் படைத்தவன். இவனைப்பற்றிய வரலாறுகளை விவரமாகப் பின் பகுதியில் சொல்லப்போகின்றோம்.

ஜாதகம் 29

1. மதியும் ராகும் சீயமுற
    மன்னன் கேது சாடியாக
விதியன் கோலில் சேய்கன்னி
    வெய்யோன் வெள்ளி புதனலவன்
இதுவே கிரகம் தானின்று
    எழிலாய் உயிரும் கடகமுற
அதுவே பலன்கள் தானுரைப்பீர்
    அறைகுவார் பிருகு ஆண்ஜன்மம்.

குரு கேது	இராசி		லக்கினம் சூரியன் சுக்கிரன் புதன்
	சக்கரம்.		சந்திரன் ராகு
		சனி	செவ்வாய்

பிரபவ வருஷம் ஆடி மாதம் 19-ஆந் தேதி வெள்ளிக்கிழமை இரவு 27 நாழிகைக்குமேல் ஜனனம். ஆங்கிலத் தேதி—2-8-1867. ஆயில்யம் 1-இல் சூரியன். பூரம் 4-இல் சந்திரன். உத்திரம் 2-இல் செவ்வாய். ஆயில்யம் 1-இல் புதன் (வக்ரீ). சதயம் 3-இல் குரு வக்ரீ. புஷ்யம் 1-இல் சுக்கிரன். விசாகம் 2-இல் சனி. பூரம் 4-இல் ராகு. பூரட்டாதி 2-இல் கேது. நக்ஷத்திரம் பூரம். சுக்கிர தசை இருப்பு வருஷங்கள் நான்கு, மாதங்கள் நான்கு.

1. சந்திரனும் ராகுவும் சிம்மம், குரு கேது கும்பம், சனி துலாம், செவ்வாய் கன்னி, சூரியன் சுக்கிரன் புதன் இவர்கள் கடகம், இலக்கினமும் கடகம். இச் சாதகத்தின் பலன்களைச் சொல்லுவீராக எனப் பார்வதி கேட்க, பிருகு முனிவர் கூறுகின்றார். இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண்.

2. இல்லம் வடபால் வாசலுமே
    யாளி யூர்தி வட கீழ்ப்பால்
பொல்லா மாரி தன்வாயு
    புகன்றேம் சிறுஊர் கூரையில்லம்

சொல்லும் ஏழாம் ஜன்மமுமாம்
    ஜனிப்பான் பிரம்ம குலமதனில்
வல்லோன் குடும்பச் சேதிதனை
    அறிவிப் போமே இந்நூலில்.

2. இவன் பிறந்திருக்கும் வீடு வடக்கு நோக்கி இருக்கும். [வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு தென் வரிசையில் உள்ளது என்பது கருத்து.] வட கிழக்குத் திசையில் காளி கோயில் உண்டு. வடமேற்கில் மாரியம்மன் ஆலயம் இருக்கும். இந்த அடையாளமுள்ளதொரு சிறிய ஊரில் கூரை வீட்டில் பிராம்மண ஜாதியில், குடும்பத்தில், ஏழாம் குழந்தையாகப் பிறந்திருப்பான். இந்நூலில் அவனுடைய குடும்பச் செய்திகளை அறிவிப்போம்.

3. தந்தை துணைகள் சில தோன்றும்
    தங்கா தென்றேம் சங்கரியே
தந்தை சேதி யூகையுளன்
    சரச வார்த்தை கபடில்லான்
தந்தை மொழிக்கு இடருரையான்
    சாற்றுன் கட்டு வார்த்தைகளைத்
தந்தை தமக்கு அருளீந்த
    சாமி பக்தி கொண்டிடுவன்.

3. ஜாதகன் தந்தைக்குச் சில உடன் பிறந்தார்கள் தோன்றுவர். ஆனால் நீடிக்கமாட்டார்கள். தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம். மதியூகம் வாய்ந்தவன். அழகிய வார்த்தைகளைப் பேசுவான். கபடமில்லாதவன். அவனுடைய தந்தையின் மொழியை மறுத்துக் கூறுதவன். அடுக்குச் சொற்களைப் பேசுவதில் விருப்பமில்லாதவன். தனது தந்தைக்கும் பிரணவத்தின் பொருளை உபதேசித்தச் சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டவன்.

4. இடுவன் எழை தனக்கன்னம்
    இடரே செய்யான் யாவருக்கும்
படையில் செல்லான் கிருஷி யுள்ளன்
    பால்பாக் கியங்கள் விருத்தியுண்டு
நடையும் கடினன் மெலிதேக கன்
    நல்லோ னென்று புகழ்ந்திடுவர்
விடவாக் குடையன் பித்த பிணி
    மேவும் சூடு மெல்லரசே.

4. ஏழைகளுக்கு அன்னமளிப்பான். ஒருவருக்கும் இடையூறுகளைச் செய்யாதவன். சண்டை சச்சரவுகளில் சேரான். கிருஷி செய்வான். பால் பாக்கியம் விருத்தியடையும். வேகமாக நடப்பவன். மெலிந்த தேகம் வாய்ந்தவன். உலகத்தோர் இவனை " நல்லவன் " என்று புகழ்வார்கள். இவன் வாக்கினல் கெடுதல்களைச் சொன்னல் சொன்னபடியே நடைபெறும். பித்தப் பிணியினல் கஷ்டப்படுவான். சூடும் இவனது உடலில் தலை தூக்கிநிற்கும்.

5. அறவே பாலன் குணம் சொல்வேன்
அஞ்சா நெஞ்சன் அறிவாளி
பெரியோ ருறவு கொண்டிடுவன்
பெரியதாய் தலங்கள் தான்செய்வன்
கரியைச் சுரண்டும் தொழில் சிலநாள்
காசு சேர்ப்பன் காலுள்ளன்
நெறியைக் காப்பன் மாஞ்சிவப் பன்
நினைத்த படியே தான் முடிப்பன்.

5. இனி ஜாதகனின் குணத்தைக் கூறுவோம். அஞ்சா நெஞ்சன். அறிவாளி. பெரியோர்களின் நட்பு உடையவன். பெரிய புண்ணிய ஸ்தலங்களுக்கும் யாத்திரை செல்லுவான். சில காலம் கரியைச் சுரண்டும் தொழிலைச் செய்வான். கஷ்டப்பட்டுக் காசுகளைச் சேர்ப்பான். பலம் பொருந்திய கால்கள் வாய்ந்தவன். தொன்று தொட்டு வந்த சம்பிரதாயத்தைக் கடைப்பிடிப்பான். மாநிறம் வாய்ந்தவன். தான் நினைத்தபடியே காரியங்களை நிறைவேற்றுவான்.

6. தந்தைக் கினியன் தாய்பகையும்
தரணியும் பின்னல் சேர்த்திடுவன்
விந்தை மொழிகள் பகர்ந்திடுவன்
மெல்லியர் மாரால் செலவதிகம்
சிந்தை கலக்கம் முன்னேனல்
செல்வான் உத்திர தேசத்தில்
விந்தை யாகப் பரிசார
வேலை செய்வன் வித்தகியே.

6. தந்தையினிடம் விசேஷ பக்தி கொண்டவன். தாயைப் புறக்கணிப்பான். ஆனல் பிற்காலத்தில் தாயினிடம் அன்புகொண்டு அவளை வந்தடைவான். பிறர் வியக்கும்படி வார்த்தைகளைப் பேசுவான். பெண்களால் செலவதிகமாகும். தமையனல் மனத்தில் கலக்கமேற்படும். வடதிசையிலுள்ள புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்று சமையற்கார வேலையைச் செய்வான்.

7. ஏகா தசியாம் துணைமுன்பின்
இடரே யாகும்......மென்றேம்
ஜாதகன் ஒருவன் முன்தீர்க்கம்
சகடு நாளாம் நந்தி ஜன்மம்
பாக மாகப் பேசிடுவன்
பதரில் செல்லான் பார்சேர்ப்பன்
தோகை சொல்லைக் கடவாதான்
துணைவன் பகையும் சுதர்தம்மால் ;

7. இவன் குடுபத்திற்கு ஏழாவது குழந்தையாக இருப்பினும் மூத்தவர்கள் இல்லாதவன். ஆனல் இவனுக்கு முன் பிறந்தான் மாத்திரம் மூத்த சகோதரன் ஒருவனேஜீவித்திருப்பான். அவன் விருஷப லக்னத்தில் பிறந்திருப்பான். ரேவதி நக்ஷத்திரம். பக்குவமாகப் பேசுவான். சச்சரவுகளில் சேராதவன். பூமிகளைச் சேர்ப்பான். மனைவியின் சொல்லை மீறி நடக்கமாட்டான். சகோதர விஸ்வாசம் இல்லாதவன். அவனுக்குப் பிள்ளைகள் மூலம் ;

8. தனமும் நேரும் பின்சுகமாம்
தரணி சேர்ப்பன் தனவிரயம்
விளையை எவர்க்கு மெண்ணுதான்
மேவு வானும் பெரிதலங்கள்
கனமாம் வேத மறியாதான்
கபடு மில்லான் கடுநடையன்
அணையும் பாரி ஒன்றேயாம்
அருள்வோம் சுதர்கள் பலமதனை.

8. பணம் சேரும். பிற்காலத்தில் சுகமடைவான். பூமிகளைச் சேர்ப்பான். அவன் தனத்தைச் செலவழிப்பான். ஒருவருக்கும் கெடுதலை எண்ணமாட்டான். பெரிய புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்வான். வேதம் ஓதாதவன். நெஞ்சில் கபடமில்லாதவன். வேகமாக நடப்பவன். அவனுக்கு (ஜாதகனின் தமையனுக்கு) மனைவி ஒருத்திதான். அவனுடைய புத்திர பாவத்தைக் கூறுவோம்.

9. கன்னிகை அளவாய் நான்குறுமே
காளை பின்னல் தாமொருவன்
பின்னல் கன்னி ஒன்றேயாம்
பேசும் பின்பால் சேதிதனை
அன்னேன் வயது தீர்க்கமுறும்
அன்னையைக் காப்பன் வறுமையிலான்
பின்னேன் தன்னைப் பிரிதல்செய்வன்
பெரிதாய்க் குடும்பம் பின்பெறுவன்.

9. அவனுக்கு நான்கு பெண்கள் பிறப்பார்கள். மூன்று பெண்களுக்குப் பிறகு ஒரு பிள்ளை பிறப்பான். அவனுக்குப் பிறகு ஒரு பெண். ஆக நான்கு பெண்கள். ஒரு பிள்ளை. இவர்களைபற்றிய செய்திகளைப் பின் பாகத்தில் தெரிவிப்போம். அவனுடைய (ஜாதகன் அண்ணனுடைய) வயது தீர்க்கமாகும். தன் அன்னையை நன்ருகக் காப்பான். வறுமை இல்லாதவன். அவன் ஜாதகனைத் தனியாகப் பிரிந்து வாழும்படி செய்வான். அவனுடைய குடும்பம் மிகப் பெரியதாக விளங்கும்.

10. ஆரு ருண்டில் பாலனுக்கு
அனுகும மணங்கள் உள்ளூரில்
பாரி குணத்தைத் தான்சொல்வேன்
பதரில் செல்லாள் பணிசேர்ப்பள்
மாரன் மனத்துக் கேத்தவளாம்
மகிழ உரைப்பள் உணச்சலுள்ளாள்
வேறு நடக்கை யில்லாதாள்
மேலோர் பக்தி கொண்டிடுவள்.

10. ஜாதகனுக்கு முப்பத்தாறுவது வயதில் மணம் நடக்கும். அதுவும் தன் சொந்த ஊரிலேயே நடைபெறும். ஜாதகனுடைய மனைவியின் குணத்தைக் கூறுகின்றோம். சண்டையில் ஈடுபடாதவள். அதிக ஆபரணங்களை அடைவாள். ஜாதகனுடைய மனத்தின்படியே நடந்து கொள்வாள், எல்லோரும் மகிழும்படி பேச வல்லவள். மெலிந்த சரீரம் உடையவள். தீயகுணம் இல்லாதவள். தெய்வ பக்தி பூண்டவள்.

11. பால்பாக் கியம்தா னுடையவளாம்
பணிந்தோர் தம்மைக் காத்திடுவள்
சீல முடையாள் தெய்வ பக்தி
தீர்க்க வயது தான்பெறுவள்
சால பராசர் தாம்சொல்வார்
தார மிரண்டு தான்புகல்வோம்
வல்லி யிரண்டு வருவதென்றீர்
விளம்பு வீர்கள் அச்சங்கை.

11. பால் பாக்கியம் உடையவள். பணிந்தவர்களைக் காப்பாள். நற்சீல முடையவள். தெய்வ பக்தி பூண்டவள். தீர்க்காயுர்யோகமுள்ளவள். இவ்வாறு பலனைக் கேட்டவுடன் பராசார முனிவர் கூறுகின்றார். இவனுக்கு இரு களத்திரம் என்று சொல்வோம். அதற்கான காரணங்கள் என்ன என்று பிருகு ரிஷி கேட்க, பராசரர் காரணம் கூறுகின்றார்.

வேறு

12. சனியவ னேழோ னுகிச் சரத்தினில் தனியாய் நிற்க
வனிதை யிருவ ரென்றோம் மாமுனி தடுத்துச் சொல்வார்
கனமுள மதியும் ரண்டில் கவிமகன் ஜன்மம் தங்க
அனையவே பாரி ஒன்று அறைகிறோம் தீர்க்க மாக.

12. சனி ஏழாம் பாவத்திற்கு உடையவனுகி "சர" ராசியாகிய துலாத்தில் இருப்பதால் இவனுக்கு மனைவிகள் இருவர் என்று சொல்லவேண்டும், பிருகு முனிவர் தடுத்துக்கூறினர். இலக்கினதிபதியான சந்திரன் குடும்ப ஸ்தானத்திலும், சுக்கிரன் இலக்கினத்திலும் இருப்பதால் இவனுக்கு மனைவி ஒருத்தி தான். அவளும் தீர்க்காயுளுடன் வாழ்வாள்.

வேறு

13. இதற்குநே ரிடையாய் ஜாதக சுருதி
யிதில் ஏழாம் பாவத்தில் பாராய்
அதில் சொல்லும் விபரம் இரண்டேழோன் கேந்திர
மாகினும் கோணத்தி லிருக்க
அதிபதி ஒன்றே வரைந்தனம் தீர்க்கம்
வரைகிறோம் சங்கைக ளொன்று
சதியாகு மிருபத் தெட்டாண்டுள் நடக்கில்
சாற்றின மொழி குன்றுது.

13. இதற்கு ஆதாரமாக சோதிட சாஸ்திரத்தில் ஏழாம்பாவத்தைப் பார்ப்பீர்களாக. இரண்டுக்கும் ஏழுக்கும் உடையவன் கேந்திரத்திலோ திரிகோணத்திலோ தங்கினல் ஜாதகனுக்கு ஒரே மனைவிதான். அவளும் தீர்க்கமாக வாழ்வாள். ஆனல் இவனுக்கு இருபத்தெட்டாவது வயதில் ஒரு மாது அபிமான மனைவியாகச் சேரலாம். நாங்கள் சொன்னமொழி குன்றுது.

வேறு.

14. புத்திர விருத்தி புகலுவோ மினிமேல்
பிறந்திடும் பஞ்சமி யாக
சுத்தமா யாண்பால் இரண்டென தீர்க்கம்
தோகையும் அவ்வித மாகும்
வித்தகன் பூர்வம் விளம்புவோ மினிமேல்
வேலன்வாழ் உடுக்கைமா நகரில்
சித்தசன் போலே கங்கையின் குலத்தில்
ஜனித்துமே கிருஷிகள் செய்தான்.

14. இனி புத்திரபாவத்தைக் கூறுவோம். இவனுக்கு ஐந்து குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் இரு ஆண்களும் இரு பெண்களும் தீர்க்கமாக வாழ்வார்கள். ஜாதகனின் பூர்வ ஜன்மத்தைப்பற்றி விளம்புவோம். இவன் முற்பிறவியில் சுப்பிரமணிய சுவாமி வாசம் செய்யும் உடுக்கை நகரில் வேளாள குலத்தில் மன்மதன்போல் அழகுள்ளவனுகப் பிறந்திருந்தான். விவசாயம் செய்துவந்தான்.

வேறு.

15. [1] கிராமாதி காரம் செய்து கௌரவ குடும்பி யாகி
மாரனு வாழு நாளில் மருவிய வினையைக் கேண்மோ
காரிழை விதவை மாது கணவனு மின்றி யேதான்
தீரமா யன்னை யில்லம் சேர்ந்துமே வாழு நாளில்.

15. கிராம ஆட்சி முதலிய உத்தியோகம் செய்து இவன் பெருமை வாய்ந்த குடும்பமுள்ளவனுக வாழும் நாளில் இவனுக்கேற்பட்ட வினையைக் கூறுகின்றோம். அவ்வூரில் ஒரு பெண் கணவனை இழந்து தன் தாய்வீட்டில் வசித்துவந்தாள்.

16. அன்னவன் அவள்மேல் மோகம் அற்புத வார்த்தை சொல்லக்
கன்னிகை இசையா ளாகிக் கார்க்கோடன் போலே சீறப்
பின்னேயும் ஓர்நாள் தன்னில் பேதையும் தனியாய்ச் செல்ல
அன்னவள் பின்னுல் சென்று அரிவையைப் பலவந் தத்தால் ;

16. இவன் அதருமமாக அவள்மேல் மோகங்கொண்டு அவளிடம் நயமான வார்த்தைகளைப் பேசினுன். இவைகளைக் கேட்ட அந்தப் பெண் பாம்புபோல் சீறினள். வேறு ஒரு சமயத்தில் அவள் தனிமையில் போய்க் கொண்டிருக்கும்போது இவன் அவளைப் பின் தொடர்ந்து சென்று ;

[1] கிராமாதிகாரம், கிராம நாட்டாண்மை, மணியம், கர்ணம் முதலியன.

17. போகமே செய்யும் போது பேதையும் திகில டைந்து
வேகமா யில்லம் சென்று விளம்பினுள் துணைவ ரோடு
நாகம்போல் கோப முற்று நவின்றனர் அதிகாரி பக்கல்
தோகையின் வார்த்தை கேட்டு தடுக்குகள் செய்தோன் தன்னே ;

17. தன் விருப்பத்தை நிறைவேற்றிக்கொண்டான். அந்தப்பெண் பய மடைந்தவளாகவும் வருத்தமுற்றவளாகவும் தன் வீட்டிற்குச் சென்றுத் தன் சகோதரர்களிடம் சொல்ல, அவர்கள் இதைக் கேட்டு நாகம்போல் சீறி, அதிகாரிகளிடம் இவ்விஷயத்தைத் தெரிவித்தார்கள். அவ் வதிகாரி, அந்தப் பெண்ணேயும், தகாத காரியம் செய்த இவனேயும் ;

18. வினவவும் அவன்பால் தன்னில் வெள்ளியும் பெற்றுக் கொண்டு
வனிதைமேல் விரோதம் சொல்ல மாதுவும் திகில டைந்து
துணைவிபோலே என்னைஎண்ணுமல் சொர்ணத்தால் சொன்ன [பாவி
இனிவரும் ஜன்மம் தன்னில் இடக்காலு மூன மாகும்.

18. விசாரித்துவிட்டு, இவனிடம் வெள்ளியைப் பெற்றுக்கொண்டு இவனுக்கு அனுகூலமாகவும், அந்தப்பெண்ணிற்கு பிரதிகூலமாகவும் தீர்ப்பளித்தான். ஆகையால் வருத்தமடைந்த அந்தப் பெண் சொல்ல லானுள். தங்கையைப்போல் என்னை எண்ணுமல் பணத்தைக்கொடுத்து நியாயத்தைவாங்கிய பாவியாகிய உனக்கு மறு ஜன்மத்தில் இடதுகாலில் ஊனம் ஏற்படும்.

19. எனைப்போலே துணைப்பெண் ணின்றி ஏகுவாய் வெளிதே சத்தில்
பிணையாகும் துணைவர் மாதா பேதையும் பலவாறு சொல்லி
மேதினி லுதிப்பா ளுகும் மேவிடும் மாது சாபம்
காதலி துணைப்பெண் காணுன் கனமிலாக் குடும்பம் பூர்வம்.

19. சகோதரி அற்றவனுக இருப்பாய். வெளி தேசங்களில் பரதேசிகளைப் போல் திரிவாய். சகோதரனும் தாயும்கூட உனக்குப் பகைவர்களாவார் கள் என்று பலவாறு சொல்லிச் சென்றுள். அந்தச் சாபம் இவனைப் பிடித்துக்கொண்டது. ஆகையினுல்தான் இவனுக்குச் சகோதரி இல்லை. முன்பு சிறுமையுற்ற குடும்பம் உள்ளவனுகவும் ஆனுன்.

20. சிலதுநாள் வனவா சங்கள் செய்வனு மிடக்கா லூனம்
நலமுள பராசர் கேள்வி நாயகன் முன்ஜன் மத்தில்
தலமதி லுயர்வ தான சேதுவிற் சென்ற புண்யம்
விலகாதோ அந்தச் சாபம் விதவையும் திகில டைந்து.

20. அவள் சாபத்தின்படி சிலகாலம் வனவாசம் போன்று தனியனுகப் பலதேசங்களில் ஆதரிப்பாரின்றித் திரிந்தான். இடது காலில் ஊனமும் உண்டு. பராசா மஹரிஷி சொன்னுர் :—இவன் பூலோகத்தில் சிறந்த க்ஷேத்திரமான சேதுவில் நீராடி இருக்கின்றுனே ! ஆகையால் முன் ஜன்ம வினை தீராதோ ! சொல்லும்.

21. செப்பின சாபம் நீங்கா தேறின குலம் எவ்வாறு
ஒப்புடன் உதித்த சேதி உரைப்பீர்கள் முனிவ ரேநீர்
மெய்ப்புடன் சேது புண்யம் மேன்மையாய்க் குலமே யாகும்
தப்பிதம் தப்பி தம்தான் சங்கரி கேட்டி டாயே.

21. மேலும் அவ்வாறு சேது ஸ்நானத்தினுல் வினை நீங்கி இராவிடின், முற்பிறவியில் வேளாள குலத்தில் பிறந்திருந்த இவன், இப்பிறவியில் உயர் குலத்தில் எவ்வாறு உதித்திருக்கின்றுன் ? ஆகையால் அப்பாவம் சேது நீராட்டத்தால் நீங்கி இருக்கும். பிருகு மஹரிஷி இவ்விஷயத்தைத் தெளிவாக விளக்கினுர். தருமத்திற்குப் பலன் வேறு. அதருமத்திற்குத் தனியே வேறு பலன். இதுதான் நியதி. செய்த தருமம் அதருமத்தின் பலனை வராதபடி தடுக்காது. தருமத்தின் பயனும் தனியாக வந்தேதீரும். அதருமத்தின் வினேவும் தனியேவரும். ஆதலால் சேதுஸ்நான தருமத் தின் பலன் உயர்குலப் பிறப்பு. செய்த அதருமத்தின் பலன் கால் ஊனம் முதலியவை.

குறிப்பு.—இத்தரும ஸூக்ஷ்மத்தை, ஸ்ரீமத் ராமாயணம், சுந்தர காண்டத்தில் ஹனுமான் ராவணனுக்கு உபதேசம் செய்யும் சர்க்கத்தில் காணலாம்.

22. மாதுவின் குணத்தைச் சொல்வேன் மாநிறம் உணச்சல் தேகி
தீதிலா குணத்தா ளாகும் தீங்கதை ஒருவர்க் கெண்ணுள்
காதலி அடக்க வார்த்தை காகுத்தன் பக்தி பூண்டு
வேதனை யொருவர்க் கெண்ணுள் வீண்பழி யில்லா ளாகும்.

22. இனி ஜாதகனின் தாய்க்குணத்தைக் கூறுவேன். மாநிறமுளள்வள். மெலிந்த சரீரம் உள்ளவள். வணக்கம் தோன்றும் வார்த்தைகளையே பேசுவாள். கெட்ட குணம் சிறிதும் இல்லாதவள். ஸ்ரீராமபிரானிடம் விசேஷ பக்தி பூண்டவள். ஒருவருக்கும் கெடுதலே எண்ணுதவள். யாரா லும் நிந்திக்கப்படாதவளாகவும் இருப்பாள்.

23. தன்துணை ஆண்பால் ரண்டு தங்கிடும் கன்னி ஒன்று
சொன்னஆண் ஒன்று மட்டும் சோர்வுறும் என்று சொல்வோம்
அன்னவன் குடும்ப லேச்சல் அறைகிரேம் தாய்முன் ஜன்மம்
பொன்முகரி யாற்றி னேரம் பிறந்தனள் சுந்தரி சேயாய்.

23. அவளுக்கு இரு சகோதரர்கள். ஒரு சகோதரி. அவர்களில் ஒரு சகோதரன் சிறிதுகாலமே வாழ்வான். சகோதரனுடைய குடும்பம் அல்லல்படும். இவளுடைய முன்ஜன்மமதைக் கூறுகின்றேம். பொன் முகரி (ஸ்வர்ணமுகி) நதிக்குச் சமீபத்திலுள்ள ஓர் ஊரில் பிறந்திருந்தாள்.

24. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரி வாழ்ந்து மேதான்
ஜகமதி லுயர்வ தான சேதுவின் பதிக்குச் சென்று
மிகுதவம் புரிவோருக்கு வித்தகி தொண்டு பூண்டு
பகையான கால ளுடு பரவியே பிரமன் லக்கம்.

24. நல்ல சுகம் உள்ள குடும்பியாகி உலகில் சிரேஷ்டமான சேதுவிற்குச் சென்று அங்கு எழுந்தருளி இருக்கும் தவசிகளுக்குத் தொண்டுசெய்து கடைசியாக அந்தியகாலத்தில் யமனுலகம் சென்றுள்.

25. வந்தவ ளென்று சொல்வோம் வரைகிறேம் இவள் பின் ஜன்மம்
முந்திய [1] கூடல் தன்னில் உதிப்பளா மிக்கு லத்தில்
தந்தையின் பூர்வம் சொல்வேன் தாம்பிர பர்ணி தன்னில்
வந்தவன் வன்னிய சேயாய் மறையவர் க்ருஷி செய்து ;

25. அவள்தான் இங்குப் படைக்கப்பட்டிருக்கிருள். இவளுடைய பின் ஜன்மத்தைப் பற்றியும் கூறுகின்றேம். முக்கூடல் என்ற க்ஷேத்திரத்தில் இதே ஜாதியில் பிறப்பாள். தந்தையின் பூர்வஜன்மத்தைச் சொல்வேன். இவன் முன்ஜன்மத்தில் தாம்பிரபர்ணி நதிக்கரையில் ஓர் ஊரில் வன்னிய குலத்தில் பிறந்து அந்தணர்களுக்காக விவசாயம் செய்து ;

26. பாரியும் மதலே யுண்டாய்ப் பகரமாம் குடும்பி யாகித்
தீரனு வாழு நாளில் செய்ததோர் வினையைக் கேண்மோ
காரிழை ஒருத்தி தன்மேல் காணுத வார்த்தை சொல்ல
நேரிழை வருத்த முற்று நுகர்ந்தசா பத்தை கேண்மோ.

26. மனைவி மக்களுடன் பெரிய குடும்பியாகி வாழு நாளில் இவனுக்கேற் பட்ட வினையைக் கேளுங்கள். ஒரு பெண்ணின் மேல் அபாண்டமான பழியைச் சொன்னுன். ஆகையால் அவள் வருத்தமுற்றுச் சொன்ன சாபத்தைக் கேட்பீராக.

27. பெண்பழி சொன்ன பாவி பிறக்கும்பின் ஜன்மம் தன்னில்
அண்ணன்தம் பிகளு மின்றி அழகான குடும்பி யாகி
வண்ணமாய்ப் புத்திரி யின்றி வாழ்குவாய் மறுஜன் மத்தில்
திண்மையாய்ச் சொல்லும் போது சேர்ந்தது அந்தச் சாபம்.

27. நிரபராதியான ஒரு பெண்ணின்மேல் நீ வீணுகப் பழியைச் சொன்னதால் மறுபிறவியில் அண்ணன் தம்பிகளின்றியும், பெண் இல்லாமலும் நீ வாழ்ந்திடுவாய். அந்தச் சாபம் இவனே வந்தடைந்தது.

28. இன்னமும் பலவாறு சொன்னுள் எய்திற்று அந்தச் சாபம்
மன்னவ னந்தி யத்தில் மஹாதலம் சேது சென்று
துன்மையாய்க் கால ஞெடு சேர்ந்துமே பிரமன் லக்கம்
முன்குல முதித்தா னென்றேம் வசிஷ்டரும் புகலு கின்றுர்.

28. இன்னும் பல வார்த்தைகள் சொன்னுள். அவைகள் எல்லாம் இவனுக்கு ஏற்பட்டிருக்கின்றன. அந்த ஜன்மத்தில் அந்தியத்தில் உலகிலேயே மிகப் பெரிய புண்ணியஸ்தலமாகிய சேதுவிற்குச் சென்று நீராடினுன். பிறகு காலக்கிரமத்தில் இறந்த இவன், பிரம்ம தேவனுல் இப் பிராம்மண ஜாதியில் பிறப்பிக்கப்பட்டிருக்கிறுன். இதைக் கேட்டவுடன் வசிஷ்டர் சொல்லுகின்றுர்.

[1] முக்கூடல் என்றும் திருமுக்கூடல் என்றும் இந்த விஷ்ணு க்ஷேத்திரத்தைக் கூறுவார்கள். இது காஞ்சிக்கு அருகிலுள்ளது.

29. வன்னிய குலமு தித்தோன் மருவுமிச் சென்மம் தன்னில்
முன்குல முதித்த வண்ணம் மொழிகுவீர் முனியே நீர் தாம்
மன்னிய சேது புண்ணியம் மருவிய புண்ணி யத்தால்
தன்மறை குலமு தித்தான் செப்புவோம் இவன்பின் ஜன்மம்.

29. முற்பிறவியில் வன்னிய குலத்தில் பிறந்த இவன் இப்பொழுது பிராம்மண ஜாதியில் பிறக்கக் காரணம் யாது? பிருகு முனிவர் கூறு கின்றுர். முன் பிறவியில் அந்திய காலத்தில் பெருமை வாய்ந்த சேதுவிற்கு சென்று நீராடிய புண்ணியத்தால் இவன் வேதமோதும் அந்தணர் வமிசத்தில் பிறந்தான். இவனுடைய பின் பிறவியையும் கூறுகிறேம்.

30. வடதிசை பிரயாகை தன்னில் மருவுவான் இக்கு லத்தில்
திடமுள குடும்பி யாகிச் செல்வனும் வாழ்வா னுகும்
அடவுள பத்தா யாண்டுள் அந்தகன் நாட்டைச் சேர்வன்
தடவரை மகளே யாங்கள் சாற்றிய மொழிகுன் ருது.

30. வடதிசையில் உள்ள பிரயாகை க்ஷேத்திரத்தில் இதே ஜாதியில் பிறப்பான். சிறப்பான குடும்பியாகி வாழ்வான். ஆனுல் குடும்பியான பத்தாவது ஆண்டுக்குள் யமனுலகம் அடைவான். பர்வதராஜ புத்திரியே ! நாங்கள் சொன்ன மொழி தவருது.

31. எண்ணஞ்சு ஒன்று ஆண்டில் ஏகுவாள் அன்னே தாமும்
திண்ணமாய் ஜாத கர்க்குச் செப்புவோம் எழுப தாண்டில்
வண்ணமாய் மீன மாதம் வரைகிறேம் துதியை தன்னில்
கண்ணன்தன் பட்சம் தன்னில் காவலன் மறிப்பா னுகும்.
(அண்ணலே பூசை செய்யு மம்பிகை யாளே கேளாய்.)

31. இப்பொழுது ஜாதகனுடைய தாயின் மரணகாலத்தைக் கூறு கின்றேம். இவனுடைய நாற்பத்தொன்றுவது வயதில் தாய் மரண மாவாள். ஜாதகன், தனது எழுபதாவது வயதில் பங்குனி மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் த்விதியை திதியில் மரணமடைவான். சிவபிரானே வழிபடும் தேவியே ! மேலும் கேளுங்கள்.

32. மறுஜன்மம் துவாரை தன்னில் வருவனு மிக்கு லத்தில்
குறுமுனி தடுத்துச் சொல்வார் குமரனு மிக்கு லத்தில்
பெருமன்னே பகையு மாயும் பகவானின் பக்தி யின்றிப்
பொருளது ஆசை யாயும் பூமியில் வாழ்வ தாலே ;

32. ஜாதகன் மறு ஜன்மத்தில் துவாரகையில் பிராம்மண ஜாதியிலேயே பிறப்பான். அகஸ்தியர் தடுத்துக் கூறினுர். ஜாதகன் இச் சென்மத்தில் அன்னேயிடத்தில் பகைமை கொண்டும், கடவுளிடம் பக்தியின்றியும் பொருள்களில் பேராசை படைத்தவனுகவும் வாழ்வதால் ;

33. எப்படி உதிப்பான் சொல்வாய் இடரென்றோர்க் குதவி செய்தும்
ஒப்புடன் தலங்கள் சென்று முத்தமன் வாழ்வ தாலே
மெய்ப்புடன் உதிப்பா னுரும் விளம்புவோம் தாயே கேளு.
(ஈற்றடி காணப்படவில்லை.)

33. எவ்வாறு பிராம்மண சாதியில் பிறப்பான்? பிருகு முனிவர் பதில் உரைக்கின்றார். இடர்ப்பட்டவர்களுக்கு உதவி செய்தமையாலும் பெரிய புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்றமையாலும் இவன் மறு ஜன்மத்தில் உயர்குலத்தில் நிச்சயமாகப் பிறப்பான்.

34. வந்தவன் யோகச் சேதி வரைகிறோம் தாயே கேளும்
சொந்தமாய்ப் முப்பான் ரண்டில் செப்புவோ மில்லம் வேறு
பிந்தியு நாற்ப தாண்டில் புரப்பனும் இல்லம் தானும்
சொந்தமாய்ப் பூமி சேர்ப்பன் தொல்புவி வறுமை காணன்.

34. இவ்வாறு கடகலக்கினத்தில் உதித்திருக்கும் பாலகனது யோகச் செய்திகளைக் கூறுகின்றோம். அன்னையே! கேட்பீராக. முப்பத்தி இரண்டாவது வயதில் இவன் சொந்தமாக வீடு கட்டுவான். பிறகு நாற்பதாவது வயதில் அந்த வீட்டை விற்றுவிடுவான். தனது முயற்சிகளால் பூமிகளைச் சேர்ப்பான். வறுமையால் கஷ்டப்படமாட்டான். [முப்பத்தி ரண்டாவது வயதிற்குப் பின் வறுமை இல்லாதவன் எனக் கருத வேண்டும்.]

35. நாற்பது ஆண்டு மேலாய் நல்கிடும் பூமி தானும்
ஏற்கவே நாற்பா லுலில் எய்திடு நிதிநிட் சேபம்
ஆர்க்கவே குடும்ப மேன்மை அணுகிடும் வேறே ராஸ்தி
தீர்ப்பாகப் பின்பா கத்தில் செப்புவோம் தாயே கேளும்.

35. நாற்பதாவது வயதிற்கு மேல் இன்னும் அதிக பூமிகள் சேரும். நாற்பத்து நாலாவது வயதில் புதையல் இவனுக்குக் கிடைத்திடும்; இவனது குடும்பம் மேன்மையை அடையும். வேறு ஒரு சொத்தும் இவனைச் சேரும். அது யாருடைய சொத்து? எவ்வாறு இவனை வந்தடையும்? என்ற விவரங்களைப் பின் பாகத்தில் சொல்லப் போகின்றோம்.

36. இன்னமும் விபர மாக இயம்புவோம் பின்பா கத்தில்
அன்னவன் ஜனன காலம் அசுரர்மந் திரியி லேதான்
உன்னத ஆண்டு நாலும் உரைக்கிறோம் திங்கள் நாலும்
பன்னுவோம் பலனை யாங்கள் பார்வதி கேட்டி டாயே.

36. இவனுடைய மற்றைய செய்திகளையும் இரண்டாம் பாகத்தில் தான் கூறப்போகின்றோம். தசை இருப்பைத் தெரிவிக்கின்றோம். இவன் பூர நக்ஷத்திரம் நான்காம் பாதத்தில் ஜனித்திருக்கின்றான். ஆகவே அசுரர்களுக்கு மந்திரியான சுக்கிர தசையில் இருப்பு வருஷங்கள் நான்கு, மாதங்கள் நான்கு. இத்தசையின் பலன்களை (பின் பாகத்தில்) கூறுவோம். பார்வதி தேவியே! மேலும் எங்களைக் கேட்டருளவேண்டும்.

ஜாதகம் 30.

1. கலையது கன்னி யாகக் கரும்பாம்பு புதனும் சீயம்
நிலமகன் தேள தாக நீத்தோனும் காரி சாடி
குலகுரு நந்தி யாகக் குருடனும் வீணை யாகத்
தலமது கடக மாகச் செங்கதிர் ஜன்மம் தங்க;

		குரு	சுக்கிரன்
கேது சனி	இராசி	சக்கரம்	லக்கினம் சூரியன்
			ராகு புதன்
	செவ்வாய்		சந்திரன்

1. விசுவாவசு வருஷம் ஆடிமாதம் 20–ஆந்தேதி வெள்ளிக்கிழமை இரவு 26 நாழிகைக்குமேல் ஜனனம். ஆங்கிலத் தேதி 4–8–1905. ஆயில்யம் 1-ல் சூரியன். உத்திரம் 4–இல் சந்திரன். விசாகம் 3–இல் செவ்வாய் பூரம் 1–இல் புதன். ரோஹிணி 1–இல் குரு. மிருகசீர்ஷம் 4-இல் சுக்கிரன். சதயம் 1-இல் சனி வக்ரீ. மகம் 3–இல் ராஹு. சதயம் 1–இல் கேது. நக்ஷத்திரம் உத்திரம். சூரிய தசையில் இருப்பு மாதங்கள் எட்டு.

குறிப்பு.—இந்நூலாசிரியர் கருத்தின்படி விசாகம் நான்கில் செவ்வாய். சந்திரன் கன்னி, ராகு புதன் சிங்கம், செவ்வாய் விருச்சிகம், கேது சனி கும்பம், குரு விருஷபம், சுக்கிரன் மிதுனம். இலக்கினம் கடகம். கடகத்தில் சூரியன்.

2. பலனைதைப் புகலு மென்று பார்வதி கேட்கும் போது
நலமுள வசிஷ்டர் சொல்வர் நாயகன் ஜனன மாகும்
தலமது கீழ்மேல் வீதி சண்டன்தன் வாச லாகும்
நலமிலாச் சிறுவூ ராகும் நற்றெதிர் இல்ல மில்லை.

2. இக்கிரஹ நிலையின் பலனைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி தேவி கேட்கும்போது, வசிஷ்டர் பலன்களைக் கூறுகின்றார். இந்தக்கிரஹ நிலையில் ஜனித்தக் குழந்தை ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந் திருக்கும். வீடு தெற்கு நோக்கி இருக்கும். இவன் ஜனித்த வீட்டிற்கு எதிரில் வீடு இராது. அது மிகச்சிறிய ஊராகும்.

3. மாரியும் தந்தி மேல்பால் மாகாளி தென்மே லாகும்
கூறிய அடையா ளங்கள் குறித்தனம் தந்தை யில்லம்
பாரினில் குடும்பச் சேதி பகருவோ மிந்நூல் தன்னில்
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

3. மேற்குத்திசையில் மாரியம்மனும் விநாயகரும் வீற்றிருப்பார்கள். தென்மேற்குத்திசையில் பத்திரகாளி கோயில் உண்டு. இத்தகைய அடையாள முள்ள ஊரில் ஜனித்திருப்பான். ஆறுமுகனைப் பெற்றதாயே! இந்நூலில் அவனுடைய குடும்ப வரலாறுகளையும் யோகம் முதலியவைகளையும் கூறுகின்றோம். கேட்பீராக.

4. தந்தையின் துணைஆண் ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாக
முந்தின துணைவ ராக மொழிகிறோம் தாயே கேளும்
அந்தவன் சேதி சொல்வேன் யானையின் ஒத்த தேகம்
சுந்தர முடைய னாகும் சோம்பிடான் காரி யத்தில்.

4. ஜாதகனின் தந்தைக்கு ஒரு சகோதரன்தான். அவனும் மூத்தவனாக இருப்பான். அந்தச் சகோதரனுடைய செய்திகளைக் கூறுவேன். யானை போல் மிகவும் பருத்த சரீரம் வாய்ந்தவன். ஆயினும் அழகுள்ளவன். காரியத்தைச் செய்வதில் சோம்பல் இல்லாதவன். உத்ஸாஹம் உடையவன்.

5. மனமது கபடு கொஞ்சம் மாநிலம் அதிகம் சேர்ப்பன்
இனமது மெச்ச வாழ்வன் இல்லமும் சித்திரம் செய்வன்
நினைவதை முடிப்பா னாகும் நேத்திரம் சாயல் கொஞ்சம்
சினமுண்டு வெளிக்காட் டதான் சேயிழை சொல்தட் டாதான்.

5. மனத்தில் கொஞ்சம் கபடமுடையவன். நிலங்களை அதிகமாகச் சேர்ப்பான். தன் சாதியார் கொண்டாடும்படி வாழ்க்கையை நடத்துவான். அழகியதொரு வீடு கட்டுவான். தான் நினைத்தக் காரியத்தைச் செய்து முடிக்கும் ஆற்றல் படைத்தவன். சிறிது சாய்ந்த கண் பார்வை உடையவன். அடிக்கடி கோபம் வரும். ஆனால் வெளியில் காட்டாதவன். தன்மனைவியின் சொற்படியே நடப்பான்.

6. ஊகைவான் நுணுக்கம் தேர்வன் உபாயமாய் வார்த்தை சொல்லான்
ஆகம மறிவா னாகும் அடாவடி கொஞ்ச முண்டு
தோகையு மொன்றே தீர்க்கம் சுதராண்பா லொருவ னென்றோம்
போகபாக் கியங்க ளுள்ளான் பிரிதல் சேர்ப்பானு மில்லம்.

6. சிறந்த மதியூகி. சாஸ்திரங்களின் நுணுக்கங்களை [சூக்ஷ்மங்களை] அறிந்தவன். பேசும் திறமை அதிகம் வாய்க்கப் பெற்றவன் அல்லன். ஆகமத்தை அறிந்தவன். சிற்சில சமயங்களில் விதண்டா வாதமும் செய்வான். களத்திர தோஷம் இல்லாதவன். ஆகையால் மனைவி ஒருத்திதான். ஒரு புத்திரனுண்டு. வாழ்க்கையில் சுகத்தைத் தருவதும் சௌகர்யத்தை உண்டு பண்ணுவதுமாகிய விதவிதமான பொருள்களை அடைவான். குடும்பப் பிரிவினைக்குப் பிறகு ஒரு வீட்டை நிர்மாணம் செய்வான்.

7. மூலச் சூ டுடைய னாகும் முண்டக ரேகை யுண்டு
சீலம்போல் வெளிம யக்கம் சிந்தையு மிரண்டு முண்டு
மாலின்மேல் பக்தி கொள்வன் மாத்தானை லகுவில் வெல்வன்
காலநா டதனைச் சேர்வன் கலைதசை தன்னி லேதான்.

7. மூலச்சூடு உடையவன். கையில் கமல ரேகை விளங்கும். தான் நல்ல சீலம் உள்ளவன் போல் உலகத்தோர்க்குத் தோற்ற மளிப்பான். [ஆனால் உண்மையில் சீலமில்லாதவன் என்பது கருத்து.] மனத்தினால் ஒன்றை எண்ணி வாயினால் ஒன்றைப் பேசுவான். திருமாலிடம் பக்தி பூண்டவன். எதிரிகளைச் சுலபமாக ஜயிப்பான். ஜாதகனுக்குச் சந்திர தசை நடைபெறும் போது இவன் (ஜாதகனின் பெரிய தந்தை) மரணமாவான்.

8. தந்தையின் சேதி சொல்வேன் தந்தமும் தரளம் தேய்வு
தந்தைசொல் கடவா னாகும் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
தந்திபோ லொத்த தேகன் சரசமாய் வார்த்தை யுண்டு
தன்பந்து மதிக்க உய்வன் தைரிய மில்லா நெஞ்சம்.

8. இனி, ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுவோம். இவனுடைய பற்கள் முத்துப்போல் பிரகாசிக்கும். சிறிது தேய்வுற்றிருக்கும். தந்தையின் உத்தரவை மீறமாட்டான். கால்நடைகளை அபிவிருத்தி செய்வான். யானைபோல் பருத்த சரீரம் வாய்ந்தவன். ரசமாகப் பேச வல்லவன். தன் உறவினர் மெச்சும் வகையில் சிறப்புடன் வாழ்வான். பயந்த சுபாவம் உள்ளவன்.

9. மாரியால் வடுவு மேற்பன் வாததே கத்தா னாகும்
பாரது விருத்தி செய்வன் பாரபட் சங்கள் பேசான்
பேரது கிராம பூமி வீடும் சல்லியம் காணன்
போர்தன்னில் செல்லா னாகும் புண்ணிய மனத்தா னாகும்.

9. அம்மையினால் முகத்தில் சில அடையாளங்கள் ஏற்பட்டிருக்கும். வாததேகம் வாய்ந்தவன். நிலங்களை அபிவிருத்தி செய்வான். பக்ஷபாதமின்றி நியாயங்களைப் பேசுவான். அதிக நிலங்களைச் சேர்ப்பான். பெரிய வீட்டை நிர்மாணிப்பன். கடன் இல்லாதவன். சண்டைச்சச்சரவுகளில் ஈடுபடான். புண்ணிய மனம் படைத்தவன்.

10. இருவிழி ஊன முண்டு யாரையும் வசியம் கொள்வன்
பெருமையும் புகழு முண்டு போஜன வறுமை காணன்
திருமாலி செய்வா னாகும் ஜனஉப காரி யாகும்
அரிபோல கோப முண்டு அடைந்தோரை ஆத ரிப்பன்.

10. இருவிழிகளிலும் ஊனம் இருக்கும். உதாசீனமாக இருப்பவர்களையும் வசியம் செய்வான். பெருமையும் நற்கீர்த்தியும் இவனுக்கேற்படும். ஆகார சௌக்கிய முள்ளவன். அழகிய புதியதொரு வீடு கட்டுவன். ஜனங்களுக்கு உதவி புரிவான். சிங்கம் போல் சினமுள்ளவன். தன்னை அண்டியவர்களை ஆதரிப்பான்.

11. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறேம் கொங்கு நாட்டில்
வன்னிய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாகி
அந்நகர் மாரி கோஷ்டம் அர்ச்சக னுகி யின்னேன்
தன்னிலே வாழு நாளில் சார்ந்ததோர் வினையைக் கேண்மோ.

11. முற்பிறவியில் இவன் கொங்கு நாட்டில் வன்னிய குலத்தில் உதித்திருந்தான். மனைவி மக்களுடன் சுகமாக வாழும் நாளில், அந்த ஊரில் மாரியம்மன் கோயில் பூசை செய்யும் தொழிலையும் ஏற்றுக் கொண்டான். அப்பொழுது அவனுக் கேற்பட்ட பாவத்தைக் கூறுகின்றேம். கேளுங்கள்.

12. மாரிக்குச் சிலர்கள் செய்த மலர்களை மோசம் செய்தான்
வேறுஓர் ஆவி நெய்யை விளக்கிற்குத் தந்த போது
சாரியா யில்லம் கொண்டான் சார்ந்தது அது ஓர் தோஷம்
கூறுவோம் வேறு ஒன்று கோதைமே லடாத வார்த்தை ;

12. மாரியம்மனுக்குச் சாத்துவதற்காகப் பக்தர்கள் கொடுத்த நறுமலர்களைத் தேவிக்குச் சமர்ப்பிக்காமல் மோசம் செய்தான். வேறு குற்றமும் செய்தான். ஒரு பக்தன் ஆலயத்தில் தீபம் ஏற்றுவதற்கு நல்ல பசும் நெய்யைக் கொண்டு வந்து கொடுக்க அதை வீட்டிற்கு எடுத்துச் சென்றுன். இஃது இரண்டாவது தோஷம். ஒரு பெண்மேல் தகாத நிந்தனை வார்த்தைகளைச் சொல்ல ;

13. சொல்லவும் இனத்தோர் கேட்டுத் தோகையை விலக்கும் போது
வல்லியும் மனது வாடி வரைந்திட்ட சாபம் கேண்மோ
அல்லல்கள் செய்த பாவி அணுகும்பின் ஜன்மம் தன்னில்
நில்லாது சோதி தானும் நேராது என்னைப் போல.

13. அதைக் கேட்டு "உண்மை' என்று எண்ணிய அவளுடைய உறவினர்கள் அவளை வீட்டைவிட்டு விலக்கினுர்கள். இவ்வாறு தகாத நிந்தனை கூறியது மூன்றும் குற்றம். அப்பொழுது மனம் வருந்திய அவள் சொன்ன சாபத்தைக் கேளுங்கள். எனக்கு அல்லல்களை கொடுத்த பாவியாகிய நீ, மறுஜன்மத்தில் புத்திரப் பேறு அடையமாட்டாய். சகோதரியும் பிறக்கமாட்டாள்.

14. இன்னமும் பலவாறு சொன்னுள் எய்திற்று அந்தச் சாபம்
தென்திசைக் கால னுடு சென்றுமே பிரமன் இலக்கம்
அன்னவ னுதித்தா னென்றேம் அம்மாரி தோஷ மொன்று
கன்னிகை சாப மொன்று கலந்திடு மிச்சென் மத்தில்.

14. வருத்தத்தினுல் இன்னமும் பலவாறு சொன்னுள். அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது. பிறகு அந்திய காலத்தில் யமனுலகம் சென்ற இவன் பிரம்ம தேவனுல் இங்குப் படைக்கப்பட்டிருக்கிறுன். அம் மாரியம்மனுக்குச் செய்த அபசாரமும் அந்தப் பெண் இட்ட சாபமும் இச்ஜன்மத்தில் இவனுக்குப் பலனைக் கொடுக்கும்.

15. நேத்திரம் ஊன மாகும் நிமலிகள் துணைகள் காணுன்
காத்திர குடும்ப மெவ்வாறு கலந்தகா ரணங்க ளெவ்வாறு
மாத்தின ஜன்மம் தன்னில் மாரிக்கு அரிசித்த புண்யம்
நீத்தோர் களுறவு கொண்டும் நிமலனும் வாழ்ந்த தாலே.

15. முற்பிறவியில் கோயில் விளக்கேற்றுவதற்குக் கொடுத்த நெய்யை இவன் உபயோகித்துக் கொண்டதால் இந்தப் பிறவியில் இவனுக்குப் பால்யத்தில் அம்மை கண்டு கண் ஊனமாயிற்று. அப் பெண்ணின் சாபப்படி துணைவியும் இவனுக்கில்லை. தேவி கேட்கலுற்ருள். முப்பிறவியில் பாவங்களைச் செய்த இவன் இப்பிறவியில் எவ்வாறு செல்வம் நிறைந்த பெரிய குடும்பம் உள்ளவனுன ? வசிஷ்டர் கூறுகின்ருர். முற்பிறவியில் அம்மனுக்கு அர்ச்சித்த புண்ணியத்தினுலும் சன்னியாசிகளிடம் பக்தியோடிருந்தாலும் செல்வம் நிறைந்த குடும்பியானுன்.

16. பொறுமையும் வறுமை காணுன் பேசின குணத்தா னுக்குத்
திருமக னுதிப்பா னுகும் செப்புவோ மிவன் குணத்தை
அரிமக னுெப்ப தாகும் அழகிய வார்த்தை கூறுவன்
கரைமனம் கல்வி மானும் காலிகள் விருத்தி யுண்டு.

16. இவன் (ஜாதகனின் தந்தை) பெருமை படைத்தவன். வறுமை இல்லாதவன். நாம் சொன்ன குணமுள்ளவனுக்கு இக் கடக லக்கின மகன் புத்திரனுகப் பிறந்திருக்கிறுன். இனி இவனது குணத்தைக் கூறுவோம். இவன் அழகில் விஷ்ணு புத்திரனுகிய மன்மதனுக்கு ஒப்பாவான். அழகிய வார்த்தைகளைப் பேசுவான். இளகிய மனம் படைத்தவன். கல்வியறிவுடையவன். கால் நடைகள் இவனிடம் விருத்தியடையும்.

17. அன்னிய பாஷை மேன்மை அரசர்பூ சிதமு மாவன்
பொன்பணி சேர்ப்பா னுகும் புகழது ஏற்பா னுகும்
தன்னினத் தவரைக் காப்பான் சாராள்க ளுடைய னுகும்
பின்னமில் லாத தேகி பெரிதான கருமம் செய்வன்.

17. அன்னிய பாஷைகளில் மேன்மையை அடைவான். அரசர்களாலும் கௌரவிக்கப்படுவான். பல சுவர்ண ஆபரணங்களைச் சம்பாதிப்பான். இவனுடைய கீர்த்தி எங்கும் பரவும். தன் இனத்தாரை மிக்க அன்புடன் காப்பான். அதிக வேலையாட்களை உடையவனுவான். ஊனம் இல்லாத உடல் வாய்ந்தவன். அரிய பெரிய காரியங்களை நிறைவேற்றுவான்.

18. உண்டியும் சுகமாய்க் கொள்வன் உவப்பொடு புளிப்பி லிச்சை
வண்டிவா கனமு மேற்பன் மாநில மதிகம் சேர்ப்பன்
துண்டமாய்க் கூறு னுகும் தோகையர் மோக னுவன்
பண்டுநாள் பூமி விருத்தி பண்போர்க்கு அன்ன மீவன்.

18. சுகமான ஆகாரங்களையே புசிப்பான். புளிப்பை மிகவும் விரும்புவான். வண்டி முதலிய வாகன சௌக்கியங்கள் உடையவன். செழிப்பான நிலங்களை அதிகம் சேர்ப்பான். வெட்டினுற் போலப் பேச விரும்பாதவன்.

பெண்களிடம் அதிக அன்பு கொண்டவன். பிதுரார்ஜித நிலங்களை மேன் மேலும் அபிவிருத்தி செய்வான். படித்தவர்களை அன்ன வஸ்திரம் இவைகளால் ஆதரிப்பான்.

19. கடன்படான் இடுக்க மில்லான் காரிய சமர்த்த னாகும்
உடன்படான் பிழைக ளுக்கு உண்மையா மனத்த னாகும்
தடபுடல் செய்கை யுண்டு சத்தான வயது சேஷ்டன்
துடையினில் வடுவு மேற்பன் தேவதா தலங்கள் செல்வன்.

19. கடன்படாதவன். வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாதவன். காரியங்களை நிறைவேற்றுவதில் சமர்த்தன். குற்றங்களைச் செய்யச் சிறிதும் விரும்பாதவன். மனத் தூய்மை பெற்றவன். சிறிது ஆடம்பரச் செய்கை இவனிடம் காணப்படும். இவனது தொடையில் வடுவு காணப்படும். கடவுள் கோயில்கொண்டு எழுந்தருளிஇருக்கும் பல ஸ்தலங்களுக்கு யாத்திரை செல்லுவான்.

20. இல்லமு மிரண்டு செய்வன் எதிரியை நாசம் செய்வன்
தொல்லைகள் ஆஸ்தி ஏற்பன் சோம்பல்க ளில்லா னாகும்
எல்லைகள் முன்மார் சேர்ப்பன் எய்திடும் பித்தச் சூடு
தொல்லையில் லாமல் வாழ்வன் தோகையே கேட்டி டாயே.

20. இரண்டு வீடுகள் கட்டுவான். எதிரிகளை அழிப்பான். வழக்கிலுள்ள சொத்துக்களை அடைவான். சிறிதும் சோம்பல் இல்லாதவன். கையை விட்டு விலகிய முன்னோர்களின் சொத்துக்களை மறுபடியும் இவனே அடைவான். பித்தச்சூடு இவனது உடலில் இருக்கும். வாழ்க்கையில் எவ்விதத் தொந்தரவும் இல்லாமல் வாழ்வான். தேவியே! மேலும் கேளுங்கள்.

21. தன்துணை முன்பெண் ரண்டு சாற்றுவோம் தீர்க்க மாகப்
பின்துணை நீதே யாகும் பேசவீ ரந்தச் சங்கை
துன்மையாய் மூன்றே னோடு சுகமிலா ராகு கூடப்
பின்னமாம் துணைவ ரென்றேம் பேதையே கேட்டி டாயே.

21. இவனுக்கு உடன் பிறந்தார்கள் மூவர். அவர்களில் இருவர் மூத்த சகோதரிகள். அவர்கள் இருவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இவனுக்குப் பின்னால் பிறக்கும் குழந்தைகள் நீடித்து வாழா. அதற்கென்ன காரணம் என்று பார்வதி கேட்க, வசிஷ்டர் கூறுகின்றார். சகோதரபாவதிபதியாகிய புதன் ராஹுவுடன் இருப்பதால் இவனுக்கு அடுத்துப்பிறக்கும் குழந்தை நீடிக்காது என்று சொன்னோம்.

22. மங்களம் பதினெட் டாண்டில் மருவிடும் கீழ்மேல் பாரி
அங்கவள் குணத்தைச் சொல்வேன் அரிமனை யொப்ப தாகும்
எங்கள்போ லதிதிக் கன்னம் ஈவளுள் நற்கு ணத்தாள்
பங்கய முகத்தா ளாகும் பரிந்துப சாரம் செய்வள்.

22. இவனுக்குப் பதினெட்டாவது வயதில் மணம் நடை பெறும். மணப் பெண் கீழ்த் திசையில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணத்தைக் கூறுவோம். அவள் மஹாலக்ஷ்மிக்கு ஒப்பானவள். எங்களைப் போன்ற தவசிகளான அதிதிகளுக்குச் சிரத்தையுடன் அமுது அளிப்பாள். நற்குணம் வாய்ந்தவள். அவளுடைய வதனம் கமலம் போல் விளங்கும். வீட்டை நாடினவர்களுக்குப் பரிவுடன் உபசாரம் செய்வாள்.

23. பால்பாக்கிய முடையா ளாகும் பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்
சீலியாம் முன்கோ பத்தள் சிறுத்தோர்க்கு உதவி செய்வள்
காலத்தை அறிந்து ரைப்பள் காதலி வயது தீர்க்கம்
சாலவே வசிஷ்டர் சொல்லச் சடாமுனி புகலு கின்றார்.

23. பால்பாக்கியமுடையவள். கணவன் மனம்போல் நடப்பாள். சீலத்தில் சிறந்தவள். முன் கோபமும் உண்டு. எளியவர்களுக்கு உதவி செய்வாள். இடம், பொருள், ஏவல் இவைகளுக்குத் தக்கபடி பேசுவாள். நீண்ட ஆயுள் யோகமுள்ளவள். என்றிவ்வாறு வசிஷ்டர் சொன்னவுடன் ஜடாமுனிவர் கூறுகின்றார்.

24. சத்தமத் தோனு மெட்டில் சிகியுடன் கூடி நிற்க
வித்தகி மார்கள் ரண்டு விளம்பலாம் பால னுக்கு
அத்திரி தடுத்துச் சொல்வார் அந்தணன் ஏழைப் பார்க்கப்
பத்தினி தானத் தோனைப் பார்மகன் பார்ப்ப தாலே ;

24. களத்திரபாவாதிபனாகிய சனி, கேதுவுடன் எட்டாமிடத்தில் இருப்பதால் இவனுக்கு இரு மனைவிமார்கள் என்று சொல்லவேண்டும். ஆகவே மனைவி தீர்க்காயுர்யோகமுள்ளவள் என்று எவ்வாறு சொல்லக் கூடும். அத்திரி முனிவர் பதில் உரைத்தார். பதினோராம் இடத்தில் இருக்கின்ற சுபனாகிய குரு " ஒன்பதாவது பார்வை " யால் களத்திரபாவத்தைப் பார்ப்பதாலும் களத்திர ஸ்தானாதிபதியான சனியை ராஜயோக காரணாகிய செவ்வாய் பார்ப்பதாலும் ;

25. பாரியு மொன்றே யாகும் பாலர்கள் பலத்தைச் சொல்வேன்
தீரமா யாண்பால் ரண்டு செல்விமா ரவ்வாறு தீர்க்கம்
வீராது முதலி லென்றேம் விளம்புவீ ரந்த சங்கை
ஆரலு மைந்தி லேற அலகியு மைந்தன் பார்க்க ;

25. மனைவி ஒருத்திதான். புத்திரபாவத்தைக் கூறுவேன். இரு பிள்ளைகள். இரு பெண்கள். இந் நால்வரும் ஸ்திரமாக வாழ்வார்கள். முதலில் பிறக்கும் குழந்தை நிலைத்திராது என்று வசிஷ்டர் சொன்னவுடன், அதற்கான காரணத்தைச் சொல்லுமெனப் பார்வதி கேட்க, வசிஷ்டர் கூறலானார். செவ்வாய் ஐந்தாமிடத்தில் இருக்க, அவனைச் சனி பார்ப்பதால் ;

26. முதல்சுதர் தோஷ மெய்தும் மொழிகிறே மிவனின் பூர்வம்
அதிதிவாழ் பழனி தன்னில் அருமறைக் குலமு தித்து
நிதிமிக உடையா னுகி நேமியில் செட்டுச் செய்து
வதிபதி மதலை யுண்டாய் மறலியின் பதிக்கு சென்று ;

26. முதலில் பிறக்கும் குழந்தை அரிஷ்டத்தை அடையும். இச் சாதகனின் பூர்வஜன்மத்தைக் கூறுகின்றேன். இவன் முன் பிறவியில் பழனி க்ஷேத்திரத்தில் வேதமோதும் அந்தணர் குலத்தில் பிறந்து அதிகச் செல்வத்தைப் படைத்தவனுகி வியாபாரத்தைச் செய்துவந்தான். மனைவி மக்களுடன் வெகுகாலம் சுகமாக வாழ்ந்து அந்தியத்தில் மரணத்தை அடைந்தான்.

27. பிறப்பனு மிந்தப் பாலன் பராசரும் மறுத்துச் சொல்வார்
மறைக்குல முன்ஜன் மத்தில் வந்தவ னிச்சென் மத்தில்
குறைவுறு ரெட்டி வம்சம் குறிக்குமகா ரணங்கள் சொல்வாய்ப்
பெருமையாய் வேதம் தன்னைப் பேசாத குறைவு மொன்று.

27. அவன்தான் இங்கு "ரெட்டி" ஜாதியில் பிறந்திருக்கிறுன். பராசர முனிவர் ஒரு சந்தேகத்தை வினவினுர். முன் பிறவியில் பிராம்மண குலத்தில் ஜனித்த இவன் இப்பொழுது "ரெட்டி" ஜாதியில் பிறக்கக் காரணம் என்னே ? வசிஷ்டர் விடையளிக்கின்றுர். அதற்கு இரு காரணங்கள் உண்டு. வேதம் ஓதுவதற்கு வாய்ப்புப்பெற்ற ஜாதியில் பிறந்தும் பெருமைவாய்ந்த வேதத்தை ஓதாமல் இருந்தான். இதுவுமொரு காரணம்.

28. மறை சொலு மொழிபோல தன்னே அனுஷ்டாமல் நின்ற தாலே
குறைவுள குலமு தித்தான் கூறுவோ மிவனின் யோகம்
இரவிகீ ராறில் வெள்ளி இருப்பதால் வேசி யோகம்
புரவியோன் தனக்கு ரண்டில் புதன்நிற்கச் சாமரை யோகம்.

28. அது கிடக்கட்டும். வேதம் ஓதாவிடினும் வேதத்தில் பிராம்மணனுக்கிட்ட கட்டளைப்படி கடமைகளை இவன் செய்யாமலும் ஒழிந்தான். இஃது இரண்டாவது காரணம். இவ்விரு காரணங்களால்தான் இந்த வமிசத்தில் பிறந்திருக்கின்றுன். இனி இவனது யோகத்தைக் கூறுவேன். சூரியனுக்குப் பன்னிரண்டாமிடத்தில் சுக்கிரன் இருப்பதால் இவனுக்கு "வேசி" யோக முண்டு. சூரியனுக்கு இரண்டாமிடத்தில் புதன் இருப்பதால் "சாமர" யோகமும் உண்டு.

29. பலன்தனைப் புகல்வேன் தாயே பாரது அதிக விருத்தி
குலமதிப் புடைய வாழ்வன் குடியிரண் டாண்டில் வேறு
நலமுள வேறு இல்லம் நல்கிடு மூன்று மாண்டில்
பலமுள குடும்ப மேற்பன் பெரிதான கருமம் செய்வன்.

29. மேற்சொன்ன இரு யோகங்களின் பலன்களைத் தெரிவிப்பேன். அதிக நிலங்களைச் சம்பாதிப்பான். இவன் தன் குலத்தினர் மதிக்க வாழ்வான்.

இவன் பிறந்த இரண்டாவது ஆண்டில் குடும்பப் பிரிவினை நடைபெறும். அதற்கு அடுத்த வருஷம் புதிய வீடு ஏற்படும். இவனது குடும்பம் மிகப் பெரியதாக விளங்கும். பிறரால் சாதிக்கமுடியாத காரியத்தைச் செய்வான்.

30. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தனமிகப் பெருக்கம் செய்வன்
இந்திர போக மேற்பன் ஏவலா ளுடைய னுகும்
சுந்திர கட்டில் மெத்தை தொல்னுல கோர்ம திக்க
மைந்தனும் வாழ்வா னுகும் மாநிதி யுடையா னுவன்.

30. தந்தையைவிடச் சிறப்புடன் வாழ்வான். செல்வத்தை மிகவும் அபிவிருத்தி செய்வான். இந்திர போகத்தை அனுபவிப்பான். பலபணியாட்கள் இருப்பார்கள். அழகிய கட்டில், ஆசனம் மெத்தை முதலிய போக்கிய வஸ்துக்களை அடைவான். அதிகம் செல்வச் சேமிப்பு உடையவனுகி, உலகத்தாரால் கொண்டாடப்பட்டு வெகுகாலம் சுகமாக வாழ்வான்.

31. உதித்தநாள் முதல யாக ஒருமூன்று ஆண்டு மட்டும்
சதியான ரோகம் வாய்க்கும் சஞ்சல மனம்தந் தைக்கு
பதிவேறு மோச முண்டு பகர்ந்தஆண் டதன்மே லாக
மதிபிறை போல யோகம் வளர்ந்திடு மரண மட்டும்.

31. இவன் பிறந்த பிறகு மூன்று ஆண்டுகள் வரையில் ஜாதகனுக்குக் கொடிய நோய்கள் காணும். அநேக கவலைகள் தந்தையை வாட்டும். வஞ்சனைகளும் ஏற்படும். மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுள் காலம் முடிய வளர்பிறைச் சந்திரன்போல் யோகங்கள் வளர்ந்திடும்.

32. பிறைதசை மத்தில் ரோகம் புகன்றிடும் பால னுக்கு
மறலியைக் காண ருகும் மந்தன்தன் தசைகா லத்தில்
திருமக னுடலம் ஏகும் தந்தைக்குப் பணியின் காலம்
வரைகிறேம் கரும காலம் உத்தமி கேட்டி டாயே.

32. சந்திர தசை மத்தியிலும் ஜாதகனுக்குக் கொடிய நோய் வரும். ஆனுல் இறக்கமாட்டான். இவனுக்குச் சனிதசையே மாரகமாகும். தேவியே ! கேளுங்கள். ஜாதகன் தனது ராஹு தசையில் தன் தந்தைக்கு ஈமச்சடங்குகளைச் செய்வான். (தந்தை இறப்பான் என்பது கருத்து.)

33. பெற்றமா தாவின் சேதி புகலுவோம் சிவந்த மேனி
சுற்றமும் கோப முண்டு சொல்லது சுருக்க மாகும்
சத்திய மென்றுல் லக்கம் சாதிப்பாள் சிலது சங்கை
வித்தகி யோக சாலி வீண்வம்பு புகலா ளாகும்.

33. ஜாதகனின் தாயினுடைய குணத்தை இப்பொழுது சொல்வேன். அவள் சிவந்த மேனியாள். சிறிது கோபம் உடையவள். பேச்சு சங்கிரகமாகவே இருக்கும். உண்மையைச் சொல்லுவோமானுல் இவள் லக்ஷம் காரியங்களையும் சாதிப்பாள். சில காரியங்களே தவறும். மிகவும் அதிருஷ்டமுள்ளவள். வம்புபேச்சில் ஈடுபடாதவள்.

34. பாக்கிய முடையா ளாகும் பந்துவுக் கினிய ளாகும்
போக்கிய முடையா ளாகும் உறுதியில் லாத நெஞ்சம்
வாக்கது காப்பா ளாகும் மறுவிடும் பித்தச் சூடு
சாக்கிரதை குணத்தா ளாகும் தரித்திர மில்லா ளென்றேம்.

34. செல்வம் நிறைந்த செல்வி. உறவினர்க்கு நல்லவளாக் நடந்து கொள்வாள். போக்கியம் (பொருள்) பெற்றவள். உறுதியில்லா உள்ளம். காற்றில் விடாத வார்த்தை. பித்தச் சூட்டினுல் பீடை. கண்ணும் கருத்து மான குணம். ஏழ்மையை ஏற்காதவள்.

35. மங்கைக்குத் துணை ஆண் ரண்டும் மறுவிடும் கன்னி ஒன்று
அங்கவர் தென்கி ழாகும் அவர்பலன் பின்பால் சொல்வேன்
தந்தையின் பூர்வம் சொல்வேன் நவபா ஷாணம் தன்னில்
கங்கையின் குலமு தித்துக் கௌரவ குடும்பி யானுன்.

35. இவளுக்கு உடன் பிறந்தவர்களில் இரு ஆண்கள். ஒரு பெண். இவள் பிறந்த ஊர் தென்கிழக்கில் உள்ளது. அந்த உடன் பிறந்தார்களின் பலன்களைப் பின்பாகத்தில் சொல்லுவேன். தந்தையின் பூர்வஜன்மத்தைச் சொல்லுகின்றேன். இவன் முன் பிறவியில் நவபாஷாணத்தில் வேளாள வமிசத்தில் பிறந்து, கௌரவம் வாய்ந்த குடும்பியானுன்.

36. வறுமைக ளில்லா வாழ்ந்து மறலியின் பதிக்குச் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ னென்று சொல்வோம்
சிறுமைக ளில்லா வாழ்வன் செப்புவோம் இவன்பின் ஜன்மம்
பிருதிவி தலத்தி லேதான் பிறப்பானும் சௌராஷ்ட்ர வம்சம்.

36. வறுமை இல்லாமல் வாழ்ந்து காலக்கிரமத்தில் இறந்த இவன் இக் குலத்தில் பிறந்து ஜாதகனுக்குத் தந்தையாக வாய்ந்திருக்கின்ருன். இப்பொழுதும் சிறுமை இல்லாமல் சிறப்புடன் வாழ்வான். இவன் மறு பிறவியில் காஞ்சியில் சௌராஷ்டிர ஜாதியில் உதிப்பான்.

37. மந்திரி தசைகா லத்தில் அவன்சுய புத்தி தன்னில்
பந்தணி மாதுர் கண்டம் பாலகன் முப்பான் ரண்டில்
நந்தியின் மாதம் தன்னில் நமன்பதி செல்வா ளாகும்
தந்தியை வளர்த்த எங்கள் தயாபரி கேட்டி டாயே.

37. குருதசை காலத்தில் சுயபுக்தியிலேயே ஜாதகனுக்கு முப்பத்திரண்டாவது வயது நடைபெறுகையில் வைகாசி மாதத்தில் தாய் மரணமாவாள். விநாயகரைப் பெற்ற தாயே ! கருணைக்கடலே ! மேலும் கேளுங்கள்.

38. இரவியின் தசையில் கண்டம் கூறுவோம் தந்தைக் கேதான்
மறலியைக் காண ருகும் மலைப்பாம்பு தசையி லேதான்
அருணனின் தூதவன் புத்தி அணுகிடும் கண்டம் ஒன்று
அறிவிப்போம் மூவைந் தாண்டில் மரணமே யாகா தாகும்.

38. ஜாதகனுக்குச் சூரிய தசை நடக்கும்போது இவனது தந்தைக்குக் கண்டம் ஒன்று நேரும். ஆனல் அது மரணத்திற்குக் காரணமாகாது. ராகுதசையில் புதபுக்தியில் ஒரு கண்டம் நேரும். அதே போல் பதினைந்தாவது வயதிலும் தந்தைக்கு ஆபத்து நேரும். அதனுலும் இறக்க மாட்டான்.

39. இருபது ஏழு ஆண்டில் யெய்திடும் தனுசு மாதம்
குறியது தப்பா தாகும் கூறுவோ மிவன் பின் ஜன்மம்
அருணையின் கீழ்ப்பா லாக அணுகிய பேரூர் தன்னில்
உறைகுவான் மறைக்கு லத்தில் உத்தமி கேட்டி டாயே.

39. இவனது இருபத்தேழாவது வயதில் மார்கழி மாதத்தில் ஜாதகனின் தந்தை மரணமாவான். இது தவருமல் நிச்சயமாக நடைபெறும். [அப்பொழுது ஜாதகனுக்கு ராஹுதசையில் புதபுக்தி நடைபெறும் என்பதை முன் பாட்டில் அறிவித்திருக்கின்ருர்]. தந்தையின் மறுசென்மத்தையும் கூறுவோம். இவன் மறுபிறவியில் திருவண்ணுமலைக்குக் கீழ்த் திசையிலுள்ளதொரு பெரிய ஊரில் பிராம்மணகுலத்தில் ஜனிப்பான்.

40. தந்தையின் ஜன்மம் தன்னில் செய்தபுண் ணியங்க ளென்ன
நொந்தபேர் தம்மைக் காத்தும் நிகர்தல வாசம் சென்றும்
நிந்தைசொல் லில்லா தாலும் விகடங்கள் பேசா தாலும்
அந்தவ ரிடத்தி லிச்சை அருமறைக் குலமு திப்பான்.

40. இப்பொழுது செட்டி வம்சத்தில் பிறந்த இவன் மறு பிறவியில் அந்தணர் குலத்தில் ஜனிக்கக் காரணம் என்ன என்றுப் பார்வதி கேட்க, முனிவர் பதில் கூறுகின்ருர். கஷ்டப்படுகின்றவர்களுக்கு உதவி செய்ததாலும், புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை செய்ததாலும், யாரையும் நிந்திக்காததாலும், பிறர் மனம் புண்ணுகும்படி பரிகாச வார்த்தைகள் பேசாததாலும், தவசிகளிடம் பக்திகொண்ட பிராம்மணகுலத்தில் ஜனிப்பான்.

41. அன்பது எட்டு ஆண்டில் ஆடிமா தத்தி லேதான்
முன்பக்கம் துவா தேசி முதல்வனின் உடலம் ஏகும்
பின்ஜன்மம் வள்ளூர் தன்னில் பிறப்பனும் சைவச் சேயாய்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

41. ஜாதகனுடைய மரண காலத்தைக் கூறுவோம். இவனுக்கு ஐம்பத்தெட்டாவது வயதில் ஆடி மாதத்தில் சுக்லபக்ஷம் துவாதசி திதியில் மரணம் ஏற்படும். இவன் மறு பிறவியில் திருவள்ளூர் க்ஷேத்திரத்தில் சைவ குலத்தில் உதிப்பான். விநாயகனைப்பெற்ற தேவியே ? மேலும் கேளுங்கள்.

42. இதுமத்தில் ஜாத கர்க்கு எய்தாதோ மார கங்கள்
மதிதசை சுயமாம் புத்தி மருவிடும் பிணி அனேகம்
அதுபலன் செய்யா தாகும் அவ்வாண்டில் கண்ட மொன்று
சதியிலா பதினு ருண்டு சங்கைய ரிருபா னேந்து.

42. பார்வதி, இது மத்தியில் ஜாதகனுக்கு மாரகங்கள் வாராவோ என்று கேட்க, முனிவர் விடை அளித்தார். சந்திரதசை சுயபுக்தியில் பல பிணிகள் தோன்றும். ஆனால் அவைகள் மாரகங்கள் ஆகா. அந்த சுயபுக்திக்குள் ஒரு பெரிய கண்டமும் ஏற்படும். அதே போல பதினருவது வயதிலும் இருபத்தைந்தாவது வயதிலும் கண்டங்கள் நேரும்.

43. இந்தவோர் ஆண்டி லேதான் எய்திடு சிலவாம் நோய்கள்
தென்திசை காலன் நாடாம் செப்பின ஆன்பா னெட்டும்
சந்ததம் தீர்க்க மென்றேம் தன்மனை யவன்பின் கண்டம்
தந்தியை வளர்த்த எங்கள் தயாபரி கேட்டி டாயே.

43. மேலே சொன்ன ஆண்டில் பல பிணிகளும் தோன்றும். எவ்வளவு பிணிகள் தோன்றினும், எவ்வளவு கண்டங்கள் வந்திடினும் ஐம்பத்தெட்டாவது வயது வரையில் இவனுக்கு மரணம் ஏற்படாது. இவனுடைய மரணத்திற்குப் பிறகு இவன் மனைவி மரணமடைவாள். விநாயகரைப்பெற்ற கருணைக் கடலே ! மேலும் சொல்லுகிறேம்.

44. உதித்திடும் காலம் தன்னில் உத்தரம் கடைபா தத்தில்
கதிரவன் தசையி ருப்புக் கழ றுவோம் திங்க ளெட்டும்
முதல்பாகம் புகன்றேம் யாங்கள் மொழிகிறேம் விவரம் பின்னல்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

44. இவன் உத்தரம் நாலாம் பாதத்தில் பிறந்திருக்கின்றுன். ஆகையால் சூரியதசையில் இருப்பு மாதங்கள் எட்டு. இது முதல் பாகமாகையால் சுருக்கமாகவே பலன்களைக் கூறினேம். இரண்டாம் பாகத்தில் விவரமாகக் கூறுவோம். அதிதி தேவியை ஆதரிக்கும் அம்பிகையே ! மேலும் எங்களைக் கேட்டருள வேண்டும்.

ஜாதகம் 31

1. கலைசனி கலையி லாகக் கனகனும் சாடி யாகப்
புலவனும் புதனும் நந்தி புகர்மனை காளி சேயும்
கன்னியில் கடக மாகச் சாற்றுவீர்பலனை என்று
மால்மலை மகளும் கேட்க வசிஷ்டரும் புகலு கின்ருர்.

கேது		சூரியன் புதன் சுக்கிரன்	சந்திரன் சனி
குரு	இராசி சக்கரம்		லக்கினம்
			ராகு செவ்வாய்

1. நக்ஷத்திரம் திருவாதிரை. ராஹுதசையில் இருப்பு வருஷங்கள் மூன்று மாதங்கள் இரண்டு.

சந்திரன் சனி மிதுனம், குரு கும்பம், சூரியன் புதன் சுக்கிரன் விருஷபம், ராஹு செவ்வாய் கன்னி, கேது மீனம், இலக்கினம் கடகம் இக்கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி கேட்க, வசிஷ்டர் கூறு கின்ருர்.

2. இந்தசேய்ப் பெண்பால் ஜன்மமிவன்தந்தை யில்லம் சொல்வேன்
தென்வாடை கீழ்மேல் வீதி........யீன வத்திரம்
சிந்துபாஞ் சாலி மாயோன் மூஷிகன் வடமே லாகும்
அத்திரி கீழ்ப்பா லாகும் அனுகிய சிறுவூ ராகும்.

2. இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை பெண். தந்தையின் வீட்டைப் பற்றிச் சொல்வேன். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு தென் வரிசையில் இருக்கும். வடமேற்கில் ஒரு நதியும், திரௌபதி கோயிலும், விஷ்ணு ஆலயமும் உண்டு. வடமேற்கில் விநாயகர் ஆலயம் விளங்கிடும். கிழக்குத் திசையில் ஒரு மலை இருக்கும். அவள் பிறந்த ஊர் மிகச் சிறிய தாகும்.

3. இத்தகை அடையா ளத்துள் இயம்பினேம் தந்தை யில்லம்
சத்தியும் செட்டி என்றேம் தாய்தந்தை துணைவர் யோகம்
பர்த்தாவின் புத்திர யோகம் பகருவோம் முன்பின் ஜன்மம்
சுத்தமாய் இந்நூல் தன்னில் செப்புவோம் தாயே கேளும்.

3. இத்தகைய அடையாளமுள்ளதோர் ஊரில் "செட்டி" சாதியில் ஜனித்திருப்பாள். இந்த நூலில் அவளுடைய தந்தை தாய் சகோதரர் பர்த்தா, புத்திரர் இவர்களைப்பற்றியும், முன்பின் ஜன்மங்களைப் பற்றியும் தெளிவாகச் சொல்லப்போகின்றோம். தாயே! கேளுங்கள்.

4. கன்னிகை ஜன்ன காலம் கனமுள தந்தைக் கேதான்
கன்னிகை யொருத்தி தீர்க்கம் கழறுவோ மவள் குணத்தைத்
தன்மனம் கபடு கொஞ்சம் சந்ததி யரையு மாகும்.
முன்கோபம் சுதராண் ரண்டு மொழிகிறேம் தீர்க்க மாக.

4. இந்தப்பெண் பிறப்பதற்கு முன் ஒரு கன்னிகை பிறந்திருக்கிறாள். அவளும் தீர்க்கமாக வாழ்வாள். அவளுடைய குணத்தைக் கூறுகின்றோம். கொஞ்சம் கபடமுள்ளவள். அவளுக்குக் கர்ப்பச் சேதம் ஏற்படும். முன் கோபி. இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். அவ்விருவரும் நீண்டகாலம் வாழ்வார்கள்.

5. அவர்களும் தன்னி லத்தில் அனேகநாள் வாச மெய்தித்
தபசிபோல் வேருய்ச் செல்வர் சல்லிய பாதை முன்னுல்
நவனிக ளதிகம் சேர்ப்பர் நாடாத சல்யம் பின்னுல்
பவமன மில்லா வாழ்வர் பகருவோம் பின்பால் சேதி.

5. அவர்கள் பாட்டனுர் வீட்டில் அநேகநாட்கள் வாசம் செய்வார்கள். பிறகு தவசிகளைப் போல, பந்துக்கள் ஆதரவின்றித் தனித்து வாழ்வார்கள். பால்யத்தில் அவர்களுக்குக் கடன் உபத்திரவம் இருக்கும். பிற்காலத்தில் அது நீங்கும். பூமிகளையும் சேர்ப்பர். ஒருவித கெடுதலுமின்றி வாழ்வர். பின் பகுதியில் அவர்களைப்பற்றிய செய்திகளைக் கூறப்போகின்றோம்.

6. மாதுவின் துணையாண் பக்கல் மருவியே வாழ்வா ளாகும்
ஓதுவேன் பின்பால் சேதி உரைக்கிறேம் பிதா குணத்தை
நீதிமான் பொறுமை சாலி நீலமே கத்தா னுகும்
காதியு முடைய னுகும் கடவுளர் பக்தி பூண்பன்.

6. அவள் [ஜாதகியின் மூத்த சகோதரி] தாயின் சகோதரனுடைய புத்திரன் வீட்டில் வாழ்வாள். அவனைப்பற்றிய வரலாறுகளை இரண்டாம் பாகத்தில் சொல்லப்போகின்றோம். தந்தையின் குணத்தைச் சொல்லுவேன். தீய குணங்கள் இல்லாதவன். பொறுமைக் குணமுள்ளவன். நீருண்ட மேகம் போல் கருத்த மேனியான். கியாதி பெற்றவனுகவும் இருப்பான். கடவுளின் மூர்த்திகளிடத்தில் பக்திபூண்டவன்.

7. நல்லவன் நல்ல வர்க்கு வண்டர்க்கு மிண்ட னுவன்
எல்லைக ளதிகம் சேர்ப்பன் ஏவலா ளுடைய னுகும்
சல்லிய மில்லா னுகும் தந்தையார்க் கிதத்தைப் போக்கும்
புல்லிய புத்தி யில்லான் புகழ்ந்தோரை ஆத ரிப்பன்.

7. நல்லவர்களுக்கு நல்லவனுக இருப்பான். துஷ்டர்களுக்குத் துஷ்டனுக ஆவான். அதிக பூமிகளைச் சேர்ப்பான். அநேக பணியாட்களை நியமிப்பான். கடன் இல்லாதவன். ஆனல் பிதுரார்ஜித சொத்து இவனிடம் இராது. அல்ப புத்தி இல்லாதவன். தன்னைக் கொண்டாடியவர்களையே ஆதரிப்பான். [தன் புகழைக் கேட்பதில் விருப்பமுள்ளவன் என்றும் கருதலாம்.]

8. சொல்லிடு யூர்தி யெல்லாம் சுத்தமாம் சொகுசு பூண்பன்
வெல்லுவான் எதிரி தம்மை வீணவழக் கோரம் சொல்லான்
அல்லல்க ளடையா னுகும் ஆவுகள் பணைவர் விருத்தி
வல்விக்கு இஷ்ட னுகும் வாக்கதைக் காப்பா னுகும்.

8. வண்டி முதலிய வாகன வசதிகள் பெற்றவன். சுத்தமானவன். கஷ்டங்களைச் சகிக்காதவன், [உடலைச் சிரமப்படுத்த இஷ்டமில்லாதவன்] எதிரிகளை ஜயிப்பான். வீண் சண்டைகளில் சிறிதும் ஈடுபடாதவன். வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாதவன். பசுக்களையும் எருதுகளையும் அபிவிருத்தி செய்வான். மனைவியினிடம் மிக்க அன்புகொண்டவன். தான் சொன்ன சொற்களைக் காப்பாற்றுவான்.

9. தந்தைநாளுரை விட்டுச் சாடுவான் கீழ்பால் தன்னில்
தந்தையோ டொத்துச் செல்வன் சகலர்க்கு நல்லோ னுவன்
தந்தநோய் உடைய னுகும் சாதமும் குறவு ருதான்
தன்பந்து மதிக்க உய்வன் சார்ந்திடும் மாமி ரண்டு

9. இவனுடைய தந்தை வாழ்ந்த ஊரைவிட்டு அதற்குக் கீழ்த்திசையிலுள்ளதோர் ஊருக்குத் தந்தையுடனேயே சென்று வசிப்பான். தந்த நோய் (பல்வலி முதலியன) இவனுக்கு வரும். ஏராள ஆகாரப்பொருள் உடையவன். தன் உறவினர் மதிக்க வாழ்வன். இவனுக்கு மாமிமார் இருவர். [இவனுக்கு இரு மனைவிகள் என்பது கருத்து.]

10. மாலவன் நாமம் கொண்டான் வளவுமே சித்திரம் செய்வன்
சீலம்போல் வெளிம யக்கன் ஜனஉப காரி யாகும்
ஞாலங்கள் மேன்மேல் சேர்ப்பன் நற்பந்தை ஆத ரிப்பன்
ஆலம்போல் பகைவ ருக்கு அவனுமே கருட னுவன்.

10. இவன் திருமாலின் பெயரைக் கொண்டவன். அழகிய வீடு கட்டுவான். நற்சீலமுள்ளவன் போல் தோற்றமளிப்பான். மக்களுக்குத் தேவையான உதவியையும் செய்வான். பூமிகளை மேன்மேலும் சம்பாதித்து அபிவிருத்திசெய்வான். தன் உறவினர்களை ஆதரிப்பான். எதிரிகளாகிய சர்ப்பங்களுக்கு அவன் கருடன். [இவன் பெயரைக் கேட்டால் எதிரிகள் பயமடைந்து அடங்குவார்கள் என்பது கருத்து.]

11. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோகைய ரிருவர் தம்மில்
பின்மனை யாளுக் கின்னேள் பிறப்பாளாம் என்று சொல்வோம்
அன்னவள் குணத்தைச் சொல்வேன் அரிமனை யொப்ப தாகும்
தன்மனம் கபடு மில்லாள் தானிரு நிறத்தா ளாகும்.

11. இத்தகைய குணமுள்ளவனுக்கு இரு மனைவியர். இவள் இளைய மனைவிக்குப் பிறந்தவள். [மூத்த மனைவிக்குப் பிறந்தப் பெண்ணைப்பற்றி 4, 5, 6-ஆவது பாட்டுக்களில் சொல்லியிருக்கின்றார்.] இந்த ஜாதகியின் குணத்தைச் சொல்வேன். இவள் மஹாலக்ஷ்மி போன்றவள். மனத்தில் கபடமில்லாதவள். கருத்த மேனியாள்.

12. கல்விமான் கடவுள் பக்தி கண்முகம் வசிய முண்டு
இல்லையென் றுரைக்க மாட்டாள் இடர்செய்யாள் யாவ ருக்கும்
சொல்லதைக் காப்ப ளாகும் துன்பங்க ளெவர்க்கு மெண்ணாள்
நல்லவ ளாகி வாழ்வள் நன்மனம் கபடு மில்லாள.

12. கல்வியறிவு உடையவள். கடவுள் பக்தி பூண்டவள். முகத்தில் பொலிவு உடையவள். யாசிப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாதவள். பிறருக்கு இடையூறுகளைச் செய்யாள். தான் சொன்ன வார்த்தைப்படியே நடப்பாள். யாருக்கும் தீமைகளை நெஞ்சிலும் எண்ணாதவள். எல்லோருக்கும் நல்லவளாக வாழ்வாள். கள்ளமில்லாதவள்.

13. தீரமில் லாதா ளாகும் சிறுத்தோர்க்கு உதவி செய்வள்
காரிய சமர்த்த ளாகும் கட்டுரை பகரா ளாகும்
மாரன் தன் மனத்துக் கேத்தோள் வருவோரை ஆத ரிப்பள்
பாரினில் வறுமை காணாள் பால்பாக்கிய முடைய ளாமே.

13. தைரிய மில்லாதவள். தன்னைப் புகழ்ந்தவர்களுக்கே, மனமிளகி உதவி புரிவாள். காரியம் செய்வதில் கெட்டிக்காரி. அடுக்கு வார்த்தைகளைப் பேச விருப்பமில்லாதவள். தன்கணவனுடைய உள்ளமறிந்து அதன்படி நடப்பாள். வரும் விருந்தாளிகளை ஆதரிப்பாள். வறுமையினால் கஷ்டப்படாதவள். அவளுக்குப் பால்பாக்கியம் உண்டு.

14. தன்துணை கன்னி ஒன்று சாற்றுவோம் ஆண்பா லொன்று
அன்னவர் தீர்க்க மென்றேம் அவர்பலன் பின்பால் சொல்வேன்
முன்தாயொன்றென்று சொன்னீர் மொழிகுவீர் அவர்கட்குப் (புத்திரர்
தன்சுதர் காணா ளாகும் சண்டன்தன் பதிக்குச் செல்வாள்.

14. இவளுக்குச் சொந்த சகோதரி ஒருத்தி. சகோதரன் ஒருவன். அவ்விருவரும் தீர்க்காயுளுடன் வாழ்வர். அவர்களுடைய பலன்களைப் பின் பகுதியில் சொல்வேன். மூத்த அன்னைக்கு ஒரு மகள் உண்டு என்று சொன்னீர்கள். அந்த மூத்த அன்னைக்கு வேறுபிள்ளைகள் உண்டோ? சொல்லுங்கள் எனப் பார்வதி கேட்க முனிவர் பதில் கூறுகின்றார். அவளுக்கு வேறு சந்ததி கிடையாது. பிள்ளை முகத்தைப் பாராதவளாகவே யமனுலகம் சென்றாள்.

15. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கபடு மில்லாள்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவின் மனதுக் கேத்தோள்
தீதுகள் ஒருவர்க் கெண்ணாள் தேங்கினோர்க்குத் தாக மீவள்.

15. இனி தாயின் குணத்தைக் கூறுவேன். மாந்தளிர் போன்ற மேனி படைத்தவள். சுகமாகப் பேசுவாள். கபடமில்லாதவள். பிறருக்குத் தீங்கை நினைக்காதவள். பர்த்தாவின் மனத்திற்கு ஏற்றபடி நடந்துகொள்வாள். ஒருவருக்கும் கொடுமையைச் செய்யாதவள். தன் வீட்டை அடைந்தவர்களுக்கு அன்னம், தண்ணீர் அளிப்பாள்.

16. சுகமுள வார்த்தை சொல்வள் சொல்லுமுன் கோபம் கொஞ்சம்
பகையதை மனத்தில் வையாள் பஞ்சைமே லிரக்கம் மாகும்
உகமையாய்ப் பேசு வாளாம் உறுதியில் லாத நெஞ்சம்
தகமையாய்ப் பித்தச் சூடு சார்ந்திடு மென்று சொல்வோம்.

16. நல்ல வார்த்தைகளையே பேசுவாள். சிறிது முன்கோபம் உண்டு. ஏதேனுமொரு காரணத்தினால் பகைமை ஏற்படினும் அதை நீடித்தகாலம் மனத்தில் வைத்துக்கொள்ளாதவள். எளியவர்களிடம் கருணை கொண்டவள். கேட்பவர்கள் மனம் உகக்கும் வகையில் பேசுவாள். நெஞ்சில் உறுதி இல்லாதவள். இவளது சரீரத்தில் பித்தச் சூடு தங்கி இருக்கும்.

17. இல்லமும் வடபா லாகும் இவன்துணை ஆண்பால் ரண்டு
வல்லியு மொருத்தி யென்றேமவர்பலன் பின்பால் சொல்வேன்
தல்லியின் பூர்வம் சொல்வேன் தண்டகா வனத்தி லேதான்
புல்கினாள் கவரைச் சேயாப் புத்திர ரதிக மூண்டாய் ;

17. இவள் பிறந்த வீடு வடதிசையில் உள்ளது. இவளுக்குச் சகோதரர் இருவர். சகோதரி ஒருத்தி. அம் மூவரின் பலன்களையும் பின்பாகத்தில் சொல்லப்போகின்றேன். தாயின் பூர்வ ஜன்மத்தைக் கூறுவேன். முற்பிறவியில் இவள் தண்டகவனத்தில் "கவரை நாயக்கர்" வமிசத்தில் பிறந்திருந்தாள். அதிகப் புத்திரர்களைப் பெற்றுத் ;

18. சுகமுள குடும்பி யாகிச் சுந்தரி வாழ்ந்து மேதான்
பகையான கால னூடு பரவியே பிரமன் லக்கம்
தகைமையா யுதித்தா ளென்றேம் சற்பாத்திரி வறுமை காணாள்
மிகுதவம் புரியு மெங்கள் வித்தகி கெட்டி டாயே.

18. பெரிய குடும்பியாகி, சுகமாக வாழ்ந்து, அந்திய காலத்தில் காலன் நாடு சென்றாள். இவளைப் பிறகு பிரம்மதேவன இங்குப் படைத்தான். அவள்தான் இக்கடக லக்கின மகளுக்குத் தாயாக வாய்த்திருக்கின்றாள். மதிப்பிற்குத் தக்கவள். வறுமை இல்லாதவள். அருமையான மிகு தவத்தைச் செய்யும் தேவியே! மேலும் கேளுங்கள்,

19. தந்தையின் பூர்வம் தன்னைச் சாற்றுவோம் சிறுபாக் கத்தில்
பந்தமாய் வன்னிய சேயாய்ப் பிறந்துமே கிருஷி செய்து
அந்தவன் மனைவி மைந்தர் அனுகியே வாழு நாளில்
நிந்தைகள வாது செய்து கழறுவோம் தாயே கேளும்.

19. இவளது தகப்பன் பூர்வஜன்மத்தைக் கூறுவேன். இவன் முற்பிறவியில் சிறுபாக்கம் என்ற கிராமத்தில் வன்னிய குலத்தில் உதித்து விவசாயம் செய்து ஜீவித்தான். மனைவி மக்களுடன் சுகமாக வாழும் நாளில், இவனுக்கேற்பட்ட அவதூற்றையும், இவன் வேண்டுமென்றே செய்த வஞ்சனையையும் சொல்லுகின்றோம். தாயே! கேளுங்கள்.

20. விதவையைப் போகம் துய்த்து வித்தகி க்ருவு தங்க
அதம்செய்தான் பண்டி தத்தால் அம்மாது மரண மானாள்
இதுவொரு தோஷ மாச்சு இயம்புவோம் வேறு ஒன்று
சதிசெய்தான் துணைவன் பாகம் தராமலே மோசம் செய்தான்.

20. இவன் முன்பிறவியில் கணவனற்ற ஒரு கைம்பெண்ணுடன் கள்ள நட்புக் கொண்டிருந்தான். அவளுக்கேற்பட்ட கருவை ஔஷதங்களால் அழித்தான். ஆதலால் அவளும் இறந்தாள். இதுவொரு தோஷமிருக்க, மற்றொரு பாவமும் ஏற்பட்டது. தன் சகோதரனுக்குச் சேரவேண்டிய பாகத்தைத் தராமல் ஏமாற்றினான்.

21. பின்துணை வருத்த முற்றுப் புகன்றசா பத்தைக் கேண்மோ
பொன்கடன் தந்த பாவி பிறக்கும்பின் ஜன்மம் தன்னில்
அண்ணன்தம் பிகளு மின்றி அனுகிய மனைவி மாண்டு
தன்னிலே வாழ்வா யென்ன சதகால மென்று சொன்னான்.

21. ஆதலால் இவன் தம்பி வருத்தமடைந்து சொன்ன சாபத்தைக் கேளுங்கள். எனது செல்வத்தை வஞ்சனையால் அபகரித்த கடங்காரப் பாவி! நீ மறு பிறவியில் சகோதரரின்றியும் மனைவியைப் பறி கொடுத்தும் உயிர் வாழ்வாய் என்றான்.

22. அதுசாபம் நேர்ந்த தென்றேம் அச்சென்மம் வறுமை கானான்
மதிபூண்டோன் பசுனை செய்து சண்டன்தன் பதிக்குச் சென்று
இதுகுல முதித்தா னுகும் முப்பதிடு ...... காவின் தோஷம்
அதிபதிய ரண்டே யாகும் வருந்துணை சாபத் தாலே.

22. அந்தச் சாபம் இவனைப் பிடித்துக் கொண்டது. அச் சென்மத்தின் கடைசியில் சிவபிரானைப் பஜனை செய்து வந்தான். காலக்கிரமத்தில் இறந்தான். பிறகு இக் குலத்தில் பிறந்திருக்கின்றான். முன் பிறவியில் ஏற்பட்ட பாவத்தினாலும் சாபத்தினாலும் இவனுக்கு இச் சென்மத்தில் சகோதர சகோதரிகளும் இல்லை. மூத்த மனைவி இறக்க, மறு மனைவியும் ஏற்பட்டாள்.

23. அண்ணன்தம் பிகளும் தோஷம் அறைகுவார் பராசர் தாமும்
கண்ணிய குடும்ப மெவ்வாறு சேதியைப் புகலு மென்ன
திண்ணமாய் முன்ஜன் மத்தில் திருமாலின் பூசை யாலே
வண்ணமாய்க் குடும்ப மேற்பன் அம்பிகை யாலே கேளாய்.

23. ஆகையால் இவனுக்கு அண்ணனும் இல்லை. தம்பியும் இல்லை. முன் ஜன்மத்தில் பாவத்தைச் செய்த இவனுடைய குடும்பம் இப்பிறவியில் எவ்வாறு சிறிது செல்வம் உள்ளதாக நிலைத்து இருக்கின்றது? என்று பராசரர் கேட்க, வசிஷ்டர் பதிலளிக்கின்றார். முற் பிறவியில் திருமாலுக்குப் பக்தி சிரத்தையுடன் விடாது பூசை செய்து வந்தமையால், பாவங்களின் பலனை இவன் அனுபவித்துக் கொண்டிருப்பினும் குடும்பத்திற்குக் குறைவு ஏற்படாமல் இருக்கின்றது.

24. ஜாதகி மணத்தின் காலம் சாற்றுவோம் பதினே ராண்டுள்
காதலன் உள்ளூர் தன்னில் கலப்பனும் குணத்தைச் சொல்வன்
பாதக மனமில் லாதான் பகருவான் சிலேடை வார்த்தை
தீதுகள் ஒருவர்க் கெண்ணான் தீரனு மூகை சாலி.

24. ஜாதகியின் விவாஹ காலத்தைக்கூறுவோம். இவளுக்குப் பதினோராவது ஆண்டுக்குள் மணம் நடை பெறும். மணமகன் சொந்த ஊரிலேயே ஜனித்திருப்பான். அவனுடைய குணங்களையும் சொல்லுகின்றோம். மிருதுவான மனம்படைத்தவன். சிலேடை வார்த்தைகளைப் பேசுவான். யாருக்கும் தீமைகளை எண்ணாதவன். தைரியம் உள்ளவன். சிறந்த மதி யூகியாகவும் இருப்பான்.

25. இருநிறம் உணச்சல் தேகி இடரென்றோர்க் குதவி செய்வன்
வருவனும் தனசுமூல நாளினி லுதிப்பா னுகும்
திருகாகு மில்லம் தானும் சீலனுய் வாழ்வன் என்றேம்
வரும்துணை ஆண்பாலொன்று வரைகிறோம் தீர்க்க மாக.

25. கருத்த மேனியன். சரீரம் மெலிந்திருக்கும். வாழ்க்கையில் இடர்ப்பட்டவர்களுக்கு உபகாரம் செய்வான். அவன தனுர்லக்கினத்தில் மூல நக்ஷத்திரத்தில் பிறந்தவன். சீலமுள்ளவனுக வாழ்வான். சொந்த வீடு இவனை விட்டு நீங்கும். அவனுக்கு ஒரு சகோதரன் உண்டு. அவன் தீர்க்காயுளுடன வாழ்வான்.

26. பெரிதான குடும்பம் பின்னால் பெறுவனு மென்று சொல்வேன்
அரிவைக்குச் சுதராண் ரண்டு அம்பிகை அவ்வாறு தீர்க்கம்
திருகிலாத் தீர்க்க மெய்தும் பேயர் யோகங்கள் சொல்வேன்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

26. இவன் (கணவன்) பிற்காலத்தில் பெரியகுடும்பம் உடையவனுக ஆவான். இந்தத் தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகளும் இரண்டு பெண்களும் பிறப்பார்கள். இந்நால்வரும் ஸ்திரமாக வாழ்வர். அவர்கள் மிக்க அதிருஷ்ட முள்ளவர்களாகவும் இருப்பார்கள். விநாயகரைப்பெற்ற தாயே! மேலும் கேட்பீராக.

27. மாதுவின் பூர்வம் சொல்வேன் வடதிசை தணிகை தன்னில்
சூதிலாக் கோகு லத்தில் ஜனித்துமே வறுமை யின்றிப்
பாதக மனங்க ளின்றிப் பஞ்சைக்குத் தாக மீந்து
வேதனை யில்லா தாகி மேவினன் கால னுடு•

27. மாதாவின் முன் பிறவியைக் கூறுவேன். முன்ஜன்மத்தில் இவள் வடதிசையிலுள்ள திருத்தணிகை க்ஷேத்திரத்தில் கள்ளம் கபடமற்ற இடையர் ஜாதியில் ஜனித்து வறுமையின்றி வாழ்ந்தாள். மென்மையான உள்ளம் உடையவளாக இருந்து, எளியவர்களுக்கு அன்னமும் தண்ணீரும் அளித்தாள். கவலையற்றவளாக வெகுகாலம் வாழ்ந்து காலனுடைய நாட்டிற்குச் சென்றாள்.

28. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனித்தவ ளென்று சொல்வோம்
அரிவையும் வறுமை காணாள் அதிகமாய்ப் பணிகள் சேர்ப்பள்
பொருளது பெருக்கம் செய்வள் புண்ணிய மனத்தா ளாகும்
அறந்தனை வளர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

28. பிரம்ம நான்குமுகமுள்ள கடவுளால் இங்குப் படைக்கப்பட்டிருக்கிறாள். அவள்தான் இக்கடகலக்கின மகளுக்குத் தாய். இவள் இச் சென்மத்திலும் வறுமை இல்லாதவள். அதிக ஆபரணங்களை அடைவாள். இவளுடைய வீட்டில் எல்லாப்பொருள்களும் மேன்மேலும் பெருகும். புனிதமனம் படைத்தவள். தருமத்தை வளர்க்கும் எங்கள் உயிருக்குயிராய் நிற்கும் தாயே ! மேலும் கேட்பீராக.

29. இருபது ஒன்ப தாண்டி லியம்புவோம் தந்தை கண்டம்
வரும்ஜன்மம் துவாரகை தன்னில் வருவனும் கோகுலத்தில்
குறுமுனி புகலு கின்றார் குமரனிச் சென்மம் தன்னில்
மருவின புண்ணிய மென்ன மறிவிப்பீர் முனியே நீர் தாம்.

29. ஜாதகிக்கு இருபத்தொன்பதாவது வயது நடக்கும் போது தந்தை மரணமடைவான். அவன் மறுஜன்மத்தில் துவாரகையில் யாதவ குலத்தில் பிறப்பான். இவன் துவாரகையில் பிறப்பதற்கான புண்ணியம் என்ன செய்திருக்கின்றான் என, அகஸ்திய முனிவர் வினவினார்.

30. அருமதி லிச்சை யாயும் யாவர்க்கு நல்லோ னுயும்
வருவோரை ஆத ரித்தும் வாக்கதைக் காத்த லாலும்
சிறியோரா பத்தைக் கார்த்தும் தீரமாய் வாழ்வ தாலே
உறைவனும் துவரை தன்னில் உத்தமி கேட்டி டாயே.

30. வசிஷ்டர் காரணங்களை விளக்கிக் கூறுகின்றார். தருமம் செய்வதில் பேரவாக்கொண்டிருந்தான். ஒருவருடைய மனமும் புண்படாதபடி நல்லவனாக வாழ்ந்தான். தன் வீட்டிற்கு வந்தவர்களை நன்கு உபசரித்தான். தனது வார்த்தையைக் காப்பாற்றினான். [உண்மையே பேசி வந்தான் என்பது கருத்து.] சிறியோர்களுக்கேற்பட்ட ஆபத்தை நீக்கி அவர்களை ரக்ஷித்தான். புலனடக்கத்துடனும் வாழ்ந்தான். இக்காரணங்களால் பாரத பூமியில் மஹா க்ஷேத்திரமான துவாரகையில் பிறப்பான். உத்தமியே ! மேலும் கேளுங்கள்.

31. எண்ணஞ்சு நாலு ஆண்டி லியம்புவோ மன்னை கண்டம்
திண்ணமாய் அன்பா னுவில் செப்புவோம் வரனும் கண்டம்
வண்ணமாய் ஜாத கிக்கு அன்பது ஒன்ப தாண்டில்
அண்ணலின் மகர மாதம் அறைகிறோம் கண்டம் தானே.

31. ஜாதகிக்கு நாற்பத்து நாலாவது வயதில் தாய் மரணமடைவாள். இவளுடைய ஐம்பத்து நான்காது வயதில் கணவன் மரணமடைவான். ஜாதகி தனது ஐம்பத்தொன்பதாம் வயதில் தைமாதத்தில் மரணமடைவாள்.

32. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிறப்பளாம் சைவச் சேயாய்ப்
பொன்பொரு ளுடைய ளாகிப் பூமியில் வாழ்வா ளாகும்
கன்னிகை ஜனன காலம் கரும்பாம்பு தசைமூன் றாண்டும்
தன்னுடன் திங்கள் ரண்டும் சாற்றினோம் பூர்வ பாகம்.

32. அடுத்து வரும் பிறவியில் காஞ்சியில் சைவ குலத்தில் பிறப்பாள். தங்கம் வெள்ளி வஸ்திரம் வீடு முதலியவைகளை அடைந்து சுகமாக வாழ்வாள். இவள் பிறக்கும்போது ராஹு தசையில் இருப்பு வருஷங்கள் மூன்று. மாதங்கள் இரண்டு.

ஜாதகம் 32

1. குருசனி சேல தாக குசன்புதன் மேரு வாகக்
பரிதியு மானில் தங்கப் பார்க்கவன் சாடி யாக
அரியினில் மதியும் நிற்க அலவனும் ஜன்மம் கேது
உரிமையாய் நவக்கோளிவ்வா றுறைந்ததால் பலன்சொல் வீரே.

குரு சனி			
சுக்கிரன்	இராசி சக்கரம்		லக்கினம் கேது
சூரியன் ராகு			சந்திரன்
செவ்வாய் புதன்			

1. நக்ஷத்திரம் மகம். கேது தசை இருப்பு வருஷம் ஒன்று, மாதங்கள் ஆறு, நாட்கள் பத்து.

குரு சனி, மீனம்; செவ்வாய் புதன் தனுஸ்; சூரியன் மகரம்; சுக்கிரன் கும்பம்; சந்திரன் சிம்மம்; கேது கடகம்; ராகு மகரம்; இலக்கினம் கடகம். இவ்வாறு நவக்கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி தேவி கேட்கலுற்றாள்.

2. உமையவள் கேட்கும் போது உரைக்கிறார் புயண்டர் தாமும்
அமைந்திடு மண்பால் ஜன்மம் அறைகிறோம் கீழ்மேல் வீதி
நவமதில் உத்தர நோக்கம் நாட்டுவோம் மேற்கில் சோலை
பவமுள சூழி உண்டு பகருவோம் தெற்கி லேதான்.

2. உமாதேவி இவ்வாறு கேட்டவுடன் புயண்டர் பலன்களைச் சொல்லுகின்றார். இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு வடக்கு நோக்கி இருக்கும். மேற்குத் திசையில் ஒரு சோலையுண்டு. தென் திசையில் ஒரு நீர் நிலையும் இருக்கும்.

3. ஓடையும் வயல்க ளுண்டு உத்தரம் ஆழி காணும்
தேடுதற் கரிய ஈசன் க்ஷேத்திரம் முசல்மான் உண்டு
நாடிய கீழக்கி லேதான் நாற்சந்தி கணேசன் கோஷ்டம்
கூடிய அக்கினி தன்னில் குறைதலே மாரி யுண்டே.

3. வட திசையில் நீர் ஓடையும் வயல்களும், நீர் நிலையும் உண்டு. மேலும் அத்திசையிலேயே பரமசிவன் கோயிலும் முசல்மான்களின் மசூதியும் இருக்கும். கீழ்த் திசையில் நான்கு தெருக்களின் சந்திப்பும் விநாயகரது ஆலயமுமுண்டு. தென் கிழக்கில் மாரியம்மன் கோயில் இருக்கும்.

4. இதுவலால் சமவூர் தன்னில் இலகிய கூரை வீட்டில்
அதிபனு முதிப்பா னென்றேம் அவன்தந்தை தாயின் யோகம்
சதியிலாத் துணைவர் புத்திரர் தன்மனை யாளும் யோகம்
கதியிலா முன்பின் ஜன்மம் சாற்றுவோ மிந்நூல் தன்னில்.

4. இவைகளைத் தவிர வேறு ஆலயங்களும் அவ்வூரில் உண்டு. இத்தகைய அடையாள முள்ள ஒரு நடுத்தரமான ஊரில் கூறை வீட்டில் இக்கடகலக்கின மகன் பிறந்திருக்கிறன். நாம், அவனுடைய தாய் தந்தை சகோதரர் மனைவி குழந்தை இவர்களைப்பற்றியும் முன்பின் ஜன்மங்களையும் இந்நூலில் சொல்லப்போகின்றோம்.

5. தந்தையின் குணத்தை யாங்கள் சாற்றுவோம் மால்நி றத்தான்
சிந்தையில் கட்டுக் கொஞ்சம் சீலனும் ஊக சாலி
பந்தமாய் ஒடிச்சல் தேகி பாரினில் செட்டுச் செய்வன்
வந்தவர்க் கன்ன மீவன் மறுமொழி அதிகம் கூறுவன்.

5. முதலில் தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். கருத்த நிறமுள்ளவன். மனத்தில் கபடமுண்டு. நற்சீலமுள்ளவன். மதியூகமுண்டு. அவனது உடல் மெலிந்திருக்கும். வியாபாரம் செய்து ஜீவிப்பான். வந்தவர்களுக்கு அன்னமளித்து உபசாரம் செய்வான். எதையும் ஆக்ஷேபித்துப் பேசும் இயல்புள்ளவன்.

6. நடையது சொகுசு முள்ளான் நன்முக வடிவு முள்ளான்
மடையரை மனத்தி லெண்ணன் வஞ்சனை மனத்த னாகும்
விடவாக்குச் சிவந்த கண்ணன் மெல்லியர் மோக வானும்
தடபுடல் செய்கை யுள்ளான் சத்திய விருப்பம் கொள்வன்.

6. அவனது நடை அழகியதாகும். வதனத்தில் பிறரை வசியம் செய்யும் பொலிவு உள்ளவன். அறிவிலிகளிடம் சிறிதும் தொடர்பு வைத்துக்கொள்ள மாட்டான். வஞ்சக மனப்பான்மை படைத்தவன். அவன் கூறும் தீங்கு வார்த்தைகள் பலிக்கும். சிவந்த கண்ணன். பெண்களிடம் மோகம் கொண்டவன். ஆடம்பரச் செய்கையும் உண்டு. சத்தியம் சொல்வதில் விருப்பமுள்ளவன்.

7. காரக தேக முள்ளான் கல்வியு சமம தாகும்
பாரிய சிருவ ராகும் பலவித வார்த்தை யுள்ளான்
சீரிய குணத்தா னாகும் தினம்சுகி புசிப்பு முள்ளான்
தேரிய வழியு முள்ளான் சிறுத்தவர்க் குதவி செய்வன்.

7. காரகதேகம் வாய்ந்தவன். உலக விவகாரங்களுக்குத் தேவையான கல்வியறிவு படைத்தவன். இவனுக்கு மனைவிமார் இருவர். பலவித வார்த்தைகளைப் பேசுவான். சீரிய குணங்கள் நிறைந்தவன். தினமும் சௌக்கியங்களை அனுபவிப்பான். எல்லோரும் அனுஷ்டித்த சம்பிரதாயத்தையே இவனும் அனுஷ்டிப்பான். [பழைய பழக்க வழக்கங்களிலிருந்து பிறழாதவன் என்பது கருத்து.] எளியவர்க்கு உபகாரம் செய்வான்.

8. இவனுடைத் துணைவர் தம்மை யிசைக்கிறோம் மூவராகும்
அவனிபால் பெண்பால் ரண்டு அரிட்டமாம் ஆண்பா லொன்று
நவனியில் தீர்க்க மாகும் நாயக னிளையோ னுமாம்
சிவனிட பாகத் தாளே செல்வியே மேலுங் கேளே.

8. இவனுடைய சகோதர பாவத்தைப்பற்றிக் கூறுகின்றோம். இவனுக்கு இரு சகோதரிகளும் ஒரு சகோதரனும் உண்டு. இம் மூவரும் நீண்ட காலம் வாழ்வார்கள். இவன் அவர்களுக்கு இளையவன். சிவபிரானின் இடது பாகத்தைப் பெற்ற செல்வியே ! மேலும் கேளுங்கள்.

9. இப்படி யிருக்குந் தந்தை யிவனுக்குத் தாரம்ரண்டில்
ஒப்புட னிளையா ளுக்கு உதித்தவ னிரண்டாம் ஜன்மம்
செப்புவோ மிவன்கு ணத்தைத் திருமகள் வாச முள்ளான்
தப்பித மெண்ணு நெஞ்சன் தைரிய மனத்தா னுகும்.

9. இவ்வாறு குணம் வாய்ந்த தந்தைக்கு இரு மனைவிகள் உண்டு. அவர்களில் இளைய மனைவிக்கு இரண்டாம் குழந்தையாக இக் கடக லக்கின மகன் பிறந்திருக்கிறான். இனி ஜாதகனுடைய குணத்தைக் கூறுவோம். லக்ஷ்மீ வாசம் பொருந்தியவன். யாருக்கும் தீங்கை எண்ணுமல் நட்புடன் இருப்பான். தைரியம் படைத்தவன்.

10. மாநிற முடைய தேகம் மர்மவான் கல்வி யுள்ளான்
ஈனமாம் குணத்த னுகும் எதிரியை வசியம் செய்வன்
தேன்மொழி கூறு வானும் சேயினில் அதிகம் சேர்ப்பன்
ஆனதோர் துணைவர் தீர்க்கம் ஆள்கார ருடைய னுமே.

10. மாநிறமுள்ளவன். பிறர் அறியாதபடி வேலைகளைச் செய்வான். சில ஹீனமான குணங்களும் இருக்கும். எதிரிகளைத் தன் வசப் படுத்துவான். தேன் போன்று இனிய மொழிகளையே பேசுவான். இவனுடைய பாலிய பருவத்தில் அதிக சொத்துக்கள் சேரும். இவனுடைய சகோதர சகோதரிகள் நீண்ட காலம் வாழ்வார்கள். இவனுக்குப் பல பணியாட்களும் இருப்பார்கள்.

11. தனதானிய விருத்தி யுள்ளான் சகலரு முறவு கொள்வன்
இனங்களு மெச்ச வாழ்வன் இவன்தந்தை ஆஸ்தி யில்லான்
மணங்களு மிரண்டு முள்ளான் மாதுல னதிக முள்ளான்
ஜனமுடன் வாழ்வா னுகும் காதலி மேலுங் கேளே.

11. இவன் வீட்டில் தன தானியங்கள் விருத்தியடையும். எல்லோரிடமும் நட்புக் கொள்வான். தன் ஜாதியர் மதிக்க வாழ்க்கை நடத்துவான். இவனுக்குத் தந்தை சொத்து இராது. இவனுக்கும் இரு மணங்கள் நடைபெறும். அம்மான்மார்கள் அநேகர். உலகத்தோர் கௌரவிக்கும் வகையில் ஜீவிப்பான்.

12. சித்திர வீடு செய்வன் தபசிக ளுறவு கொள்வன்
நித்தியஞ் சுகிபு சிப்பன் நிதானமாய் வார்த்தை கூறுவன்
புத்திமான் சகடு முள்ளான் பூஷணம் சேர்ப்பா னுகும்
வித்தகன் நெய்பா லிஷ்டன் விருத்தியாம் கோவு தானே.

12. அழகிய வீடு கட்டுவான். தபசிகளுடன் சிரத்தையோடு தொடர்பு உள்ளவன். எப்பொழுதும் சுகங்களை நுகர்வான். மிக்க விழிப்புடன் வார்த்தைகளைச் சொல்லுவான். புத்திவன்மை படைத்தவன். வண்டி முதலிய வாஹன வசதிகள் உடையவன். பல ஆபரணங்களைச் சம்பாதிப்பான். நெய் பால் இவைகளில் மிகவும் விருப்பமுள்ளவன். இவனிடம் பசுக்கள் நன்றாக விருத்தியாகும்.

13. உரோமங்கள் நீட்சி யுள்ளான் நுவலுப தேச முள்ளான்
சேமமாம் குடும்ப முள்ளான் செட்டுக்கள் பலவும் செய்வான்
தாமத குணத்தா னுகும் தைரியன் சூது முள்ளான்
காமியன் கனத்த புத்தி காவலர் நேசங் கொள்வன்.

13. உரோமங்கள் நீண்டிருக்கும். பெரியோரிடம் நல்லுபதேசங்களைக் கேட்டவன். சுபிக்ஷமான குடும்பமுடையவன். பல வியாபாரங்களைச் செய்வான். தாமச குணம் வாய்ந்தவன். தைரியம் வாய்ந்தவன். கபடமும் உண்டு. பெண்களிடம் காதல் கொண்டவன். பெரும்புத்தி படைத்தவன். அரசர்களின் நட்பும் இவனுக்கு இருக்கும்.

14 இன்னவன் துணைவர் தம்மை யிசைகிறோ மாண்பா லொன்று
கன்னியு மூன்று முண்டு கனத்திடு நான்கும் தீர்க்கம்
அன்னமே எழுவர் நஷ்டம் அவர் பலன் மூன்றில் சொல்வேன்
கன்னென மொழியு முள்ள காதலி மேலும் கேளே.

14. இவனுடைய உடன் பிறந்தாரைக் கூறுவோம். ஒரு சகோதரன். மூன்று சகோதரிகள். இந் நால்வரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இவர்களைத் தவிர எழுவர் பிறந்தும் சேதமாவார்கள். அவர்களைப்பற்றிய விவரங்களை மூன்றும் பாகத்தில் சொல்லுகின்றோம். கரும்பு போல் இனிய மொழியாளே ! தாயே ! கேளுங்கள்.

15. புயண்டரிவ் வாறுய்க் கூறப் புகலுவார் முனிவர் தாமும்
தயமுடன் ஜாதகர்க்கு நாட்டினீர் தாரம் ரண்டாய்
வியமுண்டோ சாந்தி யுண்டோ விளம்புவீ ரந்தச் சேதி
தயையுடன் சொல்லு மென்னச் சாற்றுவார் புயண்டர் தாமே.

15. ரிஷிபுயண்டர் இவ்வாறு கூறியவுடன், ஒரு முனிவர் ஜாதகனுக்கு இரு மனைவிகள் என்று சொன்னீர்கள். மூத்த மனைவி நிச்சயமாக இறந்து, அதன் பிறகு இவன் மறு மணம் செய்து கொள்வானா? அல்லது மூத்த மனைவியின் ஆயுள் விருத்திக்கு ஏதாகிலும் சாந்திகள் உண்டோ? இவ் விஷயங்களைக் கருணையுடன் தெளிவுபடுத்திக் கூறுங்கள் என்று வினவினர். முனிவரான புயண்டர் பதிலளித்தார்.

வேறு.

16. சத்தமம் தன்னில் மங்கலன் கருங்கோள்
சார்ந்திடச் சனியனும் பார்க்க
வித்தகன் தனக்கு முன்வினை தன்னால்
விளம்பினேம் தாரமே ரண்டாய்ச்
சுத்தமுன் வினையைச் சொல்லுவீ ரென்னத்
துறவியே யிவனின் முன் ஜன்மம்
குத்தமில் லாத தோக்கு மேல்பால்
குறித்தனம் அருகினில் சிற்றூர்.

16. களத்திர பாவ [ஏழாமிட]த்தில் செவ்வாயும் ராஹுவும் தங்கி இருக்க, அவ்விரு கிரஹங்களையும் சனி பார்ப்பதால் இச் சாதகனுக்கு முன்ஜன்ம வினையினால் இரு மனைவிகள் உண்டு என்று சொன்னோம். அவ்வினையைச் சொல்வீர்களாக என்று வினவ, புயண்டர் பதிலுரைத்தார். முனிவர்களே! இவன் முன் பிறவியில் புனிதமான தோகைக்கு அருகில் சிறிய ஓர் ஊரில்;

"தோகை" மதுரைக்கு அருகிலுள்ளதொரு சுப்பிரமண்யஸ்தம்.

குறிப்பு.—ஏழாமிடத்தில் "மங்கலன்" தங்க என்கிறார் இந்த நூலாசிரியர். ஆனால் ஏழ மிடத்தில் சூரியனும் ராஹுவும் இருக்கிறார்களே. தவிர, செவ்வாய் இல்லை. ஆறுமிடத்தில் (தனுவில்) இருக்கும் செவ்வாயை, சனி பத்தாவது பார்வையால் பார்க்கிறான். ஆனால் இந்நூலாசிரியர் சொல்லுகிறபடியே அஃது இரு தாரத்திற்கு காரணமாகாது.

வேறு

17. வைசிய குலமு தித்து வணிபங்கள் தீர்க்கம் செய்து
விஷேசமாய்த் தனங்கள் பெற்று மேதினில் கீர்த்தி யுண்டாய்
வகையிலா மனைவி மைந்தர் மாநல மதிகம் பெற்று
இசையுடன் வாழு நாளில் இசைக்கிறேம் ஊழி தாமே.

17. வைசிய குலத்தில் பிறந்து வியாபாரம் நீண்ட காலம் செய்து அதிக செல்வத்தையும் புகழையும் பெற்றிருந்தான். ஏராளமான பூமிகளைச் சம்பாதித்தான். இவ்வாறு சகல சௌகர்யங்களும் நிறைந்த இவன் மனைவி மக்களுடன் சுகமாக வாழுங்காலத்தில் இவனுக்கேற்பட்ட வினையைச் சொல்லுகின்றோம்.

18. அவ்வூரில் சைவன் தானும் அவனுமே நேச மாகிப்
பவ்வமாய் வெகு நாளாகப் பரிந்துமே வார்த்தை பேசி
நவ்வியே யிருக்கும் கால நாயகன் மனைவி யான
திவ்விய மாது தன்னைச் சேரவே கருதி யே தான்.

18. அவ்வூரில் ஒரு சைவன் வசித்து வந்தான். அவன் இவனுக்கு நண்பனான். இவ்விருவரும் சந்தோஷமாக அளவளாவி வருவார்கள். இவ்வாறு இருக்கையில் இவன், தன் நண்பனுடைய அழகிய மனைவியைச் சேரத் தீர்மானித்தான்.

19. பலவித வசியம் பேசிப் பாவையை வணங்கி யேதான்
சிலசில தனமும் சேலை செல்விக்கு ஈந்து பின்பு
குலவிய போகம் துய்க்கக் கோதைதன் கையைத் தொட்டான்
நலமுள சைவன் பெண்டிர் நாயகி ஏது செய்தாள்.

19. பலவித வசிய வார்த்தைகளைப் பேசியும் அவள் காலில் விழுந்தும், அவளுக்குப் பணத்தையும் வஸ்திரத்தையும் கொடுத்தும் அவளைத் தன் வசப்படுத்தியதாக எண்ணிக்கொண்டு, அவள் கையைத் தொட்டான். உடனே அந்தச் சைவப்பெண் கோபம் அடைந்து சொன்னாள்.

20. தோழன்தன் மனைவி போகம் துய்க்கவே கருத வேண்டாம்
ஆழியில் அனுபோ கத்தால் அதிகமாய் நரக மெய்தும்
ஏழையின் வார்த்தை கேளாய் என்றுமே வார்த்தை சொல்லப்
பாழான காமத் தாலே பலாத்கார மாகச் சேர்ந்தான்.

20. உன்னுடைய தோழனின் மனைவியை இவ்வாறு எண்ணுவது சரியல்ல. நீ, எண்ணிய காரியத்தால் அநேக நாள் நரகவாசம் செய்வாய். பரிதாப நிலையிலிருக்கும் என்னுடைய சொல்லைக் கேட்டு அதன்படி நடப்பாயாக. அவன் இவ்வுபதேசங்களைக் காதில் வாங்காதவனாகப் பாவம் புரிந்தான்.

21. அருந்ததி யொத்த மாது அவள்வர னில்லா வேளை
பெருந்தன முடைய பாவி போகங்கள் துய்த்த தாலே
வருந்தியு மனவெ றுப்பால் மங்கையு சாபம் சொல்வாள்
திருந்திய இச்சென் மத்தில் செல்வ மனைவியு மாள்வாள்.

21. கற்பில் சிறந்த அருந்ததி தேவிக்குச் சமமான அந்த நங்கையை, அவள் கணவன் இல்லாத சமயத்தில், அதிகச் செல்வம் படைத்த இவன் கெடுத்ததால், அவள் வருந்திச் சாபமிட்டாள். இச்சென்மத்தில் உனது மனைவி வயதின் மத்தியத்திலேயே இறப்பாள்.

22. மற்றொரு ஜன்மம் தன்னில் மனைவிகள் தோஷமாகிக்
குத்தமே அடைவா யென்று கூறியே ஜலத்தில் வீழ்ந்து
செத்தனள் அந்த மாது சொல்லிய சாபம் தானும்
பத்தியே அச்சென் மத்தில் பத்தினி மாண்டா ளென்றேப்.

22. மேலும், மறுபிறவியில் களத்திர தோஷத்தோடு பிறப்பாய் என்றும் சொல்லி நீரில் வீழ்ந்து மாண்டாள். அந்த மாது சொன்ன சாபத்தால் முன்பிறவியில் இவனுடைய மனைவி மத்தியிலேயே இறந்தாள்.

23. மனைவியும் மாண்டா ளென்று மைந்தனும் அரங்கம் புக்கிக்
கனமுட னரங்கர் பாதம் களிப்புட னருச்சித் தேத்திச்
சினமிலா தில்லே சென்று செங்கண்மால் பாதம் போற்றித்
தனிகனும் தோகை சென்று சண்முக னடிப ணிந்து ;

23. மனைவி மாண்ட பிறகு இவன் ஸ்ரீரங்கக்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீரங்கநாதருடைய திருவடித்தாமரைகளை மிக்க மகிழ்ச்சியுடன் அர்ச்சித்து வாழ்த்தி விட்டு, அதன்பின் சிதம்பரக்ஷேத்திரத்துக்கு வந்து அங்கு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீகோவிந்த ராஜப்பெருமானின் பாதங்களை வணங்கி அங்கிருந்து புறப்பட்டுத் தோகைக்குச் சென்று அங்குக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீசுப்பிரமணிய சுவாமியை வணங்கி ;

24. பேதியால் மரண மாகி பிரமனல் வரையப் பட்டுத்
தீதிலாத் தியின் வம்சம் ஜனித்த னிவனே யென்றோம்
கோதிலா முனிவர் சொல்லக் கூறுவா ளம்மன் தாமும்
மாதவர் இவன்முன் ஜன்மம் வைசிய குலமு தித்தான்.

24. வாழ்ந்து வரும் காலத்தில் பேதியினால் மரண மடைந்தான். பிரம்ம தேவன் அவனை வன்னிய வமிசத்தில் பிறப்பித்து இருக்கின்றான். இவ்வாறு முனிவன் கூறியவுடன் அம்பிகை கேட்கலுற்றாள். முன்ஜன்மத்தில் இவன் வைசிய குலமுதித்திருந்தான் என்று சொன்னீர்கள்.

25 மாலிவன் பதத்தைப் போற்றி வந்ததா லிச்சென் மத்தில்
சீலமாய்ச் செப்பு கோத்திரம் செறிந்தகா ரணங்க ளென்ன
வேலன்தன் ஆல யத்தில் வித்தகன் மரண மான
ஞாலமேல் புண்ணி யத்தால் நயப்புட னுதித்தா னென்றோம்.

25. மேலும் அப்பிறவியில் திருமாலிடம் பக்தி பூண்டிருந்தான். அப்படிப்பட்டவன் இக்குலத்தில் பிறக்கக் காரணம் என்ன ? முனிவர் பதில் கூறுகின்றார் :—சுப்பிரமணியசுவாமியின் கோயிலில் மரணமானதால் இச்சாதியில் பிறந்தான். ஆனால் பூர்வபுண்ணியத்தின் பயனாகச் செல்வமுடையவனாக இருக்கின்றான்.

26. சினேகன்தன் மனைவி யான செல்வியைப் புணர்ந்த தோஷம்
அனையவா லயங்கள் சென்று அரங்கனைத் துதித்த தாலே
கனமான தோஷம் போக்கிக் காதலி சாபத் தாலே
சினமுண்டு இச்சென் மத்தில் தேவிக்குத் தோஷ மாகும்.

26. தனது தோழன் மனைவியிடத்தில் அதருமமாக நடந்து கொண்டதால் இவனுக்கு அவளால் ஏற்பட்ட சாபம் ஸ்ரீரங்கம் முதலிய க்ஷேத்திரங்களுக்கு யாத்திரை சென்றதால் சிறிதுதான் தணிந்து இருக்கிறது. ஆகையால் அவள் சாபத்தின்படி மனைவிக்குத் தோஷம் நிச்சயம் உண்டு.

27. அந்தவோர் தோஷம் தீர அறைகிறோம் கிரியை ஒன்று
மைந்தனு மனைவி யோடு வடதிசை தணிகை சென்று
சந்தமும் முருகன் பாதம் தான்வ னர்ச்சித் தேத்தி
இந்தவா றைந்து கார்த்தி யிருவரும் சென்று மேதான்.

27. அந்தப் பாவமும் நீங்க ஒரு சாந்தி கூறுகின்றோம். இவன் தன் மனைவியுடன் வடதிசையிலுள்ள திருத்தணி க்ஷேத்திரத்திற்கு ஐந்து கிருத்திகை சென்று அங்கு எழுந்தருளி இருக்கும் சுப்பிரமணிய சுவாமியின் திருவடிகளுக்கு அர்ச்சனை செய்து, அத்திருவடித்தாமரைகளை வாழ்த்தி வணங்கிவரவேண்டும்.

28. ரஜதத்தால் மதலை செய்து நலமுடன் அடைக்காய்க் கெந்தம்
உசிதமாய் மறையோர்க் கீந்து ஊழியை யவர்க்கு ஓதி
வகையது பெற்றே னென்று மறையவர் சொல்லக் கேட்டு
அகைவிலா மடத்தி லேதான் ஐந்துபேர் அதிதி கட்கு ;

28. மேலும் வெள்ளியினால் குழந்தையின் பதுமை ஒன்றைச் செய்து அதைத் தாம்பூலம் சந்தனத்துடன் ஒரு வேதமோதும் அந்தணர்க்குச் சமர்ப்பித்து, அவரிடம் தனது பாவத்தை யாவரும் அறிய விண்ணப்பிக்கவேண்டும். ''பாவம் தீர்ந்து உய்யும் வழியைப் பெற்றாய்'' என்று அவர் அருளும் ஆசியைப் பெற்றுக்கொண்டு, புனித மடத்திலே தங்கி இருக்கும் ஐந்து சிவனடியார்களுக்கு ;

29. அன்னங்க ளீந்து பின்பு அன்புட னுள்ளூர் மீண்டு
உன்னித மாத மோர்நாள் உற்றதோர் கார்த்தி கைக்குப்
பன்னுமோர் பரத்துக் கன்னம் பாலக னளித்து வந்தால்
சொன்னதோர் மனைவி தீர்க்கம் சுந்தரி மேலுங் கேளே.

29. அன்புடன் அன்னமளிக்கவேண்டும். பிறகு தன் ஊருக்குத் திரும்பிவந்து ஏதாகிலும் ஒரு மாதத்தில் கிருத்திகை நக்ஷத்திரத்தன்று உறவினர்களுக்கும் மற்றவர்களுக்கும் அமுதளிக்கவேண்டும். இவ்வாறு செய்வானாகில் முன்ஜன்ம வினை நீங்கி மனைவி சுகமாக நீண்டகாலம் வாழ்வாள். சுந்தரியே ! மேலும் சொல்லுகிறோம்.

30. சொற்படி செய்யா னாகில் சுந்தரி தோஷ முண்டாம்
மெய்யுடன் செய்வா னாகில் விருத்தியாம் மனைவி தானும்
கற்புள மாதுரு சேதி கழறுவோ மிருசி வப்பள்
அற்பமாம் குணங்க ளில்லாள் அதிஷ்டவா ளென்று சொல்வோம்.

30. நாங்கள் சொன்னபடி செய்யாவிடில் மனைவியின் ஆயுளுக்குக் கெடுதல் ஏற்படும். மெய்யான மனத்துடன் யாம் விதித்த பரிகாரங்களைச் செய்தால் மனைவிக்கு ஆயுள் விருத்தி ஏற்படும். இவனுடைய தாயின் செய்தியைக் கூறுவோம். அவள் கருத்தவளுமல்லள். சிவந்தவளுமல்லள். கருஞ்சிவப்பாக இருப்பாள். ஈனகுணங்கள் இல்லாதவள். மிக்க அதிருஷ்டசாலி என்றும் கூறுவோம்.

31. அடக்கமு மொடுக்க முள்ளாள் அன்னங்கள் போட வல்லாள்
துடுக்கென வார்த்தை கூறுவள் சொல்லுமுன் கோபம் கொஞ்சம்
நடக்கையு நல்ல தாகும் நற்பந்து விரோதி யாகும்
படபட நடையு முள்ளாள் பார்வதி மேலும் கேளே.

31. மனத்திலும் சரீரத்திலும் அடக்க முள்ளவள். அன்னதானம் செய்யவல்லவள். வெட்டினற்போல வார்த்தைகளைப் பேசுவாள். முன் கோபமும் உண்டு. நன்னடக்கை உள்ளவள். உறவினர்களே இவளுக்கு விரோதியாவார்கள். நடை படபடப்பாக (வேகமாக) இருக்கும். பர்வத ராஜகுமாரியே ! மேலும் கேளுங்கள்.

32. இன்னவள் துணைவர் தம்மை யிசைக்கிறே மாண்பால் நான்கு
கன்னியு மிரண்டு தீர்க்கம் கனக்காது இதன்மேல் தோன்றில்
பின்னமா மரிட்ட மாகும் பேசுவோ மிவளுக் கேதான்
அன்னமே யாங்கள் சொல்லும் அருள்மொழி குன்று தென்றோம்.

32. இத்தகைய குணமுள்ளவளின் துணைவர்களைப் பற்றிக்கூறுகின்றோம். சகோதரர்கள் நால்வர். சகோதரிகள் இருவர். இவர்கள் எல்லோரும் ஸ்திரமாக வாழ்வார்கள். இந்த எண்ணிக்கைக்கு மேல் இவளுக்குத் துணைவர்கள் பிறப்பினும் பாலாரிஷ்டத்தினல் இறப்பார்கள். தேவியே ! நாங்கள் கூறிய அருள் மொழி வீணுகாது என்று உறுதி கூறுகின்றோம்.

33. மாதரு முன்ஜன்மத்தை வரைகிறோம் கொங்கு நாட்டில்
தீதான கர்ண வமிசம் ஜனித்துமே பொருளும் பெற்று
மேதினில் மைந்த ரின்றி வித்தகி வானின் கூட
போதவே தீர்த்தம் தோய்ந்து புக்கினள் மதுரை தன்னில்

33. இவனுடைய தாயின் முன் ஜன்மத்தைக் கூறுகின்றோம். கொங்கு நாட்டில் ‘‘ கர்ண ” வமிசத்தில் பிறந்து விரும்பிய பொருள்களை எல்லாம் பெற்றிருந்தாலும் மக்கட்பேறு இல்லாதவளாகி, தன் கணவனுடன் பல புண்ணிய தீர்த்தங்களில் நீராடி மதுரையை அடைந்தாள்.

34. சொக்கரைத் தரிசித் தேத்திச் சுவாமிதன் மலைக்குச் சென்று
முக்கிய தீர்த்தம் தோய்ந்து முருகனை அருச்சித் தேத்தித்
திக்கெலாம் தலங்கள் தோய்ந்து சென்றனள் காஞ்சி தன்னில்
நக்கன்மால் குமரன் காளி நாயகி பாலன் போற்றி.

34. அந்த க்ஷேத்திரத்தில் எழுந்தருளி இருக்கும் சொக்க நாதப் பெருமானைத் தரிசித்தும் அதற்குச்சமீபத்தில் உள்ளத் திருப்பரங்குன்றத்தில் கோயில் கொண்டிருக்கும் சுப்பிரமணிய சுவாமியை அர்ச்சித்தும் வணங்கியும், இன்னும் பல புனித தீர்த்தங்களில் நீராடியும் காஞ்சிக்கு வந்தாள். அங்கு எழுந்தருளி இருக்கும் சிவபிரான், விஷ்ணு, சுப்பிர மணியன், காளி, பார்வதி, விநாயகர் இவர்களையும் சேவித்துப் போற்றிவிட்டு;

35. தன்னுடை ஊரைச் சேர்ந்து செல்வியும் சிலநாள் சென்று
உன்னித மரண மாகி உதித்தவ ளவளே யென்றோம்
மன்னிய இவள்பின் ஜன்மம் வரைகிறோம் காஞ்சி கீழ்ப்பால்
அன்னவள் பேரூர் தன்னில் அநுமறைக் குலத்தி லேதான் ;

35. தன்னுடைய ஊருக்கு வந்து சிலகாலம் வாழ்ந்து அந்திய காலத்தில் மரணமடைந்தாள். அவ்வாறு புண்ணியங்களைச் செய்தவள் தான் இக் கடக லக்கின மகனுக்குத் தாயாக வாய்த்திருக்கின்றாள். இவனுடைய பின் ஜன்மத்தையும் கூறுகின்றோம். காஞ்சிக்குக் கீழ்த்திசையிலுள்ள ஒரு பெரிய ஊரில் பிராம்மண வமிசத்தில் ;

36. உதிப் பவளவளே யென்றோம் உறுந்தந்தை முன்ஜன் மத்தை
விதிக்கிறோம் அருணை நாட்டில் வேளாள குலமு தித்துப்
பதியினில் திருவு முண்டாய்ப் பாலர்கள் மனைவி யோடு
அதிகமாய்த் தனங்கள் பெற்று அவனுமே வாழு நாளில் ;

36. ஜனிப்பாள். ஜாதகனுடைய தந்தையின் முன் பிறவியைக் கூறுகின்றோம். இவன் முன் ஜன்மத்தில் திருவண்ணுமலையில் வேளாள குலத்தில் பிறந்து லக்ஷ்மீவாசம் பொருந்தியவனுக அதிக தனங்களைப் பெற்று மனைவி மக்களுடன் வாழ்ந்து வரும் காலத்தில் ;

37. பஞ்சையாய் ஸ்திரீயும் ஓர்நாள் பாக்கியன் வீட்டி லேதான்
கெஞ்சியே அன்னம் கேட்கக் கிளிமொழி வார்த்தை சொல்லி
வஞ்சிக்குச் சாத மீந்து மருவவே வேண்டு மென்று
மிஞ்சியே கைப்பி டித்தான் மெல்லியும் ஏது செய்வாள்.

37. மிக்க ஏழையான ஸ்திரீ ஒருத்தி ஒரு நாள் செல்வம் படைத்த இவனுடைய வீட்டை அடைந்து கொஞ்சம் அன்னம் கொடுக்குமாறு கெஞ்சினுள். இவனும் அவளிடம் நயமான வார்த்தைகளைப் பேசி, அவளுக்கு அன்னமிட்டு ஈன எண்ணத்துடன் அவளது கையைப் பற்றினன். அந்தப் பெண் என்ன செய்வாள் ? பாவம் !

38. ஏழையாய் என்னை நீயுமின்பங்கள் துய்க்க வேண்டித்
தாழ்வான வார்த்தை சொன்னய்ச் சதிருட னுந்த னுக்கு
வாழ்மனை யிரண்டு மாகி வந்திடும் ஜனனம் தோறும்
ஆழியில் மாத ராலே அனேகமாய்த் துன்பம் நேரும்.

38. என்னை ஏழை என்ற காரணத்தால் அவமதித்து அதரும சிந்தையுடன் எனது கையைப் பற்றினய். தாழ்வான வார்த்தைகளையும் பேசினய். ஆகையால் நீ மறு பிறவியில் முதல் மனைவியை இழந்து கஷ்டப்பட்டு அதன் பிறகு மறு மனைவியை மணப்பாய். ஆயினும் மாதர்களால் உனக்குப் பல துன்பங்கள் நேரும் என்றும் சபித்தாள்.

39. என்றுமே சாபம் தந்து ஏழையும் நீங்க லுற்றாள்
அன்றுமே அச்சென் மத்தில் அவன்மனை யாளு மாண்டு
குன்றிய மனத்த னகிக் கூத்தன்தன் பதிக்குச் சென்று
வந்தவ னிவனே யென்றோம் வரைகிறே மிச்சென் மத்தில்.

39. என்று சாபம் விடுத்து அந்த ஏழைப்பெண் விலகினுள். அதே ஜன்மத்தில் இவனுடைய மனைவி மாண்டாள். ஆகையால் இவன் அந்திய காலத்தில் மிகவும் மனம் குன்றியவனுக இறந்தான். அவ்வாறு சபிக்கப்பட்ட இவன் இங்குப் பிறந்து இச் சாதகனுக்குத் தந்தையாக அமைந்திருக்கிருன்.

40. மனைவிக்குத் தோஷ முண்டாய் மறுமனை யாட்கு புத்திரர்
தனயனு முதித்தா னென்றேரும் சாற்றுவோ மிவன்பின் ஜன்மம்
இணையிலா வள்ளூர் தன்னில் இவன்சைவ குலமு தித்து
அனையவே வாழ்வா னுகும் அம்மையே மேலும் கேளே.

40. இச் சென்மத்தில் முதலில் மணந்த மனைவி இறந்தாள். பிறகு இவன் மணம் செய்து கொண்டு இச் சாதகனை இளைய மனைவியினிடத்தில் புத்திரனுக அடைந்திருக்கிருன். இவனது (தந்தையின்) பின் சென்மத்தையும் சொல்வேன். அடுத்து வரும் ஜன்மத்தில் இவன் திருவள்ளூரில் சைவகுலத்தில் பிறந்துச் சுகமாக வாழ்வான். அம்பிகையே ! மேலும் கேளுங்கள்.

41. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோ மொருபா னென்பான்
மேதினில் தென்கீழ் தன்னில் வித்தகி வருவா ளாகும்
கோதிலாப் புத்திர பாவம் கூறுவோ மாண்பால் ரண்டு
மேதினில் கன்னி நான்கு செப்புவோ மிவனுக் கேதான்.

41. ஜாதகனுடைய விவாஹகாலத்தைக் கூறுவேன். இவனுடைய பத்தொன்பதாவது வயதில் மணம் நடைபெறும். மணப்பெண் தென் கிழக்குத் திசையில் ஜனித்திருப்பாள். இவனுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றேம். இவனுக்கு இரண்டு பிள்ளைகளும் நான்கு பெண்களும் பிறப்பார்கள்.

42. ஆறுமே தீர்க்க மாகும் அரிட்டமாம் மற்ற வெல்லாம்
கூறுவோம் தந்தை காலம் குறிக்கிறே முப்பான் மூன்றில்
சீரிய கலையி லேதான் சனிபொ சிப்பதனி லேதான்
வீருடன் கண்ட முண்டாம் மெல்லியே மேலுங் கேளே.

42. இந்த ஆறு குழந்தைகளும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். இந்த எண்ணிக்கைக்கு மேல் பிறக்கும் குழந்தைகள் நசிப்பார்கள். இவனுடைய தந்தையின் மரண காலத்தைக் குறிக்கிறேம். இவனுக்கு முப்பத்து மூன்றுவது வயது நடைபெறும் போது தந்தை மரணமடைவான். அப்பொழுது இவனுக்குச் சந்திர தசையில் சனி புக்தி நடக்கும். மெல்லியே ! மேலும் கேட்பீராக.

43. மாதிரு மரண காலம் வரைகிறே முப்பா னெட்டில்
தீதிலா ஆனி மாதம் திங்கள்தன் தசையி லேதான்
கோதிலா ரவிபு சிப்பில் கூறுவோம் கண்டம் தானும்
ஆதியாய் மறையைக் காக்கும் அம்மணி மேலுங் கேளே.

43. ஜாதகனுடைய தாயின் மரண சமயத்தையும் அறிவிப்போம். இவனுடைய முப்பத்தெட்டாவது வயதில் ஆனி மாதத்தில் தாய் மரணமடைவாள். அந்தச் சமயம் இவனுக்குச் சந்திரதசையில் சூரியபுக்தி நடைபெறும். ஆதியான வேதங்களைக் காப்பாற்றும் எங்கள் அன்னையே! கேளுங்கள்.

44. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னுறில்
மேதினில் கூனி மாதம் வளர்பிறைத் தசமி தன்னில்
கோதிலாப் பித்த நோயால் கூறிய பகலி லேதான்
மாதவன் பாதம் சேர்வன் மங்கையே மேலுங் கேளே.

44. மரணத்தைத் தெரிவிக்கும் தொடர்ச்சியில், ஜாதகனுடைய மரண காலத்தையும் தெரிவிக்கின்றேம். இவனுக்கு அறுபத்தாருவது வயது நடைபெறும்போது பங்குனி மாதத்தில் வளர்பிறையில் தசமிதிதியில் பகலில், இவன் திருமாலின் திருவடிகளை அடைவான். அந்திய காலத்தில் பித்த நோய்காணும். அதுவே இவனுக்கு முடிவாகும். உத்தமியே ! மேலும் சொல்லுகிறேம்.

45. பின்ஜன்மம் புதுவை தன்னில் பிராமண குலமு தித்து
மன்னவர் பக்கல் தன்னுலதிகார முள்ளா னுகிப்
பொன்னெடு பணிதி பெற்றுப் புகழ்ச்சியாய் வாழ்வா னென்றேம்
உன்னத வானை பெற்ற உத்தமி மேலுங் கேளே.

45. இவன் மறுபிறவியில் புதுவையில் பிராம்மண ஜாதியில் பிறந்து, அரசர்களின் ஆதரவால் அதிகாரஸ்தானம் வஹித்து, பொன் ஆபரணம் வீடு முதலியவைகளைப் பெற்று, புகழுள்ளவனுகச் சிறப்புடன் வாழ்வான். விநாயகரைத் தோற்றுவித்த அன்னையே ! மேலும் கேளுங்கள்.

46. ஜாதகன் தொழிலை யாங்கள் சாற்றுவோம் வணிபத் தாலும்
மேதினில் பூமி யாலும் விசேஷமாய்ப் பொருளைச் சேர்ப்பான்
கோதிலா வாயி ரம்பொன் குணமுடன் சேர்ப்பா னுகும்
பூதல மளந்தோன் தங்காய் புண்ணிய சாலி கேளாய்

46. ஜாதகனுடைய தொழிலைக் கூறுவோம். இவன் வாணிபமும் செய்வான். விவசாயமும் செய்வான். ஆகவே இத்தொழில்களால் இவனுக்குப் பொருள்கள் சேரும். ஆயிரம் பொன்களைச் சேமித்துவைப்பான். முன் ஒரு காலத்தில் தனது திருவடியால் பூமியை அளந்த திருமாலின் தங்கையே ! கேட்பீராக.

47. உதித்தவன் ஜனன காலம் உயர்கேது இருப்பு மேதான்
மதித்திட ஆண்டு ஒன்று வரும்திங்க ளிருமூன் ருகும்
சதியிலா நாட்கள் பத்தும் சாற்றுவோம் பலனை யாங்கள்
விதியினுல் தேக பீடை மெல்லியாள் ரோக முண்டே.

47. இவன் மக நக்ஷத்திரம் நான்காம் பாதத்தில் பிறந்திருக்கின்றுன். ஆகையால் கேதுதசையில் இருப்பு வருஷம் ஒன்று, மாதங்கள் ஆறு, நாட்கள் பத்து. இந்தத் தசையின் பலன்களைத் தெரிவிப்போம். பாலகனுக்குத் தேக பீடை உண்டாகும். ஜாதகனின் அன்னைக்கும் பல நோய்களால் தொந்தரவு ஏற்படும்.

48. செலவுக ளதிகம் நேரும் சினேகிதர் பகையு முண்டாம்
பலவிதத் துன்ப மாகும் பளிங்கவன் தசையி லேதான்
குலவிடும் செல்வ மெல்லாம் குண்டைகோ விருத்தி யுண்டு
நலமான பூமி சேரும் நல்லதோர் க்ஷேத்திரம் நேரும்.

48. வீண் செலவுகள் அதிகம் ஆகும். நண்பர்களும் பகைவர்களாவர் பலபல துன்பங்களும் தோன்றும். இதற்கடுத்து வரும் சுக்கிரதசையில் செல்வம் ஓங்கும். காளைகளும் பசுக்களும் விருத்தியடையும். செழிப்பான நிலங்களும் சேரும். மிகச் சிறப்பான (உலகத்தோரால் மெச்சப்பட்ட) நிலமும் கிடைக்கும். [நல்லதொரு புண்ணிய க்ஷேத்திரத்தில் வாசம் நேரும் என்றும் கொள்ளலாம்].

49. பலவித வணிபத் தாலும் பாக்கிய மிகவே சேரும்
இலகிய துணைவர் விருத்தி இராசர்கள் பேட்டி யுண்டாம்
உலகத்தோர் வணங்க வாழ்வன் உற்றதோர் சுபமே யுண்டாம்
தலமது பேத மாகும் சகோதரி சுபமே யுண்டு.

49. பல வியாபரங்களால் பாக்கிய விருத்தியுண்டு. சகோதரர்களும் ஜனிப்பார்கள். அரசபேட்டியும் கிடைக்கும். எல்லா மனிதர்களும் வணங்கும்படிச் சிறப்பாக வாழ்வான். ஒரு சுப சம்பவம் (விவாஹம்) நடைபெறும். வேறு ஒரு சொந்த வீட்டில் வாசம் செய்ய நேரும். சகோதரிக்கும் சுபம் நடைபெறும்.

50. மதுதொழில் விருத்தி யாகும் வரும்பிணி யாவும் நீங்கும்
பதியினில் திருவும் வாசம் பந்துபூ சிதமு முண்டு
சதிருடன் புயண்டர் சொல்லச் சாற்றுவார் பராசர் தாமும்
நதியவன் விரயத் தோனும் நிலவுமே பார்த்த லாலே;

50. "மது" (கள், சாராயம்) தொழிலால் இவனுக்குச் செல்வம் விருத்தியாகும். முன்பு வந்த பிணிகள் நீங்கும். வீட்டில் லக்ஷ்மீ வாசம் விளங்கும். உறவினர்களால் கௌரவிக்கப்படுவான். இவ்வாறு புயண்டர் கூறியவுடன், பராசர முனிவர் வினவினர். நான்காம் பாவாதிபதியான சுக்கிரன் எட்டில் இருக்க, அவனை இலக்கினாதிபதியாகிய சந்திரன் பார்ப்பதால் ;

51. சொல்லுவீர் பலனை யென்றுர் சுயபந்து விரோத மாகும்
புல்லரால் கலகம் நேரும் புகல்வாக்கில் ரோக முண்டாய்
நல்லதோர் துணைவர் சேதம் நாற்காலி சேத மாகும்
வல்லிதன் வர்க்கம் தன்னில் வந்திடும் சூதகங்கள்.

51. ஏற்படும் பலனைச் சொல்லுவீர்களாக. புயண்டர் பதிலளித்தார். பந்துக்களின் விரோதம் உண்டாகும். அல்பர்களுடன் சண்டையிட நேரும். வாக்கில் ரோகம் (பல்வலி) வரும். ஒரு நல்ல சகோதரன் மரணமடைவான். கால்நடைகளுக்கும் சேதமுண்டாகும். மனைவி வருக்கத்தில் உறவினர் இறப்பதால் சூதகமும் வரும்.

52. இராசரால் விரோத முண்டு நன்கூட்டுச் சேர்ந்து நீங்கும்
பாசமாய்த் தொழிலால் பேதம் பகர்ந்திட்டோ மிதுவல் லாமல்
நேசமாய்க் குடும்பத் தார்க்கு நித்திய ரோகம் காணும்
பாசமாய் யாவும் நீங்கும் வரைகிறோ மிரண்டில் நேராய்.

52. அரசர்களுடனும் விரோதமேற்படும். கூட்டுத்தொழில் ஆரம்பிக்கப்பட்டு சிறிது காலத்திற்குள் நின்றுவிடும். தொழில்களில் போட்டியும் பேதமும் ஏற்படும். இவைகளைத் தவிர இன்னும் சில பலன்களையும் சொல்லுகின்றோம். குடும்பத்தில் எல்லோருக்கும் எப்பொழுதும் ரோகத்தினல் தொந்தரவு ஏற்பட்டுக்கொண்டிருக்கும். ஆனல் வரும் கஷ்டங்கள் எல்லாம் சுலபமாக நீங்கும். இரண்டாம் பாகத்தில் இவைகளை விவரித்துப் பேசுவோமாக.

53. சுடர்தசை ஆறுண் டிற்கும் சொல்லுவோம் பலனை யாங்கள்
தடம்பூமி அதிகம் சேரும் சந்ததி விருத்தி யுண்டாம்
திடமான லாபம் காணும் சித்திர வீடு செய்வன்
அடல்பணி ரத்தி னங்கள் ஆள்கார ருண்டு கண்டாய்.

53. சுக்கிரதசைக்கு அடுத்துவரும் சூரிய தசை ஆறு ஆண்டுகளில் நடைபெறும் பலன்களை யாம் சொல்லுவோம். பூமிகள் அதிகமாகச் சேரும். சந்ததி விருத்தியும் இருக்கும். கணிசமான லாபத்தை அடைவான். அழகியதொரு வீடு கட்டுவான். பல ஆபரணங்களையும், வஜ்ர வைடூர்ய கோமேதகம் முதலிய இரத்தினங்களையும் சம்பாதிப்பான். பல சேவகர்களுக்கு யஜமானனுகத் திகழுவான்.

54. தேவதா பக்தி யுண்டு திருமகள் வாச மாகும்
பூமியும் தனதா னியங்கள் பொருந்திடு மிவனுக் கென்றும்
தீமையும் பகையும் வெல்லும் சென்றிடம் பெருமை காணும்
ஆவுமே விருத்தி யாகும் அம்மணி மேலுங் கேளே.

54. கடவுள்பக்தி மேன்மேலும் ஓங்கிவளரும். லக்ஷ்மீவாசம் பொருந்தியவனுக விளங்குவான். பூமிகளும், அதன் மூலம் தனதானியங்களும் இவனுக்குச் சேரும். கொடிய எதிரிகளையும் வென்று இடையூறின்றி வாழ்வான். சென்றவிடம் எல்லாம் இவனுக்குச் சிறப்பு ஏற்படும். பசுக்களும் நோயின்றி அபிவிருத்தியடையும். அன்புள்ள தாயே! மேலும் கேட்பீராக.

55. ஜயமுனி எழுந்தி ருந்து திடுக்கென உரைக்க லுற்றுர்
நயமிலா அஷ்ட மத்தில் லக்கினத் தோனும் கூடிப்
பயமுட னிருப்ப தாலே பகருவீ ரந்தச் சேதி
புயண்டரும் சொல்லு கின்றுர் பரிதியின் தசையில் தானே ;

55. இவ்வாறு புயண்டர் கூறிக்கொண்டு வருகையில் ஜய முனிவர் திடீக்கென்று எழுந்திருந்து, இலக்கினாதிபனாகிய சந்திரன் தசாநாதனாகிய சூரியனுக்கு எட்டாமிடத்தில் இருப்பதால் என்ன பலன்கள் ஏறபடும்? அந்தச் செய்திகளையும் சொல்லுவீர்களாக எனக் கேட்கலுற்றார். புயண்டர் பதிலுரைத்தார்.

வேறு : வெண்பா

56. பானு திசைக்கீழ் பசுநஷ்டம் தந்தைநோய்
தீமைகளும் தான்பெருகும் செப்பவே—இந்நாள்
கோள்கலகம் தானுண்டு கோதையரால் பாதையுண்டு
நீள்புவியால் விரோதம் வருநேர்.

56. சூரிய தசையின் ஆரம்பத்தில் கால் நடைகள் சேதமடையும். தகப்பனுக்கு நோய்காணும். அநேகதீமைகள் வந்திடும். அதிகமுமாகும். இவனைப்பற்றிக் கோள் சொல்லப்படுவதால் கலகங்கள் விருத்தியடையும். ஸ்திரீகளால் தொந்தரவுகள் நேரும். மேலும், நிலங்களைப் பற்றிய சண்டைகளும் நிகழும்.

57. கண்ணோய் சுரம்திரிச்சல் கனத்தசெட்டுப் பேதகமாம்
மண்ணால் வழக்கு வந்து—வசியமாம்
விண்ணுளோர் பகையுண்டு பின்பு செயம்
இரண்டிலே வகையாகச் சொல்வே னவர்க்கு.

57. மேலும், கண்வலி சுரம் வீண் அலைச்சல் இவை நேரும். இவன் செய்து வரும் பெரிய வியாபாரம் பங்கமாகும். நிலத்தின் மூலம் வழக்கு வரும். இவனுக்கு அனுகூல மாகும். தேவர்களின் கோபத்திற்கு ஆளாவான். ஆனால் பிறகு இவனுக்கு அவர்களாலேயே நன்மை உண்டாகும். இரண்டாம் பாகத்தில் பலன்களை விவரமாகச் சொல்லுவேன்.

வேறு

58. மதிதிசை ஒருபா னுண்டும் வரும்பலன் கூறு கின்றோம்
நிதநித லாப முண்டு நினைத்தகா ரியங்க ளாகும்
மதிபோலே செல்வ மோங்கும்........ன் பூடணங்க ளுண்டாம்
பதியினில் தானியம் சேரும் பாலர்க ளுண்டா மென்னே.

58. சந்திரதசை பத்து வருஷங்களில் நடைபெறும் பலன்களை இனி அறிவிப்போம். இவன் செய்யும் தொழிலில் ஒவ்வொரு நாளும் ஏராள லாபம் கிடைக்கும். இவன் நினைத்த காரியங்கள் கைகூடும். வளர் பிறைச் சந்திரன் போல இவனது செல்வம் வளர்ந்திடும். பல பூஷணங்களை அடைவான். நவதானிய விருத்தியுண்டு. அதிருஷ்டமுள்ள ஆரோக்கியம் வாய்ந்த குழந்தைகளும் ஜனிப்பார்கள்.

59. அன்னங்கள் விரைய மாகும் அனேககா ரியங்கள் கூடும்
சொர்ணங்கள் சேரு மென்றோம் சுகமது மிகவே காணும்
அன்னையும் தந்தை கண்டம் ஆள்கார ரதிக மாகும்
பின்னங்க ளொன்று மில்லை பேசுவோ மிதற்கு மேலே ;

59. இவனது வீட்டில் பல விருந்து பசாரங்கள் நடை பெறும். அனேக முயற்சிகள் பலிதமாகும். தங்கம் சேரும். மிக்க சௌக்கியத்தை அனுபவிப்பான். தாயாருக்கும் தகப்பனுக்கும் கண்டங்கள் ஏற்படும். நல்ல சேவகர்கள் கிடைப்பார்கள். எவ்வகையிலும் குறைவின்றிச் சுகமாக வாழ்வான். இதற்கு அடுத்து வரும் ;

60. மங்கலன் தசையி லேதான் வந்திடும் தேக பாதை
இங்கித ரிணங்க ளுண்டு இவன்பாரி தனக்குக் கண்டம்
பங்கமாய் முருக னாலே போகிடும் ரோகம் தானே
திங்களைப் போலே லாபம் செறிந்திடு மென்று சொன்னோம்.

60. செவ்வாய்த் தசையில் சரீர பீடையும் கடனும் ஏற்படும். மனையாளுக்கும் ஒரு கண்டம் வரும். ஆயினும் முருகப் பெருமானது திருவருளால் நோய்கள் நீங்கிச் சௌக்கிய மடைவாள். மேலும், வளர்பிறைச் சந்திரன் போல லாபங்கள் வளரும். [கடனும் தீரும் என்பது கருத்து.]

61. குடும்பத்தில் குறைவு மில்லை குலவிடும் பலம னேகம்
உடன்பிறந் தோர்க ளுக்கு உரைக்கிறோம் சுபமே யுண்டாம்
கடலுளோர் மெச்ச வாழ்வன் கனத்தவர் நேச மாகும்
படைவேலும் செட்டு ஓங்கும் பார்வதி மேலுங் கேளே.

61. குடும்பத்தில் எவ்விதத்திலும் குறைவு இராது. அனேக முயற்சிகளின் பயன்கள் கிட்டும். இச்சாதகனுடைய சகோதரர்களுக்குச் சுபசம்பவங்கள் நடைபெறும். உலகத்தார் இவனை மிகவும் கொண்டாடுவார்கள். பெருமை வாய்ந்த பிரபுக்களின் நட்பு உண்டாகும். வியாபாரம் மேன் மேலும் வளரும். பார்வதி தேவியே ! மேலும் கேளுங்கள்.

62. அதற்குமேல் கருங்கோ ளாண்டு அறைகிறோம் ஈரொன் பானும்
சதியிலாப் பூமி சேரும் சகலரும் வணங்க வாழ்வன்
விதவித செட்டால் லாபம் வண்டிவா கனமு முண்டு
அதிகமாய்த் தீர்த்த யாத்திரை ஆள்கார ரனந்தம் சேரும்.

62. அதற்கு மேல் ராஹு தசை பதினெட்டு வருஷங்களுக்கும் பலன்களைக் கூறுகின்றோம். செழுமை வாய்ந்த நிலங்கள் சேரும். சகலரும் இவனை வணங்கி நிற்பார்கள். பலவித வியாபாரங்கள் செய்வான். வண்டி குதிரை முதலிய வாகன சௌக்கிய முள்ளவனாக ஆவான். பல புண்ணிய தீர்த்தங்களுக்கு யாத்திரை சென்று நீராடுவான். எண்ணிக்கையற்ற சேவகர்கள் இவனுக்குத் தொண்டு செய்வார்கள்.

63. இரத்தின பூஷ ணங்கள் நல்கிடு மிவனுக் கென்றோம்
புத்திர விருத்தி யாகிப் போய்விடு மதலை தானும்
எத்திசைக் கீர்த்தி யுண்டு ஏழையை ஆத ரிப்பன்
வித்தக ரால யங்கள் விரைதிருப் பணியும் செய்வன்.

63. நவரத்தினங்களால் செய்யப்பட்ட பூஷணங்களையும் அடைவான். புத்திரவிருத்தியும் அழிவும் உண்டாகும். இவனது கீர்த்தி எல்லாத் திசைகளிலும் பரவும். ஏழைகளை ஆதரிப்பான். பல பழைய தேவாலயங்களைப் புதுப்பித்துச் சீர்திருத்திக் கும்பாபிஷேகம் முதலிய புண்ணியச் சடங்குகளை நிறைவேற்றி வைப்பான்.

64. பொன்தசை தன்னி லேதான் போய்விடு முடலம் தானும்
இன்னமும் விவர மாக இயம்புவோ மிரண்டாம் பாகம்
சொன்னசொல் தப்பா வம்மா துறவிகள் வாக்கு தானும்
கன்னலென மொழியி னாளே காதலி மேலுங் கேளே.

64. ராஹு தசைக்கு அடுத்துவரும் குருதசையில் இவன் தேகவியோக மடைவான். இன்னும் பல விவரங்களை இரண்டாம் பாகத்தில் சொல்லுவோம். தவம் செய்யும் துறவிகளாகிய நாங்கள் சொன்ன சொற்கள் தவரு. கரும்பு போன்ற இனிய மொழியினளே! மேலும் எங்களைக் கேட்டருள வேண்டும்.

ஜாதகம் 33

1. கடகலக் கினம தாகக் கலைகுரு கேது ரண்டில்
சுடரவன் புதனு மூன்றில் சுக்கிரன் சனியு நாலில்
விடமெட்டில் செய்வி யத்தில் விளம்புவீர் பலனை யென்று
மடமயில் கேட்கும் போது வசிஷ்டரும் கூறு கின்றார்.

			செவ்வாய்
ராகு	இராசி சக்கரம்		லக்கினம்
			சந்திரன் குரு கேது
		சுக்கிரன் சனி	சூரியன் புதன்

1. துர்முக புரட்டாசி மாதம் 20-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 20 நாழிகைக்கு ஜனனம். ஆங்கிலத் தேதி 4–10–1896 நவக்கிரஹங்களின் பாதசாரம். ஹஸ்தம் 3-இல் சூரியன். பூரம் 3-இல் சந்திரன். மிருகசீர்ஷம் 3-இல் செவ்வாய். உத்தரம் 2-இல் புதன் (அஸ்தம்). மகம் 3-இல் குரு. சுவாதி 3-இல் சுக்கிரன். விசாகம் 2-இல் சனி, அவிட்டம் 2 இல் ராஹு ஆயில்யம் 4-இல் கேது. நக்ஷத்திரம் பூரம். சுக்கிரதசையில் இருப்பு. வருஷங்கள் ஏழு, மாதங்கள் பத்து.

குறிப்பு.—இந் நூலாசிரியர் கருத்தின்படி அவிட்டம் 3-இல் ராகு, மகம் 1-இல் கேது.

இலக்கினம் கடகம் சந்திரன் குரு கேது சிம்மம், சூரியன் புதன் கன்னி சுக்கிரன் சனி துலாம் ராஹு கும்பம் செய்வாய் மிதுனம். இவ்வாருன கிரஹ அமைப்பின் பலன்களைச் சொல்லுவீர்களாக என உமா தேவி கேட்கும் போது, வசிஷ்ட முனிவர் பதில் உரைக்கின்ருர்.

2. இந்தசேய் ஆணும் ஜன்ம மில்லமும் கீழ்ப்பால் நோக்கம்
தென்வட வீதி யாகும் சிறுவூராம் கூறை யில்லம்
அந்தரி கணேசன் மேற்கில் அருகினில் நதியு முண்டு
வந்திடு மார்க்க முண்டு வரைந்தஇவ் வடையா ளத்துள்;

2. இக்கிரஹ நிலையில் பிறந்தக் குழந்தை ஆண். வீடு கீழ்த்திசை நோக்கி இருக்கும். வீதி தெற்கு வடக்கில் அமைந்திடும். அது சிறிய ஒர் ஊர். கூறை வீடு. மேற்குத்திசையில் காளி கோயிலும் விநாயகர் ஆலயமும் விளங்கும். சமீபத்தில் ஒரு நதியும் உண்டு. ஜன நடமாட்டம் உள்ள ஒரு மார்க்கமும் இருக்கும். நாங்கள் சொன்ன இவ்வடையாள முள்ள கிராமத்தில்.

3. பாலகனி ரண்டாம் ஜன்மம் பகருவோ மிவனின் யோகம்
வேல்விழி அன்னை தந்தை வித்தகி மனைவி யோகம்
சாலவே புத்திர யோகம் சாற்றுவோ முன்பின் ஜன்மம்
ஆலத்தை யுண்டோன் தேவி அறிவிப்போ மிந்நூல் தன்னில்.

3. குடும்பத்தில் இரண்டாம் குழந்தையாக ஜெனித்திருக்கின்றான். தேவியே! நாங்கள் இந்நூலில் இவனுடைய யோகங்களையும், தாய், தந்தை, மனைவி, புத்திரர், இவர்களைப் பற்றியும், முன்பின் ஜன்மங்களைப்பற்றியும் அறிவிக்கப்போகின்றோம்.

4. தந்தையின் துணைஆண் ஒன் று சத்திமா ரிருவ ராகும்
அந்தஆண் இளையோ னாகும் அவன் குணம் கூறக் கேண்மோ
நொந்திடு மனத்தா னாகும் நேமியில் ஜீவிப் பானும்
கந்தன்மேல் பத்தி பூண்பன் காலிகள் விருத்தி யல்பம்.

4. ஜாதகனுடைய தந்தைக்கு ஒரு சகோதரன். இரு சகோதரிகள். சகோதரன் இவனுக்கு இளையவன், தந்தை சகோதரனுடைய குணத்தைக் கூறுகின்றோம் கேளுங்கள். எப்பொழுதும் கவலைப்படும் மனமுள்ளவனாக ஜீவிப்பான். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டவன். எருது பசு முதலிய கால்நடை பிராணிகள் இவனிடம் விருத்தியை அடையா.

5. சிலதுநாள் ஒன்ருய் வாழ்ந்து செல்வனும் வேற தாக
நலமதை யெவர்க்கும் செய்வான் நாயகி ஒன்றே தீர்க்கம்
நிலமதைக் காப்பா னாகும் நேர்ந்திடும் சுதர்ஆண் ரண்டு
தலைவியுமி ரண்டேயாகும் தனமது மில்லா னாகும்.

5. அவன் தனது அண்ணனுடன் (ஜாதகனின் தந்தையுடன்) சில காலம் ஒரே கூறையில் ஒன்றாகக் குடும்பம் செய்து பிறகு தனிக் குடும்பத்தை ஏற்பான். எல்லோருக்கும் நன்மைகளையே செய்வான். அவனுக்கு மனைவியும் ஒருத்திதான். அவளும் தீர்க்காயுளுடன் வாழ்வாள். தனக்குள்ள நிலத்தைப் பரிபாலிப்பான். அவனுக்கு இரு பிள்ளைகளும் இரு பெண்களும் உண்டு. அவன் பணம் படைக்காதவனாக இருப்பான்.

6. சுகதுக்கம் கலந்து வாழ்வன் சிலசேதி பின்பால் சொல்வேன்
தகைமையாய்ப் பிதாவின் சேதி ஜன்ம நாள் கேட்டை யாகும்
அகமது கடக மாகும் அல்பமாம் கோபி யாகும்
பகைமோசம் துணையைச் செய்வன் பத்தினிக் கிஷ்ட னாகும்.

6. அவனுக்குச் சுகங்களும் துக்கங்களும் கலந்தே வரும். (அதிக துக்கம் உள்ளவன் என்பது கருத்து). அவனைப்பற்றிய விவரங்களைப் பின் பகுதியில் சொல்லுகின்றோம். ஜாதகனின் பிதா குணங்களைத் தெரிவிப்போம். அவன் கேட்டை நக்ஷத்திரத்தில் பிறந்தவன். அவனுக்கும் ஜன்மலக்கினம் கடகம். சிறிது கோபமுள்ளவன். சகோதரனைப் பகைத்தும் கொள்ளுவான். அவனை மோசமும் செய்வான். தன்மனைவியிடத்தில் மிக்க அன்பு கொண்டவன்.

7. மாநிறம் சம தேகத்தன் வடிவுகள் மெய்யில் காணும்
தானென கருவம் கொஞ்சம் சந்தேக மனத்த னாகும்
பான்மையாய்ப் பேசு வானும் பாரது விருத்தி செய்வன்
ஊனமில் லாத தேகி உறுதியா மனத்த னாகும்.

7. மாநிறம் வாய்ந்தவன். சமமான தேகவளர்ச்சி உடையவன். புண்ணால் ஏற்பட்ட சில அடையாளங்கள் சரீரத்தில் காணப்படும். தான் என்ற அகம்பாவம் கொண்டவன். சந்தேகப்படும் இயல்புள்ளவன். அழகாகப் பேசுவான். பூமிகளை அதிகப்படுத்துவான். இவனது உடலில் எந்தவித ஊனமும் இராது. உறுதியான மனம் படைத்தவன்.

8. இல்லமும் பின்னால் செய்வன் எதிரிக்கு அஞ்சா னாகும்
சொல்லது சுருக்க மாகும் சோம்பிடான் காரி யத்தில்
புல்லிய புத்தி கொஞ்சம் போஜன வறுமை காணன்
தல்லியை காப்பா னாகும் தனரேகை கரத்தில் தோன்றும்.

8. பிற்காலத்தில் சொந்தமாகத் தனி வீடு கட்டுவான். எதிரிக்குப் பயப்படாதவன். இவனுடைய வார்த்தை சுருக்கமாகவே இருக்கும். வேலை செய்வதில் சோம்பல் இல்லாதவன். சிறிது தாழ்ந்த புத்தியும் இருக்கும். ஆகாரத்திற்குக் கஷ்டப்படாதவன். தாயை அன்புடன் உபசரிப்பான். இவனது கையில் தனரேகை விளங்கும்.

குறிப்பு.—தனரேகை—இது பணவரவை அறிவிக்கும் கோடு.

9. உரோமங்கள் நீட்சி யில்லான் நுவலுப தேசம் கொள்ளான்
காமனே விருப்பம் கொள்வன் கட்செவி போலக் கோபம்
நேமங்கள் தவறுதல் செய்வன் நிஷ்டூர வசனம் கூறுவன்
தாமத குணமும் கொஞ்சம் சங்கரி கேட்டி டாயே.

9. உரோமங்கள் நீண்டிரா. பெரியோர்களிடம் நல்லுபதேசம் கேளாதவன். அதிக ஆசை உடையவன். சர்ப்பம் போல சினம் உள்ளவன். சம்பிரதாயமாக வந்த நியமங்களைப் பின்பற்றாதவன். கரோமான வார்த்தைகளைப் பேசுவான். தாமத குணமும் உள்ளவன். சிவபிரானின் தேவியே! மேலும் கேளுங்கள்.

10. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே ஜனிப்பா னாகும்
அன்னவன் குணத்தைச்சொல்வேன் அழகுளான் மால்நி றத்தான்
பன்னியே பேச வல்லன் பற்களும் தரள மொக்கும்
பொன்பணி பின்னால் சேர்ப்பன் பூமியை விருத்தி செய்வன்.

10. இத்தகைய குணமுள்ளவனுக்கு இக்கடகலக்கின மகன் ஜனித்திருக்கின்ருன். இனி ஜாதகனுடைய குணங்களைக் கூறுவோம். அழகு வாய்ந்தவன். கருத்த மேனியான். பன்னிப் பன்னிப்பேசும் இயல்புள்ளவன். பற்கள் முத்துப்போன்றிருக்கும். பிற்காலத்தில் பொன்னுலாகிய ஆபரணங்கள் இவனுக்குக் கிடைக்கும். நிலத்தை அபிவிருத்தி செய்வான்.

11. கல்வியும் சமம தாகும் காலிகள் விருத்தி யுண்டு
மல்லிற்கு முன்செல் லாதான் மருமமு மில்லா னுகும்
இல்லை யென்றுரைக்க மாட்டான் யீகைவான் நல்லோ னுவன்
சொல்லதைக் காப்பானுகும் தூர்வழக்க தனில் செல்லான்.

11. போதிய அளவு கல்வியறிவு படைத்தவன். கால்நடைகள் இவனிடம் புஷ்டியை அடையும், சண்டையில் ஈடு படான். மனத்தில் ஒன்றையும் ஒளிக்காதவன். உதவியை யாசிப்பவர்களுக்கு இல்லை என்று சொல்லாதவன். தியாக குணம் வாய்ந்தவன். எல்லோருக்கும் நல்லவனுக நடப்பான். தனது வார்த்தையைக் காப்பாற்றுவான். அதரும வழிகளில் சேரான்.

12. இன்னவன் செங்கை தன்னி லிலங்கிடும் பத்ம ரேகை
கன்னியர் மோக னுவன் கண்முகம் வசிய முண்டு
அன்னியர் மதிக்க வாழ்வன் அடைந்தோரை ஆத ரிப்பன்
பின்னமில் லாத தேகி பூவையே கேட்டி டாயே.

12. இவனுடைய சிவந்து அழகிய கையில் பதும ரேகை திகழும். பெண்களிடம் மோகம் கொண்டவன். முகத்தில் பிறரை வசப்படுத்தும் பொலிவு வாய்ந்தவன். உலகத்தோர் கௌரவிக்கும் வகையில் வாழ்வான். தன்னை அண்டியவர்களை ஆதரிப்பான். சரீரத்தில் குறைவு இல்லாதவன். தேவியே! மேலும் கேளுங்கள்.

குறிப்பு.—பதும ரேகை, மலர்ந்த தாமரைப் புஷ்பம் போல் அமைந்துள்ள கோடு. இது, வாழ்க்கையில் இடையூறின்றி அரசனுக வாழ்வான் என்பதை அறிவிக்கும். இந்தக் கோடு தாமரைரேகை கமலரேகை முதலிய பரியாய பதங்களாலும் சொல்லப்படும்.

13. தன்துணை முன்னோர் நஷ்டம் தங்கும்பின் கன்னி ரண்டு
மன்னன்போல் ஆண்பா லொன்று மங்கையும் ஒன்று தீர்க்கம்
முன்துணை தோஷ மெவ்வாறு மொழிகு வீரந்தச் சங்கை
கன்னியில் கேது தங்கக் கழறினேம் தோஷம் தானே.

13. இவனுக்கு முன் பிறந்த சகோதரன் நீடித்து வாழான். இச் சாதகனுக்குப் பிறகு பிறக்கும் இரு சகோதரிகளும் அரசன் போன்ற ஒரு சகோதரனும், அவனுக்குப் பின்பு ஜனிக்கும் ஒரு பெண்ணும் தீர்க்கமாக வாழ்வார்கள். முன் பிறந்த சகோதரன் தங்கமாட்டான் என்பதற்குக் காரணத்தைச் சொல்லுங்கள் எனப் பார்வதி கேட்க, முனிவர் கூறுகின்ருர். குடும்பபாவம் என்று சொல்லப்படும் இரண்டாமிடத்தில் சந்திரனுடன் கேது இருப்பதால் இவனுக்கு முன் சகோதரன் பிறந்து நஷ்டமாகி இருக்கவேண்டும்.

14. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாநிறம் நீட்சி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உயர்வான புத்தி யேற்பள்
காதலி யோக சாலி கணவன்தன் மனதுக் கேத்தோள்
தீதுகள் ஒருவர்க் கெண்ணுள் தீரமாம் குணமில் லாதாள்.

14. தாயின் குணத்தைக் கூறுவோம். மாநிறம் வாய்ந்தவள். சரீரம் உயரமாக இருக்கும். சுகமாகப் பேசுவாள். மேலான புத்தி படைத்தவள். மிக்க அதிருஷ்டமுள்ளவள். தன் கணவனது விருப்பப்படி நடப்பாள். ஒருவருக்கும் தீமைகளை நினைக்கமாட்டாள். தைரிய மில்லாதவள்,

15. இல்லமும் வட கீழாகும் இவள்துணை ஆண்பால் ரண்டு
வல்லியு மொருத்தி தீர்க்கம் அவர்சேதி பின்பால் சொல்வேன்
தல்லியின் பூர்வம் கேளாய் தக்கோலம் தன்னிலேதான்
புல்கினுள் செங்குந்த சேயாய்ப் புத்திர ருடைய ளாகி.

15. இவள் பிறந்த வீடு வடகிழக்குத் திசையில் உள்ளது. இவளுக்குச் சகோதரர்கள் இருவர். சகோதரி ஒருத்தி. இம்மூவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். அவர்களைப்பற்றி வரலாறுகளைப் பின்பாகத்தில் சொல்லப்போகிறேம். இவளுடைய பூர்வஜன்மத்தைக் கூறுகின்றேம். கேட்பீராக. இவள் முன் பிறவியில் தக்கோலத்தில் நெசவாளர் குலத்தில் பிறந்து, கணவன் குழந்தைகள் இவர்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தாள்.

16. அறுமுகன் பக்தி கொண்டு அறமதி லிச்சை யாயும்
திருமகள் வினையில் லாமல் சென்றனள் கால னுடு
பிரமனுல் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
தரையினில் வறுமை காணுள் சங்கரி கேட்டி டாயே.

16. ஆறுமுகக் கடவுளிடம் பக்தி பூண்டிருந்தாள். தருமம் செய்வதில் சிரத்தை உடையவளாகித் தருமத்தைச் செய்துவந்தாள். எவ்வித பாவமும் செய்யாதவளாகி அந்தியத்தில் யமனுலகம் சென்ற இவளைப் பிரம்மதேவன் இங்கு பிறப்பித்திருக்கிருன். தனது ஆயுள்காலம் முடிய வறுமையைக் காணுதவள். உமாதேவியாரே! மேலுங் கேளுங்கள்.

17. மறுஜன்மம் கொங்கு நாட்டில் வருவளாம் வைசிய சேயாய்த்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வதி வாழ்வா ளாகும்
உறைக்கிறேம் தந்தை பூர்வம் உயர்காஞ்சி தன்னிலேதான் ;
மிகச் செய்யும் வைசிய சேயாய் நேருவா ளென்று சொன்னேம்.

17. இவள் மறுபிறவியில் கொங்குநாட்டில வைசிய குலத்தில் பிறப்பாள். லக்ஷ்மீவாசம் பொருந்தியவளாகச் சிறப்புடன் வாழ்வாள். ஜாதகனுடைய தந்தையின் முன் பிறவியைக் கூறுவேன். இவன் முன் பிறவியில் மேலான க்ஷேத்திரமாகிய காஞ்சியில் எப்பொழுதும் பொருளைச் சேமிக்கும் சுபாவமுள்ள வைசிய குலத்தில் பிறந்து, வியாபாரத்தைச் செய்து ;

18. சுகதுக்கம் உடைய ளுகிச் சென்றனன் கால் ளூடு
தகைமையாய்ப் பிரமன் லக்கம் ஜனித்தன னென்று சொல்வோம்
வகையுட னிவன்பின் ஜன்மம் மறுவூரில் முத்திரிய சேயாய்
வகையாக உதிப்பா ளுகும் பராசரரும் மறுத்துச் சொல்வர்.

18. உலகில் இன்ப துன்பங்களை அனுபவித்து, காலனது நாட்டை அடைந்தான். பிறகு இங்குப் பிறந்திருக்கிறன். இவனுடைய மறுஜன்மத்தையும் கூறுவோம். அடுத்தப் பிறவியில் இவன் மறுவூரில் முத்திரிய குலத்தில் பிறப்பான் என்று சொன்னவுடன், பராசரர் குறுகிட்டுச் சொன்னுர்.

குறிப்பு.—"முத்திரியர்" "முத்திரையர்" "தலையாரி" போன்ற கீழ்த்தர கிராமசேவகர்.

19. இந்தவோர் ஜன்மம் தன்னில் இவன் செய்த கொடுமை யென்ன
தன்துணை மோசம் செய்து தந்தையும் வாழ்வ தாலே
அந்தவோர் குலமு திப்பான் அறிகுவீர் கரும காலம்
செந்தியின் திசையி லேதான் செப்புவோம் தந்தை கண்டம்.

19. மறு பிறவியில் தாழ்ந்த குலத்தில் பிறப்பதற்கான என்ன பாவத்தை இவன் இப்போழுது செய்திருக்கிறன்? வசிஷ்டர் பதிலுரைத்தார். இவன் தன் சகோதரனை ஏமாற்றிச் செல்வத்தை அபகரித்து வாழ்ந்தானுகையால் மறுபிறவியில் நிச்சயமாகத் தாழ்ந்த ஜாதியில்தான் ஜன்மத்தை அடைவான். ஜாதகன் தாய் தந்தையர்களுக்கு ஈமச் சடங்குகள் செய்ய நேரிடும் காலத்தைக் கூறுவேன். ஜாதகனுக்குச் சூரியதசை நடக்கும் போது தந்தைக்குக் கண்டம் ஏற்படும்.

20. இருபது ஒன்ப தாண்டில் எழிலானி மாதம் தன்னில்
திருமகன் தந்தை கண்டம் சேயனைப் பெற்ற அன்னை
வருங்கண்ட மீரு ருண்டில் மறலியைக் காணு ளாகும்
நெறியதாய் முப்பா னேழில் நீங்கிடும் உடலம் தானே.

20. ஜாதகனுக்கு இருபத்தொன்பதாவது வயது நடைபெறுகையில் ஆனி மாதத்தில் தந்தை மரணமடைவான். தாய்க்கு இவனுடைய பன்னிரண்டாவது வயதில் ஒரு கண்டம் நேரும். ஆனுல் அப்பொழுது அவள் இறக்க மாட்டாள். இவனுடைய முப்பத்தேழாவது வயதில் தாய் நிச்சயம் இறப்பாள்.

21. பத்தொன்ப தாண்டு தன்னில் பகருவோம் பிதாவி னன்னை
வித்தகன் மணத்தின் காலம் விளம்புவோ மிரண்டாண் டுள்ளே
பத்தினி வடகீழ் தன்னில் பாவைய ரன்னை வர்க்கம்
சத்தியும் வருவர் ளாகும் சாற்றுவோ மவள்கு ணத்தை.

21. இவனுடைய பத்தொன்பதாவது வயதில் தந்தையின் தாய்க்கு மரணம் நேரிடும். ஜாதகனின் விவாஹ காலத்தை அறிவிப்போம். பாட்டி மரணமாகி இரண்டாண்டிற்குள் இவனுக்கு மணம் நடைபெறும். மணப் பெண் வடகிழக்கில் மாதுருவருக்கத்தில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணங்களைத் தெரிவிப்போம்.

22. மாந்தளிர் மேனி யாகும் மனமது பார்க ளுண்டு
கூர்ந்துமே வார்த்தை சொல்வள் புன்சிரிப் புடைய ளாகும்
சாந்தமும் கோப மேற்பள் சாதமு மன்பா யீவள்
போதிய தனத்தா ளாகுமிடர் செய்யாள் யாவ ருக்கும்

22. அவளது மேனி மாந்தளிர் போல் திகழும். விசாலமனம் படைத்தவள். கூர்ந்து கவனித்து வார்த்தைகளைப் பேசுவாள். எப்பொழுதும் புன் சிரிப்பு முகத்தில் விளங்கும். கோபம் சாந்தம் இவ்விரு குணங்களும் அவளுக்குண்டு. அன்புடன் அன்னமளிப்பாள். தேவையான அளவிற்குச் செல்வம் படைத்தவள். யாருக்கும் இடையூறுகளைச் செய்யாள்.

23. மங்கையும் வயது தீர்க்கம் மாமுனி தடுத்துச் சொல்வர்
சங்கையாய் ஏழோன் தானும் சரத்தினில் வெள்ளி கூட
நங்கைய ரிருவ ராகும் நாரதர் தடுத்துச் சொல்வர்
திங்களும் குருவும் ரண்டில் தனத்துளோன் மூன்றில் தங்க ;

23. இவளுக்கு வயது தீர்க்கம். என்று இவ்வாறு வசிஷ்டர் கூறியவுடன் ஒரு மஹரிஷி ஆக்ஷேபித்தார். களத்திர பாவத்திற்கு அதிபனுன சனி, சுக்கிரனுடன் சரராசியாகிய துலாத்தில் இருப்பதால் இவனுக்கு மனைவிமார் இருவர் என்று சொல்ல வேண்டுமல்லவா? இந்த ஆக்ஷேபத்திற்கு நாரதர் பதில் கூறினுர். சந்திரனும் குருவும் "குடும்ப" ஸ்தானத்தில் இருப்பதாலும், அந்த ஸ்தானத்திற்குடையோன்—சூரியன் (குடும்பத்திற்குக் குடும்பமாகிய) மூன்றுமிடத்தில் இருப்பதாலும் ;

24. இருமனை அணுகா தாகும் ஏழிடம் சேயும் பார்க்க
அரிவையாய்ப் பிரமன் கூட அணுகிடு மவர் பலத்தால்
வருங்காலம் சொல்லு மென்ன ஆறஞ்சு ஆண்டு நேரும்
அரிவைதன் குலத்து மாது ஆயுசுமட்டும் தங்கும்.

24. இவனுக்கு இரு மனைவிமார்கள் ஏற்படமாட்டார்கள். ஆனுல் பன்னிரண்டாமிடத்தில் இருக்கும் செவ்வாய் எட்டாம் பார்வையாக எட்டாமிடத்தைப் பார்ப்பதாலும் சனி, சுக்கிர சம்பந்தத்தாலும் வேறு ஒரு மாது இவனைக் கணவனுகத் தீர்மானித்து வந்தடைவாள். அவளையும் இவன் மனைவியாக அங்கீகரிப்பான். அம்மாதும் இவன் சாதியைச் சேர்ந்தவளே. இச் சம்பவம் இவனுடைய முப்பதாவது வயதில் நிகழும்.

25. ஜாதகன் தனக்குப் புத்திரர் சாற்றும்வாம் நவமே தோன்றும்
தீதாகும் சிலவே என்றேரும் தீரமாயாண்பால் மூன்று
மாதுவு மிரண்டு தீர்க்கம் வரைகிறேம் தன்பால் சேதி
போதக வானை பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

25. ஜாதகனுடைய புத்திரபாவத்தை அறிவிப்போம். இவனுக்கு ஒன்பது குழந்தைகள் உதிப்பார்கள். சில குழந்தைகள் நீடித்திரா. மூன்று பிள்ளைகளும் இரண்டு பெண்களும் தீர்க்கமாக வாழ்வார்கள். அவர்களைப் பற்றிய வரலாறுகளைப் பிறகு அறிவிப்போம். விநாயகரைப் பெற்ற கருணைக்கடலே மேலும் கேளுங்கள்.

26. எந்தமா துக்குப் புத்திரர் அழிவரா மந்தச் சங்கை
வந்திடு மாதுக் கேதான் மைந்தர்கள் பலமு ருவே
சொந்ததோர் மாதுக்கேதான் செப்பினேம் புத்திரர் தாமும்
கந்தனைப் பெற்ற மாதே கழறின மொழி குன்றுது.

26. சில குழந்தைகள் அழியும் என்று சொன்னீர்கள். சொந்த மனையாளின் மகவுகள் அழியுமா? அல்லது அபிமான மனைவியின் குழந்தைகள் அழியுமா? இதைத் தெளிவுபடுத்துங்கள். என ஒரு முனிவர் கேட்க, வசிஷ்டமுனிவர் பதில் உரைத்தார். அபிமானித்த மாதுவின் குழந்தைகள் நீடித்து வாழா, சொந்த மனைவியிடம் உதித்தக் குழந்தைகள் ஸ்திரமாக வாழும். சுப்பிரமணியனை ஈன்ற தாயே! எங்கள் மொழி பொய்யாகாது.

27. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறேம் தோகை தன்னில்
நன்னிய செக்கான் வம்சம் நன்னியே வணிபம் செய்து
அன்னையும் தந்தை மிக்க அவன்மனை புத்திர ருண்டாய்
இன்னவன் வாழு நாளி லியம்புவோம் ஊழி தானே.

27. இவனுடைய முன் பிறவியைக் கூறுகின்றேம். முன் பிறவியில் இவன் "செக்குவாணியன்" வமிசத்தில் பிறந்து வியாபாரத்தைச் செய்து கொண்டு, மனைவி மக்கள் தாய் தந்தையர் இவர்களுடன் சுகமாக வாழுங் காலத்தில் இவனுக்கேற்பட்ட ஒரு கருமத்தொடர்பைக் கூறுகின்றேம்.

28. தனமது இல்லா ஏழை சாதமும் குறைவுண் டாகி
இனம்விட்டு மாரன் பக்கல் இயம்புவாள் வார்த்தை யொன்று
வினைசெய்வேன் உன்னில் லத்தில் மேவுவாய் சாத மென்னத்
தனயனும் அதற்கி சைந்து தங்கைபோல் காத்து வந்தான்.

28. ஒரு ஏழைப்பெண், பசியைத் தணிப்பதற்கு ஆகாரமில்லாமல், தனது உறவினர்களையும் துறந்து, இவனிடம் வந்து உனது வீட்டில் இட்ட வேலைகளைச் செய்கிறேன்; எனக்கு அன்னம் அளிப்பாயாக என்று வேண்டினுள். இவனும் மனமிளகி அவளைத் தனது தங்கை போல் பாவித்து அன்னமிட்டுக் காப்பாற்றி வந்தான்.

29. பின்சில நாளி ருந்து பொருளது களவு கொண்டு
கன்னிகை மானைப் போலே கடந்தனள் வேறூர் தானும்
மன்னவன் பின்னுள் பார்த்து மாதுவைக் காணுதிைத்
தன்மனச் சஞ்ச லத்தால் தந்தியின் கோஷ்ட முன்பால் ;

29. சிலநாள் சென்றவுடன் அந்தப்பெண், இவனது வீட்டிலுள்ள பொருள்களைத் திருடிக்கொண்டு, மான்போல, வேறு ஒரு கிராமத்திற்குள் ஓடி மறைந்தாள். இவன், சிறிதுகாலம் அவளை எதிர்பார்த்தும் வராததால் மனம் குழம்பி விநாயகர் கோயிலுக்குச்சென்று .

வேறு

30. முன்கட னுயின்கடனே அறிவன்பானு
மூப்பொருள் நீயறிவாய் யென்று சொல்லித்
தன்கரத்தால் தெருத்தூளைத் தூற்றிச் சென்றுன்
சார்ந்ததுவே அச்சாபம் தையலுக்கு
மன்னவனும் வினையின்றி மரணமாகி
மறையவனும் வரையவந்தான் இச்சென்மத்தில்
முன்கடனைத் தீர்ப்பதற்கு அபிமான பகுள
மேவுவாள் முப்பதா மாண்டு தன்னில்.

30. நான் அவளுக்குப்பட்ட கடனுக இருப்பின் அதைச் சூரிய நாராயணனும் அறிவான். உலகிற்கு ஆதிகாரணமாகவுள்ள நீயும் அறிவாய் என்று சொல்லி, தனது இரு கரங்களாலும் தெருத்தூளை எடுத்து ஆகாயத்தில் தூற்றி விட்டுச் சென்றுன். இவன் கொடுத்த சாபம் அந்தப் பெண்ணைப் பிடித்துக்கொண்டது. வேறு பாவமின்றி இவன் மரணமடைந்து இப்பொழுது இக்கடகலக்கினத்தில் படைக்கும் கடவுளால் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றுன். முன் பிறவியில் இவனிடம் உதவிபெற்றவளும் அவனது பொருளைத்திருடிச் சென்றவளுமாகிய அந்தப்பெண் தனது கடனைத் தீர்ப்பதற்காக இவனிடம் அபிமானமனைவியாக சாதகனுடைய முப்பதாம் வயதில் சேர்ந்திருக்கின்றுள்.

வேறு

31. வந்தவன் யோகச்சேதி வரைகிறேம் இனிமே லாக
விந்தையாய் வனவாசங்கள் மேவிடும் பதின்மூன் றுண்டும்
தந்தையின் துணையும் வேறு சார்ந்திடும் ஒன்ப தாண்டுகள்
அந்தவன் வனவா சங்கள் அணுகிடும் நினைத்த தோங்க.

31. இஃது இருக்கட்டும். இனி ஜாதகனுடைய யோகங்களைக்கூறுகின்றேம். பதின்மூன்று ஆண்டுகளுக்கு இவன் வனவாசம் செய்வான். இவன் ஜனித்து ஒன்பது ஆண்டிற்குள் குடும்பப்பிரிவினை நடைபெறும். வனவாசமும் நினைத்தகாரியம் ஈடேறுவதற்கு அனுகூலமாக அமையும்.

32. ஈராறு அண்டின் மேலாய் இல்லமும் செய்தானுண்டு
பாரது சேர்த்தனுண்டு பசுக்களும் விருத்தி யாகும்
தீரமா மனமு மெய்தும் ஜனபந்து மதிக்க வாழ்வன்
ஆறுமா முகத்தோன் அன்பால் யாவத்தும் கூடு மென்றேம்.

32. பன்னிரண்டு வருஷங்களுக்குமேல் புதிய வீடு கட்டுவான். நிலங்கள் சேரும். பசுக்கள் விருத்தியடையும். மனவுறுதி ஏற்படும். உறவினர் மெச்ச வாழ்வான். ஆறுமுகக்கடவுளின் அருளால் எல்லா முயற்சிகளும் இவனுக்குக் கைகூடும்.

33. நாட்டிய கோள்க ளேழும் நாலுரா சியிலே நிற்க
இட்டும்கே தார யோகம் இதன் பலன் கூறக் கேண்மோ
திட்டுவே ளாண்மை யுள்ளோன் ஜகந்தனி லுள்ளூர்க் கெல்லாம்
ஜனஉப காரியாவன் கோத்திரம் திலக மொப்பாம்.

33. குரு கேது சந்திரன் சூரியன் புதன் சுக்கிரன் சனி ஆகிய ஏழு கிரஹங்கள் லக்கினம் முதல் நாலாம் இடத்திற்குள் இருப்பதால் இவனுக்குக் "கேதார" யோகமுண்டு. இந்த யோகத்தின் பலன்களைத் தெரிவிக்கின்றோம், கேளுங்கள். பயிர்த்தொழில் நன்றாகப் பலிதமாகும். ஊரில் உள்ள எல்லா ஜனங்களுக்கும் உபகாரம் செய்திடுவான். தனது வமிசத்திற்குத் திலகம் போல் விளங்குவான்.

34. தந்தைநாள் பூமிகொஞ்சம் தான்சேர்ப்பன் சிலது பூமி
சுந்தர முடையா னாகும் துறவிகள் நேசம் கொள்வன்
பிந்திநாள் போகம் வாய்க்கும் போஜன வறுமை காணன்
சந்தத மிருபாண்டின் மேல் சந்திரன் பிறைபோல் யோகம்.

34. பிதுரார்ஜிதமான பூமிகொஞ்சம் இவனுக்குண்டு. தனது முயற்சியாலும் சில நிலங்களைச் சம்பாதிப்பான். அழகுவாய்ந்தவன். துறவிகளிடம் பக்தி யுடையவன். பிற்காலத்தில்தான் இவனுக்கு நல்ல யோகம் வாய்க்கும். போஜன சௌக்கியமுள்ளான். இருபதாவது வயதிற்குமேல் இவனுடைய யோகங்கள் சுக்கிலபக்ஷ சந்திரன்போல் வளரும்.

35. சல்லிய பாதை யேற்கான் சாராள்கள் சேர்த லுண்டு
புல்லிய ருறவு கொள்ளான் பின்துணை நாற்ப தாண்டில்
செல்லுவான் வேறதாகச் செப்புவோம் பின்பால் சேதி
அல்லலைத் தவிர்க்கு மெங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

35. கடன் இல்லாதவன். பல சேவகர்களை ஆதரிப்பான். கெட்டவர்களின் நட்புக் கொள்ளாதவன். இவனுடைய சகோதரன், இவனுக்கு நாற்பதாவது வயது நடைபெறுகையில், குடும்பப்பிரிவினை செய்துக் கொண்டு தனிக் குடும்பம் நடத்துவான். அவனைப்பற்றிய செய்திகளைப் பின் பாகத்தில் தெரிவிப்போம். எங்கள் கஷ்டங்களை நிவிருத்தி செய்யும் தாயே! மேலும் கேளுங்கள்.

36. நாற்பது நாலு ஆண்டில் நல்கிடும் கண்ட மொன்று
ஏற்கவே அன்பின் எட்டில் யெழில் மீன மாதம் தன்னில்
கூப்பிடு வானும் காலன் குறித்ததோர் பாலன் தன்னைத்
தீர்ப்பாக இவன்பின் ஜன்மம் செப்புவோம் தாயே கேளும்.

36. ஜாதகனுக்கு நாற்பத்து நாலாவது வயதில் ஒரு பெரிய கண்டம் வரும். ஆனால் அஃது இவனுக்கு முடிவாக ஆகாது. ஐம்பத்தெட்டாம் வயதில் பங்குனி மாதத்தில் யமன் இச் சாதகனைத் தன்னுட்டிற்கு அழைப்பான். இவனுடைய பின்ஜன்மத்தைப்பற்றித் தீர்மானித்துக் கூறுவோம் அன்னையே! கேட்பீராக.

37. உத்தரம் திருமால் பேரில் உதிப்பனும் ரெட்டி வம்சம்
மெத்தெனகுடும்பி யாகி வித்தகன் வாழ்வா னாகும்
சித்தசன் ஜனன காலம் சுக்கிரன் தசையே ழாண்டும்
பத்துமா தங்க ளென்றும் கூறினம் பூர்வ பாகம்.

37. வடதிசையிலுள்ள திருப்பதிக்கு அருகில் ரெட்டிவமிசத்தில் பிறந்து மதிப்புவாய்ந்த குடும்பமுள்ளவனுகிச் சிறப்புடன் வாழ்வான். சாதகன் பூரம் மூன்றும் பாதத்தில் ஜனித்திருக்கின்றான். ஆகையால் சுக்கிர தசையில் இருப்பு வருஷங்கள் ஏழு, மாதங்கள் பத்து. இவ்வாறு பூர்வ பாகம் முற்றிற்று.

ஜாதகம் 34

1. மதிகாரி கோல தாக மர்லயறு மகனி லாகப்
புதன்புகர் பரிதி கேது புக்கிடம் சீய மாக
நிதிகுரு கடக மாக நிலமகன் நந்தி யாக
இதுவிதக் கோளு நின்று . . . வளைபா லாக

		செவ் வாய்	
ராகு	இராசி சக்கரம்		லக்கினம் குரு
			புதன் சுக்கிரன் சூரியன் கேது
		சந்திரன் சனி	

1. துர்முக ஆவணி மாதம் 27-ஆந்தேதி வியாழக்கிழமை இரவு 25 நாழிகைக்கு ஜனனம். ஆங்கிலத்தேதி 10-9-1896. நவக்கிர ஹங்களின் பாதசாரம்—பூரம் 4-இல் சூரியன். சுவாதி 3-இல் சந்திரன். ரோஹிணி 4-இல் செவ்வாய். ஹஸ்தம் 4-இல் புதன். மகம் 2-இல் குரு. ஹஸ்தம் 2-இல் சுக்கிரன். விசாகம் 1-இல் சனி. அவிட்டம் 3-இல் ராகு. மகம் 1-இல் கேது. நக்ஷத்திரம் சுவாதி. ராகு தசையில் இருப்பு வருஷங்கள் நான்கு, மாதங்கள் பதினொன்று.

குறிப்பு.—இந்நூலாசிரியரின் கருத்தின்படி, புதன் குரு சுக்கிரன் இவர்களின் சாரம் வித்தியாச மடைகின்றது.

சந்திரன், சனி துலாம், ராகு கும்பம், புதன் சுக்கிரன் சூரியன் கேது சிம்மம், குரு கடகம், செவ்வாய் விருஷபம். இலக்கினம் கடகம். இவ்வாறு நவக்கிரஹங்கள் நிற்க, பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி தேவி வினவினள்.

2. சங்கரி கேட்கும் போது சடைமுனி புகலு கின்றார்
இங்கிவை ஆண்பால் ஜன்ம மில்லமும் கீழ்மேல் வீதி
தங்கிடும் வடதென் வாசல் தந்திமா காளி மேற்கில்
முந்துமால் வடமே லாகும் முக்கண்ணி மாரி கீழ்ப்பால்.

2. இவ்வாறு உமாதேவி கேட்டவுடன், சடைமுனி பலன்களைத் தெரிவிக்கின்றார். இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு வடக்கு வரிசையில் இருப்பதால் தென் திசையை நோக்கும். விநாயகர் ஆலயமும், காளி கோயிலும் மேற்குத் திசையில் தங்கிடும். வடமேற்கில் விஷ்ணு கோயில்கொண்டிருப்பார். கீழ்த்திசையில் ஒரு காளி கோயிலும் மாரியம்மன் கோயிலும் இருக்கும்.

3. சொல்லிய அடையா ளத்துள் தோன்றுவான் மூன்றும் ஜன்மம்
தல்லியின் இல்ல மாகும் தந்தைதாய் துணைவர் யோகம்
வல்லவன் குடும்பச் சேதி வரைகிறே முன்பின் ஜன்மம்
அல்லலில் லாமல் சொல்வோம் அம்பிகை யாளே கேளாய்.

3. மேலே சொல்லப்பட்ட அடையாளங்கள் அமைந்த ஊரில் குடும்பத்திற்கு மூன்றும் மகவாக ஜனித்திருப்பான். இவன் ஜனனம் தாயின் வீட்டில் நிகழ்ந்திருக்கும். ஜாதகனின் தாய், தந்தை, சகோதரர், மனைவி, புத்திரர் இவர்களைப்பற்றியும், யோகம், முன்பின் ஜன்மம், இவைகளையும் இந்நூலில் நாங்கள் இனிமையாகக் கூறுவோம். அன்னையே! கேட்டருளல் வேண்டும்.

4. இவன் பிதாகு ணத்தைச் சொல்லுவேன் மிடரான புத்தி யில்லன்
தவசிக ளுறவு கொள்வன் சந்தேக மனத்த னாகும்
அவனியோர்க் கிணக்கம் சொல்லான் அடாவடி கூறு னாகும்
பவமன மில்லா னாகும் பணிந்தோ ரை ஆத ரிப்பன்.

4. ஜாதகனின் தந்தை குணத்தைச் சொல்வேன். இவன் கெட்ட புத்தி இல்லாதவன். துறவிகளிடம் பக்தி கொண்டவன். சந்தேக மனப்பான்மை வாய்ந்தவன். உலகத்தோர்க்கு அனுகூலமாகவோ பிரதிகூலமாகவோ பேசாதவன். தீய எண்ணமில்லாதவன். கீழ்ப்படிந்தவர்களைக் காப்பான்.

5. சுகப்புசிப் பிலிச்சை யுண்டு சுந்திர மூடையா னாகும்
ஜகமதில் நல்லோ னுவன் சேயிழை யில்லம் வாசம்
அகமது பின்னல் செய்வன் அரிரேகை யுடையா னாகும்
உகமையாய்ப் பேசு வானும் உறுதியில் லாத நெஞ்சம்.

5. சுகமாக ஆகாரங்களைச் சாப்பிடுவதில் அதிக சிரத்தை காட்டுவான், அழகு வாய்ந்தவன். எல்லோரிடமும் நல்லவனுகப் பழகும் இயல்புள்ளவன். தன் மனைவியின் வீட்டில் வாசம் செய்வான். பிற்காலத்தில் தனி வீடு கட்டுவான். கையில் விஷ்ணு ரேகை திகழும். எல்லோரும் கேட்டு உகக்கும் வகையில் இனிமையாகப் பேசுவான். உறுதி இல்லாத நெஞ்சம் உடையவன்.

6. வலப்புறம் மச்ச முண்டு வெண்மேகம் பின்னல் காணும்
புலவன்போல் மொழிவா னாகும் பொருளது விரயம் செய்வன்
குலத்துளோர்க் கிணக்கம் சொல்லான் கூடாத தந்தை யில்லம்
சரத்தொழில் சிலநாள் செய்வன் சல்லிய பாதை ஏற்பன்.

6. உடலில் வலது புறத்தில் மச்சமிருக்கும். பிற்காலத்தில் இவனுக்கு வெண்மேகம் வரும். மிகப் பெரிய பண்டிதன் போலப் பேசுவான். [உண்மையில் பண்டிதல்லன் என்பது கருத்து.] பொருள்களை அதிகமாகச் செலவு செய்வான். தன் ஜாதியருக்கு அனுகூலமாகப் பேசாதவன். பிதாவின் வீட்டில் இவனுக்கு வாசம் நேரிடாது. சஞ்சாரம் செய்து (Travelling Agency முதலியன) ஜீவிப்பான். இவனுக்கு கடனும் ஏற்படும்.

7. இருவித குணத்தா னுகும் யாரையும் வசியம் கொள்வன்
தனமது விரயம் செய்வன் சாமரை ரேகை யுண்டு
வறுமைகள் மத்தில் நேரும் மாநிறம் உயர மில்லாள்
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

7. நற்குணங்களும் தீயகுணங்களும் இவனிடம் இருக்கும். எல்லோரையும் தன் வசப்படுத்தும் சுபாவமுள்ளவன். பணத்தை அளவிற்கு மீறிச் செலவு செய்வான். கையில் சாமர ரேகை திகழும். ஆயுளின் மத்திய காலத்தில் ஏழ்மையால் கஷ்டப்படுவான். மாநிறம் வாய்ந்தவன். உயர்ந்து வளராதவன். பெருமை வாய்ந்த வேதங்களின் சிகரமாகிய உபநிடதங்களில் விளங்கிடும் அன்னையே! மேலும் கேளுங்கள்.

8. துணைவர்கள் எழுவர் தோன்றும் சோர்வுறும் ஒருவ னென்றேும்
கன்னிகையர் மூவ ராகும் காளையு மவ்வா றென்றேும்
சினமில்லா வேறுய்ச் செல்வர் செப்புவோம் பின்பால் சேதி
அணையவே யவன்தன் பூர்வம் அறிவிப்போ மினிமே லாக.

8. இவனுக்கு ஏழு உடன் பிறந்தார்கள் தோன்றுவர். அவர்களில் ஒருவன் இறப்பான். ஆகவே மூன்று சகோதரர்களும் தீர்க்க காலம் வாழ்வார்கள். சில காலத்திற்குப்பின் அம்மூன்று சகோதரர்களும், எவ்வித கோபதாபமுமின்றி, தனி குடும்பம் ஏற்பர். பின் பாகத்தில் விவரமாகத் தெரிவிப்போம். இவனுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுவோம்.

9. தென்திசை ஆழி தன்னில் ஜனித்தனன் வன்னிய சேயாய்
முன்னேர்க்குத் தொண்டு பூண்டு முதல்வனு வாழு நாளில்
வெண்ணீரை மார்ஜா ரன்மேல் தம்மாய்த் தெளித்தா னென்றேும்.

9. தென் திசையிலுள்ள ஆழியில் இவன் வன்னிய குலத்தில் பிறந்திருந்தான். பெரியோர்களுக்குத் தொண்டுசெய்து நல்லவனுக வாழும் நாளில் வெந்நீரை ஒரு பூனையின்மேல் தெளித்தான்.

10. அதனுலே தேகம் பொங்கி அடைந்தது காலனுடு
அதிபனு மந்தி யத்தில் மகுடங்கள் கொண்டு மேதான்
கதியான காலனுடு சார்ந்துமே பிரமன் லக்கம்
இதுகுலம் தனினு தித்தான் எய்திடும் முன் னூழ்த் தோஷம்.

10. இவன் செய்த காரியத்தினுல் பூனையின் உடல் முழுவதும் வெந்து காலக்கிரமத்தில் இறந்தது. இவனும் அந்திய காலத்தில் எல்லோரும் கடைசியில் அடைகின்ற யமனுலகம் சென்று பிறகு இப்பொழுது இக் குலத்தில் பிறந்திருக்கின்றுன். முன் ஜன்ம வினையின் பயன் இந்தப் பிறவியில் இவனுக்கு நேரிடும்.

11. மத்திய வயதி லேதான் மருவிடும் வெண்மே கங்கள்
வித்தகன் தனக்குப் பாலன் விளங்குவா னென்று சொல்வேன்
புத்திரன் குணத்தைச் சொல்வேன் பொய்யது வழுத்தா னுகும்
அத்தவா னருநி றத்தன் சுந்திர முடைய னுகும்

11. மத்திய வயதில் இவனுக்கு வெண்மேகம் வந்திடும். முன்சொன்ன குணங்கள் அமைந்த மனிதனுக்கு நம் கடகலக்கினமகன் புத்திரனுகத் தோன்றி இருக்கின்றுன். இனி சாதகனுடைய குணங்களைச் சொல்லுவேன். பொய் பேசாதவன். சுத்தமானவன். கருத்தமேனியான். அழகு வாய்ந்தவன்.

12. வித்தையும் சமம தாகும் வெகுளியாம் பொறுமை சாலி
நத்தினேர்க் குதவி செய்வன் நாற்காலி பணைவர் விருத்தி
சத்துரு வணங்க வாழ்வன் தரணியைச் சேர்ப்பா னுகும்
பத்தினி சொல்தட் டாதான் பரிந்துப சாரம் செய்வன்.

12. மத்தியமாக வித்தை கற்றவன். மனத்தை ஒளிக்காதவன். பொறுமை உடையவன். நாடியவர்களுக்கு உபகாரம் செய்யும் சுபாவ முள்ளவன். கால்நடைகள் விருத்தியாகும். எதிரிகளை வெல்லுவான். நிலங்களைச் சேர்ப்பான். மனைவிக்கு எதிர்த்துப் பேசாதவன். எல்லோருக்கும் அன்புடன் உபசாரம் செய்வான்.

13. தந்தையி னூர்ஜி தத்தைத் தானவன் விருத்தி செய்வன்
பந்துவும் மதிக்க வாழ்வன் பாரபட் சங்க ளில்லான்
சிந்தையில் தெய்வ பத்தி சித்தினி ஜாதி யாகும்
வந்தவர்க் கன்ன மீவன் மருவிடும் பித்தச் சூடு.

13. பிதுரார்ஜித சொத்தை இவன் விருத்திசெய்வான். உற்றூர் உறவினர் கௌரவிக்கும் வகையில் வாழ்வான். பக்ஷபாதம் இல்லாதவன். மனத்தில் தெய்வபக்திகொண்டவன். இவன் "சித்தினி" ஜாதியைச் சேர்ந்தவன். அதிதிகளுக்குச் சிரத்தையுடன் அமுதளிப்பான். இவனது உடலில் பித்தச் சூடு நிலைத்திருக்கும்.

14. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம் முன்பெண் ரண்டு
தவசிேய பின்பெண் ரண்டு சார்ந்திடு மாண்பா லொன்று
அவனியில் துணைவன் சேதி நாட்டுவோ மாறி றத்தான்
கவனங்கள் செய்வா னுகும் கல்வியு மிரண்டு முண்டு.

14. இவனுடைய சகோதர பாவத்தைச் சாற்றுவோம். இவனுக்கு மூத்த சகோதரிகள் இருவர். இளைய சகோதரிகள் இருவர். ஓர் இளைய

சகோதரனும் உண்டு. அந்தச் சகோதரனின் வரலாற்றைக் கூறுவோம். மாநிறம் வாய்ந்தவன். சுயமாகப் பாடல்களை இயற்றும் சக்தி உள்ளவன். இருவிதக் கல்விகளைக் கற்றவன்.

15. அரசால் தொழிலு மேற்பன் அடாவடி கொஞ்ச முண்டு
பரிவண்டி உடையா னாகும் பகைத்தோரை நசிக்க வைப்பன்
குறைவிலாக் குடும்ப மேற்பன் குலமதிப் புடனே வாழ்வன்
நெறியதைக் காப்பா னாகும் நினைத்ததை முடிக்க வல்லன்.

15. அரசருடைய ஆதரவால் இவனுக்கு ஜீவனம் நடைபெறும். விதண்டா வாதம் செய்வான். குதிரை வண்டி முதலிய வாகன வசதிகள் உடையவன். எதிரிகளை அழிப்பான். குடும்பத்தைக் குறைவில்லாதபடி நடத்துவான். குலத்தினர் மதிக்கும் வகையில் வாழ்வான். அறநெறியிலிருந்து வழுவாமல் இருப்பான். தான் நினைத்த காரியத்தை நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவன்.

16. பாரியு மொன்றே யாகும் பாலர்கள் ஆண்பால் ரண்டு
நாரிமார் நால்வ ராகும் நல்கிடும் வேறு மாது
மாரனும் தீர்க்க ஜீவி மானிலம் சேர்ப்பா னாகும்
காரிய சமர்த்த னாகும் கட்செவி போலே கோபம்.

16. இவனுக்கு மனைவி ஒருத்திதான். இரு பிள்ளைகளும் நான்கு பெண்களும் இவனுக்கு உதிப்பார்கள். ஜாதகன் தீர்க்காயுளுடன் வாழ்வான். செழுமை வாய்ந்த நிலங்களைச் சேர்ப்பான். காரியத்தில் சமர்த்தன். பாம்பிற்குக் கோபம் வருவதுபோல் இவனுக்குக் கோபம்வரும்.

17. சிலதுநாள் வெளிதே சங்கள் செல்லுவான் தொழிலின் மூலம்
பலர்களால் பொருளும் ஏற்பன் பலதல வாசம் செய்வன்
சொல்மொழி காப்பா னாகும் தும்பியின் கோஷ்டம் செய்வன்
மலையிறை மகளே யாங்கள் வழுத்தின மொழிகுன் றாது.

17. தொழில் காரணமாக சில நாள் வெளி தேசத்திற்குச் செல்லுவான். பலராலும் இவனுக்குப் பொருள்சேரும். பல ஸ்தலங்களில் வசிப்பான். தான் சொன்ன மொழியைக் காப்பான். விநாயகர் ஆலயத்தை நிர்மாணம் செய்வான். பர்வத ராஜ குமாரியே! நாங்கள் சொன்ன மொழி பொய்யாகாது.

18. பெண்துணை சேதிதன்னைப் பேசுவோம் பின்பா கத்தில்
அன்னையின் குணத்தைச் சொல்வே னல்பமாம் கோபம் கொஞ்சம்
பின்னமில் லாத தேகி பித்ததே கத்தா ளாகும்
அன்னியர்க் கிணக்கம் சொல்லாள் அவசர மனமும் கொஞ்சம்.

18. இவனது உடன்பிறந்தாளின் செய்தியைப் பின்பாகத்தில் பேசப் போகின்றோம். இப்பொழுது ஜாதகனுடைய தாயின் குணத்தை அறிவிப்போம். கொஞ்சம் கோப முள்ளவள். குறைவில்லாத தேகம் உடையவள்.

இவளது சரீரத்தில் பித்தம் தலை தூக்கி நிற்கும். பிறர் சொன்ன வார்த்தையை ஆக்ஷேபித்துப் பேசாதவள். தான் எண்ணியதை நன்றாக யோசிக்காமல், சடுக்கென்று பேசிடுவாள். அவ்வாறே செய்கையிலும் இறங்குவாள்.

19. சுகமுள வார்த்தை யுண்டு துணைஆண்பால் காணு ளாகும்
தகமையாய்ப் பெண்பா லொன்று சாற்றுவோம் தீர்க்க மாக
அகமதை விட்டு நீங்காள் அறைகிறே மிவள்முன் ஜன்மம்
சுகமதி லுயர்வ தான வாலவா யூரிலேதான்.

19. சுகமான வார்த்தைகளைக் கூறுவாள். இவளுக்குச் சகோதரன் இல்லை. ஒரு சகோதரி உண்டு. அவள் தீர்க்காயுளுடன் வாழ்வாள். தான் பிறந்த வீட்டிலேயே மணமான பிறகும், குடும்பம் செய்வாள். [புருஷன், இவள் பிறந்த வீட்டிற்கே வந்து, நிரந்தரமாக வாழ்வான் என்பது கருத்து.] இவளுடைய முன் ஜன்மத்தைக் கூறுகின்றோம். இன்பத்தைத் தரும் க்ஷேத்திரங்களுக்குள் உயர்ந்த க்ஷேத்திரமாகிய மதுரையில்;

குறிப்பு.—இந் நகரை வட மொழியில் "ஹாலாஸ்யநகரம்" என்ற பெயரால் குறிப்பிடுவதைக் காண்க.

20. தென்னர்தம் குலமு தித்து மைந்தர்க ளதிக முண்டாய்ப்
பொன்னொடு பணதிவீடு பூவையும் வாழு நாளில்
தன்வரன் தம்பி பேரில் சிலேடையாய் வார்த்தை சொல்ல
அன்னவன் மனங்க லங்கி அடைந்திட்ட சாபம் கேண்மோ.

20. பாண்டியர்களின் பரம்பரையில் பிறந்து, கணவன் குழந்தைகளோடு பொன் ஆபரணம் வீடு முதலிய பொருள்களை அடைந்து சுகமாக வாழும் காலத்தில் மரியாதைக் குரிய தனது மைத்துனனைச் சிலேடை வார்த்தைகளைச் சொல்லி பரிகசித்தாள். அதனால் மனம் புண்பட்டவனாகிய அவன் சொன்ன சாபத்தைக் கேளுங்கள்.

21. துன்மைகள் எந்தன் பேரில் செப்பின பாவிக் கேதான்
பின்வரும் ஜன்மம் தன்னில் பேசொணுத் துணைஆ ணும்தான்
அன்னையி னில்லம் நீங்கா அறைந்தனன் என்று சொல்வோம்
முன்னோர்கள் ததாஸ்து என்ன மேவிற்று அந்தச் சாபம்.

21. என்மேல் தீமைகள் சொல்லாதவள் போல் நடித்து, உண்மையில் தீமைகளைச் சொல்லி என் மனத்தை வருந்திய நீ, மறு பிறவியில், சகோதரன் முகம் கண்டு அவனோடு பேசி ஆனந்தம் அடைவதற்கு வாய்ப்பில்லாதவளாக வாழ்வாய். [சகோதரன் பிறக்கமாட்டான் என்பது கருத்து] மேலும் கணவன் வீட்டிற்குச் சென்று வாழும் பெருமை இல்லாமல் இருப்பாய். இச் சந்தர்ப்பத்தில் ஆகாயத்தில் சஞ்சரிக்கும் மஹரிஷிகள் "ததாஸ்து" என்று கூறவே, அவன் சொன்ன வார்த்தைகள் சாபமாயின. அச் சாபம் இவளைப் பற்றிக்கொண்டது.

குறிப்பு.—இரு மஹரிஷிகள் எப்பொழுதும் "ததாஸ்து", "ததாஸ்து" [அவ்வாறே ஆகட்டும்; அவ்வாறே ஆகட்டும்] என்று சொல்லிக் கொண்டே ஆகாயத்தில் சஞ்சரிக்கின்றார்களாம். நன்மையோ தீமையோ நடைபெற வேண்டுமென்று விரும்பி நாம் சொல்லும் வார்த்தைகளின் முடிவில் அவர்கள் "ததாஸ்து" வாய்த்துவிட்டால் நாம் எண்ணியபடி நன்மையோ தீமையோ நிகழ்ந்துவிடும். ஆகவே இந்த மைத்துனனுக்குச் சாபமிடுவதற்கு வேண்டிய தவத்தின்சக்தி இல்லாவிடினும், அவன் சொன்ன வார்த்தைகளின் முடிவில் மஹரிஷிகளின் "ததாஸ்து" என்பது சேர்ந்தபடியால் அவ் வார்த்தைகள் சாபமாயின, என்று இந் நூலாசிரியர், "முன்னோர்கள் ததாஸ்துஎன்ன" என்ற வரியில் காரணத்தைக் குறிப்பாகக் காட்டி இருக்கின்றார். இவ்வாறே மற்றைய சாப வரலாறுகளிலும் காண்க.

22. ஆகையா லிச்சன் மத்தில் அவள்துணை ஆண்பால் தோஷம்
தோகையின் ஜன்மம் சொல்வேன் ஜனிப்பாளாம் காஞ்சி தன்னிற்
பாகமாய்ச் சௌராஷ்டிர வமிசம் பாக்கிய முடையா ளாகிப்
போகவா ரியைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

22. ஆகையினல் இச் சென்மத்தில் இவளுக்குச் சகோதரன் இல்லே. இவளுடைய மறு பிறவியையும் சொல்லுவேன். இவள் காஞ்சியில் சௌராஷ்டிர வமிசத்தில் பிறந்து ஐச்வரிய உடையவளாக வாழ்வாள். விநாயகரைப் பெற்ற தாயே! மேலும் கேளுங்கள்.

23. நாற்பது மூன்று ஆண்டில் நற்றுலா மாதம் தன்னில்
கூப்பிடு வானம் காலன் குதித்ததோர் அன்னே தன்னே
ஏர்க்கவே முப்பா னேழி லிரிடபமா தத்தி லேதான்
தீர்ப்பாகத் தந்தை கண்டம் செப்பின மொழிகுன்றுவே.

23. ஜாதகனுக்கு நாற்பத்து மூன்றும் வயதில் ஐப்பசி மாதத்தில் இவன் மரணமடைவாள். ஜாதகனுடைய முப்பத்தேழாவது வயதில் வைகாசி மாதத்தில் தந்தை மரண மாவான் இம் மொழிகள் தவறு.

24. மறுஜன்மம் காஞ்சி கீழ்ப்பால் வளமுள பேரூர் தன்னில்
உறைவனும் செங்குந்த வமிசம் உயர்வான குடும்பி யாகித்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வனும் வாழ்வா னுகும்
கரிமத வானே பெற்ற காதலி கேட்டி டாயே.

24. தந்தை மறு பிறவியில் காஞ்சிக்குக் கீழ்த் திசையில் அருகிலுள்ள செழிப்பான பெரிய ஊரில் செங்குந்த வமிசத்தில் பிறந்து மனைவி மக்களுடன் சுகமாக வாழ்வான். திருமகள் வாசம் நிறைந்திருக்கும் தாயே! மேலும் கேட்பீராக.

25. பால்கன் மணத்தின் காலம் பகருவோம் பத்தொன்பா ண்டில்
நீலியும் தந்தை வர்க்கம் நேருவாள் குணத்தைச் சொல்வேன்
சீலியாம் சிவந்த மேனி ஜனஉப காரி யாவள்
காலத்தை அறிந்து வாழ்வள் கசடரை உறவு கொள்ளாள்.

25. ஜாதகனுடைய விவாஹ காலத்தைக் குறிப்பிடுகின்றோம் பத்தொன்பதாவது வயதில் இவனுக்கு விவாஹம் நடைபெறும். மணப்பெண் தந்தை வருக்கத்தில் பிறந்திருப்பாள். அவளுடைய குணத்தை சொல்லுகின்றோம். நற் சீலம் உள்ளவள். சிவந்த மேனியாள். ஜனங்களுக்கு உபகாரம் செய்வாள். காலத்திற்குத் தக்கப்படி வாழ்க்கையை அமைத்துக் கொள்வாள். கெட்டவர்களுடன் நட்புக் கொள்ளாள்.

26. பால்பாக்கிய முடையா ளாகும் பசித்தோர்க்குத்தாக மீவள்
பாலகன் மனதுக் கேத் தோள் பாரினில் வறுமை காணுள்
சீலமும் கொஞ்ச முண்டு தேவதா பத்தி பூண்பள்
வேலனே யீன்ற மாதே வித்தகி தீர்க்க ஜீவி.

26. பால்பாக்கியம் உடையவள். பசித்தவர்களுக்கு அன்னமும் தண்ணீரும் கொடுத்து உதவுவாள். கணவனின் மனத்திற்கேற்றபடி நடந்துக் கொள்வாள். வறுமைக்கு ஆளாகாதவள். நல்ல பழக்கம் உடையவள். கடவுள் பக்தி பூண்டவள். சுப்பிரமணிய சுவாமியைப் பெற்றதாயே! அவள் தீர்க்காயுளுடன் வாழ்வாள்.

27. சுதர்களும் ஆண்பால் ரண்டு தோகையும் மூன்று என்றோம்
இதுஐந்தும் தீர்க்க மெய்தும் இடராகு மிரண்டு என்றோம்
அதிபன்தன் பூர்வம் சொல்வேன் மலேநாட்டில் இக்கு லத்தில்
நிதிமிக உடையா னுகி நேமியில் வணிபம் செய்தான்.

27. இவர்களுக்கு இரண்டு பிள்ளைகளும் மூன்று பெண்களும் பிறப்பார்கள். இந்த ஐவரும் நீண்டு வாழ்வார்கள். இவர்களைத் தவிர பிறந்த இரு குழந்தைகள் சேதமாகும். ஜாதகனுடைய முன் பிறவியைத் தெரிவிக்கின்றோம். இவன் முன் ஜன்மத்தில் மலே நாட்டில் இதே குலத்தில் பிறந்து அதிக செல்வமுடையவனுகி வியாபாரத்தைச் செய்து வாழ்ந்து வந்தான்.

28. அறுமுகன் பத்தி கொண்டு அந்தகன் நகரம் சென்று
பிரமனுல் வரையப் பட்டுப் பிறப்பனு மிந்தப் பாலன்
உரைக்கிறே மிவனின் யோகம் ஒருபதின் மூன்ருண் டுக்குள்
குறைவுள குடும்ப மாகும் குணமது அலேச்ச லெய்தும்.

28. சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தியோடு இருந்தான். அந்தியத்தில் யமனுலகம் சென்ற இவனைப் பிரம்மதேவன் இங்குப் படைத்திருக்கின்றான். இனி இவனுடைய யோகபலன்களைக் கூறுவோமாக. இவன் பிறந்து பதின்மூன்று ஆண்டுகள் மட்டில் குடும்பத்தில் நஷ்டமேற்படும். வீண் அலேச்சல் நேரும்.

29. சல்லியப் பாதை யாகும் தரணிசள் பலித மல்பம்
இல்லதில் களவு முண்டு இடராகும் கன்று காலி
நல்லவர் விரோத மாகும் நற்பந்து கலக மாகும்
புல்கின ஆண்டின் மேலேப் பிறைபோல யோகம் வாய்க்கும்.

29. கடன் உபத்திரவமும் ஏற்படும். பூமிகள் அல்பமாகவே பலனைத் தரும். வீட்டில் பொருள் களவாடப்படும். கன்றும் பசுக்களும் சேதமடையும். நல்லவர்களும் இவனுக்கு விரோதியாவார்கள். உறவினர்களுடன் சண்டை செய்ய நேரும். பதின்மூன்று ஆண்டுகளுக்குமேல் வளர்பிறைச் சந்திரன்போல யோகங்கள் வளர்ந்திடும்.

30. சல்லியப் பாதை நீங்கும் தரணிகள் சேர்த லுண்டு
நல்லஇல் லங்கள் செய்தல் நாற்காலி விருத்தி யுண்டு
அல்லல்க ளதன்மேல் காணன் அணுகிடும் நிதிநிட் சேபம்
சொல்லது மேன்மை யாகும் செய்தொழில் மேன்மே லோங்கும்.

30. கடன் தொந்தரவு நீங்கும். பூமிகளும் சேரும். அழகிய வீடுகள் கட்டுவான். கால்நாடைகள் நோயின்றி விருத்தியடையும். முன் சொன்ன பதின்மூன்று வருஷங்களுக்கு மேல் இடையூறுகளும் அலைச்சல்களும் ஏற்படா. பணசேமிப்பும் (புதையலும்) கிடைக்கும். இவனுடைய வார்த்தைக்கு விசேஷ மதிப்புண்டாகும். செய்யும் தொழிலும் மேன்மேலும் ஓங்கி வளரும்.

31. முப்பது ஆண்டு மேலாய் மேவிடும் சிலது பொன்னும்
தாவினோர்க் குதவி செய்தல் சார்ந்திடும் சகடு தானும்
தேவியும் கேட்க லுற்றுள் செப்பினீர் யோகம் எவ்வாறு
ஆவலாய்ப் பிறகு சொல்வேன் அம்பிகை யாளே கேளாய்.

31. மூப்பது ஆண்டுகளுக்குப் பிறகு கொஞ்சம் தங்க சேமிப்பும் ஏற்படும். அடைந்தவர்களுக்கு உதவி செய்யும் பாக்கியம் இவனுக்குக் கிடைக்கும். வண்டி முதலிய வாகனவசதிகளும் உண்டாகும். இவ்வாறு நல்ல யோக பலன்களைச் சொன்னவுடன், உமாதேவி, இவனுடைய ஜாதகத்தின் நற்பலனைச் சொல்வதற்கான காரணங்கள் என்ன இருக்கின்றன? என்று கேட்கலுற்றாள். முனிவர் பதில் சொன்னார். தேவியே! கேளுங்கள்.

32. பொன்னவன் காரி உச்சம் புரவியோ னாட்சி யாக
மன்னவ னுக்கி ரண்டில் மாலவன் கூடி நிற்கச்
சந்திரன் நாலி லேறச் சாமர யோக முண்டு
மன்னுகே சரியோகங்க ளற்புத யோக மொன்று.

32. குரு கடகத்திலும் சனி துலாத்திலும் உச்சமாக இருக்கின்றார்கள். சூரியன் ஆட்சியுடன் இருக்கின்றான். மேலும், சுக்கிரனும் புதனும் குருவிற்கு இரண்டாமிடத்தில் இருக்கிறார்கள். லக்கினாதிபதியாகிய சந்திரனே நாலில் விளங்குகிறான். ஆகையால் இவனுக்கு “சாமர”, “கேசரி”, “அற்புதம்” என்று மூன்று யோகங்களுண்டு.

33. இந்தவோர் யோகத்தாலே யியம்பினோம் பெருமையாகச்
செந்திரு விலாசம் பெற்றுச் செல்வனும் வாழ்வா னாகும்
பிந்திய துணையி னாலே பொருளது அதிகம் சேர்ப்பன்
கந்தனை யீன்ற மாதே கழறின மொழிகுன் றாது.

33. இவ்வளவு யோகங்கள் இருப்பதால் விசேஷ பலன்களை அறிவித்தோம். லக்ஷ்மீவாசம் பொருந்தியவனாகச் சுகமாக வாழ்வான். தம்பியினால் இவனுக்கு அதிக பொருள் சேரும். சுப்பிரமணிய சுவாமியை பெற்ற தாயே! நாங்கள் சொன்ன வாக்கு உண்மையாகும்.

34. அறுபது ஐந்து ஆண்டில் ஐப்பசிமாதம் தன்னில்
குறைபக்கம் துவா தேசி குழவியி னுடலம் ஏகும்
மறுஜன்மம் தணிகை தன்னில் வருகுவான் சைவச் சேயாய்
அரசரால் தொழிலு மேற்பன் அம்பிகை யாளே கேளாய்.

34. அறுபத்தைந்தாவது ஆண்டில் ஐப்பசி மாதத்தில் கிருஷ்ண பக்ஷ துவாதசியில் இவன் மரணமடைவான். இவன்மறு பிறவியில் திருத்தணிகையில் சைவகுலத்தில் பிறப்பான். அரசரால் தொழிலைப் பெறுவான். [அரசாங்க உத்தியோகம் செய்வான் என்பது கருத்து.] ஈசுவரியே! மேலும் கேளுங்கள்.

35. சுதனுமே ஜனிக்கும் காலே சுவாதியின் மூன்றும் பாதம்
ததிகயிறு தசையிருப்புச் சதுராண்டும் பதினோர் திங்கள்
விதவிதப் பிணிசு தர்க்கு மேவிடும் செலவ னேகம்
அதிதியே பூர்வம் சொன்னோம் அம்பிகை யாளே கேளாய்.

35. ஜாதகன் சுவாதியின் மூன்றும் பாதத்தில் ஜனித்திருக்கின்றான். ஆகையால் ராஹு தசை இருப்பு வருஷங்கள் நான்கு, மாதங்கள் பதினொன்று. இந்தத் தசையின் பலன்களை சுருக்கமாகச் சொல்லுகின்றோம். ஜாதகனுக்குப் பலவிதப் பிணிகள் வரும். குடும்பத்தில் பலவழிகளிலும் செலவு ஏற்படும். இந்திரனுக்குத் தாய் போன்றவளே! இப்பொழுது பூர்வபாகத்தைத்தான் சொல்லியிருக்கிறோம். அன்னையே! திருவாய் மலர்ந்து மேலும் எங்களைக் கேட்டருளல்வேண்டும்.

ஜாதகம் 35

1. பிறைநந்தி ராகு வீணை பொன்கட கத்தில் தங்கப்
பரிதியும் புதனும் வெள்ளி பற்றிடம் சீய மாகத்
தரைமகன் கேது மேரு சனிசாடி கடகம் ஜன்மம்
உரைகுவீர் பலனை யென்று உத்தமி கேட்கும் போது ;

		சந்திரன்	ராகு
சனி	இராசி சக்கரம்		லக்கினம் குரு
			சூரியன் புதன் சுக்கிரன்
செவ் வாய் கேது			

1. பிலவங்க வருஷம் ஆவணி மாதம் 16-ந் தேதி சனிக்கிழமை இரவு 52 நாழிகைக்கு மேல் 57 நாழிகைக்குள் ஜனனம். ஆங்கிலத்தேதி 31-8-1907 நவக்கிரஹங்களின் பாதசாரம்—பூரம் 1-இல் சூரியன். மிருக சீர்ஷம் 1-இல் சந்திரன். பூராடம் 2-இல் செவ்வாய். மகம் 3-இல் புதன் (அஸ்தம்). புஷ்யம் 3-இல் குரு. மகம் 4-இல் சுக்ரன் (அஸ்தம்). பூரட்டாதி 3-இல் சனி. புனர்வஸு 3-இல் ராகு. உத்தராடம் 1-ல் கேது. நக்ஷத்திரம் மிருகசீர்ஷம். செவ்வாய் இருப்பு வருஷங்கள் ஐந்து மாதங்கள் ஐந்து.

சந்திரன் விருஷபம், ராகுமிதுனம், குரு கடகம், சூரியன், புதன் சுக்கிரன் சிம்மம், செவ்வாய் கேது தனுஸ் சனி கும்பம், இலக்கினம் கடகம், இவ்வாறான கிரஹநிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக என உத்தமியான பார்வதி வினவும்போது ;

2. அத்திரி புகலுகின்றார் ஆணது ஜனனமாகும்
வித்தக னில்லம் சொல்வேன் வடவாடை கீழ்மேல் வீதி
உத்தரம் மாரி தங்கும் உயரானை முகத்தோன் கீழ்ப்பால்
பத்திர காளி தென்மேல் பெருவயி றப்பன் மேல்பால்.

2. அத்திரி முனிவர் பதில் உரைக்கின்றார். இக்கிரஹ நிலையில் பிறந்த மகவு ஆணாகும். வீதி கிழக்குமேற்காக இருக்கும். வீடு தென் திசை நோக்கும். வடதிசையில் மாரியம்மன் கோயில் இருக்கும். கீழ்த்திசையில் விநாயகரது ஆலயம் விளங்கும். தென்மேற்குத் திசையில் பத்திரகாளி கோயிலும், மேற்குத்திசையில் மற்றொரு விநாயகர் கோயிலும் உண்டு.

3. இன்னமும் பலதே வாசமிலகிய பேரூ ராகும்
அன்னவன் நான்காம் ஜன்மம் அவனும்கோ வைசிய னாக
மன்னவன் யோகச்சேதி மாதுரு தந்தை யோகம்
முன்பின்ஜன் மங்கள் யாவு முரைக்கிறே மிந்நூல் தன்னில்.

3. இன்னும் பல தேவாலயங்கள் அவ்வூரில் திகழும். இவ்வாறு அடையாளமுள்ள ஒரு பெரிய ஊரில் இடையர் வமிசத்தில் குடும்பத்திற்கு நான்காம் குழந்தையாக இச் சாதகன் ஜனித்திருக்கிறான். இவனுடைய யோகங்களையும், தாய் தந்தை மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும், முன் பின் ஜன்மங்களையும் இந்நூலில் தெரிவிப்போமாக.

4. தந்தையின் துணைவ ரெட்டில் ஜனிக்கும் கால் கன்னி ஒன்று
அந்தவள் விருத்தி யென்றேம் அழகான குடும்பி யாவள்
பிந்திய பாகம் தன்னில் பேசுவோம் விவர மாக
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகனுடைய தந்தைக்கு எட்டு உடன் பிறந்தார்கள். அவர்களில் ஒருத்திதான் சகோதரி. அவள் விருத்தியடைவாள். அழகான குடும்பம் உடையவளாவாள். அவளைப்பற்றி விவரமாகப் பின் பாகத்தில் சொல்லுவோம். இனி, தந்தையின் வரலாறுகளைக் கூறுவோம்.

5. குடம்ராசி முடவன் நாலில் உதிப்பானும் தந்தை தானும்
தடபுடல் செய்கை கொஞ்சம் சங்கீதப் பிரிய னாகும்
படைதன்னில் செல்லா னாகும் பரஉப கார னாகும்
மடயரை நேசங் கொள்ளான் வாணிபங்கள் செய்வா னாகும்.

5. அவன் கும்பராசியில் ஜெனித்தவன். நாலில் சனி இருப்பா[illegible] தந்தை ஆடம்பரச் செயலுள்ளவன். சங்கீதத்திலும் பிரியமுள்ளவன். சண்டையில் ஈடுபடாதவன். பிறர்க்குத் தன்னால் சாத்தியமான உபகாரத்தைச்செய்வான். மதியீனர்களை நேசம் கொள்ளாதவன். பலவித வியாபாரங்களையும் செய்வான்.

6. கடன்கொள்வன் நிவிர்த்தி செய்வன் கஞ்சமாம் ரேகை யுண்டு
உடன்படான் பிழைகளுக்கு உண்மையா மனத்த னாகும்
விடவாக்கன் மா நிறத்தன் மெல்லியர் மோக னவன்.
திடமதாய்க் குடும்பம் பின்னால் செய்ந் நன்றி மறவா னாகும்

6. கடன் வாங்குவான். சீக்கிரத்திலே அதை நிவிர்த்தி செய்து விடுவான். இவனது கையில் தாமரை ரேகை விளங்கும். பிழைகளைச் செய்யாதவன். உண்மையான உள்ளம் படைத்தவன். [கள்ளமில்லாதவன் என்பது கருத்து] இவன் வாக்கினால் கெடுதல்களைச் சொன்னால் பலிதமாகும். மாநிறம் வாய்ந்தவன். பெண்களிடம் மையல் கொண்டவன். பிற்காலத்தில் இவனது குடும்பம் ஸ்திரமான சுபிக்ஷமுள்ளதாகும். நன்றி மறவாதவனாகவும் இருப்பான்.

7. உண்டியும் வறுமை காணுன் உறைப்பொடு புளிப்பி லிச்சை
கண்டித முரையா ணுகும் காலிகள் விருத்தி யுண்டு
அண்டினேர் தம்மைக் காப்பான் அவன்பந்து பகையு மெய்தும்
எண்டிசை நல்லோ ணுவன் யீகைவான் ஊகை சாலி.

7. போஜன சௌக்கியமுடையவன். காரமும் புளிப்பும் இவனுக்கு உகந்த ருசிகளாகும். ஒருவரையும் கண்டித்துப் பேசாதவன். கால் நடைகள் இவனிடம் புஷ்டியை அடையும். தன்னை அண்டியவர்களுக்கு ஆதரவளித்துக் காப்பான். உறவினர்கள் பகைவராவர். எல்லாத் திசைகளிலும் " நல்லவன் " என்ற கீர்த்தி பரவும். தியாக குணம் வாய்ந்தவன். சிறந்தமதியூகியாகவும் இருப்பான்.

8. சொன்னவிக் குணத்தானுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைக் கேண்மோ அரிமக ளெப்பதாகும்
பின்னமில் லாத தேஜ பெரும்பொரு ளிச்சை யுண்டு
உன்னதச் செட்டுச் செய்வன் உயர்வோர்கள் நேசம் கொள்வன்.

8. நாம் மேலே சொன்ன குணமுள்ள மனிதனுக்கு இக்கடகலக்கின மகன் புத்திரனுகத் தோன்றி இருக்கிறன். இனி ஜாதகனுடைய குணங்களை அறிவிப்போம். கேளுங்கள். அழகில் விஷ்ணு புத்திரனுகிய மன்மதனுக்கு ஒப்பானவன். சரீரத்தில் சிறிதும் ஊனமில்லாதவன். உயர்ந்த பொருள்களிலேயே இவனது மனம் செல்லும். மேலான வியாபாரத்தையே செய்வான். மேம்பாடுடையவர்களுக்கு நண்பனுவான்.

9. ஆதியில் அன்னம் குறைச்சல் அற்புத வார்த்தை சொல்வன்
தீதிலான் பொறுமை சாலி நிலையதைக் காப்பா ணுகும்
சாதிப்பான் சிலது சங்கை தரணிகள் சேர்ப்பா ணுகும்
வேதனை ஒருவர்க் கெண்ணுன் வெஞ்சினம் வெளிக்காட் டாதான்.

9. பால்யத்தில் இவன் ஆகாரத்திற்கு கஷ்டப்பட்டிருப்பான். பிறர் வியக்கும் வகையில் பேசுவான். கெட்ட குணங்கள் இல்லாதவன். பொறுமை வாய்ந்தவன். தனக்கு ஏற்பட்ட கௌரவ நிலையை பாதுகாப்பான். தான் எண்ணிய காரியங்களைத் திறமையுடன் பெரும்பாலும் நிறைவேற்றுவான். மிகச் சில காரியங்களில் தான், செய்யும் வகையறியாமல், திகைப்படைவான். பூமிகளைச் சேர்ப்பான். பிறர்க்குத் தீமைகளை எண்ணுதவன். கொடிய சினம் வரும். ஆனல் அதைத் தோற்றத்தில் காட்டிக்கொள்ளமாட்டான்.

10. தந்தைமேல் வாழ்வா ணுகும் சத்தான வேலை செய்வான்
தன்பந்து மதிக்க வாழ்வன் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
தந்தமும் தரள மொக்கும் சாதமும் குறைவு ருதான்
தந்தனம் கொடுக்கல் வாங்கல் தனிகர்கள் உறவு கொள்ளல்.

10. தந்தையைவிடச் சிறப்பாக வாழ்வான். நல்ல பயன்களைக் கொடுக்கும் வேலைகளையே செய்வான். இவனுடைய உறவினர்கள் இவனைக் கொண்டாடுவார்கள். பசு காளை முதலியவைகளை அபிவிருத்தி செய்வான். பற்

களும் முத்துப்போல் விளங்கும். பிற்காலத்தில் ஆகார சௌக்கிய முள்ளவனுவான். தன் பணத்தைக் கொண்டு வட்டி வியாபாரம் செய்வான். தனிகர்களுடன் உறவு ஏற்படும்.

11. பலருக்கும் பந்தினர்க்கும் பரிந்துப சாரம் செய்வன்
கலகத்தைக் கூற ணுகும் கடவுளர் பத்தி பூண்பன்
நலமதை யெவர்க்கும் செய்வன் நற்சீலன் பொய்கள் சொல்லான்
ஜலம்தோய்வன் சல்லியம் கொள்ளான் சமர்த்தான வார்த்தை
[சொல்வன்.

11. தன் ஜாதியார்களுக்கும் மற்றவர்களுக்கும் அன்புடன் உபசாரம் செய்வான். கலகத்தை உண்டுபண்ணும் வார்த்தைகளைச் சொல்லான். கடவுள் பக்தி கொண்டவன். எல்லோருக்கும் நன்மைகளையே செய்வான். நற்சீலமுடையவன். உண்மைகளையே பேசுவான். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான். கடன் இல்லாதவன். சாமார்த்தியமாகப் பேசுவான்.

12. தன்துணை முன்பெண் மூன்று சாற்றுவோ மளவாய்த் தீர்க்கம்
பின்துணை ஆண்பா லொன்று பேதையு மவ்வாறு தீர்க்கம்
அன்னவர் பலன்கள் பின்னல் அறிவிப்போ முனியே யாமும்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

12. இவனுக்கு முன் பிறந்த சகோதரிகள் மூவர். இவனுக்குப் பின் பிறந்த சகோதரன் ஒருவன். அவனுக்குப் பிறகு ஒரு சகோதரி. இந்த ஐவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். முனிவர்களே ! அவர்களைப் பற்றிய பலன்களைப் பின்னல் தெரிவிப்போம். விநாயகரைப் பெற்ற தேவியே ! மேலும் கேளுங்கள்.

13. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் மாநி றத்தாள்
அன்னம்போல் வடிவு மொக்கும் அயல்குற்றம் புகலா ளாகும்
அன்னியர் மதிக்க வாழ்வள் ஆளன்தன் மனதுக் கேத்தோள்
அன்னமு மன்பா யீவள் அடிசிலுக் கினியா ளாகும்.

13. ஜாதகனின் தாயினுடைய குணங்களை இனிமேல் பேசுவோம். நல்ல அழகு வாய்ந்தவள். மாநிறமுள்ளவள். தோற்றம் அன்னம் போன்றிருக்கும். பிறர் குற்றத்தைப் பேசாதவள். அந்நியர் கௌரவிக்கும்படி வாழ்வாள். தன் கணவன் மனத்தின்படியே நடப்பாள். தன் வீடு நாடி வந்தவர்களுக்கு அன்புடன் அமுதளிப்பாள். தன் கணவனுக்கு எத்தகைய உணவு உகப்பானதோ அத்தகைய உணவைச் சமைத்துக் குறிப்பறிந்து பரிமாறி அவனது மனம் குளிரச் செய்வாள்.

14. பால்பாக்கிய முடையா ளாகும் பகையொன்று மனத்தில் வையாள்
சீலியாம் விரத மேற்பள் விதவித இல்லம் மேற்கில்
பாவைக்குத் துணைஆண் காணுள் பாவையு மொன்றே தீர்க்கம்
நீலிக்குத் துணைஆண் தோஷம் நுகனுவீ ரந்தச் சங்கை.

14. பால் பாக்யமுடையவள். மனத்தில் பகைமை நீடித்து வைத்துக் கொள்ளமாட்டாள். நீண்ட காலம் வாழ்வாள். பலவிதமான விரதங்களை அநுஷ்டிப்பாள். இவள் பிறந்த வீடு மேற்குத் திசையிலுள்ளது. இவளுக்குச் சகோதரனில்லை. ஒரு சகோதரி உண்டு. அவள் தீர்க்கமாக வாழ்வாள். இவளுக்குச் சகோதரன் ஏன் இல்லை? அதன் காரணத்தைச் சொல்வீர்களாக எனப் பார்வதி வினவினள்.

15. மங்கலன் கேது ஆறில் மருவின பலத்தால் சொன்னோம்
அங்கவள் முன்ஜன் மத்தை அறிவிப்போம் தாயே கேளும்
சிங்கள நாட்டி லேதான் ஜனித்தனள் கங்கை சேயாய்ப்
பொங்கிய குடும்பி யாகி பூவையும் வாழு நளில் ;

15. " சகோதரகாரகன் " என்று சாஸ்திரங்களில் கூறப்படும் செவ்வாய் கேதுவுடன் ஆறுமிடத்தில் தங்கி இருப்பதால் ஆண் சகோதர விருத்தி இல்லை. அவ்வாறு கிரஹங்கள் அமைவதற்கும் முன்ஜன்ம வினைதான் காரணம். அந்த முன்வினையைத் தெரிவிக்கின்றோம். தாயே! கேளுங்கள். இவள் முன் பிறவியில் சிங்கள நாட்டில் வேளாள வமிசத்தில் பிறந்து, மணமாகி, குழந்தைகளைப் பெற்று மேன்மேலும் க்ஷேமத்தை அடைந்து வரும் குடும்பத்தைச் சிறப்புடன் நடத்திவரும் காலத்தில் ;

16. வரனுடை தம்பி பேரில் வருணித்தாள் சிலேடை வார்த்தை
குறையான மனத்தானுகிக் கூறுவான் சாபம் தானும்
திருகான வார்த்தை என்மேல் செப்பின பாவிக் கேதான்
மறுஜன்மம் துணேஆண் இன்றி வளவுமே யில்லா தாகி ;

16. கணவனுடைய தம்பியின் பேரில் குத்தலான வார்த்தைகளைச் சொன்னுள். அதனுல் வருந்திய அவன், என்பேரில் துடுக்கான வார்த்தைகளைப் பேசியதால் உனக்குச் சகோதரனுல் ஏற்படும் மகிழ்ச்சி ஏற்பட வேண்டாம். மேலும் பிறந்து வளர்ந்து பழகின வீட்டிலேயே, வேறு புக்கிடம் இல்லாமல் ;

17. சுகமின்றி வாழ்வா யென்ன சேர்ந்தது அந்தச் சாபம்
தகைமையாய் வேறு ஒன்று சார்ந்தது புகலக் கேண்மோ
அகமதி லடைக்க லானும் அடைந்துமே வாழு நாளில்
பகையாக அதை கலைத்தாள் பற்றிற்று அந்தத் தோஷம்.

17. கணவனுடன் (கணவன் வீட்டிற்குச் சென்று வாழும்) சுகமின்றி வாழ்வாய் என்று சபித்தான். அந்தச் சாபம் இவளைப் பிடித்துக்கொண்டது. இதைத் தவிர வேறு ஒரு பாவமும் இவளுக்கேற்பட்டது. அதைச் சொல்லுகின்றோம் ; கேளுங்கள். இவள் வசித்த வீட்டில் ஊர்க்குருவி வசித்து வந்தது. அதற்கு இம்சை செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் அதைத் துரத்திவிட்டாள். அந்தப் பாவமும் இவளைப் பற்றிக்கொண்டது.

18. மாதுவு மந்தி யத்தில் வாய்ப்புண்ணுல் மரண மாகி
வேதனுல் வரையப் பட்டு விளங்கினு ளிந்த மாது
தீதான மைத்துனன்சா பத்தா லாண் தோஷ மெய்தும்
மேதினில் வறுமை காணுள் வித்தகி கேட்டி டாயே.

18. முன்பிறவியில் இவள் அந்தியத்தில் வாயில் புண்தோன்றிக் கஷ்டப்பட்டு மரணமடைந்தாள். இவளைப் பிறகு பிரம்மதேவன் இங்குப் படைத்திருக்கின்றுன். முன்ஜன்மத்தில் மைத்துனன் சாபத்தால் இப்பிறவியில் சகோதரன் இவளுக்கு இல்லை. வறுமை இல்லாதவள். தேவியே! மேலும் கேளுங்கள்.

19. பின்ஜன்மம் விரிஞ்சி தன்னில் பிறப்பாளாம் வைசியச் சேயாய்ப்
பொன்னெடு பணிதி பெற்றுப் புகழ்ச்சியாய் வாழ்வா ளாகும்
தந்தையின் பூர்வம் சொல்வேன் தலமதி லுயர்வ தான
முந்தின பிருதிவி தன்னில் உதித்தனன் செக்கான் வம்சம்.

19. இவள் விரிஞ்சிபுரம் என்ற ஊரில் வைசிய வம்சத்தில் பிறப்பாள். சுவர்ணம் ஆபரணம் முதலியவைகளைப் பெற்று எல்லோரும் கொண்டாடும் படி வாழ்வாள். தந்தையின் முன்ஜன்மத்தைக் கூறுவோம். இவன் முன் பிறவியில் புண்ணிய க்ஷேத்திரங்களில் சிறந்த காஞ்சியில் வாணியச் செட்டி வமிசத்தில் பிறந்திருந்தான்.

20. பாரிய மதலை யுண்டாய்ப் பலவணி பங்கள் செய்து
தீரனு வாழு நாளில் சேர்ந்ததோர் வினையைச் சொல்வேன்
வேறுபெண் போகம் துய்த்து நற்கரு வழித்த தொன்று
கூறுவோ மடியா ருக்குக் குறைகளும் செய்த தொன்று.

20. மனைவி மக்களுடன் கூடியவனுகிய இவன் பல வியாபாரங்களைச் செய்து ஜீவித்து வரும் காலத்தில் இவனுக்கேற்பட்ட பாவத்தைக் கூறுகின்றோம். வேறு பெண்ணிடம் மோகம் கொண்டு அவளுக்குக் கரு ஏற்பட்டதால் அதை அழித்தான். இது முதல் பாவம். சிவனடியாரிடத்தில் அபசாரப்பட்டான். இஃது இரண்டாவது பாவம்.

21. அரனடி வருத்தமுற்று அறைந்தசா பத்தைக் கேண்மோ
வரும்ஜன்மம் துணேவர் தோஷம் மனைவிபோல் நாஸ்தி யாகும்
உறன்முறை பகையு மாயும் உலகினில் வாழ்வா யென்ன
மருவிற்று அந்தச் சாபம் மங்கையே கேட்டி டாயே.

21. அந்த அரனடியார் வருத்தமுற்றுச் சொன்ன சாபத்தைக் கேளுங்கள். மறுபிறவியில், உனது மனைவிக்குச் சகோதர விருத்தி இல்லாதது போல் உனக்கும் சகோதர விருத்தி இல்லை. மேலும் உறவினரும் பகைவராவர். அவரிட்ட சாபம் இவனை இப்பிறவியில் பின் தொடர்ந்து வந்திருக்கிறது. தாயே! மேலும் கேளுங்கள்.

22. அந்திய காலம் தன்னில் அவன்செல்வம் குறைவு நேர்ந்து
தென்திசை கால னுேடு சென்றுமே பிரமன் லக்கம்
வந்தவ னென்று சொல்வோம் அரனடி சாபத் தாலே
தன்துணே ஆண்பால் தோஷம் தன்பந்து பகையு மெய்தும்.

22. அந்த ஜன்மத்திலேயே கடைசிக் காலத்தில் இவனுடைய செல்வம் குறைந்து இவன் மிகவும் கஷ்டப்பட்டு இறந்தான். அவனைப் பிரம்மதேவன் இங்குப் பிறப்பித்திருக்கிறுன். அரனடியார் சாபத்தால் சகோதரனும் இல்லை, தன் பந்துக்களும் பகைவர்களாக இருக்கிறுர்கள்.

23. கருவதை அழித்த தோஷம் காணமுன் துணைவ ருக்கு
உரிமைசெய் துணைவர் தோஷம் உரைக்கிறே மிவன்பின் ஜன்மம்
பெருமையாய்க் காஞ்சி தன்னில் பிறப்பனு மிக்கு லத்தில்
பொருளது பெருக்க மாகிப் புகழுடன் வாழ்வான் மாதே.

23. கருவை அழித்த தோஷத்தால் முன் பிறந்த சகோதரர்களும் இல்லை. இவனுடைய பின் ஜன்மத்தையும் கூறுவோம். இவன் மறு பிறவியில் காஞ்சியில் இதே குலத்தில் பிறந்து பொருள்களை விருத்தி செய்து புகழுடன் சுகமாக வாழ்வான்.

24. இருபது மூன்று ஆண்டி லெய்திடும் தந்தை கண்டம்
மறலியைக் காண ருகும் அதற்குமேல் மூன்று ஆண்டில்
திருகிலா ஆனி மாதம் செப்புவோம் தந்தை கண்டம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

24. ஜாதகனுடைய இருபத்து மூன்றுவது வயதில் தந்தைக்கு ஓர் ஆபத்து நேரும். ஆனால் மரணமடையான். அதற்குப் பிறகு மூன்றும் ஆண்டில் ஆனி மாதத்தில் கண்டமேற்பட்டுத் தந்தை இறப்பான். விநாயகரைப்பெற்ற தாயே! மேலும் கேளுங்கள்.

25. நாற்பது மூன்று ஆண்டில் நற்றுலா மாதம் தன்னில்
கூப்பிடு வானும் காலன் குறித்ததோர் அன்னை தம்மை
எற்கவே ஆண்டிற் குள்ளே யிவன்தந்தை அன்னை கண்டம்
திரியாக நேரு மென்றேம் செப்பின மொழிகுன்றாது.

25. ஜாதகனுக்கு நாற்பத்து மூன்றுவது வயது நடைபெறுகையில் ஐப்பசி மாதத்தில் தாய் மரணமடைவாள். ஜாதகன் பிறந்த ஒரு வருஷத்திற்குள் தந்தையின் தாய் மரணமடைவாள். நாங்கள் சொன்ன மொழி தப்பாது நடைபெறும்.

26. பால்கன் மணத்தின் காலம் பகருவோம் பதினே ழாண்டுள்
நீலியும் மேல்பால் நேரும் நுவலுவோ மவள்கு ணத்தைச்
சீலியாம் விரத சாலி தேரின புத்தி யுண்டு
காலத்தை அறிந் துரைப்பள் கணவனுக் கினியளாகும்.

26. ஜாதகனின் விவாஹ காலத்தைக் கூறுவோம். பதினேழாவது வயதிற்குள் இவனுக்கு விவாஹம் நடைபெறும். இவனுடைய மனைவியின் குணத்தைக் கூறுவோம். சீலமுள்ளவள். விரதங்களை அனுஷ்டிப்பாள். பக்குவ மடைந்த புத்திபடைத்தவள். காலத்திற்கு உசிதமான வார்த்தைகளையே பேசுவாள். கணவனுக்குப் பிரியமானவள்.

27. தோகைபோல் நிறத்தா ளாகும் சுந்தரி யோக சாலி
பாகமாய்ப் பேசு வாளாம் பதர்குண மில்லா ளாகும்
நாகம்போல் கோபம் கொஞ்சம் நன்னடை யுடையா ளாகும்.
ஆகம முணர்ந்தோர்க் கன்ன மவளீவ ளன்பாய்த் தானே,

27. மயில்போல் நிறம் வாய்ந்தவள். நல்ல அதிருஷ்ட முள்ளவள். அழகாக வகுத்துப் பேசுவாள். பரபரப்பு இல்லாதவள். சர்ப்பம்போல் கோப முள்ளவள். நன்னடக்கை உடையவள். சாஸ்திரம் கற்ற பெரியார்களுக்குப் பக்தியுடன் அமுதளித்து உபசாரம் செய்வாள்.

28. சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
அதிபன்தன் பூர்வம் சொல்வேன் மாயூரம் தன்னி லேதான்
நிதிமிக உடையா னுக்கு நேர்ந்தனன் ரெட்டி வமிசம்.
அதிதிகள் க்கன்ன மீந்து வறுமுகன் பத்தி பூண்டான்.

28. இந்தத் தம்பதிகளுக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பெண்கள். அந்நால்வரும் தீர்க்கமாக வாழ்வார்கள். ஜாதகனுடையபூர்வ ஜன்மத்தைக் கூறுவேன். இவன் முன் பிறவியில் மாயூரத்தில் அதிகச் செல்வம் படைத்த ஒரு ரெட்டி குடும்பத்தில் பிறந்து, விருந்தாளிகளுக்கு அன்ன மளித்து, சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டும் வாழ்ந்து வந்தான்.

29. மறலியின் பதிக்குச் சென்று மறயவன் வரையப் பட்டு
நிறைசெயும் கோவைசியச் சேயாய் நேருவா னென்று சொல்வோம்
உரைக்கிறே மிவனின் யோகம் உதித்தநாள் முதலா மாகப்
பிறைபோலே யோக மெய்தும் பலவிதச் செட்டு ஓங்கல்.

29. காலக்கிரமத்தில் யமனுலகம் சென்ற இவனைப் பிரம்மதேவன் பசுக்கள் மேய்த்துச் ஜீவிக்கும் யாதவகுலத்தில் பிறப்பித்திருக்கின்றான். இவனுடைய யோகங்களைச் சொல்லுவோம். இவன் பிறந்தது முதல் வளர் பிரைச்சந்திரன் போல யோகங்கள் விருத்தியாகும். பலவித வியாபாரங்களைச் செய்வான்.

30. தன்தன மதிக மாகும் சஞ்சலம் நிவிர்த்தி யாகும்
இனமதிப் புடனே வாழ்த லிடுக்கமில் லாதா னென்றேம்
நினைவது முடிக்க வல்லான் நிருபர்க ளுறவு கொள்வன்
கனமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

30. பண சேமிப்பும் அதிக மாகும். கவலைகள் நீங்கும். இவனுடைய இனத்தார்களை விட மேலாக வாழ்வான். வாழ்க்கையில் இடுக்கண் இராது. தான் நினைத்த காரியங்களை முடிக்கும் ஆற்றல் படைத்தவன். அரசர்களுடைய நட்பு இவனுக்கு இருக்கும். கணேசனைப் பெற்ற தாயே! மேலும் கேட்பீராக.

31. அறுபது ஆறு ஆண்டில் அணுகிய மகர மாதம்
திருமக னுடலம் ஏகும் ஜயமுனி மறுத்துச் சொல்வர்
இருஆண்டுக் குள்ளே பாலனுக்கு எய்திடும் கண்ட மென்றேம்
பிருகுமே மறுத்துச் சொல்வார் புக்கிடு மனேகபாதை.

31. இவனுடைய அறுபத்தாறுவது வயதில் தை மாதத்தில் ஜாதகனுக்கு மரண மேற்படும். இவ்வாறு சொன்னதைக் கேட்ட ஜயமுனிவர், இவன் பிறந்த இரண்டு ஆண்டிற்குள்ளாகவே இவனுக்குக் கண்டம்

வந்திடும் என்று நாம் கருதுகின்ரேம் என மறுத்துக் கூறினர். பிருகு முனிவர் இந்த ஆக்ஷேபத்திற்குப் பதிலுரைத்தார். உண்மை. இவனுக்கு அநேக ஆபத்துக்கள் நேரிடும்.

32. பொன்னவன் ஜன்மம் தங்கப் புதல்வனுக் கனேக பாதை
பின்மையாய் வந்த போதும் பரிதிமுன் பனிபோல் நீங்கும்
சொன்னதோர் வயது தீர்க்கம் செப்புவோம் இவன்பின் ஜன்மம்
கன்னமா புரியி லேதான் கலப்பனும் பிரம்ம சேயாய்.

32. ஆயினும் குரு, ஜன்ம லக்கினமாகிய கடகத்தில் தங்கி இருப்பதால், சூரியன் முன் பனிபோல, எல்லாக் கண்டங்களும் நிவிருத்தியாகும். ஆகையால் நாம் சொன்ன வயது வரையில் நீடித்து வாழ்வான். இவனுடைய பின் ஜன்மத்தையும் கூறுவோம். மறுபிறவியில் இவன் கன்னமாபுரியில் பிராம்மண ஜாதியில் பிறப்பான்.

33. மாரனும் ஜனிக்கும் காலே மாந்தனே முதல்பா தத்தில்
பார்மகன் தசைஐந் தாண்டும் பருகிடும் திங்க ளைந்தும்
கூறுவோம் பவனே யாங்கள் குழவிக்குப் பிணி அனேகம்
தீரமாய் அன்னே நோயும் செல்லுவாள் பிதாவின் அன்னே.

33. இவன் மிருக சீர்ஷ நக்ஷத்திரம் முதல் பாதத்தில் ஜனித்திருக்கின்ருன். ஆகையால் செவ்வாய்த் தசை இருப்பு வருஷங்கள் ஐந்து, மாதங்கள் ஐந்து. இந்தத் தசையின் பலனைச் சொல்லுவோம். ஜாதகனுக்குப் பல நோய்கள் வரும். இவனுடைய தாயும் பிணிகளால் துன்பப்படுவாள். பிதாவின் அன்னே மரணமடைவாள்.

34. தரணிகள் சேர்த லுண்டு செட்டுக்கள் பலமே யாகும்
பொருள்சேரும் செலவு முண்டு பெற்றதாய் வர்க்கம் சூதம்
அரிவையர் சுபமு மீண்டு அறிவித்தோம் பூர்வ பாகம்
கரிமத வானே பெற்ற காதலி கேட்டி டாயே.

34. பூமிகள் சேரும். பலவித வியாபாரங்களும் ஓங்கி வளரும். புதிய புதிய பொருள்கள் கிடைக்கும். செலவுகளும் நடை பெறும். தாயின் வருக்கத்தில் சூதகம் நேரிடும். சகோதரிகளுக்கு நன்மைகள் ஏற்படும். இப்பொழுது பூர்வபாகத்தைத்தான் சொல்லியிருக்கிரேம். ஐங்கரனைப் பெற்ற சங்கரியே ! மேலும் எங்களைக் கேட்டருளல் வேண்டும்.

ஜாதகம் 36

1. திங்களும் மேட மாகச் சேய் நந்தி கேது வீணை
பங்கயன் பனிங்கு புத்தி பார்வையில் ராகு மேரு
துங்கமாம் குருவும் சாடி சனிமீனம் கடகம் ஜன்மம்
இங்கிவை கிரகம் நின்று லியம்புவீர் பலனைத் தானே.

சனி	சந்திரன்	செவ்வாய்	கேது
குரு	இராசி		லக்னம்
	சக்கரம்		
ராகு			சூரியன் சுக்கிரன் புதன்

1. பிரமாதி வருஷம் புரட்டாசி மாதம் 19-ஆந் தேதி வெள்ளிக்கிழமை 17-நாழிகைக்கு மேல் 22 நாழிகைக்குள் ஜனனம். ஆங்கிலத் தேதி 3-10-1879. நவக்கிரஹங்களின் பாதசாரம்—ஹஸ்தம் 3-இல் சூரியன். கிருத்திகை 1-இல் சந்திரன். கிருத்திகை 4-இல் செவ்வாய். ஹஸ்தம் 3-இல் புதன் (அஸ்தம்). சதயம் 1-இல் சுக்கிரன் (வக்ரீ). ரேவதி 2-இல் சனி (வக்ரீ). உத்தராடம் 1-இல் ராஹு. புனர்வஸு 3-இல் கேது. நக்ஷத்திரம் கிருத்திகை. சூரிய தசையில் இருப்பு வருஷங்கள் ஐந்து, மாதங்கள் ஐந்து.

சந்திரன் மேஷம். செவ்வாய் விருஷபம். கேது மிதுனம். சூரியன் சுக்கிரன் புதன் கன்னி. ராஹு தனுஸ். குரு கும்பம். சனி மீனம். இலக்கினம் கடகம். இவ்வாறு நின்றிடும் கிரஹங்களின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி வினவினுள்.

2. உமையவள் கேட்கும் போது உரைக்கிருர் பிருகு தாமும்
அமைந்திடு ஆண்பால் ஜன்மம் அறைகிரே மில்லம் தானும்
மன்வாடை மீேமேல் வீதி யீசனும் காளி மாரி
தவசியே வடபா லாகும் சக்கரத் தோனும் மேல்பால்.

2. உமா தேவி இவ்வாறு வினவியவுடன் பிருகு முனிவர் பலன்களைச் சொல்லத் தொடங்குகிருர். இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண்,

வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். தென் வரிசையில் வீடு நிற்கும். வட திசையில் பரமசிவன் காளி மாரியம்மன் இவர்களின் ஆலயம் இருக்கும். சக்கராயுதத்தைத் தரித்த விஷ்ணுவின் கோயில் மேற்குத் திசையில் உண்டு.

3. அக்கினி காளி தன்பால் அணுகிய பேரூர் தன்னில்
வருவனு னிந்தப் பாலன் சுருதியின் குலத்தில சிரேஷ்டன்
மிக்கவே அன்னை தந்தை வித்தன் துணைவர் யோகம்
தக்கவே முன்பின் ஜன்மம் சாற்றுவோ மிந்நூல் தன்னில்.

3. தென் கிழக்குத் திசையில் மற்ரெரு காளி கோயிலும் விளங்கும். இவ்வடையாளங்கள் வாய்ந்த பெரிய ஓர் ஊரில் பிராம்மண ஜாதியில் இந்தப்பாலன் ஜனித்திருக்கின்றான். தேவியே! நாங்கள், இவனுடைய யோகத்தையும், தாய் தந்தை சகோதரர் மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும், முன்பின் ஜன்மங்களைப் பற்றியும் இந்த நூலில் கூறப்போகின்ரேம். கருணையுடன் கேட்பீராக.

4. தந்தையின் துணைஆண் காணுன் சத்தியர் மூவ ராகும்
பிந்தியும் சிலவே சேதம் பேசுவோம் பின்பால் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்பு வோமிருசி வப்பன்
சிந்தையும் நல்ல தாகும சிலேடையாய்ப் பேசு வானும்.

4. ஜாதகனுடைய தந்தைகுச் சகோதரன் இல்லை. சகோதரிகள் மூவர். இம் மூவரைத் தவிர வேறு சிலர் பிறந்து அழிவார்கள். அந்த வரலாற்றைப் பின் பகுதியில் பேசுவோம். தந்தையின் குணத்தைச் சொல்லுவேன். மாநிற முள்ளவன். நல்ல எண்ண முள்ளவன். சிலேடைவார்த்தைகளைப் பேசுவான்.

5. தரணியை விருத்தி செய்வன் சாதமும் குறைவு றுதான்
பொருளது அதிகம் காணுன் எம்மானின் பத்தி பூண்பன்
திருகான குணமில் லாதான் தேரின புத்தி யேற்பன்
குறையென்ரோர்க் குதவி செய்வன் கொடுமையை எவர்க்கு
[மெண்ணுன்.

5. பூமிகளை மேன் மேலும் அபிவிருத்தி செய்வான் ஆகார சௌக்கியம் உடையவன். இவனிடம் பணம் அதிக மிராது. சிவபிரானிடம் பக்தி கொண்டவன். கெட்ட குண மில்லாதவன். அனுபவம் வாய்ந்த பெரியோர்களின் உபதேசங்களை ஏற்றுக்கொண்டு அதன்படி நடப்பான். குறைப்பட்டவர்களுக்கு உபகாரம் செய்வான். யாருக்கும் தீங்கை எண்ணுதவன்.

6. தன்துணை ஆண்பால் தோஷம் சாற்றுவீர் முனியே நீர்தாம்
ஒன்பதில் காரி தங்க உரைத்திட்டோ மந்தச் சங்கை
அன்னியர்க் கிணக்கம் சொல்லான் அனுகும்கா ரகதே கங்கள்
பின்னமில் லாத தேகி பொய்யது வழுத்தா னுகும்.

6. இவனுக்குச் சகோதரன் இல்லை என்று சொன்னீர்களே? அதற்கென்ன காரணம்? எனத் தேவி கேட்க, பிருகு முனிவர் பதிலுரைத்தார். சனி ஒன்பதா மிடத்தில் தங்கி இருப்பதால் தந்தைக்குச் சகோதர பாவமாகிய விருஷபத்தைப் பார்ப்பதால் என்பது கருத்து. அவனுக்கு ஆண் சகோதர விருத்தி இல்லை. இவ்வாறு முனிவர் பதில் சொல்லி விட்டு அவனுடைய குணத்தை மேலும் தொடர்ந்து கூறுகின்ருர். பிறர் பேசியதை ஆக்ஷேபிக்க மாட்டான். ஊனமில்லாத சரீரம் வாய்ந்தவன். பொய் பேசாதவனுகவும் இருப்பான்.

7. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோன்றுவா னிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் யாவர்க்கும் நல்லோ னுவன்
தன்சொல்லு மடக்க முண்டு தரணியில் உய்வா னுகும்
பொன்னது அதிகம் காணுன் புறஞ்சொல்லா னிருநி றத்தான்.

7. நாம் சொன்ன குணங்கள் வாய்ந்த மனிதனுக்கு இந்தப்பாலன் தோன்றி இருக்கின்றான். இனி ஜாதகனுடைய குணங்களைக் கூறுவோம். எல்லோருக்கும் நல்லவனுக இருப்பான். அவனுடைய வார்த்தைகளில் வணக்கம் ஊடுருவி ஒலிக்கும். உலகில் பாவம் செய்யாதவனுக வாழ்வான். இவனுடைய செல்வம் நாணய உருவத்தில் இராது. பிறரைப் பற்றி மறைவில் தூஷணைகள் சொல்லான். கருத்த மேனியான்.

8. கல்வியும் சமம தாகும் கருதிடான் கட்டு வார்த்தை
யில்லையென் றுரைக்க மாட்டா னிதிகாச மறியா னுகும்
சொல்லது சுருக்க மாகும் தோன்றிடும் பித்தச் சூடு
மல்லுக்கு முன்செல் லாதான் வாக்கதைக் காப்பா னுகும்.

8. மத்திய தரமான கல்வி கற்றவன். அடுக்குச் சொற்களைப் பேசுவதில் விருப்ப மில்லாதவன். உதவியை நாடியவர்களுக்கு "இல்லை" என்று சொல்லான், புராண இதிஹாஸங்களை அறியாதவன். அதிகமாகப் பேசாதவன். பேச்சு மிகவும் சுருக்கமாகவே இருக்கும். இவனது உடலில் பித்தச் சூடு உயர்ந்திருக்கும். சண்டைகளில் ஈடுபடான். தனது வாக்கைக் காப்பாற்றுவான்.

9. கரமதில் மாலின் ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
தரையதை விரயம் செய்யான் சதுஷ்பாதம் விருத்தி யல்பம்
பெரியதோர் தலங்கள் செல்வன் பின்புத்தி யுடைய னுகும்
அரிபத்தி பூண்பா னுகும் அயல்குற்றம் புகலா னுகும்.

9. இவன்து கையில் விஷ்ணு ரேகை விளங்கிடும். பதுமரேகையும் திகழும். இவன் தனுக்குச் சொந்தமாக உள்ள பூமியை இழக்கமாட்டான். கால்நடைகள் இவனிடம் விருத்தியாகா. புண்ணிய ஸ்தலங்களுக்குச் செல்லுவான். இவன் ஆரம்பித்த வேலை ஒருவாறு முடிந்தபின் நல்ல யோசனைகள் இவனுக்குத் தோன்றும். இவன் விஷ்ணு பக்தன். அயலார் குற்றங்களை வெளிப்படுத்தாதவன்.

10. இவனுடைத் துணைவர் தம்மை யியம்புவோம் மூவ ராகும்
அவனியில் இரண்டு சேதம் நாயகி ஒன்றே தீர்க்கம்
தவசியே அவள்கு ணத்தைச் சாற்றுவோம் சிவந்த மேனி
பவமன மில்லா ளாகும் பணிந்தோரை ஆத ரிப்பள்.

10. இவனுக்கு மூன்று உடன் பிறந்தார்கள். அவர்களில் இருவர் நீடித்து வாழ்ார்கள். ஆகவே, ஒரு சகோதரிதான் தீர்க்காயுளுடன் வாழ்வாள் தேவியே! அவளுடைய குணங்களையும் கூறுகின்றோம். சிவந்த மேனியாள். கெட்டமனமில்லாதவள். கீழ்ப்பட்டவர்களை ஆதரிப்பாள்.

11. அன்னம்போல் வடிவு மொக்கும் ஆசார முடையா ளாகும்
கன்னென மொழியு முண்டு கபடிலாள் முன்கோ பத்தாள்
பொன்பணி சேர்ப்பா ளாகும் புருடனும் தென்பால் நேரும்
கன்னிகை யோக சாலி கணவன்தன் மனதுக் கேத்தாள்.

11. அன்னம்போல் அழகுடையவள். நல்ல ஆசாரமுள்ளவள். கரும்புபோன்ற இனிய மொழிகளைப் பேசுவாள். கபடமில்லாதவள். முன்கோபமுண்டு. தங்க ஆபரணங்களை அதிகம் அடைவாள். தென்திசையில் இவள் வாழ்க்கைப்படுவாள். மிக்க அதிர்ஷ்டமுள்ளவள். கணவனுடைய இஷ்டப்படியே நடப்பாள்.

12. சுதர்களு மாண்பால் ரண்டு தோகையு மவ்வாறு தீர்க்கம்
பதராகு மென்று சொன்னோம் பாவையும் தீர்க்க சீவி
சதியிலா மனத்தா ளாகும் சாதமு மன்பா யீவள்
ததிபாக்கிய முடையா ளாகும் சாற்றின மொழி குன்றாது.

12. அவளுக்கு இரு பிள்ளைகள். பெண்களும் இருவர். இந்நால்வரும் தீர்க்கசீவிகள். இவர்களைத் தவிர சில குழந்தைகள் பிறக்கும். ஆனால், நீடித்திரா. இவளும் தீர்க்காயுளுடன் வாழ்வாள். பிறர்க்குக் கெடுதல் எண்ணாத மனமுள்ளவள். அன்புடன் அன்னதானம் செய்வாள். பால், தயிர் பாக்கியமுள்ளவள். நாங்கள் சொன்ன இவ் வார்த்தை பொய்யாகாது.

13. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாந்தளிர் மேனி யாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உள்மனம் கபடு மில்லாள்
பாதக மனஞ்செல் லாதாள் பகையென்று மனதில் வையாள்
மேதினில் நல்லோ ளாவள் விகடங்கள் கூறு ளாகும்.

13. ஜாதகனுடைய தாயின் குணத்தைக் கூறுவோம். மாந்தளிர் போன்ற நிறம் உடையவள். இனிமையாகப் பேசுவாள். அவளுக்குச் சிறிதும் கபடமிராது. பிறர்க்குத் தீமைகளையும் எண்ணாதவள். பகைமையை உடனே மறந்து விடுவாள். எல்லோருக்கும் நல்லவளாக விளங்குவாள். பிறர் மனம் புண்ணாகும்படி பரிகாசங்கள் செய்யாள்.

14. முன்கோபம் பின்பு தாழ்வு மூலச்சூடுடைய ளாகும்
தன்துணை ஆண்பால் மூன்று தையலர் ஐவ ராகும்
பின்னமாம் சிலவே பின்னால் பெற்றதா யில்லம் ஆவள்
மன்னவன் மனதுக் கேத்தோள் மறுத்துரை அதிகம் கூறாள்.

14. முன்கோபமுண்டு. ஆனால், பச்சாதாபமடைந்து தணிந்துவிடுவாள். மூலச் சூடு உடையவள். அவளுக்கு மூன்று சகோதரர்கள். ஐந்து சகோதரிகள். பிற்காலத்தில் இங்குச் சொல்லப்பட்ட உடன் பிறந்தார்களில் சிலர் நஷ்டமாவார்கள். தாயின் வீட்டிலேயே கணவனுடன் வாழ்வாள். பர்த்தாவின் மனம்போல் நடப்பாள். யாரிடமும் அதிகம் ஆக்ஷேபித்துப் பேசாதவள்.

15. வாதநோ யுடைய ளாகும் வரைகிறே மிவள்தன் பூர்வம்
பாதகம் விலக்கும் தில்லை பிறந்தனள் சைவச் சேயாய்த்
தீதென்றோர்க் குதவி செய்து செழிப்பான குடும்பி யாகிச்
சேதுவின் பதிக்குச் சென்று தீவினை யில்லா ளாகி ;

15. வாத நோயினால் கஷ்டப்படுவாள். இவளுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுவோம். எல்லாப் பாவங்களையும் நாசம் செய்யும் சிதம்பர க்ஷேத்திரத்தில் சைவ குலத்தில் பிறந்து, கஷ்டப்படுபவர்களுக்கு உதவி செய்த புண்ணியத்தினால் சிறந்த குடும்பமுள்ளவளாகி, சேதுவிற்குச் சென்று, அங்கு நீராடி, சிறிதும் பாவமில்லாதவளாய் ;

16. மங்கையும் மரண மாகி மறையவன் வரையப் பட்டுத்
துங்கமாம் குலமு தித்தாள் தொல்புவி வறுமை காணாள்
அங்கவள் பின்ஜன் மங்கேள் அழகர்[1] வாழ் பாண்டி தன்னில்
சங்கையில் லாமல் தோன்றும் சதுர்மறைக் குலத்தி லேதான்.

16. தன் அந்திய காலத்தில் மரணமடைந்தாள். பிறகு பிரம்மதேவன் அவளை இங்குப் படைத்திருக்கின்றான். அவள் இக்கடக லக்கின மகனுக்குத் தாயாக வாய்த்திருக்கின்றாள். இவளுடைய பின்ஜன்மத்தையும் கூறுவோம். இவள் மறு பிறவியில் அழகர் எழுந்தருளி இருக்கும் பாண்டிய நாட்டில், நிச்சயமாக, வேதமோதும் பிராம்மண வம்சத்தில் தோன்றுவாள்.

17. தந்தையின் பூர்வம் சொல்வேன் தாம்பிர பரணி தன்னில்
பிந்திய குலமு தித்துப் பேதையும் மதலை யுண்டாய்
விந்தையாய்ச் செட்டுச் செய்து வித்தகன் வாழு நாளில்
பிந்தினோர்க் கிடைஞ்சல் செய்து பூமியைத் தன்கைக் கொண்டான்.

17. ஜாதகனுடைய தந்தையின் பூர்வஜன்மத்தைக் கூறுவோம். இவன் முன்ஜென்மத்தில் தாம்பிரபரணி நதிக் கரையில் உள்ளதோர் ஊரில் ஜனித்து, மனைவி மக்களை அடைந்து, நன்றாக வியாபாரம் செய்து சுகமாக ஜீவித்து வந்தான். அவ்வாறு இவன் வாழ்ந்துவரும் காலத்தில் ஏழைகளின் பூமிகளை அக்கிரமாகத் தன் வசப்படுத்திக்கொண்டான்.

[1]. திருமாலிருஞ்சோலையில் கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கும் விஷ்ணுவிற்கு "அழகர்" என்றும் "கள்ளழகர்" என்றும் திருநாமமாகும். "திருமாலிருஞ்சோலை" மதுரைக்கு அருகிலுள்ளதொரு விஷ்ணு ஸ்தலம்.

18. ஏழையோர் வருத்த முற்று இயம்புவார் சாபம் தானும்
தாழ்படச் செய்த பாவி தங்காது உந்த ஞஸ்தி
ஆழியில் பின்ஜன் மத்தில் அன்னவன் அநுஜனின்றி
வாழ்குவா யென்று சொல்ல மருவிற்று அந்தச் சாபம்.

18. அதனால் வருத்தமடைந்த ஏழைகள் சாபமிட்டார்கள். எங்களுடைய சொத்துக்களை அபகரித்துக்கொண்டு எங்களைத் தாழ்வுறச் செய்த மகா பாவியாகிய நீ, இப்பிறவிலேயே உனது சொத்துக்களை இழப்பாய். மேலும், வரும் ஜன்மத்தில் தம்பிகளின்றி வாழ்வாய். இவ்விரு சாபங்களும் அவனைப் பற்றிக் கொண்டன.

19. அந்திய காலம் தன்னில் அவன்செல்வம் குறைவு நேர்ந்து
தென்திசைக் கால னுடு சென்றுமே பிரமன் லக்கம்
முந்தின குலமு தித்தான் மேவிடு மேழைச் சாபம்
தன்துணை ஆண்பால் தோஷம் தனியனுய் வாழ்வா னுகும்.

19. பிறகு அந்திய காலத்தில் ஏழைகள் சாபத்தின்படி இவன் தனது சொத்துக்கள் எல்லாவற்றையும் இழந்து அவர்கள் போலவே ஏழையாகி இறந்தான். பின்பு பிரம்மன் அவனை இங்குப் பிராம்மண ஜாதியில் படைத்திருக்கின்றுன். அவனே ஜாதகனுடைய தந்தை. முன்ஜன்ம சாபத்தின் படியே இவன் சகோதரனற்றுத் தனியனுக உயிர் வாழ்வான்.

20. மூவேழு ஆண்டு தன்னில் விளம்புவோம் கண்டம் தானும்
ஆவலாய் முன்பின் ஜன்மம் அரங்கமா நகர முத்திரம்
தாவிய சிறுஊர் தன்னில் ஜனிப்பனும் க்ஷத்திரிய சேயாய்
மேவிய தவங்கள் செய்யும் வித்தகி கேட்டி டாயே.

20. ஜாதகனுடைய இருபத்தோருவது வயதில் இவனுக்கு (தந்தைக்கு) கண்டம் ஏற்படும். இவனுடைய பின்ஜன்மத்தையும் கூறுவோம். இவன் ஸ்ரீரங்கத்திற்கு வடக்கிலுள்ளதொரு சிறிய கிராமத்தில் க்ஷத்திரிய குடும்பத்தில் பிறப்பான். சீரிய தவங்களைச் செய்யும் தேவியே ! மேலும் கேட்பீராக.

21. அத்திரி மறுத்துச் சொல்வார் அந்தணர் குலமு தித்தோன்
க்ஷத்திரிய குலத்தில் நேரும் சங்கையைச் சொல்லு மென்ன
வித்தக னிச்சென் மத்தில் மேல்பூச அருணத்த னும்
சித்தமே கறுப்பு மாயும் சொல்லதைத் தவிர்த்த தானும் ;

21. இங்கு அத்திரி மஹரிஷி ஒரு சந்தேகத்தைத் தெளிவிக்கவேண்டினர். அஃதாவது ; இச் சென்மத்தில் அந்தணர் குலத்தில் பிறந்த இவன் மறு பிறவியில் க்ஷத்திரிய வம்சத்தில் உதிக்கக் காரணம் என்ன ? என்பது. இதற்கு வசிஷ்டர் பதில் கூறுகின்றுர். இவன் இந்தப் பிறவியில் வெளித் தோற்றத்தில் நல்லவன்போல் வேஷம் தரித்து உள்ளத்தில் கள்ளம் கொண்டவனுக இருப்பதாலும், தான் சொன்ன வார்த்தைப்படி நடவாததாலும் ;

22. உதிப்பனு மென்று சொல்வோம் உயர்வான குடும்பி யாவன்
சதியிலா நாற்ப தாண்டில் தாய்க்குறும் கண்டம் சொல்வேன்
அதுகாலம் பித்த நோயால் அடைகுவா வென்று சொல்வோம்
துதிசெய்தோர் தம்மைக் காக்கும் துறவியே கேட்டி டாயே.

22. அடுத்து வரும் பிறவியில் தாழ்ந்த ஜாதியில்தான் பிறப்பான். ஆனுல், அதிக ஐசுவரியம் படைத்துப் பெருமை வாய்ந்த குடும்பம் உள்ளவனுவான். ஜாதகனுடைய நாற்பதாம் ஆண்டில் அவனுடைய தாய்க்குப் பித்தநோய் காணும். அந் நோயினுலேயே கடைசியாக இறப்பாள். துதி செய்தவர்களைக் காப்பாற்றும் முனியே ! மேலும் கேட்பீராக.

23. பாலகன் மணத்தின் காலம் பகருவோ மிருபா னென்பான்
சாலவே ஆண்டு தன்னில் தங்கிடும் குடஇல் பாரி
யேலவே குணத்தைச் சொல்வேன் யாவர்க்கும் நல்லோ ளாவள்
காலத்தை அறிந்து ரைப்பாள் கணவனுக் கினிய ளாகும்.

23. இனி, ஜாதகனுடைய விவாஹ காலத்தைக் குறிப்பிடுவோம். இருபத்தொன்பதாவது வயதில் இவனுக்கு மணம் நடைபெறும். மணப் பெண் மேற்குத் திசையில் ஜனித்திருப்பாள். அந்தப் பெண்ணின் குணத்தைக் கூறுவோம். ஒருவரையும் பகைத்துக் கொள்ளாதவள். காலத்தை அறிந்து அதற்கேற்றபடி பேசுவாள். கணவனுக்கினியாள்.

24. புத்திமான் பொறுமை சாலி புண்ணிய மனத்தா ளாகும்
சித்தமே கறுப்பு மில்லாள் தீங்கதை ஒருவர்க் கெண்ணுள்
பத்தினி வந்த பின்பு பிறைபோலே யோகம் வாய்க்கும்
சுத்தமு முடையா ளாகும் சுந்தர மென்று சொல்வோம்.

24. புத்தி சாதுர்யமுள்ளவள். பொறுமைக் குணம் வாய்ந்தவள். தூய மனம் படைத்தவள். கபடமில்லாதவள். ஒருவருக்கும் தீங்கை எண்ணுதவள். இவள் இக் கடக லக்கின மகனுக்கு வாழ்க்கைப்பட்ட பிறகு, வளர்பிறைச் சந்திரன்போல அவனது யோகங்கள் வளரும். மிக்க பரிசுத்த மானவள். அழகு வாய்ந்தவளாகவும் இருப்பாள் என்று கூறுவோம்.

25. வருவோரை ஆத ரிப்பள் வரன்மனம் போல வாழ்வள்
திருமக ளொப்ப தாகும் செய்நன்றி மறவா ளாகும்
பெருமையும் புகழு மேற்பள் பெரிதான விரத மேற்பாள்
அரிவையும் தீர்க்க சீவி அம்பிகை யாளே கேளாய்.

25. வீட்டிற்கு வந்தவர்களைப் புன்முறுவலுடன் வரவேற்று உபசரிப்பாள். கணவன் மனத்தை அறிந்து அதற்கு ஏற்றபடி வாழ்க்கை நடத்துவாள். லக்ஷ்மிக்குச் சமானமானவள். தான் பெற்ற உபகாரத்தை மறவாதவள். பெருமையும் புகழும் இவளை நாடிவரும். அதிகப் பொருள் செலவு செய்து நீண்ட காலம் அனுஷ்டிக்க வேண்டிய விரதங்களைச் சிரத்தையுடன் செய்து முடிப்பாள். தீர்க்காயுள் வாய்ந்தவள். தேவியே ! மேலும் கேளுங்கள்.

26. புத்திர விருத்தி சொல்வேன் பெண்ணது இரண்டு தீர்க்கம்
சித்தசன் போலாண் ஒன்று செப்புவோம் தீர்க்க மாகப்
புத்திரன் இவன்மே லாகப் போற்றுவோம் யோகம் தானும்
அத்தியை வளர்த்த எங்கள் ஆத்துமத் தாயே கேளாய்.

26. இவர்களுடைய புத்திர பாவத்தைக் கூறுவோம். இவர்களுக்கு இரு பெண்களும், மன்மதனைப் போல் அழகுள்ள ஒரு பிள்ளையும் பிறப்பார்கள். இம்மூவரும் தீர்க்க காலம் சுகமாக வாழ்வார்கள். இச் சாதகனைக் காட்டிலும் இவன் மகன் மிகப் பெரிய யோகங்கள் வாய்ந்தவனாகச் சிறப்புடன் வாழ்வான். கணேசனைப் பெற்ற தாயே! மேலும் கேட்பீராக.

27. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகிறோம் தில்லை தன்னில்
வன்னிய குலமு தித்து மனைவிமைந் தருமுண் டாசி
இன்னவர் வாழு நாளி லெய்தின வினையைக் கேண்மோ
கன்னிகை யொருத்தி பேரில் காணாத வார்த்தை சொன்னான்.

27. ஜாதகனது முன்ஜன்மத்தைக் கூறுகின்றோம். இவன் சிதம்பர க்ஷேத்திரத்தில் வன்னிய குலத்தில் பிறந்து, மனைவி குழந்தைகளுடன் சுகமாக வாழும் காலத்தில் இவனுக்கேற்பட்ட பாவத்தைச் சொல்லுகின்றோம். இவன் ஒரு பெண்ணின்மேல் காரணமில்லாமல் அவதூறுகளைக் கற்பித்து எல்லோரிடமும் அவைகளைச் சொல்லிவந்தான்.

28. இனமதை விட்டு நீக்க யேகின மாது சொல்வாள்
வினையான வார்த்தை யென்மேல் விளம்பின பாவிக்குத் தான்
துணைவரு மில்லா தாகித் தோன்றும்பின் ஜன்மம் தன்னில்
தனியனாய்த் தாழ்கு டும்பம் சஞ்சல மனமாய் வாழ்வாய்

28. மேலும் அந்தப் பெண்ணின கணவனும், மற்றைய உறவினர் களும் அவளை வீட்டை விட்டு நீக்குவதற்கு இவனே காரணமானான். ஆகையால் மிகவும் வருந்திய அந்த மாது, ஒருவிதக் குற்றமும் இல்லாத என்னைப் பிரித்த பாவியாகிய நீ மறுபிறவியில், சகோதரர்களற்றும், தாழ்ந்த குடும்ப முள்ளவனாகவும், எப்பொழுதும் மனத்தில் கவலை கொண்டவனாகவும் வாழ்வாய் என்று சொன்னாள்.

29. இன்னமும் பலவாறு சொல்லி ஏகின ளந்த மாது
துன்மைகள் சேர்ந்த தென்றோம் சுதனுமே அந்தி யத்தில்
அந்நக ரால யத்தில் அவன்தீபம் பார்த்து வந்து
முன்னோர்க்குத் தொண்டு பூண்டு மேவினன் கால னூடு.

29. இன்னும் பலவாறு சொல்லிவிட்டு அவள் சென்றாள். அத் துன்பங்கள் எல்லாம் இவனைப் பற்றிக் கொண்டன. ஆயினும் இவன் அந்திய காலத்தில் நல்ல புத்தியை அடைந்து, அந் நகரிலுள்ள ஆலயத்தில் தீப மேற்றியும், பெரியோர்களுக்குத் தொண்டு செய்தும் காலத்தைக் கழித்து, கடைசியில் மரணத்தை அடைந்தான்.

30. பிரமனால் வரையப் பட்டுப் பிறப்பினு மிந்தப் பாலன்
அரிவையாள் சாபத் தாலே அவன்துணை ஆண்பால் தோஷம்
வறுமையும் சுகமு மேற்பன் மாமுனி தடுத்துச் சொல்வர்
திருமகன் முன்ஜன் மத்தில் தீமின்தன் குலமு தித்தோன் ;

30. இவனைப் பிரமதேவன் இக் கடகலக்கினத்தில் பிறப்பித்திருக்கிறான். அந்தப் பெண்ணின் சாபத்தால் இவனுக்குச் சகோதரனில்லை. இவனது வாழ்க்கையில் வறுமையும் சுகமும் நிறைந்திருக்கும். ஒரு மா முனிவர் சந்தேகித்தார் :—முன் ஜன்மத்தில் வன்னிய குலத்தில் பிறந்த இவன் ;

31. மறைக்குல முதிக்கும் வண்ணம் அறிவிப்பீர் முனியே நீர்தாம்
அரனுடை ஆலயத் தில் அனுகின திப்புண்ணிய மாம்
மறை யோர்க்குத் தொண்டு பூண்டு வந்ததா லுதிப்பா னுகும்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

31. பிராமணக் குலத்தில் எவ்வாறு பிறந்தான் ? அதன் காரணத்தை விளக்கிக் கூறுவீராக. வசிஷ்டர் பதில் கூறுகின்றார். முன் பிறவியில் இவன் சிவபிரான் ஆலயத்தில் தீபம் சமர்ப்பித்து வந்தமையாலும் அந்தணர்களுக்குத் தொண்டு செய்துவந்ததாலும் இத்தகைய உயர் குலத்தில் பிறந்தான். விநாயகரை பெற்ற தாயே ! மேலும் கேளுங்கள்.

32. அறுபது ஏழு ஆண்டில் அணுகிய தேளின் மாதம்
குறைபக்கம் ஏகா தேசி குழவியி னுடலம் ஏகும்
மறுஜன்மம் வள்ளூர் தன்னில் வருகுவா னிக்கு லத்தில்
அரசரால் தொழிலும் பெற்று அவனுமே வாழ்வான் மாதே.

32. அறுபத்தேழாவது ஆண்டில் விருச்சிக மாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் ஏகாதசி திதியில் இவன் தேக வியோக மடைவான். இவன் மறுபிறவியில் பிராம்மணஜாதியிலேயே பிறப்பான். அரசாங்க உத்தியோகம் பெற்றுச் சுகமாக வாழ்வான்.

33. வந்தவன் பொதுயோ கத்தை வரைகிறோ மினிமே லாகத்
தன்மனை வந்த பின்பு சந்திரன் பிறைபோல் யோகம்
சிந்தையும் கலக்கம் நீங்கும் செய்நிலம் சேர்த்த லுண்டு
தன்தனம் இருப்புக் காணும் சல்லிய பாதை யில்லான்.

33. இனிச் சாதகனுடைய யோகத்தைக் கூறுவோம். விவாஹத்திற்குப் பிறகு இவனுடைய அதிருஷ்டம், வளர்பிறைச் சந்திரன் போல, ஓங்கும். இவ்வளவு காலமாக இருந்த கவலைகள் நீங்கும். செழிப்பான நிலங்களும் சேரும். செல்வங்கள் வீண்வழியில் செலவாகாமல் இவனிடம் தங்கி விருத்தியடையும். கடன் தொந்தரவும் விலகும்.

34. பந்துவு மதிக்க வாழ்வன் பகரமாம் குடும்ப மேற்பன்
முந்திேனோர் வாச மெய்தும் வேவுகார் சேர்த்த லுண்டு
எந்திடம் பெருமை யேற்பன் ஏகின பூமி சேரல்
விந்தைக ளனேக மெய்தும் விளம்புவோம் பின்பால் சேதி.

34. உற்ருர் உறவினர் மதிக்கும் வகையில் இவனது அந்தஸ்து உயரும். மேன்மை வாய்ந்த குடும்பமாகும். இவனுக்குப் பெரியோர்களுடன் வாசம் ஏற்படும்- நம்பிக்கைவாய்ந்த சேவகர் வாய்ப்பர். எல்லா இடங்களிலும் இவனுக்குப் பெருமையுண்டாகும். கையைவிட்டு விலகிய பூமி மறுபடியும் இவனைவந்தடையும். பல வித ஆச்சர்யமான மேன்மைகள் இவனுடைய வாழ்க்கையில் நிகழும். இன்னுமுள்ள விவரங்களை இரண்டாம் பாகத்தில் தெரிவிப்போமாக.

35. காவலன் ஜனிக்கும் காலே கார்த்திகை முதல்பா தத்தில்
ஆதவன் திசைஐந் தாண்டும் அதனுடன் திங்க ளைந்தும்
ஓதினேம் பூர்வ பாகம் உரைக்கிரேம் பின்பால் சேதி
போதக வானே பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

35. ஜாதகன் கிருத்திகை நக்ஷத்திரம் முதல் பாதத்தில் உதித்திருக்கின்ருன். ஆதலால் சூரிய தசையில் இருப்பு வருஷங்கள் ஐந்து, மாதங்கள் ஐந்து. இவ்வாறு பூர்வபாகத்தை விண்ணப்பித்துக் கொண்டோம். மற்றைய விவரங்களைப் பின்பாகத்தில் தெரிவிப்போம். விநாயகரைப் பெற்ற கருணைக்கடலே! மேலும் எங்களைக் கேட்டருளவேண்டும்.

ஜாதகம் 37

1. கலைபுதன் பருதி நந்தி காரியும் வீணை யாக
நிலமகன் பணியும் சீயம் நீர்புக ருமே பலிக
குருகுல கன்னி யாகக் கேதுவும் சாடி யாகப்
பலன்தனைச் சொல்லுமென்று பார்வதி கேட்கும் போது ;

	சுக்கிரன்	சந்திரன் புதன் சூரியன்	சனி
கேது	இராசி சக்கரம்		லக்கினம்
			செவ்வாய் ராகு
			குரு

விய வருஷம் வைகாசி மாதம் 21-ம் தேதி புதன் கிழமை காலே 7 நாழிகைக்கு மேல் 12-நாழிகைக்குள் ஜனனம். ஆங்கிலத் தேதி 2-6-1886. நவக்கிரகஹங்களின் பாதசாரம்—ரோஹிணி 3-இல்சூரியன் ரோஹிணி 2-இல் சந்திரன். பூரம் 4-இல் செவ்வாய். கிருத்திகை 4-இல் புதன் [அஸ்தம்] உத்திரம் 4-இல் குரு அசுவினி 2-இல் சுக்கிரன். திருவாதிரை 3-இல் சனி. பூரம் 2-இல் ராஹு. சதயம் 4-இல் கேது.

நக்ஷத்திரம் ரோஹிணி. சந்திர தசையில் இருப்பு வருஷங்கள் ஏழு, மாதங்கள் ஐந்து, நாட்கள் இறுபத்தாறு. சந்திரன் புதன் சூரியன் இவர்கள் விருஷபம், சனி மிதுனம், செவ்வாயும் ராஹுவும் சிம்மம், குரு கன்னி, சுக்கிரன் மேஷம், கேது கும்பம், இலக்கனம் கடகம். இவ்வாருன கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி வினவும் போது ;

2. அத்திரி புகலு கின்ருர் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லம் சொல்வேன் வடவாடை கீழ்மேல் வீதி
முத்தின ஊரே யாகும் முக்குடைச் செல்வன் தென்கீழ்
உத்தரம் மாயோன் வாசம் உயர்ந்ததோர் கெடியும் வாயு.

2. இவ்வாறு பார்வதிதேவி கேட்டவுடன் அத்திரி முனிவர் பலன்களைச் சொல்லுகின்ருர். இக் கிரஹ நிலையில் பிறந்த மகவு ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு, வடக்கு வரிசையில் இருப்பதால், தென்

திசையை நோக்கி இருக்கும். அது பழைய பெரிய ஊராகும். தென் கிழக்கில் ஜைனர் கோயில் இருக்கும். வடக்குத் திசையில் விஷ்ணு ஆலயம் உண்டு. வட மேற்கில் ஒரு கோட்டையும் தங்கிடும்.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய இல்ல மாகும்
அன்னவன் சைவச் சேயாய் அனுகுவா னிந்தப் பாலன்
மன்னவன் யோகச் சேதி மாதுரு தந்தை யோகம்
தன்துணை களத்திர புத்திரர் சாற்றுவோ முன்பின் ஜன்மம்.

3. இன்னும் பல ஆலயங்களும் அவ்வூரில் விளங்கும். இவ்வடையாள முள்ள ஊரில் சைவ குலத்தில் பிறந்திருப்பான். இவனுடைய யோகங்களையும் தாய் தந்தை சகோதரன் மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும், முன்பின் ஜன்மங்களையும் இந் நூலில் நாங்கள் கூறுவோம்.

4. தந்தையின் துணைஆண் ரண்டு சாற்றுவோம் தீர்க்க மாக
அந்தவ னொருவன் தானும் அடைகுவான் வேறோ ராஸ்தி
விந்தையாய்த் தாயும் நேரும் விளம்புவோம் பின்பால் சேதி
இந்தவன் தந்தை சேதி யியம்புவோ மினிமே லாக.

4. ஜாதகனின் தந்தைக்கு இரு சகோதரர்களுண்டு. அவர்களிருவரும் தீர்க்கமாக வாழ்வார்கள். அவ்விருவர்களில் ஒருவன் வேறு ஒருவனுடைய சொத்துக்களை அடைவான். அவ்வாறு சொத்துக்களைப் பெறுவதற்குக் காரணம் என்னவென்றால், அவன் ஸ்வீகாரப் புத்திரனாக ஆவான் என்பதுதான். இவர்களைப்பற்றிய வரலாறுகளைப் பின் பகுதியில் சொல்லுகிறோம். இனி, தந்தையின் குணங்களைக் கூறுவோம்.

5. கல்விமான் கடவுள் பக்தி கருதிடான் கட்டு வார்த்தை
புல்லிய ருறவு கொள்ளான் பூமியை விருத்தி செய்வன்
நல்லவர் பலபேர் நேயன் நயம்படக் கூறு வானும்
தொல்லைகள் ஏற்கா னாகும் சோம்பிடான் காரி யத்தில்.

5. கல்வியறிவு படைத்தவன். கடவுளிடம் பக்தி பூண்டவன். அடுக்குச் சொற்களைக் கூறி ஆடம்பரப்படுத்த விரும்பாதவன். அறிவிலிகளோடு நட்புக் கொள்ளான். பூமியைப் பலவகையிலும் அபிவிருத்தி செய்வான். சாதுக்களுக்கு நண்பனுவான் நயமாகப்பேச வல்லவன். கஷ்டங்களைச் சகிக்காதவன். ஆனால் தன் காரியங்களில் சோம்பலுள்ளவனுமல்லன்.

6. மாந்தளிர் உணேச்சல் நீட்சி மருவிடும் வாயு கொஞ்சம்
தேன்மொழி கூறு வானும் சீலனும் பொறுமைசாலி
வானவர் பூசை பூண்பன் வண்மையாய்க் குடும் பமேற்பன்
தானெனக் கருவம் கொஞ்சம் சல்லியம் கொள்ளா னாகும்.

6. மாந்தளிர் போன்ற நிறமுள்ளவன். மெலிந்து உயர்ந்து இருக்கும் அவனது உடல். அவனுக்கு வாயு ரோகம் உண்டு. தேன்போல் இனிய மொழிகளைக் கூறுவான். நற்சீலம் வாய்ந்தவன். பொறுமை உடையவன்.

தேவர்களுடைய பூஜையை மேற்கொள்வான். திறமையுடன் குடும்பத்தை நடத்துவான். சிறிது அகம்பாவமும்அவனுக்கு உண்டு. கடன் இல்லாதவனாகவும் வாழ்வான்.

7. கன்னியின் துணைகள் காணுன் கழறுவீ ரந்தச் சங்கை
பொன்னனுக் கெட்டில் வெள்ளி பொருந்தியும் சனிவி யத்தில்
துன்மையா யிருப்ப தாலே துலங்காது துணைபெண் ணுந்தான்
இன்னவாறு குணத்தா னுக்கு இப்பால னுதிப்பா னாகும்.

7. இவனு (தந்தை)க்குச் சகோதரிகள் இருக்கமாட்டார்கள். இதற்கென்ன காரணம் என்று ஒரு முனிவர் கேட்க, அத்திரி முனிவர் பதிலுரைத்தார். குருவிற்கு எட்டாமிடத்தில் சுக்கிரனிருப்பதாலும், சனியும் பன்னிரண்டாமிடத்தில் இருப்பதாலும் இவனுக்குச் சகோதரிகள் இல்லை. இப்படிப் பட்ட குணமுள்ளவனுக்கு இக்கடக லக்கின மகன் புத்திரனாகப் பிறந்திருக்கின்றான்.

8. பாலகன் நிறம்கு ணத்தைப் பகருவோம் சிவந்த மேனி
சீலம்போல் வெளிம யக்கன் செட்டுக்கள் செய்வா னாகும்
ஞாலங்கள் விருத்தி செய்வன் நளினமாய் வார்த்தை கூறுவன்
ஆலம்போல் பகைவ ருக்கு அவனுமே கருட னுவன்.

8. ஜாதகனுடைய நிறம் குணம் முதலியவைகளைக் கூறுவோம். இவன் சிவந்த மேனியான். நற்சீல முள்ளவன் போல் உலகத்தோருக்குத் தோற்றுவான். வியாபாரம் செய்வான். பூமிகளை அபிவிருத்தி செய்வான். சரசமாகப் பேசுவான். பகைவர்களாகிய சர்ப்பங்களுக்கு இவன் கருடனுவான். [அவர்களை அழிப்பான் என்பது கருத்து.]

9. ததிநெய்பா லிஷ்டம் கொள்வன் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
பதரினில் செல்லா னாகும் பாக்கியம் விருத்தி செய்வன்
சதியிலா மனத்தா னாகும் சாதமும் குறைவு றுதான்
அதிதிகட் கன்ன மீவன் ஆபத்தைச் சிலர்க்குக் காப்பன்.

9. தயிர் நெய் பால் இவைகளில் அதிக விருப்பமுள்ளவன். கால் நடைகளை விருத்தி செய்வான். வீண் காரியங்களில் ஈடுபடமாட்டான். ஐசுவரியத்தை அதிகப்படுத்துவான். பிறர்க்குக் கெடுதல்களையோ சூழ்ச்சிகளையோ நினைக்காதவன். நிறைய ஆகார வசதிகள் வாய்ந்தவன். வந்த விருந்தாளிகளுக்கு அமுதளிப்பான். சிலருக்கு ஆபத்தில் சகாயம் செய்து காப்பாற்றுவான்.

10. உரோமங்க ளதிக மில்லான் நுவனுப தேசம் கொள்வன்
தீமையை யொருவர்க் கெண்ணுன் சஞ்சல மனத்தா னாகும்
தாமத குணமும் கொஞ்சம் சந்தேக மனத்தா னாகும்
நேமிநா தனுர்பால் பத்தி நிஷ்டூர வசனம் கூறுன்.

10. உடலில் உரோமங்கள் இல்லாதவன். கற்றறிந்த பெரியோர்களிடம் நல்லுபதேசங்களைக் கேட்பான். யாருக்கும் தீமையை எண்ணாதவன். மனத்தில் உறுதி இல்லாதவன். தாமத குணமும் உண்டு. சந்தேகிக்கும் இயல்புள்ளவன். சிவபக்திச் செல்வன், புண்படுத்தும் வார்த்தைகளைக் கூற மாட்டான்.

11. கரமதில் மாலின் ரேகை சஞ்சமாம் ரேகை யுண்டு
விரைவினில் நடக்க வல்லன் வீண்வம்பு புகலா னாகும்
நறுமல ரிஷ்டம் கொள்வன் நங்கையர் மோக னவன்
பொருளது சல்லியம் கொள்ளான் பூவையே கேட்டி டாயே.

11. இவனது கையில் விஷ்ணு ரேகையும், கமலரேகையும் விளங்கும். இவனது நடை வேகமாக இருக்கும். வீண் வம்பு பேசாதவன். வாசனை பொருந்திய மலர்களில் ஆசை உடையவன். பெண்களிடம் மையல் கொண்டவன். இவனுக்கு கடனும் இராது. தேவியே ! கேட்பீராக.

12. தன்துணை ஆண்பால் காணன் சத்திமார் மூவர் தீர்க்கம்
சொன்னதில் மூத்தோன் தானும் சுகமுண்டாய்ச் சுகமு மின்றி
மன்னவ னிற்றி யேதான் மருவுவாள் தன்பால் தன்னில்
பின்னிரு மாதர் தாமும் பிழையின்றிச் சுகமாய் வாழ்வர்.

12. இவன் சகோதரர்களைக் காணாதவன் [சகோதரர்கள் இவனுக்கு இல்லை என்பது கருத்து]. மூன்று சகோதரிகள் உண்டு. அம்மூவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். இச்சாதகன் அந்த மூன்று சகோதரிகளுக்கும் மூத்தவன். அம்மூவரில் ஒருத்தி சிறிது காலம் கணவனுடன் சுகமாக வாழ்ந்து, பிறகு கணவனை இழந்தும், சுகமின்றியும் இவனிடமே வந்து பிற்காலத்தைக் கழிப்பாள். மற்றைய இரு சகோதரிகளும் ஒருவித குறைபாடுமின்றிக் கணவன்மார்களோடு சுகமாக வாழ்வர்.

13. இருவரும் சுகமாய் வாழ ஏங்கின மனமாய் முன்சென்
உரையும்கா ரணங்க ளெவ்வாறு உத்தமி பூர்வம் தன்னில்
மருவாது சிலது துன்பம் மாரனும் மரித்து வாழ்வன்
தெரிவிப்பார் பூர்வம் தன்னைத் திருசெந்தூர் தனினு தித்தாள்.

13. அந்த ஒரு சகோதரி தன் கணவனுடன் சுகமாக வாழுங் காலத்தில் அவள் கணவனை திடீரென இழந்து தன் தமையன் வீட்டில் வந்து வாழும்படியான பாவம் என்ன முன் பிறவியில் செய்தாள் என மஹரிஷி கேட்க, அத்திரி முனிவர் காரணத்தைக் கூறுகின்றார். இவள், முன்பிறவியில், திருச்செந்தூர் என்ற புண்ணிய க்ஷேத்திரத்தில் உதித்திருந்தாள்.

14. பிறந்தனள் விச்வச் சேயாய்ப் பெரிதானு குடும்பி யாகி
வரனுண்டாய் மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைச் [சொல்வேன்
அரன்கோஷ்டம் விசேஷ காலம் இம்மாது சென்று மேதான்
திருவருள் பாதம் போற்றித் திரும்பினாள் கடைவீ திக்கு.

14. விச்வகரும குலத்தில் பிறந்து, பெரிய குடும்பம் உடையவளாகி தன் கணவனுடனும் குழந்தைகளுடனும் சுகமாக வாழுங் காலத்தில் இவளுக்கேற்பட்ட பாவத்தைச் சொல்வேன். இவள் அவ்வூரில் எழுந்தருளி இருக்கும் சிவபிரானுக்கு உற்சவம் நடைபெறும்போது ஒரு நாள் சிவபிரான் ஆலயத்திற்குச் சென்று, அவரது திருவடிகளை அர்ச்சித்துப் போற்றி வீடு திரும்புகையில் கடைவீதிக்குச் சென்றாள்.

15. குங்குமம் சிகப்புச் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமு மீயா ளாகிச் சவரிமான் போல்ம றைந்தாள்
அங்கவன் வணிபன் பார்த்து அம்மாதைக் காணா னாகிச்
சங்கையா மனத்தா னாகிச் சாற்றுவான் சாபம் தானே.

15. அங்கு, சீப்பு, குங்குமம் இவைகளை ஒரு கடையில் வாங்கிக்கொண்டு, அவைகளுக்குப் பணம் கொடாமல் அங்கிருந்து புறப்பட்டு மான்போல் ஓடி மறைந்தாள். அந்த ஏழை வியாபாரியும், இவள் பணம் கொடாமல் மறைந்ததை அறிந்து, தனக்கேற்பட்ட நஷ்டத்தை எண்ணி வருந்தி ஒரு சாபமிட்டான்.

16. மணமது ஆகா முன்னம் ஏகுவாகணவன் தாமும்
வனிதைபின் ஜன்மம் தன்னில் மாரனு மத்தில் மாண்டு
வினைமன மாக வாழ்வாய் விளம்பியே தெருத்தூள் விட்டான்
சினமுடன் அந்தச் சாபம் சேர்ந்தது பாவைக் கேதான்.

16. வாசனை பொருந்திய இந்த மஞ்சள் குங்குமங்கள் ஆவதற்குமுன் கணவன் மரிப்பான். மறு பிறவியில் வாழ்க்கையின் மத்தியில் கணவனை இழந்து [மஞ்சள் குங்குமம் தரிக்க முடியாதவளாகி] கவலை கொண்டவளாகவே மீதமுள்ள ஆயுளைக் கழிப்பாய், என்று சொல்லித் தெருப்புழுதியையும் ஆகாயத்தில் இறைத்தான். அவன் மனம் வருந்திச் சொன்ன சாபம் அவ்வாறே பலித்து விட்டது.

17. மங்கைக்கும் அந்த ஆண்டில் மாரனும் மரண மாகிச்
சங்கையா மனத்தா ளாகிச் சேதுவின் பதிக்குப் புக்கித்
நங்கையும் மரண மாகி நாற்றலை வரயப் பட்டு
இங்கிவ ளுதித்தா ளென்றே மெய்திடும் வணிபன் சாபம்.

17. இவ்வாறு பணம் கொடாமல் குங்குமத்தை எடுத்துச் சென்ற வருஷத்திலேயே இவளுடைய கணவன் இறந்தான். பிறகு கவலையில் மூழ்கிய இவள், மனச் சாந்திக்காகச் சேதுவிற்குச் சென்று நீராடி ஊருக்குத் திரும்பி வந்து, சிறிது காலத்திற்குப்பின் மரணமடைந்தாள். அவளைத்தான் இங்கு பிரம்மதேவன் ஜாதகனின் சகோதரிகளில் ஒருத்தியாகப் பிறப்பித்திருக்கின்றான்.

18. மணமுண்டாய் மதலை யின்றி மங்கிலிய மற்று வாழ்வள்
குணமது நல்ல தாகும் கொடுமைனய யெவர்க்கு மெண்ணாள்
தணிவான குணத்தா ளாகும் சாதமு மன்பா யீவள்
கணிகைதா யில்லம் வாசம் காதலி கேட்டி டாயே.

18. மணமாகி, குழந்தைகளின்றி, முன்ஜன்ம பாவத்தினுல் சிறிது காலத்திற்குள் கணவனையும் இழந்து கவலைப்பட்டு வாழ்வாள். ஆனுல் இவள் நல்ல குணமுள்ளவள் தான். ஒருவருக்கும் தீங்கை எண்ணுதவள். யாரிடமும் தாழ்மையுடனே நடந்து கொள்வாள். வருபவர்களுக்கு அன்புடன் அமுதளிப்பாள். இவள் ஆயுட்காலம் முடிய, தாய் வீட்டிலேயே வசிக்க நேர்ந்து விட்டது. தேவியே ! மேலும் கேளுங்கள்.

19. சுதரொன்று தோன்றும் தீதாம் செப்புவோ மிவன்பின் ஜன்மம்
பதியினி லுயர்வ தான பிருதுவி தலத்தி லேதான்
(நிதிமிக) உடையா னுக்கு நேருவாள் வைசியச் சேயாய்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

19. இவளுக்கு ஒரு குழந்தை தோன்றி அழியும். இவளுடைய பின் ஜன்மத்தைக் கூறுவோம். புண்ணிய க்ஷேத்திரங்களுக்குள் மிகச் சிறந்த காஞ்சியில் அதிக நிதி படைத்த ஒரு வைசியனுக்கு மகவாகத் தோன்றிச் சுகமாக வாழ்வாள். தேவர்களை ஆதரிக்கும் தேவியே ! மேலும் கேளுங்கள்.

20. பாலகன் மணத்தின் காலம் பகருவோ மிருபான் மூன்றுள்
நீலியும் தென்மேல் திக்கில் நேருவாள் குணத்தைச் சொல்வேன்
காலத்தை அறிந்து ரைப்பள் கண்முகம் வசிய முண்டு
ஞாலமேல் நல்லோ ளாவள் நயம்படக் கூறு வாளாம்.

20. ஜாதகனுடைய விவாஹ காலத்தைச் சொல்லுவோம். இருபத்து மூன்றுவது வயதிற்குள் மணம் நடைபெறும். மணப்பெண் தென்மேற்குத் திசையில் தோன்றி இருப்பாள். இடம் பொருள் ஏவலை அறிந்து அழகாகப் பேசுவாள். முகமும், கண்களும் பிறர் வியக்கத்தக்க பொலிவுடன் திகழும். பூமியில் நல்லவள் என்று கீர்த்தி பெறுவாள். நயமாகவும் பேசுவாள்.

21. பால்பாக்கிய முடையா ளாகும் பரஉப காரி யாகும்
சீலியாம் விரத சாலி சிவதேவன் பத்தி பூண்பள்
மால்மனை யொப்ப தாகும் வருவோரை ஆத ரிப்பள்
வேலனையீன்ற மாதே வித்தகி தீர்க்க சீவி.

21. பால் பாக்கியம் உண்டு. பிறர்க்கு உபகாரம் செய்யும் இயல் புள்ளவள். நல்ல பழக்கமுடையவள். விரதங்களையும் அனுஷ்டிப்பாள். சிவபிரானிடம் பக்தி பூண்டவள். அழகில் லக்ஷ்மீதேவிக்குச் சமமாவாள். வீட்டிற்கு வரும் அதிதிகளை ஆதரிப்பாள். சுப்பிரமணிய சுவாமியைப் பெற்ற தாயே ! இவளுடைய ஆயுளும் தீர்க்கம்.

22. ஜயமுனி யிதனைக் கேட்டுச் செப்புவார் முனிவ ருக்கு
வியமதில் காரி தங்க விடம்சேயு மிரண்டில் தங்கப்
பயமிலாத் தார மொன்று பகருவீ ரந்தச் சங்கை
நயமுடன் பத்தோன் லாபம் நாலினுக் குடையோன்பத்தில்;

22. அத்திரி முனிவர் தீர்க்கஜீவி என்று சொல்லக்கேட்ட ஜய முனிவர் ஆக்ஷேபிக்கின்றுர். களத்திரபாவாதிபதி பன்னிரண்டில் இருக் கின்றுன். மேலும் அசுப கிரஹங்களாகிய செவ்வாயும் ராஹுவும் குடும்ப பாவத்தில் இருக்கிறுர்கள். ஆகவே ஜாதகனுக்கு, முதல் மனைவி இறந்து மறு மணம் நேரும். ஆகையால் இவளை, எவ்வாறு தீர்க்க ஜீவி என்று சொல்லமுடியும் ? அத்திரி இதற்குப் பதில் கூறுகின்றுர். பத்துக்குடையவன் லாபத்தில் இருப்பதாலும், நான்காமிடத்திற்குடைய சுக்கிரன் பத்தாமிடத்தில் விளங்குவதாலும் ;

குறிப்பு.—என்று இந்நூலாசிரியர் சொல்லுவது பொருந்தவில்லை. ஆகையால் வேறு “ பாடம் ” இருக்கவேண்டுமென்பது எமது அபிப்பிராயம்.

23. இருப்பதால் தாரம் ஒன்றே யியம்புவோம் முனியே யாமும்
திருகிலா பிதாக்குப் பிதாக்கு நேரும் ஜாதக சுருதியாக
வருமனை ஒன்றே தீர்க்கம் வரைந்தது தப்பா தாகும்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

23. இவனுக்கு மனைவி ஒருத்திதான். நீங்கள் சொன்ன களத்திர தோஷம் இவனுக்குமில்லை. இவன் தந்தைக்குமில்லை. ஆனுல் அத் தோஷம் தந்தையின் தந்தைக்கு ஏற்பட்டிருக்கும். ஆகவே இவனுக்கு வரும் மனைவி தீர்க்காயுள் படைத்தவள்தான். கணபதியைப் பெற்ற தாயே ! கருணைக் கடலே ! மேலும் கேட்பீராக.

24. சுதர்களு மருகில் தோன்றும் தீர்க்கமாம் ஆண்பால் ரண்டு
சதமுடன் பெண் பால் ரண்டு சாற்றுவோம் பால னுக்கு
வதிபன்தன் பூர்வம் சொல்வேன் மலைநாட்டில் வைசியச் சேயாய்
நிதியது செட்டுச் செய்து நிமலனும் வாழு நாளில் ;

24. இவர்களுக்கு இரு பிள்ளைகளும் இரு பெண்களும் தோன்று வார்கள். இந்நால்வரும் நீடித்து வாழ்வார்கள். ஜாதகனுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுவோம். இவன் முன் பிறவியில் மலை நாட்டில் வைசிய குலத்தில் உதித்து, வியாபாரம் செய்து வாழும் காலத்தில் ;

25. ஏழைக்குக் கணக்கில் மோசம் எழுதினு னிவனே யென்றேம்
தாழ்வுளோர் வருத்த முற்றுச் சாற்றுவார் சாபம் தானும்
தாழ்வாகப் பொன்னை யீந்து சதிசெய்தாய்க் கணக்கி லேதான்
சூழும்பின் ஜன்மம் தன்னில் துணைஆணு மில்லா தாகி ;

25. இவன் பேராசையால் ஏழைகளுடைய கணக்கில் வேண்டு மென்றே பல தவறுகளை எழுதி, தருமமாக இவனுக்குச் சேரவேண்டிய பொற்காசுகளை விட அதிகமாக அவர்களிடம் வசூல் செய்தான். ஆகையால் மனம் நொந்த அவர்கள், மோசக்கணக்கு எழுதி எங்களை வஞ்சித்துப் பொருள்களைப் பெற்ற பாவியாகிய நீ, மறுஜன்மத்தில் சகோதரனற்றும் ;

26. பெண்துணை குந்த மாயும் பூமியில் வாழ்வா யென்றும்
இன்னமும் பலவாறு சொன்னர் யெய்திற்று அந்தச் சாபம்
வண்ணமா யந்தி யத்தில் வளமுள சேது சென்று
திண்ணமாய்க் கால னுடு சேர்ந்துமே பிரமன் லக்கம் ;

26. சகோதரிகள் இருப்பினும், ஒரு சகோதரிக்குக் குறைவு ஏற்பட, அதனுல் மனம் நொந்து வாழ்வாய் என்றனர். இதே போன்ற இன்னும் பல சங்கடங்கள் ஏற்படவேண்டுமென்றும் அவர்கள் சொல்லிச் சென்றனர். அவர்கள் இட்ட சாபம் இவனைச் சூழ்ந்து கொண்டது. பிறகு இவன் கடைசி காலத்தில் சேதுவிற்குச் சென்று நீராடி, தன் ஊருக்கு வந்து சில காலம் கழித்து, காலன் நாடு சென்றுன். அவனைத்தான் பிரம்ம தேவன் ;

27. உதிப்பனு மிந்த பர்லன் உறைந்திடு முன்னுழ்ச் சாபம்
சதியுண்டு துணைஆ னும்தான் சஞ்சல மனம்கன் னிக்கு
வதிபன் தன் யோகச் சேதி வரைகிறே மினிமே லாக
விதவிதச் செட்டுச் செய்வன் மேதினி விருத்தி யுண்டு.

27. இப்பொழுது கடக லக்கினத்தில் பிறப்பித்திருக்கின்றுன். அச் சாபத்தின்படி இவனுக்குச் சகோதரனும் இல்லை. ஒரு சகோதரியும் வாழ்க்கையில் குறைவை அடைந்தாள். ஜாதகனுடைய யோகங்களை இனிக் கூறுகின்றேம். பலவித வியாபாரங்களைச் செய்வான். இவனுக்கு அதிக பூமிகள் சேரும்.

28. ஐயைந்து ஆண்டு மேலாய் அற்புத யோகம் வாய்க்கும்
வையமேல் புகழு மேற்பன் மா நிலம் சேர்த லுண்டு
கைமுத லதிக மாகும் கனத்திடும் செட்டுத் தானும்
மைவிழி மனைவி வந்து வளர்பிறை போலாம் செல்வம்

28. இவனுடைய இருபத்தைந்தாவது வயதிற்கு மேல் ஆச்சர்யமான யோகங்கள் நிகழும். இவனது கீர்த்தி எங்கும் பரவும். பெரிய நிலங்கள் சேரும். கையிலுள்ள பணத்தின் தொகை வளரும். வியாபாரமும் நல்ல லாபத்துடன் விஸ்தாரத்தை அடையும். ஜாதகனின் மனைவி இவன் வீட்டிற்கு வந்த பிறகு வளர்பிறைச் சந்திரன் போல் யோகங்கள் வளரும்.

29. யோக மெவ்விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்க ளந்தச் சங்கை
பாகனும் பருதி திங்கள் பதினென்றி லிருப்ப தானும்
ஆகமன் புதனைப் பார்க்க வியத்திலே வெள்ளி தங்கப்
போகனு யிருப்ப தாலே எழில்வேசி யோக முண்டு.

29. யோகத்திற்குக் காரணம் என்ன இருக்கின்றது என்று பார்வதிதேவி கேட்க, முனிவர் பதிலுரைக்கின்றுர். மூன்று பன்னிரண்டுகளுக்கு உடைய புதன், தனஸ்தானத்திற்கு உடைய சூரியன் இவர்கள் இலக்கினுதிபதியுடன் கூடி பதினென்றில் இருப்பதாலும், புதன் முதலியவர்களுக்குப் பாக்கியாதி பதியாகிய குருவின் வீக்ஷணம் இருப்பதாலும் இவனுக்குச் செல்வம் விருத்தியடைந்துகொண்டே இருக்கும். மேலும் சூரியன் நின்ற ராசிக்குப் பன்னிரண்டாமிடத்தில் சுப கிரஹமாகிய சுக்கிரன் இருப்பதால் இவனுக்கு வேசியோகம் என்ற ஒரு யோகமு முண்டு.

30. இந்திர யோக மொன்று இயம்பினேம் இரண்டு யோகப
செந்திரு கடாட்ச முண்டு தீரனும் வறுமை காணுன்
எந்திடம் பெருமை யேற்பன் ஏவலா ளதிக முண்டு
வந்தவர்க் கன்ன மீவன் அடிமையோ குடிபெ ருக்கம்.

30. இந்திரயோகமென்ற ஒரு யோகமும் உண்டு. ஆகவே இவ்விரு யோகங்களாலும் இவனுக்கு எப்பொழுதும் லக்ஷ்மீ கடாக்ஷம் இருக்கும். தீரனுகிய இவன் வறுமையை அறியாதவனுக விளங்குவான். பல தேசங்களிலும் இவனுக்குப் பெருமை உண்டாகும். பணியாட்களும் அதிக மிருப்பார்கள். வந்தவர்களுக்கு அன்னதானம் செய்து புண்ணியத்தையும் சேமிப்பான். இவனது குடும்பம் மேன்மேலும் பெருகும்.

31. கடன்கொளான் இடுக்க மில்லான் காரிய சமர்த்த னுகும்
உடன்படான் பிழைக ளுக்கு உறுதியில் லாத நெஞ்சன்
விடவாக்கன் தெய்வ பத்தி மேன்மக்க ளுறவு கொள்வன்
தடமது இரண்டு செய்வன் சங்கரி கேட்டி டாயே.

31. கடன் இல்லாதவன். வாழ்க்கையில் இடுக்கண் இராது. காரியத்தை நிறைவேற்றுவதில் சமர்த்தன். தவறுன காரியங்களில் ஈடு படமாட்டான். சஞ்சலமான நெஞ்சம் உள்ளவன். இவன் தீமைகள் நேரப் போவதாகச் சொன்னுல் பலித்துவிடும். கடவுளிடம் பக்தி பூண்டவன். மேலானவர்களின் நட்பு இவனுக்கு இருக்கும். இரண்டு வீடுகள் நிர்மாணிப்பான். சங்கரியே ! மேலும் கேட்பீராக.

32. தரணிபொன் பணியில் லங்கள் சேர்ப்பன்முப் பாயிரம் பொன்
அறிவிப்போம் அன்னை சேதி அழகுளாள் பித்த தேகி
இருவித குணத்தா ளாகும் இடர்செய்யாள் யாவ ருக்கும்
வரன்மன மொத்த மாது மாதுவும் யோக சாலி.

32. இவன் சம்பாதிக்கும் பூமி, பொன், ஆபரணங்கள், வீடு முதலியவைகளின் உத்தேச மதிப்பு முப்பதாயிரம் பொற்காசுகள். இனி, தாயின் குணத்தை அறிவிப்போம். அவள் நல்ல அழகு வாய்ந்தவள். பித்த தேகி. [நல்ல, தீய] இரண்டு வித குணங்களும் அவளிடம் இருக்கும். ஒருவருக்கும் கெடுதியைச் செய்யாதவள். கணவனின் மனம்போல் நடப்பாள். நல்ல அதிருஷ்டம் உடையவள்.

33. சிவதேவன் பத்தி பூண்பள் சீலியாம் கோபம் கொஞ்சம்
துணைவர்க.... ளாகும் தோன்றினு மரிதே யாகும்
வனிதைக்குத் துணைவர் தோஷம் அறிவீப்பீர் அந்தச் சங்கை
கனமுடன் நவத்தோன் மூன்றில் காரிசேய் நவத்தைப் பார்க்க ;

33. சிவனிடமும் பக்தி கொண்டவள். நல்ல சீலமும் உண்டு. கொஞ்சம் கோபமும் இருக்கும். இவளுக்கு உடன் பிறந்தார்கள் தோன்றினும் அழிவார்கள் என்று அத்திரி சொன்னவுடன், ஒரு முனிவர் அதற்கான காரணத்தைச் சொல்லுமெனக் கேட்க, அத்திரி முனிவர்

காரணத்தை விளக்கிக் கூறுகின்ருர். ஒன்பதிற்குடைய குரு மூன்றில் இருப்பதாலும், அந்த ஒன்பதாவது ஸ்தானம் சனியினுல் பத்தாவது பார்வையாலும், செவ்வாயால் எட்டாவது பார்வையாலும் பார்க்கப்பட்டிருப்பதாலும் ;

34. சொல்லினேம் துணைவர் தோஷம் தோகையின் பூர்வம் கேளாய்
அல்லலை விலக்கு கின்ற அப்புவின் தலத்தி லேதான்
நல்லதோர் கங்கை சேயாய் நாயகி உதித்து மேதான்
தொல்லுலக ளின்றி மாது சுகமுடன் வாழு நாளில் ;

34. இவளுக்குச் சகோதர விருத்தி இல்லை. இவளுடைய (ஜாதகன் தாயின்) பூர்வஜன்மத்தைக் கூறுவேன். இப்புவியின்கண் மானிடர்களின் துன்பங்களைப் போக்கி இன்பங்களை அருள்வதற்குச் சிவபிரான் நீர்லிங்க சுரூபத்தில் எழுந்தருளி இருக்கும் ஜம்புகேசுவரத்தில் இவள் நல்லதொரு வேளாள குடும்பத்தில் பிறந்து, கணவன் குழந்தைகளுடன் சுகமாக வாழும் காலத்தில் ;

35. மைத்துனன் மனைவி பேரில் வரைந்தனள் சிலேடை வார்த்தை
பத்தினி மனவெ றுப்பால் பகர்ந்தசா பத்தைக் கேண்மோ
குத்தமில் லாத என்மேல் குறைவார்த்தை சொன்ன பாவி
சுத்தமாய்ப் பின்ஜன் மத்தில் துணைவர்க ளில்லா தாயும் ;

35. தன் மைத்துனின் மனைவியைக் குறித்துச் சிலேடை வார்த்தைகள் [அவமதிப்பையே உட்பொருளாகக்கொண்ட சொற்கள்] சொல்ல, அதனுல் அவள் மனம் புண்பட்டவளாகச் சொன்ன சாபத்தைக் கேளுங்கள். காரணமின்றிக் குத்தலான வார்த்தைகளைச் சொல்லி மனம் நோகும்படி செய்த பாவியாகிய நீ, மறு பிறவியில் உடன் பிறந்தவர்கள் இல்லாமலும்,

36. நாத்திக ளில்லா தாயும் நாயகி வாழ்வா யென்ன
கூத்தன்போல் அந்தச் சாபம் குலவிற்றுப் பாவைக் கேதான்
வேத்தொரு வினைகள் காணுள் வித்தகி அந்தி யத்தில்
கேத்திரம் சேது சென்று தேறினேர்க் கன்ன மீந்து ;

36. வாழ்க்கைபடும் வீட்டிலும் நாத்திமார்கள் இல்லாமலும் கஷ்டப்படுவாய். யமன்போல் கொடியதான அந்தச் சாபம் இவளை அடைந்தது. வேறு பாவங்கள் இவளுக்கு ஏற்படவில்லை. அந்திய காலத்தில் சிறந்த புண்ணிய தீர்த்தமாகிய சேதுவிற்குச் சென்று ஸ்நானம் செய்து அங்குள்ள துறவிகளுக்கு அன்னமளித்து ;

37. மறலியின் நாடு சென்று மறையவன் வரையப் பட்டு
அருகர்தம் குலமு தித்தாள் அணுகிடு மாது சாபம்
வருந்துணை காணு ளாகும் வரனுக்கும் துணைபெண் காணுள்
உரைகுவோ மிவள்பின் ஜன்மம் உயரும்கா ளாத்தி தன்னில் ;

37. தன் ஊருக்குத் திரும்பி வந்து கொஞ்ச காலத்திற்குப்பின் மரணமடைந்த இவளைச் சதுர்முகன் இக்குலத்தில் பிறப்பித்திருக்கிருன். முன்

பிறவியில் ஏற்பட்ட சாபத்தின்படி இவளுக்கும் சகோதரிகள் இல்லை. இவளது கணவருக்கும் சகோதரிகள் இல்லை. இவளுடைய பின்ஜன்மத்தையும் கூறுவோம். காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் ;

38. சீலமாம் சைவச் சேயாய் ஜனிப்பளா மென்று சொல்வோம்
பாலன்தன் தந்தை பூர்வம் பகருவோ மினிமே லாகச்
சாலவே கடையூர் தன்னில் ஜனித்தனன் வைசியச் சேயாய்ப்
பாலிகை மதலை யுண்டாய்ப் பகரமாம் குடும்பி யாகிப்.

38. நற்குணம் வாய்ந்தவளாகச் சைவ குலத்தில் உதிப்பாள். இனி, ஜாதகனின் தந்தையின் பூர்வஜன்மத்தைக் கூறுவோம். இவன் முற்பிறவியில் திருக்கடையூரில் வைசிய குலத்தில் பிறந்து மனைவி மக்களுடன் பெரிய குடும்பியாகி வாழ்ந்து வந்தான்.

39. வினையது இல்லா ளுகி மேலான தலங்கள் சென்று
சினமான கால னுடு சென்றுமே பிரமன் லக்கம்
கனமுள உதித்தா னென்றேம் கழறுவோ மிவன்பின் ஜன்மம்
அனையவே காஞ்சி தன்னில் அக்குல முதிப்பா னென்றேம்.

39. இவனது வாழ்க்கையில் ஒருவித பாவச் செயலும் நேரவில்லை. பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரையும் சென்ருன். அந்திய காலத்தில் யமனது நாடு சென்ருன். பிரம்மதேவனுல் அவன்தான் இங்குப் படைக்கப்பட்டு கடக லக்கின மகனுக்குத் தந்தையாக வாய்த்திருக்கின்ருன். இவன் மறு பிறவியில் காஞ்சியில் வைசியகுலத்திலேயே உதிப்பான்.

40. இருபது நாலு ஆண்டில் இயம்புவோம் தந்தை கண்டம்
அரிவைக்கு இருபா னேழில் அறைகிறேம் மார கங்கள்
திருமகன் தனக்குச் சொல்வேன் சனிதசை அந்தம் தன்னில்
அறுபது ஏழு ஆண்டில் அணுகிய ரிடப மாதம்;

40. ஜாதகனுடைய இருபத்து நாலாவது வயதில் அவன் தந்தை மரணமடைவான். தாயும், ஜாதகனுக்கு இருபத்தேழாவது வயது நடைபெறுகையில் இறப்பாள். ஜாதகனுக்கும் மரண காலத்தைக் குறிக்கின்றேம். சனி தசையில் கடைசி பாகத்தில், அறுபத்தேழாவது வயதில் வைகாசி மாதத்தில் ;

41. சதுர்த்தசி வளர்பக் கத்தில் ஜாதக னுடலம் ஏகும்
அதிபன்பின் ஜன்மம் சொல்வேன் மலைநாட்டில் சத்திரிய சேயாய்
நிதிமிக உடையா னுக்கு நேருவா னிந்தப் பாலன்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

41. சுக்கில பக்ஷ சதுர்த்தசி திதியில் இவனுக்குத் தேக வியோகம் ஆகும். ஜாதகனது பின் பிறவியையும் கூறுவோம் மலை நாட்டில் க்ஷத்திரிய வமிசத்தில் பிறந்து, அதிகச் செல்வம் படைத்தவனுகத் திகழ்வான்! அதிதியை ஆதரிக்கும் தாயே! மேலும் கேளுங்கள்.

42. ஜாதகன் ஜனிக்கும் காலே சகடுநா லிரண்டாம் பாதம்
மதிதசை ஆண்டு ஏழும் மருவிடும் திங்க ளைந்தும்
அதனுடன் இருபா ஞறும் அறிவித்தோம் பூர்வ பாகம்
நதிசடை யணிந்தோன் மாதே நவின்றனம் பூர்வ பாகம்.

42. ஜாதகன் ரோஹிணி நக்ஷத்திரம் இரண்டாம் பாதத்தில் ஜனித்திருக்கிறுன். ஆகவே சந்திரதசையிலிருப்பு வருஷங்கள் ஏழு, மாதங்கள் ஐந்து, நாட்கள் இருபத்தாறு. கங்கையைச் சடையில் அணிந்த மகா தேவனின் தேவியாரே ! இவ்வாறு பூர்வபாகத்தைக் கூறினேம்.

ஜாதகம் 38.

1. கலைதேளில் காரி மேரு கனக னு மான தாகப்
புலவனும் பானு நந்தி பூமகன் கேது மேடம்
கயருமே கோல தாக வெள்ளியும் மீனம் புக்க
அலவனும் ஜன்மமாக அறிவிப்பீர் பலனைத் தானே.

சுக்கிரன்	செவ்வாய் கேது	புதன் சூரியன்	
	இராசி சக்கரம்		லக்கினம்
குரு			
சனி	சந்திரன்	ராகு	

1. சந்திரன் விருச்சிகம், சனி தனுஸ், குரு மகரம், புதனும் சூரியனும் விருஷபம், செவ்வாய் கேது மேஷம், ராஹு துலாம், சுக்கிரன் மீனம் இலக்கினம் கடகம் இவ் வாறுன கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக என உமாதேவி கேட்கலுற்றுள்.

2. இந்தச்சேய் ஆண்பால் ஜன்மம் இல்லமும் கீழ்மேல் வீதி
தென்பார்வை வாச லாகும் தந்தியின் கோஷ்டம் கீழ்ப் பால்
அந்தரிகாளி உத்ரம் அரன்கோஷ்டம் வடகீ ழாகும்
தென்மேல்பால் தருணின் கோட்டம் செப்புவோம் தாயே கேளும்.

2. இக் கிரஹநிலையில் பிறந்த மகவு ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு தென் திசை நோக்கும். கீழ்த்திசையில் விநாயகர் எழுந்தருளி இருப்பார். வடதிசையில் அந்தரி என்றழைக்கப்படும் காளிகாதேவி விளங்குவாள். வடகிழக்கில் சிவபிரான் அருள் செய்து கொண்டிருப்பார். தென் மேற்கில் மசூதி திகழும். இவ்வாறு அடையாளங்களை இப்பாட்டில் சொன்னேம். தாயே ! மேலும் கேளுங்கள்.

3. இத்தகை யடையா ளத்துள் இவனுடை ஜனன மாகும்
வித்தகன் மூன்றும் ஜன்மம் விளம்புவோ மவர்தன் வம்சம்
பெத்ததாய் தந்தை யோகம் பேழையர் புத்திரர் யோகம்
சுத்தமாய் முன்பின் ஜனமம் செப்புவோம் தாயே யாங்கள்.

3. இத்தகைய சின்னங்கள் உடைய ஊரில் இவன் ஜனித்திருப்பான். இவன் தனது குடும்பத்திற்கு மூன்றும் குழந்தையாவன். இவனுடைய யோக ங்களைப்பற்றியும், தாய் தந்தை சகோதரர் மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும், முன்பின் ஜன்மங்களையும் இந்நூலில் நாங்கள் உரைக்கப் போகின்றோம்.

4. தந்தையின் குணத்தைச் சொல்லே னவகரு நிறத்தா ளுகும்
தந்தையி னில்லம் வாழான் தான்வேறு யில்லம் வாழ்வன்
தன்தன முடையா ளுகும் தரணியைச் சேர்ப்ப ளுகும்
தந்தமும் தரள மொக்கும் தன்பந்து மதிக்க வாழ்வன்.

4. முதலில் தந்தையின் குணங்களைச் சொல்வோம். கருத்த மேனி யான். அவனது தந்தையின் வீட்டில் அவன் வாசம் செய்யான். வேறு வீட்டில் தனியாக வசிப்பான். தன் முயற்சியால் பணத்தைச் சம்பாதித்துத் தனியாகவே வைத்திருப்பான். பூமிகளைச் சேர்ப்பான். முத்துப் போன்ற பற்களை உடையவன். தனது உறவினர் மெச்சும் வகையில் வாழ்க்கை நடத்துவான்.

5. பலதொழில் புரிவா ளுகும் பாரினில் சல்லியம் காணன்
நிலம்கிணறு சோலே சேர்ப்பன் நினைத்ததை முடிக்க வல்லன்
நலமதை எவர்க்கும் செய்வன் நற்கரம் சங்கு சக்கரம்
சொனுமொழி பிசகா ளுகும் சொல்லதைக் கேட்பா ளுமே.

5. பலவித தொழில்களை நடத்துவான். கடன் இல்லாதவன். நிலம் கிணறு சோலைகள் (தோப்பு) முதலியவைகளைச் சம்பாதிப்பான். தான் நினைத்த காரியத்தை முடிக்கவல்லவன். எல்லோருக்கும் நன்மைகளையே செய்வான். அவனது கரங்களில் சங்க சக்கரரேகைகள் திகழ்ந்திடும். தான் சொன்ன மொழிகளிலிருந்து சிறிதும் பிறழ மாட்டான். பிறர் சொல்வதையும் சிரத்தையுடன் கேட்பான்.

6. ஈகையு முடையா ளுகும் இடர்செய்யான் யாவ ருக்கும்
ஆகம நுணக்கம் தேருன் அவன்துணை ஆண்பா லொன்று
தோகையு மூன்று என்றோம் சோர்வுறும் இரண்டு தாமும்
பாகமாய்த் துணவன் சேதி பகருவோம் தாயே கேளும்.

6. தியாக இயல்புண்டு. இவனுல் யாருக்கும் இடையூறு ஏற்படாது. சாஸ்திரங்களின் நுணுக்கங்களைக் கேட்டறியாதவன். அவனுக்கு ஒரு சகோதரன் உண்டு. சகோதரிகள் மூவர். அவர்களில் இருவர் சேதமாவார் கள். [மற்றவர் தீர்க்கஜீவிகள் என்பது கருத்து]. சகோதரனின் வரலாறு களைக் கூறுவோம். தாயே! கேளுங்கள்.

7. பார்தொழில் புரிவா ளுகும் பரஉப காரம் செய்யான்
நயமுள வார்த்தை கூர்வன் நற்றந்தை யில்லம் வாசம்
அயலார்பொன் இச்சை யுண்டாம் அவன்தந்தை பின்பு தானும்
வியழுள மனத்தா ளுகும் விரயமாம் பூமி யென்றோம்.

7. விவசாயம் செய்வான். பிறர்க்கு உபகாரம் செய்வதில் ஈடுபடான். நயமான வார்த்தைகளையே பேசுவான். தந்தை வாசம் செய்த வீட்டிலேயே இவனும் வாசம் செய்வான். அயலார் பொருள்களில் ஆசையுள்ளவன். அவன் தந்தை சீவித்திருக்கும் வரையில் பூமிகளை விரயம் செய்யமாட்டான். அதன் பின் நிலங்களைச் செலவு செய்வான்.

8. டாரியு மொன்றே யென்றோம் பாலர்க ளாண்பால் ரண்டு
நாரியு மவ்வாறு தீர்க்கம் நாயகன் வேருய்ச் செல்வன்
கூறுவீர் காலம் தன்னைக் குழவியு முதிக்கா முன்னம்
வேறதாய் உணவு கொள்வன் மேவிய மூன்று மாண்டில் ;

8. அவனுக்கு மனைவி ஒருத்திதான். அவனுக்கு இரண்டு பிள்ளைகள். இரண்டு பெண்கள். அவன் [ஜாதகனின தந்தையின் சகோதரன்] தனிக் குடும்பம் செய்வான். குடும்பப் பிரிவினைக் காலததைச் சொல்லுமென ஒருவர் வினவ, ரிஷி பதிலுரைக்கின்றர். ஜாதகன் ஜனிப் பதற்கு முன்னமையே தனிக் குடும்பத்தைச் செய்யத் துவங்குவான். ஜாதகன் பிறந்த மூன்று ஆண்டுகளுக்குப்பின் ;

9. நிலம்தனம் பிரித லாகும் நிகழ்த்துவோம் பின்பால் சேதி
பாலகன் தந்தை பூர்வம் பகருவோ மினிமே லாக
ஞாலமேல் பாண்டி நாட்டில் நல்கினன் வைசியச் சேயாய்
ஏலவே செட்டுச் செய்து யாவர்க்கும் உதவி செய்தான்.

9. நிலம் பணம் இவைகளையும் விபாகம் செய்து கொள்ளுவான். இதைப் பற்றிய செய்திகளை இரண்டாம் பாகத்தில் தெரிவிப்போம். ஜாதக னுடைய தந்தையின் பூர்வஜன்மத்தைக் கூறுவேன். இவன் முன் பிற வியில் பாண்டிய நாட்டில் வைசிய குலத்தில் பிறந்து வியாபாரம் செய்து ஜீவித்தான். எல்லோருக்கும் உதவியும் புரிந்து வந்தான்.

10. பெரிதான தலங்கள் சென்று பிராமணர் தொண்டு பூண்டு
திருமகன் வாழு நாளில் தேவியும் கங்கை மாது
வரனின்றித் தனியாய் வாழ்ந்து மங்கையின் பொருளை யெல்லாம்
நெறியதைக் காத்து லாபம் நிகழ்த்துவா யென்று சொல்லி.

10. பெரிய புண்ணிய ஸ்தலங்களுக்குச் சென்றுன். பிராமணர் களுக்குத் தொண்டும் புரிந்தான். இவ்வாறு அவன் வாழுங்காலத்தில் ஒரு வேளாள மாது கணவனின்றிச் சொத்துக்களை மாத்திரம் வைத்துக் கொண்டிருந்தாள், அவள் தனது சொத்துக்களை இவனிடம் ஒப்படைத்து " நீ இவைகளால் லாபத்தை அடைவாயாக " என்று சொல்லிச் சென்றுள்.

11. வைத்துபின் லீயம் வாங்கி மாதுவும் யோசித்து வந்து
வித்தகி சிலநாள் சென்று மேவினள் காலன் ளுடு
சித்தமன் மரண மாகிச் சிரநான் கோன் வரையப் பட்டு
உத்தம னுதித்தா னென்றோம் உதித்தவிக் குணத்தா னுககு;

11. ....அவள் சிறிது காலத்திற்குப் பிறகு மரணமடைந்தாள். இவனும் அந்தியத்தில் மரணமாகி இங்குப் பிறந்திருக்கின்றுன். இவ்வாறு உதித்திருக்கும் இவனுக்கு ;

12. பாரியார் இருவர் தம்மில் பிறப்பனும் மறு மனைக்குக்
கூறுவோம் இவன்கு ணத்தைக் குஞ்சர நடையு மாவன்
பாரது விருத்தி செய்வன் பலசெட்டுச் செய்வா னூமே
மாறிடான் பெரியோர் வார்த்தை மாந்தளிர் மேனி யாவன்.

12. மனைவிமார்கள் இருவர். அவர்களில் இளைய மனைவிக்கு இச் சாதகன் மகனைப் பிறந்திருக்கிறன். ஜாதகனுடைய குணங்களைக் கூறுவோம். யானைபோல் கம்பீரமாக நடப்பான். நிலங்களை அதிகம் செய்வான். பெரியோர்களின் வார்த்தையை மீறுதவன். மாந்தளிர் போன்ற மேனியான்.

13. வித்தையு மிரண்டு கற்பன் வீண்வம்பு புகலா னுகும்
புத்தியில் பெரியோ னுவன் புகழான குடும்ப மேற்பன்
சத்திய மென்று லச்சம் சாற்றுமுன் கோபி யாவன்
வெத்திச் சொல் லுடைய னுகும் விசேஷவா ணிபங்கள் செய்வான்.

13. இரண்டு விதமான கல்விகளைக் கற்றறிந்தவன். வீண் பேச்சுகளில் ஈடுபடான். புத்தியில் சிறந்தவன். இவனது குடும்பம் மிகவும் பிரசித்தியை அடையும். சத்தியத்திற்குப் பயந்தவன். சிறிது முன்கோபமுடையவன். இவனது வார்த்தைக்கு விசேஷ கௌரவம் ஏற்படும். வியாபாரங்களை விஸ்தாரமாக நடத்துவான்.

14. பலவூரில் செல்லா னுகும் பஞ்சைபோல் உணவு கொள்வன்
பலமுள தேகி யாகிப் பால்பசு விருத்தி யுண்டு
நலமுளோர் தம்மைச் சேர்வன் நாயகி இஷ்டம் கொள்வன்
தலம்திருப் பணியும் செய்வ ன் சங்கரி கேட்டி டாயே.

14. பல ஊர்களுக்குச் செல்வதில் விருப்பமில்லாதவன். பரம ஏழை போல் உணவை உட்கொள்ளுவான். கட்டான சரீரம் வாய்ந்தவன். பிற்காலத்தில் இவனிடம் பசுக்கள் விருத்தியடையும். இவனுக்கு நன்மையைக் கோருபவர்களிடமே இவன் நெருங்கிப் பழகுவான். [வஞ்சகர்களைச் சீக்கிரத்தில் அறிந்து விலக்கி விடுவான் என்பது கருத்து.] தன்மனைவியிடம் மிகவும் அன்புள்ளவன். புண்ணியஸ்தலங்களில் உள்ள கோயில்களைப் புனர் நிர்மாணம் செய்வான். தேவியே! மேலும் கேளுங்கள்.

15. இன்னவன் துணைவர் தம்மை இயம்புவோம் முன்ஆண் ஒன்று
கன்னிகை அவ்வாறு தீர்க்கம் கழறுவோ மிவன்பின் னுலே
மன்னிய ஆண்பா லொன்று மங்கையு மிருவ ராகும்
சொன்னது ஐந்தும் தீர்க்கம் துறவியே கேட்டி டாயே.

15. இவனுடைய உடன்பிறந்தார்களைக் கூறுவோம் இவனுக்கு மூத்த சகோதரன் ஒருவன் ; மூத்த சகோதரி ஒருத்தி. இவனுக்குப் பின் பிறந்தவர்களில் ஓர் ஆண். பெண்கள் இருவர். ஆக இவ்வைவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். பற்றற்றவளே ! மேலும் கேளுங்கள்.

16. முன்மாதா ஒன்று என்றீர் மொழிகுவீர் அவட்குப் புத்திரர்
கன்னிகை இருவர் தீர்க்கம் காளையு மொன்று என்றேம்
அன்னவன் தீர்க்க சீவி அவன்குணம் பெருமை யுண்டு
பின்னமில் லாத தேகி பேதையு மிளம னத்தாள்.

16. இச் சாதகனுக்கு மூத்த தாய் ஒருத்தி உண்டு என்று சொன்னீர்கள். அவளுடைய சந்ததியைப் பற்றிச் சொல்லுங்களெனக் கேட்க, முனிவர் பதில் கூறுகின்றர். அவளுக்கு இரு பெண்களும் ஒரு பிள்ளையும் உண்டு. அந்தப் பிள்ளையும் தீர்க்க சீவியாவான். உத்தம குணங்கள் வாய்ந்தவன். சரீரத்தில் சிறிதும் ஊனமில்லாதவன். ஜாதகனுடைய மூத்த அன்னையும் இளகிய மனம் வாய்ந்தவள்..

17. பெரிதான புத்தி யேற்பள் பேதையும் வந்த பின்பு
வரனுக்கு யோக மென்றேம் வருவோரை ஆத ரிப்பள்
அரிவைக்குத் துணைஆண் ரெண்டு அம்பிகை ஒன்று என்றேம்
திருகிலா வாழ்வா ளாகும் செல்வறி கேட்டி டாயே.

17. உதார மனப்பான்மை கொண்டவள். அவள் இக்குடும்பத்தில் வாழக் கைப்பட்ட பிறகு அவள் கணவனுக்கு (ஜாதகனின் தந்தைக்கு) விசேஷ அதிருஷ்டங்கள் ஏற்பட்டிருக்கும். அவள் தன் வீட்டிற்கு வந்தவர்களை நன்றாக உபசரித்து ஆதரிப்பாள். அவளுக்குச் சகோதரர்கள் இருவர் சகோதரி ஒருத்தி. அவள் கஷ்டமில்லாமல் சுகமாக வாழ்வாள். ஈசுவரியே! மேலுங் கேளுங்கள்.

18. அவள்தீர்க்க வயதாய் நிற்க அனுகினள் வேறு மாதா
இவன்தாயார் வந்த சேதி யியம்புவீர் முனியே நீர்தாம்
பவமுள முன்ஜன் மத்தில் பாக்கியம் தந்த தாலே
நவனியில் பணத்தைக் காக்க நல்கினு ளிந்த மாது.

18. மூத்ததாய் சுகமாக வாழ்ந்து கொண்டிருக்கும் போதே ஜாதகனுடைய தாயும் இவனுக்கு [ஜாதகனின் தந்தைக்கு] மனைவியாக நேர்ந்தாள். என்றிவ்வாறு சொல்லக்கேட்ட பார்வதி தேவி, அவள் இளைய மனைவியாக வரக் காரணம் என்னை ? சொல்லும், எனக் கேட்க, முனிவர் பதில் கூறுகின்றர். முன்ஜன்மத்தில் ஒரு மாது தன் சொத்துக்களை இவனிடம் ஒப்படைத்துப் பிறகு அவைகளைத் திரும்பப் பெறுமலேயே இறந்தாள் என்று சொன்னேம். (பதினென்றுவது பாட்டில் காண்க.) ஆகையால் அம்மாது இவனிடமிருந்து, அன்னம் வஸ்திரம் ஆபரணம் முதலியவைகள் மூலம் அச் சொத்துக்களைத் திரும்பப் பெறுவதற்காக இவனுக்கு மனைவியாக வாய்த்திருக்கின்றுள்.

19. மாதுவின் குணம்எவ் வாறு அறிவிப்பீர் முனியே நீர்தாம்
சூதிலாள் முன்கோ பத்தாள் துறவிகட் கன்ன மீவள்
ஓதுவாள் நல்ல வார்த்தை உத்தமி நடக்கை நன்னம்
பாதக மனமில் லாதாள் பர்த்தாவின் மனம்போல் வாழ்வள்.

19. ஜாதகனுடைய தாயின் குணத்தைச் சொல்லு மெனப் பார்வதி கேட்க, முனிவர் கூறுகின்றார். அவள் கள்ளமில்லாதவள். ஆனால் முன் கோபமுண்டு. துறவிகளுக்குச் சிரத்தையுடன் அமுதளிப்பாள். நல்ல வார்த்தைகளையே பேசுவாள். நல்ல நடத்தையும் உடையவள். ஒருவருக்கும் கெடுதலை எண்ணாள். கணவன் மனம்போல் நடப்பாள்.

20. அவள்துணை ஆண்பால் ரண்டு அரிவையும் மூன்று என்றேரும்
நவனியில் வடமேல் இல்லம் நாயகி பூர்வம் சொல்வேன்
தவசிவாழ் பாண்டி தன்னில் ஜனித்தனள் கங்கை சேயாய்
இவள்பாக்கிய முடையா ளாகி இவள்வரன் மரணமா னான்.

20. அவளுக்கு இரு சகோதரர்கள். சகோதரிகள் மூவர். வடமேற்கில் அவள் பிறந்தவீடு உள்ளது. இவளுடைய பூர்வ ஜன்மத்தைக் கூறுவேன். தவசிகள் அன்புடன் வாசம் செய்யும் பாண்டிய நாட்டில் இவள் வேளாள குலத்தில் பிறந்து அதிக ஐசுவரியம் பெற்றவளாகக் கணவனோடு சுகமாக வாழுங் காலத்தில் இவளுடைய கணவன் இறந்தான்.

21. பெரியோர்கள் தொண்டு பூண்டு பேதையு மரண மாகி
மறையவன் வரையப் பட்டு வந்தவ ளிவளே யென்றேரும்
வரும்ஜன்மம் காளத்தி தன்னில் வருகுவாள் சைவச் சேயாய்ப்
பெருவயி றேனைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

21. பிறகு பெரியோர்களுக்குத் தொண்டு செய்து காலத்தைக் கழித்து இறந்தாள். [இவ்வரலாறு 10, 11, பாடல்களில் கூறப்பட்டிருப்பினும் இங்குத் திரும்பச் சொல்லுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டதால் மறுபடியும் தெரிவித்தார் என்று அறிக] அவள் இங்கு இக் கடக லக்கின மகனுக்குத் தாயாக வாய்த்திருக்கின்றாள். இவளுடைய மறு பிறவியையும் கூறுகின்றேம். காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் சைவ குலத்தில் இவள் பிறப்பாள். கணபதியைப் பெற்ற கௌரியே ! மேலும் கேளுங்கள்.

22. முப்பது ஒன்று ஆண்டில் விளம்புவோம் தாதை கண்டம்
செப்புவோ மதன்பின் னுகச் செய்குவான் நாற்பா னண்டில்
அப்போது அன்னை கண்டம் அறைந்தது தப்பா தாகும்
ஒப்புடன் தவங்கள் செய்யும் உத்தமி கேட்டி டாயே.

22. ஜாதகனுக்கு முப்பத்தொன்றுவது வயது நடக்கும்போது அவன் தந்தை மரணமாவான். அதற்குப் பிறகு நாற்பதாவது வயதில் தாய் மரணமடைவாள். இந்நிகழ்ச்சிகள் தவறுமல் நடைபெறும். உலகத்தோரின் தவப்படிப்பினைக்குத் தவம் செய்து காட்டும் தேவியே ! கேட்பீராக.

23. இருபது ஆறு ஆண்டில் இல்லமும் வேற தாகும்
மருவிப்பின் முப்பா னேழில் வருந்துணை வேறாய்ச் செல்வன்
திருவிலா வாழ்வா னுகும் செப்பின மொழிதுன் றாது
அருமறை முடிவி லாடும் அம்பிகை யாளே கேளாய்.

23. ஜாதகன் தனது இருபத்தாறுவது வயதில் தனியாகக் குடும்பம் செய்வான். முப்பத்தேழாவது வயதில் இவனிடமிருந்து இவன் சகோதரன் தனியாகப் பிரிந்து குடும்பம் செய்வான். ஜாதகன் குடும்பப் பிரிவினைக்குப் பிறகு குறைவு அடையாமல் சிறப்பாக வாழ்வான். தவசிகளாகிய நாங்கள் சொன்ன மொழி தவறாது. வேதங்களின் சிகரமாகிய உபநிஷதங்களால் போற்றப்படும் மகிமை உடைய தாயே ! மேலும் கேளுங்கள்.

24. ஜனித்தவன் மணத்தைச் சொல்வேன் சிறப்புறும் பதினெட்
[டாண்டில்
வனிதையும் மேல்பால் நேரும் வரைசிறே மவள் குணத்தை
சதியிலா மனத்தா ளாகும் சான்றோர்போல் வார்த்தை சொல்வள்
நிதிமிக உடையா ளாகும் நிமலிக்கு வயது தீர்க்கம்.

24. ஜாதகனின் விவாஹ காலத்தைக் கூறுவோம். பதினெட்டாவது ஆண்டில் மணம் நடைபெறும். மணப்பெண் மேற்குத்திசையில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணத்தையும் தெரிவிப்போம். களங்கமற்ற மனம் படைத்தவள். சாதுக்கள் போல நல்ல வார்த்தைகளையே பேசுவாள். மிகவும் செல்வம் உடையவள். தீர்க்காயுளுடன் வாழ்வாள்.

25. சுதர்களும் எழுவர் தோன்றும் சோர்வுறும் முதலி லேதான்
சதமுடன் ஆண்பால் ஒன்று தையலு மிரண்டு என்றேரும
ஏதுகா ரணத்தால் புத்திரர் இலகாது யென்று சொன்னீர்
மதியுமே அஞ்சில் நீசம் மங்கல னுடனே கேது;

25. இந்தத் தம்பதிகளுக்கு ஏழுகுழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் முதலில் பிறக்கும் நான்கு குழந்தைகள் சேதமாவார்கள். ஒரு பிள்ளையும் இருபெண்களும் எஞ்சி இருப்பார்கள். இம்மூவரும் ஸ்திரமாக வாழ்வார்கள். எக்காரணத்தினால் முதலில் பிறக்கும் குழந்தைகள் விளங்கா என்று கேட்க, முனிவர் கிரஹஸ்திதியில் காரணத்தைக் கூறுகின்றார். புத்திரபாவத்தில் சந்திரன் நீசமாக இருப்பதாலும், புத்திரபாவத்திற்குடைய செவ்வாய் பாபகிரஹமாகிய கேதுவுடன் இருப்பதாலும் ;

26. இருப்பதால் புகன்றேரும் யாங்கள் இவனுடை முன்ஜன் மத்தில்
விரிஞ்சியின் மேல்பா லாக விளங்கினன் ரெட்டி வமிசம்
தரையினில் சீவித்தான் தான் வாழ்நாள் வினையைக் கேண்மோ
குறையான ஏழை மாது குழவிக்கு அன்னம் வேண்ட.

26. முதலில் பிறக்கும் சுதர்களுக்குத் தோஷமென்றேரும். இவன் முன் பிறவில் ரெட்டி வமிசத்தில் பிறந்து பூமிகளைக் கிருஷிசெய்து ஏராள தானியங்களை உடையவனாக வாழுங்காலத்தில் அவனுக்கேற்பட்ட வினையைக் கேளுங்கள். மிக ஏழையான மாது ஒருத்தி தன் குழந்தைக்காக இவனிடம் அன்னம் வேண்டினாள்.

27. அரிபோல கோப முற்று அணுகாது அன்ன மென்னத்
திருவிலா ஏழை மாது செப்புவாள் சாபம் தானும்
மறுஜன்மம் சுதர்கள் தோன்றி மறலியின் பதிக்கு ஏகும்
உரைத்துப்பின் சென்று ளொன்ரும் உறைந்தது அந்தத் தோஷம்.

27. உடனே இவன் சிங்கம்போல் சீறி, அன்னம் கிடையாது; என்னை அணுகவேண்டாம்; செல், என்று கடிந்தான். கதியற்ற அந்தமாது வருந்தி, மறு ஜன்மத்தில், குழந்தைகளின் கஷ்டமறியாத பாவியாகிய உனக்குக் குழந்தைகள் தோன்றி அழியும் என்று சாபமிட்டுச் சென்ருள். அந்தச் சாபம் இவனிடம் தங்கிற்று.

28. இதுவின்றி வேறு காணுன் இவனுமே தலங்கள் சென்று
சதியான கால மூடு சார்ந்துமே பிரமன் லக்கம்
அதிபனு முதிப்பா னுகும் வரைகிறே முன்னூழ்ச் சாபம்
சுதர்களு முதலில் நான்கு சீரணம் என்று சொல்வோம்.

28. இதுவன்றி வேறு பாவம் செய்தவனல்லன். அந்த ஜன்மத்தில் பலபுண்ணியஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தான். அந்தியத்தில் இறந்து, பிரம்மனுல் இங்குக் கடகலக்கினத்தில் படைக்கப்பட்டிருக்கிருன். முன்ஜன்மத்தில் ஏற்பட்ட சாபத்தினுல் முதலில் நானகு மகவுகள் நாச மாகும்.

29. வினையது நிவிர்த்தி செய்ய வீளம்புவீர் சாந்தி யென்று
அதுசாந்தி செய்தாலும்தான் இடாது வந்தே தீரும்
கனமுள இவனின் யோகம் கழுறுவோ மினிமேலாக
அனையவே பூமி யாலும் அல்பமாம் பொருளி னுலும்.

29. அந்தப்பாவத்தை நிவிருத்தி செய்ய பரிகாரம் சொல்லு மெனப் பார்வதி தேவி கேட்க, முனிவர் பதில் உரைத்தார். அந்த வினை எவ்வித சாந்திகள் செய்தாலும் விலகாது. அந்த வினையின் பலன் இவன் அனுபவித்தே ஆகவேண்டும். இனி இவனுடைய யோகத்தைச் சுருக்க மாகத் தெரிவிப்போம். முக்கியமாக இவன் பூமியாலும், சேமித்து வைத்த பணத்தினுலும் அல்பமாகப் பலனை அடைந்து சீவிப்பான்.

ஜாதகம் 39

1. திங்கள்சேய் கேது வாகச் செம்பொன்னும் கன்னி யாகப்
பங்கயன் புதனு சீயம் பளிங்கனு கோல தாகத்
துங்கமாம் காரி தேளில் தனுசினில் ராகு தங்க
இங்கிவை கிரகம் நின்று லக்கினம் கடக மாக;

			சந்திரன் செவ்வாய் கேது
	இராசி		லக்கினம்
	சக்கரம்		சூரியன் புதன்
ராகு	சனி	சுக்கிரன்	குரு

1. விளம்பி வருஷம் ஆவணி மாதம் 25-ந்தேதி வியாழக்கிழமை இரவு நாழிகை 21-க்கு மேல் 26-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 8-9-1898.

நவக்கிரஹங்களின் பாதசாரம்:—பூரம் 4-ல் சூரியன். மிருகசீர்ஷம் 4-இல் சந்திரன். திருவாதிரை 2-இல் செவ்வாய். பூரம் 2-இல் புதன் (அஸ்தம்) ஹஸ்தம் 4-ல் குரு. சுவாதி 2-இல் சுக்கிரன். அனுஷம் 4-இல் சனி. பூராடம் 3-இல் ராஹு. புனர்வஸு 1-இல்கேது. நக்ஷத்திரம் மிருக சீர்ஷம். செவ்வாய் தசை இருப்புவருஷம் ஒன்று, மாதங்கள் ஐந்து.

சந்திரன் செவ்வாய் கேது இவர்கள் மிதுனம், குரு கன்னி, சூரியன் புதன் சிம்மம், சுக்கிரன் துலாம் சனி விருச்சிகம், ராஹு தனுஸ், இலக் கினம் கடகம், இவ்வாறு நவக்கிரஹங்கள் விளங்க;

2. பலன்தமைச் சொல்லு மென்று பார்வதி கேட்கும் போது
குலகுரு வசிஷ்டர் சொல்வர் குறித்தது ஆண்பால் ஜன்மம்
தலமது யீழ்மேல் வீதி சண்டன்தன் வாடை யாகும்
அலைகடல் துயின்றோன் மேற்கில் அரன்கோஷ்டம் மருகில் தங்கும்.

2. பலன்களைச் சொல்லுங்கள் என்று பார்வதிதேவி கேட்கும்போது சூரிய குலத்திற்கு ஆசார்யனுகிய வசிஷ்ட முனிவர் பதில் கூறுகின்றர். இக்கிரஹநிலையில் பிறந்த மகவு ஆண். வீதி கிழக்குமேற்காக அமைந்

திருக்கும். வீடு தென் வரிசையில் இருக்கும். பாற்கடலில் பையத்துயிலு இன்ற விஷ்ணுவின் கோயில் மேற்குத்திசையில் விளங்கும். அக்கோயி லுக்கு அருகில் சிவபிரானது ஆலயமும் திகழும்.

3. சிங்கவா கனத்தாள் தென்மேல் சிரமற்றேன் தென்பா லாகும்
துங்கமாம் நந்தி மேற்கில் செப்பின அடையா ளத்துள்
இங்கிவன் வன்னியச் சேயாய் இறங்குவா னிரண்டாம் ஜன்மம்
அன்னவன் குடும்பச் சேதி அறைகிறோம் தாயே கேளும்.

3. சிங்கத்தைவாஹனமாகக் கொண்ட துர்க்கையின் ஆலயம் தென்மேற் கில் இருக்கும். தெற்கில் விநாயகர் கோஷ்டம் தங்கும். மேற்குத்திசையில் நந்திகேசுவரரும் எழுந்தருளி இருப்பார். இவ்வாறு அடையாளமுள்ள கிராமத்தில் வன்னிய குலத்தில், குடும்பத்திற்கு இரண்டாம் குழந்தையாக ஜனித்திருக்கின்றான். அவனுடைய குடும்பம் முதலியவைகளின் வரலாறுகளை இந்நூலில் கூறுகின்றோம் அன்னையே! கேட்டருளல் வேண்டும்.

4. தந்தைக்குத் தாரம் ரண்டில் தரித்திடு மிளையா ளீன்ற
இந்தவோர் மைந்த னென்றோம் இவன்தந்தை சேதி கேளாய்
முந்துமால் நிறத்தா னாகு முயர்வான குடும்ப மேற்பன்
தன்தன முடையா னாகும் தரணியை விருத்தி செய்வன்.

4. இவனுடைய தந்தைக்கு இருமனைவிமார்களில் ஜீவித்திருக்கும் இளைய மனைவிக்கு இவன் உதித்திருக்கின்றான். ஜாதகனின் தந்தையினுடைய வரலாற்றைச் சொல்லுகின்றோம். திருமாலின் நிறம் உடையவன் [கருத்த மேனியான் என்பதுகருத்து]. பெரிய குடும்பத்தை ஏற்பான். தன்முயற்சியால் சம்பாதித்த பணம் உடையவன். நிலங்களை மேன்மேலும் அபிவிருத்தி செய்வான்.

5. வண்டிவா கனமு முண்டு அடிமைக ளுடைய னாகும்
குண்டைகோ விருத்தி யுண்டு குலமதிப் புடைய னாகும்
தண்டமிழ் நுணுக்கம் தேரான் சல்லியம் கொள்ளானுமே
கண்டித முடையா னாகும் காதலி கேட்டி டாயே.

5. வண்டி வாஹனங்கள் உடையவன். அநேக சேவகர்களையும் படைத்த வன். எருதுகளும் பசுக்களும் இவனிடம் விருத்தியடையும். தன் குலத் தினர் மெச்ச வாழ்வான். இனிய தமிழின் சுவையை அறியாதவன் [படிப் பில்லாதவன் என்பது கருத்து]. இவனுக்குக் கடன் இராது. சொன்ன வார்த்தைப்படி எல்லோரும் நடக்கவேண்டுமென வற்புறுத்துவான். தேவியே! மேலும் கேளுங்கள்.

6. இவனுடைத் துணைவர் தம்மை மியம்புவோம் நால்வ ராகும்
அவனியில் யாவும் மரிப்பு ஆணது ஒன்றே தீர்க்கம்
நவனியில் மூத்தோ னாக நாட்டுவோம் தாயே யாங்கள்
பவமுள அவன்கு ணத்தைப் பகருவோ மினிமே லாக.

6. இவனுடைய சகோதரபாவத்தைக் கூறுவோம். இவனுக்கு நான்கு உடன் பிறந்தார்கள் தோன்றுவர். இப்பூமியில் தோன்றும் நால்வரில் ஸ்திர மான ஒரு ஸஹோதரனைத் தவிர மற்றெல்லோரும் மரிப்பர். அவன் மூத் தவன் என்றும் நாங்கள் அறிகிறோம். அவனுடைய [ஜாதகனின் பெரிய தந்தையின்] குணத்தை இனிச் சொல்லுகிறோம்.

7. மால்நிறம் சமதே கத்தோன் மருமறில் லாத நெஞ்சும்
ஊனமில் லாத தேகி உயர்வோர்கள் நேசம் கொள்வன்
பான்மையாய்ப் பேச வல்லன் பாருகள் விருத்தி செய்வன்
தானமும் தரும மீகை ஷண்முகன் பத்தி பூண்பன்.

7. இவனும் கருத்தமேனியான். சமவளர்ச்சி உடையவன். நெஞ்சில் கபடமில்லாதவன். சரீரத்தில் சிறிதும் பின்னமில்லாதவன். பெரி யோர்களின் நட்பு உனக்கு இருக்கும். பக்குவமாகப் பேசுவான். நிலங்களை அபிவிருத்தி செய்வான். தான தருமங்களில் பற்று உண்டு. ஆறுமுகக்கடவுளிடம் பக்தி பூண்டவன்.

8. தாதையின் பெயரைக் காப்பன் சகடுவா கனமு முண்டு
பாவத்தில் மனம்செல் லாதான் பத்தினி மார்கள் ரண்டு
மேவுவாள் கால னாடு மூத்தவ ளென்று சொல்வோம்
ஆவலாய்ச் சுதர னேகம் அணுகிடும் அவையும் தீராம்.

8. தந்தைக்கேற்ற தனயன் எனப் புகழை அடைவான். வண்டி முதலிய வாஹனவசதிகளும் இருக்கும். பாவத்தில் செல்லாதவன். அவனுக்கு இரு மனைவிமார்கள். மூத்த மனைவி முன்னமேயே மரண மடைவாள். அவளுக்குப் பலபிள்ளைகள் தோன்றிடினும் சந்ததி இல்லாத வளாகவே இறப்பாள்.

9. பின்மனை ஒன்று தோன்றும் புதல்வர்கள் ஆண்பால் ரண்டு
கன்னியர் மூவ ராகும் கழறுவோம் முதற்பெண் விருத்தி
அன்னவன் ஒன்றாய் வாழ்ந்து ஆதரிப் பானு மென்றோம்
பன்னுவோம் வறுமை காணன் பஞ்சைமே லிரக்க மாவன்.

9. அதற்குப்பிறகு மணம்செய்துகொள்வான். அந்த இளைய மனைவிக்கு இரு பிள்ளைகளும் மூன்று பெண்களும் தோன்றுவார்கள். முதற் பெண் விருத்தியடையும். அவன், ஜாதகனின் தந்தையுடன் ஒன்றாக வாழ்ந்து அவனை ஆதரிப்பான். வறுமை இல்லாதவன். வறுமையுற்ற வர்களிடம் கருணை கொண்டவன்.

10. ஜாதகன் நிறம் குணத்தைச் சாற்றுவோ மிநநி றத்தான்
மேதினில் உணர்வல் நீட்சி விவேகியாம் கல்வி யுண்டு
வேதனை ஒருவர்க் கெண்ணான் விளைபுலம் விருத்தி செய்வன்
சூதிலான் பூமி விருத்தி துணைவரை ஆத ரிப்பன்.

10. இனி ஜாதகனின் குணத்தைக் கூறுவாம். இவன் கறுப்பு நிறம் வாய்ந்தவன். இவனது சரீரம் மெலிந்தும் உயர்ந்தும் இருக்கும். நல்ல விவேகம் உடையவன். கல்வியறிவும் உண்டு. பிறர்க்குக் கெடுதலை நெஞ்சிலும் நினைக்காதவன். விளையும் நிலங்களில் சிரத்தையுடன் உழைப்பான். உள்ளத்தில் கள்ளமில்லாதவன். இவனுக்குப் பூமிகள் சேரும். உடன் பிறந்தார்களை அன்புடன் ஆதரிப்பான்.

11. ஆறுமுகன் பத்தி பூண்பன் அண்டின பேரைக் காப்பன்
சிறுமையோர்க் குதவி செய்வன் செய்நன்றி மறவா னுகும்
தரையினல் சீவிப் பானும் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
பெருமையும் புகழு மேற்பன் போஜன வறுமை காணுன்.

11. ஷண்முகக் கடவுளிடம் பக்தி பூண்டவன். அண்டினேரை ஆதரித்துக் காப்பாற்றுவான். எளியவர்களுக்கும் உதவி புரிவான். பிறர் செய்த உபகாரத்தை மறவாதவன். பூமியை உழுது ஜீவிப்பான். கால் நடைகள் இவனிடம் விருத்தியடையும். இவனுக்கு எல்லா இடங்களிலும் கௌரவமும் புகழும் உண்டாகும். போஜன சௌக்கியம் வாய்ந்தவன்.

12. தன்துணை முன்பெண் ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாகப்
பின்துணை ஆண்பா லொன்று பேசுவோம் பாலனுக்கு
முன்மாதா ஒன்று என்றீர் மொழிகுவீர் அவட்குப் புத்திரர்
பின்னமா யிரண்டு தோன்றும் பேதையு மரண மாகும்.

12. இச் சாதகனுக்கு முன் பிறந்த சகோதரி ஒருத்தி உண்டு. இவனுக்குப் பிறகு ஒரு சகோதரனும் பிறப்பான். இவ்விருவரும் தீர்க்கா யுளுடன் வாழ்வார்கள். இப்பாலன் இளையாளுக்குத் தோன்றியவன் என்று சொன்னீர்கள். மூத்த அன்னைக்குச் சந்ததி உண்டா? எனப் பார்வதியே கேட்க, வசிஷ்டர் பதில் கூறுகின்றார். அவளுக்கு இரு குழந்தைகள் பிறக்கும். அவைகளும் இறக்கும். அவளும் இறப்பாள்.

13. அதற்குப்பின் இவனின் தாயார் அறைந்தனம் துணைவர் ரண்டு
உதவாது அதன்பின் ளுக உரைப்பீர்க ளந்தச் சங்கை
விதியது முடியும் தந்தை விளம்புவோ மூன்று மாண்டில்
துரிதமாய்ப் பேதி யாலே செல்லுவான் கால னுடு.

13. மூத்தமனைவி மரணமடைந்தபிறகு ஜாதகனின் தந்தை மறு மணம் செய்து கொண்டான். அந்த மாதிற்குப் பிறந்தவன்தான் இக் கடகலக்கின மகன். ஜாதகனுக்கு இரு உடன் பிறந்தார்கள் உண்டு என்று முன்பாட்டில் சொன்னேம். அதற்குப் பிறகு உடன் பிறந்தார்கள் தோன்றுர்கள், எனச் சொல்லக் கேட்ட பார்வதி, வன் பிறக்கமாட்டார்கள்? என்று வினவ, முனிவர் பதில் உரைத்தார். இவன் (ஜாதகன்) பிறந்த மூன்றுமாண்டில் இவன் தந்தை, வெகு சீக்கிரத்தில் பேதிநோய் கண்டு, இறந்து விடுவான்.

14. காரணம் யாது என்னக் காவலன் அன்னை யாலே
பாரிய வினைகள் செய்தாள் படர்ந்தது என்று சொல்வோம்
கூறுவார் மாஜர் சேதி கோபமும் மூர்க்க முண்டு
மாறியே வார்த்தை சொல்வள் மனமது கபடு மில்லாள்.

14. அவ்வாறு வாழ்க்கையின் மத்தியில் அவன் திடீரென மரண மடைவதற்கு யார், என்ன, பாவம் செய்தார்கள் என உமையவள் கேட்க, வசிஷ்டர் விடையளித்தார். இவனுடைய [ஜாதனது] அன்னை செய்த பாவத்தினுல் அவன் அல்பாயுளாக மரணமடைந்தான். அவனுடைய [தாயின்] வரலாற்றைக் கூறுவோம். கோபமும் பிடிவாதகுணமும் உண்டு. முன் சொன்னவார்த்தையை மாற்றிப் பேசுவாள் [பொய் சொல்ல அஞ்சாதவள் என்பது கருத்து]. மனத்தில் கபடமில்லாதவள்.

15. ஒருவர்சொல் கேட்கா ளாகும் உடன்துணை ஆண்பா லொன்று
இருகன்னி துணைவ ரென்றே மில்லமும் கீழ்ப்பா லாகும்
அரிவைமுன் ஜன்மம் சொல்வேன் ஆலங்கா டதனி லேதான்
திருகிலா இக்குலத்தில் ஜனித்தவ ளொன்று சொல்வோம்.

15. யார் சொல்லையும் மதித்துக் கேட்கமாட்டாள். அவளுக்குச் சகோதரன் ஒருவன். சகோதரிகள் இருவர். அவள் பிறந்த வீடு கிழக்குத் திசையில் உள்ளது. அவளுடைய முன் ஜன்மத்தைச் சொல்லுகின்றேம். ஆலங்காடு என்கிற கிராமத்தில் இதே ஜாதியில் பிறந்தாள்.

16. மாரனு மதலை யுண்டாய் வளமுள குடும்பி யாகி
நாரியும் வாளு நாளில் நல்கின வினையைக் கேண்மோ
கூறுவோம் தணிகைக் கேதான் கொண்டவ னுடனே சென்று
ஆறுமா முகனைப் போற்றி அணுகினுள் கடைவீ திக்கு.

16. கணவன் குழந்தைகளுடன் பெரிய குடும்பம் உடையவளாகி அவள் வாழுங்காலத்தில் அவளுக்கேற்பட்ட வினையைச் சொல்லுகின்றேம் கேளுங்கள். அவள், தன் கணவனுடன், ஒரு நாள் திருத்தணி க்ஷேத்திரத்திற்குச் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் ஆறுமுகக்கடவுளைத் தரிசித்துப் போற்றிவிட்டு, கடைவீதிக்குச் சென்றுள்.

17. குங்குமம் மஞ்சள் சீப்புக் கோதையும் வாங்கிக் கொண்டு
தங்கமு மீயா ளாகிச் சவுரிமான் போலே சென்றுள்
துங்கமாம் செட்டி யீந்து தோகையைக் காணு னுகிச்
சிங்கம்போல் கோப முற்றுச் செப்புவான் சாபம் தானே.

17. அங்கு, மஞ்சள் குங்குமம் சீப்பு முதலிய மங்களதிரவியங்களை வாங்கிக் கொண்டு அவைகளுக்காகத் தரவேண்டிய பணத்தை வியாபாரியிடம் தராமல் மான் போல் ஒரு நிமிஷத்தில் ஓடி மறைந்தாள். வியாபாரியோ இவளைத் தேடிப்பார்த்தும் காணுதவனுய்ச் சிங்கம்போல் மிகவும் சினமடைந்து சாபத்தை விடுத்தான்.

18. குங்கும மாகா முன்னம் கொழுநனு மரண மாவான்
சங்கையாய்ப் பிறஜன மத்தில் தன்வரன் மத்தில் மாண்டு
பங்கமா யில்லம் பாழாய்ப் பலரும் வசையும சொல்ல
அங்கமே எடுப்பா யென்று சொல்லியே தெருத்தூள் விட்டான்.

18. "விலை கொடாமல் என்னை ஏமாற்றி வாங்கிச் சென்ற இந்தக் குங்குமம் ஆவதற்கு முன்னமேயே அவள் தன் கணவனை இழப்பாளாக; மேலும் மறுமையிலும் வாழ்க்கையின் மத்தியில் இவள் கணவனையிழந்தவளாவாள். ஆகையால் குடும்பம் சிதைந்து பலரும் நிந்திக்க வாழ்வாள்" என்றிவ்வாறு சொல்லித் தெருத்துகளைக் கைகளால் வாரியிறைத்தான்.

19. மாதுவுக் கந்தச் சாபம் மருவிற்று ஆண்டில் மாரன்
தீதான கால னுடு சென்றுமே வருத்த முறுக்
காதலி நிந்தை பெற்றுக் காலன்தன் பதிக்குப் புக்கி
வேதனல் வரையப் பட்டு விளங்கினு னென்று சொல்வோம்.

19. அந்த ஏழை வியாபாரி இட்ட சாபம் அவ்வாறே பலித்தது. வஞ்சனையால் அடையப்பெற்ற குங்குமம் ஆவதற்குமுன் அந்த ஆண்டில் அவள் கணவன் இறந்தான். இவள் வருந்த மடைந்தும், இவளுடைய துரதிருஷ்டத்தினுல் அவன் இறந்தான்" என்ற அவச்சொல்லைக் கேட்டும் அந்திபத்தில் அவள் மரணமடைந்தாள். பிரம்மதேவன அவ்வாறு பாவம் செய்தவளைப் பூலோகத்தில் படைத்திருக்கின்றுன்.

20. வணியன்தன் சாபம் தானும் மருவிடு மிச்சென் மத்தில்
கன்னிக்கு மத்தில் மாரன் காலன்தன் பதிக்குச் செல்வன்
பிணையாகும் குடும்பம் தானும் பேதையா லனேக துன்பம்
வினையது நெருங்கு மென்றேம் மெல்லிக்குக் கலகம் சொல்வோம்.

20. அந்த வியாபாரி சாபமிட்டபடி இச் சென்மத்திலும் இவளுடைய கணவன், வாழ்க்கையின் மத்தியில் மூன்று குழந்தைகள் பிறந்த பிறகு, இறந்தான். அந்த மூன்று குழந்தைகளில் ஜாதகனும் ஒருவன. ஆதலால் அக் குடும்பம் அல்லலடைந்தது, பல துன்பங்களை அனுபவித்தது. எல்லாவற்றிற்கும் காரணம் ஜாதகனுடைய தாய் செய்த பாவம்தான்.

21. செப்புவீர் முனியே நீர் தாம் சேயிவன் முன்னேன் மாரன்
தப்பிதம் நேரு மென்றீர் தரணியை நீசம் செய்வன்
மெய்ப்புடன்.......... ங்கள் தானும் விளைவிப்பான் பால னுக்கு
அப்பனின் முன்னேன் தன்னுல் அவனையே காப்பா னுகும்.

21. "முனிவரே! நீங்கள் ஜாதகனின் முன்னேன் பிழை செய்வான் என்று சொன்னீர்கள். என்ன பிழை?" என்று வினவ, பூமியை விரயம் செய்வான். ஆனுல் ஜாதகனின் பெரிய தந்தை ஜாதகனையும் மற்றைய குழந்தைகளையும், அவன் தாயையும் காப்பாறறுவான்.

22. ஈரொன்ப தாண்டு மட்டும் இரணியம் பூமி ஒன்றும்
மாருமலிருக்கு மென்றேம் மாறிடும் போச னம்தான்
கூறுவார் காலம் தன்னைக் குறிக்கிறே மாறு மாண்டில்
காரிகை தன்னுல் நேரும் காதலி கேட்டி டாயே.

22. ஜாதகன் பிறந்து பதினெட்டு வருஷங்கள் வரையில பணம் பூமி இவைகள் எல்லாம் ஒன்றுகவே இருக்கும். ஆனுல் இங்குச் சொன்ன வருஷங்களுக்கு முன்னமேயே "சமையல்" வேருக ஆரம்பிக்கப்படும். அதுவும் ஜாதகன் பிறந்து ஆருவது ஆண்டில் நடைபெறும். பெண்கள் முக்கியமாக [ஜாதகனின் தாய்] தான் அவ்வாறு பிரிவதற்கும் காரணமாக இருப்பார்கள். உமாதேவியே! மேலும் கேளுங்கள.

23. நிலம்தனம் பாகம் செப்பில் நிலைக்காது பால னுக்குச்
செலவுக ளாகு மென்றேம் செப்புவோம் பின்பால் சேதி
தலைவியின் ஜன்மம் சொல்வேன் தண்டகா வனத்தி லே நான்
குலவுவா ணிக்கு லத்தில் கோமளி கேட்டி டாயே.

23. நிலம் பணம் இவைகளின் பிரிவினையைப்பற்றி ஆராய்ந்தால் ஜாதகனுக்கு நிலமும் பணமும் நிலைக்காமல் செலவாகிவிடும். இதைப்பற்றிய விவரங்களைப் பின் பாகத்தில் தெரிவிப்போம். ஜாதகனுடைய தாயின் மறுமையைக் கூறுவோம். தண்டகாவனத்தில் இதேகுலத்தில் பிறப்பாள். மென்மையான திருமேனியுடையாளே! மேலும் கேட்பாயாக.

24. பாலகன் மணத்தைச் சொல்வோம் பதினறு ஆண்டு தன்னில்
வேல்விழி கீழப்பால் நேரும் விளம்புவோ மவள்கு ணத்தைப்
பால்பாக்கிய முடையா ளாகும் பசித்தோர்க்கு அன்ன மீவள்
ஞாலமேல் நலலோ ளாவள் நாயகி யிருசி கபபள்.

24. ஜாதகனுடைய மணத்தின் காலத்தைக் கூறுவோம். பதினறாவது வயதில் விவாஹம் நடைபெறும். மணப்பெண் கீழத்திசையில் உதித்திருப்பாள். அவள் குணத்தைக் கூறுவோம். பால் பாக்கியமுடையவள். பசித்தவர்களுக்கு அமுதமளிப்பாள். இவள் வசிக்கும் ஊரில் "நல்லவள்" என்று பெயர் பெறுவாள். அவள் கருஞ்சிவப்புநிறமுள்ளவளாக இருப்பாள்.

25. சொல்லது சுபமே யாகும் துருசான நடையு மாவள்
வல்லிக்கு வயது தீர்க்கம் மருவிடும் நாபிச் சூடு
சொல்லுவோம் புத்திர பாவம் தோன்றிடும ஆண்பால் ரண்டு
வல்லியர் மூவ ரென்றேம் மங்கையே கேட்டி டாயே.

25. மங்களமான வார்த்தைகளைப் பேசுவாள். துரிதமான நடையுள்ளவள். தீர்க்காயுள் வாய்ந்தவள். நாபியில் சூடு உடையவள். புத்திர பாவத்தைச் சொல்லுகின்றேம். இத் தம்பதிகளுக்கு இரு பிள்ளைகளும் மூன்று பெண்களும் பிறப்பார்கள். தேவியே! மேலும் கேட்பீராக.

26. பாலகன் பூர்வம் தன்னைப் பகருவோ மினிமே லாக
வேலன்வாழ் பழனி நாட்டில் விளங்கினன் வைசியச் சேயாய்ச்
ஞாலமேல் செட்டுச் செய்து நாயகி மதலை யுண்டாய்ச்
சாலவே வாழு நாளில் தங்கின வினையைக் கேண்மோ.

26. ஜாதகனுடைய முன் பிறவியைத் தெரிவிப்போம். சுப்பிரமணிய சுவாமி எழுந்தருளியிருக்கும் பழனி க்ஷேத்திரத்தில் வைசிய சாதியில் பிறந்து, வியாபாரங்களைச் செய்து, பணம் படைத்தவனாக, மனைவி மக்களுடன் வாழும் காலத்தில் இவனுக்கேற்பட்ட வினையைக் கேளுங்கள்.

27. மாரியின் கோஷ்டத் திற்கு மணிவிளக் கிரண்டு வைத்துக்
கோருவர் இவனின் தந்தை குமரனும் ஒன்று வைத்துத்
தீரமாய் தொழுது வந்தான் சேர்ந்தது அந்தத் தோஷம்
வேறொருக் குற்றம் சொல்வேன் வித்தகி கேட்டி டாயே.

27. அவ்வூரிலுள்ள மாரியம்மன் கோயிலுக்கு அச் சென்மத்தில் இவனுக்கேற்பட்டிருந்த தந்தை இரு மணி விளக்குகளைச் சமர்ப்பித்து வந்தான். தந்தை செய்த தருமத்தை இவன் தொடர்ந்து நடத்த வேண்டியது இவனுடைய கடமையாக இருக்க, அவ்வாறு செய்யாமல் சிறிதும் அச்சமின்றி ஒரு விளக்கையே சமர்ப்பித்துத் தொழுது வந்தான். தொடர்ந்து நடந்த—நடை பெறவேண்டிய—தருமத்தை நிறுத்திய பாவம் இவனைச் சார்ந்தது. வேறு ஒரு பாவமும் இவனுக்கு நேர்ந்தது. அதையும் சொல்லுகிறோம். கேளுங்கள்.

दापपालनयोर्मध्ये दानात् श्रेयोऽनुपालनम् ।
दानात् स्वर्गमवाप्नोति पालनादच्युतं पदम् ॥

குறிப்பு.—என்ற மஹா பாரத சுலோகத்தைக் காண்க.

இதன் கருத்து :—"புதிய தொரு தருமத்தை நிறுவுவதை விட முன்பே ஆரம்பிக்கப்பட்டு நடந்துவரும் தருமத்தைச் சரிவரப் பரிபாலித்து நடத்தி வருவதே மேல். புதிய தருமத்தை ஸ்தாபித்தால் அநித்யமான ஸ்வர்கம் தான் கிடைக்கும். தருமத்தைப் பரிபாலிப்பதால் அழிவற்ற உலகமாகிய மோக்ஷத்தை அடையலாம்" என்பதாம். இங்குத் தரும பரிபாலனத்திற்கு அதிக பலன் கூறி இருப்பதால், தொடர்ந்து வரும் தருமத்தை நிறுத்திவிடின் அதிகபாவம் என்பது அறியப்படும்.

28. சிறியோர்க்குக் கணக்கில் மோசம் செய்தனன் என்று சொல்வோம்
வரைகிருர் ஏழை யோர்கள் மறுஜன்மம் மகவாய்த் தோன்றிக்
குறைமனம் ஆதி காலம் கோதையால் வறுமை யுண்டாய்ப்
பெரித ன குடும்பம் தாழ்ந்து முடிவினில் வாழ்வா யென்று.

28. ஏழைகளுடைய கணக்கில் மோசம் செய்து அதிகப் பணம் வசூல் செய்தான். அதனால் வருத்தமடைந்த ஏழைகள், "நாங்கள் மறுபிறவியில் உனக்குக் குழந்தைகளாகப் பிறந்து மனக்குறைவை [நிம்மதியின்மையை] உண்டுபண்ணுவோம். முடிவில் ஸ்திரீயினால் உனக்கு ஏழ்மைஏற்பட்டு, குடும்பம் தாழ்ந்து வாழ்வாய்" என்று சொன்னார்கள்.

29. இன்னமும் பலவாறு சொன்னார் எய்திற்று அந்தத் தோஷம்
துன்னிய கால னோடு சென்றுமே பிரமன் லக்கம்
இன்னிய குலமே தோன்றும் மாரியின் துன்பத் தாலே
தன்னேத்திரம் ஒன்று ஊனம் சிறியோர்கள் சாபத் தாலே ;

29 மேலும் பலவாறு சொல்லிவிட்டுச் சென்றார்கள். அந்தப்பாவம் இவனைச் சார்ந்தது. பிறகு இவன் இறந்தான். அவனைச் சதுர்முகபிரம்ம தேவன் இங்குப் படைத்திருக்கின்றான். முற்பிறவியில், மாரியம்மனுக்குச் செய்த அபசாரத்தால் இச் சென்மத்தில் ஒரு கண் ஊனமாகும். ஏழைகளின் சாபத்தால் ;

30. ஆதியில் குடும்ப லேச்சல் அன்னையால் நேரு மென்றேும்
மாரியின் தோஷத் திற்கு வரைகுவீர் சாந்தி தானும்
கூறவே மாட்டோம் யாங்கள் குழவியின் யோகம் சொல்வேன்
பார்விருத்தி பெரிய தந்தை பண்ணுவான் பால னுக்கு.

30. ஆதியில் குடும்பத்திற்குப் பல அல்லல்கள் அன்னையால் ஏற்படும். மாரியம்மன் தோஷத்திற்குப் பரிகாரமாக ஏதாகிலும் சாந்தி சொல்வீர்களாக, எனப் பார்வதி தேவி கேட்டவுடன், முனிவர், நாங்கள் அந்தப் பாவத்திற்குப் பரிகாரம் கூறவே மாட்டோம். அவ்வளவு பெரியது அது. எவ்வித சாந்தியாலும் அது விலகாது. அவன் அப்பாவத்தின் பலனை அனுபவித்தேயாகவேண்டுமென்று சொல்லிவிட்டு, ஜாதகனின் யோகத்தைக் கூறுகின்றார். பெரிய தந்தையினால் ஜாதனுக்கு நிலங்கள் சேரும்.

31 அன்னையால் வறுமை நேரும் அவனியில் சல்லியம் காணன்
கன்றுகா லிகளும் விருத்தி கட்டுவான் தானி யங்கள்
பொன்பணி சேர்த்த லுண்டு போஜன வறுமை காணன்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

31. அன்னையால் வறுமை ஏற்படும். ஆனால் கடன் இராது. கால் நடைகள் விருத்தியாகும். தானியங்களைக் களஞ்சியங்களில் சேமித்து வைப்பான். பொன்னுபரணங்களைச் சம்பாதிப்பான். ஆகார சௌக்கிய முடையவன். கணேசரைப் பெற்ற உத்தமியே ! மேலும் கேளுங்கள்.

32. தந்தையின் பூர்வம் கேளாய்த் திருச்செந்தூர் நகரம் தன்னில்
வந்தனன் கோகு லத்தில் வளமையாய்க் குடும்பி யாகி
மைந்தரும் மனைவி யுண்டாய் ஆவுகள் தம்மைக் காத்துச்
சந்ததம் பவமில் லாமல் சண்டன்தன் பதிக்குப் புக்கி.

32. ஜாதகனின் தந்தையின் முன்ஜன்மத்தைக் கூறுவோம். அவன் திருச்செந்தூரில் யாதவகுலத்தில் பிறந்து வளமுள்ள குடும்பம் வாய்ந்தவனாகி, மனைவிமக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். தனது சாதித் தொழிலை—பசுக்களைப் பரிபாலிப்பதை—நடத்தி வந்தான். சிறிதும் பாவமின்றி வாழ்க்கையை நடத்தி, கடைசியில் யமனுலகம் சென்றான்.

33. மால்மகன் வரையப் பட்டு வந்தவ னிவனே யென்றேம்
சாலவே மூன்று மாண்டில் செல்லுவான் கால னூடு
ஏலவே இவன்பின் ஜன்மம் இயம்புவோம் விரிஞ்சி தன்னில்
சீலமாம் கங்கை சேயாய் ஜனிப்பனு மென்று சொல்வோம்.

33. திருமாலின் மகனாகிய பிரம்ம தேவன் அவனே இக்குலத்தில் படைத்திருக்கின்றான். ஜாதகன் ஜனித்த மூன்றும் ஆண்டில் இவன் (தந்தை) மரணமடைவான். இவனுடைய பின்ஜன்மத்தையும் கூறுகின்றேம். விரிஞ்சி புரத்தில் வேளாள வமிசத்தில் பிறப்பான்.

34. அன்னைக்கு முப்பான் ரண்டிலறைந்தனம் கண்டமென்றேம்
தென்முனி புகலு கின்றார் செப்புவோம் ஒன்பா னாண்டு
துன்னிய வயிற்று நோயால் செப்புவோம் கண்ட மொன்று
சின்னங்கள் காணு தாகும் செப்பின வயது தீர்க்கம்.

34. ஜாதகனுடைய தாய்க்கு, அவனுக்கு முப்பத்திரண்டாம் வயது நடைபெறும் போது, மரணமேற்படும். தென்திசையில் வாசம் செய்கின்ற அகஸ்தியர், ஜாதகனுடைய ஒன்பதாம் வயதில் அவனுக்குக் கண்டம் மேற்படும் என்று நாங்கள் எண்ணுகிறேம் என்ற ஆக்ஷேபத்தைத் தெரிவிக்க, வசிஷ்டர், உண்மை; வயிற்று நோயால் அவனுக்கு மரணத்திற்குச் சமமான கண்டம் ஏற்படுமே தவிர அதுவே அவனுக்கு முடிவாகாது. நாம் சொன்ன வருஷங்கள் வரையில் நிச்சயமாக உயிர்வாழ்ந்திருப்பான் என்று பதிலளித்தார்.

35. அறுபது ஏழு ஆண்டில் அணுகிய மகர மாதம்
உரைக்கிறேம் பாலன் கண்டம் உதித்திடும் பித்த பாண்டால்
மறுஜன்மம் காஞ்சி தன்னில் வருகுவான் செங்குந்த னுகப்
பெருவயி ரேணைப் பெற்ற புண்ணிய சாலி கேளாய்.

35. அறுபத்தேழாவது வயதில் தைமாதத்தில் பித்தபாண்டு நோயால் ஜாதகன் மரணமடைவான். இவன் மறுபிறவியில் காஞ்சியில் செங்குந்த வமிசத்தில் பிறப்பான். விநாயகரைப்பெற்ற கருணைக் கடலே! மேலும் கேட்பீராக.

36. இருபது ஒன்ப தாண்டில் இவனுடையப் பெரிய தந்தை
திருமகன் ஜனன மாகச் சேய்தசை ஆண்டு ஒன்றும்
மருவிடும் திங்க ளைந்தும் வரைகிறேம் பால னுக்கு
அருமறை முடிவி லாடும் அம்பிகை புகன்றிட் டோமே.

36. ஜாதகனுடைய இருபத்தொன்பதாவது வயதில் இவனது பெரிய தந்தை இறப்பான். ஜாதகன் மிருகசீரிஷநக்ஷத்திரம் நான்காம்பாதத்தில் ஜனித்திருக்கின்றான். ஆகவே செவ்வாய்த் தசையில் இருப்பு வருஷம் ஒன்று, மாதங்கள் ஐந்து. அரிய வேதங்களின் மகுடத்தில்—உபநிஷதங்களில்—விளங்கும் தத்துவமாகிய தேவியே! இவ்வாறு இச்சாதகத்தின் பலன்களைத் தெரிவித்தோம்.

ஜாதகம் 40

1. பொன்குடம் ராகு நந்தி புகர்குசன் பருதி நண்டில்
துன்சனி புதனும் சீயம் சிஙிதேளில் மதியும் கன்னி
இன்னவாறு கிரகம் நின்று லக்கினம் கடக மாகப்
பன்னுவீர் பலனை நீங்கள் பராசரும் புகலு கின்றார்.

		ராகு	
குரு	இராசி சக்கரம்		லக்கினம் சுக்கிரன் செவ்வாய் சூரியன்
			சனி புதன்
	கேது		சந்திரன்

கர வருஷம் ஆடிமாதம் 26-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவு 26 நாழிகைக்கு மேல் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 9-8-1891.

நவக்கிரஹங்களின் பாதசாரம் :—ஆயில்யம் 3-இல் சூரியன். ஹஸ்தம் 4-இல் சந்திரன். ஆயில்யம் 2-இல் செவ்வாய் (அஸ்தம்). பூரம் 3-இல் புதன். பூரட்டாதி 2-இல் குரு (வக்ரீ). பூசம 4-இல் சுக்கிரன். பூரம் 4-இல் சனி. கிருத்திகை 4-இல் ராஹு. அனுஷம் 2-இல் கேது. நக்ஷத்திரம் ஹஸ்தம். சந்திரதசையில் இருப்பு மாதங்கள் இரண்டு.

1. குரு கும்பம் ராஹு விருஷபம், சுக்கிரன் செவ்வாய் சூரியன் கடகம், சனி புதன் சிம்மம், கேது விருச்சிகம், சந்திரன் கன்னி, இலக்கினம் கடகம். இக்கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக என உமாதேவி கேட்க பராசர முனிவர் கூறுகின்றார்.

2. இந்தச் சேய் ஆணும் ஜன்ம மில்லமும் கீழ்மேல் வீதி
தென்வாசல் தந்தி கீழ்ப்பால் சலகரை மேல்பால் தங்கும்
மன்னர்கள் வாச மாகும் வடபாலில் குண்ட முண்டு
உன்னத நகர மாகும் உயர்குலம் வைசிய சேயாய்.

2. இக்கிரஹ நிலையில் பிறந்த இவன் ஆண். வீதி கிழக்கு மேற்காக இருக்கும். வீடு, வடவரிசையில் இருப்பதால் தென்திசையை நோக்கும். கீழ்த்திசையில் விநாயகர் விளங்குவார். மேற்குத்திசையில் ஒரு நீர்நிலை உண்டு. அந்த ஊர் மன்னர்கள் வசிக்கு மிடமாகும். வடதிசையில் ஒரு குளமும் உண்டு. அது ஒரு பெரிய நகரம். உயர்ந்த வைசிய குலத்தில் பிறப்பான்.

3. ஜனிப்பனும் சேஷ்ட னுகச் செப்புவோ மிவனின் யோகம்
வனிதையர் அன்னை தந்தை மைந்தர்கள் துணைவர் யோகம்
கனமுள முன்பின் ஜன்மம் கழறுவோம் சாந்தி தானும்
சினமிலா நவநூ லாய்ந்து செப்புவோம் கேளு மென்னே.

3. இவன் குடும்பத்திற்கு மூத்தவனுக ஜனிப்பான். நாங்கள் இந் நாலில் இவனுடைய யோகங்களையும், தாய் தந்தை சகோதரர் மனைவி புத்திரர் இவர்களைப்பற்றியும், முன்பின் ஜன்மங்களைப்பற்றியும், சாந்தி பரிகாரங்களையும் சோதிட சாஸ்திரங்களை நன்கு ஆராய்ந்துச் சொல்லப் போகின்றோம். தாயே! கேளுங்கள்.

வேறு

4. தந்தைதுணை ஆண்காணுன் பெண்பால் ரண்டு
சாற்றுகிறோம் தீர்க்கமதாய் முன்பெண் சேதி
சிந்தையது கலக்கமுண்டு வறுமை காணுள்
சேயர் ஆண் ஒன்றுமே கன்னி அவ்வாறு
அந்தவளா மத்தியத்தில் கயிறி ழப்பாள்
அப்பாவம் பூர்வவினை அணுகிற் றென்றோம்
பிந்திதுணை கீழ்ப்பாலில் வரனு மேவும்
பாலயினம் நொய்குடியாம் சுதர்கள் தோஷம்.

4. ஜாதகனுடைய தந்தைக்குச் சகோதரன் இல்லை. சகோதரிகள் இருவர். இவ்விருவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். முன் சகோதரியின் செய்திகளைத் தெரிவிப்போம். மனத்தில் கலக்க முள்ளவள். வறுமை இல்லாதவள். அவளுக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் பிறப்பார்கள். அவள் வாழ்க்கையின் நடுவில் மாங்கல்யத்தை இழப்பாள். அதற்குக் காரணம் அவள் முன்பிறவியில் செய்த பாவம்தான். பின் சகோதரி கீழ்த் திசையில் வாழ்க்கைப்படுவாள். தரித்திரமுள்ள குடும்பமாகும். அவள் சந்ததி தோஷமுள்ளவளாகவும் இருக்கின்றுள்.

5. முனிசாபம் நேர்ந்ததனுல் சொன்னேம் யாங்கள்
மொழிவதற்குக் கருமசாந்தி முறைபோல் செய்யில்
தணிவாகும் சுதராண்பால் ஒன்று தீர்க்கம்
சாற்றுகிறோம் பின்பால்சேதி விவர மாகக்
கனிவான தந்தைகுணம் மால் நிறத்தன்
கடந்தோர்கள் நேசமுளன் கல்வி மேன்மை
இனமதிப்புக் கொண்டிடுவன் ஊக வானும்
இருஇல்லம் செய்திடுவன் இடுக்க மில்லான்.

5. இளையசகோதரிக்கு முனிவர்கள் சாபமிருப்பதால் புத்திர தோஷமுண்டு. முன்வினைப் பரிகாரமாக நாங்கள் சொல்லும் சாந்தியைச் சாஸ்திர முறைப்படி செய்தால் தீர்க்காயுளுடன் ஒரு பிள்ளை பிறப்பான். இவைகளைப் பற்றிய வரலாறுகளைப் பின் பாகத்தில் அறிவிக்கின்றோம். ஜாதகனின் தந்தையின் குணத்தைக் கூறுகின்றோம். கருத்த மேனியான். நல்ல அனுபவம் வாய்ந்தவர்களின் நட்புக் கொண்டவன். மேலான கல்வியைக் கற்றவன். தன் இனத்தார்களின் மதிப்பிற்குப் பாத்திரமானவன். மதியூகம் வாய்ந்தவன். இரண்டு வீடுகள் கட்டுவான். செய்யும் காரியங்களில் இடையூறுகள் இல்லாதவன்.

6. நவநூலைத் தானுணர்வன் தலங்கள் செல்வன்
நற்புத்தி தூசுச்செட்டு நயப்பாய்ச் செய்வன்
கவனங்கள் செய்திடுவன் கமல ரேகை
கரத்திலுறும் பொறுமையுளன் கடனே கொள்ளான்
பவமிலான் தரணிவிருத்தி பால்மோ ரிஷ்டன்
பதர்சொல்லான் சகடுடையன் பரிந்த சொல்லன்
உவமைசொல்வன் பலர்நாயம் உரைப்பா னுகும்
உறுதியா மனமுடையன் உணவு இஷ்டன்.

6. புதிய சித்தாந்த நூல்களைக் கற்றுணர்ந்தவன். பல புண்ணியஸ்தலங்களுக்கும் யாத்திரை செல்வன். நல்ல புத்தி வாய்ந்தவன். உத்ஸாஹத்துடன் வஸ்திர வியாபாரத்தை மேற்கொள்வன். சுயமாகப் பாடல்கள் இயற்றும் ஆற்றல் படைத்தவன். கையில் கமல ரேகை விளங்கும். பொறுமைசாலி. சிறிதும் கடன் வாங்காதவன். பாவத்தொழிலிலும் ஈடுபடாதவன். பூமிகளை மேன்மேலும் அபிவிருத்தி செய்வான். பால், மோர் போன்ற பொருள்களில் விருப்பம் கொண்டவன். வீண் வார்த்தைகளைப் பேசான். வண்டி வாஹனங்கள் உடையவன். அன்பு கனியப் பேசுவான். உவமை சொல்லி விளங்க வைக்கும் இயல்புடையவன். பலருக்கும் தருமமாக நீதி வழங்குவான். உறுதியான உள்ளம் படைத்தவன். சுகமாகப் புசிப்பதில் பேரவாக் கொண்டவன்.

7. தன்துணையாண் காணுத வண்ணம் சொல்வீர்
சலக்கோளு மிச்சனுடன் சார்ந்த தோஷம்
பின்னமென்றோம் உதித்தவன்தன் குணத்தைக் கேளாய்ப்
பொய்பகரான் பிறர்குற்றம் புகலா னுகும்
அன்னியர்க் குதவிசெய்வன் அற்ப உண்டி
அடுத்தவரை காக்கும்குணம் அறிவுள் ளோனும்
பண்ணுவான் இருகல்வி மேன்மை யாகப்
பலசெட்டுச் செய்திடுவன் பாரும் விருத்தி.

7. இவன் [தகப்பன்] சகோதரனற்று இருப்பதற்குக் காரணம் என்ன? அதைச் சொல்லுவீராக என ஒரு முனிவர் கேட்க, பராசர முனிவர் பதிலுரைக்கின்றுர். சலக்கோள் என்று சொல்லப்படும் சுக்கிரன் சூரியனுடன்

சேர்ந்திருப்பதால் சகோதரர் இல்லாதவன். இனிக் கடகலக்கினத்திலுதித்தவனுடைய குணங்களைக் கூறுவாம். பொய் பேசாதவன். பிறர் குற்றத்தையும் எடுத்துச் சொல்லான். அந்நியருக்கு உதவி புரிவான். சிறிதே உணவுட்கொள்வான். தன்னை அண்டியவர்களுக்கும் உதவி சிறிது செய்வான். சிறந்த அறிவாளியாகவும் திகழ்வான். இருவிதக் கல்விகளைச் சிறப்பாக அப்பியாசம் செய்வான். பலபல வியாபாரங்களைச் செய்வான். நிலங்களையும் அபிவிருத்தி செய்வான்.

8. சொல்மேன்மை துறவிகட் கன்ன மீவன்
தொடுத்ததையே வென்றிடுவன் மாஞ்சி வப்பன்
நல்லவனுய்ப் புகழேற்பன் அரசரிஷ்டன்
நற்றலவா சம் செய்வன் நடையும் நன்மை
அல்லலிலான் முன்கோபி தந்தை மேலாய்
அவனிதனில் புகழேற்பன் ஆவு விருத்தி
மல்லில் செல்லான் மர்மநூ லறிவா னுரும்
மாரனெப்பான் தீரமன மங்கை மோகன்.

8. இவனுடைய வார்த்தைகளுக்கு விசேஷ கௌரவம் இருக்கும். துறவிகளுக்கும் மற்றைய பெரியோர்களுக்கும் பக்தி சிரத்தையுடன் அமுதளிப்பான். தான் ஆரம்பித்த காரியத்தை முழுவதும் நிறை வேற்றுவான். மாநிறம் வாய்ந்தவன். நல்லவன் என்ற கீர்த்தியைப் பெறுவான். அரசர்களுக்கும் நண்பனுவான். நல்ல புண்ணிய ஸ்தலங்களில் வாசம் செய்வான். நல்ல நடக்கை உடையவன். வாழ்க்கையில் இடையூறுகள் இல்லாதவன். சிறிது முன்கோபமுண்டு. தந்தையைக் காட்டிலும் அதிகம் புகழ் பெற்றவனுக விளங்குவான். கால்நடைகளும் இவனிடம் மிகவும் அபிவிருத்தியை அடையும். சண்டை சச்சரவுகளில் ஈடுபடாதவன். வேதாந்த நூல்களைக் கற்றறிந்தவன். அழகில் மன்மதனுக் கொப்பானவன். தீரமான மனம் படைத்தவன். மங்கைகளிடம் மையல் கொண்டவனுகவும் இருப்பான்.

9. தன்துணைஆண் தோஷமுறும் கன்னி ரண்டு
சாற்றுகிறேம் தீர்க்கமதாய் இரண்டு சேதம்
என்னகா ரணத்தினுலே துணைஆண் தோஷம்
இயம்புவீர் எட்டோனுய்ச் சனியு மாகி
உன்னுபுதன் முன்ருேனுய்க் கூடி யேதான்
ஒருமூன்று ஈராறில் உறைந்த தாலே
பின்னமாம் ஆண்துணைகள் பேசி னேமே
பிறை மூன்றி லிருப்பதாலே பெண்பால் விருத்தி.

9. இவனுக்குச் சகோதரன் தோன்ருன். இரு சகோதரிகள்தான் உண்டு. அவர்கள் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இவர்களைத் தவிர இரு சகோதரிகள் தோன்றி அழிவார்கள். என்ன காரணத்தினுல் சகோதரன் இல்லை ? இதைத் தெளிவுபடுத்துங்கள், என இவ்வாறு பார்வதி கேட்க, முனிவர் பதிலு ரைக்கின்ருர். மூன்ருமிடத்திற்கு அதிபதியான புதன், அஷ்டமாதிபனுகிய சனியுடன் இரண்டாமிடத்தில்—சிம்மத்தில்—இருப்பதால் ஆண் துணைவர்களில்லை. இதே காரணத்தால் பெண்துணைவிகளும் இருக்க மாட்டார்களன்ருே ! இரு பெண்துணைவிகள் மாத்திரம் உண்டு என்று எவ்வாறு கூறலாம் ? அதற்குக் காரணம் என்ன ? என ஒரு முனிவர் ஆக்ஷேபிக்க, பராசரர் சமாதானம் சொல்லுகிருர். ஸ்திரீகிரஹம் என்று சோதிட சாஸ்திரத்தில் வகுத்துக் கூறப்பட்ட சந்திரன்—வளர்ந்து வருபவன்—இலக்கினுதிபதி—மூன்ருமிடத்தில் இருப்பதால், ஸ்த்ரீதுணை—சகோதரிகள் விருத்தியாவார்கள்.

10. உதித்தவன்தன் மணம்சொல்வோன் பதின்மூன் றில்தான்
உறைகுவாள் அதன்மேல்பால் பாரி வாய்க்கும்
மதிமுகத்தாள் நடைநன்மை மயில்போல் சாயல்
மாநிறத்தாள் அடக்கமுளாள் வருவோர்க் கன்னம்
துதிசெய்து தானீவள் விரத மேற்பள்
சொல்லுலகில் நல்லவளாய்ச் செப்ப லாகும்
பதிபாக்கிய முடையவளாம் யோக சாலி
சான்ருேர்கள் பத்திமிகும் வயது தீர்க்கம்.

10. ஜாதகனின் விவாஹகாலத்தை அறிவிப்போம். பதின்மூன்ருவது வயதிற்கு மேல் விவாஹம் நடை பெறும். அவளுடைய குணம் நிறம் முதலியவைகளைத் தெரிவிப்போம். சந்திரன் போன்ற முகமுள்ளவள். நன்னடக்கை உடையவள். மயில்போன்ற அழகிய தோற்றம் வாய்ந்தவள். மாநிறமுள்ளவள். அடக்க முடையவள். தன் வீட்டை நாடிவந்தவர்களுக்கு, முகமன் கூறி, அமுதளிப்பாள். பலவிரதங்களைச் சிரத்தையுடன் அனுஷ்டிப்பாள். எல்லோரும் இவளை நல்லவள் என்று போற்றிக் கொண்டாடுவார்கள். பால், தயிர் பாக்கிய முடையவள். மிக்க அதிருஷ்டசாலி. நல்லொழுக்கம் திகழும் பெரியோர்களிடம் பக்தி பூண்டவள். இவள் [ஜாதகனின் மனைவி] தீர்க்காளுயுடன் வெகுகாலம் சுகமாக வாழ்வாள்.

வேறு.

11. புத்திர விருத்தி தன்னைப் புகலவே பலத்தை காணும்
சித்தமாய் உதித்தா னும்தான் தீங்காகு மென்று சொல்வோம்
அத்திரி தடுத்துச் சொல்வார் அறையுநீர்ப் புத்திர சங்கை
குத்தத்தைச் சொல்லு மென்னக் கூறுவார் பராசர் தாமும்.

11. இத்தம்பதிகளின் புத்திரர்களைப்பற்றி ஆராய்வோமாகுல் இவர்களுக்குப் பிள்ளைகள் தோன்ருர்கள் என்றே சொல்ல வேண்டும். தோன்றிடினும் அழிவார்கள். இவ்வாறு சொல்லக் கேட்ட அத்திரி மறுத்துச் சொல்லுகின்ருர். புத்திரதோஷத்திற்கான காரணங்களை விவரித்துக் கூறுவீராக என, பராசரர் அடுத்த பாட்டில் விளக்குகின்ருர்.

12. அஞ்சினில் கேது தங்க அஞ்சவன் நீச மாகத்
தஞ்சமாய்ப் பாக்கி யத்தோன் தனக்குமே விரயம் புக்கத்
துஞ்சிடு மதலை யென்ருேம் சேயன்முன் ஜன்மம் தன்னில்
மிஞ்சிய வினை அனேகம் மேவிற்றுப் பாலனுக்கு.

12. புத்திர பாவம் என்று சொல்லப்படும் ஐந்தாமிடத்தில் பாப கிரஹமாகிய கேது தங்கி இருப்பதாலும், ஐந்துக்குடைய செவ்வாய் கடகத்தில் நீசமாக இருப்பதாலும், புத்திர காரகனுகிய குரு, பாக்கியத்திற்கு—விரயஸ்தானம் என்று ஜோதிட சாஸ்திரத்தில் கூறப்படும் எட்டாமிடத்தில் பலமற்று இருப்பதாலும் இச்ஜாதகனுக்கு ஆண் சந்ததி விருத்தி இல்லே. இவ்வாறு கிரஹங்கள் அமைந்திடுவதற்கும் காரணம் என்ன என்ருல் முன்பிறவியில் இவன் ஏராளமாகச் செய்த பாவங்கள்தான் என்று அறிகிருேம்.

13. வினையதைப் புகல்வீரையா மேல்நாட்டில் வெளிகேர ளத்தில்
சினகுல மதிலு தித்துச் சேயர்கள் பாரி யுண்டாய்க்
கனமுள குடும்பி யாகிக் காதலி வாழு நாளில்
பிணேயாக வந்த ஊழைப் பேசுவோம் முனியே கேளும்.

13. அவனுக் கேற்பட்ட வினைகளைச் சொல்லுவீர்களாக என ஒரு முனிவர் கேட்க, பாராசர முனிவர் பதில் உரைத்தார். இவன் முன்பிறவியில் மேல் நாட்டில் கேரள தேசத்தில் பிறந்து மனைவி மக்களுடன் பெரிய குடும்பியாக வாழும் காலத்தில் இவனுக்கேற்பட்ட பாவங்களைப் புகலுகின்றேன். முனியே ! கேளும்.

வேறு.

14. ஆலயம் தன்னில் மாதுவின்போகம் அனுகினன் அதுவோர்தோஷம்
சாலவே இல்லம் சடைவிஷம் வாசம் தான்மகு டத்தினல் வெளியில்
ஏலவே செல்ல அரங்க மெய்தும் ஏகாமல் மயங்கி நிற்கக்
காலன்தன் பதிக்குச் செலுத்தினு னென்ருேம் கலந்தது அவ்வினே
[தானே.

14. தேவாலயத்தில் இவன் ஒரு மாதோடு போகத்தை அனுபவித்தான். இ∴து ஒரு பெரிய பாவமல்லவா ? மற்ருெரு பாவத்தையும் கூறுகின்றேன். இவன் வசித்துவரும் வீட்டில் நெடு நாளாக வாசம் செய்து வரும் பாம்பு ஒன்று தன் தலேயை நீட்டிக் கொண்டு வெளியே செல்லும் போது, இன்னும் வேகமாகச் செல்லும்படி அதை இவன் துரத்த, அது புத்திகலங்கி நிற்கையில், இவன் அதை அடித்து யமனுலகம் அனுப்பிவிட்டான். அந்தப் பாவமும் இவனேப் பிடித்துக்கொண்டது.

வேறு.

15. மறையவர் சாபம் மருவிற்று என்ருேம்
மைந்தனும் அந்தியம் தன்னில்
உறும்சுதர் நீங்கிப் பிணியினல் மாண்டு
உதிப்பனு மிக்குலம் தன்னில்
வரும்சுதர் தோஷம் மருவிடு மென்ருேம்
வரைகிருேம் வினதீரச் சாந்தி
அரவுமே சிலேயில் நீர்க்கரை வடபால்
அரசின்கீழ் விதிபோலே செய்து;

15. வேதமோதும் அந்தணர்களிடமும் இவன் அபசாரப்பட்டதால் அவர்களுடைய சாபமும் இவனுக்கு நேரிட்டது. ஆகையால் அந்தியத்தில் பிள்ளேயற்றவனுக மாண்டான். அவனே இங்குக் கடகலக்னத்தில் பிறந்திருக்கின்ருன். முன்ஜென்ம வினே இவனேச் சூழ்ந்துக் கொண்டிருப்பதால் புத்திர தோஷமுண்டு. ஆனுல் அவ்வினே தீர்ந்து சந்ததி ஏற்படுவதற்கு ஒரு சாந்தியைச் சொல்லுகின்ருேம். சிலேயில் ஒரு நாகத்தைச் செய்து அதை, ஆறு குளம் முதலிய நீர் நிலேயின் வடகரையிலுள்ள அரசமரத்தின் அடியில் சாஸ்திர முறைப்படிப் பிரதிஷ்டை செய்து;

16. அக்கினி இருக்கி பாரியும் தானும்
அனுகியே தீர்த்தமும் தோய்ந்து
தக்கவே கிரியை வலமதாய் வந்து
சங்கரர்க் கரிச்சித்து மேலும்
மூக்கிய மறையோர் மூவொன்பான் பேர்க்கு
முதவுவாய் அன்னமு மென்ன
வக்கிரம் நீக்கிச் சுதராண்பால் ஒன்று
மங்கைமார் மூவரும் தீர்க்கம்.

16. தானும் மனைவியும் தீர்த்தத்தில் நீராடி பிரதிஷ்டை செய்யப்பட்ட சர்ப்பத்தையும் அசுவத்த நாராயணனையும் [அரச மரத்தையும்] வலம் வந்து, அதன் பிறகு சிவபிரானுக்கு அபிஷேகம், அர்ச்சனே, நைவேத்யம் முதலியவைகளேச் சமர்ப்பித்து, பிறகு வேதமோதி ஆசார சீலர்களான இருபத்தேழு பிராம்மணேத்தமர்களுக்குப் பக்தி சிரத்தையுடன் அமுதளிப்பானுல் இவனுடைய பாவம் நீங்கி ஓர் ஆண் குழந்தை பிறக்கும். இவனேத் தவிர மூன்று பெண்களும் பிறப்பார்கள். ஆக இந்நால்வரும் நீண்ட ஆயுளுடன் சுகமாக வாழ்வார்கள்.

17. மாதுரு குணத்தை வரைகிருே மினிமேல்
மாநிற முடையவ ளாகும்
ஓதுவாள் சுகமாய் வரனுக் கொத்தோள்
உதித்தஇல் தென் திசையாகும்
காதலி யோகசாலியே யாகும்
கடவுளர் பத்தியே பூண்பள்
பாதக மிலாள் துணேஆண்பா லொன்று
பருகிடும் பூர்வமே பகர்வோம்.

17. இனி ஜாதகனின் தாயின் குணத்தைக் கூறுவோம். மாநிறமுள்ளவள். இனிமையாகப் பேசுவாள். தன் கணவன் இஷ்டப்படி நடப்பவள். அவள் பிறந்த வீடு தென்திசையில் உள்ளது. மிகவும் அதிருஷ்டமுடையவள். கடவுள் (மூர்த்தி) களிடம் வேற்றுமையின்றிப் பக்திபூண்டவள். பாவத்தில் சிறிதும் ஈடுபடாதவள். அவளுக்கு ஒரு சகோதரன் உண்டு. இவளுடைய பூர்வஜன்மத்தைக் கூறுவோம்.

வேறு.

18. சேதுவில் தீயின் வமிசம் ஜனித்துமே வறுமை யின்றிக்
காதலன் வறுமை யுண்டாய்க் கடந்தபேர்க் கன்ன மீந்து
மேதினில் பவமில்லாமல் மேவினுள் கால னுடு
மாதவன் வரையப் பட்டு வந்தவளிவளே யென்றேம்.

18. இவள் முன்பிறவியில் சேதுவில் வன்னியகுலத்தில் ஜனித்து, வறுமை இல்லாதவளாக வாழ்ந்து வந்தாள். கணவனை இழந்து அந்தியத்தில் பெரியோர்களுக்கு அமுதளித்தாள். ஒருவித பாவத்திலும் ஈடுபடாதவளாகவும் இருந்தாள். அந்தியத்தில் இறந்த இவளைப் பிரம்மதேவன் இங்குப் பிறப்பித்திருக்கின்ருன். அவள்தான் ஜாதகனுக்குத் தாயாக நேர்ந்திருக்கிருள்.

19. மறுஜன்மம் கொச்சி தன்னில் மருவுவாள் செளராஷ்டர வமிசம்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வதி வாழ்வா ளாகும்
உரைக்கிறேம் தந்தை பூர்வம் உயர்மலை பழனி தன்னில்
திருகிலாக் கங்கை சேயாய் ஜனித்துமே கிருஷி செய்தான்.

19. இவளுடைய மறுஜன்மத்தையும் கூறுவோம். இவள் மறுபிறவியில் கொச்சியில் செளராஷ்டிர வமிசத்தில் பிறந்து லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றுச் சுகமாக வாழ்வாள். தந்தையின் முன்ஜன்மத்தைக் கூறுவோம். இவன் முன்பிறவியில் சிறந்த மலைக்ஷேத்திரமாகிய பழனியில் குற்றமற்ற வேளாள வமிசத்தில் பிறந்து விவசாயம் செய்து ஜீவித்து வந்தான்.

20. வெறுத்தபேர்க் குதவி செய்து மார்க்கத்தில் தாகப் பந்தல்
சாதித்துச் சேது சென்று சண்டன்தன் பதிக்கு புக்கிப்
புத்தியாய்ச் செப்பு வோம்யாம் இவன்பின் ஜன்மம் தன்னை
சத்தியாய்ப் பிரயாகை தன்னில் ஒப்புடன் பிரம்ம சேயாய்
(உறைகுவானென்று சொல்வோம்).

20. உலக சுங்களைத் துறந்து சந்நியாசம் பூண்ட பெரியோர்களுக்குத் தொண்டுபுரிந்தான். ஜனங்களின் நன்மைக்காகப் பாதையில் தாகப் பந்தல்களை நிறுவினன். க்ஷேத்திரங்களுள் சிறந்த சேதுவிற்குச் சென்று நீராடினன். கடைசி வயதில் மரணமடைந்து இப்பொழுது கடக லக்கின மகனுக்குத் தந்தையாக வாய்த்திருகின்ருன். இவன் மறு பிறவியில் பிரயாகை க்ஷேத்திரத்தில் பிராம்மண குலத்தில் பிறப்பான்.

21. இந்தவோர் ஜன்மம் தன்னி லிவன்செய்த புண்ணிய மென்ன
முந்தவே கூறு மென்ன மேதினில் நல்லோ னுயும்
சிந்தையும் நல்ல தாயும் தேறின புத்தி யாயும்
கந்தன்மேல் பத்தி யாயும் கனத்ததோர் தலங்கள் சென்ருன்.

21. மறு பிறவியில் பிராம்மண குலத்தில் பிறப்பதற்கான புண்ணியம் இப்பொழுது என்ன செய்திருக்கிருன். சொல்லுங்கள் என ஒரு முனிவர் கேட்க, பராசரர் பதில் உரைக்கின்ருர். இவன் இப்பிறவியில் எல்லோருக்கும் நல்லவனுக நடந்து கொண்டான். மனத்தில் தூய்மையுடன் வாழ்ந்தான். நல்ல விவேகம் படைத்திருந்தான். சுப்பிரமணியசுவாமியிடம் அதிக பக்தி பூண்டிருந்தான். பெரிய புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்ருன்.

22. அறமதி லிச்சை யாயும் அவனுமே வாழ்வ தாலே
உறைகுவான் முதல்கு லத்தில் உரைக்கிறே மன்னை கேதான்
மர்மமாய் நாற்ப தாண்டில் மடிவனே அன்னைத் தானும்
குருதசை ராகு புத்தி கூடிடு மந்தக் காலம்.

22. தருமம் செய்வதில் ஆர்வமுள்ளவனுகவும் வாழ்வதால் பிறவியில் இவன் நிச்சயமாகப் பிராம்மண குலத்தில் பிறப்பதற்கு தகுதி வாய்ந்தவன். ஆகையால் பிராம்மண குலத்தில்தான் பிறப்பான். ஜாதகனுடைய அன்னையின் மரண காலத்தை அறிவிக்கின்றேம். ஜாதகனுக்குக் குரு தசையில் ராகு புத்தி நடைபெறும்போது இவனுடைய நாற்பதாவது வயதில் ஜாதகனின் தாய் மரணமடைவாள்.

23. அறுபது ஒன்ப தாண்டில் அழகிய கன்னி மாதம்
திருமக னுடலம் ஏகும் ஜயமுனி தடுத்துச் சொல்வர்
அரவுதன் தசையி லேதான் அணுகிடும் மார கங்கள்
வருமாறு சொல்லு மென்ன மதிக்குமே ஆறில் பொன்னேன் ;

23. அறுபத்தொன்பதாவது வயதில் புரட்டாசி மாதத்தில் இக் கடக லக்கின மகன் தேக வியோகமடைவான். பராசர முனிவர் இவ்வாறு தீர்க்காயுளைச் சொல்லக்கேட்ட ஜயமுனிவர் மறுத்துக் கூறினர். ஜாதகனுக்கு ராகு தசை நடைபெறுகையில் [ஏழு வயதிற்கு மேல் இபத்தைந்து வயதிற்குள்] பல மாரகங்கள் நேர்ந்திருக்குமே! [அவைகளில் ஏதாகிலும் ஒன்றிற்குப் பலியாகி இருப்பான் என்பது கருத்து] ஏனெனில் இலக்கினதிபதியாகிய சந்திரனுக்கு ஆருமிடத்தில் குரு தங்கி இருப்பதால் ;

24. இருப்பதால் கண்ட தோஷ மியம்பினேம் முனியே யாங்கள்
கருமத்தோன் புகரி னேடும் கலந்துமே ஜன்மம் தங்க
அருணனு மிரண்டில் தங்க அந்தண னிரண்டைப் பார்க்க
உருமகள் தாய்தந் தைக்கு உத்தமன் செய்வா டனுகும்.

24. இவனுக்குப் பல கண்டங்கள் வரும். இந்த ஆக்ஷேபத்திற்குப் பராசர முனிவர் வேறு காரணங்களைக் கொண்டு "இவன் தீர்க்காயுள் வாய்ந்தவன் தான்" எனச் சமாதானம் கூறுகின்ருர். இவன் தன் தாய் தந்தையர்களுக்குத் தன் கையினுல் ஈமச் சடங்குகள் செய்வதற்குப் பாக்கியம் பெற்றவனுக இருக்கின்ருன். அஃதெவ்வாறு எனில், கருமாதிபதியாகிய செவ்வாயும் நான்காமிடத்திற்கதிபதியாகிய சுக்கிரனும் லக்கினத்தில் தங்கி இருப்பதாலும், விரயஸ்தானதிபதியாகிய புதன் குடும்பத்தில் இருக்க அவனைப்பாக்கியத்தோன் பார்ப்பதாலும் இவன் தன் கையால் தாய்தந்தையர்

களுக்குக் கருமம் செய்வான். ஆகையால் ராகுதசையில் ஏற்படும் கண்டங்களால் இறக்கமாட்டான். நாம் சொன்ன ஆயுள் வரையில் நிச்சயமாக வாழ்வான்.

25. தீர்க்கமாம் வயது முண்டு செப்புவோ மிவன்பின் ஜன்மம்
ஏற்கவே காளாத்தி தன்னி லிறங்குவா னிக்குலத்தில்
ஆர்க்கவே யிவனின் யோகம் அம்புலி போலே யோங்கும்
நாற்பதா யிரம்பொன் சேர்ப்பன் நடத்துவான் பரியும் வண்டி.

25. ஆகையால் தீர்க்காயுளுடன் வாழ்வான். இவனுடைய பின் பிறவியையும் கூறுவோம். இவன் மறு பிறவியில் காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் இதே ஜாதியில் பிறப்பான். ஜாதகனுடைய யோகம் ஒவ்வொருநாளும் வளர்பிறைச் சந்திரனைப்போல ஓங்கி வளரும். இவன் நாற்பதாயிரம் பொற்காசுகள் சம்பாதிப்பான். குதிரைவண்டி முதலிய வாஹன வசதிகள் உடையவனுகவும் ஆவான்.

26. பலவித வாணிபம் செய்வன் பரவுப காரம் செய்வன்
நிலையது மூன்று செய்வன் நிருபர்கள் மெச்ச வாழ்வன்
தலம்திருப் பணியும் செய்வன் சாற்றின மொழிகுன் றுவே
மலையிறை மகளே பின்பால் வழுத்துவோம் விவரம் தன்னே.

26. பலவித வியாபாரங்களைச் செய்வான். பிறர்க்கு உபகாரம் செய்து புகழையும் புண்ணியத்தையும் சம்பாதிப்பான். மூன்று வீடுகள் கட்டுவான். அரசர்கள் மதிக்கும் வகையில் வாழ்வான். புண்ணிய க்ஷேத்திரங்களில் கோயில்களுக்குத் திருப்பணி செய்வான். நாங்கள் சொன்ன மொழிகள் தவரு. பர்வதராஜனின் மகளே! பின்பகுதியில் இன்னும் அதிக விவரங்களைச் சொல்லுவோம்.

27. அன்னவன் ஜனன காலம் அத்தனுள் கடைபா தத்தில்
சந்திரன் தசையி ருப்புத் தங்கிடும் திங்கள் ரண்டும்
சொன்னனே பூர்வ பாகம் தோகைக்கு பிணியு மெய்தும்
கன்னன மொழியை யொக்கும் காதலி கேட்டிடாயே.

27. ஜாதகன் ஹஸ்த நக்ஷத்திரம் நான்காம்பாதத்தில் ஜெனித்திருக்கின்றான். ஆகவே சந்திர தசையில் இருப்பு மாதங்கள் இரண்டுதான். இந்த இரண்டு மாதங்களில் ஜாதகனுடைய தாய்க்குச் சிறிது நோய் காணும். கரும்பு போல் இனிய மொழிகளைக் கூறும் தேவியே! மேலும் எங்களைக் கேளுங்கள்.

ஜாதகம் 41

1. அலவனும் ஜனன மாக அந்தணன் சேயும் தங்கப்
புலவனும் பானுரண்டில் புகர்மூன்றில் கேது ஐந்தில்
கலைஏழில் காரி ஆறில் கார்க்கோடன் லாபம் தங்கப்
பலனதைப் புகலு மென்று பார்வதி கேட்க லுற்ருள்.

		ராகு	
	இராசி சக்கரம்		லக்கினம் குரு செவ்வாய்
சந்திரன்			புதன் சூரியன்
சனி	கேது		சுக்ரன்

1. குரு செவ்வாய் கடகம், புதன் சூரியன் சிம்மம், சுக்ரன் கன்னி, கேது விருச்சிகம், சந்திரன் மகரம், சனி தனுஸ், ராகு விருஷபம். இக்கிரக நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி தேவி கேட்கலுற்ருள்.

2. பிருகுமே புகலு கின்ருர் பலன்களை மகனின் ஜன்மம்
வருமில்லம் வடதென் வீதி வாசலு மிந்திர நோக்கம்
அரன்கோஷ்டம் கீழ்ப்பா லாகும் யானையின் கோஷ்ட மேற்கில்
நரிவாக னத்தாள் மஸ்தான் நல்கிடும் வடபா லாக.

2. பிருகு மஹரிஷி பலன்களைக் கூறுகின்ருர். இவன் பிறந்த வீதி வடக்குத் தெற்காக அமைந்திருக்கும். வீடு மேல்வரிசையில் இருப்பதால் கிழக்குத் திசையை நோக்கும். கீழ்த்திசையில் சிவபிரான் ஆலயம் திகழும். மேற்கில் யானைமுகத்தோனின் கோஷ்டம் விளங்கிடும். வட திசையில் காளிகோயிலும் மசூதியும் தங்கி இருக்கும்.

3. இன்னமும் பலதே வாசம் இலகிய சமஊ ராகும்
அன்னவன் செங்குந்த வமிசம் அருளுவா னென்று சொல்வோம்
தன்துணை களத்திரப்புத்திரர் தாய்தந்தை யுதித்தோன் யோகம்
முன்பின்ஜன் மங்கள் யாவும் உரைக்கிறே மிந்நூல் தன்னில்.

3. இன்னும் பல தேவாலயங்களும் அவ்வூரில் விளங்கும். அஃது ஒரு நடுத்தர ஊராகும். இச்சாதகன் செங்குந்த வமிசத்தில் பிறந்தவன். தேவியே! இந் நூலில், ஜாதகனுடைய யோகத்தைப்பற்றியும், தாய் தந்தை சகோதரர் மனைவி புத்திரர் இவர்களைப்பற்றியும், முன்பின்ஜன்மங்களையும் நாங்கள் தெரிவிக்கப்போகின்றேம்.

4. இவன்பிதா குணத்தைச் சொல்வே னின்பச்சொல் மாநி றத்தான்
தவனிலே யோர்க்கு நேயன் தரித் தொழில் புரிவா னுகும்
பவமன மில்லான் நல்லன் பரிந்துப சாரம் செய்வன்
நவனியில் பொய்கள் சொல்லான் நாயகி யிஷ்ட னுவன்.

4. ஜாதகனின் தந்தையின் குணத்தைக் கூறுவேன். இவன் (தந்தை) இனிமையாகப் பேசுபவன். மாநிறம் வாய்ந்தவன். தவசிகளிடம் பக்தி கொண்டவன். நெசவுத் தொழிலைச் செய்து ஜீவிப்பான். கபடமில்லாதவன். மிகவும் சாது. வந்தவர்களுக்குப் பரிவுடன் உபசாரம் செய்வான். பொய் பேசாதவன். மனைவியிடத்தில் மிகவும் அன்புள்ளவன்.

5. அறுமுகன் பத்தி கொள்வன் அவசர மனத்த னுகும்
குருஉப தேசம் கொள்ளான் குணமது இரண்டு முண்டு
வரும்துணை ஆண்பால் தோஷம் மங்கையு மொருத்தி தீர்க்கம்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

5. ஆறுமுகனிடம் விசேஷ பக்தி பூண்டவன். முன் பின் யோசியாமல் அவசரப்பட்டுப் பேசுவான். செயலிலும் இறங்குவான். பெரியோர்களிடம் உபதேசம் கேளாதவன். நற்குணங்களும் சிறிது தீயகுணங்களும் உண்டு. இவனுக்குச் சகோதரன் இல்லை. ஒரு சகோதரி நீண்ட ஆயுளுடன் வாழ்வாள். கணேசரைப்பெற்ற தேவியே! மேலும் கேளுங்கள்.

6. இந்நெறி உடையா னுக்கு இப்பால னுதிப்பானுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அவனிரு நிறத்தா னுகும்
தன்னுடல் மெலின முண்டு ஷண்முகன் பத்தி பூண்பன்
பின்னமில் லாத தேகி பிதாசுக மில்லானுகும்.

6. இவ்வாறு குணங்கள் அமைந்த மனிதனுக்கு இந்த ஜாதகன் மகனுகப் பிறந்திருக்கின்றுன். ஜாதகனுடைய குணத்தைக் கூறுகின்றேன். கறுத்த மேனியான். மெலிந்த உடலுடையவன். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி உடையவன். சிறிதும் ஊனமில்லாத சரீரமுடையவன். தந்தையினுல் சுகமடையாதவன்.

7. கல்விமானுகை யுண்டு கசடரை யுறவு கொள்ளான்
நல்லவ னுகி வாழ்வன் நவின்றிடான் கட்டு வார்த்தை
அல்லல்கள் அதிகம் உண்டு அவசர மனத்த னுகும்
தல்லிபால் பெருமை யேற்பன் தறித்தொழில் புரிவா னுகும்.

7. கல்வியறிவு உள்ளவன். சிறந்த மதியூகியாக இருப்பான். துஷ்டர்களின் நட்புக் கொள்ளாதவன். எல்லாருக்கும் நல்லவனுக வாழ்வான். அடுக்குச்சொற்களைப் பேசாதவன். வாழ்க்கையின் முற்பகுதியில் பல கஷ்டங்களை அனுபவிப்பான். அவசர மனம் படைத்தவன். தாயினுல் பெருமையை அடைவான். இவனும் நெசவுத்தொழிலையே நடத்தி ஜீவிப்பான்.

8. தரணியைச் சேர்ப்பா னுகும் சஞ்சல மனத்த னுகும்
விரைவினில் நடக்க வல்லன் வெஞ்சமர் தன்னில் செல்லான்
குறையென்றேர்க் குதவி செய்வன் கொடுமையை வெளிக்காட்
[டாதான்
திருமாலின் நாமம் கொள்வன் சிலசில வாணிபம் செய்வன்.

8. அதிக பூமிகளைச் சம்பாதிப்பான். உறுதியில்லாமல் சஞ்சலப்படும் மனம் படைத்தவன். இவனது நடை துரிதமாக இருக்கும். கெட்டவழியில் செல்லாதவன். எளியவர்களுக்கு உதவிபுரிவான். கோபம் தோன்றிடினும் வெளிக்காட்டாதவன். விஷ்ணுவின் பெயர் கொண்டவன். சிற்சில வியாபாரங்களையும் செய்வான்.

9. கடன்கொள்வன் நிவர்த்தி செய்வன் கரமதில் கமல ரேகை
விடவாக்குச் சங்கு சக்ரம் மேவிடும் வெளிம யக்கன்
உடன்துணை ஆண்பா லொன்று உரைக்கிறேம் தீர்க்கமாக
மடமயில் பெண்பா லொன்று மத்தியில் நசிக்கு மென்றேம்.

9. கடன் ஏற்பன். ஆனுல் நிவருத்தி செய்வான். கையில் கமலரேகை வாய்ந்தவன். இவனது வாக்கால் தீமைகளைக்கூறினுல் பலிதமாகும். சங்கு சக்கரரேகைகளும் கைகளில் திகழும். ஆடம்பரப்படுத்தும் இயல்புள்ளவன். இவனுக்குத் தீர்க்காயுளுடன் வாழும் சகோதரன் ஒருவன் உண்டு. ஒரு சகோதரியும் இருப்பாள். ஆனுல் அவள் வாழ்க்கையின் மத்தியில் இறப்பாள்.

10. சொல்லிய ஆண்பா லும்தான் சுதனுக்கு இளையோ னுகும்
வல்லிவன் தந்திர வார்த்தை மர்மத்தை வெளிக்காட் டாதான்
புல்லிய புத்தி கொஞ்சம் பேதையர் மோக னுவன்
வெல்லும்சொல் வெகுளி யாவன் வித்தையும் சமம தாகும்.

10. நாம் சொன்ன சகோதரன் ஜாதகனுக்கு இளையவன். அவன் தந்திர வார்த்தைகளைப் பேசுவான். ரஹஸ்யத்தை வெளியிடமாட்டான். சிறிது கீழான புத்தியுள்ளவன். பெண்களிடம் மோகம் வாய்ந்தவன். இவன், பேச்சினுலேயே காரியத்தைச் சாதிப்பான். ஆனுல் தன் மனத்தில் தோன்றிய எண்ணங்களை ஒளிக்காமல் சொலலுவான். உலக வியவகாரங்களுக்குப் போதுமான கல்வியறிவு உடையவன்.

11. குலத்தொழில் புரிவா னுகும் குண்டைகோ விருத்தி யற்பம்
விலைமாதர் மோகம் கொள்ளான் மேதினி விருத்தி செய்வன்
கலகத்தைக் கூறு நெஞ்சம் கண்முகம் வசிய முண்டு
நிலையதைக் காப்பா னுகும் நினைத்ததை முடிக்க வல்லன்.

11. குலத்தொழிலாகிய நெசவுத்தொழிலால் ஜீவிப்பான். பசு காளை கள் இவனிடம் அதிகம் விருத்தியடையா. வேசிகளிடம் மையல் கொள்ளாதவன். பூமிகளை அபிவிருத்தி செய்வான். சிறிது கலகமூட்டும் வார்த்தையுண்டு. பிறரை வசப்படுத்தும் கண்களும் முகமும் வாய்ந்தவன். பிதுரார்ச்சிதமான வீட்டை அபிமானத்துடன் பாதுகாப்பான். தான் எண்ணிய காரியங்களை நிறைவேற்றும் ஆற்றல் படைத்தவன்.

12. பாரியு மொன்றே யாகும் பாலர்கள் ஆண்பால் ரண்டு
கூறுவோம் பெண்பா லவ்வாறு குறிக்கிறேம் தீர்க்க மாக
மாரனே டொத்து வாழ்ந்து விலகுவான் வேற தாக
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

12. அவனுக்கு மனைவி ஒருத்திதான். அவளுக்கு இரு பிள்ளைகளும் இரு பெண்களும் பிறப்பார்கள். அந் நால்வரும் தீர்க்கமாக வாழ்வார்கள். அவன் (தம்பி) ஜாதகனுடன் சிறிதுகாலம் ஒன்ருக வாழ்ந்து, பிறகு தனிக் குடும்ப மேற்பன். சுப்பிரமணிய சுவாமியைப் பெற்ற அன்னையே ! மேலும் கேளுங்கள்.

13. இன்னவன் மணத்தின் கால மியம்புவோ மிருபான்மூன்று
கன்னிகை உள்ளூர் கீழ்ப்பால் கலப்பளாம் குணத்தை சொல்வேன்
தன்னினத் தவரைக் காப்பள் தயவாளி யிள்ம னத்தள்
முன்கோபம் உடனே தாழ்வு உயர்வான புத்தி யேற்பள்.

13. ஜாதகனுடைய மணத்தின் காலத்தைக் கூறுவோம். இருபத்து மூன்ருவது வயதில் விவாகம் நடைபெறும். மணப்பெண் இவன் வசிக்கும் ஊரிலேயே கிழக்கில் ஜனித்திருக்கின்ருள். அவளுடைய குணத்தையும் தெரிவிக்கின்றேன். தன் ஜாதியாரை அன்புடன் ஆதரிப்பாள். எல்லோரிடமும் கருணைகொண்டவள். இளகியமனம் படைத்தவள். முன்கோபமுள்ளவள். ஆனுல் உடனே சாந்தியடைவாள். உதாரபுத்தி உடையவள்.

14. அடக்கமும் புத்தி மேன்மை அடைந்தோரை ஆத ரிப்பள்
நடக்கையும் நல்ல தாகும் நளினமாய் வார்த்தை கூறுவள்
தடைசொலாள் வரனுக் கேதான் சார்ந்திடும் நாபிச் சூடு
கொடியிடை யோக சாலி கோதைக்கு வயது தீர்க்கம்.

14. மனத்தில் அடக்கம் வாய்ந்தவள். மதிநுட் பம் உடையவள். தன்னை அண்டியவர்களை ஆதரிப்பாள். நன்னடக்கை உடையவள். இனிமையாகப் பேசுவாள். தன் கணவனின் உத்தரவுப்படியே நடப்பாள். நாபி சூடு உடையவள். அவள் மிகவும் அதிருஷ்டமுடையவள். நீண்ட ஆயுளுடனும் வாழ்வாள்.

15. புத்திர விருத்தியில்லாள் புகழ்ச்சியாய் உதித்தா னும்தான்
தீங்காகு மென்று சொல்வோம் குற்றத்தைச் சொல்லு மென்னக்
கேதுவு மஞ்சில் தங்கப் பத்தினுக் குடையோன் நீசம்
பதிந்ததால் சொன ஞேம் யாங்கள்சந்ததி இல்லை யென்று.

15. புத்திரபாவத்தைப்பற்றி ஆராய்ந்தால் புத்திரபாக்யம் தோன்ருது என அறிகின்ருேம். புத்திரர்கள் உதிப்பினும் நீடித்து வாழார்கள் என்று உறுதியாகச் சொல்லுவோம். அதற்கென்ன காரணமெனக் கேட்க, பிருகு முனிவர் கூறுகின்ருர். ஐந்தாமிடத்தில் பாபகிரஹமாகிய கேது இருக்கின்ருன். ஐந்தாவது பத்தாவது ஸ்தானங்களுக்கு உடையவனுகிய செவ்வாய் நீசமாக இருக்கின்ருன். ஆகையால் இவனுக்குச் சந்ததி இல்லை.

16. இதுவின்றிப் பூர்வம் தன்னிலிவன்சில கொடுமை செய்தான்
அதனுலே புத்திர தோஷம் அறிவிப்பீ ரந்தச் சங்கை
அதிபன்முன் ஜன்மம் சொல்வேன் மாயூரமருகில் கீழ் பால்
நதிகுலம் தனிலு தித்து ாயகி மதலை யுண்டாய்.

16 இவ்வாறு கிரஹங்கள் அமைவதற்குக் காரணம், இவன் முன் பிறவியில் சில கொடுமைகள் செய்ததேயாம். ஆகையால் கிரஹங்கள் மேலே சொன்னவாறு அமைந்து இவனுக்குச் சந்ததியின்மையைத் தெரிவிக்கின்றன. ஒரு முனிவர், அவனுக்கேற்பட்ட வினையைச் சொல்லும்படி கேட்க, பிருகுரிஷி சொல்லுகின்ருர். இவன், முன்பிறவியில் மாயூரத்திற்கு அருகில் கீழ்த்திசையில் ஓர் ஊரில் வேளாள வமிசத்தில் பிறந்து, மனைவி மக்களுடன்;

17. பெரிதான குடும்பி யாகிப் பூமியால் ஜீவித் தேதான்
வரு நாளில்வினையைச் சொல்வேன் மறையோர்க்குப்பொருளை யீந்து
முறியொன்று தீட்டிக் கொண்டு வேந்தர்பால் அதனைக் காட்டித்
தரையதைத் தன்னைக் கொண்டான் சதுர்மறை யோர் வெறுப்பான்
(சொல்லுவார் சாபம் தானும் தோன்றும்பின் ஜன்மம் தன்னில்.)

17. பெரிய குடும்பியாகி பூமிகளை உழுது பயிரிட்டு ஜீவித்துவந்தான். அவ்வாறு வாழும் நாளில் இவன் வேதமோதும் அந்தணர்களுக்குப் பொருளைக் கொடுத்து பத்திரம் தானே எழுதிக்கொண்டு அதை அரசரிடம் காண்பித்து அந்தப் பிராம்மணர்களுடைய நிலங்களை அபகரித்துக்கொண்டான். காரணமின்றி நிலத்தை இழந்த பிராம்மணர்கள் வருத்தமடைந்து சாபமிட்டனர்.

ஜாதகம் 42

1. சந்திரன் மேகு வாகச் சனிகுரு மான தாகப்
புந்திபான் நந்தி யாகப் பூமகன் கேது மேடம்
மந்தரக்கயிறு கோலாம் மழைக்கோளு மீன மாக
இந்தவாறு கிரகம் நின்று லக்கினம் கடக மாக.

சுக்கிரன்	செவ்வாய் கேது	புதன் சூரியன்	
	இராசி சக்கரம்		லக்கினம்
சனி குரு			
சந்திரன்		ராகு	

1. சுபகிருத் வருஷம் வைகாசி மாதம் 12-ஆந் தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் நாழிகை 9-க்கு மேல் 14-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 25-5-1902.

நவக்கிரஹங்களின் பாதசாரம்:—ரோஹிணி 1-இல் சூரியன். மூலம் 4-இல் சந்திரன். கிருத்திகை 1-இல் செவ்வாய் மிருகசீர்ஷம் 3-இல் புதன். அவிட்டம் 1-இல் சனி. ரேவதி 4-இல் சுக்கிரன். உத்தராடம் 3-இல் சனி. சுவாதி 2-இல் ராகு. அசுவினி 4-இல் கேது.

நக்ஷத்திரம் மூலம். கேது தசையில் இருப்பு வருஷம் ஒன்று, மாதம் ஒன்று.

குறிப்பு.—இந்நூலாசிரியர் கருத்தின்படி மிருகசீர்ஷம் 2-இல் புதன். சந்திரன் தனுஸ், சனி குரு மகரம், புதன் சூரியன் விருஷபம், செவ்வாய் கேது மேஷம், ராகு துலாம், சுக்கிரன் மீனம். இலக்கினம் கடகம். இவ்வாறு கிரஹங்கள் நின்றால் என்ன பலன்? சொல்லுவீர்களாக எனப் பார்வதி வினவினாள்.

2. சொல்லுவீர் பலனை என்று சுந்தரி கேட்கும் போது
வல்லவர் வசிஷ்டர் சொல்வர் ஆணது ஜனன மாகும்
இல்லமும் கீழ்மேல் வீதி யமன்பார்வை கீழ்ப்பால் காளி
அல்லலை அகற்று கின்ற யானையின் கோஷ்டம் மேல்பால்.

2. இவ்வாறு பரமேசுவரி கேட்கும்போது தபோமஹிமைவாய்ந்த வசிஷ்ட முனிவர் கூறுகின்றார். இக்கிரஹ நிலையில் பிறந்தவன் ஆண், வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு தென் திசையை நோக்கி இருக்கும். கிழக்குத்திசையில் பத்திரகாளி கோயில் உண்டு. மேற்குத் திசையில் விக்கினங்களைப் போக்குகின்ற விநாயகரது ஆலயமுண்டு.

3. நேரிடும் சிலநாள் சென்று நிகழ்த்துவோம் சிறுவூர்தன்னில்
ஆருவது ஜனன மாகும் அக்கினி குலமே யென்றோம்
மாரன்தன் குடும்பச் சேதி கூறைகிறோ மிந்நூல் தன்னில்
தீரமாயந் தவங்கள் செய்யும் செல்வதி கேட்டி டாயே.

3. இச்சாதகன் பிறந்த சிலநாட்களுக்குப் பிறகு ஸ்தாபிதமாகும். பிறந்த ஊர் சிறியதாகும். வன்னியகுலம். இவன் குடும்பத்திற்கு ஆருவது குழந்தை. தேவியே! நாங்கள் இந்நூலில் அவனது குடும்ப வரலாறுகளை எல்லாம் தெரிவிக்கப்போகின்றோம். கேட்பீராக.

வேறு

4. தந்தைதுணை கூறுகின்றோம் தசமே யாகும்
சாற்றுகிறோம் ஆண்பால்ரண்டு கன்னி அவ்வாறு
இந் நவாறு தீர்க்கமெய்தும் ஆண்பா லும்தான்
இளையவனுய்த் தான்புகல்வோம் ஒன்றாய் வாழ்ந்து
பிந்தியு நாலரண்டதனில வேறாய்ச் செல்வர்
பாகமது மூன்றாகும் தாதை அவ்வாறு
அந்தவர்கள் சேதியெல்லாம் பின்பா கத்தில்
அறிவிப்போம் விவரமதாய் அம்மை கேளாய்.

4. முதலில் தந்தையின் சகோதரபாவத்தைக் கூறுகின்றோம். அவனுக்குப் பத்து உடன் பிறந்தார்கள் தோன்றுவார்கள். அவர்களில் இரண்டு சகோதரர் களும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். சகோதரர் கள் இளையவர் என்றும் சொல்லுவோம். அவர்கள் எல்லோரும் ஒன்றாகவே குடும்பத்தை நடத்துவார்கள். இச்சாதகன் பிறந்து நான்காவது ஆண்டில் குடும்பப் பிரிவினை செய்துகொண்டு தனித் தனியே வாழ்வார்கள். சொத்துக் களும் மூன்று பாகமாகப் பிரிக்கப்படும். அவர்களைப்பற்றிய விவரங்களைப் பின் பாகத்தில் சொல்வோம். அன்னையே! கேளுங்கள்.

5. அம்மையே தந்தைகுணம் மாஞ்சி வப்பன்
அறிவோர்கள் நேசமுறும் சீல னுவன்
நம்பினோர் தம்மைக் காப்பன் கிருஷி செய்வன்
நற்கல்வி ஊக்கமுளன் அடக்க மாவன்
செம்மையாய்க் குடும்பமதை தாதை நாளில்
சிறுகுண்டு அதனபிறகு சபயோ கம்தான்
வெம்புமனம் நிதிகாணுன் பழியு மேற்பன்
வேல்முருகன் பக்திகொள்வன் வீரனுமே.

5. இப்பொழுது தந்தையின் குணத்தைக் கூறுவோம். மாந்தளிர் போல் சிவந்தவன். சிறந்த அறிவாளிகளுடன் நேசம் கொள்வன். நற் சீலம் வாய்ந்தவன். அவனை நம்பினவர்களைக் கைவிடாமல் காப்பாற்று வான். ஊக்கத்துடன் விவசாயம் செய்வான். சிறந்த கல்வி கற்றவன். மதி நுட்பம் வாய்ந்தவன். அடக்கமுள்ளவன். அவன் தந்தை உயிரோடு இருக்கும் வரையில் குடும்பம் செழிப்புடன் விளங்கும். அதன் பிறகு சமமான நிலைதான். சிற்சில சமயங்களில் மனக்கவலையும் ஏற்படும். பண மில்லாதவனுவான். சில அவதூறுகளும் ஏற்படும். வேலாயுதம் தாங்கிய முருகனிடம் விசேஷபக்தி கொண்டவன். வீரம் பொருந்தியவ னுகவும் திகழ்வான்.

வேறு

6. ஆன துணைவர் தலேம்மா அலேச்சல் குடியும் வேருகும்
போமே தந்தம் மத்திப்பிணி தோன்றி நீங்கும் புண்ணியவான்
தீமை யெவர்க்கு மெண்ணுதான் செய்வான் தந்தி கோஷ்டமது
மாமன்னர்கள் மெச்ச உய்வன் மறையோர் நேசம் தான் கொள்
[வன்.

6. இவனுடைய ஐந்து சகோதரர்களால் அலேச்சல் ஏற்படும். குடும்பப் பிரிவினைக்கும் அவர்கள் தான் காரணமாவார்கள். இவனுடைய பற்கள் றுப்போகும். நோய் கண்டு நீங்கும், ஒருவருக்கும் தீமை எண்ணுதவன். விஞயகருக்கு ஒரு கோயில் திருமாணம் செய்வான். அந்தணர்களுடைய நட்பும் இவனுக்கு இருக்கும். அரசர்களும் கொண்டாடும்படி வாழ்வான்.

வேறு

7. கொள்ளவும் விறக வல்லவன் சமர்த்தன்
கொடியிடை மனதுபோல் நேசன்
கள்ளமு மில்லான் கட்டுரை பகரான்
கடந்தோர்க்கு அன்னமு மீவன்
விள்ளவே யுரைப்பன் பூமியும் சேர்ப்பன்
மேன்மையாய்க் கூவனும் செய்வன்
தள்ளிடான் பெரியோர் வார்த்தைகள் தன்னை
சங்கரி கேட்டிடு வாயே.

7. பொருள்களை வாங்குவதினும் விற்பதினும் கெட்டிக்காரன் [பொருள் களின் மதிப்பை நன்கறிந்தவன் என்பது கருத்து.] தன் மனைவியின் இஷ்டப் படி நடந்துகொள்வான். கள்ளமில்லாதவன். அடுக்குச் சொற்களைப் பேசு வதில் விருப்பமில்லாதவன். துறவிகளுக்குச் சிரதையுடன் அமுதளிப்பான். பிறர் சந்தேகிக்க முடியாதபடி தெளிவாகப் பேசுவான். பூமிகளைச் சம்பா திப்பான். பெரிய கிணறு தோட்டம் முதலியவைகளை நிறுவுவான். பெரி யோர்கள் வார்த்தைகளை அவமதிக்காமல் அவைகளின்படியே நடப்பான். ஈசுவரி ! மேலும் கேளுங்கள்.

வேறு.

8. சொன்னஇக் குணத்தா னுக்குத் தோன்று வானிந்தப் பாலன்
அன்னவன் குணத்தைச் சொல்வேனஅழகுளான் சிவந்த
[மேனி
உன்னதக் கல்வி கற்பன் உண்மையா மனத்த னுகும்
மன்னர்க ளுறவு கொள்வன் மாநிலம் விருத்தி செய்வன்.

8. நாம் இப்பொழுது சொன்ன குணமுள்ள மனிதனுக்கு இக் கடகலக்கின மகன் புத்திரனுகத் தோன்றி இருக்கின்றுன். இனி ஜாதக னுடைய குணங்களைக் கூறுவேன். இவன் அழகு வாயந்தவன். சிவந்த மேனியான். மேன்மையான கல்வி கற்பான். உண்மையான உள்ளம் படைத்தவன். அரசர்களுடைய நட்புக் கொண்டவன். சிறந்த நிலங்களை மேன்மேலும் அபிவிருத்தி செய்வான்.

9. பலவிதச் செட்டுச் செய்வன் பணிந்தோரை ஆத ரிப்பன்
குலத்துளோர் மதிக்க வாழ்வன் கோவுகள் விருத்தியுண்டு
நலமதை எவர்க்கும் செய்வன் நாட்டினில் சல்லியம் காணுன்
தலமது வேறு செய்வன் சகடுவா கனமு மேற்பன்.

9. பலவித வியாபாரம் செய்வான். தாழ்ந்தவர்களை [சேவகர்களை] ஆதரிப்பான். தன் குலத்தினர் மதிக்க வாழ்வான். [அவர்கள் வாழ்வதை விட மேலாக வாழ்வான்.] பசுக்களையும் அபிவிருத்தி செய்வான். எல்லோ ருக்கும் இவன் நன்மைகளையே புரிவான்; கடன் இராது. புதியதொரு வீடுகட்டுவான். வண்டி முதலிய வாஹன சௌக்கியங்களும் இருக்கும்.

10. தந்தைமேல் வாழ்வா னுகும் சாராள்கள் சேர்பபா னுகும்
தந்தையின் தந்தை போலே தான்வாழ்வான் ஊக சாலீ
தந்தமும் தரள மொக்கும் சம்பத்து முடைய னுகும்
தந்தைசொல் கடவா னுகும் ஜயமுனி புகலு கின்றுர்.

10. தந்தையைக் காட்டிலும் சிறப்பாக வாழ்ந்திடுவான். அதிகப் பணி யாட்களை அடைவான். இவனுடைய வாழ்க்கை பாட்டனுர் வாழ்க்கை போலச் சிறப்பாக இருக்கும். மிக்க மதியூகியாகவும் இருப்பான். பற்கள் முத்துப் போல் பிரகாசிக்கும். ஐசுவரியம் உடையவனுகவும் விளங்குவான். தந்தை யின் சொல்லை மீருதவன். இவ்வாறு விசேஷப் பலன்களைச் சொல்லக் கேட்ட ஜயமுனிவர் கூறுவார்.

11. யோகமெவ் விதமாய்ச் சொன்னீர் உரைப்பீர்க ளந்தச் சஙகை
பாகனும் பருதி லாபம் பார்மகன் ஆட்சி யாக
மோகமாய்ப் புகரு முச்சம் உயர்குரு சனியு மேழில்
ஆகவே யிருப் பதாலே அளகேச யோக முண்டு.

11. யோக பலன்களைச் சொல்லுவதற்குக் காரணம் என்ன? அதை விளக்குவீர்களாக என, பிருகு முனிவர் பதில் தெரிவிக்கின்றார். குடும்பாதிபனுகிய சூரியனும்புதனும் லாபத்தில் இருக்கிறார்கள். ராஜயோககாரகனுகிய செவ்வாய் பத்தாமிடத்தில் ஆட்சியாக இருக்கின்றான். சுகலாபாதிபதியான சுக்கிரன் உச்சன். சனியும் குருவும் ஏழாவது கேந்திரத்தில் விளங்குகிறார்கள். இவ்வாறு கிரஹங்கள் அமைந்திருப்பதால் இவனுக்கு குபேர யோகமுண்டு.

வேறு.

12. சுனபா யோக மொன்றுண்டு செப்பும் பலன்கள் விசேஷமதாய்க்
கனமாம் புகழும் செட்டுமிகும் கனத்த புத்தி கடவுள்பக்தி
இனமும் மெச்சும் எதிரிகளும் இறக்க மாகும் என உரைத்தோம்
அன்னம் ஈவன் அதிதிகட்கு அடைந்தோர் தம்மை ஆதரிப்பன்.

12. ஸுனபா என்ற ஒரு யோகமும் இவனுக்கிருக்கிறது. ஆகையால் விசேஷ பலன்களைச் சொன்னேம். இன்னும் சில பலன்களையும் தெரிவிக்கின்றோம். கேளுங்கள். இவனுக்குப் பெரிய புகழ் உண்டாகும். வியாபாரம் ஓங்கி வளரும். உதார மனப்பான்மை வாய்ந்தவன். கடவுள் பக்தி பூண்டவன். இனத்தார்களும் இவனைக் கொண்டாடுவார்கள். பகைவர்களும் இவனுக்குப் பணிவார்கள். தாயே! இவன் அதிதிகளுக்கும் மற்றவர்களுக்கும் விசேஷமாக அன்னதானம் செய்வான்.

13. தன்துணை முன்பெண் ரெண்டு தங்கிடும் தீர்க்க மாக
பின்துணை ஆண்பா லொன்று பேதையு மவ்வாறு தீர்க்கம்
அன்னவர் சேதி யாவும் அறிவிப்போம் பின்பால் சேதி
உன்னத வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே.

13. இவனுக்கு மூத்த சகோதரிகள் இருவர். அவர்கள் தீர்க்கமாக வாழ்வார்கள. இவனுக்குப் பின் பிறந்த ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உண்டு. அவர்களும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். அவர்களுடைய வரலாறுகளைப் பின் பாகத்தில் அறிவிப்போம். கணேசரை ஈன்ற அன்னையே! மேலும் கேளுங்கள்.

14. அன்னையின் குணத்தை சொல்வே னழகுளாள் முன்கோ
பத்தாள்
தன்சொலே மேன்மை யாகச் சாதிப்பாள் சமயோ கத்தள்
பின்புத்தி யுடையா ளாகும் பூவையும் தீர்க்க சீவி
பன்னியே பேசு வாளாம் பணிந்தோரை ஆத ரிப்பள்

14. இனி ஜாதகனுடைய தாயின் குணங்களைக் கூறுவோம். அவள் மிகவும் அழகு வாய்ந்தவள். முன் கோபமுண்டு. தான் சொன்னதே சரி என்று பிடிவாதம் செய்வாள். சமயோகம உடையவள்தான். பின்புத்தியுள்ளவள் தீர்க்காயுள் வாய்ந்தவள். பன்னிப் பன்னிப் பேசும் இயல்புள்ளவள். பணிந்தவர்களுக்கு ஆதரவளிப்பாள்.

15. மாந்தளிர் மேனி யாகும் மாதரு இல்லம் தென்மேல்
ஏந்திழை துணைஆண் ரண்டு எய்திடும் கன்னி அவ்வாறு
சேர்ந்திடும் மற்ற தெல்லாம் தோகையின் பூர்வம் கேளாய்ச்
சாந்திநா தீசர் வாழுமந் நகர் தன்னி லேதான்.

15. மாந்தளிர் போன்ற மேனியாள். அவள் பிறந்த வீடு தென் திசையில் உள்ளது. அவளுக்கு இரு சகோதரர்களும், இரு சகோதரிகளும் உண்டு. மற்றைய உடன் பிறந்தார்கள் சேதமாவார்கள். இவளுடைய முன் பிறவியைச் சொல்லுகின்றேன். இவள் முன் ஜன்மத்தில் சாந்தி நாதீசர் எழுந்தருளி இருக்கும் புண்ணிய நகரில்;

16. பிறந்தனள் செங்குந்த வம்சம் பேதைக்கு மதலே யுண்டாய்
சிறந்ததோர் குடும்பி யாகித் தேவிக்குப் பவமில் லாமல்
மறலியின் பதிக்குப் புக்கி மலரயன் வரையப்பட்டு
திருகிரா இக் குலத்தில் ஜனித்தன ளென்று சொல்வோம்.

16. செங்குந்த வமிசத்தில் பிறந்து கணவன் குழந்தைகளுடன் பெரிய குடும்பமுள்ளவளாக வாழ்ந்தாள். சிறிதும் பாவத்தைச் செய்யாமல் வாழ்க்கையை நடத்தி இறந்த இவள் இக்குலத்தில் பிறந்து இப் பாலகனுக்குத் தாயாக நேர்ந்திருக்கின்றாள்.

17. மறுஜென்மம் வள்ளூர் கீழ்பால் மருவிய பேரூர் தன்னில்
உறைகுவா ளிக்கு லத்தில் உயர்வான குடும்ப மேற்பள்
பெரும் தந்தை பூர்வம் சொல்வேன் பட்சியின் மலையி லேதான்
திருமிலா பிரம்ம சேயாய் ஜெனித்துமே கிருஷி செய்து

17. இவள் மறு பிறவியில் திருவள்ளூருக்குக் கீழ்த்திசையிலுள்ளதொரு பெரிய ஊரில் இதே ஜாதியில் பிறப்பாள். பெரிய குடும்பியாகவும் விளங்குவாள். ஜாதகனுடைய தந்தையின் முன் பிறவியைக் கூறுகின்றேன். பக்ஷி தீர்த்தம் என்று சொல்லப்படும் திருக்கழுக்குன்றத்தில் பிராம்மண குலத்தில் விவசாயம் செய்து ஜீவித்து வந்தான்.

18. பாரியு மதலே யுண்டாய் பாக்கிய முடையா னகித்
தீரனும் வாழு நாளில் தந்தை சொல் தடுத்து வாழ்ந்தவன்
காரிகை ஒருத்தி பேரில் காணுத வார்த்தை சொன்னன்
நாரியும் மனவெ றுப்பால் நவின்றிட்ட சாபம் கேண்மோ.

18. மனைவி மக்களுடன் ஐசுவரியம் படைத்தவனுக வாழுங் காலத்தில் இவன் தன் தந்தையின் சொல்லைத் தடுத்தும், மீறியும் நடந்தான. ஒரு பெண் பேரில் அபாண்டமான பழிகளைச் சொல்லி அவளுக்கு அபகீர்த்தியை உண்டுபண்ண, அதனுல் வருந்திய அவள் இட்ட சாபத்தைக் கேளுங்கள்.

19. நிந்தைகள் சொன்ன பாவி நேரும் பின்ஜென்மம் தன்னில்
தந்தங்கள் குறைவதாயும் சல்லிய பாதை யாயும்
முன் சுதர் முதலில் பீடை ஓங்கிடு மென்று சொன்னள்
பின்னமா யந்தச் சாபம் புக்கிற்று இச் ஜென்மத்தில்.

19. காரணமின்றி என்பேரில் நிந்தைகளைச் சொன்ன பாவியாகிய நீ மறு பிறவியில் புத்திரர்கள் உடைந்தவனாகவும், கடன் தொந்தரவுகள் உள்ளவனாகவும், முன் ஜனித்த குழந்தைகளால் கஷ்டத்தை அடைந்தவனாகவும் வாழ்வாய் என அவள் விடுத்த சாபம் இச்சென்மத்தில் இவனைப் பிடித்துக் கொண்டது.

20. தரளமும் குறைவ தாயும் தனமது இல்லா தாயும்
திருகாக வாழ்வா னென்றேம் ஜயமுனி தடுத்துச் சொல்வார்
மறைக்குல முதித்தோ னிங்கு வன்னிய குலத்தே தோன்ற
உறைகுவீ ரந்த சங்கை உரைக்கிறேம் முனியே கேளும்.

20. ஆகையால் பற்கள் தேய்ந்தன. பணமில்லாமல் கஷ்டப் படுவான் என்று முன்னமேயே சொன்னோம். முன் பிறவியில் பிராம்மண குலத்தில் பிறந்த இவன் இப் பிறவியில் வன்னிய குலத்தில் உதிப்பதற்குக் காரணம் என்ன '' என்று ஜெயமுனி கேட்க பிருகு முனிவர் பதில் உரைக்கின்றார்.

21. முன்குலம் தனிலு தித்து வேதங்கள் ஓதா தாலும்
வன்னிய குலத்தில் வந்தான் வரைகிறே மிவன்பின் ஜன்மம்
பின்ஜன்மம் குமரி தன்னில் கலப்பனும் பிரம்ம சேயாய்
அன்னவ னிச்சென் மத்தில் அடைந்தபுண்ணியங்க ளென்ன.

21. முதல் குலமாகிய பிராம்மண குலத்தில் உதித்தும் வேதமோதாமல் இருந்தான். ஆகையால் வன்னிய குலத்தில் பிறந்திருக்கின்றான். இவனுடைய பின் பிறவியைக் கூறுவோம். மறுஜன்மத்தில் இவன் கன்னியா குமரியில் பிராம்மண ஜாதியில் பிறப்பான் எனச் சொல்லக்கேட்ட முனிவர்கள், அதற்கென்ன காரணம் என்று வினவினர்.

22. அறுமுகன் பத்தி யாயும் யானையின் கோஷ்டம் செய்தும்
சிறியோர்கட் குதவி செய்தும் செய்நன்றி மறவா தாலும்
தருமமாம் குணத்த னயும் தரணியில் வாழ்வ தாலே
மறைக்குல முதிப்பானு கும் மங்கையே கேட்டி டாயே.

22. சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டும் விநாயகருக்கு ஓர் ஆலயம் நிர்மாணம் செய்தும் எளியவர்க்கு உதவி புரிந்தும் நன்றியுடனும் இவைகளைத் தவிர நற்குணங்கள் வாய்ந்தவனாகவும் வாழ்வதால் மறு பிறவியில் பிராம்மண குலத்தில் உதிப்பான் தேவியே ! மேலும் கேட்பீராக.

வேறு

23. வந்தவர் மணத்தின் காலமதை
வரையக் கேண்மோ இருபதினில்
தென மேல் பாரி அன்னைவர்க்கம்
சேர்வாள் குணத்தைத் தான் புகல்வோம்
கன்னல் மொழியும் ஈகையுண்டு
கடந்தோர்க் கன்னம் தாளீவள்
சொன்ன மொழியும் சுகமாகும்
சிவந்த மேனி பொறுமை யுண்டு.

23. ஜாதகனுடைய விவாஹ காலத்தை அறிவிக்கின்றோம் ; கேளுங்கள். இருபதாவது வயதில் இவனுக்கு விவாஹம் நடைபெறும். மணப்பெண் தென்மேற்கில் தாய் வர்க்கத்தில் ஜனித்திருப்பாள். அவளுடைய குணத்தைக் கூறுகினறோம். கரும்புபோல் இனிமையான வார்த்தைகளைப் பேசுவாள். தியாக குணம் படைத்தவள். தவசிகளுக்கும் மற்றவர்களுக்கும் அமுதளிப்பாள். சுகமாகப் பேசுபவள். சிவந்த மேனியாள். பொறுமை உடையவளாகவும் இருப்பாள்.

24. பெரிதாய்க் குடும்பி யில்பாக்கியம்
பெறுவள் அழகிற் இனியாளாம்
அறிவோர் புத்தி வறுமையில்லாள்
ஆளன் மனதுக் கேற்றவளாம்
திருமா தொபபாம் வயது நீர்க்கம்
செப்பு மதலை தான்மதித்து
உரைப்பர் அத்திரி பாலனுக்கு
உள்ளபடியே தார மிரண்டு.

24. பெரிய குடும்பியாவாள். அதிக பாக்கியத்தையும் பெறுவாள். அழகிகளில் சிறந்தவள். அறிவாளிகளின் புத்தியை ஏற்றுக்கொள்வாள். வறுமை இல்லாதவள். தன் கணவன் மனத்திற்கேற்றபடி நடப்பாள். லக்ஷ்மிபோன்றவள். தீர்க்காயுள் வாய்ந்தவள். இவ்வாறு சொல்லக்கேட்ட அத்திரி பாலனுக்கு இரு மனைவிகள் ஏற்படுவார்கள் என்று நாங்கள் சொல்வோம்.

25. இருதார மணுகும் காரணம் புகல்வீர்
ஏழிடம் குருசனி யிருக்க
சரராசி யாக நீச்சனுப் பொன்னும்
சர்ப்பமும் நாலிலே தங்க
வருமனை யி ண்டு வரைந்தனம் தாயே
வசிஷ்டரும் தடுத்துமே புகல்வார்
பருதியும் லாபம் பார்க்கவன் பாக்கியம்
பணிமதி நடப்ப தாயிருக்க.

25. இரு மனைவிகள் ஏற்படுவார்கள் என்பதற்குக் காரணம் என்னவென்றால் களத்திர ஸ்தானத்திற்கு உடைய சனி சர ராசியாகிய மகரத்தில் இருப்பதாலும் அங்கு நீச கிரஹமாகிய குரு இருப்பதாலும், சுக ஸ்தானத்தில் அசுபக் கோளாகிய ராகு இருப்பதாலும் இவனுக்கு இரு மனைவிகள் உண்டு. இவ்வாறு அத்திரி சொன்னவுடன் வசிஷ்டர் சொன்னார். குடும்பாதிபதி சூரியன் லாபத்திலும், சுகாதிபதியான சுக்கிரன் பாக்கியத்திலும் [உச்சனாக] இருப்பதால்,

---

குறிப்பு.—மூத்த மனைவி இறந்து மறு மனைவி ஏற்படுவாள் என்பது கருத்து.

26. மறுமனை காணன் மாதுக்கு இருபத்தாறுண்டில்
மங்கிலிய மணிகுவா னென்றேம்
வருயாறு புகல்வீர் சோரரால் சொறிந்து
மறுமுத்திரை அணிகுவா னுகும்
திருகாகும் காலம் செப்புவீர் முனியே
ஜாதகன் முப்பத்தா றுண்டில்
குறைவுறு மென்றேம் தாரமே ஒன்று
கூறின மொழிகள் குன்றுவே.

26. மூத்த மனைவி இறந்து மறு மனைவி ஏற்படமாட்டாள். ஆனாலும், மூத்த மனைவியின் இருபத்தாறுவது வயதில் இவனே வேறு ஒரு மனைவி வந்து அடைவாள். அவளையும் இவன இஷ்டமனைவியாகக் கொண்டு விடுவான். மணம் நடைபெறாது. அந்நிகழ்ச்சியும் ஜாதகனுடைய முப்பத்தாறுவது வயதில் நடைபெறும். ஆகவே, சாஸ்திர முறைப்படி மணந்துகொண்ட மனைவி இவனுக்கு ஒருத்திதான்.

27. இதற்குநே ரிடையாய்ச் சாதக சுருதியி
லேழாம்பா வத்தினில் பாரு
அதில்சொல்லும் விவரம் இரண்டே ேமான்கேந்திரம்
ஆறினுய் கோணம் லா பத்தில்
சதிருட னிருக்கத் தாரமு மொன்றே
சாற்றினேம் விவரமாய்க் காண்பாய்
அதுவின்றி வந்தில் பரவுமே ஒன்று
அறைந்தனம் தாரமும் தீர்க்கம்.

27. இதற்கு அனுகூலமான ஆதாரத்தைச் சோதிட சாஸ்திரத்தில் ஏழாம்பாவத்தைப்பற்றி ஆறாயும் அத்தியாத்தில் காண்க. அஃதென்ன வெனில் இரண்டாம் பாவத்திற்கும் ஏழாம் பாவத்திற்கும் உடையவர்கள் கேந்திரத்திலோ திரிகோணத்திலோ லாபஸ்தானத்திலோ இருப் பார்களேயானால், மேலே கூறப்பட்ட ஸ்தானங்கள் சரமாக இருப் பினும் தாரம் ஒன்றுதான் என்பதாம். ஆகையால் நாம் சொன்னபடி தாரம் ஒன்றுதான். அவளும் தீர்க்கமாக வாழ்வாள். அபிமான மனைவி ஒருத்தி சேருவாள்.

வேறு

28. சுதர்களு மிருநான் காகத் தோன்றிடு மதிலாண் ரண்டு
அதிபதி மூன்று மாகும் வந்துமே தீர்க்க மெய்தும்
முதல்நான்கும் ஏழும் சேதம் மொழியது தப்பா தாகும்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

28. இத்தம்பதிகளுக்கு எட்டுக் குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் இரு ஆண்களும் மூன்று பெண்களும் தீர்க்கமாக வாழ்வார்கள். முதலாவது நான்காவது ஏழாவது குழந்தைகள் நாசத்தை அடையும். நாங்கள் சொன்னவார்த்தைகள் தவறு. தேவர்களை ஆதரிக்கும் அன்னையே! மேலும் கேட்பீராக.

29. முன்னவ னிருந்த ஜன்மம் மொழிகுறேம் தீருவா ரூரில்
அன்னவன் வடுக னாக அனுகியே மனைவி மைந்தா
மன்னனால் அதிகா ரங்கள் மருவியே அறத்தி லிச்சை
உன்னத தலங்கள் சென்று உறைந்தனன் கால னுடு.

29. ஜாதகனுடைய பூர்வஜன்மத்தைக் கூறுகின்றேம். இவன் முன் பிறவியில் திருவாரூரில் நாயக வமிசத்தில் பிறந்து மனைவிமக்களுடன் சுகமாக வாழ்ந்தான். அரசர்களால் அதிகார ஸ்தானங்களைப் பெற்று இருந்தான். தான தருமங்களில் பற்றுள்ளவனாய்ப் பல புண்ணிய ஸ்தலங்களுக்கு யாத்திரை சென்று கடைசியாக இறந்தான்.

30. சிரநான்கோன் வரையப் பட்டு ஜனிப்பனு மிக்கு லத்தில்
உறைகிறே மிவனின் யோகம் ஒராறு ஆண்டு மேலாய்ப்
பிறையது போலே போகம் பூமியும் தனதானி யங்கள்
மருவிடும் வறுமை காணன் வளவுமே அதன் மேலாகும்

30. நான்முகம் படைத்த பிரம்மதேவனால் இக்குலத்தில் பிறப்பிக்கப் பட்டிருக்கின்றான். இவனுடைய யோகத்தைக் கூறுகின்றேம். இவன் பிறந்து ஆறு ஆண்டுகளுக்குமேல், வளர்பிறைச் சந்திரன்போல யோகம் வளரும். பூமிகள், தனம், தானியம் இவைகள் பெருகும். வறுமை இல்லாதவனாகவும் இருப்பான். முன் சொன்ன வருஷங்களுக்குப் பிறகு இவனுக்கு வீடு ஏற்படும்.

31. அந்நகர் வாசத் தோர்க்கு அவனுமேல வாழ்வா னுகும்
பொன்பூமி பணிகள் யாவும் போயிற்று முவாயி ரம்பொன்
அன்னவன் தேடு வானும் அறைந்தது தப்பா தாகும்
உன்னத தவங்கள் செய்யும் உத்தமி கேட்டி டாயே.

31. அந்நகரில் வாழ்பவர்களை விட இவனே சிறப்புடனும் புகழுடனும் வாழ்வான். இவன் சம்பாதிக்கும் பொன், பூமி, ஆபரணங்கள் இவை களின் உத்தேசமதிப்பு மூவாயிரம் பொற்காசுகள். [மதிப்பு ரூபாய் முப்ப தாயிரம்.] நாங்கள் சொன்ன மொழிகள் தவறு. சிறந்த தவம் புரியும் தேவியே! மேலும் கேளுங்கள்.

32. ஆறுறு இரண்டு ஆண்டில் அனுக்கிடு மன்னைகண்டம்
கூறுவோம் நாற்ப தாண்டில் குறித்தனம் தந்தை கண்டம்
மாரனுக் கறுபா னைந்தில் மார்கழி மாதம் தன்னில்
சேருவான் கால னுடு செப்புவோ மிவன்பின் ஜன்மம்.

32. ஜாதகனுடைய முப்பத்தாறுவது வயதில் இவன் தாய்க்குக் கண்ட மேற்பட்டு இறப்பாள். ஜாதகனுக்கு நாற்பதாவது வயது நடைபெறுகை யில் தந்தை மரணமடைவான். ஜாதகனும் அறுபத்தைந்தாவது வயதில் மார்கழி மாதத்தில் யமனுலகை அடைவான். ஜாதகனுடைய பினஜன்மத் தைக் கூறுவோம்.

33 உத்தரம் துவாரை பக்கல் உதிப்பனும் சைவச் சேயாய்
மெத்தனக் குடும்பி யாகி வித்தகன் வாழ்வா னுகும்
சத்தமா வெட்டா மாண்டில் சோருவார் தாயின் தந்தை
பத்தாண்டில் தந்தை அன்னே பகருவோம் நிரியா ணங்கள்.

33. வடதிசையினுள்ள துவாரகை என்ற க்ஷேத்திரத்தில் சைவகுடும்பத்தில் பிறந்து பெருமை வாய்ந்த குடும்பியாகி வாழ்வான். ஜாதகனுடைய எட்டாவது வயதில் அவனுடைய தாயின் தந்தை மரணமடைவான். பத்தாவது வயது நடைபெறுகையில் தந்தையின் தாய் மரணமடைவாள்.

34. இன்னவன் ஜனன காலம் எழில்மூலம் கடைப்பா தத்தில்
துன்கேது தசையிருப்பு செப்புவோ மாண்டு ஒன்று
மன்னிய திங்க ளொன்று வலரந்தனம் பூர்வ பாகம்
கன்னென மொழியை யொக்கும் தாதலி கேட்டி டாயே.

34. இந்த ஜாதகன் மூலநக்ஷத்திரம் நாலாம்பாதத்தில் ஜனித்திருக்கின்றன். ஆகையால் கேது தசையிலிருப்பு வருஷம் ஒன்று, மாதம் ஒன்று. இவ்வாறு பூர்வபாகத்தைத் தெரிவித்தோம். கரும்புபோல் இனிமையான மொழிகளை மொழிகின்ற உமாதேவியே! மேலும் எங்களைக் கேட்டருள வேண்டும்.

ஜாதகம் 43

1. சந்திரன் கன்னி யாசச் சேய்துலாம் சிகியும் தேளில்
மந்தனும் மான தாக மழை கோளு மேட மாகப்
புந்திபானு பணியும் நந்தி பொன்சீயம் கடகம் ஜன்மம்
இந்தவாறு கோளு நின்றால் இயம்புவீர் பலனைத் தானே.

	சுக்கிரன்	புதன் சூரியன் ராகு	
	இராசி சக்கரம்		லக்கினம்
சனி			குரு
	கேது	செவ்வாய்	சந்திரன்

1. ஸ்ரீமுகவருஷம் வைகாசி மாதம் 26-ஆந்தேதி வெள்ளிக் கிழமை காலை நாழிகை 6-க்குமேல் 11-க்குள் ஜனனம்.

ஆங்கில தேதி 6-6-1873.

நவக்கிரஹங்களின் பாதசரம் :—மிருகசீர்ஷம் 2-இல் சூரியன், சித்திரை 2-இல் சந்திரன். சித்திரை 4-இல் செவ்வாய். ரோஹிணி 4-இல் புதன். மகம் 1-இல் குரு. பரணி 2 ல் சுக்கிரன். உத்திராடம் 3-இல் சனி. கிருத்திகை 2-இல் ராகு விசாகம் 4-இல் கேது. நக்ஷத்திரம் சித்திரை. செவ்வாயின் தசை இருப்பு வருஷங்கள் நான்கு, மாதங்கள் பத்து.

சந்திரன் கன்னி; செவ்வாய் துலாம்; கேது; விருச்சிகம்; சனி மகரம்; சுக்கிரன் மேஷம்; புதன்; சூரியன், ராகு விருஷபம்; குரு சிம்மம்; இலக்கினம் கடகம். இவ்வாறு கிரஹநிலைகள் இருக்கப் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதிதேவி வினவினுள்.

2. சங்கரி கேட்கும் போது ஜயமுனி கூறு கின்றுர்
இங்கிவை ஆண்பா லாகும் இல்லமும் தென்பால் நோக்கம்
செங்கதிர் வீதி யாகும் திருமாலின் கோஷ்டம் மேற்கில்
மங்கின கெடியு முண்டு மன்னவர் வாச மாகும்.

2. இவ்வாறு சங்கரி கேட்டவுடன் ஜயமுனிவர் பலன்களைச் சொல்லுகின்றுர். இக்கிரஹநிலையில் பிறந்தவன் ஆண். வீதி கிழக்கு மேற்காக அமைந்திருக்கும். வீடு தென்திசையை நோக்கி இருக்கும். மேற்கில் திருமாலின் ஆலயம் விளங்கிடும். இடிந்தவொரு கோட்டையுமிருக்கும். அஃது அரசர்கள் வாழும் ஊராகும்.

3. பலஜாதி அவ்வூர் வாசம் பருத்ததோர் செட்டு ஒங்கும்
சொலுமிந்த அடையா ளத்துள் சுதனுமே சேஷ்ட னுகக்
குலவுவான் வைசியச் சேயாய்க் குழவியின் குடும்பச் சேதி
நிலையதைப் புகலு கின்றேன் நிமலியே கேட்டி டாயே.

3. அவ்வூரில் பலஜாதியினர் வாழ்ந்திடுவார்கள். அந்த ஊர் ஒரு பெரிய வியாபார ஸ்தலமாகும். இவ்வாறு அடையாளங்கள் அமைந்த ஊரில் இக் கடகலக்கின மகன் வைசிய குலத்தில் குடும்பத்திற்கு மூத்தபிள்ளையாக உதிப்பான். இப்பாலகனின் குடும்ப வரலாறுகளை இந்நூலில் தெரிவிக்கின் றோம். தாயே! கேளுங்கள்.

4. தந்தையின் வர்க்கம் தன்னைச் சாற்றுவோ மாண்பால் நான்கு
வந்திடும் கன்னி ரண்டு வரைகிறோம் தாயே யாங்கள்
பிந்தியும் வேறுய்ச் செல்வர் புகலுவோம் பின்பால் சேதி
இந்தவன் தந்தைக் கேதான் இயம்புவோம் பலனை யாங்கள்.

4. ஜாதகனுடைய தந்தையின் சகோதரவருக்கத்தை கூறுகின்றோம். இவனுக்குச் சகோதரர்கள் நால்வர். சகோதரிகள் இருவர். இந்தச் சகோ தரர்கள், இந்த ஜாதகன் பிறந்தபிறகு, தனித்தனியே குடும்பத்தை நடத்து வார்கள். அவர்களுடைய வரலாறுகளைப் பின்பகுதியில் தெரிவிக்கின்றோம். ஜாதகனின் தந்தையினுடைய பலன்களை இப்பொழுது தெரிவிக்கின்றோம்.

5. மா நிறம் சமதேகத்தான் மருமமும் கொஞ்ச முண்டு
தென்மொழி கூறு வானும் செட்டுக்கள் செய்வா னுகும்
வானவர் பூசை பூணுன் அரசர்க ளுறவு கொள்ளான்
ஊனமில் லாத தேகி உரகன்போல் கோப மேற்பன்.

5. மாநிறம் வாய்ந்தவன். சமமான தேக வளர்ச்சி யுடையவன். சிறிது கபடமுள்ளவன். தேன்போல் இனிய மொழிகளைக் கூறு வான். வியாபாரம் செய்து ஜீவிப்பான். தேவபூசையில் ஈடுபடாதவன். [தெய்வபக்தி இல்லாதவன் என்பதுக்கருத்து.] அரசர்களின் நட்பும் இவனுக் கிராது. ஊனமடையாத சரீரம் வாய்ந்தவன். கோபத்தினுல் பாம்புபோல் சீறுவான்.

6. இல்லமும் விட்டு நீங்கி ஏகுவான் குடிசு லேதான்
அல்லலாய் வாழ்வா னுகும் ஆதியில் சுகமு மேற்பன்
மல்லின்முன் செல்வா னுகும் வனவாச மாக வாழ்வன்
நல்லவர் நேசம் கொள்வன் நாற்காலி விருத்தி யில்லான்.

6. தனது வீட்டை விட்டு நீங்கி மேற்குத்திசையில் கஷ்டமடைந்து வாழ் வான். பால்யத்தில் சுகமாக வாழ்வான். சண்டை சச்சரவுகளில் ஈடுபட்டு முன் நிற்பான். வனவாசமாகவும் [ஒருவருடனும் தொடர்பு இல்லாமல்] வாழ்வான். சாதுக்களின் நட்பைக்கொண்டவன். கால்நடைகளின் அபிவிருத்தி இல்லாதவன்.

7. பின்வய தினிலே யோகம் பொருந்தாது சிறையாய் வாழ்வன்
பொன்னிலான் மனத்தில் துக்கம் போஜன வறுமை யேற்பன்
தன்துணை மோசத் தாலும் சந்தேக மனத்தி னுலும்
உன்னத இல்லம் நீங்கி ஒதுக்கமாய் வாழ்வா னுகும்.

7. பின் வயதில் சிறிதும் யோகமேற்படாமல் சிறைப்பட்டவன் போல் வாழ்ந்திடுவான். தனமில்லாதவன். மனத்தில் கவலை உள்ளவன். போஜனத்திற்குக் கஷ்டப்படுவான். இவன், சகோதரர்கள் செய்த வஞ் சனையாலும், ஒருவரையும் நம்பாத இயல்பினுலும் சிறந்த தனது வீட்டை விட்டு வேறு ஓர் இடத்தில் ஒதுங்கி வாழ்வான்.

8. இந்நெறி உடையா னுக்கு இவனுமே யுதிப்பா னுகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அரிநிறம் உயர மில்லான்
நன்மனம் கபடு மில்லான் ஜனித்த இல் விட்டு நீங்கிக்
கன்னிதா யூரில் வாசம் கனமிலாக் குடும்ப மேற்பன்.

8. இவ்வாருன மனிதனுக்கு இச்சாதகன் மகனுகப் பிறந்திருக்கிறுன். இனி ஜாதகனுடைய குணத்தைக் கூறுகின்றோம். திருமாலின் நிறம் வாய்ந்தவன். உயர்ந்து வளராதவன். [குள்ளன் என்பது கருத்து.] மனத் தில் கபடமில்லாதவன். தான் ஜனித்த வீட்டை விட்டு நீங்கி மனைவியின் தாயின் ஊரில் வசித்து வருவான். குடும்பமும் பெருமை இல்லாததாகும்.

9. வித்தையும் சமம தாகும் வணிபங்கள் செய்வா னுகும்
குத்தத்தை மனத்தில் வையான் கொடுமையை எவர்க்கு மெண்ணுன்
சத்தியம் தவரு னுகும் சந்தேக மனத்த னுகும்
புத்தியும் சபல மாகும் பிதாவிற்குத் தாழ வாழ்வன்.

9. கல்வியும் நடுத்தரமானது. வியாபாரம் செய்வான். பிறர்குற்றங்களை மனத்தில் வைத்துக் கொள்ளாமல் உடனே மறந்து விடுவான். யாருக்கும் கெடுதலை எண்ணமாட்டான். உண்மையிலிருந்து வழுவாதவன். சந்தேக மனம் வாய்ந்தவன். சபல புத்தி உடையவன். பிதாவைவிட இவன் தாழ்வாகவே வாழ்ந்திடுவான்.

10. சல்லியப் பாதை ஏற்பன் தன்கரம் கத்திரி ரேகை
சொல்லது சுருக்க மெய்தும் சுற்றத்தார்க் கிணக்கம் செய்வன்
இல்லையென் றுரைக்க மாட்டான் இளம்பிறை போல்த ரித்திரம்
அல்லலாய் வாழ்வா னுகும் அம்பிகை யாளே கேளாய்.

10. கடன் தொந்திரவு இவனுக்கிருக்கும். இவனது கையில் கத்திரி ரேகை உண்டு. சுருக்கமாகவே பேசுவான். உறவினர் இஷ்டப்படியே நடப் பான். உதவியை நாடுபவர்களுக்கு இல்லை என்று சொல்லாதவன். நாளுக்குநாள் வறுமை அதிகமாகும். மிகவும் அல்லல்பட்டு வாழ்வான். அன்னையே! மேலும் கேளுங்கள்.

11. அத்திரி புகலு கின்றுர் அவனுக்கு வறுமை சொன்னீர்
எத்தனை நாள்வ ைக்கும் இடரான குடும்ப மேற்பன்
சுத்தமாய் சொல்லு மென்னச் சுதனுக்கு ஐந்தின் மேலாய்க்
குத்தமா யிருநான் காண்டும் கூடாது நினைத்த வெல்லாம்.

11. அத்திரிமுனிவர் கூறுவார். அவன் வறுமை முதலியவைகளால் துன்பமடைவான் என்று சொன்னீர்கள். எவ்வளவு நாள் அக்கஷ்டங்கள் நீடிக்கும்? தெரிவிப்பீராக என, ஜயமுனி பதிலுரைத்தார். இவன் ஜனித்து ஐந்தாண்டிற்குமேல் எட்டு ஆண்டுமட்டும் முன் சொன்ன துன்பங்கள் இருக்கும். தான் நினைத்த காரியங்கள் நிறைவேறு.

12. சஞ்சல மனமு மெய்தும் சல்லியப் பாதை ஏற்பன்
அஞ்சின வார்த்தை யுண்டு அல்பமாம் உணவு தானும்
தஞ்சமா யதன்மேல் தானும் சந்திரன் பிறைபோல் யோகம்
கொஞ்சுவாள் மாது தானும் குலத்துளோர் மதிக்க வாழ்வன்.

12. மனத்தில் கவலைகள் அதிகமாகும். கடன் உபத்திரவமும் இருக்கும். பயத்துடன் பேச நேரிடும். உணவு வசதிகளும் அல்பமாகும். நாம் சொன்ன வருஷங்களுக்குமேல் யோகம் வளர்பிறைச் சந்திரன் போல் வளரும். ஸ்திரீகள் மனம் குளிரும் [குடும்பக் கஷ்டங்கள் நீங்கும் என்பது கருத்து]. இவன ஜாதியினர் இவனை மிகவும் மதிப்பார்கள்.

13. அதுமுதல் மரண மட்டும் அணுகாது வறுமை தானும்
நிதிமிகப் பெருக்க மாகும் நினைத்தது முடிபு மென்றேும்
சதியுளோர் உறவே யாகும் சஞ்சலம் நிவிர்த்தி யாகும்
விதவிதச் செட்டு ஓங்கும் வித்தகி கேட்டி டாயே.

13. அதுமுதற் கொண்டு மரணம் வரையில் வறுமையைக் காணமாட்டான். பணம் பெருகும் நினைத்த காரியங்கள் நிறைவேறும். பகைவர்களே நண்பர்களாக மாறுவார்கள். மனக்கவலை நீங்கும். பலவித வியாபாரங்களைச் செய்வான். அவ்வியாபாரங்களும் மேன்மேலும் ஓங்கும். தேவியே! மேலும் கேளுங்கள்.

14. தன்துணை ஆண்பா லொன்று தங்கிடும் தீர்க்க மாக
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அடைந்தோரை ஆத ரிப்பன்
பன்னியே பேசு வானும் பலவித வாணிபம் செய்வன்
தன்மனம் கபடு முண்டு தந்திர வார்த்தை ஏற்பன்.

14. ஜாதகனுக்குச் சகோதரன் ஒருவன் நீண்ட ஆயுளுடன் வாழ்வான். அச்சகோதரனின் குணத்தைக் கூறுவோம். தன்னை அண்டியவர்களை ஆதரிப்பான். பன்னிப் பன்னிப் பேசுவான். அநேகவித வியாபாரங்களைச் செய்வான். கபடமுள்ளவன். ஆகையால் தந்திரமாகவும் பேசுவான்.

15. அரசர்க ளுதவி யாலே நிமலனும் ஜீவிப் பானும்
காசுகள் செலவு செய்யான் கண்முகம் வசிய முண்டு
கூசிடான் வார்த்தைக் கேதான் குலமதிப் புடனே வாழ்வன்
போஜன சுகிய ளுகும் பிதாபகை யாகி வாழ்வன்.

15. அரசர்கள் ஆதரவினுல் ஜீவனத்தை நடத்துவான். [அரசாங்க உத்தியோக மேற்பன் என்பது கருத்து.] பணத்தை அதிகம் செலவு செய்யும் சுபாவம் இல்லாதவன். கண்களிலும் முகத்திலும் பிறரைத் தன்வசப்படுத்தும் பொலிவு உள்ளவன். தைரியமாகப் பேசுவான். குலத்தினரால் மதிக்கப்பட்டு வாழ்வான். போஜன சௌக்கியம் உடையவன். தந்தையே இவனுக்குப் பகைவனுவான்.

16. சுகதுக்கம் கலந்து வாழ்வன் தோழனுல் பெருமை யேற்பன்
பகையோரை உறவு கொள்வன் பாக்கியம் பின்னுல் சேர்ப்பன்
தகைமையாய் மனைவி ஒன்று சாற்றுவோம் தீர்க்க மாக
மிகுதவம் புரியு மெங்கள் வித்தகி கேட்டி டாயே.

16. இவனது வாழ்க்கையில் சுகங்களும் துக்கங்களும் அடிக்கடி மாறி மாறி நிகழும். தோழனுல் இவனுக்குப் பெருமைகளும் அநுகூலங்களும் ஏற்படும். எதிரிகளையும் தன் வசப்படுத்தி நட்புக் கொண்டாடுவான். பிற்காலத்தில் ஐசுவரியத்தைச் சம்பாதிப்பான். இவனுக்கு மனைவியும் ஒருத்திதான் [களத்திர தோஷ மில்லாதவன் என அறியவேண்டும்]. உலகத்தோர்க்குத் தவமுறையை போதிக்க தவம் செய்துகாட்டும் தேவியே! மேலும் கேட்பீராக.

17. சுதர்களும் ஆண்பால் ரண்டு தோகையு மொன்று தீர்க்கம்
அதிபனும் சிலநாள் ஒன்றய் மருவிப்பின் வேருய்ச் செல்வன்
பதியது வேறு செய்வன் பசித்தோரை ஆத ரிப்பன்
ததிநெய்பால் பிரிய ளுகும் சங்கரி கேட்டி டாயே.

17. அவனுக்கு இரு பிள்ளைகள். ஒரு பெண். இம்மூவரும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். இவனும் ஜாதகனும் ஒன்ருக வாழ்ந்து பிற்காலத்தில் வெவ்வேறு குடும்பத்தினராவர். இவன் புதிய வீடு நிர்மாணம் செய்வான். பசித்தவர்களுக்கு [எளியவர்களுக்கு] அமுதளிப்பான். தயிர் நெய் பால் இவைகளில் மிகவும் விருப்பமுள்ளவன். சங்கரியே! மேலும் கேட்டருள வேண்டும்.

18. ஜாதகன் மணத்தின் காலம் சாற்றுவோம் மூவெட் டாண்டில்
காதலீ நேரு மென்றேும் கழறுவார் அத்திரி தாமும்
தீதாகு மந்தக் காலம் செப்புவோ மதன்மே லைந்தில்
ஓதுவேன் மணமு மென்றேும் உயரன்னை வர்க்கம் தன்னில்.

18. இனி ஜாகனுடைய விவாஹ காலத்தை அறிவிப்போம். இருபத்து நாலாவது வயதில் விவாஹம் நடைபெறும். அத்திரி முனிவர், நீங்கள் சொன்ன காலம் தீமையாக இருப்பதால் அதற்குமேல் ஐந்தாவது ஆண்டில் [இருபத்தொன்பதாவது வயதில்] நடைபெறு மென்று சொல்ல, ஜயமுனி உண்மை; இருபத்து நான்காவது வயதில் தாய் தந்தையர்களின் மனத்தில் நிச்சயமாகும். இருபத்தொன்பதாவது வயதில் மணம் நடைபெறு மென்றுர். மேலும் ஜயமுனிவர் கூறுகின்றுர். மணப்பெண் ஜாதகனுடைய தாய் வருக்கத்தில் தோன்றியவள்.

19. பாலிகை நேரு மென்றேம் பகருவோ மவள்கு ணத்தை
ஞாலமேல் நல்லோ ளாவள் நயம்படக் கூறு வாளாம்
ஆலம்போல் கோப முண்டு அடாவடி தன்னில் செல்லாள்
காலத்தை அறிந்து ரைப்பள் கணவனுக் கினியளாமே.

19. அவளுடைய குணத்தைச் சொல்லுவேன். எல்லோருக்கும் நல்லவ ளாவாள். நயமாகப் பேசுவாள். விஷம்போல் உக்கிரமான கோபமுண்டு. ஆனால் வீண் பிடிவாதக்காரி யல்லள். காலத்தை அறிந்து அதற்குத் தக்க படி பேசுவாள். கணவனுக்கு இனியவள்.

20. தோகைபோல் நிறத்தா ளாகும் சுந்தரி யோக மில்லாள்
பாகமாய்ப் புத்திர பாவம் பஞ்சமா யுதிக்கு மென்றேம்
ஏகுமே முதலி லேதான் இருகன்னி ஆண்பா லொன்று
சாகாது எனஉ ரைத்தோம் சங்கரி கேட்டி டாயே.

20. மயில் நிறம் வாய்ந்தவள். இவள் அதிக அதிருஷ்ட மில்லாத வள். இனி புத்திரபாவத்தைக் கூறுவோம். இவர்களுக்கு ஐந்து குழந்தைகள் பிறப்பார்கள். அவர்களில் முதலில் பிறந்த இரு குழந்தைகள் நீடித்து வாழா. இரு பெண்களும் ஒரு பிள்ளையும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். பரமேசுவரியே! மேலும் கேளுங்கள்.

21. என்னகா ரணத்தி னாலே இவன்சுதர் முதலில் பீடை
முன்னமே கூறு மென்ன மெய்ஞ்ஞானி அஞ்சில் தங்கப்
பின்னமாம் முதலில் புத்திரர் பூர்வத்தைப் புகலக் கேண்மோ
கன்னமா புரியி லேதான் கலந்தனன் ரெட்டி வர்க்கம் ;

21. என்ன காரணத்தினால் இவ்வாறு இவனுக்குப் புத்திர தோஷம்? அதைச் சொல்லுவீர்களாக என ஒரு முனிவர் கேட்க, ஜயமுனி கார ணத்தைக் கூறினார். கேது புத்திரபாவத்தில் இருப்பதால் புத்திரபாவத் தில் தோஷ முண்டு. இவனுடைய முன் வினையைக் கூறுகின்றேம். முன் ஜன்மத்தில் இவன் கன்னமா நகரில் ரெட்டி ஜாதியில் பிறந்து ;

22. சுகமுள குடும்பி யாகித் தோகையும் மதலை யுண்டாய்த்
தகமையாய் வாழு நாளில் தங்கின வினையைக் கேண்மோ
பகைசெய்தான் ஏழை யோர்க்குப் பகர்ந்ததோர் சாபம் கேளாய்
அகமது அலேச்ச லாயும் அன்னமும் குறைவுண் டாயும் ;

22. மனைவி மக்களுடன் சுபிக்ஷமான குடும்ப முள்ளவனுகிச் சிறப்புடன் வாழும் நாளில் இவனுக்கேற்பட்ட வினையைக் கேளுங்கள். இவன் ஏழை களுக்குத் தீமையைச் செய்தான். அதனால் ஏழைகள், நீ, அல்லல்படும் குடும்பமுள்ளவனுகவும், ஆகாரத்திற்குக் கஷ்டப்படுபவனுக வாழ்வாய் ;

23. பின்வரும் சென்மம் தன்னில் புகழது இல்லா னும்
தன்தந்தை பகையு மாயும் தரித்திர முடைய னும்
பொன்பணி குறைவ தாயும் பூமியில் வாழ்வா யென்று
மண்வாரி தூற்றிச் சென்றார் மறுவிற்று அது ஓர் தோஷம்.

23. பின்வரும் ஜன்மத்தில் புகழ் அற்றவனுகவும், தாய் தந்தையைப் பகைத்துக்கொண்டும், ஏழ்மையுடனும் பணம் ஆபரணம் இல்லாதவனுகவும் உயிர்வாழ்வாய் என்று சொல்லித் தெருத் தூளியை வாரி இறைத்துச் சென்றனர். அந்தச் சாபம் இவனை வந்தடைந்தது.

24. இல்லத்தில் வெகுநா ளாக இருந்தது நாக மொன்று
அல்லலாய் மருடத் தாலே அதுமுற்றம் தன்னில் தோன்ற
வல்லவன் அரங்கம் செய்து வாட்டினன் கழியி னாலே
புல்கிற்றுக் கால னூடு புக்கிற்று அந்தத் தோஷம்.

24. இவன் வசித்துவந்த வீட்டில் வெகு நாளாக ஒரு சர்ப்பம் வசித்தது. அஃது ஒருநாள் முற்றத்தில் தோன்ற, அதைத் தடியினால் அடித்து யமனுலகம் அனுப்பினன். அந்தத் தோஷம் இவனைப் பிடித்துக் கொண்டது.

25. மாரனு மந்தி யத்தில் மைந்தர்கள் தோஷ மாயும்
தீரமில் லாமல் நெஞ்சம் சென்றனன் கால னூடு
ஆரியன் வரையப் பட்டு அனுகுவா னிக்கு லத்தில்
கூறுவோம் ஏழைச் சாபம் குடியது வறுமை காணும்.

25. அந்தியத்தில் இவனுடைய சந்ததிக்குத் தோஷம் ஏற்பட்டது. மிக வும் கவலைப்பட்டு இவனும் இறந்தான். பிறகு பிரம்மதேவன் அவனை இங்குப் படைத்திருக்கிறன். ஏழைகளின் சாபத்தினால் இவனது குடும்பம் வறுமையால் துன்பமடையும்.

26. இல்லமு மலேச்ச லாகும் இடருகள் அனேக முண்டு
செல்லாது செல்லு மேதான் தந்தையும் சிறையாய் வாழ்வன்
நில்லாது முதலில் புத்திரர் நிதமனச் சஞ்ச லங்கள்
அல்லலாய் வாழ்வா னுகும் அம்பிகை யாளே கேளாய்.

26. பலவிதத்திலும் அலேச்சல்கள் ஏற்படும். அநேக இடையூறுகளையும் அடைவான். தந்தையும் சிறைப்பட்டவன் போலத் தனித்து வாழ்வான். முதலில் பிறக்கும் குழந்தைகளும் நிலேத்திரா. எப்பொழுதும் மனக் கவலே இருக்கும். பல வழிகளிலும் அல்லல்பட்டு வாழ்வான்.

27. முப்பது மூன்றுண் டின்மேல் விளம்புவோம் பிறைபோல் [யோகம்
தப்பித மணுகா தாகும் தனம்விருத்தி செட்டு ஓங்கல்
ஒப்புவார் வார்த்தை தானும் உயர்வாரா னுதவி யாகும்
அப்பணி சடையோன் தேவி அருளிய மொழிகுன் றுது.

27. முப்பத்து மூன்றுவது வயதிற்கு மேல் வளர்பிறைச்சந்திரன்போல யோகம் வளரும். ஒருவிதத்திலும் பிழைகள் ஏற்படா. தனம் விருத்தி யடையும். வியாபாரமும் விஸ்தாரமடையும். இவனுடைய வார்த்தைகளை எல்லோரும் மதித்து ஏற்றுக் கொள்ளுவார்கள். பிரபுக்களால் உதவியை அடைவான். கங்கையைச் சடையில் தரிக்கும் சிவபிரானின் தேவியாரே! நாங்கள் சொன்ன மொழி குன்றுது.

28. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அன்புள மனத்த ளாவள்
சொன்னசொல் சுபமே யாகும் சுருக்கினில் கோப மேற்பள்
பொன்பணி அதிகம் காணுள் புருடனும் பகையே யாகும்
பன்னியே பேசு வாளாம் பலவீனம் கொஞ்ச முண்டு.

28. ஜாதகனுடைய தாயின் குணத்தை இனிக் கூறுவோம். அவள் எல்லோரிடமும் அன்புகொண்டவள். சுபமான வார்த்தைகளைப் பேசுவாள். வெகுசீக்கிரத்தில் கோபத்தை அடைவாள். அதிக பொன்னுபரணங்களைப் பெறுதவள். அவளுடைய கணவனும் பகைவனுவான். பன்னிப்பேசும் சுபாவம் உடையவள். தேகவலிமை இல்லாதவள்.

29. துணைவர்கள் ஆண்பால் மூன்று தோகையு மிருவ ராகும்
பதராகு மற்ற வெல்லாம் பகைவர்கள் ஊரா ராகும்
உதவியும் கொஞ்ச முண்டு உரைக்கிறே மிவளின் பூர்வம்
சதிதரும் தில்லை தன்னில் கலந்தனள் சேடர் வமிசம்.

29. அவளுக்குச் சகோதரர்கள் மூவர். சகோதரிகள் இருவர். இந்த ஐவரும் நீண்டகாலம் வாழ்வார்கள். மற்றைய குழந்தைகள் நீடித்திரா. ஊரார் எல்லோரும் இவளுக்குப் பகைவர்களாவர். அவர்களிடமிருந்து சிறிது உதவியையும் அடைவாள். இவளுடைய முன் பிறவியைக் கூறுகின்ருேம். அவள் பூர்வசென்மத்தில் சிதம்பர க்ஷேத்திரத்தில் சேடர் வமிசத்தில் உதித்திருந்தாள்.

30. வரனுமே மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைச் சொல்வேன்
வரனுடை தாயின் பேரில் வருணித்தாள் சிலேடை வார்த்தை
அரிவையும் மனது வாடி அறைகுவாள் சாபம் தானும்
குறைவார்த்தை யென்மேல் சொன்ன கொடும்பாவி தனக்கு
[மேதான் ;

30. கணவன் குழந்தைகளுடன் சுகமாகவாழும் காலத்தில் அவளுக்கு உண்டான பாவத்தைச் சொல்வேன். அவள், தன்கணவனுடைய தாயின் [மாமியார்] மனத்தைக் கொடிய வார்த்தைகளால் புண்படுத்தினுள். ஆகையால் மனம் நொந்த அவள், என்மனத்தைக் காரணமின்றித் துன்பப் படுத்திய பாவியான நீ ;

31. பின்வரும் ஜன்மம் தன்னில் பெண்சுத ரில்லா ளாயும்
தன்வரன் பகையு மாகிக் கஞ்சமா மனத்தா ளாகி
அன்னமும் வறுமை யாகி அன்னைபால் வாழ்வா யென்ருள்
துன்மையாய் அந்தச் சாபம் சார்ந்தது பாவைக் கேதான்.

31. பின்வரும் ஜன்மத்தில் பெண் சந்ததியற்றவளாகவும், கணவன் பகைவனுகியும், கவலை கொண்ட மனத்தோடு உண்பதற்கு உணவின்றியும், தாயின் வீட்டிலேயே உயிர் வாழ்வாய் என்று சாபமிட்டாள். அந்தச் சாபம் இவளுக்கு நேர்ந்தது.

32. காலன்தன் பதிக்குப் புக்கிக் கஞ்சனுல் வரையப் பட்டுச்
சீலமாம் வைசியச் சேயாய் ஜனித்தன னென்று சொல்வேன்
ஆலம்போல் மாது சாபம் அனுகிடு மிச்சென் மத்தில்
ஞாலமேல் சிறையாய் வாழ்வள் நற்சுதர் பெண்பால் காணுள்.

32. பிறகு கடைசிகாலத்தில் யமனுலகம் சென்ற இவனைச் சதுர்முகன் இங்கு வைசியகுலத்தில் பிறப்பித்திருக்கின்ருன். முன் ஜன்மத்தில் மாமியாரால் இடப்பட்ட சாபம் விஷம்போல் இவளைப்பற்றிக் கொண்டது. ஆகையால் சிறைப்பட்டவள்போல், கணவன் உயிரோடிருந்தும் அவனுல் சுகமின்றியும், பெண் சந்ததி அற்றவளாகவும் வாழ்வாள்.

33. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிறப்பளா மிக்கு லத்தில்
பொன்பணி யுடையா ளாகிப் பூவையும் வாழ்வா ளாகும்
தந்தையின் பூர்வம் சொல்வேன் சட்டநா தீசர் வாழும்
அந்தவான் நகரம் தன்னில் அருளினுன் வன்னிய சேயாய்.

33. இவள் மறுபிறவியில் காஞ்சியில் வைசியகுலத்தில் ஜனிப்பாள். பொன்னுபரணங்கள் வஸ்திரம் முதலியவைகளை அடைந்து சுகமாக வாழ்வாள். ஜாதகனுடைய தந்தையின் முன்பிறவியைத் தெரிவிப்பேன். இவன், முன்பிறவியில் சட்டநாதர் எழுந்தருளி இருக்கும் சீர்காழியில் வன்னியகுலத்தில் பிறந்திருந்தான்.

34. தரணியில் சீவித் தேதான் வாழுநாள் வினையைக் கேண்மோ
மறையவன் தொண்டு செய்து அவர்பணி களவு கொண்டான்
உறைகுவார் சாபம் தானும் உதிக்கும்பின் ஜன்மம் தன்னில்
வறுமைகள் மிகவுண் டாகி வனவாச மாக வாழ்வாய்.

34. பூமியை உழுது பயிரிட்டு ஜீவனத்தை நடத்திவரும் காலத்தில் அவனுக்கு ஏற்பட்ட பாவத்தைக் கேளுங்கள். இவன் ஓர் அந்தணருக்குத் தொண்டு செய்து கொண்டிருக்கையில் அவருடைய ஆபரணத்தில் ஆசை கொண்டு அதைக் களவுகொண்டான். ஆகையால் அவர், நீ மறுபிறவியில் கொடிய வறுமையால் கஷ்டப்பட்டு வனவாசம்போல் மனைவிமக்களை விட்டுத் தனித்து வாழ்வாய் ;

35. இன்னமு மனேகம் சொன்னுர் எய்திற்று அந்தச் சாபம்
அன்னவ னந்தி யத்தில் அரன்தொண்டு மிகவே செய்து
துன்மையாய்க் கால னுடு சென்றுமே பிரமன் லக்கம்
துன்மதி வணிகர் வர்க்கம் தோன்றினு னிவனே யம்மா.

35. இவ்வாறு இன்னும் பல இன்னல்கள் ஏற்படவேண்டுமென்று சபித்தார். அந்தச் சாபம் இவனைவந்தடைந்தது. அவன் அந்தியகாலத்தில் பரமசிவனுக்குப் பலதொண்டுகளைச் சிரத்தையுடன் செய்து இறந்தான். அவனைப் பிரம்மன் வைசிய வமிசத்தில் இங்குப் படைத்தான். அவன்தான் நம் கடகலக்கின பாலனுக்குத் தந்தையாக வாய்த்திருக்கின்ருன்.

36. வைத்ததோர் சாபத் தாலே மெல்லியாள் பகையு மாகும்
பாதக மனத்தா ஞகிப் பலர்பாலில் உய்வா ஞகும்
ஓதுவே னிவன்பின் ஜன்மம் உயர்வாயு தலத்தி லேதான்
சூதிலாக் கங்கை சேயாய் ஜனிப்பனு மென்று சொல்வோம்.

36. அந்தப் பிராம்மணர் இட்டசாபத்தாலே மனைவியும் பகையாளுள். மனம் நொந்தவனுகி அநேகருடைய தயையினுல் பிழைப்பான். இவன் பின் ஜன்மத்தையும் சொல்லுகின்றேம். இவன் மறுபிறவியில் வாயுஸ்தலம் என்று சொல்லப்படும் காளஹஸ்தி க்ஷேத்திரத்தில் மிகப்பரிசுத்தமான வேளாள வமிசத்தில் ஜனிப்பான்.

37. ஆருறு ஒன்று ஆண்டில் அனுகிடும் தந்தை கண்டம்
தீரமாய் முப்பா னெட்டில் செல்லுவா ளன்னை தானும்
மாரனுக் கறுபா னைந்தில் மார்கழி மாதம் தன்னில்
நேருவான் கால ஞடு அதிபதி கேட்டி டாயே.

37. ஜாதகனுக்கு முப்பத்தாருவது வயது நடைபெறுகையில் இவன் தந்தை மரணமடைவான். முப்பத்தெட்டாவது வயதில் தாய் மரணமடைவாள். சாதகன், தனது அறுபத்தைந்தாவது வயதில் மார்கழி மாதத்தில், காலன் நாட்டிற்குச் செல்லுவான். எங்கள் நாயகியே! மேலும் கேட்பீராக.

38. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிறப்பனும் விச்வச் சேயாய்
அன்னவன் ஜனன காலம் ஆரல்தன் தசையி ருப்பு
மன்னிய ஆண்டு நாலும் மாதமும் ஈரைந் தாகும்
முன்பாகம் விவரம் சொன்னேம் முதல்வியே கேட்டி டாயே.

38. ஜாதகன மறுபிறவியில் காஞ்சியில் விச்வகர்ம குலத்தில் பிறப்பான். இவன் சித்திரை நக்ஷத்திரத்தில் பிறந்திருக்கின்ருன். ஆகையால் செவ்வாய் தசையில் இருப்பு வருஷங்கள் நான்கு, மாதங்கள் பத்து. இவ்வாறு முதல் பாகத்தைக் கூறினேம். உலகிற்கு மூலமான தேவியே! இன்னும் எங்களைக் கேட்டருளுங்கள்.

ஜாதகம் 44

1. கலைகலை புகரும் சாடி கதிர்புதன் காரி பொன்னேனை
குலவிடம் மீன மாகக் குஜன்கேது வீணை யாக
மலைகயிறு மேரு வாக அலவனும் உதய மாகப்
பலன்தனைப் புகலு மென்று பார்வதி கேட்க லுற்ருள்.

சூரியன் புதன் சனி குரு			செவ்வாய் கேது
சுக்கிரன்	இராசி சக்கரம்		லக்கினம்
சந்திரன்			
ராகு			

1. பிரமாதி வருஷம் பங்குனி மாதம் 24-ஆந்தேதி ஞாயிற்றுக்கிழமை பகல் நாழிகை 15-க்குமேல் 20-க்குள் ஜனனம்.

ஆங்கிலத்தேதி 4-4-1880.

ரேவதி 2-இல், சூரியன். சிரவணம் 3-இல் சந்திரன். மிருகசீர்ஷம் 4-இல் செவ்வாய். உத்தரட்டாதி 3-இல் புதன். உத்தரட்டாதி 2-இல் குரு. பூரட்டாதி 2-இல் சுக்கிரன். ரேவதி 3-இல் சனி (அஸ்தம்). பூராடம் 2-இல் ராகு. திருவாதிரை 4-இல் கேது. நக்ஷத்திம் சிரவணம். சந்திரதசையில் இருப்பு வருஷங்கள் மூன்று, மாதங்கள் ஆறு.

சந்திரன் மகரம், சுக்கிரன் கும்பம் சூரியன் புதன் சனி குரு மீனம், செவ்வாய் கேது மிதுனம் ராகு தனுஸ் இலக்கினம் கடகம். இந்த ஜாதகத்தின் பலன்களைச் சொல்லுவீர்களாக எனப் பார்வதி கேட்கலுற்ருள்.

2. அத்திரி புகலு கின்ருர் அதுஜன்மம் ஆண்பா லாகும்
வித்தக னில்லம் சொல்வேன் மேல்வாசல் வடதென் வீதி
பத்தினி மாரி தென்மேல் பாரளந் தோனு மேற்கில்
சத்திமா காளி உத்ரம் சாற்றிய சிறுவூ ராகும்.

2. அத்திரி முனிவர் கூறுகின்ருர். இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண். செனித்த வீடுமேற்கு நோக்கும். வீதி தெற்கு வடக்காக இருக்கும். மாரியம்மன் தென் மேற்கில் தங்கிடுவாள். பூமிகளைத் தன் திருவடிகளால் அளந்த விஷ்ணுவின் ஆலயம் மேற்குத் திசையில் இருக்கும். வடக்கில் காளி கோயில் விளங்கும். அஃது ஒரு சிறிய ஊராகும்.

3. பாலகன் வடுகர் வர்க்கம் பிறப்பனும் சைவ மில்லான்
சாலவே அன்னை தந்தை தன்துணை களத்திர புத்திரர்
ஆலவே முன்பின் ஜன்மம் இயம்புவோம் யோகச் சேதி
ஆலத்தை யுண்டோன் தேவி அறைகிறேன் மிந்நூல் தன்னில்.

3. இச்சாதகன் நாயக்கர் வமிசத்தில் பிறந்தவன். சைவனல்லன். [வைணவன் என்பது கருத்து]. ஹாலா ஹலம் என்ற கொடிய விஷத்தை யுண்ட சிவபிரானின் தேவியாரே! நாங்கள் இந்நூலில் ஜாதகனுடைய யோகங்களைப் பற்றியும், தாய் தந்தை சகோதரர் மனைவி புத்திரர் இவர்களைப் பற்றியும் முன்பின் ஜன்மங்களைப் பற்றியும் கூறப்போகின்றேம்.

4. தந்தையின் துணைவர் தம்மைச் சாற்றுவோ மொருவன் தீர்க்கம்
அந்தவ னிளையோ னாக அறைகிறேம் அவன்கு ணத்தைச்
சிந்தையில் கபடு கொஞ்சம் சிலேடையாய் வார்த்தை கூறுவன்
சந்ததம் கிருஷி செய்வன் சல்லியம் கொஞ்ச மேற்பன்.

4. தந்தையின் சகோதரபாவத்தைக் கூறுகின்றேம். அவனுக்கு ஒரு சகோதரனுண்டு. அவன் தீர்க்காயுளுடன் வாழ்வான். அவன் இவனுக்கு [ஜாதகனின் தந்தைக்கு] இளையவனுவான். அவனுடைய குணத்தைக் கூறுகின்றேம். மனத்தில் கபடமுள்ளவன். சிலேடை வார்த்தைகளைக் கூறுவான். எப்பொழுதும் விவசாயம் செய்வதில் நோக்கமுள்ளவன். கொஞ்சம் கடன் தொந்தரவும் இருக்கும்.

5. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பா லொன்று
கூறுவோம் பெண்பால் ரண்டு குமரிதான் மூன்றும் தீர்க்கம்
வீரியன் ஒன்றுய் வாழ்ந்து வேருகச் செல்வா னாகும்
பாரினில் இருப தாண்டில் பகருவோம் வறுமை காணுன்.

5. அவனுக்கு மனைவி ஒருத்திதான். ஒரு பிள்ளையும் இரு பெண்களும் உண்டு. அம்மூவரும் தீர்க்கமாக வாழ்வார்கள். அவன் சில காலம் ஒன்றுகத் தமயனுடன் வாழ்ந்து, பிறகு இருபதாவது ஆண்டிற்கு மேல் வேருய்க் குடித்தனம் நடத்துவான்.

6. பித்தச்சூ டுடைய னாகும் பேச்சதைக் காப்பா னாகும்
சித்தினி ஜாதி யாவன் சிவந்தமெய் உணச்சல் தேகி
பத்தினிக் கிஷ்ட னாகும் பாருகள் விருத்திச் செய்வன்
சுத்தமில் லாதா னாகும் சோம்பிடான் காரி யத்தில்.

6. எப்பொழுதும் பித்தச்சூடு உடையவன். தான் சொன்ன வார்த்தையைக் காப்பாற்றுவான். இவன் சித்தினி ஜாதியைச் சேர்ந்தவன். சிவந்த மேனியன். மெலிந்த சரீரம் வாய்ந்தவன். மனைவிக்கு மிகவும் இஷ்டன். நிலங்களை வெகு பிரயாசையுடன் சீர்திருத்தம் செய்து அபிவிருத்தி செய்வான். வேலைகளைச் செய்வதில் சோம்பல் இல்லாதவன்.

7. இன்னமும் சிலது சேதி யியம்புவோம் பின்பா கத்தில்
அன்னவன் தந்தை சேதி அறிவிப்போம் இருசி கப்பன்
தன்னுடல் மெலிவு நீட்சி சல்லியம் கொள்ளா னாகும்
உன்னத வார்த்தை சொல்வன் உறையுமுன் கோபி யாவன்.

7. இன்னும் இவனுடைய சில குணங்களைப் பின் பாகத்தில் சொல்வோம். ஜாதகனுடைய தந்தையின் வரலாறுகளைத் தெரிவிப்போம். கருஞ்சிவப்பு நிறமுள்ள மேனியான். அவனுடைய உடல் மெலிந்து உயர்ந்து இருக்கும். கடன் இல்லாதவன். நற்கருத்துக்கள் நிறைந்த சொற்களைப் பேசுவான். முன் கோபமுடையவன்.

8. நாபிச்சூடுடைய னாகும் நல்லோர்க்கு நல்ல னாவன்
ஆவுகள் விருத்தி முன்னால் அடைந்தோரை ஆத ரிப்பன்
தாவினோர்க் குதவி செய்வன் தரணியை விரயம் செய்வன்
பாவத்தில் மனது வையான் பகரமாம் குடும்பி யாவன்.

8. நாபிச்சூடு உள்ளவன். நல்லோர்களிடத்தில் நல்லவனாக நடப்பான். [துஷ்டர்களிடம் துஷ்டனாக இருப்பான் என்பதும் கருத்து]. வாழ்க்கையின் ஆரம்பத்தில் பசுக்கள் இவனிடம் அபிவிருத்தி யடையும். தன்னை அண்டியவர்களுக்கு ஆதரவளிப்பான். துறவிகளுக்கு உதவிபுரிவான். நிலங்களைச் செலவு செய்வான். பாவத்தொழிலில் ஈடுபடாதவன். பெரிய குடும்பியாகவும் ஆவான்.

9. செலவுகள் செய்யா னாகும் சித்தினி சாதி யாவன்
கலகத்தைக் கூறு நெஞ்சம் கரமதில் ருத்திர ரேகை
புலவன்போல் மொழிவா னாகும் போஜன வறுமை யில்லான்
நலமதை எவர்க்கும் செய்யான் நாயகி கேட்டி டாயே.

9. அதிகச் செலவு செய்யாமல் சிக்கனமாக வாழ்வான். இவனும் சித்தினி ஜாதியைச் சேர்ந்தவன்தான். சிறிது கலகமூட்டும் இயல்புள்ளவன். கையில் உருத்திரரேகை விளங்கும். பெரிய பண்டிதன் போல் பேசுவான் போஜனத்திற்குக் கஷ்டப்படாதவன். பிறர்க்கு நன்மை செய்வதில் சிரத்தை கொள்ளாதவன். தேவியே! மேலும் கேளுங்கள்.

10. இந்நெறி யுடையா னுக்கு இவனுமே யுதிப்பா னாகும்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அவனுமே சிவந்த மேனி
தன்னுடல் மெலிவு நீட்சி சகலர்க்கு நல்லோ னாவன்
உன்னதச் செட்டுச் செய்வன் உரைக்குமுன் கோபம் கொஞ்சம்.

10. இத்தகைய குணங்கள் வாய்ந்தவனுக்கு இச்சாதகன் புத்திரனாகப் பிறந்திருக்கின்றான். இனி ஜாதகனின் குணத்தைக் கூறுவேன். ஜாதகன் சிவந்த மேனியான். மெலிந்து உயர்ந்த உடல் வாய்ந்தவன். எல்லோருக்கும் நல்லவனாக இருப்பான். மேலான வியாபாரத்தைச் செய்வான். முன் கோபியாகவும் இருப்பான்.

11. நடையது துருசு முண்டு நளினமாய்ப் பேசு வானும்
தடைசொலான் பெரியோர் வார்த்தை தந்தைசொல் தடுத்து [வாழ்வன்
கடனது நிவிர்த்தி பின்னுல் காலாள்கள் சேர்ப்பா னுகும்
படையின்முன் செல்லா னுகும் பாரது விருத்தி செய்வன்.

11. நடை வேகமாக இருக்கும். நயமாகப் பேசுவான். பெரியோர் வார்த்தைகளை மறுத்துக் கூருதவன். ஆனுல் தந்தையின் சொல்லைக் கேளாதவன். முதலில் கடன் உள்ளவன். பிறகு கடன் நிவிருத்தியாகும். அதிக சேவகர்களையும் அடைவான். சண்டை சச்சரவுகளில் ஈடுபடாதவன். நிலங்களை அபிவிருத்தி செய்வான்.

12. வித்தையும் சமம தாகும் விகடங்கள் கூரு னுகும்
பத்தினிநேய னுகும் பரிந்துப சாரம் செய்வன்
சுத்தவான் வெளிம யக்கன் சோம்பலும் கொஞ்ச முண்டு
சித்தமே கறுப்பு மில்லான் சிறிதான புத்தி கொஞ்சம்.

12. நடுத்தரமாகக் கல்வி கற்றவன். பரிஹாச வார்த்தைகள் பேசாதவன். மனைவியிடத்தில் மிகவும் அன்பு கொண்டவன். வீட்டை அடைந்தவர்களுக்குப் பரிவுடன் உபசாரம் செய்வான். சுத்தமானவன். உலகத்தோருக்குப் பகட்டாக நடந்துகொள்வான். சிறிது சோம்பலுடையவன், மனத்தில் கபடமில்லாதவன். சிறிது அற்ப புத்தியுமுள்ளவன்.

13. கரமதில் மச்ச ரேகை கஞ்சமாம் ரேகை யுண்டு
மருவிடும் பித்தச் சூடு வணிபர்கள் தொழிலும் செய்வன்
அரிபத்தி கொஞ்ச முண்டு ஆபத்தைச் சிலர்க்குக் காப்பன்
குறிமுக முடைய னுகும் கோதையே கேட்டி டாயே.

13. இவனது கையில் மச்சரேகையும் கமலரேகையும் திகழும். பித்தச் சூடு உள்ளவன். வியாபாரத்தையும் பிறதொழிலையும் செய்து ஜீவிப்பான். விஷ்ணுவிடம் சிறிது பக்தி பூண்டவன். சிலருக்கு ஆபத்து காலத்தில் சகாயம் செய்து பாதுகாப்பளிப்பான். முகத்தில் வடுக்கள் உடையவன். தேவியே ! மேலும் கேளுங்கள்.

14. தன்துணை ஆண்பா லொன்று தங்கிடும் கன்னி ரண்டு
பின்னமாம் மற்ற வெல்லாம் பேசின துணைவ ரும்தான்
சின்னவ ரென்று சொல்வோம் செப்புவோ மிளையோன் சேதி
முன்கோபி தந்திர வார்த்தை மேதினில் தன்னு லுய்வன்.

14. இவனுடைய சகோதரபாவத்தைப்பற்றிக் கூறுவோம். இவனுக்கு ஒரு சகோதரனும் இரண்டு சகோதரிகளும் நீண்ட ஆயுளுடன் வாழ்வார்கள். மற்றைய உடன் பிறந்தார் நீடித்து வாழார். நாம் முன் சொன்ன உடன்பிறந்தார்கள் இவனுக்கு இளையவர்கள். அந்தச் சகோதரனைப் பற்றிக் கூறுவோம். முன்கோப முடையவன். தந்திர வார்த்தைகளைப் பேசுவான். தன் முயற்சியால் விருத்தியடைவான்.

15. செலவுகள் செய்யா னுகும் தந்தையோ டொத்து வாழ்வன்
சலம்தோய்வன் வறுமை காணுன் சதுஷ்பாதம் விருத்தி யுண்டு
நலம்படக் கூறு வானும் நாயகன் பகையு மெய்தும்
விலைமாதர் மோக முண்டு வயதுமே தீர்க்க மென்றேம்.

15. சிக்கனமாக வாழ்வான். தந்தையோடு ஒற்றுமையுடன் இருப்பான். புண்ணிய தீர்த்தங்களில் நீராடுவான. வறுமை இல்லாதவன். கால்நடைகளை அபிவிருத்தி செய்வான். பிறர்க்கு நன்மை ஏற்படும் வகையில் பேசுவான். வேசிகள் மோகம் கொண்டவன். தீர்க்காயுளுடன் வாழ்வான்.

16. பாரியு மொன்றே யாகும் பாலர்க ளாண்பால் ரண்டு
காரிகை மார்க ளவ்வாறு கழறுவோம் தீர்க்க மாக
மாரனே டொத்து வாழந்து வேருவன் காலம் சொல்வாய்க்
கூறுவோ மிருபத் தாறு ஆண்டினில் குடிபே தங்கள்.

16. மனைவி ஒருத்திதான். அவனுக்குப் பிள்ளைகள் இருவர் ; பெண்களும் இருவர். இந்நால்வரும் நீடித்து வாழ்வார்கள். இவன் கடக லக்கின ஜாதகனுடன் ஒன்ருக வாழ்ந்து இருபத்தாருவது வயதில் வேறு குடும்பம் நடத்துவான்.

17. பின்பாகம் விவரம் சொல்வேன் பேதைமார் சேதி யாவும்
இன்னவன் மணத்தின் காலம் இயம்புவோ மிருபான் மூன்றுள்
கன்னிகை வடபால் நேரும் கழறுவோ மவள்கு ணத்தைப்
பொன்னிறம் சுகமாய் வார்த்தை புருடன்தன் மனதுக் கேத்தோள்.

17. இன்னும் சில விவரங்களைப் பின்பாகத்தில் சொல்வேன். அவ்வாறே ஜாதகனின் சகோதரிகளைப் பற்றியும் இரண்டாம் பாகத்தில் சொல்லப் போகின்ருேம். ஜாதகனின் விவாஹ காலத்தைக் கூறுவோம். இருபத்து மூன்ருவது வயதில் விவாஹம் நடைபெறும். மணப்பெண் வடதிசையினுதித்திருப்பாள். அவளுடைய குணங்களைக் கூறுகின்ருேம். பொன் நிறம் வாய்ந்தவள். இனிமையாகப் பேசுவாள். தன் கணவன் மனத்திற்கேற்றபடி நடப்பாள்.

18. மாந்தளிர் மேனி யாகும் வருவோரை ஆதரிப்பள்
சாந்தமும் கோப முண்டு சலித்தோர்க்கு உதவி செய்வள்
சாந்தம்போல் புத்தி யேற்பள் கண்முசம் வசிய முண்டு
சேர்ந்தோர்க்குத் தாக மீவள் தொல்புவி வறுமை காணுள்.

18. மாந்தளிர் போல் மென்மையான மேனியாள். வீடு நாடி வருபவர்களை அன்புடன் ஆதரிப்பாள். சாந்தகுணமும் கோபமும் இவளுக்குண்டு. எளியவர்களுக்கு உதவி புரிவாள். மனத்தில் சாந்தமுடையவள் போல் காணப்படுவாள். கண்களும் முகமும் பிறரை வசப்படுத்தும் பொலிவு வாய்ந்தவைகளாக இருக்கும். தன்னை நாடியவர்களுக்கு அன்னமும் தண்ணீரும் அளிப்பாள். வறுமை இல்லாதவள்.

19. புத்திர விருத்தி தன்னைப் புகலுவோம் ஆண்பால் ரண்டு
சத்திமார் மூவ ராகும் தங்காது இரண்டு என்றேம்
சுத்தமாய் முதலில் பெண்பால் தோன்றிடு மதன்பின் ஆண்பால்
பத்திடு மளவா யென்றேம் பார்வதி கேட்டி டாயே.

19. இத் தம்பதிகளின் புத்திரபாவத்தைக் கூறுவோம். இவர்களுக்கு இரு பிள்ளைகளும் மூன்று பெண்களும் தோன்றுவார்கள். பெண்களில் இருவர் நிலைத்து வாழமாட்டார்கள். முதலில் பெண்கள் பிறப்பார்கள். அதற்குப் பிறகு பிள்ளைகள் ஜனிப்பார்கள். ஆகவே இவர்களுக்கு ஒரு பிள்ளையும் ஒரு பெண்ணும் தீர்க்கமாக வாழ்வார்கள். பார்வதி தேவியே! மேலும் கேளுங்கள்.

20. மாதுரு குணத்தைச் சொல்வேன் மாஞ்சிவப் புடையா ளாகும்
ஓதுவாள் சுகமாய் வார்த்தை உறுதியில் லாத நெஞ்சம்
தீதான குணமு முள்ளாள் செறிந்திடும் பித்தச் சூடு
காதலி யோக சாலி கணவன்தன் மனதுக் கேத்தோள்.

20. ஜாதகனின் தாயினுடைய குணத்தைக் கேளுங்கள். அவள் மாநிறம் வாய்ந்தவள். இனிமையாகப் பேசுவாள். மனத்தில் உறுதி இல்லாதவள். தீயகுணங்களும் அவளுக்கு இல்லை. பித்தச்சூடு உடலில் தங்கி இருக்கும். மிக்க அதிருஷ்டமுள்ளவள். கணவன் மனத்திற்கேற்றவளாகவும் இருப்பாள்.

21. தன்துணை ஆண்பால் தோஷம் சத்திமா ரிருவ ராகும்
அன்னையில் உத்திர மாகும் அவன்பூர்வம் புகலக் கேண்மோ
தென்திசை பெண்ணை யோரம் சிறுஊரில் ரெட்டி வமிசம்
இன்னவ ளுதித்து மேலும் எழிலான குடும்பி யாகி ;

21. அவளுக்குச் சகோதரர் இல்லை. இரு சகோதரிகள் உண்டு. அவள் பிறந்த வீடு வடதிசையில் உள்ளது. அவளுடைய பூர்வஜன்மத்தைக் கூறுவோம் ; கேளுங்கள். தென்திசையில் பெண்ணையாற்றின் கரையிலுள்ள சிறிய ஓர் ஊரில் ரெட்டி வமிசத்தில் இவள் பிறந்து கணவன் மக்களுடன் சிறப்பான குடும்பம் உள்ளவளாகி ;

22. அறமதி லிச்சை யுண்டாய் அந்தகன் நகர டைந்து
பிரமனால் வரையப் பட்டுப் பிறந்தவ ளென்று சொல்வோம்
வரும்ஜன்மம் புதுவை தன்னில் வருகுவாள் வைசியச் சேயாய்த்
திருமகள் விலாசம் பெற்றுச் செல்வதி வாழ்வா ளாகும்.

22. தருமத்தில் பற்றுள்ளவளாகி [தருமத்தைச் செய்து] வாழ்ந்தாள். அந்திய காலத்தில் அந்தகன் அருகிற்குச் சென்ற இவளை இங்கு பிரம்மதேவன் படைத்திருக்கின்றான். இவள் மறு பிறவியில் புதுவையில் வைசிய குலத்தில் பிறந்து, லக்ஷ்மீகடாக்ஷம் பெற்றவளாகிச் சுகமாக வாழ்வாள்.

23. தந்தையின் பூர்வம் தன்னைத் தன்னெடுத் தியம்பக் கேண்மோ
கந்தன்வாழ் பழனி நாட்டில் கலந்தனன் முத்திரிய ஞகை
வந்திடும் மனைவி மைந்தர் மானிலம் விருத்தி செய்து
அந்தவன் வாழு நாளில் அணுகின வினையைக் கேண்மோ.

23. ஜாதகனுடைய தந்தையின் முன் பிறவியையும் கேளுங்கள். இவன் முன் பிறவியில் சுப்பிரமணியசுவாமி எழுந்தருளி இருக்கும் பழனி க்ஷேத்திரத்தில் முத்திரிய குலத்தில் பிறந்து, மனைவி மைந்தர்களுடன் வாழ்ந்து வந்தான். நிலத்தைப் பயிரிட்டு ஜீவித்தான். அவ்வாறு வாழுங் காலத்தில் அவனுக்கேற்பட்ட பாவத்தைக் கேளுங்கள்.

24. வரனின்றி மாது தானும் மாதுரு இல்லம் வாழ
அரிவைமேல் வேறொருத்தன் ஆசையாய்க் காதல் பேசத்
திருமக ளிசையா ளாகித் தேவியு மோர்நாள் தன்னில்
ஒருத்தியும் தனியாய்ச் செல்ல ஒளித்துமே பின்னால் சென்று ;

24. கணவனை இழந்த ஒரு பெண் தன் தாயின் வீட்டில் வாழ்ந்து வரும் காலத்தில் அவள்பேரில் வேறு ஒருவன் காதல்கொண்டு அவளிடம் பேச, அவள் அதற்கு இசையாதவளானாள். இவ்வாறு இருக்கையில் அந்தப்பெண் தனியாகச் சென்றுகொண்டிருக்கும்போது, தகாத வழியில் காதல் கொண்ட அந்த வாலிபன் ஒளிந்து, அவளைப் பின் தொடர்ந்து ;

25. பலவந்த போகம் செய்து பாவையும் வெட்க முற்றுத்
தலம்சென்று துணைவ ரோடு சாற்றினாள் அந்தச் சங்கை
புலிபோலக் கோப முற்றுப் புகன்றனர் இவன்பால் தானும்
கலகத்தைச் செய்தோன் தன்னைக் கண்டிதம் கூறு மென்ன.

25. தனது விருப்பத்தை ஒருவாறு நிறைவேற்றிக்கொண்டான். ஆகையால் வெட்கத்தையும் வருத்தத்தையும் அடைந்த அக்கன்னிகை வீட்டிற்குச் சென்று தன் சகோதரர்களிடம் இதைத் தெரிவிக்க, அவர்கள், புலிபோலக் கோபங்கொண்டு, இவனிடம் [முத்திரிய குலத்தில் பிறந்த இவனிடம்] சென்று குற்றம் செய்தவனைத் தண்டியுங்கள் என வேண்டிக் கொண்டனர்.

26. தனமது அவனால் பெற்றுத் தையல்மேல் குற்றம் சொல்ல
வனிதையும் திகில டைந்து வரைகிருள் சாபம் தானும்
இனமதை விசாரி யாமல் இயம்பினன் என்மேல் தோஷம்
துணைப்பெண்பா லில்லா ளுகித் தோன்றும்பின் தன்னில் [ஜன்மம்.

26. அப்பொழுது மத்தியஸ்தனாக இருந்து நியாயம் வழங்கவேண்டிய இவன் என்ன செய்தான்? தெரியுமா? அக்குற்றவாளியிடமிருந்து பணத்தை வாங்கிக்கொண்டு, இந்தப் பெண்ணின்மேல் குற்றம் என்று தீர்ப்பளித்தான். இதைக் கேட்டு மனம் முறிந்த பெண், குற்றத்தைச் சரிவர விசாரியாமல் என்மேல் பழியைச் சுமத்திய பாவியான உனக்கு மறு பிறவியில் சகோதரிகள் இருக்கமாட்டார்கள்.

27. தன்துணே பெண்பா லின்றிச் சந்ததிப் பகையு மாகி
உன்சுதர் பெண்ணுல் நிந்தை உலகினில் நேரும் பின்பு
அந்திய காலம் தன்னில் அதிகசல் லியங்க ளுண்டாய்
வெந்தணல் மேரு போலே மேவிடும் க்ஷயரோ கங்கள்.

27. மேலும் சகோதரியின்றி மனம் வருந்துவதுடன், உன்னுடைய சந்ததியும் உனக்குப் பகைவனுவான். உனக்கு உன் பெண்ணுல் நிந்தையும் ஏற்படும். அந்திய காலத்தில் கடன் ஏற்பட்டு கஷ்டப்படுவாய். மேலும் எரிகின்ற மலைபோல எரிக்கின்ற க்ஷயநோயால் வாட்டப்பட்டு மாள்வாய் என்று சபித்தாள்.

28. இன்னமும் பலவாறு சொல்லி யிறைத்தனள் தெருமண் வாரி
துன்மையா யந்தச் சாபம் தோன்றிற்று என்று சொல்வோம்
அன்னவ னந்தி யத்தில் அதிகமாய் ரோகம் கண்டு
தென்திசை கால ளுடு சென்றுமே பிரமன் லக்கம்.

28. இன்னும் இவ்வாறு பலமொழிகளைக் கூறி தெருப்புழுதியை வாரி இரைத்துச் சென்ருள். அந்தப் பெண் இட்ட சாபம் இவனைப் பற்றிக் கொண்டது. அந்தியத்தில் ரோகம் கண்டு யமனுலகம் சென்ருன்.

29. வந்தவ னென்று சொல்வோம் மருவிடு மாது சாபம்
தன்துணே பெண்பால் தோஷம் தன்சுதர் பகையு மாகும்
துன்மையாய் ரோக மந்தம் தோன்றிடு மென்று சொல்வோம்
உன்னத வானே பெற்ற உத்தமி கேட்டி டாயே.

29. அவனைப் பிரம்மதேவன் இங்குப் படைத்திருக்கின்ருன். அவன் தான் இக் கடக லக்கின மகனுக்குத் தந்தையாக வாய்த்திருக்கின்ருன். இவனுக்கு முன்ஜன்மத்தில் ஏற்பட்ட சாபத்தின்படி சகோதரியைக் கண்டு களிக்கும் வாய்ப்பு இல்லே. தன் புத்திரனும் பகைவனுவான். அந்தியத்தில் கொடிய நோயும் காணும் விநாயகரைப் பெற்ற தேவியே! மேலும் கேளுங்கள்.

30. இருபது எட்டாண் டிற்குள் ஏகுவான் தந்தை தானும்
வரும்ஜன்மம் அவ்வூர் மேற்கில் வளமுள பேரூர் தன்னில்
தரித்தொழில் செயுங்கு லத்தில் சார்வனு மென்று சொல்வோம்.
அருமறை முடிவி லாடு மம்பிகை யாளே கேளாய்.

30. ஜாதகனுடைய இருபத்தெட்டாவது ஆண்டிற்குள் அவன் தந்தை மரணமடைவான். அடுத்த பிறவியில் இப்பொழுது வசிக்கும் ஊருக்கு மேற்கிலுள்ள வளம் பொருந்திய ஒரு பெரிய ஊரில் தரித்தொழில் செய்யும் குலத்தில் பிறப்பான். சிறந்த வேதங்களின் சிகரத்தில்—உபநிடதங்களில்—ஆனந்த நர்த்தனம் புரியும் தேவியே! மேலும் தெரிவிக்கின்ருேம்.

31. அன்னேக்கு முப்பா னெட்டில் அனுகிடும் மார கங்கள்
இன்னவன் பூர்வம் சொல்வே னெழில்பட்சி தன்னி லேதான்
துன்மதி வணிக ளுகத் தோன்றியே செட்டுச் செய்து
தன்மனே மதலே யுண்டாய்ச் சான்ருேர்கட் கன்ன மீந்தான்.

31. ஜாதகனுடைய முப்பத்தெட்டாவது வயதில் அவன் தாய் இறப்பாள். ஜாதகனுடைய பூர்வஜன்ம வரலாறுகளைக் கூறுவேன். இவன் முன் பிறவியில் பக்ஷிதீர்த்தத்தில் [திருக்கழிக்குன்றத்தில்] வைசிய வமிசத்தில் பிறந்து, வியாபாரம் செய்து, மனைவி மக்களுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். பெரியோர்களுக்குச் சிரத்தையுடன் அமுதளித்தான்.

32. வினையது இல்லா ளுகி மேவினன் கால ளுடு
சினமிலா பிரமன் லக்கம் ஜனிப்பானு மென்று சொல்வோம்
கனமுள இவனின் யோகம் கழறுவோம் ஜனனம் தொட்டு
மனையிலா இருப தாண்டு பூமியில் வறுமை காணுன்.

32. வேறு எவ்வித பாவம் ஏற்படாதவாறு வாழ்க்கையை நடத்தி கடைசியில் இறந்த இவனே இங்கு கடக லக்னத்தில் பிரமன் பிறப்பித்திருக்கின்ருன். இவன் பிறவி முதல் உள்ள யோக பலனைக் கூறுவோம். இவன் பிறந்து இருபதாண்டு வரையில் வறுமை இல்லாதவனுக வாழ்வான்.

33. அதற்குமேல் பத்தாண் டிற்கும் அதிகமாய் வறுமை யுண்டு
குதர்க்கங்கள் குடும்பம் தன்னில் குலவிடும் சல்லியப் பாதை
விதவித விரோத மெய்தும் மேதினில் விரய மாகும்
நிதமுமே மனது துக்கம் நேர்ந்திடு மென்று சொல்வோம்.

33. அதற்குப் பிறகு பத்தாண்டு வரையில் [முப்பது வயது வரையில்] வறுமையினுல் மிகவும் கஷ்டப்படுவான். குடும்பத்தில் கலகங்கள் ஏற்படும். கடனுல் பல துன்பங்களும் நேரிடும். பல வழிகளிலும் சண்டை சச்சரவுகள் உண்டாகும். வீண் செலவுகள் அதிகமாகும். எப்பொழுதும் மனக்கவலே இருக்கும்.

34. சொல்லிய ஆண்டின் மேலாய் சந்திரன் பிறைபோல் யோகம்
அல்லல்க ளடையா ளுகும் அதிகமாய்ச் செட்டு ஓங்கும்
சல்லியம் காணு ளுகும் தனதானிய விருத்தி யென்ருேம்
நல்லவர் நேசத் தாலே நற்புகழ் பெருக்க மாகும்.

34. நாம் முன்சொன்ன ஆண்டுகளுக்குப் பிறகு வளர்பிறைச் சந்திரன் போல யோகங்கள் வளர்ந்திடும். முன் ஏற்பட்ட துன்பங்கள் நீங்கும். வியாபாரம் நன்ருகச் செழித்து ஓங்கும். கடன் ஏற்படாது. தனதானியங்களின் சேமிப்பு அதிகமாகும். நல்லவர்களின் நட்பால் நற்புகழும் பெருமைகளும் உண்டாகும்.

35. சித்திர இல்லம் செய்தல் சிலபூமி சேர்த்த லுண்டு
சத்தியின் வருக்கத் தாரால் தனமது பெருக்க முண்டு
வித்தக னறுபா னெட்டில் விருச்சிக மாதம் தன்னில்
குத்தமாய்க் கால ளுடு கூடுவா னென்று சொல்வோம்.

35 புதியதொரு வீடு கட்டுவான். சிறிது பூமிகளும் சேரும். பெண் ஜாதி வருக்கத்தினரால் இவனது தனம் பெருக்கமடையும். ஜாதகன் தனது அறுபத்தெட்டாவது வயதில் கார்த்திகை மாதத்தில் யமனுலகம் செல்வான் என்று சொல்வோம்.

36. பின்ஜன்மம் காஞ்சி தன்னில் பிறப்பனும் சைவச் சேயாய்
மன்னனால் அதிகா ரங்கள் மருவிடு மென்று சொல்வோம்
தென்முனி மறுத்துச் சொல்வார் செப்பீனீர் வயது தீர்க்கம் ;
பின்னங்கள் இதற்குள் ளாகப் பொருந்தாதோ விவரம் சொல்வாய்.

36. ஜாதகன் மறுபிறவியில் காஞ்சியில் சைவகுலத்தில் பிறந்து அரசனால் ஆதரவுபெற்று அதிகார முள்ள உத்யோகம் செய்து வாழ்வான் என்றும் சொல்லுகிறோம். இவ்வாறு சொல்லக்கேட்ட அகஸ்தியமுனிவர் மறுத்துக் கூறினர். ஜாதகனுக்கு அறுபத்தெட்டு வயது வரையில் ஆயுர்பாவம் என்று சொன்னீர்கள். அதற்குள் அநேக மாரகங்கள் ஏற்பட்டு மரண மடையானோ ? சொல்லும் என ;

37. மந்திரி நவத்தி லேற மறுவினை யனேக முண்டு
எந்தநோய் வந்த போதும் இரவிமுன் பனிபோல் நீங்கும்
அன்னவன் ஜனன காலம் அம்புலி தசையி ருப்புச்
சொன்னனே ஆண்டு மூன்று திங்களு மாற தாகும்.

37. தேவமந்திரியாகிய குரு பாக்கியத்திலிருப்பதால் 'எவ்வித நோய்கள் நேர்ந்தாலும் சூரியன்முன் பனிபோல விலகும். ஆகவே நாம் சொன்ன ஆயுள் வரையில் ஜீவித்திருப்பான். இவன் சிரவண நக்ஷத்திரம் மூன்றும் பாதத்தில் ஜனித்திருக்கின்றான். ஆகையால் சந்திரதசை பாக்கி வருஷங்கள் மூன்று, மாதங்கள் ஆறு.

38. வந்தவன் பிணியு மெய்தும் மாடுகள் சேத மாகும்
பிந்திய துணையும் விருத்தி பூமியும் பலித முண்டு
பந்தினர் மதிக்க வாழ்வன் பரஉப காரம் செய்வான்
இந்திர னிறைஞ்சு மாதே இதுபூர்வ பாக மாமே.

38. இந்தத்தசையின் பலன்களைக் கூறுகின்றோம். பலபிணிகள் காணும். கால்நடைகள் சேதமடையும். பின் உடன் பிறந்தார்கள் விருத்தியடைவார்கள். பூமி நன்றாக விளையும். பந்துக்கள் கௌரவிப்பார்கள். பிறருக்கு உபகாரம் செய்து புகழையும் புண்ணியத்தையும் அடைவான். இந்திரனும் போற்றி வணங்கும் தாயே ! இது பூர்வபாக மாகையால் சுருக்கமாகவே பலன்களைத் தெரிவித்திருக்கின்றோம்.

ஜாதகம் 45

1 கலைகட கத்தில் தங்கக் கதிர்புதன் புகரு மேரு
நிலமகன் கன்னி யாக நீலனும் குருவு மானில்
மலைபபாம்பு கோல தாக அலவனும் ஜன்ம மாக
பலனதைப் புகலு மென்று பார்வதி கேட்க லுற்றாள்.

	கேது		
	இராசி சக்கரம்		லக்கினம் சந்திரன்
சனி குரு			
சூரியன் புதன் சுக்கிரன்		ராகு	செவ்வாய்

1. சுபகிருது வருஷம் மார்கழி மாதம் 4-ந் தேதி வியாழக்கிழமை இரவு நாழிகை 5-க்குமேல் 10-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 18-12-1902

நவக்கிரகங்களின் பாதசாரம் :—1 மூலம் 2-இல் சூரியன். ஆயில்யம் 1-இல் சந்திரன். உத்தரம் 1-இல் செவ்வாய். மூலம் 3-இல் புதன் (அஸ்தம்). சிரவணம் 4-இல் குரு. மூலம் 3-இல் சுக்கிரன் (அஸ்தம்). உத்தராடம் 3-இல் சனி. சித்திரை 2-இல் ராகு. ரேவதி 4-இல் கேது. நக்ஷத்திரம் ஆயில்யம். புததசையில் இருப்பு வருஷங்கள் பதின்மூன்று, மாதங்கள் எட்டு.

குறிப்பு.—இந்நூலாசிரியர் கணிதப்படி சித்திரை 3-இல் ராகு. அசுவினி 1-இல் கேது.

சந்திரன் கடகம். சூரியன் புதன் சுக்கிரன் தனுஸ். செவ்வாய் கன்னி. குரு சனி மகரம். ராகு துலாம். கேது மேஷம். இலக்கினம் கடகம். இந்த ஜாதகத்தின் பலன்களைச் சொல்லுவீர்களாக என உமாதேவி கேட்கலுற்றாள்.

2. அத்திரி புகலு கின்றார் ஆணது ஜனன மாகும்
வித்தக னில்லம் சொல்வேன் மேற்குமே வாச லாகும்
உத்தரம் தென்பால் வீதி உயர்வான நகர மாகும்
அத்தியும் அவ்வூர் வாசம் அரசர்கள் நேச மாகும்.

2. அத்திரி முனிவர் பலன்களைச் சொல்லுவார். இக்கிரஹ நிலையில் பிறந்த குழந்தை ஆண். வீதி தெற்கு வடக்கில் அமைந்திருக்கும். வீடு மேற்கு நோக்கி இருக்கும். அவன் ஜனித்த இடம் பெரிய நகரமாகும். அங்கே பிரசித்திபெற்ற விநாயகர் ஆலயமுண்டு. அந்நகர் அரசர்கள் வாசஸ்தலமாகும்.

3. அந்தரி கன்னி உத்ரம் அருகினில் தடாக முண்டு
தென்திசை யீசன் கோஷ்டம் செப்பின வடையா ளத்துள்
இந்தவன் ஜேஷ்ட னுக இறங்குவான் வடுகர் வர்க்கம்
கந்தனே யீன்ற மாதே கழறின மொழிகுன் றுது.

3. வடதிசையில் பத்திரகாளி கோயில் இருக்கும். அருகில் ஒரு குள முண்டு. தென் திசையில் சிவபிரான் ஆலயம் விளங்கிடும். இத்தகைய அடையாளமுள்ள ஊரில் இச்சாதகன் நாயக்கர் வமிசத்தில் குடும்பத்திற்கு ஜ்யேஷ்டனுக பிறந்திருக்கின்றுன். சுப்பிரமணிய சுவாமியைப்பெற்ற கருணைக்கடலே ! நாங்கள் சொன்ன மொழி குன்றுது.

4. தந்தையின் துணைஆண் ஒன்று சத்தியு மவ்வா றென்றேரும்
நொந்திடும் மற்ற வெல்லாம் நுகர்ந்தஆ னிளையோ னுகும்
அந்தவன் சேதி சொல்வேன் அழகுளான் சிவந்த மேனி
சிந்தையில் கபடு முண்டு சிலேடையாய் வார்த்தை சொல்வன்.

4. ஜாதகனின் தந்தைக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் பிறந்து சுகமாக வாழ்வார்கள். மற்றைய உடன்பிறந்தார்கள் நஷ்டமாவார்கள். நாம் கூறின சகோதரன் இவனுக்கு [ஜாதகனின் தந்தைக்கு] இளையவன். அவனுடைய வரலாறுகளைத் தெரிவிப்போம். அழகு வாய்ந்தவன். சிவந்த மேனியான். மனத்தில் கபடமுள்ளவன். சிலேடைவார்த்தைகளைக் கூறுவான்.

5. தரித்தொழில் புரிவா னுகும் சாறறுமுன் கோபி யாவன்
இருமனை யனுகு மென்றேரும் இவனுடன் கூடி வாழ்வன்
பெரும்சுதர் ஆண்பால் ரண்டு பேசுவோம் கன்னி மூன்று
திருவிலா தீர்க்க மெய்தும் செல்லுமே மற்ற வெல்லாம்.

5. நெசவுத்தொழில் செய்து ஜீவிப்பான். முன்கோபியாவன். அவனுக்கு இரண்டு மனைவிமார்கள் உண்டு. அண்ணனுடன் ஒற்றுமையாக வாழ்வான். அவனுக்கு இருபிள்ளைகளும் மூன்று பெண்களும் ஜனிப்பார்கள். அந்த ஐவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். பிறக்கும் மற்றைய மகவுகள் நீடித்திரா.

6. எந்தமா துக்குப் புத்திரா இயம்பினீர் விவரம் சொல்வாய்
முந்திய மாதுக் கேதான் மொழிகிறேரும் கன்னி ஒன்று
பிந்திய மாதுக் கேதான் பேசுவோம் மற்ற வெல்லாம்
சுந்தர முதல்மா தும்தான் தீர்க்கமோ விரய மோசொல்.

6. அவனுக்கு இரு மனைவிமார்கள் என்று சொன்னீர்கள். அவர்களில் யாருக்குச் சந்ததி உண்டு ? அந்த விவரத்தைச்சொல்லுவீராக எனப் பார்வதிதேவி கேட்க, அத்திரிமுனிவர் சொல்லுவார். மூத்தமனைவிக்கு ஒருமகள்தான் ஜனிப்பாள். இளையமனைவிக்கு மற்றைய குழந்தைகள் உதிப்பார்கள். மூத்தமனைவி இறந்தபிறகு இரண்டாம் மனைவி ஏற்படுவாளா ? அல்லது முன்மனைவி வாழும்போதே இளையவளை மணப்பனு ? சொல்லும்.

7. இடுக்கமாம் வார்த்தை யாலே ஏகுவார் நீரா லேதான்
மடக்கொடி உடனே சேர்வாள் மாறனும் வறுமை காணுன்
நுடுக்கிலா ன் தந்திர வார்த்தை சோம்பலும் கொஞ்ச முண்டு
நடக்கையும் நல்ல தாகும் நாயகன் வயது தீர்க்கம்.

7. முனிவர் கூறுவார். வார்த்தைகளால் கலகங்கள் ஏற்பட்டுப் பிரிவுண்டாகும். அவன் சமுத்திர பிரயாணத்தால் வேறு ஊர் சென்று உடனே அங்கு இளைய மனைவியை மணப்பான். வறுமை இல்லாதவன். கர்வமில்லாதவன். தந்திர வார்த்தைகளைப் பேசுவான். சிறிது சோம்பலுள்ளவன். நன்னடக்கை உடையவன். தீர்க்காயுளுடன் வாழ்வான்.

8. தந்தையின் குணத்தைச் சொல்வேன் சாந்தவான் சிவந்த மேனி
நந்தியும் ராசி யாகும் நல்ரும்ஆ யில்யம் தோன்றும்
சிந்தையும் நல்ல தாகும் சேர்ந்தோரை ஆத ரிப்பன்
முந்துமால் பக்தி கொள்வன் உயர்வான குடும்ப மேற்பன்.

8. இனி ஜாதகனுடைய தந்தையின் குணத்தைக் கூறுவேன். மிகவும் சாந்தகுணம் வாய்ந்தவன். சிவந்த மேனியான். விருஷப லக்கினத்தில் பிறந்தவன். அவனது நக்ஷத்திரம் ஆயில்யம். நல்ல எண்ணம் படைத்தவன். தன்னை அண்டியவர்களுக்கு ஆதரவு அளிப்பான். விஷ்ணுபக்தி பூண்பான். பெருமைவாய்ந்த குடும்பம் உடையவனுவான்.

9. பஞ்சைகட் கன்ன மீவன் பாருளோர் மதிக்க உய்வான்
கஞ்சமாம் ரேகையுண்டு கனத்தபுத் திகளு மேற்பன்
அஞ்சிடான் எதிரிக் கேதான் அடைந்தோரை ஆத ரிப்பன்
வஞ்சியர் வகைபு மாவன் வஸ்திரத் தொழிலும் செய்வன்.

9. எளியவர்களுக்கு அன்னதானம் செய்வான். உலகத்தோர் மதிக்க வாழ்ந்திடுவான். கையில் கமலரேகை விளங்கும். உதார மனப்பான்மை படைத்தவன். எதிரிகளைக்கண்டு அஞ்சாதவன். அடைந்தவர்களை ஆதரிப்பான். பெண்களுக்கு இஷ்டனுகவும் இருப்பான். வஸ்திரத்தொழிலை நடத்துவான்.

10. அரமதி லிச்சை யுண்டு ஆதியில் வறுமை யுண்டு
பெருமன்னை துணைவன் பக்கல் பேணியே உய்வா னுகும்
திருகுக ளவனுல் நேரும் செலவுக ளதிக மெய்திப்
பெருமையும் பின்னுல் நேரும் டலமுள குடும்ப மேற்பன்.

10. தருமத்தைச் செய்வதில் பேரவாக்கொண்டவன். பால்யத்தில் வறுமையால் கஷ்டப்படுவான். தன்னைப்பெற்ற தாயின் சகோதரனிடம் சென்று தொழில் செய்து உய்வான். அவனுல் சில இடையூறுகள் நேரும். அதிகச் செலவுகள் ஏற்பட்டுத் தாழ்வு உண்டாகி, பின்பு பெருமை இவனை வந்தடையும். பிரபல குடும்பமுள்ளவனுகவும் வாழ்வான்.

11. தேவதா தலங்கள் செல்வன் தேறினூர்க் கன்ன மீவன்
மாமிக ளிரண்டே யாகும் வஞ்சனை யொருவர்க் கெண்ணுன்
பூமியும் பின்னல் சேர்ப்பன் புகழ்திருப் பணியும் செய்வன்
தாமத குணத்தா னுகும் ஜனஉப காரி யாமே.

11. கடவுள் பல மூர்த்திகொண்டு எழுந்தருளி இருக்கும் எல்லாப் புண்ணிய ஸ்தலங்களுக்கும் யாத்திரை செல்வான். தவசிகளுக்கு அமுதளிப்பான். இவனுக்கு மாமிமார்கள் இருவர். பிறரை வஞ்சிக்கும் இயல்பில்லாதவன். வாழ்க்கையின் பிற்காலத்தில் பூமிகளைச் சேர்ப்பான். கோயில்களுக்குத் திருப்பணியும் செய்திடுவான். தாமதகுணம் உடையவன். மக்களுக்கு உபகாரம் செய்வான்.

12. சொன்னவிக் குணத்தா னுக்குத் தோகையி ரிருவர் தம்மில்
பின்மனை யாளுக் கின்னேன் பிறப்பன மென்று சொல்வோம்
அன்னவன் குணத்தைச் சொல்வேன் அரிமக னொப்ப தாகும்
பன்னியே பேசு வானும் பலகலை யறிவா னுகும்.

• 12. நாம் சொன்ன குணங்கள் பொருந்திய மனிதனுக்கு இரு மனைவிமார்கள் என முன்னமேயே சொன்னேம். அவர்களில் இளையாளுக்குப் பிறந்தவன் இச்சாதகன். இனி ஜாதகனுடைய குணத்தைச் சொல்வேன். விஷ்ணுபுத்திரனுகிய மன்மதன்போல் அழகுவாய்ந்தவன். பன்னிப்பேசும் இயல்புள்ளவன். பல கலைகளைக் கற்றறிந்தவன்.

13. தந்தைக்கு மேலாய் வாழ்வன் தடமது மூன்று நேரும்
விந்தையாய் வார்த்தை கூறுவன் விளைபுலம் மூன்று ஊரில்
இந்தவன் சேர்ப்பா னுகு மெழிலான குடும்ப மேறபன்
வந்தவர்க் கன்ன மீவன் பலவணி பங்கள் செய்வன்.

13. தந்தையைக் காட்டிலும் சிறப்பாக வாழ்வான். மூன்று வீடுகளை நிருமாணம் செய்வான். பிறர் ஆச்சர்யப்படும் வகையில் பேசுவான். மூன்று கிராமங்களில் இவன் நிலங்களைச் சம்பாதிப்பான். கௌரவம் வாய்ந்த குடும்பமுள்ளவனுவான். அதிதிகளுக்கு அன்புடன் அமுதளிப்பான். பல வியாபாரங்களைச் செய்வான்.

14. பலரையும் வசியம் கொள்வன் பால்பாக்கிய முடைய னுவன்
நிலையிலார்க் குதவி செய்வன் நினைத்ததை முடிக்க வல்லன்
புலவன்போல் மொழிவா னுகும் பொய்யது வழுத்தா நெஞ்சம்
கலகத்தைக் கூருனு கும் கரமதில் கோதுமை ரேகை.

14. பலரையும் தன் வசப்படுத்துவான். பால்பாக்கியமுள்ளவன். எளியவர்க்கு உதவி செய்வான். தான் எண்ணியதை முடிக்கும் ஆற்றல் படைத்தவன். நன்குக் கற்றறிந்த பண்டிதன்போல் பேசுவான். உண்மை பேசுவான். கலகப்படுத்தும் சொற்களைக் கூருதவன். கையில் கோதுமை ரேகை விளங்கும்.

15. எப்படி யோகம் சொன்னீர் இயம்புவீ ரந்தச் சங்கை
ஒப்புடன் குருவுக் கேழில் உயர்மதி யிருப்ப தாலே
செப்புமகே சரியோ கங்கள் சதுர்கேந்திரம் கிரகம் நிற்க
மெய்ப்பும்பர் வதயோ கங்கள் விளம்பினேம் பால னுக்கு.

15. இவனுக்கு எக்காரணத்தினுல் யோகம் சொன்னீர்? சொல்லும் எனக் கேட்க, முனிவர் பதில் கூறினுர். சந்திரனுக்கு ஏழாமிடத்தில் குரு இருப்பதால் இவனுக்குக் கேசரி யோகம் உண்டு. மேலும் நான்கு கேந்திரங்களிலும் கிரஹங்கள் இருப்பதால் பர்வத யோகமும் இவனுக்குண்டு. ஆகையால் மேலான பலன்களைச் சொன்னேம்.

16. அதுபலன் ஆருண் டின்மேல் அம்புலி போலே யோகம்
நிதியது பெருக்க முண்டு நேமியோர் மதிப்புக் கொள்ளல்
விதவித லாப மெய்தும் மேன்மையாய்த் தொழிலு மோங்கும்
அதிதியை ஆத ரிக்கும் அம்பிகை யாளே கேளாய்.

16. இவன் பிறந்து ஆருவது ஆண்டிற்குப் பிறகு வளர்பிறைச் சந்திரன் போல யோகங்கள் விருத்தியாகும். தனம் பெருகும். உலகத்தாரால் கௌரவிக்கபடுவான். பலபல பொருள்கள் கிடைக்கும். செய்யும் தொழிலும் ஓங்கும். அன்னையே! மேலும் கேளுங்கள்.

17. தன்துணை ஆண்பா லொன்று தையலர் அவ்வாறு தீர்க்கம்
நொந்திடு மிரண்டு என்றேம் நுகர்ஜய முனிவர் சொல்வர்
முந்தின மாதர் ஒன்று மொழிந்தீர்கள் அவட்குப் புத்திரர்
சந்ததம் சொல்லு மென்னச் சாற்றுவார் அத்திரி தாமும்.

17. இவனுக்கு ஒரு சகோதரனும் ஒரு சகோதரியும் உண்டு. அவர்கள் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். இரு உடன் பிறந்தார்கள் சேதமாவார்கள் என்று அத்திரி முனிவர் சொல்லக் கேட்ட ஜய முனிவர், இச் சாதகனுக்கு மூத்த தாய் உண்டெனச் சொன்னீர்கள். அவளுடைய சந்ததியைத் தெரிவிப்பீர்களாக என்று கூறினுர்.

18. முதல்மாதா சுதர்கள் காணுள் மேவும்கா ரகநோய் தானும்
அதுவே மரண மாகும் அதற்குப்பின் இவனின் தாயார்
அதிபதி குணம்எவ் வாறு அறிவிப்பீர் விவர மாகத்
துதிசெய்தோர்க் குதவு வாளாம் சொல்லுமுன் கோபி யாவள்.

18. அத்திரி சொல்லுவார். முதல் மாதாவிற்குச் சந்ததி இல்லை. அவளுக்குக் காசநோய் காணும். அதுவே அவளுக்கு முடிவாகும். அதற்குப் பின் இந்தஜாதகனுக்குத் தாயாக நேர்ந்திருப்பவளைத் தந்தை மணம் செய்துகொள்வான். அவளுடைய குணத்தைக் கூறுவோம். தன்னைப் புகழ்ந்தவர்களுக்குத்தான் உதவி புரிவாள். முன்கோபியாகவும் இருப்பாள்.

19. வரனுக்குப் பகையு மெய்தும் மாஞ்சிவப் புடைய ளாகும்
அரிவையும் போக சாலி அவளுநன னடக்கை யுண்டு
சதியிலா மனத்தா ளாகும் சற்சாத்திரி நிந்தை யேற்பள்
பொறைசொல்லாள் இளம னத்தாள் பூமகட்கு வயது தீர்க்கம்.

19. தன் கணவனுடன் பகைமை உடையவள். மாநிறம் வாய்ந்தவள். அவள் அதிருஷ்டமுள்ளவள். நன்னடத்தை உடையவள். சூதில்லாத மனமுள்ளவள். எல்லோருடைய ஆதரவிற்கும் பாத்திரமானவள். நிந்தனையும் இவளுக்கு ஏற்படும். கோள் சொல்லாதவள். இளகிய மனம் படைத்தவள். அவள் தீர்க்காயுளுடனும் வாழ்வாள்.

20. தன்துணை தோஷ மெய்தும் தனியளாய் வாழ்வா ளாகும்
என்னகா ரணத்தி னாலே இவள்துணை தோஷம் சொன்னீர்
சந்திரன் தனக்கு மூன்றில் சேயுமே யிருப்ப தாலே
பிஷனமாம் துணைவ ரென்றேம் பேதைமுன் வினையாம் தாயே.

20. அவளுக்கு உடன் பிறந்தார்கள் இல்லை. தனியளாக வாழ்வாள். என்ன காரணமெனில் ஜாதகத்தில் சந்திரனுக்கு மூன்றுமிடத்தில் செவ்வாய் இருப்பதுதான். ஆகையால் துணைவர்கள் தோன்றி அழிந்திருப்பார்கள். அவ்வாறு கிரஹம் அமைவதற்கும் காரணம் இவளுக்கு முன் ஜன்மத்தில் ஏற்பட்ட பாவம்தான்.

21. செய்தவோர் வினைக ளென்ன செப்புவீர் முனியே நீர்தாம்
தையல்முன் ஜென்மம் சொல்வேன் சட்டநா தீசர் வாழும்
துய்யமா நகரி லேதான் ஜெனித்தனள் சேடர் வமிசம்
வையமேல் மதலை யுண்டாய் வாழ்நாளில் வினையைக்கேண்மோ.

21. அவ்வினையைக் கூறுவோம். இவள் முன் பிறவியில் சட்டநாதர் எழுந்தருளி இருக்கும் சீர்காழிநகரில் சேடர் வமிசத்தில் பிறந்து கணவன் மக்களுடன் வாழ்ந்து வரும் காலத்தில் அவளுக்கேற்பட்ட வினையைக் கேளுங்கள்.

22. இறப்பினில் கூடு கட்டி யிருக்கிற பட்சி தன்னைக்
குறிப்பாகக் கலைத்து விட்டாள் குலவிற்று அதுஓர் தோஷம்
சிறுமையோன் இரவி லேதான் சென்றனனிவளில் லத்தில்
அரிவையும் கோப முற்று அணுகாது சாகை யென்றாள்.

22. இவள் வீட்டுக் கூரையில் ஒரு பக்ஷி கூடுகட்டி வசித்துவந்தது. இவள் அக்கூட்டைக் கலைத்து அப்பக்ஷியைத் துரத்திவிட்டாள். அஃது ஒரு பாவம். மற்றொரு பாவத்தையும் கூறுகின்றோம். ஓர் இரவில் எளியவர்கள் இவள் வீட்டில் தங்குவதற்காகச் சென்றனர் உடனே கோபமுற்று அவர்களையும் அங்குத் தங்கச் சம்மதிக்காமல் துரத்திவிட்டாள்.

23. பஞ்சையு மனவெ றுப்பால் பகருவார் சாபம் தானும்
வஞ்சியின் ஜன்மம் தன்னில் வளவுமே அலைச்ச லாயும்
கொஞ்சிய துணைவ ரின்றிக் கோதையும் தனியாய் வாழ்வாய்
நஞ்சுபோல் சொல்லிச் சென்றான் நல்கிற்று அந்தத் தோஷம்.

23. ஆகையால் மனம் வருந்திய ஏழை சாபம் கொடுத்தான். மறுஜன்மத்தில் உன்னுடைய குடும்பம் பலகஷ்டங்களுக்கும் இலக்காகும். உடன்பிறந்தார்களின்றித் தனித்து வாழ்ந்து கஷ்டப்படுவாய். விஷம் போன்ற இவ்வாறு கொடிய சாபத்தைக் கொடுத்துச் சென்றனன். அந்தச் சாபம் இவளைச் சார்ந்தது.

24. மாதுவு மந்தி யத்தில் வாயுவால் மரண மாகி
வேதியன் வரையப் பட்டு விளங்கினு ளிக்கு லத்தில்
தீதாகப் பட்சி தோஷம் திகைத்தோனின் சாபம் தானும்
காதலிக் கடைந்த தாலே கழறினும் துணைவர் தோஷம்.

24. அந்தியகாலத்தில் அவள் வாயுவினால் கஷ்டப்பட்டு இறந்தாள். அவளையே இங்குப் பிரம்மதேவன் படைத்திருக்கின்றான். பக்ஷிக்குச் செய்த பாவமும், ஏழைகள் இட்ட சாபம் இவளை வந்து அடைந்திருப்பதால் இந்த ஜென்மத்தில் துணைவர்கள் இல்லை.

25. மறுஜன்மம் அவ்வூர் தன்னில் வருகுவாள் சௌராஷ்ட்ர வமிசம்
உரைக்கிறேம் தந்தை பூர்வம் உயர்வான அரங்கம் தன்னில்
திருகிலா கங்கை சேயாய் ஜனித்துமே கிருஷி செய்து
அரிவையு மதலை யுண்டா யவன்வாழ்நாள் வினையைக்
[கேண்மோ.

25. மறுபிறவியில் இவள் அதே ஊரில் சௌராஷ்டிர வமிசத்தில் பிறப்பாள். தந்தையினுடைய முன்பிறவியைத் தெரிவிப்போம். அவன் முன் பிறவியில் சிறந்த க்ஷேத்திரமாகிய ஸ்ரீரங்கத்தில் குற்றமில்லாத வேளாள குலத்தில் பிறந்து விவசாயம் செய்து, மனைவி குழந்தைகளுடன் சுகமாக சீவித்து வரும்போது அவனுக்கேற்பட்ட பாவத்தைச் சொல்லுகின்றோம். கேளுங்கள்.

26. ஏழையோன் மணத்துக் காக இவனைமாங் கல்யம் கேட்கத்
தாழ்விலாத் தாரே னென்று தைரியம் அவர்க்கு ஓத
ஆழியில் சேக ரித்து அடுத்தநாள் முத்திரை கேட்கப்
பாழான திரிச்ச லாலே பணிசெய்ய மறந்தே னென்ன.

26. ஓர் ஏழை மணத்தைத் தீர்மானித்து இவனிடம் மாங்கல்யத்தை வேண்ட, இவனும் தருகிறேன் என்று சொல்லி அவனுக்குத் தைரியம் உண்டுபண்ணவே, அவ்வேழை கலியாணத்திற்குத் தேவையான மற்றைய எல்லா ஏற்பாடுகளையும் செய்து, கடைசியாக மாங்கல்யத்தைக் கேட்க, மனிதர்களைப் பாழாக்கும் கபடகுணத்தால் அவனைத் திண்டாடச் செய்ய வேண்டுமென்ற எண்ணங்கொண்டவனாய் இவன் 'ஐயோ! மறந்தேன்! இன்னும் மாங்கல்யத்தைச் செய்யவில்லையே' என்று சொல்லி அவன் மனத்தைக் கலங்கவைத்தான்.

27. வேறொரு முத்திரை வாங்கி வித்தகர் மணமுடித்துக்
கூறுவார் சாடம் தானும் குறிக்கும் பின் ஜன்மம் தன்னில்
பாரிபு மிருவ ராயும் பாவையர் பகையு மாகும்
கூறியே சென்று ரென்றேம் குலவிற்று அந்தத் தோஷம்.

27. திகைப்பை அடைந்த அந்த ஏழை என்ன செய்வான்? பாவம்! வேறு ஒரு மாங்கல்யத்தை வாங்கி மணத்தை ஒருவாறு செய்து முடித்தான். இவ்வாறு கஷ்டத்திற்கு ஆளான அந்த ஏழை "இல்லற வாழ்க்கையின் அடிப்படையான மணத்திற்கு இடையூறு செய்த பாவியான உனக்கு மறு பிறவியில் முதல் மனைவி இறந்து இளைய மனைவி ஏற்படுவாளாக; வரும் மனைவிகளும சத்துருக்களாவர்'' என்று சாபம் விடுத்தான்.

28. அந்திய காலம் தன்னில் அவன்மனை மரண மாகித்
தன்மனச் சஞ்ச லத்தால் சண்டன்தன் பதிக்குப் புக்கிப்
பொன்னவன் வரையப் பட்டுப் பிறப்பனு மென்று சொல்வோம்
முன்ஜன்மம் ஏழைச் சாபம் மேவின பலத்தி னாலே;

28. அதே ஜன்மத்தில் அந்திய காலத்தில் இவன் மனைவியை இழந்து கஷ்டப்பட்டு இறந்தான். அவன் தான் இங்குப் பிறந்து கடகலக்ன மகனுக்குத் தந்தையாக வாய்த்திருக்கிறான். முன் ஜன்மத்திலேற்பட்ட சாபத்தினால்;

29. மனைவியு மிரண்டு என்றேம் வளமிலாக் குடும்பம் பூர்வம்
சினமிலா இவன்பின் ஜன்மம் செப்புவோம் தில்லை தன்னில்
கனமுள பிரம்ம சேயாய்க் கலப்பனு மென்று சொல்வோம்
தனயனிச் சென்மம் தன்னில் செய்தபுண் ணியங்க ளென்ன.

29. இவனுக்கு இரு மனைவிமார்கள் ஏற்பட்டனர். குடும்பமும் முதலில் சுபிக்ஷமில்லாததாக ஆயிற்று. இவனுடைய பின்ஜன்மத்தையும் கூறுவோம். மறுபிறவியில் சிதம்பர க்ஷேத்திரத்தில் பிராம்மண சாதியில் பிறப்பான். பிராம்மணகுலத்தில் பிறப்பதற்கு இவன் இப்பிறவியில் என்ன புண்ணியம் செய்திருக்கிறான் என்றால்;

30. அறமதி லிச்சை யாயும் ஆபத்தைச் சிலர்க்குக் காத்தும்
பெருமையாய்த் தலங்கள் சென்றும் பல மிலர்க் கன்ன மீந்தும்
திருமகன் வாழ்வ தாலே ஜனிப்பனும் மறைக்கு லத்தில்
கரிமத வானை பெற்ற காதலி கேட்டி டாயே.

30. அறம் செய்வதில் பேரவாக் கொண்டிருந்தான். சிலர்க்கு ஏற்பட்ட ஆபத்தை விலக்கிக் காப்பாற்றினான். பலபுண்ணியஸ்தலங்களுக்கு யாத்திரை செய்தான். ஏழைகளுக்கு அன்னமளித்தான். ஆகவே இந்நான்கு தருமங்களைக் கடைபிடித்து இப்பொழுது வாழ்ந்து வந்தமையால் மறை ஓதுவதற்கு அதிகாரம் பெற்ற பிராம்மண குலத்தில் ஜனிப்பான். விநாயகரைப் பெற்ற தேவியே! மேலும் கேளுங்கள்.

31. பாலகன் மணத்தின் காலம் பகருவோம் பதினெட் டாண்டில்
வேல்விழி மாது நேரும் விளம்புவோ முன்னூ ராகும்
நீலியின் குணத்தைச் சொல்வேன் நிமலன்தன் மனத்துக்
[கேத்தோள்
பால்பாக்கிய முடையா ளாகும் பசித்தோருக் கன்ன மீவள்.

31. இனி ஜாதகனின் விவாஹ காலத்தைக் கூறுவோம். பதினெட்டாவது ஆண்டில் இவனுக்கு விவாஹம் நடைபெறும். மணப்பெண் சொந்த ஊரிலேயே ஜனித்திருப்பாள். அவள் குணத்தைக் கூறுவாம். பர்த்தாவின் மனத்திற்கேற்றவள். பால் பாக்கியமுடையவள். பசித்தவர்களுக்கு அன்னமளித்து அவர்களுடைய பசிப்பிணியை நீக்கினாலன்றி மன நிம்மதி யடையாதவள்.

32. மங்கைக்கு வயது தீர்க்கம் மாமுனி தடுத்துச் சொல்வர்
இங்கிவன் தனக்குத் தாரம் இரண்டென மொழிய லாகும்
சங்கையைச் சொல்லு மென்ன சனிகுரு சரத்தில் நிறக
நங்கைய நிருவ ரென்றேம் நாரதர் தடுத்துச் சொல்வார்.

32. அவள் தீர்க்காயுளுடன் வாழ்வாள். உடனே ஒரு மஹரிஷி மறுத்து இல்லை; இவனுக்கு மனைவிமார் இருவர்; ஏனெனில் சனியும் குருவும் சர ராசியான மகரத்தில் இருக்கிறார்கள் என்று சொல்ல, நாரதர் இதைத் தடுத்து கூறினார்.

33. சத்தமத் தோன்தன் வீட்டில் சந்திரன் பார்வை யாலே
பத்தினி ஒன்றே தீர்க்கம் பார்ப்பானு மேழில் தங்கச்
சுத்தமாய் அபிமா னம்தான் கூடிடும் முப்பா னுண்டில்
வித்தகி தன்கு லத்தில் விளம்புவோம் சுதாகள் காணுள்.

33. சப்தமஸ்தானாதிபதியாகிய சனி சரராசியில் இருப்பினும், அந்த ராசி தன் வீடாக நேர்ந்திருப்பதாலும் இலக்கினபதியான சந்திரனால் பார்க்கப்படுவதாலும் எல்லாப் பாவத்தையும் நிவிருத்தி செய்யும் குருவும் அங்கு விளங்குவதாலும் இச் சாதகனுக்குக் களத்திரம் ஒன்றுதான். அவளும் தீர்க்காயுளுடன் வாழ்வாள். ஆயினும் சனி சரத்தில் இருப்பதன் பயனாக இவன் குலத்தில் உதித்த ஒருமாது இஷ்ட மனைவியாக வாய்ப்பாள். ஜாதகனுடைய முப்பதாவது வயதில் இந்நிகழ்ச்சி நடைபெறும். அந்த அபிமான மனைவிக்குச் சந்ததி இராது.

34. புதல்வர்கள் சுயம னைக்குப் பொருந்திடு மாண்பா லொன்று
மதிமுகப் பெண்பால் ரண்டு வரைகிறேம் தீர்க்க மாக
அதிபன்தன் பூர்வம் தன்னை வரைகிறேம் கொச்சி தன்னில்
சதியிலா வன்னிய சேயாய் ஜனித்துமே கிருஷி செய்து;

34. ஜாதகனின் தரும பத்தினிக்குத்தான் சந்ததி உண்டு. ஒரு பிள்ளையும் இரு பெண்களும் உதிப்பார்கள். இம் மூவரும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். ஜாதகனின் முன் பிறவியைக் கூறுவோம். முன் ஜன்மத்தில் இவன் கொச்சி நாட்டில் வைசிய சாதியில் பிறந்து கிருஷி செய்து;

35. மைந்தரும் மனைவி யுண்டாய் வருவோருக் கன்ன மீந்து
கந்தன்மேல் பக்தி யாகிக் கனத்ததோர் குடும்பி யாகி
அந்தவன் பவமில் லாமல் அனுகினன் கால னூடு
சந்ததம் பிரமன் லக்கம் ஜனிப்பனு மென்று சொல்வோம்.

35. மனைவியுடனும் குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்து வந்தான். தன் வீட்டை நாடி வருபவர்களுக்கு அமுதளித்தான். சுப்பிரமணிய சுவாமியிடம் பக்தி பூண்டிருந்தான். ஒரு வித பாவமும் செய்யாமல் வாழ்க்கையை நடத்தி இறந்த இவனைப் பிரம்மதேவன் இங்குக் கடகலக்கினத்தில் பிறப்பித்திருக்கின்றான் என்று தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

36. வந்தவன் யோகச் சேதி வரைகிறோ மினிமே லாகத்
தன்தனம் அதிகம் சேர்ப்பன் சல்லியம் கொள்ளா னுகும்
பந்துவு மதிக்க வாழ்வன் பாரது விருத்தி செய்வன்
எந்திட மிவன்சொல் மேன்மை ஈசுவரன் பக்தி பூண்பன்.

36. இனி ஜாதகனுடைய யோக வரலாறுகளைப் பேசுவோம். தன் முயற்சியால் அதிக தனத்தைச் சேமிப்பான். கடன் ஏற்படாதவாறு வாழ்க்கையை நடத்துவான். உற்றார் உறவினர் மதிக்க வாழ்ந்திடுவன். பூமிகளை அபிவிருத்தி செய்வான். எல்லா இடங்களிலும் இவனுடைய வார்த்தைக்கு மதிப்புண்டாகும். சிவபிரானிடம் பக்தி பூண்டு வாழ்வான்.

37. இருபது ஏழு ஆண்டில் இவன்தந்தை கண்ட மெய்தும்
உரைக்கிறோம் நாற்ப தாண்டில் உத்தமி அன்னை கண்டம்
திருகிலா எட்டாண் டிற்குள் செப்புவோம் பிதாவின் அன்னை
மருமமாய் முப்பா னெட்டில் மடிவனே சிறிய தந்தை.

37. ஜாதகனுடைய இருபத்தேழாவது வயதில் இவன் பிதா மரணமடைவான். ஜாதகனின் நாற்பதாவது வயதில் தாய் மரணமடைவாள். ஜாதகன் பிறந்து எட்டாவது ஆண்டு முடிவதற்குள் தந்தையின் தாய் இறப்பாள். ஜாதகனுக்கு முப்பத்தெட்டாவது வயது நடைபெறுகையில் இவன் சிறிய தந்தை மாள்வான்.

38. ஜாதகன் மரண காலம் சாற்றுவோ மறுபா னைந்தில்
கோதிலாக் கடக மாதம் குறைபக்கம வுதரித் தோன்
பித்தபாண்டால் ....தேகமும் வாடு மென்றோம்
ஓதுவேன் பின்ஜன் மத்தை உயர்வான கூடல் தன்னில் ;

38. சாதகனுடைய மரண காலத்தை அறிவிப்போம். அறுபத்தைந்தாவது வயதில் ஆடிமாதத்தில் கிருஷ்ண பக்ஷத்தில் ஏகாதசி திதியில் பித்தபாண்டு நோயினால் உயிர் நீப்பான். ஜாதகனின் பின்ஜன்மத்தையும் கூறுகின்றோம். சிறந்த புண்ணிய க்ஷேத்திரமாகிய முக்கூடலில் :

39. கங்கையின் குலமு திப்பான் கனத்ததோர் குடும்ப மேற்பன்
இங்கிவன் ஜனன காலம் எழில்புதன தசையி ருப்புத்
தங்கிடும் பதின்மூன் றாண்டும் சார்ந்திடும் திங்க ளெட்டும்
துங்கமாம் பூர்வ பாகம் செப்பினோம் தாயே யாங்கள்.

39. வேளாள வமிசத்தில் பிறந்து சிறப்பான குடும்பியாவான். ஜாதகன் ஆயில்யம் முதல் பாதத்தில் பிறந்திருக்கின்றான். ஆகையால் புததசையில் இருப்பு வருஷங்கள் பதின்மூன்று, மாதங்கள் எட்டு. அன்னையே! இவ்வாறு சுருக்கமாகப் பூர்வபாகத்தை, தவசிகளாகிய நாங்கள் விண்ணப்பித்தோம்.

40. சத்தம முனிவர்
சுத்தமாய்ச் சொன்னோம்
குத்தங்கள் யாவும்
வித்தகி பொறுப்பாய்.

40. ஏழு மஹரிஷிகளாகிய நாங்கள் சோதிட சாஸ்திரங்களை ஆராய்ந்து பார்த்துப் பலன்களைச் சுத்தமாகச் சொன்னோம். குற்றங்கள் இருப்பின் பொறுப்பது உங்கள் கடமை.

ஜாதகம் 46

1. சந்திரன் சீய மாகச் சனிமேடம் குஜனும் வீணை
மந்திரி கேது நந்தி வெள்ளியும் கன்னி யாகப்
புந்தியும் இரவி கோலில் புக்கிட ராகு தேளில்
வந்தது கடகம் ஜன்மம் வரைகுவீர் பலனைத் தானே.

	சனி	குரு கேது	செவ்வாய்
	இராசி சக்கரம்		லக்கினம்
			சந்திரன்
	ராகு	புதன் சூரியன்	சுக்கிரன்

1 விருஷ வருஷம் ஐப்பசி மாதம் 4-ந் தேதி செவ்வாய்க் கிழமை இரவு நாழிகை 15-க்கு மேல் 20-க்குள் ஜனனம்.

ஆங்கிலத் தேதி 18-10-1881

நவக்கிரஹங்களின் பாதசாரம் :—சித்திரை 4-இல் சூரியன் பூரம் 3-இல் சந்திரன். திருவாதிரை 4-இல் செவ்வாய். விசாகம் 3-இல் புதன். கிருத்திகை 2-இல் குரு (வக்ரீ). உத்தரம் 3-இல் சுக்கிரன். பரணி 2-இல் சனி (வக்ரீ). கேட்டை 1-இல் ராகு. ரோஹிணி 3-இல் கேது.

நக்ஷத்திரம் பூரம். சுக்கிரதசை. இருப்பு வருஷங்கள் பன்னிரண்டு, மாதம் ஒன்று.

சந்திரன் சிம்மம், சனி மேஷம், செவ்வாய் மிதுனம், குரு கேது விருஷபம். சுக்கிரன் கன்னி. சூரியன் புதன் துலாம். ராகு விருச்சிகம். லக்கினம் கடகம். இவ்வாறு கிரஹ நிலையின் பலன்களைச் சொல்லுவீர்களாக என்று பார்வதி தேவி கேட்கலுற்றாள்.

2. பார்வதி கேட்கும் போது புயண்டரும் சொல்லு கின்றார்
திரமாய்ப் பெண்பா லாகும் ஜனித்த இல் வடதென் வீதி
கூறுவோம் மிந்திர நோக்கும் குணக்கினில் இந்திரன் கோஷ்டம்
மாரியு மாயோனு தென்மேல் மாகாளி தந்தி நிற்கும்.

2. இவ்வாறு பார்வதி கேட்டவுடன் புயண்டர் பலன்களைச் சொல்லுகின்றார். இந்தக் கிரஹ நிலையில் பிறந்த குழந்தை பெண். வீதி தெற்கு

வடக்காக இருக்கும். வீடு கிழக்கு நோக்கும். கீழ்த்திசையில் இந்திரனது ஓர் ஆலயம் உண்டு. தென்கிழக்கில் மாரியம்மனும் விஷ்ணுவும் தங்கிடுவார்கள். அவர்கள் கோயிலுக் கருகில் விநாயகர் ஆலயமும் காளி கோஷ்டமும் உண்டு.

வேறு

3. ஆடுதின்னு முனிதெற்கி லம்மன் நிற்பாள் ஆருகினிலே
மாரியுண்டு ஆ ....
நீடியதோர் நதியுண்டு சோலை யுண்டு
நேர்கிழக்கில் துருவச் சக்கர மோடு
ஆடவர் தன் வரத்தில் வந்த ஆழியுண்டு
அணுகிய வோர் சமவூரிலிந்தப் பாவை
நாடிவந்தாளிவள் பலத்தை விவர மாக
நாட்டுவோம் முனிநாங்கள் நவ நூ லாயந்து.

3. தெற்கில் ஆடு தின்னும் முனீசுவரன் தங்கி இருக்கும். அதற்கும் அருகில் வேறு ஒரு காளி கோயிலும் மாரியம்மன் கோயிலும் இருக்கும். அங்கு நீண்ட ஒரு நதியும் சோலையும் விளங்கும். வீட்டிற்கு நேர் கிழக்கில் ஒரு துருவ சக்கிரமும் இயங்கிக் கொண்டிருக்கும்......ஒரு நீர் நிலையும் விளங்கும். இவ்வாறு அடையாள முள்ள நடுத்தரமானதொரு கிராமத்தில் இந்தப் பெண் பிறந்திருப்பாள். இவளது ஜாதகத்தின் பலன்களை நவக்கிரஹங்களை ஆராய்ந்துக் கூறும் சோதிட சாஸ்திரத்தை ஆதாரமாகக் கொண்டு தெரிவிக்கின்றோம்.

4. தந்தையின் துணைஐந்து ஆண்பால் நீது
சாற்றுவோம் பெண்ரண்டு தங்கு மென்றோம்
பிந்தியும் அதிலொன்று பிசகு நேரும்
பேசுவோம் தந்தைக்குத் தாயார் ரண்டு
பிந்தியதாய்க் கிவள் தந்தை பிறந்தா னென்றோம்
பேசுவோ மிவள் தந்தைக் கிரண்டு மாது
வந்திடுவ ளிளையோளுக் கிந்த மாது
வருகுவளாம் நாலாம் ஜன்மம் வரையக் கேளாய்.

4. இவனுடைய தந்தைக்கு ஐந்து உடன் பிறந்தார்கள். அவர்களில் சகோதரர்கள் மூவர். சகோதரிகள் இருவர். அம் மூன்று சகோதரர்களும் நீடித்து வாழ்வார்கள். இரு சகோதரிகளில் ஒருத்திதான் தீர்க்காயுளுடன் வாழ்வாள். மற்றொருத்தி வாழ்க்கையின் மத்தியில் இறப்பாள். இந்த ஜாதகியின் தந்தைக்குத் தாய்மார்கள் இருவர். அவர்களில் இளைய தாய்க்குப் பிறந்தவன் ஜாதகியின் தந்தை. இவனுக்கும் இரு மனைவிமார்கள் வாய்ப்பார்கள். அவர்களுக்குள் இளைய மனைவிக்குப் பிறந்தவள் இந்த ஜாதகி. இவள் குடும்பத்திற்கு நான்காவது குழந்தையாவாள்.

வேறு

5. கேளுமத் தாய்தன் தந்தையின் குணத்தைக்
கிஞ்சுக ரோகவான் சிவப்பன்
நாளுக்கு நாளாய் யோகமே உடையன்
நாட்டினில் கீர்த்தியு மேற்பன்
.......யொப்பான் கிராமாதி காரன்
விளைபுலம திகமாய்ச் சேர்ப்பன்
வாள்விழி மாதர் மோகவா னென்றேம்
மாநிலம் கம்பமாய்த் திரிவன்

5. தந்தையின் குணத்தைக் கூறுகின்றேம். அதிக இன்பத்தை நுகர்ந்து அதனல் நோய்க்கு ஆளானவன். சிவந்த மேனியான். ஒவ்வொரு நாளும் இவனுக்கு அதிருஷ்டம் ஓங்கும். இவனுக்கு நாட்டில் நற்கீர்த்தி ஏற்படும். கிராமாதிகாரம் செய்வான். செழிப்பான அதிக பூமிகளைச் சம்பாதிப்பான். அழகிகளிடம் மோகம் கொண்டவன். மனத்தில் சஞ்சலத்துடன் நாடுமுழுவதும் சஞ்சரிப்பான்.

6. திரிச்சனு மதிக சுகபுசிப் புடையான்
தந்தங்கள் விலத்திய முடையான்
குருஉப தேசம் கொள்வன் தனவான்
குலத்தினில் நிந்தையு முடையான்
பெருமவர் நேயன் ஏழையைக் காப்பன்
புகலுமுன் புன்சிறிப் புடையன்
விரைவினில் நடப்பன் பண்ணையு முடையன்
விசித்திர வீடுமே செய்வன்.

6. அதிக அலேச்சல் உடையவன். சுக போசனம் உட்கொள்ளுவான். பற்கள் விலத்தியாக இருக்கும். அதிகப் பணம் படைத்தவன். தன் சாதியாரால் நிந்தையும் இவனுக்கு ஏற்படும். பெருமை வாய்ந்த மனிதர்களுக்கு நண்பனுவான். ஏழைகளைக் காப்பாற்றுவான். புன்முறுவல் செய்து பேசுவான். நடை வேகமாகவே இருக்கும். பெரிய பண்ணையை நடத்துவான். அழகிய வீட்டையும் நிருமாணம் செய்வான்.

7. செய்நன்றி மறவான் பொருளின்மே லிச்சை
நிந்தையும் மறவான் நிபுணன்
வையமேல் புகழ்வோர்க் கன்னமு மீவன்
மனைவிமே லாசையு முள்ளான்
கரத்தினில் பத்ம ரேகையு முள்ளான்
கனத்திடு மேருகள் தாமும்
தையல்தன் குணத்தைக் கூறுவோம் இனிமேல்
தவம்செயும் சங்கரி கேளாய்.

7. பிறர் செய்தஉதவியை மறக்கமாட்டான். பொருள்களைச் சம்பாதிப்பதில் பேராசைக்கொண்டவன். தனக்கேற் பட்டப் பழிகளை மறவாதவன். மிக்க ஆற்றல் படைத்தவன். தன்னைப் போற்றுகின்றவர்களுக்கே சோறிட்டு ஆதரவளிப்பான். மனைவியினிடம் மிகவும் அன்புகொண்டவன். இவனுடைய கரத்தில் கமலரேகை நிகழும். எருதுகள் இவனிடம் விருத்தியடையும். இனிச் சாதகியின் குணத்தைக் கூறுவோம். தவம் செய்யும் சங்கரியே! கேட்டருளல் வேண்டும்.

8. இருநிறம் உணச்சல் தேகியா மென்றேம்
இன்பமாய் வார்த்தையு முள்ளாள்
திருகது சொல்லாள் சாயல்நேத் திரமாம்
தேவிக்கு மாமிமா ரிரண்டு
பெருந்தந்தை தாயார் சுகமுடை யவளாம்
பிறந்திடும் வாசமே யுண்டாம்
வறுமைக ளில்லாள் பணிகளு முடையாள்
வயிற்றுநோ யுடையவ ளென்றேம்.

8. கரு நிறம் வாய்ந்தவள். மெலிந்த சரீரமுள்ளவள். இனிமையாகப் பேசுவாள். கலகவார்த்தைக் கூருதவள். கண்பார்வை சிறிது சாய்ந்திருக்கும். இவளுக்கு மாமியார்கள் இருவர். [இவளுடைய கணவனுக்கு இரு தாய்மார்கள் என்பது கருத்து]. பெற்ற தாய்தந்தையர்களால் அதிக சுகங்களையும் நன்மைகளையும் அடைவாள். பிறந்த வீட்டிலேயே வாழ்க்கை [கணவனுடன்] நடத்துவாள். வறுமை இல்லாதவள். அதிக ஆடை ஆபரணங்களை உடையவள். வயிற்று நோயால் இவளுக்குத் தொந்தரவும் உண்டாகும்.

9. துணைவர்க ளேழாம் மூத்தவ னுண்பால்
தோன்றினும் சேதமாம் பெண்பால்
கனமுட னென்ருய் விருத்தியாம் இளையோர்
காளைகள் இரண்டுமே தீர்க்கம்
நினைவுடன் துணைவி சேதியைச் சொல்வேன்
நிந்தையு முடையளாம் சிவப்பள்
வினையிலாப் புத்தி னன்நடை யுடையாள்
விசனமில் லாதவ ளென்றேம்.

9. இவளுக்கு ஏழு உடன் பிறந்தார்கள். அவர்களில் இவளுக்கு மூத்தவனுக ஒரு சகோதரன் தோன்றுவான். ஆனுல் அவன் நீடித்து வாழான். சகோதரிகள் விருத்தியடைவார்கள். இவளுக்குப் பின் பிறந்த இரு சகோதரர்களும் தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். ஜாதகியின் சகோதரியின் வரலாறுகளைக் கூறுகின்றேன். அவளுக்கு ஏர்படும் நிந்தைகளைப் பொருட்படுத்தாதவள். சிவந்த மேனியாள். பிறர்க்குத்தீங்கு எண்ணுத நெஞ்சம் படைத்தவள். நன்னடக்கை வாய்ந்தவள். சிறிதும் கவலையில்லாதவள்.

10. அவள்வா னுள்ளூர் அனுகியே வாழ்வள்
அறைநதிடு .... புத்திர விருத்தி
இவளுக்கு ஆண்பா லொன்றுமே என்றேம்
இதுவின்றிப் பெண்களு மிரண்டு

நவனியில் மூன்று தீர்க்கமா யிவர்க்கு
நாடடுவோம் பிரதமமாம் புத்திரி
பலமுள இவள்பின் வந்தவன் சேதி
பகருவோம்................

10. அவள் உள்ளூரிலேயே வாழ்க்கைப்பட்டு அருகிலேயே இருந்து வாழ்வள். அவளுடைய புத்திரபாவத்தைச் சொல்லுகின்றோம். ஏழு பிள்ளைகளும் இரு பெண்களும் பிறந்து தீர்க்காயுளுடன் வாழ்வார்கள். முதலில் பெண்தான் பிறப்பாள். இனி ஜாதகிக்குப் பின் பிறந்த பாலக னின் வரலாற்றைக் கூறுவோம்.

வேறு

11 முன்னவ னுரும் ஜன்மம் மொழிகிறோம் கல்வி மானும்
தன்னிலே ஊக சாலி தயாளவான் பொறுமை யுண்டு
அன்னவன் யோக வானும் அரசர்பூ சிதவா னென்றோம்
உன்னத கிராமச் செட்டு உத்தமன் செய்வா னுமே.

11. குடும்பத்திற்கு இவன் ஆறுவது குழந்தை. [ஐந்தாவது குழந்தை சீவிக்கவில்லை என்பது கருத்து]. இவன நல்ல கல்வியறிவு உடையவன். சிறந்த மதியூகம் வாய்ந்தவன். எளியவர்களிடம் கருணை உடையவன். பொறுமைக் குணம் படைத்தவன். அதன் மிகவும் அதிருஷ்ட முள்ளவன். அரசர்களாலும் கௌரவிக்கப்பட்டவன். கிராமத்தில் உயர்ந்த வியா பாரத்தைச் செய்வான்.

12. இவன்பிதா தனக்கு மேலா யியம்புவோம் யோகம் தானும்
அவனிபில் மனைவி ஒன்று ஆணது ஒன்று தீர்க்கம்
நவனியில் பெண்பால் ரண்டு நாட்டுவோ மவனுக் கேதான்
பவமுள இவன்பின் வந்தோன் பலன்தனைக் கூறக் கேண்மோ.

12. இவன், பிதாவின் வாழ்க்கையை விட மேலாக வாழ்வான். தந்தையைவிட அதிருஷ்டம் வாய்ந்தவன். அவனுக்கு மனைவி ஒருத்தி தான். ஒரு பிள்ளையும் இரு பெண்களும் பிறந்து ஸ்திரமாக வாழ்வார்கள். இனி இவனுக்குப் பின் பிறந்தவனுடைய பலன்களைக் கூறுகின்றோம். கேட்பீராக.

13. மாநிறம் தந்திர வாதி வல்வாயன் ஒருவர்க்க ஞ்சான்
தேன்மொழி வார்த்தை சொல்வன் செய்நிலம் விருத்தி செய்வன்
ஈனமாம் குணங்க ளில்லான் இர சவ்ர வசியம் கொள்வன்
ஊனமில் லாத தேகன் உரைக்கிறோம் எட்டாம் ஜன்மம்.

13. மாநிறமுள்ளவன். தந்திரவார்த்தைகளைப் பேசுவான். மேலும் தான் சொன்னதை ஸ்தாபிப்பான். யாருக்கும் அஞ்சாதவன். தேன் போல் இனிமையான சொற்களைச் சொல்லுவான். நிலங்களை அபி

விருத்தி செய்வான். கெட்ட குணங்கள் இல்லாதவன். அரசர்களை [அர சாங்க அதிகாரிகளை] தன்வசப்படுத்துவான். பின்னமில்லாத சரீரம் வாய்ந்தவன். குடும்பத்திற்கு இவன் எட்டாவது குழந்தை.

14. வாகன முடைய னுரும் வருமனும் ஏர்பெ ருக்கம்
நாகரீ கங்க ளுள்ளான் நாற்காலி விருத்தி யுள்ளான்
தேகமும் வலிவு முள்ளான் சிறுத்தவர்க் குதவி செய்வன
போகவான் ஒன்ருய் வாழ்வான் பிரபல குடும்பி யாவன்.

14. வண்டி முதலிய வாகனங்கள் உடையவன். கபடமும் உள்ளவன். ஏர்களை அதிகப்படுத்துவான். [வியவசாயத்தொழிலே அதிகம் செய்வான் என்பது கருத்து.] இனிய பழக்க வழக்கங்கள் உடையவன். கால்நடைகளை அபிவிருத்தி செய்வான். உடல் வலிமை வாய்ந்தவன். எளியவர்களுக்கு உதவிபுரிவான். மேலான சுகங்களை அனுபவிப்பவன். ஒற்றுமையுடன் வாழ்ந்து பிரபல குடும்பியாவான்.

15. பாரியை ஒன்றே யாகும் பகருவோம் புத்திர பாவம்
தீரமாய் ஆண்பா லொன்று செப்புவோம் தீர்க்க மாக
வேறது இல்லா தாகும் விளம்பினோம் துணைவர் சேதி
ஆறுமா முகனைப் பெற்ற அம்பிகை யாளே கேளாய்.

15. அவனுக்கு மனைவி ஒருத்திதான். புத்திரபாவத்தைப் பற்றிக் கூறுகின்றோம். இவனுக்கு ஒரு பிள்ளை பிறந்து தீர்க்காயுளுடன் வாழ்வான். வேறு சந்ததி இல்லை. இவ்வாறு ஜாதகியின் துணைவர்களைப் பற்றிய செய்திகளைச் சொன்னோம். ஆறுமுகக் கடவுளைப்பெற்ற அன்னையே! மேலும் கேளுங்கள்.

16. ஜாதகி மணத்தின் காலம் சாற்றுவோம் பதினே ராண்டில்
மேதினில் வடகீழ் தன்னில் விளங்குவான் வரனே யென்றோம்
போதவே துணைவர் தம்மைப் புகலவே பலத்தைக் காணோம்
நீதியாய் வரனுக் கேதான் நிகழ்துவோம் தாயார் ரண்டு.

16. ஜாதகியின் விவாஹ காலத்தை அறிவிப்போம். பதினோராவது ஆண்டில் விவாஹம் நடைபெறும். மணமகன் வட-கிழக்குத்திசையில் இருக்கின்றான். அவனுக்குத் துணைவர்கள் இருப்பதற்கு ஆதாரத்தைக் காணோம். ஆனால் அவனுக்கு இரு தாய்மார்கள் உண்டு.

17. முந்தின மாதா வுக்கு உதித்தன னிவனே யென்றோம்
பிந்திய மாதா வொன்று பேசினே மிவனுக் கேதான்
தந்தையி னுஸ்தி தன்னில் தானவன் வாழா னுகும்
இந்தவாறு பெண்ணின் பக்கல் இருப்பனேயிவனே யென்றோம்.

17. மூத்த அன்னைக்குப் பிறந்தவன் இந்தச் சாதகியின் கணவன். இவனுக்கு இளையதாயாரும் உண்டென்று முன்னமேயே சொன்னோம்.

இவன் தன்தகப்பனின் சொத்தை அடைந்து, அதனால் ஜீவிக்கமாட்டான். இவனுடைய [மனைவியின்] வீட்டில் ஆதரிக்கப்பட்டு வாழ்வான் என்றும் சொல்லுகிறோம்.

18. வரன்குணம் கல்வி கொஞ்சம் மாநிறம் மர்ம முள்ளான்
குறையான மனத்தா னாகும் குணமது இரண்டு முள்ளான்
வருமனை தனக்க டக்கம் வஞ்சியால் பெருமை யுள்ளான்
கரங்களும் வலிவு முள்ளானென்றுதான் புகன்றிட் டோமே.

18. இனி அவனுடைய குணத்தைச் சொல்லுவோம். சிறிது கல்வி கற்றவன். மாநிறமுள்ளவன், கபடமுடையவன். எப்பொழுதும் குறைபடும் மனப்பான்மை வாய்ந்தவன். தீயகுணங்களும் நற்குணங்களும் இவனிடம் இருக்கும். மனைவியின் மனத்தின்படி நடப்பான். அவளால் விசேஷ பெருமைகளை அடைவான். பலம் பொருந்திய தோள்கள் வாய்ந்தவன். என்று இவ்வாறு சொன்னோம்.

19. புயண்டரிவ் விதமாய்ச் சொல்லப் புகலுவார் பராசர் தாமும்
நயமான மனைவி யாலே நாட்டினீர் யோக மென்று
வியமதைச் சொல்லு மென்ன வித்தகன் முன்ஜன மத்தில்
பயமிலாப் பழிகள் செய்து பல கால தோஷ மென்றோம்.

19. புயண்டர் இவ்வாறு சொன்னவுடன் பராசரமுனிவர் கூறுவார். இவனுக்கு மனைவியினால் யோகம் உண்டு; மனைவியின் வீட்டில்தான் வாழ்வான்; என்று சொன்னீர்கள். இவன் தனது தந்தையின் சொத்தை அடைந்து பிறரை எதிர்பாராமல் ஏன் சீவிக்கக்கூடாது? தந்தையின் சொத்து இவனுக்கு ஏன் கிடைக்கவில்லை? இதன் காரணத்தைச் சொல்லும் என, புயண்டர் கூறுவார். இவைகளுள் எல்லாவற்றிற்கும் காரணம் முன் ஜன்ம வினைதான்.

20. முன்ஜன்மம் வினைக ளென்ன மொழிகுவீர் முனியே நீர்தாம்
அன்னவன் முன்ஜன மத்தில் அறுமுகர் தணிகை சூழ்ப்பால்
இன்னவன் ரெட்டி யாகி யிவன்துணை களத்திர ருண்டாய்
பன்னிய பூமி யுண்டாய்ப் பூமியில் வாழு நாளில்.

20. முன்ஜன்ம வினையைச் சொல்லுமெனக்கேட்க புயண்டர் கூறுகின்றார். இவன் முன்பிறவியில் சுப்பிரமணியர் எழுந்தருளி யிருக்கும் திருத்தணி க்ஷேத்திரத்திற்குக் கீழ்த்திசையிலுள்ளதோர் ஊரில் ரெட்டி வமிசத்தில் பிறந்து சகோதரர் மனைவி குழந்தை இவர்களுடன் அதிக நிலங்களை உடையவனாக வாழுங் காலத்தில்;

21. ஞாதிகள் தமக்குப் பாகம் நல்காமல் மோசம் செய்தான்
ஓதினர் ஞாதி தாமும் உதித்திடும் பின்ஜன மத்தில்
போதவே தந்தை ஆஸ்தி பொருந்தாமல் வேட்ட கத்தில்
நீதியாய் வாழ்வாய் என்று ஞாதிகள் சாபமிட்டார்.

21. சகோதரர்களுக்குச் சேரவேண்டிய பாகத்தைத் தராமல் மோசம் செய்து வாழ்ந்தான். ஆகையால் அவர்கள் மனங்கொதித்து, சகோதரர்களை ஏமாற்றின பாவியாகி நீ, வரும் பிறவியில் தந்தையின் சொத்தை அடையாமல், மனைவியின் வீட்டில் அவர்கள் உதவியை எதிர்பார்த்து உயிர் வாழ்வாயாக எனச் சபித்தனர்.

குறிப்பு.—தன் முயற்சியால் சீவிப்பது உத்தமம்; தந்தை சொத்தினால் சீவிப்பது மத்திமம்; சகோதர வருக்கத்தினரின் பொருள்களால் சீவிப்பது அதமம்; வேட்டகத்தில் சீவிப்பது மிகவும் அதமம் என்னும் கருத்துள்ள சுலோகத்தைக்காண்க. ஆகவே மனைவியின் ஆதரவில் உயிர் வாழ்வது யாருக்கும் ஒருவித தண்டனையேயாம்.

22. இவர்பந்து முன்மண் வாரி யிறைத்தனர் அதுவோர் தோஷம்
நவனியில் ஏழை யோரை நசித்துப்பின் பூமி தன்னை
இவனுமே பறித்துக் கொண்டான் ஏழையோர் மனவெ றுப்பால்
பவமுள பின்ஜன்மத்தில் பிறந்தபா ரில்லா தாகி.

22. இவ்வாறு சொல்லி அவர்கள் மண்ணை வாரி இறைத்தனர். இது ஒரு காரணம். வேறு ஒரு காரணத்தையும் தெரிவிக்கின்றோம். இவன் ஏழைகளுக்குத்தொந்தரவை உண்டுபண்ணி அவர்களை வருத்தி அவர்கள் நிலங்களை அபகரித்துக் கொண்டான். ஆதலால் மிகவும் வருந்திய ஏழைகள் "மறு பிறவியில் நீ பிதுரார்ச்சித வீடு இல்லாமலும்;

23. அன்னையால் சுகமில் லாமல் அவன் தந்தை ஆஸ்தி யின்றிப்
பின்னையும் தலத்தை விட்டுப் பொருந்துவாய் மனைவி பக்கல்
இன்னவாறு ஏழை சொல்லி ஏகினர் இல்லம் விட்டு
தன்னிலே அந்தத் தோஷம் பற்றிற்றுஇது யிவனுக் கேதாண்.

23. பெற்ற தாயின் சுகமின்றியும், தந்தையின் சொத்தைப் பெறுமலும், இதுவுமன்றி தந்தையின் வீட்டில் வாழ முடியாதவனாகி மனைவி வீட்டில் உயிர் வாழ்வாய், என்று சபித்தனர் இவ்வாறு சொல்லி அவர்கள் சென்றனர். அந்தச் சாபம் இவனைச் சார்ந்தது. இஃது இரண்டாம் காரணம்.

24. இங்கிவர் சாபம் தானும் இவனுக்குச் சேர்ந்த தாலே
பொங்கிய குடும்பம் .... பிழைகளும் நேர்ந்த தென்றோம்
சங்கையா யந்தி யத்தில் சல்லிய மிகவே நேர்ந்து
மங்கையே வாயு நோயால் மறலியின் பதிக்குச் சென்றான்.

24. இவ்விரு சாபங்களும் இவனுக்கு முன் பிறவியில் நேர்ந்தமையால் பொங்கி வளர்ந்த இவனது குடும்பத்திற்குப் பல இன்னல்கள் ஏற்பட்டு, கடனும் அதிகம் நேர்ந்தது. பார்வதி தேவியாரே! கடைசியில் வாயுரோகத்தினால் கஷ்டப்பட்டு இறந்தான்.

25. வந்தவ னிவனே யென்றே மவன்ஜாதி சாபம் போலே
முந்தியே நேரு மென்றேம் மொழிகிறே மிவன்பின் ஜன்மம்
எந்தைதன் காஞ்சி தெற்கில் இலகிய சிற்றூர் தன்னில்
சந்தத மிக்குலத்தில் தானவ னுதிப்பா னென்றேம்.

25. அவன்தான் இங்குப் பிறந்து, இக் கடகலக்கின மகளுக்கு நாயகனுக வாய்ப்பான். பங்காளிகளின் சாபம்போல் மனைவி வீட்டில் வாழ்வான். இவனுடைய பின் ஜென்மத்தையும் கூறுகின்றேம், இவன் மறு பிறவியில் காஞ்சிக்குத் தெற்கிலுள்ளதொரு சிறிய ஊரில் இதே குலத்தில் உதிப்பான் என்று தெரிவிக்கின்றேம்.

26. ஜாதகி தனக்குப் புத்திரர் சாற்றுவோ மாண்பால் ரண்டு
மேதினில் பெண்பா லவ்வாறு விருத்தியா மிவளுக் கேதான்
மாதவர் புயண்டர் சொல்ல மங்கையும் கேட்க லுற்றுள்
மேதினில் புத்திரர் தாமும் விளங்காது என்று ரைப்போம்.

26. ஜாதகியின் புத்திரபாவத்தைக் கூறுவோமாக. இவளுக்கு இரு பிள்ளைகளும் இரு பெண்களும் தோன்றுவார்கள். அந்நால்வரும் ஸ்திரமாக வாழ்ந்திடுவர். இவ்வாறு பெரிய தவசியான புயண்டர் சொல்ல, பார்வதிதேவி சொல்லலுற்றுள். இச்சாதகிக்குப் புத்திரதோஷமுண்டு என யாம் உரைப்போம்.

27. எதுகா ரணத்தி லே இவளுக்குப் புத்திர தோஷம்
நீதியாய் ஏழோன் தானு மரஞ்சிலே நீச்சமாகத்
தீதான அஞ்சில் ராகு செறிந்துமே யிருப்ப தாலே
சூதினுல் புத்திர தோஷம் செப்புவோ மிவளுக் கேதான்.

27. இவளுக்கு என்ன காரணத்தினுல் புத்திர தோஷமென்று முனிவர் கேட்க, " ஏழாம் பாவத்திற்கு உடைய சனி, பத்தில் நீசம் பெற்று இருப்பதாலும், புத்திர பாவமான ஐந்தாமிடத்தில் பாபக் கிரஹமான ராஹு இருப்பதாலும் இவளுக்குப் புத்தர தோஷமுண்டு " என்று சொல்லுவோமெனப் பார்வதி தேவி காரணத்தைத் தெளிவாகக் கூறினுள்.

28. ஜயமுனி யே .... தேவியைப் பார்த்துச் சொல்வார்
பயமிலாக் குருவு மேழை பஞ்சமாம் தன்னைப் பார்க்க
தயையுட னிரண்டில் சந்திரன் தங்கியே இருப்பதாலே
வியமிலாச் சுதர்கள் தோன்றும் வித்தகி கேட்டி டாயே.

28. ஜயமுனிவர் உமாதேவியைப் பார்த்துக் கூறினுர். நீங்கள் சொன்ன குறைகள் மாத்திரமிருப்பின் புத்திரதோஷ முண்டெனக் கூறலாம். அவைகளைப் பரிகரிக்கும் குணங்களும் இருக்கின்றன. அவையென்ன வென்றல், பாக்கியஸ்தானத்தில்-ஸ்வக்ஷேத்திரத்தில்-தங்கி விளங்கிடும் புத்திரகாரகனுகிய-குரு ஐந்தாமிடத்தைப் பார்ப்பதாலும், இலக்கினுதிபதியான சந்திரன் குடும்பத்தில் இருப்பதாலும் இவனுக்குப் புத்திர விருத்தியுண்டு. எல்லாமறிந்த தேவியே! மேலும் கேட்பீராக.

29. இவன்பிதா முன்ஜென் மத்தைக் கூறுவோம் காஞ்சி தன்னில்
நவனிபால் பிரம்ம சேயாய் ராசபூ சிதமுள் ளானுய்
அவனியில் வாழு நாளில் அமங்கலே மாது மோகம்
பவமுள போகம் துய்த்துப் பாவையை விலக்கி விட்டான்.

29. இவனுடைய பிதாவின் முன் ஜென்மத்தைக் கூறுவோம். அவன் முன் பிறவியில் காஞ்சியில் பிராமண குலத்தில் பிறந்து அரசர்களாலும் பூசிக்கப்பட்டவனுக வாழுங்காலத்தில், கணவனையிழந்த ஒரு மாதுமேல் மோகம்கொண்டு போகம் நுகர்ந்து சிறிது காலத்திற்குப்பின் அவளை விலக்கி விட்டான்.

30. மாதுவும் மனங் கலங்கி வரைகுவாள் சாபம் தானும்
நீதியாய் மறுஜென் மத்தில் நேர்ந்திடும் மனைவி
தீதுண்டு குலத்தில் குற்றம் செப்பினுள் விதவை மாது
போதவே அந்தி யத்தில் புக்கிற்று வாயு பாதை.

30. இவனை நம்பி மோசம்போன அந்த மாது மனங்கலங்கி, நம்பிக்கைத் துரோஹம் செய்து நட்டாற்றில் கைவிட்ட பாவியாகிய நீ, வாழ்க்கை நடுவில் மனைவியை இழந்து தத்தளிப்பாய். இரண்டாவது மனைவியை மணப்பாய். குலத்திற்குத் தோஷங்களும் ஏற்படும் எனச் சபித்தாள். அச்சென்மத்தின் அந்திய காலத்தில் வாதரோகத்தினுல் கஷ்டப்பட்டு ;

31. காலன்தன் பதிக்குச் சென்று கஞ்சனுல் வரையப் பட்டு
ஞாலமேல் கங்கை வம்சம் நாயக னுதித்தா னென்றேம்
கோலமா யிவன்பின் ஜென்மம் கூறுவோம் காசி தன்னில்
சாலவே பிரம்ம சேயாய்த் தானவ னுதிப்பா னென்றும்.

31. இறந்தான். அவனைக் கமலாசனத்தில் வீற்றிருக்கும் பிரம்மதேவன் இங்கு வேளாள குலத்தில் படைத்திருக்கின்றுன். இவனுடைய பின் ஜென்மத்தைப் பற்றியும் அறிவிக்கின்றேம். இவன் மறு பிறவியில் காசியில் பிராம்மண குலத்தில் உதிப்பான்.

32. அன்னையின் குணத்தைச் சொல்வேன் அழகுளாள் சிவந்த மேனி
பன்னியே பேச வல்லாள் பந்துவும் புகழ வாழ்வாள்
முன்னமே கோபம் கொஞ்சம் முயற்சியாய்க் குடும்பி யாவள்
இன்னவ ளதிருஷ்ட சாலி இவள்துணை பதினென் ருகும்.

32. இவளுடைய (சாதகியின் கணவனுடைய) தாயின் குணத்தைச் சொல்லுகின்றேம். அவள் அழகு வாய்ந்தவள். சிவந்த மேனியாள். பன்னிப் பேசும் இயல்புடையவள். உற்றுர் உறவினர் மதிக்க வாழ்ந்திடுவாள். சிறிது முன்கோபி. தன் முயற்சியால் சிறப்பாகக் குடும்பத்தை நடத்துவாள். அதிருஷ்டம் வாய்ந்தவள். இவளுடைய உடன் பிறந்தார்கள் மொத்தம் பதினென்று.

33. அவளுடைப் பூர்வம் சொல்வேன் அவ்வூரில் மேற்குப் பேரூர்
பவமுள கணக்கர் வம்சம் பாவையு முதித்து மேலும்
இவளுமே வறுமை யின்றி யுவர்க்கு நல்லோளாகி
நவனியில் மதலே யுண்டாய் நாயகி சுகமாய் வாழ்வள்.

33. அவளுடைய முற்பிறவியைக் கூறுவேன். இவள் முற்பிறவியில் இப்பொழுது இருக்கும் ஊருக்கு மேற்குத் திசையில் ஒரு பெரிய ஊரில் உயர்ந்தோர் " கணக்கன் " வமிசத்தில் பிறந்து, வறுமையில்லாத வளாகி, கணவன் குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்து வந்தாள். எல்லோருக்கும் நல்லவளாக இருந்தாள்.

34. பித்தரோ கத்தி னலே பூமியில் மரண மாகி
வித்தகி யிக்கு லத்தில் மேவினு ளிவளே யென்றேம்
சுத்தமா யிவள்பின் ஜன்மம் சொல்லுவோம் காஞ்சி தன்னில்
சித்தமாய் வைசியச் சேயாய் ஜனிப்பளா மென்று சொல்வோம்.

34. அந்தியத்தில் பித்தரோகம் கண்டு மரணமடைந்து இக்குலத்தில் பிறந்திருக்கின்ருள். இவளுடைய பின் பிறவியையும் தெளிவாகச் சொல்லுகின்ருேம். இவள் மறுபிறவியில் காஞ்சியில் வைசிய குலத்தில் ஜனிப்பாள்.

35. மாதுரு மரண காலம் வரைகிறேம் நாற்பா னென்றில்
மேதினில் கடக மாதம் விளம்புவோ மிதுவல் லாடல்
போதவே முப்பா னெட்டில் புகழ்கார்த்தி மாதம் தன்னில்
தீதுண்டு தந்தைக் கேதான் செப்பிய மொழிகுன் ருவே.

35. ஜாதகியினுடைய மாதாவின் மரணகாலத்தைக் கூறுவோம். ஜாதகிக்கு நாற்பத்தொன்ருவது வயது நடைபெருங்கால் ஆடி மாதத்தில் இவள் தாய் மரணமடைவாள். மேலும் இவளுக்கு (ஜாதகிக்கு) முப்பத்தெட்டாவது வயது நடக்கும்போது கார்த்திகை மாதத்தில் தந்தைக்குக் கண்டம் ஏற்பட்டு இறப்பான். முனிவர்களாகிய நாங்கள் சொன்ன மொழிகள் தவரு.

36. ஜாதகி முன்ஜன்மத்தைச் சாற்றுவோம் காஞ்சி கீழ்ப்பால்
மேதினில் பேரூர் தன்னில் விளங்கினள் செங்குந்த வமிசம்
போதவே தனங்க ளுண்டாய்ப் புத்திர ருள்ளா ளாகி
ஆதியாய் முருகர் பாதம் அவளுமே உச்ச ரித்தாள்.

36. இனி ஜாதகியின் முன்பிறவியைத் தெரிவிப்போம் ; காஞ்சிக்குக் கீழ்த்திசையிலுள்ள ஒரு பெரிய ஊரில் செங்குந்த வமிசத்தில் உதித்து, அதிகச் செல்வத்தைப் படைத்து, கணவன் குழந்தைகளுடன் சுகமாக வாழ்ந்து வந்தாள். ஆதிப் பொருளாகிய சுப்பிரமணிய சுவாமியின் நாமங்களை ஜபித்தும், அவன் பாதங்களைப் போற்றியும் வந்தாள்.

37. மரணமே யாகி யேதான் வந்தன ளிவளே யென்றேம்
அறைகிறே மன்பான் ரண்டில் ஆவணி மாதம் தன்னில்
வரனுமே மரண மாகி மங்கையு மறுப தாண்டில்
மறலியின் பதிக்குச் சேர்வள் ஆவணி மாதம் பூர்வம்.

37. கடைசியில் இறந்து இப்பொழுது கடகலக்னத்தில் பிறந்திருக்கிருள். இவளுடைய மரணகாலத்தைக் கூறுவோம். இவளுடைய ஐம்பத்திரண்டாம் வயதில் ஆவணி மாதத்தில் ஜாதகியின் கணவன்இறப்பான். அறுபதாவது வயதில் ஆவணி மாதத்தில் சுக்கில பக்ஷத்தில் ஜாதகி இறப்பாள்.

38. பின்ஜன்மம் அவ்வூர் தன்னில் பிறப்பளா மிக்குலத்தில்
அன்னவள் குடும்பச் சேதி அறைகிறே முப்பா னேழில்
இன்னவள் வேருய்ச் செல்வள் இவளுக்குத் தந்தை யாலே
உன்னத வீடு பூமி உறைந்திடு மென்று சொன்னேம்.

38. இவள் அடுத்து வரும் ஜன்மத்தில் அவ்வூரில் பிறப்பாள். அவளுடைய குடும்ப வரலாறுகளைக் கூறுவோம். இவள் முப்பத்தேழாம் வயது வரை தாய் தந்தையர்களுடன் வசித்து, அதன்பின் தன் கணவனுடன் மாத்திரம் தனிக்குடும்பம் நடத்துவாள். இவளுக்குத் தன் தந்தை மூலம் பெரிய ஒரு வீடும், பூமிகளும் கிடைக்கும்.

39. வறுமைக ளில்லா வாழ்வள் வருஞ்சுதர் யோக முள்ளாள்
குறைவிலாக் குடும்பி யாவள் கூறுவோம் சிலவே சங்கை
வரன்சொலே தடுத்துச் சொல்வாள் மதிப்பிலா வாழ்வளாகும்
அரன்தனைப் பூசை செய்யும் அம்பிகை யாளே கேளாய்.

39. வறுமை இல்லாமல் வாழ்வாள். பிறக்கும் பிள்ளைகளாலும் மேலான அதிருஷ்டமுண்டாகும். எவ்விதத்திலும் குறை வில்லாத குடும்பம் உடையவளாவாள். சில குற்றங்களும் இவளிடம் உண்டு. கணவன் சொல்லை மறுத்துப் பேசும் இயல்புள்ளவள். பிறருடைய மதிப்புப் பெருமல் வாழ்வாள். சிவபிரானைப் பூசை செய்யும் தேவியே ! மேலும் கேளுங்கள்.

40. பிறந்தவள் ஜனன காலம் புகர்தசை யொருபான் ரண்டு
சிறந்திடு திங்க ளொன்று செப்புவோ மிவளுக் கேதான்
விரைவினில் துணைவர் விருத்தி மிக்கதோர் பூமி சேரும்
உறவினில் சூத முண்டு உத்தமி கேட்டி டாயே.

40. இவள் பூரநக்ஷத்திரம் இரண்டாம் பாதத்தில் ஜனித்திருக்கின்ருள். ஆகையால் சுக்கிரதசையில் இருப்பு வருஷங்கள் பன்னிரண்டு, மாதம் ஒன்று. இந்தத் தசையின் பலன்களைக் கூறுகின்ருேம். வெகு விரைவில் சகோதர விருத்தி ஏற்படும். அதிக பூமிகள் சேரும். பந்துக்கள் மரணத்தால் தீட்டும் வரும். ஈசுவரியே ! மேலும் கேளுங்கள்.

41. அன்னையின் வர்க்கம் சூதம் அன்புளோர் கலகம் கொஞ்சம்
பன்னிய ரோகம் வாய்க்கும் பலபல மனக் கலக்கம்
இன்னமும் விவர மாக இயம்புவோ மிரண்டி லேதான்
உன்னத வானை பெற்ற உத்தமி கேட்டி டாயே.

41. தாய் வருக்கத்து உறவினர் இறப்பதாலும் சூதகம் நேரும். நண்பர்களுடனும் சண்டையிட நேர்ந்திடும். நோய்களும் வரும். பல வழிகளிலும் கவலைகள் ஏற்படும். இந்த ஜாதகத்தைப் பற்றிய விவரங்களை இரண்டாம் பாகத்தில் கூறுவோம். விநாயகரை பெற்ற கருணைக்கடலே ! எங்களை மேலும் கேட்டருள வேண்டும்.